D
V211,32 N80
N80·165
121999

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-SEVENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

*1st, 2nd, 4th to 6th February* 1980.

VOLUME CLXV (Nos. 1 to 5.)

©
GOVERNMENT OF TAMIL NADU
1980

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600009.

RICE *Rupee :* 1

Y8:1L.32 N80
N80.165
121999

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-SEVENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*1st, 2nd, 4th to 6th February* 1980.

VOLUME CLXV (Nos. 1 to 5.)

TABLE OF CONTENTS.

*Friday, the 1st February* 1980.

PAGES

Personnel of the Government of Tamil Nadu ... i–v

Principal Officers of the Tamil Nadu Legislative Council ... vii

List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ix–xii

1. Obituary reference *re*—
Death of Thiru T. S. Ramasami Ayyar, former Member of the Council and Thiru S. Subbiah, Member of the Assembly ... 1

2. Questions and Answers ... 2–31

*Friday, the 1st February 1980*—cont.


| | PAGES |
|---|---|
| 3. Privillege issue *re*— | |
| Surveillance by the Police on Thiru Arcot N. Veerasami, Member of the Council ... | 31–34 |
| 4. Adjournment motion *re*— | |
| Hartal by the Tamil Nadu Merchants' Association | 34–39 |
| 5. Information *re*— | |
| (1) Adjournment motion ... | 39 |
| (2) Resignation of Minister ... | 41–44 |
| 6. Announcements— | |
| (1) Decision of the Business Advisory Committee ... | 40 |
| (2) Amendment to Motion of Thanks for the Governor's Address ... | 40 |
| 7. Panel of Vice-Chairmen ... | 41 |
| 8. Discussion on the Governor's Address ... | 44–91 |
| 9. Papers laid on the table of the House ... | 91–99 |


*Saturday, the 2nd February 1980.*


| | |
|---|---|
| 1. Obituary reference *re*— | |
| Death of Thiru K. R. Karanth, former Member of the Council and Minister of Composite Madras State ... | 123 |
| 2. Questions and Answers ... | 125–153 |




*Saturday, the 2nd February 1980*—cont.


| | PAGES |
|---|---|
| 3. Adjournment Motions— | |
| (1) Indefinite fast by representatives of the University Teachers' Association ... | 153–157 |
| (2) Lathi charge by the Police on students as a sequel to teachers' agitation against removal from service of a teacher of St. Joseph's College, Tiruchirappalli ... | 157–161 |
| (3) Fast by teachers protesting against beating up of a teacher by the management of S.P.K. College, Ramanathapuram district ... | 161–164 |
| 4. Information *re*— | |
| Attempted theft of car of a Member of the Council ... | 164–165 |
| 5 Discussion on the Governor's Address—cont.... | 165–206 |
| 6. Papers laid on the table of the House ... | 206–208 |


*Monday, the 4th February 1980.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... | 209–233 |
| 2. Call Attention Notice — postponed ... | 233 |
| 3. Information *re*— | |
| (1) Delay in taking up Call Attention Notice given by Thiru V. Thangapandian ... | 233–236 |
| (2) Postponement of Call Attention notice given by Thiru C. R. Lakshmikandhan ... | 236–237 |
| 4. Discussion on the Governor's Address—cont. ... | 237–297 |


*Tuesday, the 5th February 1980.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... | 295–329 |
| 2. Announcement *re*— | |
| Business of the House on 6-2-1980 ... | 329 |

*Tuesday, the 5th February* 1980—cont.


| | PAGES |
|---|---|
| Privilege issue *re*— | |
| Surveillance by the Police on Thiru Arcot N. Veerasami, Member of the Council ... | 330–332 |
| Adjournment Motions— | |
| (1) Persons affected by Diarrhoea in certain areas of Thanjavur district ... | 333–335 |
| (2) Indefinite fast undertaken by members of the Joint Action Committee of the University Teacher's Association ... | 336–343 |
| Calling attention to hindrance to passenger transport due to stoppage of supply of diesel ... | 343–345 |
| Discussion on the Governor's Address—cont. ... | 345–383 |
| Papers laid on the table of the House ... | 384 |


*Wednesday, the 6th February* 1980.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... | 395–409 |
| 2. Adjournment motion *re*— | |
| Suspension of normal supplies of diesel, petrol and kerosene owing to 'go-slow' campaign by employees of the Bharat Petroleum Corporation ... | 410–412 |
| 3. Announcement *re*— | |
| Decision of the Business Advisory Committee ... | 412 |
| 4. Calling attention to unemployment of employees caused by sudden stoppage of work relating to preparation of Tamil Encyclopaedia ... | 412–414 |
| 5. Discussion on the Governor's Address—*cont.* | 414–504 |
| 6. Papers laid on the table of the House ... | 504 |
| INDEX ... | 507–559 |


## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

*Members of the Council of Ministers*

1. The HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The HONOURABLE THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning and Legislature, Public Works [Buildings], Establishment Works relating to Public Works Department.

3. The HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The HONOURABLE THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price Control.

7. The HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona.

8. The HONOURABLE THIRU K. NARAYANASWAMY, Minister in-charge of Law Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money lending, Legislation on Chits and Registration of Companies.

9. The HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdhan.

11. The HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The HONOURABLE THIRU P. SOUNDARAPANDIAN, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newspaper Control, Hill Tribes and Bonded Labour.

13. The HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies and Irrigation including Minor Irrigation, Agro-Engineering.

15. The HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk and Dairy Development and Wakfs.

16. The HONOURABLE THIRU P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The HONOURABLE SELVI P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

18. The HONOURABLE THIRUMATHI SUBBULAKSHMI JEGADEESAN, Minister in-charge of Handlooms, Khadi, Textiles and Yarn.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கே. மனோகரன் (நிதித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்).

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சாரத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத்துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை.

6. மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சின்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள், சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம்-கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக்காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. பி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.



15. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூகநலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் (கைத்தறித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கைத்தறி, கதர், நெசவு, நூல்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

திரு. ம.பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த.பி. டெல்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

விவாதப் பதிவாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல், பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், திரு. கே. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| அறிவழகன், திரு. க., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| ஆறுமுகம், திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| இரத்தின பாலகுருசாமி, திரு. | நியமனம். |
| இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| இராமகிருஷ்ணத் தேவர், திரு. எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி, மன்றத் தொகுதி. |
| இராசா முகமது, திரு. கா. (கிராமத் தொழில்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| இராமமூர்த்தி, திரு. க. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| இளம்பரிதி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| எலமந்தா, திரு. பி., எம்.ஏ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ., எம்.ஏ., பி.எல். (கூட்டுறவுத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 சங்கரலிங்கம், திரு. ம., எம்.ஏ. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 4 சந்தோஷம், திரு. த., எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு ப தாரிகள் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 15 சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 17 சுந்தரேசத் தேவர், திரு. என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி., பி. பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்.) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 டி' மாண்டி, திரு. டி. வி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 21 தங்கவேலு, திரு. ஏ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 தமிழரசி, திருமதி சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 தாமஸ், திரு. பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 24 தாமோதரன், திரு. ஏ.ஆர்., பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 25 வெற்றிடம் .. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 26 திராவிடமணி, திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 நாராயணசாமி, திரு. கே. (சட்டத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 30 பாலசுப்பிரமணியம், திரு. கு.மா. | நியமனம். |
| 31 பாலசுப்ரமணியம், திரு. ஆ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 புலவர் புலமைப்பித்தன் | நியமனம். |
| 33 பெரியண்ணன், திரு. வீ. ஆர். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 மணி, திரு. கோ. சி. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 35 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 36 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 37 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 39 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 40 முருகேசன், திரு. எச். எல். | நியமனம். |
| 41 ராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள். |
| 43 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 44 வில்வம், திரு. ஏ. கே. .. | நியமனம். |
| 45 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலைய அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 46 வெங்கடேசன், திரு. ந. எஸ். | நியமனம். |
| 47 ஹன்டே, டாக்டர் எச்.வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 48 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| 49 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 50 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 51 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 52 வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் .. .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

*[இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்டமன்ற மேலவையின் ஐம்பத்தேழாவது கூட்டத்தொடர்.]*

*வெள்ளிக் கிழமை, 1980 பிப்ரவரி 1.*

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கல் குறிப்புகள்.

**மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. டி. எஸ். இராமசாமி ஐயர், பேரவை உறுப்பினர் திரு. ச. சுப்பையா ஆகியோர் மறைவு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, சென்ற கூட்டத் தொடருக்குப் பிறகு, மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. டி.எஸ். இராமசாமி ஐயர் அவர்களும், பேரவை உறுப்பினர் திரு. ச. சுப்பையா அவர்களும் இயற்கை எய்தினர் என்ற செய்தியை, இம்மேலவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. எஸ். இராமசாமி ஐயர் அவர்கள் 23—12—1979 அன்று சென்னையில் இயற்கையெய்தினார். அவர், 1930 முதல் 1936 வரை மேலவையில், சென்னைப் பல்கலைக் கழகத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, உறுப்பினராக இருந்தார். திரு. ச. சுப்பையா அவர்கள் 16—1—1980 அன்று பகல் பஸ் விபத்தில் காலமானார். அவர் 1971 முதல் 1976 வரையிலும் மீண்டும் 1977-லிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருந்தார்.

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அவ்வாறே அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்,

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Central Aid for Flood Relief.*

*1 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of times Tamil Nadu Government approached the Central Government for financial aid after 1st July 1977 up to 30th December 1978, for flood relief ;

(b) the amount asked for by the State Government and the amount sanctioned by the Central Government on each occasion; and

(c) whether the Central Government have sent study groups every time to assess the damages caused by the floods in the State ?

வெள்ள நிவாரணத்திற்கு மத்திய அரசு உதவி

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசு 1—7—1977-க்குப் பிறகு 30—12—1978 வரை எத்தனை முறை வெள்ள நிவாரணத்திற்காக, மத்திய அரசிடம் நிதி உதவி கேட்டுள்ளது ?

(ஆ) ஒவ்வொரு முறையும், முறையே மாநில அரசு கேட்டதும், மத்திய அரசு கொடுத்ததும் எவ்வளவு ?

(இ) ஒவ்வொரு முறையும், மத்திய அரசு மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தை மதிப்பிடுவதற்காக குழுக்களை அனுப்பியிருந்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) 1977-ம் ஆண்டு அக்டோபர்-நவம்பரிலும், 1978-ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பரிலும் அடித்த புயல் வெள்ள நிவாரணத்திற்காக அந்தந்த ஆண்டுகளில், மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டது.

(ஆ) 1977-ம் ஆண்டில் ஏற்பட்ட புயல், வெள்ள நிவாரணத்திற்கு மாநில அரசு மத்திய அரசிடம் ரூபாய் 128 கோடிக்கு நிதியுதவி கோரியது. மத்திய அரசு அளித்த திட்ட உதவி முன்பணம் ரூபாய் 48.31 கோடி. 1978-ம் ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட புயல், வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசிடம் ரூபாய் 25 கோடி நிதியுதவி கோரப்பட்டது. மத்திய அரசு அளித்த திட்ட உதவி முன்பணம் ரூபாய் 10 கோடியே 11 இலட்சத்து 40 ஆயிரம். 1978-ம் ஆண்டு டிசம்பரில் பெய்த பெரு மழையினால் ஏற்பட்ட சேதங்களுக்காக நிவாரண நிதி எதும் மத்திய அரசிடம் கோரவில்லை.

(இ) ஆம்.



திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ள நிவாரணம் குறித்து தமிழக அரசு மத்திய அரசுக்கு விடுத்த நிதி உதவிக் கோரிக்கையையும், அக்கோரிக்கையையொட்டி மத்திய அரசு தமிழக அரசுக்கு அளித்த நிதி உதவியையும் பார்க்கும்போது, சரியான ஒரு விகிதாச்சாரத்தில் (Ratio) நிதியுதவி அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உதாரணமாக தமிழக அரசு 128 கோடி ரூபாய் நிதியுதவி கேட்டபோது, மத்திய அரசிலிருந்து ரூ. 48 கோடி அளவுக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. எனவே மாநில அரசு வெள்ள நிவாரணத்திற்குத் தேவையான தொகையை எந்த அடிப்படையில் மதிப்பீடு செய்தது? மதிப்பீட்டுத் தொகையைவிட மத்திய அரசின் உதவித் தொகை மிகக் குறைவாகக் கிடைத்திருக்கும் நிலையில், மாநில அரசு நிவாரணப் பணிகளைக் குறைத்துக் கொண்டதா அல்லது வேறு எந்த வகையில் மாநில அரசு அந்த நிவாரண வேலைகளைச் செய்தது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வெள்ளம் அல்லது புயல் வந்த பிறகு, அதற்குரிய நிவாரணத்தை மத்திய அரசிடமிருந்து கேட்பதற்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பிற அதிகாரிகளைக் கூட்டி வைத்துக் கொண்டு, எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்பது பற்றிய மதிப்பீட்டை அரசு செய்கிறது. அதற்குப் பிறகே மத்திய அரசிடம் மொத்தமாக இவ்வளவு தொகை தேவை என்று கேட்கப்படுகிறது. மத்திய அரசிலிருந்து மாநிலத்தின் சேதம்பற்றி அறிய ஒரு குழு அனுப்பி வைக்கப்படுகிறது. அந்தக் குழுவும் சேதத்தைப் பார்வையிட்டு தனது பரிந்துரையை மத்திய அரசுக்குச் செய்கிறது. பரிந்துரையின்படி மத்திய அரசு தான் விரும்பும் தொகையைக் கொடுக்கிறது. இந்த நிதி உதவி என்பது அரசுக்குக் கடனாகத் தான் தரப்படுகிறதே தவிர, மானியமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** வெள்ள நிவாரணத் தேவை குறித்து நமது மதிப்பீடு மிகப் பெரிய அளவில் அமைவதும், அதற்கு மத்திய அரசின் நிதி யுதவி—அது கடனாக இருந்தாலும், மானியமாக இருந்தாலும்—மிகக் குறை வாகவும் இருக்கும் நிலையில், இந்த ஏற்றத் தாழ்வுகளை மாநில அரசு எப்படி ஈடுகட்டுகிறது என்று அறிய விரும்புகிறேன். அதோடு, பல நேரங் களில் வெள்ள நிவாரணப் பணிகள் முறையாக நடைபெறவில்லை என்கிற அளவில் பல்விதமான குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டதையும் இந்த அவையிலேயே கண்டிருக்கிறோம். இப்படி நிவாரணப் பணிகள் முறையாக நடைபெறாத நிலை உருவாகும் என்ற எண்ணத்திலேதான் மாநில அரசின் மதிப்பீடு மிக அதிகமாக இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** புயல்—வெள்ள நிவாரண வேலைகள் முறையாக நடைபெறவில்லை என்று இந்த அவையிலேயே கண்ட தாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த அவையில் நானும் கவனித்துக் கொண்டு வந்திருக்கிறேன். அப்படிக் கண்ட தாக எனக்குத் தெரியவில்லை. சில இடங்களுக்குப் போய்ப் பார்த்ததில், நிவாரணப் பணிகள் முறையாக நடைபெற்றிருப்பதாகத்தான் தெரிகிறது. அவைகளைப் போய்ப் பார்த்தவர்களுக்குத்தான் அது தெரியும். போய்ப் பார்க்காதவர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** Sir, I take it as a privilege issue. முறையாக வெள்ள நிவாரணப் பணிகள் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு இந்த அவையிலேயே சொல்லப்பட்டு, அந்தக் குற்றச்சாட்டு களின் அடிப்படையில் பல்வேறு விசாரணைகளைச் செய்வதாக இங்கே ஏற்றுக்கொண்டு, அத்தகைய விசாரணைகளையும் அமைச்சரவர்களே நடத்தி யிருக்கிறார்கள். எனவே முன்பே இந்த அவையிலேயே முறைகேடுகள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நிவாரணப் பணிகள் முறை யாக நடைபெறவில்லை என்று சொல்லப்படவில்லை. சில குறைகள் இருப்ப தாகச் சொல்லப்பட்டன. அவை உண்மைதானா, சரிதானா என்று விசாரிக்கப்பட்டது. அப்படி ஆராய்ந்தபோது, பல இடங்களில் சரியாக நடைபெற்றதாகத் தெரிந்தது. எங்காவது தவறு நடந்தது என்று இந்த அவைக்குத் தகவல் வந்து அவைகளை நாங்கள் கவனிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு வரவில்லை என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. ம. சங்கரலிங்கம்:** 1978 ஆம் ஆண்டு நவம்பரில் பெய்த பெருமழை யாலும், 1979 ஆம் ஆண்டு பெய்த பெரு மழையாலும் எந்தெந்தப் பகுதிகளில் சேதம் ஏற்பட்டு, எங்கெங்கே நிவாரணப் பணிகள் நடைபெறவில்லை என்பது பற்றியும், மழையால் ஏற்பட்ட உடைப்புகள் அப்படியே அடைக்கப்படாமல் இருக்கின்றன என்பது பற்றியும் இந்த அவையில் விவரமாகச் சொல்லப் பட்டது. கழிந்த சட்டமன்றத் தொடர் கூட்டத்திலேயே இவைபற்றிப் பேசப்பட்டபோது மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இதற்குத் தமது துறை பொறுப்பில்லை என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில், இரணியலிலிருந்து 3 மைலில் உள்ள இடத்தில் குளத்தின் கரையாக இருந்த பாதையில் உடைப்பு ஏற்பட்டது, அதன் காரணமாக எந்த அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டது என்பதையெல்லாம் இந்த அவையில் சொன்ன பிறகும், இன்று வரை அந்த உடைப்பை சீர் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. கேட்டால் இது ஹைவேஸ் துறையைச் சார்ந்தது என்று சொன்னார்கள். அவர்களைக் கேட்டால், இது எங்கள் துறையைச் சார்ந்ததல்ல, பி.டபிள்யூ.டி. துறையைச் சார்ந்தது என்று சொல்லி விட்டார்கள். பொதுப் பணித் துறையைச் சார்ந்தவர்கள் இது பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்தது என்று சொல்லிவிட்டார்கள். இவ்வாறு வெள்ள நிவாரண வேலைகள் பல தரப்பிலும் பந்தாடப்பட்டு வருகிறதே தவிர, சரியாக நடைபெறவில்லை என்று இந்த அவையிலே தெளிவாக எடுத்துக் கூறப்பட்ட பின்னரும்கூட, இதுவரையில் அதற்கு ஒரு முடிவு ஏற்படவில்லை என்பதை நினைவுப்படுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை அறிவார் களா என்றும் இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரண வேலைகள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. சில இடங்களில் அவை முடிவுற்றிருக்கின்றன. சில இடங்களில் அவை இன்னும் முடிவடையாமல் இருக்கின்றன. அந்த வேலைகள் எல்லாம் முறையாக நடைபெறவில்லை என்பது வேறு. வேலையே நடைபெறவில்லை என்பது வேறு. ஏதாவது தவறுகள் இருந்தால், அவைகளைச் சுட்டிக் காட்ட லாம். எல்லா நிவாரண வேலைகளும் முடிந்துவிட்டன என்று நான் சொல்லவில்லை. அவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்காவது குறிப்பிட்ட இடத்தில் நிவாரணப் பணிகள் நடைபெறவில்லை என்றால், நான் கவனிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: வினாவில் சொல்லப்பட்டிருக்கிற இரண்டாண்டுகளில் முதலாண்டில் ரூ. 48 கோடியும் இரண்டாவது ஆண்டில் ரூபாய் 19 கோடியும்தான் மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாகக் கொடுத்ததாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதற்கு முன்பு வீசிய புயலின்போது, மத்திய அரசிலிருந்து சுமார் 17 கோடி ரூபாய் மாநில அரசுக்குக் கொடுத்தார்கள். அதில் ஒரு பகுதி கடனாகவும் ஒரு பகுதி மானியமாகவும் கொடுத்ததாக எனக்கு நினைவு. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது மத்திய அரசு மானியமாக ஒரு தொகையும் கொடுக்கவில்லை என்று குறிப்பிடுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மாநில அரசு மத்திய அரசிடம் மானியமாக ஒரு தொகை அளிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியதா என்று அறிய விரும்புகிறேன். அதுபற்றி மத்திய அரசு என்ன பதில் அளித்தது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: முன்பு மத்திய அரசு ரூபாய் 17 கோடி கொடுத்தது என்றால் 'முன்பு' என்றால் எந்த ஆண்டு என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மத்திய அரசின் பொறுப்பில் திருமதி இந்திரா காந்தி அம்மையாரும், மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் கொடுத்தார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இது குறித்து தனிக் கேள்வி போட்டால், விசாரித்துச் சொல்லுகிறேன். இங்கே 'திட்டத்தின் அடிப்படையில்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. Finance Commission Report-லும் அப்படியேதான் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போதுதான் அதில் மாற்றம் செய்திருக்கிறார்கள். அந்த மாற்றத்தை இப்போது சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. கோ. சி. மணி: 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல் வெள்ள நிவாரண அறிக்கையில் அரசின் சார்பில் என்ன சொல்லப்பட்டது என்றால், தனியார் துறையில் மட்டும் 71 கோடி ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டது என்பதாகும். அது மட்டுமல்லாமல், அரசாங்கத்தைச் சார்ந்த துறைகளின் சார்பில் தனித் தனியாக இந்தத் துறைக்கு இவ்வளவு சேதம் என்ற விவரம் சொல்லப்பட்டது. மொத்தத்தில் இவ்வளவு சேதம் ஏற்பட்டது என்றும், அதில் இந்தந்தத் துறைக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்றும் பிரித்துக் கொடுத்தும் இவ்வளவு உதவி செய்யப்பட வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசிடம் கேட்டது. அவர்கள் அளித்த தொகையிலும்கூட இன்னின்ன



துறைக்கு இவ்வளவு என்று பிரித்துச் செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. இந்த ஆண்டு மத்திய அரசின் நிதி உதவி மொத்தத்தில் வழங்கப்பட்டதா, தனித் தனியாகப் பிரித்து வழங்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவியேகூட இன்னின்ன அயிட்டங்களுக்கு இவ்வளவு என்று பிரித்துத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. தேவையென்றால், தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மத்திய அரசின் நிதி உதவி முழுவதும் கடன் தொகைதானே தவிர மானியம் எதுமில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மத்திய அரசிடமிருந்து கடனாகத்தான் மாநில அரசு பெற முடியும் என்ற நிலையிருக்குமானால், மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதத்தை மதிப்பிடுவதற்கு மத்திய அரசின் குழுவை இந்த அரசு அனுமதிக்க வேண்டிய அவசியமென்ன? எந்த அடிப்படையில் மாநில அரசு மத்திய அரசுக்கு அந்த அனுமதியைத் தந்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: "ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு" என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். ஆற்றில் போடுவது என்றால்கூட அளந்து போட வேண்டும் என்கிறபோது, கடன் கொடுக்கிறபோது பார்த்துத்தானே கொடுக்க வேண்டும். மத்திய அரசைப் பொறுத்த வரையில், கேட்பவர்களுக்கெல்லாம் கொடுப்பதற்கு அவர்கள் ஒன்றும் வட்டிக் கடை வைத்திருக்கவில்லை. அது போலவே கேட்கும் எல்லா மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு கடன் வழங்கிவிடுவதுமில்லை. ஒரு மாநில அரசு மத்திய அரசிடம் நிதியுதவி கேட்கிறது என்றால், அது நியாயமாகத்தான் கேட்கிறதா என்று ஆராய்ந்து பார்த்துக் கொடுக்கும் பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பின் அடிப்படையில் அவர்கள் ஆராய்ந்து பார்த்து கொடுக்கும் முறையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 4-10.)

திரு. வே. தங்கப்பாண்டியன்: வெள்ள நிவாரண வேலைகள் எல்லாம் 'காண்ட்ராக்ட்' அடிப்படையில் கொடுக்கப்படுமென்று அரசின் சார்பாகச் சொல்லப்பட்டிருந்தும்கூட, ஏறக்குறைய 90 சதவீத வேலைகள் 'நாமினேஷன்' அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அரசு ஏதாவது விசேஷ உத்தரவைப் போட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 'காண்ட்ராக்ட்' என்பதற்கும் 'நாமினேஷன்' என்பதற்கும் உள்ள வித்தியாசம் எனக்குப் புரியவில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன், 'நாமினேஷன்' வேலைக்கும் 'டெண்டர்' வேலைக்கும் வித்தியாசம் தெரியவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னால், உண்மையிலேயே அவருக்குத் தெரியவில்லையா அல்லது அதிகம் தெரிந்தவராகத் தன்னை எண்ணிக் கொண்டு சொல்கிறாரா?

I only wanted to know the number of works which were given on tender or nomination by the Highways and Public Works Departments under Flood Relief programme.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆங்கிலத்தில் சொன்னால்தான் விளங்கும் என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார் போலும் மாண்புமிகு உறுப்பினர்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : வெள்ள நிவாரண வேலைகளை 'டெண்டர்' அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு இருக்கிறபோது 'நாமினேஷன்' அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அரசாங்கம் தனிப்பட்ட உத்தரவைப் பிறப்பித்திருக்கிறதா என்பதை வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதிகம் தெரிந்தவனாக எண்ணிக்கொள்ளமாட்டேன் நான். அப்படி யாராவது எண்ணிக்கொண்டால், அப்படிப்பட்ட தவறான எண்ணத்தை இனிமேல் உருவாக்காமல் இருக்க முயற்சி செய்கிறேன்.

முதலிலே சொல்லுகிறபோது 'காண்ட்ராக்ட்' அடிப்படையில் கொடுக்க வேண்டிய வேலைகளை 'நாமினேஷன்' அடிப்படையில் கொடுத்திருக்கிறார்கள் என்று விளக்கமாகச் சொல்லியிருந்தால், புரிந்திருக்கும். இதில் எனக்குப் பழக்கம் இல்லாததால், அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. எவ்வளவு வேலைகளை 'காண்ட்ராக்ட்' முறையில் கொடுத்தார்கள், எவ்வளவு 'நாமினேஷன்' முறை



யில் கொடுத்தார்கள் என்ற கணக்கு என்னிடத்திலே இல்லை. ஆங்காங்கே இருக்கிற தேவைக்கேற்ப கொடுத்திருக்கிறார்கள். சில இடங்களில் 'நாமினேஷன்' அடிப்படையில் கொடுத்திருக்கக் கூடும். சில நேரங்களில் வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறபோது, அங்கே அவசரமாக அணையைக் கட்ட வேண்டுமென்றால், 'டெண்டர்' வைத்து அதில் எது குறைந்தது என்று பார்த்து பிறகு அந்த வேலையை அவர்களால் செய்ய முடியுமா என்பதைப் பார்த்துக் கொடுத்தால், அதற்குள் வெள்ளம் அடித்துக்கொண்டு போய் தண்ணீர் வடிந்துவிடும். ஆகவே அப்படிப்பட்ட சமயங்களில் 'நாமினேஷன்' முறையில் செய்திருக்கக் கூடும்.

திரு. கோ. சி. மணி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது, "மத்திய அரசிடத்தில் கடனாகவோ அல்லது மானியமாகவோ, இது இதற்கு இவ்வளவு தேவை என்று கேட்டபோது அவர்கள் அந்த இழப்புகளுக்கு தொகையை ஒதுக்கி அதை அதற்கு மட்டுமே செலவிட வேண்டும்" என்று உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் விவசாயிகளின் பயிருக்கு ஏற்பட்ட சேதம் 47 கோடி ரூபாய். இந்த 47 கோடி ரூபாய் இழப்பைக் குறிப்பிட்டு எழுதிக் கேட்டார்களா இதற்காக மத்திய அரசாங்கம் எவ்வளவு வழங்கியது. அதில் எவ்வளவு வினியோகிக்கப்பட்டது என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தனிக் கேள்வி போடவும்.

*Mass Casual Leave by Government Employees.*

* 2 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that all the employees of the District Collector's Office, Tirunelveli and Revenue Divisional Office, Tirunelveli, went on one day mass Casual Leave during November, 1978, condemning the irregular action of a high officer ; and

(*b*) if so, the action taken against the officer by the Government?

## அரசு அலுவலர்கள் ஒட்டுமொத்தமாக விடுமுறை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெல்லை மாவட்டத்தில், 1978, நவம்பர் மாதத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், நெல்லை கோட்டாட்சி அலுவலகத்திலும் மேல் அதிகாரி ஒருவரின் முறைகேடான நடவடிக்கையைக் கண்டித்து, எல்லா அலுவலர்களும் ஒரு நாள் ஒட்டுமொத்தமாக விடுமுறை எடுத்தார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அந்த அதிகாரி மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) அலுவலர்கள் ஒட்டு மொத்தமாக விடுப்பு எடுக்கவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நெல்லை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய அத்துமீறல் செயல்களைக் கண்டித்து அரசு அலுவலர்கள் ஒரு நாள் விடுப்பு எடுத்திருக்கிறார்கள் என்பது அதிகாரபூர்வமாக அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அவர் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யப் பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாவட்ட ஆட்சித் தலைவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இதுவரையில் வரவில்லை. ஆனால், அங்கே யிருக்கிற துணை ஆட்சியர் மீது ஒரு குற்றச்சாட்டு வந்திருக்கிறது. ஐயப்பன் என்ற ஊழியர் மற்றும் கடைநிலை ஊழியர் சுப்பையா ஆகியவர்களிடம் துணை ஆட்சியர் கடுமையாக நடந்து கொண்டார் என்ற தகவல் தரப்பட்டது. அதற்குப் பிறகு விசாரணை செய்யப்பட்டு, அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையைத் திரும்பப் பெற்று, அவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப் பட்டிருக்கிறார்கள்.

திரு. க. எஸ். வெங்கடேசன் : தற்செயல் விடுப்பு என்னென்ன காரணங் களுக்காகக் கொடுக்கப்படுகிறது ? மேலதிகாரி முறைகேடாக நடந்து கொண்டார் என்பது தற்செயல் விடுப்பு எடுப்பதற்கு ஒரு காரணமாக அமையுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதுபற்றி என்னிடத்திலே தகவல் இல்லை.



திரு. க. இராமமூர்த்தி : இந்தச் சம்பவத்தைப் பொறுத்த வரையில், மேலதிகாரியின் முறைகேடான நடவடிக்கையால் அலுவலகம் முழுவதுமே ஒரு நாள் மூடிக் கிடக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு என்ன முறைகேடு நடந்தது? எந்த வகையிலே அந்த அதிகாரி மீது அரசு நடவடிக்கை எடுத்தது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கேஷுவல் லீவை அலுவலகம் முழுவதும் எடுத்தார்கள் என்ற தகவல் இல்லை. ஐயப்பன் என்பவர் பொய் யாகக் கூறினார் என்று அலுவலகக் குறிப்பில் மேலதிகாரி எழுதியிருந்தார். விசாரணையில் அப்படியில்லை என்று தெரிய வந்ததால், அந்தப் புகாரை நீக்கிவிட்டு அவர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

## *Closure of Government Offices.*

* 3 Q.—Thiru M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Office of the Tahsildar, Paramakudi and other Government Offices were closed in January, 1979, as the staff of those Offices went on strike for a few days; and

(*b*) if so, the reasons for the strike ?

## அரசு அலுவலகங்கள் மூடல்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பரமக்குடி வட்ட ஆட்சியர் அலுவலகமும், இதர அரசு அலுவலகங்களும், அவ்வலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் சில நாட்கள் வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக மூடிக் கிடந்தன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், வேலை நிறுத்தத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 10 ஜனவரி 1979, 11 ஜனவரி 1979 நாட்களில் பரமக்குடி வட்ட ஆட்சியர் அலுவலக அலுவலர்களும், 12 ஜனவரி 1979 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தி லுள்ள அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களும் சிறு விடுப்பு எடுத்தார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : அந்த வேலை நிறுத்தத்திற்கான காரணங்கள் எவை என்று கேட்டிருக்கிறோம். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. வேலை நிறுத்தம் செய்தது உண்மை என்று சொல்லியிருக்கிறார்கள். 10—1—1979, 11—1—1979 மற்றும் 19—1—1979, 18—1—1979 ஆகிய நாட்களில் அவ்வலுவலகங்கள் மூடிக் கிடந்தன என்று இந்துப் பத்திரிக்கையிலும் தினமணிப் பத்திரிக்கையிலும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. அமைச்சர் அவர்கள் கூட மதுரையில் அந்த அலுவலர்களைச் சந்தித்துப் பேசினார்கள் என்றும் செய்தி வந்திருக்கிறது. அப்படியிருக்கும்போது 'எவேசிவ் ஆன்சராகச்' சொன்னால் உறுப்பினர்கள் தங்களுடைய கேள்விகளுக்குரிய பதிலை எப்படி அறிந்துகொள்ள முடியும் என்பதைப் பற்றி தலைவர் அவர்கள் தான் தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அங்கே புயல் வெள்ள நிவாரணம் சில பேருக்குக் கொடுக்கப்படவில்லையென்று சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தாசில்தாரிடம் சென்று கூறி அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு கேட்டபோது உடனடியாகச் செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கிறார்கள். உடனே செய்ய முடியாது என்று அதிகாரி சொல்லியிருக்கிறார். இதனால் ஒருவருக்கொருவர் பேசுகிற போது வாக்குவாதம் ஏற்பட்ட காரணத்தால், தாசில்தாரை அந்தச் சட்டமன்ற உறுப்பினர் கடுமையாகத் திட்டிவிட்டார்கள் என்று அவர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : தாசில்தாரை அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் அச்சுறுத்தியதன் காரணமாக அவர் போலீசில் ஒரு புகார் கொடுத்திருக்கிறார். அந்தப் புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ததற்கான காரணம். சட்டமன்ற உறுப்பினர் வெள்ள நிவாரண உதவியை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். அதற்கு அதிகாரி, "மனுவைக் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள், ஒரு வருவாய்த் துறை அதிகாரியை அனுப்பி விசாரணை செய்து, அதில் உண்மை இருக்குமானால் கொடுக்கச் சொல்லுகிறேன்" என்று சொல்லியிருக்கிறார். "ஆளும் கட்சியைச் சேர்ந்தவன் நான் சொல்லுகிறேன். கொடுங்கள்" என்று அவர் சண்டை போட்டிருக்கிறார். ஆகவே அதிகாரி அது குறித்து போலீசுக்குத் தகவல் தந்திருக்கிறார். அவருடைய புகாரின் மீது போலீசார் கிரிமினல் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? அங்கே தாசில்தார் அரசுப் பணியைச் செய்ய முடியாத நிலை உருவாகியிருக்கிறது என்ற புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அங்கே என்னென்ன வாக்குவாதம் நடைபெற்றது என்ற முழு விவரமும் என்னிடம் இல்லை. சிலருக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிகாரி கொடுக்கவில்லை. ஆகவே வாக்குவாதம் வந்தது. அன்றைக்கேதான் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். ரிப்போர்ட் செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்காக பல நாட்கள் கழித்து வேலை நிறுத்தம் செய்யவில்லை. அன்றைக்கும் அதற்கு மறு நாளும் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். பிறகு மேலதிகாரிகள் பேசி சமாதானப்படுத்தியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டவர்களுக்கு உடனே 'காண்ட்ராக்ட்' கொடுக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார். இதைப் போல வேறு எத்தனை இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளைப் பார்த்து குறிப்பிட்டவர்களுக்கு இந்த வேலையை உடனே கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விசாரித்தார்களா? ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படி வலியுறுத்தலாம் என்று அரசு சொல்லியிருக்கிறதா அல்லது இப்படி வலியுறுத்திச் சொல்லக் கூடாது என்று அரசு தெரிவித்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : காண்ட்ராக்ட் வேலைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தாசில்தார் அவர்கள் போலீசில் புகார் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் 2 நாட்கள்தான் போராட்டம் நடந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் 'தினமலர்' செய்தித் தாளில் வந்த குறிப்பைப் படிக்கிறேன். "பரமக்குடியில் மூன்று நாட்களாக தாசில்தார் அலுவலகம் மூடியிருக்கிறது. பரமக்குடியில் எல்லா அலுவலர்களும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். சுமார் ஆயிரம் பேர்கள் ஊர்வலமாக வந்தார்கள்" என்று இருக்கிறது. இதற்குத் தக்க பதில் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் முதலிலே படிக்கும்போதே படித்திருக்கிறேன். படித்ததை திரும்பவும் வேண்டுமானால் படித்துக் காட்டுகிறேன். மூன்று நாட்கள் என்றுதான் படித்திருக்கிறேன். 10—1—1979,

11—1—1979 நாட்களில் பரமக்குடி வட்ட ஆட்சியர் அலுவலக அலுவலர்களும் 12—1—1979 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து வருவாய்த் துறை அலுவலர்களும் சிறுவிடுப்பு எடுத்தார்கள் என்று படித்தேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: தாசில்தார் அவர்கள் கொடுத்த புகார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதா அல்லது பதிவு செய்யப்படவில்லையா ? அல்லது அது இன்னும் பெண்டிங்கில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வழக்குக் கொடுத்தது பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. அலுவலகத்தைப்பற்றி மட்டும் தான் எனக்கு இப்போது குறிப்பு வந்திருக்கிறது.

## *Diploma Teachers Training Examinations.*

* 4 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM }
THIRU S. MUTHUSWAMY } Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation was received by the Government for issuing orders to the effect that 35 per cent marks are sufficient for diploma holders also to pass the Teachers Training Examinations, as in the case of S.S.L.C. Examinations; and

(*b*) if so, the decisions taken thereon ?

### டிப்ளோமா ஆசிரியப் பயிற்சி தேர்வு

திரு. க. மீனாட்சிசுந்தரம் }
திரு. செ. முத்துசாமி } மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்:—

(அ) டிப்ளோமோ ஆசிரியர் பயிற்சியாளர்கள் தேர்வில் வெற்றி பெற, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் உள்ளதைப் போல் 35 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றால் போதும் என்ற வகையில் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று, அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த முடிவுகள் யாவை ?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) ஆம்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கும், ஆசிரியர் பயிற்சி தேர்வுக்கும் பெரும் வேறுபாடு இருப்பதாலும், மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு ஏற்ற திறனை பெற்று தரம் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற காரணத்தாலும் இது சம்பந்தமாக தற்போதைய முறையே இருக்கலாம் என்றும் மதிப்பெண்களைக் குறைக்க வேண்டிய அவசியமில்லை என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: டிப்ளோமா ஆசிரியர் பயிற்சியாளர்கள் தேர்வில் வெற்றி பெற, தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள மதிப்பெண்கள் எத்தனை என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தற்போது டிப்ளோமா ஆசிரியர் பயிற்சியாளர்கள் தேர்வில் வெற்றி பெறுவதற்குள்ள குறைந்தபட்ச மதிப்பெண்கள் 62 சதவிகிதமாகும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: டிப்ளமோ ஆசிரியர் பயிற்சியாளர்கள் தேர்வில் வெற்றி பெற 62 சதவிகிதம் மதிப்பெண்கள் என்று இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி பெற 35 சதவிகிதம் என்று இருக்கிறது. இதற்கும் அதற்கும் வேறுபாடு மிக அதிகமாக இருக்கிறது. தரம் அதிகமாக இருக்கவேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டாலும், 62 சதவிகிதம் என்று இருப்பதைச் சற்றே குறைத்து 50 சதவிகிதம் என்றோ அல்லது அதற்கு சற்றுக் கீழே குறைக்கவோ அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: டிப்ளோமா ஆசிரியர் பயிற்சியாளர்கள் தேர்வு என்பது, ஆசிரியர்களைப் பயிற்றுவித்து உருவாக்குகின்ற பரீட்சையாகும். அதற்காக வைக்கப்படுகின்ற ஒரு தேர்வாகும். அதிலே குறைப்பதற்கு எந்த சாத்தியக்கூறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 62 சதவிகிதம் மார்க்கில் 35 மதிப்பெண்கள் உள் மதிப்பீடு மதிப்பெண்களாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *B.T. Assistants.*

* 5 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that B.T. Assistants who have previously served as Tutors and Demonstrators in Colleges, have made representation to the Government to give them chances for employment in the Higher Secondary Schools; and

(*b*) if so, the action taken thereon ?

## பி.டி. ஆசிரியர்கள்

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளில் சிற்றாசிரியர்களாகவும், விளக்குநர்களாகவும் ஏற்கெனவே பணியாற்றிய பி. டி. ஆசிரியர்கள், தற்போதுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் தங்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென அரசுக்கு முறையீடு செய்துள்ளனரென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) பி.டி. பட்டதாரிகள் எவரும் அவ்வாறு விண்ணப்பிக்கவில்லை. கல்லூரிகளிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்பட்ட ( retrenched ) ஆசிரியர்களில் இதுவரை 85 பேர் மேல்நிலைப்பள்ளிகளில் ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டு உள்ளனர்.

திரு. பா. ரா. தாமஸ் : ஏற்கெனவே கல்லூரிகளில் சிற்றாசிரியர்களாகவும் விளக்குநர்களாகவும் பணியாற்றிய சில ஆசிரியர்கள் பி.டி. பட்டம் பெற்று மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள். குறைந்தது 10 ஆண்டுக் காலம் பணியாற்றியிருந்தால்தான், மேல்நிலைப் பள்ளியிலே புகுந்தலாம் என்று சட்டம் இருக்கிறது. ஏற்கெனவே சிற்றாசிரியர்களாகவும் பணியாற்றிய ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அந்தப் பணிக்காலத்தையும் சேர்த்து 10 ஆண்டுக் காலம் என்று ஆகியிருந்தால், அவர்களுக்கு மேல்நிலைப் பள்ளியிலே பணியாற்ற வாய்ப்பளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு இதைப் பரிசீலிக்கும்.

## *Tenth and Eleventh Standard Examinations.*

* 6 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of High Schools in the State in which even a single candidate has not come out successful in the 10th and 11th Standard Examinations held during March-April, 1978 ;

(*b*) the names of those schools ; and

(*c*) the reasons therefor ?



## பத்து & பதினோராம் வகுப்புத் தேர்வுகள்

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு மார்ச்-ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற முறையே 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு பள்ளியிறுதித் தேர்வுகளில், ஒரு மாணவர் கூட வெற்றி பெறாத உயர்நிலைப் பள்ளிகள், மாநிலத்தில் எத்தனை?

(இ) அவை யாவை ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : 1978 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற தேர்வில் 10 ஆம் வகுப்பு இறுதித் தேர்வில் ஒரு மாணவர் கூட தேர்ச்சி பெறாத உயர்நிலைப் பள்ளிகள் மாநிலத்தில் 26 ஆகும். அதிலே 23 பள்ளிகள் அரசுப் பள்ளிகள், 2 பள்ளிகள் மாநகராட்சிப் பள்ளிகள். 11 ஆம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் ஒரு மாணவர்கூட தேர்ச்சி பெறாத உயர்நிலைப் பள்ளிகள் மாநிலத்தில் 21 ஆகும். இப்படி இந்தப் புள்ளி விவர அறிக்கையிலே இருக்கிறது. அதிலே அரசுப் பள்ளிகள் 16, மாநகராட்சிப் பள்ளிகள் 2, தனியார் பள்ளிகள் 3 என்ற நிலையிருக்கிறது. ஆக அதிகமாக அரசுப் பள்ளிகளிலே தான் ஒரு மாணவர்கூட தேர்வு பெறாத நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரும் விவரப்படி, தரம் குறைந்த மாணவர்கள் அங்கே வருவதனால்தான் அப்படி இருக்கிறது. இந்த அளவுக்குத் தரம் குறைந்திருப்பதற்கு வேறு சில காரணங்களும் இருக்கின்றன. அங்கு ஆசிரியர்கள் உரிய நேரத்தில் நியமிக்கப்படாதது ஒரு காரணம். கும்மிடிப்பூண்டியில் ஆசிரியர் போடவில்லை என்று ஒரு போராட்டமே நடந்திருக்கிறது. இதிலே அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்களிடம் அதுபற்றி விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பொறுப்பானவர்கள் மீது, அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

@ 100-103 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாணவர்கள் தேர்ச்சி சதவிகித குறைவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலில் சில காரணங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை (mass premotin) என்று ஒரு கொள்கையை அரசு வைத்திருக்கிறது. அடுத்து, 4-வது 5-வது வகுப்புகளில் எவ்வளவு மார்க் வாங்கினாலும், பாஸ் செய்வது என்ற ஒரு கொள்கையை வைத்திருக்கிறது. 6-வது முதல் 8-வது வரை குறைந்த அளவுக்கு மார்க்குகள் வாங்கினாலும் தேர்வு பெறலாம் என்று இருக்கிறது. இப்படியே அவர்கள் பள்ளி இறுதி வகுப்புக்கு வரும்போது மட்டும் 40 சதவிகிதம், 35 சதவிகிதம் மார்க் வாங்கினால்தான் தேர்ச்சி பெறலாம் என்றிருக்கிறது. மிகக் குறைந்த மதிப்பெண்கள் வாங்கிக் கொண்டு வருகின்றவர்களுக்குப் பயிற்சி அளித்து திடீரென்று நல்ல மார்க்குகளுடன் தேர்வு பெறச் செய்ய, ஆசிரியர்கள் கையிலே மந்திர சக்தி கிடையாது. ஆதலால் இந்த அரசு அதன் Uniform Promotion policy பற்றிப் பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புரமோஷன் என்பது பரிட்சையிலே வாங்குகின்ற மார்க்குகளை வைத்து மேல் வகுப்புக்கு அனுப்புவதாகும். இப்போது ஏற்பட்டிருக்கும் தொய்வு முழுவதற்கும் ஆசிரியர்கள்தான் பொறுப்பு ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும். அவர்கள்தான் மாணவர்களின் இந்தத் தேர்ச்சிக் குறைவுக்குக் காரணம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதை ஆசிரியர்கள் பிரிதிநிதிகள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு த. சந்தோஷம்: இப்படி ஒரு மாணவர் கூட தேர்ச்சி பெறாமல் இருக்கும் பள்ளிகளில் தரம் குறைந்த மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட தரம் குறைந்த மாணவர்கள் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தான் சேருகின்றார்கள். அப்படிப்பட்ட மாணவர்கள் தனியார் பள்ளிகளிலும் தான் சேருகிறார்கள். அப்படி இருக்கும்போது, அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி அரசு ஆராய்ச்சி நடத்தியதா? எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல், ஒரு மாணவர்கூட தேர்ச்சி பெறாமல் இருக்கக்கூடிய பள்ளிகள் மீது, 'பீனல் லெவி' போடப்படுமா, தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? சிறந்த மாணவர்களாகப் பயிற்றுவித்து நூற்றுக்கு நூறு பேர் தேர்ச்சி பெறச் செய்தால், அவர்களுக்கு 'இன்சென்டிவ் போனஸ்' என்று ஏதாவது கொடுக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேர்ச்சி பெற்றால், அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் ஒருவர்கூட 'பாஸ்' செய்யவில்லை என்றால், அதற்கு ஆசிரியர்கள் பொறுப்பல்ல என்று நாம் சொல்வோமானால், இப்போது இருக்கின்ற நிலைமை மேலும் மோசமாகத்தான் ஆகிவிடும். அதற்கு ஆசிரியர்கள்தான் பொறுப்பேற்று அந்தப் பயிற்சியை மேலும் நல்ல முறையில் அளிக்க அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தனியார் பள்ளிகளைப் பொறுத்த அளவில், யாரையும் சேர்த்துக்கொள்ளலாம், யாரையும் நிராகரிக்கலாம் என்ற அளவில் இருக்கிறது. அவர்கள் தரமுள்ள மாணவர்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அரசுப் பள்ளிகளில் வரக்கூடியவர்களை எல்லாம் சேர்த்துக்கொள்கின்ற நிலை இருக்கிறது. தனியார் பள்ளிகளிலும் இன்றைக்கு எல்லாத் தரமுள்ள மாணவர்களையும் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தரம் குறைந்த அல்லது தரம் அதிகமாக உள்ள மாணவர்கள் என்று சொல்லும்போது, அவர்களை அரசுப் பள்ளிகளில் சேர்த்துக்கொண்டால், அதற்குப் பிறகு அவர்களுக்கு வேறு உய்வில்லை என்ற முடிவிற்கு வர வேண்டியதில்லை. ஆசிரியர்கள் அந்த மாணவர்கள் குறித்து தனி அக்கறை எடுத்துக்கொண்டு சொல்ல வேண்டும். தனியார் பள்ளிகளில் உள்ளதுபோல் அரசுப் பள்ளிகளில் இல்லை என்று சொல்லப்படுகிறது. அரசுப் பள்ளிகளுக்கு தரம் குறைந்த மாணவர்கள் வருகிறார்கள், பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் வருகிறார்கள், எனவே நமக்குப் பொறுப்பு அதிகமென்று ஆசிரியர்கள் உணர்ந்து, அவர்களிடம் தனிக் கவனம் செலுத்தினால், தனியார் பள்ளிகளைவிட அரசுப் பள்ளிகள் தரம் உயர்ந்ததாக இருக்கும். இன்றைக்குக் கூட அப்படிப் பல பள்ளிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அமைச்சரவர்கள் அளித்த அறிக்கையில் ஒரு மாணவன்கூடத் தேறாததற்குக் காரணங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் தவறியதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளிகளிலே பணி புரியும் ஆசிரிர்களுக்கு ஒரு ஆண்டுக்கு ஒரு முறைதான் மாறுதல் அளிக்க வேண்டு

மென்று இருந்தாலும், அவர்களை அடிக்கடி மாறுதல் செய்வதால்—3 மாதங்கள், 6 மாதங்கள், இன்னும் ஒரு மாதத்திலேகூட மாறுதல் செய்வதால், அவர்கள் அந்தப் பள்ளிக்கூடங்களில் நிலைத்து இருக்க முடியவில்லை. ஆதலால் அவர்கள் பாடப் போதிப்பிலே தகுந்த கவனம் செலுத்த முடியாத நிலைமை ஏற்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அப்படிப்பட்ட மாறுதல்களைத் தவிர்க்க அரசு முயற்சிகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாறுதல் என்று சொல்வதைவிட, மாறுதல் செய்யப்பட்ட ஆசிரியர்கள் கிராமங்களிலே போய் வேலை செய்ய வேண்டுமென்ற ஆர்வம், நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு அவர்களிடம் இல்லை என்பதுதான் முக்கியமான குறைபாடு.

திரு. பா. ரா. தாமஸ் : சில பள்ளிகள், புனிஷ்மென்டுக்காக அனுப்பப் படும் பள்ளிகள் என்று அழைக்கப்படுகின்றன. அந்தக் காரணத்தினால்தான் ஆசிரியர்கள் அந்தப் பள்ளிகளிலே ஒரு சில மாதங்களே பணியாற்றுகிறார்கள். அந்தப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் போதிக்க வேண்டிய சாதனங்கள், வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி வசதிகள் இல்லாமல் இருந்தால், அந்த இடங்களிலே ஆசிரியர்கள் தங்க வசதிகளும், மாணவர்கள் படிக்க நல்ல வாய்ப்பும் அளிக்கப்படுமா? அடுத்து, அரசுப் பள்ளிகளிலே நாற்றங்கால் பள்ளி என்று சொல்லப்படும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் சேர்வதில்லை. அவர்கள் தனியார் பள்ளிகளுக்குச் செல்லுகிறார்கள். எனவே அரசுப் பள்ளிகளிலும் நாற்றங்கால் பள்ளிகளை இணைத்தால், அந்த மாணவர்கள் அந்தப் பள்ளிகளிலேயே சேர்ந்து, சிறப்பான விகிதாச்சாரத்தைத் தேர்வில் எடுக்க முடியும். அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய பல்வேறு யோசனைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக் கின்றன.

திரு. க. அறிவழகன் : மாணவர்கள் தேர்ச்சி குறைவாக இருந்தால், சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாமென்று அமைச் சரவர்கள் சொன்னார்கள். உரிய காலத்தில் ஆசிரியர்கள் நியமிக்கப்படா மலும், போதிய வசதிகள் செய்யாமலும் இருந்தால், யார்மீது நடவடிக்கை எடுப்பது?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்கள் பணியாற்றுகிற பாது, அவர்கள் அந்தப் பள்ளியிலே சரியாகப் பணியாற்றவில்லை என்ற லைமை ஏற்படுகிறபோதுதான் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறோம். சிரியர்களை உரிய காலத்தில் பள்ளிகளுக்குப் போடவில்லை என்றால், ப்படிப் போடாமல் இருக்கும் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கிறோம். ரிய காலத்தில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று அவர்களிடம் ற்புறுத்துகிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : ஒரு மாணவன்கூட தேர்ச்சி பெறாத ள்ளிகள் நகரங்களில் இருக்கின்றனவா அல்லது கிராமங்களில் இருக்கின்ற வா என்பதை அறிய விரும்புகிறேன். கிராமங்களில்தான் அப்படிப்பட்ட ள்ளிகள் இருக்கின்றன என்றால், மாணவர்களுக்கு என்ன இடையூறு இருக் றது என்பதை அறிய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாநகராட்சிப் பள்ளிகூட அப்படி இருக்கிறது. எனவே நகரங்களிலும் அந்தக் குறைபாடு இருக்கிறது என் பதைக் காட்டுகிறது. அரசு உயர்நிலைப் பள்ளிகள் பெரும்பாலும் கிராமங் களில்தான் இருக்கின்றன. அந்த கிராமங்களில் இருக்கிற அரசு உயர் நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் இந்த அளவிற்குத் தேர்ச்சி பெறாமல் இருப் பதற்கான காரணங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கிறோம். இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இது, இந்த ஆண்டுதான் நடைபெற்றதென்று நினைக்க வேண்டாம். 1948 ஆம் ஆண்டில் நான் எஸ்.எஸ்.எல்.சி., தேர்வு எழுதியபோதுகூட, வருடத்திற்கு 10 பள்ளிகள், 20 பள்ளிகள் என்று இந்தமாதிரி ஒருவரும் தேர்வு பெறாத பள்ளிகள் இருந்தன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்ப் பதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன பதிலி லிருந்து 1948-ல் 10 பள்ளிகள் என்று இருந்தது, இப்போது 45 பள்ளிகளாக உயர்ந்துள்ளதால், ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதை அறிய என்.சி.இ.ஆர்.டி. யின் மூன்று வல்லுநர்கள் அடங்கிய குழுவை நியமித்து, இப்படி ஏன் நடந்தது, அதற்கான காரணங்கள் என்ன, எப்படி இதை நிவர்த்திப்பது என்பதை ஆராய்ந்து, அது குறித்த வெள்ளை அறிக்கையை அவையில் வைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு தனக்கு இருக்கும் பொறுப்பை உணர மறுக்கிறது என்று உறுப்பினர்கள் கருத வேண்டாம். அதற்கான காரணங்களை ஆய்வு செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். பொதுவான குறைபாடு, கிராமங்களுக்கு ஆசிரியர்கள் மாற்றப்படும்போது, அவர்கள் தங்களுக்கு இருக்கும் பல்வேறு சிரமங்களின் காரணமாக அந்தப் பள்ளிகளுக்குச் செல்வதில்லை என்பதுதான். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறிய கும்மிடிப்பூண்டி பள்ளியும் அந்த வகையில்தான் வருகிறது. 6 மைல்களுக்குள்ளே எச்.ஆர்.எ., சி.சி.எ., போன்ற பல்வேறு சலுகைகள் இருப்பதால், அந்தப் பள்ளிகளுக்குச் சென்று வேலை செய்ய ஆசிரியர்கள் விரும்பவில்லை. எனவே ஆசிரியப் பெருமக்கள் இத்தகைய நிலைமைகளை உணர்ந்து, கொஞ்சம் ஒத்துழைப்புத் தந்தால், அது இத்தகைய குறைபாட்டைப் போக்க உதவி செய்வதாக இருக்கும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : திருச்சியிலே உள்ள ஒரு பள்ளியிலே 1978 ஆம் ஆண்டில் ஒரு மாணவன்கூட தேர்ச்சி பெறவில்லை. ஆனால் 1970 ஆம் ஆண்டில் 66 சதவிகிதம் மாணவர்கள் தேர்வு பெற்றார்கள் அதற்குக் காரணம் அந்த ஆண்டு தலைமை ஆசிரியர் மாற்றப்பட்டதுதான் தலைமை ஆசிரியர் மாற்றம்தான் இவ்வளவு நல்ல ரிசல்ட்டைக் கொடுத்துள்ளது. எனவே அத்தகைய தலைமை ஆசிரியருக்குப் பரிசு ஏதாவது கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நல்ல ஆசிரியர்கள், நல்ல தலைமை ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு நல்லாசிரியர்கள் விருதை ஆண்டுதோறும் தருகிறோம். அந்த நேரத்தில் இப்படிப்பட்டவர்களைப் பற்றியும் பரிசீலிக்கலாம்.

திரு. க. சந்தோஷம் : பத்தாவது வகுப்பில் ஒரு மாணவனும் தேர்ச்சி பெறாத உயர்நிலைப் பள்ளிகள் என்ற பட்டியலில் முதலில் இருப்பது சி.எஸ்.ஐ. செவிடர் உயர்நிலைப் பள்ளி, கொட்டாரம் என்பதுதான். மற்ற மாணவர்களைப் போலவே அவர்களுக்கும் தேர்வுகள் வைக்கப்பட்டதா அல்லது அவர்களுக்கு ஏற்ற முறையில் தனியாகத் தேர்வுகள் நடத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இங்கே இருக்கின்ற அறிக்கைப்படி ஒரே தேர்வுதான். பத்தாவது வகுப்பிற்கு ஒரு தேர்வு, பதினோராவது வகுப்பிற்கு ஒரு தேர்வு.



திரு. செ. முத்துசாமி : கல்வி அமைச்சரவர்கள் கூறும்போது, ஆசிரியர்கள் இதிலே பொறுப்பு ஏற்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆசிரியர்கள் நிச்சயமாகப் பொறுப்பு ஏற்கத் தயாராக இருக்கிறார்கள். தனியார் பள்ளிகளிலே நிர்வாகத்தை நடத்துவதற்காக உள்ள சுதந்திரங்கள் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, மாறுதல் காரணமாக ஏற்படும் பிரச்சினைகள் இருக்கின்றன. இடம் காலியாக இருந்தும், அது காலத்தில் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கும் நடைமுறைகள் இருக்கின்றன. இவைகளெல்லாம் நடைமுறையில் இருக்கக் கூடிய குறைபாடுகள். இவைகளை ஆய்ந்து உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, அந்தந்தப் பிரதேசத்திலுள்ள பள்ளிகளில், அந்தந்தப் பிரதேசத்திலுள்ள மாணவர்களைச் சேர்க்கும் நடைமுறையைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதுவரை 13 துணைக் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இவைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனையாகக் கருதி, அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

## *Instructors in Weaving.*

* 7 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that some fultime prevocational instructors in weaving, serving in Higher Elementary Schools under Panchayat Unions have been posted as part-time instructors in Ramanathapuram District ;

(b) if so, the number so affected ; and

(c) the reasons therefor ?

## நெசவுத் தொழில் ஆசிரியர்கள்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் கீழுள்ள உயர் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் நெசவுத்தொழில் பயிற்சி முழுநேர ஆசிரியர்களில் சிலர், இராமநாதபுரம் மாவட்டத்தில் பகுதிநேர ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஈ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(இ) & (ஈ) } இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : பகுதி நேர ஆசிரியர்களுக்குக் குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது. அதை உயர்த்தக்கூடிய நோக்கம் அரசுக்கு இருக்கிறதா ? அதை எந்த அளவிற்கு உயர்த்த அமைச்சரவர்கள் முன் வருவார்களென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊதிய நிர்ணயம்பற்றி அரசு மறு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. நியாயமான அளவிற்கு உயர்த்தும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தொழிலாசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றினால் ஒருவிதமான ஊதியமும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே பணியாற்றினால் வேறுவிதமான ஊதியமும் இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி, ஒரேவிதமான ஊதியம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : முழு நேரத்திற்கு இருக்கும் ஊதியத்தையும், பகுதி நேரத்திற்கு இருக்கும் ஊதியத்தையும் ஒன்று சேர்க்க முடியாது.

(பிற்பகல் 4-40)

திரு. செ. முத்துசாமி : உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்கள் பெற்றிருக்கும் கல்வித் தகுதியை இவர்களும் பெற்றுத் தான் பணியாற்றுகிறார்கள். ஆகவே உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களுக்குத் தரப்படும் சம்பளம் இவர்களுக்கும் தரப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரை நான், நான் கூற முடியும்.





*Government Schools in Kanyakumari District.*

* 8 Q.—Thiru M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the District Development Council has recommended to the Government not to convert the Government Elementary and Middle Schools in Kanyakumari District as Panchayat Union Schools ; and

(*b*) if so, the action taken thereon ?

கன்னியாகுமரி மாவட்ட அரசுப் பள்ளிகள்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசினர் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளை ஊராட்சி ஒன்றிய பள்ளிகளாக மாற்றக்கூடாது என்று மாவட்ட வளர்ச்சி மன்றம், அரசுக்கு கருத்து ஏதேனும் தெரிவித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அத்தனை தொடக்கநிலைப் பள்ளிகளும் நடுநிலைப் பள்ளிகளும் அரசுப் பள்ளிகளாக இருக்கின்றன. ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்ததன் காரணமாக ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதோடு மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும் ஏகமனதாய் தீர்மானம் நிறைவேற்றி இப்பொழுதுள்ள முறையே நீடிக்கலாம் என்று சொன்னார்கள். அதில் முடிவு எடுப்பதில் என்ன சங்கடம் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இப்பொழுதுள்ள முறையே நீடிக்கும் என்பதுதான் முடிவு.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்துக் தொடக்கநிலைப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள் அரசின் கல்வித் துறையினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றன. நல்லமுறையில் அவை இயங்குகின்றன. பிற மாவட்டங்களிலும் அந்த முறை எப்போது

முதல் கொண்டுவரப்படும்? இதுபற்றி உள்ளாட்சித் துறை பரிசீலித்து வருகிறதா? பிற மாவட்டங்களிலும் நடுநிலைப்பள்ளிகள் மற்றும் தொடக்க நிலைப் பள்ளிகள் கல்வித் துறையிடம் ஒப்படைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** கேள்வி கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றியது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அனைத்துப் பள்ளிகளும் அரசுடைமையாக்கப் பட வேண்டும் என்பதுதான் நீண்டநாள் கோரிக்கை. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளாக அரசுப் பள்ளிகளை மாற்றக்கூடாது என்று புகார் சொல்லப் பட்டு அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை அளித்துக் கொண்டிருக் கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திலே கல்வியை ஒப்படைப்பதால் தான், ஆசிரியர்கள் மத்தியில் அரசியல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அனைத்துப் பள்ளிகளையும் அரசுத் துறையிடமே ஒப்படைக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவலியைத் தீர்ப்பதற்கு தலையணையை மாற்றிப் பயனில்லை.

**திரு. செ. முத்துசாமி :** கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முறை மற்ற மாவட்டங்களுக்கும் கொண்டு வரப்படுமா? அங்கு நல்லமுறையில் கல்வித் துறை இயங்குகிறது. அந்த நடைமுறையை மற்ற மாவட்டங்களுக்கும் கொண்டுவருவதுபற்றி அரசு பரிசீலிக்கிறதா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** கன்னியாகுமரி மாவட்டத்தில் இப் பொழுது நடைமுறையில் இருக்கின்ற முறையை மாற்றலாமா வேண்டாமா என்பது தான் கேள்வி. மாற்ற வேண்டாம் என்ற கருத்தை அரசு பரி சீலித்து வருகிறது.

## *Food Poisoning.*

*9 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of food-poisoning cases admitted in the Hospital at Madurai, in July, 1978 ;

(*b*) whether the Government had conducted any enquiry in that regard ; and

(*c*) if so, the result thereof ?



## உணவில் விஷம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மதுரையில் விஷம் கலந்த உணவு உட்கொண்டதன் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அதுபற்றி, அரசு விசாரணை ஏதும் செய்ததா?

(உ) ஆம் எனில், அதன் முடிவு யாது?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** (அ) 175 பேர் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்கள்.

(இ) ஆம். அரசு விசாரணை செய்தது.

(உ) பாதிக்கப்பட்டவர்கள் உட்கொண்ட உணவில் உபயோகித்த நல்லெண்ணெயின் மாதிரிகள் சிலவற்றில் திரோடின் என்ற நச்சுப்பொருள் கலந்து இருப்பதாக கிண்டி. கிங் பரிசோதனை நிலையத்தில் கண்டுபிடிக்கப் பட்டு அதன்படி. எட்டு (8) மாதிரிகளின் மீது உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின்படி நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டதில், மூன்று குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள குற்றச்சாட்டுகள் இன்னமும் நீதிமன்றத்திலுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மதுரையில் எந்த வட்டாரத்தில் நடந்தது? கலப்படமான எண்ணெய் விற்ற 8 மாதிரிகளின் மீது கலப்படத் தடுப்புச் சட்டத்தின்படி நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன என்று சொன்னார்கள். கலப்பட உணவினால் மக்களுடைய உடல் நலம் கெடுகிறது, உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் மனதில் கொண்டு கலப்படத்தைத் தடுக்க அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** குறிப்பாக எந்த வட்டாரம் என்ற தகவல் இல்லை. ஆனால் மதுரையில் பரவலாக கலப்பட எண்ணெய் விற்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் எல்லாம் இதனால் பாதிக்கப்பட் டார்கள். மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்கின்ற வகையில், உரிய நடவடிக்கை எடுப்பதற்காக அவ்வப்போது சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : சோதனை நடத்தப்பட்டு, பரிசோதனையில் கலப்படம்தான் என்று கண்டுபிடிக்கப்பட்டு, மாதிரிகளின்மீது உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின்படி நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு, இவ்வளவுக்கும் பிறகு நிரந்தரமாக அவர்கள் சட்ட நுணுக்கங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளாத வகையிலே, நகராட்சி மூலம் லைசென்ஸ் ரத்து செய்வது போன்ற என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தேசித்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : உணவு கலப்படம் செய்வதைத் தடுக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை ஏற்று அரசு பரிசீலிக்கும்.

THIRU G. VASANTHA PAI : Will the Government consider the problem of food adulteration generally and make the penalty more heavy in respect of this offence and also impose serious impediments in the way of merchants indulging in these offences ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இதுபோல் தவறு செய்கிறவர்கள் தப்பித்துக்கொள்ளக் கூடாது என்ற வகையில் கலப்படம் செய்கிறவர்கள் கண்டுபிடிக்கப்படுகிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. ஆனாலும் சில நேரங்களில் அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். இன்னும் இதைத் தீவிரப்படுத்தி தவறு செய்கிறவர்கள் எப்படியாவது தண்டனையிலிருந்து தப்பிக்காமலிருப்பதற்குரிய நடவடிக்கையை அரசு பரிசீலிக்கும்.

திரு. த. சந்தோஷம் : மதுரையில் 3 சில்லரை வியாபாரிகள் மீது வழக்குகள் போடப்பட்டன என்று நினைக்கிறேன். அவர்கள் மூராவும் ஒரு மொத்த வியாபாரியிடமிருந்து அந்த எண்ணெயை வாங்கினார்கள். அந்த மொத்த வியாபாரி மீது வழக்கு தொடுக்கவில்லை. இப்படிப்பட்ட நேரங்களில் மொத்த வியாபாரி யார் என்று கண்டுபிடிக்கப்பட்டு, தவறு நடைபெற காரணமாக இருந்த மொத்த வியாபாரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : எண்ணெய் மாதிரி எடுக்கப்பட்டு எந்த இடத்திலிருந்து வாங்கப்பட்டது என்பதையும் கண்டுபிடித்து அவர்களையும் சேர்த்து மொத்தம் 8 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்களில் 3 பேர் தான் தப்பித்திருக்கிறார்கள். மீதியுள்ளவர்கள் மீது வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



திரு. ஆ. பாலசுப்பிரமணியம் : அமைச்சர் அவர்கள் நல்லெண்ணெயில் நிகோடின் என்ற நச்சுப்பொருள் கலந்திருந்தது என்று சொன்னார்கள். அந்தத் தவறு நல்லெண்ணெய் உற்பத்தி செய்யப்பட்ட இடத்தில் நடைபெற்றதா, இல்லை மொத்த வியாபாரிகளிடத்தில் நடைபெற்றதா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : சோதனைக்கு எடுக்கப்பட்ட மாதிரியில் நச்சுப்பொருள் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எந்த இடத்தில் கலக்கப்பட்டது என்பது பற்றிய விவரம் இல்லை.

THIRU G. VASANTHA PAI : Will the Government consider bringing in measures under the Essential Commodities Act for this purpose and impose very heavy penalties on these people ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : அரசு அதற்குரிய பரிசீலனை செய்யும்.

திரு. செ. முத்துசாமி : சென்னையில் இருக்கின்ற உணவு விடுதிகளில் உணவுப் பொருள்களில் கலப்படம் சற்று அதிகம். குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நாங்கள் சென்னையில் சட்டமன்ற கூட்டத் தொடர் சம்பந்தமாக வந்து தங்கும்போது ஒரு வாரம் உணவு உட்கொண்டால், பிறகு ஊருக்குப் போன பிறகு உடல்நிலை சரியில்லாமல் ஆகிவிடுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியிலேயே இப்படிப்பட்ட தவறு நடைபெறுகிறது. இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதன் மூலம் உடல் நலம் கெடுகிறது, உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது, எங்கள் நல்வாழ்வும், மக்கள் நல்வாழ்வும் பாதிக்கப்படுகிறது என்பதை எல்லாம் மாண்புமிகு நல்வாழ்வு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு உடனடியாக கலப்படத்தைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை மனதில் கொண்டு தீவிரமாக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

### *Pharmacist Training College.*

* 10 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to start a Pharmacist Training College ; and

(*b*) if not, whether the Government will come forward to establish the same ?

மருந்தாளுநர் பயிற்சிக் கல்லூரி.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மருந்தாளுநர் பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லையெனில், அதனை அமைத்திட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : (அ) & (இ) திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையில் 1979-80 ஆண்டிலிருந்து நூறு மாணவர்கள் சேர்ப்புடன் 'டி' பார்மசி பட்டயப் படிப்பு தொடங்க அரசு அனுமதி வழங்கப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி : இப்பொழுது படிக்கின்றவர்களுக்கு அல்லது இந்தத் தகுதியைப் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், மேலும் அதிகமான பேர்களைச் சேர்க்க இதற்கென்று தனிக் கல்லூரி ஏற்படுத்தப்படுமா அல்லது மருத்துவக் கல்லூரிகளில் இதற்கென தனியாக ஒரு பகுதி ஒதுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : இந்தப் படிப்புப் படித்து வருகிறவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகத் தேவை என்பதையும் இப்பொழுது மருத்துவக் கல்லூரிகளில் படித்து வருகிறவர்களுடைய எண்ணிக்கை போதாது என்பதையும் உணர்ந்து இதற்கு என்று தனியாக ஒரு கல்லூரியைத் துவக்க யோசித்து, இந்த ஆண்டுமுதல் திருச்சியில் துவக்கப்பட இருக்கிறது.

THIRU D. SANTOSHAM : Hon. Chairman, Sir, even now in the Madurai Medical College, there are D.Pharm. and B.Pharm. Courses. I would like to know whether they include Pharmacist's Training also. Do the present D.Pharm. and B.Pharm. courses include any Pharmacist's training? I want to know whether the present courses in Madurai Medical College for D. Pharm. and B. Pharm. include Pharmacist's training also.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : இதுபற்றி தனிக் கேள்வி கேட்டால் விளக்கம் சொல்லலாம்.



திரு. செ. முத்துசாமி : மருந்தாளுநர் பயிற்சி, 'பி' பார்மசி கோர்ஸ் பொழுது தமிழ் நாட்டில் இருக்கிறது. 'எம்' பார்மசி கோர்ஸ் இதுவரை ந் நாட்டில் ஆரம்பிக்கப்படவில்லை. ஆந்திராவிலும் பம்பாயிலும் இந்த ம்' பார்மசி கோர்ஸ் இருக்கிறது. இந்த முதுநிலைப் பட்டத்தை ந்நாட்டிலுள்ள மாணவர்கள் பெற வேண்டுமென்றால், இன்றையதினம் ர்கள் ஆந்திரா, பம்பாய் போன்ற இடங்களுக்குச் சென்று தான் படிக்க ண்டிய நிலை இருக்கிறது. இங்கேயும் முதுநிலைப் பட்டம் கொண்டுவரப் டா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(பிற்பகல் 4.50)

3. உரிமைப் பிரச்சினை.

ண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி போலீசாரால் கண்காணிக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி ர்கள் ஒரு உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கி கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக க்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் சட்டமன்ற மேலவை விதி 157-ன் கீழ் கீழ்க்கண்ட உரிமைப் சினையை எழுப்ப அனுமதி கோருகிறேன் :—

"கடந்த 10 நாட்களாக நான் சட்டமன்ற மேலவை உறுப்பினராகச் ல்பட முடியாத நிலையில் போலீசாரால் ஒரு குற்றவாளியைப்போல காணிக்கப்பட்டு வருகிறேன். எனது வீடு சி.ஐ.டி. அதிகாரிகளால் றுகையிடப்பட்டிருக்கிறது. இந்த முற்றுகையை டி.ஐ.ஜி. (சி.ஐ.டி.) கள் நேரில் கண்காணித்து வருகிறார். என்னைப் பார்க்க வருகின்ற வையாளர்கள் கண்காணிக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, அச்சுறுத்தப் நார்கள். எனது உறவினர்கள் கூட எனது வீட்டிற்கு வர முடியாத ம இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. எனது கார் போலீசாரால் பின்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 பிப்ரவரி 1

தொடரப்படுகிறது. எனது தொலை பேசி 'டேப்' செய்யப்படுகிறது. பல நேரங்களில் முறையாக இயங்க முடியாதவாறு தடைசெய்யப்படுகிறது. என்னைச் சுற்றியிருக்கிறவர்கள் ஏதோ நான் பெரிய தவறு செய்தவனைப் போல என்னைக் கருதுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலையை இந்த அரசாங்கம் உருவாக்கி இருக்கிறது. இது ஒரு அங்கத்தினருடைய உரிமையில் அத்துமீறி அரசாங்கம் தலையிடுவதாகும். மேற்கூறிய அரசாங்க நடவடிக்கைகள் இந்த நிமிடம் வரை, அதாவது இன்று இந்த மேலவைக்கு வருகின்ற இந்த நேரம் வரையில் தொடர்ந்துகொண்டிருக்கிறது. நான் சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய கடமையை ஆற்ற முடியாத நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். இது உறுப்பினர்கள் உரிமை மீறிய செயலாகும். எனவே, இந்த உரிமைப் பிரச்சினையை இந்த அவையில் கொண்டுவர அனுமதி கோருகிறேன்".

தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினை மீது தொடர்ந்து சில கருத்துக்களைச் சொல்ல தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பாயின்ட், பாயின்ட்-ஆக சிக்கிரம் சொல்ல வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அனைத்தையும் இந்த அறிக்கையில் சொல்ல முடியாததால் விதியின்படி சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தேன். பொதுவாக 24 மணி நேரமும் எந்தச் செயலும் செய்ய முடியாத அளவுக்கு, கட்சிப் பணிகளிலே ஈடுபடுவதாக இருந்தாலும் அல்லது வீட்டைவிட்டு வெளியே உற்றார் உறவினர்களை, நண்பர்களைச் சென்று சந்திப்பதாக இருந்தாலும், இன்றையதினம் அரசாங்கத்தினுடைய சி.ஐ.டி. இலாகா அதிகாரிகளையும், கார்களையும் அனுப்பி உறுப்பினரைப் பின்தொடர்வது என்பது ஜனநாயகத் திலே இன்று உறுப்பினர்களுக்கு இருக்கிற பாதுகாப்பை அல்லது உரிமையைப் பறிப்பதாகும். ஆளும் கட்சிக்காரர்கள் இன்றையதினம் எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களை நசுக்க வேண்டும், அழுத்த வேண்டும், விரட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு இப்படிப்பட்ட நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக்கொண் டிருக்கிறார்கள். குறிப்பாக இன்றையதினம் டி.ஐ.ஜி.-யாக இருப்பவர், தான் முதலமைச்சர் அவர்களுக்குச் சொந்தக்காரர் என்று சொல்லிக்கொண்டு, வெளிப் படையாக இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இந்தக் கருத்து அதிகாரிகள் மத்தியிலே கூட உருவாகிக்கொண்டிருக்கிறது.



1980 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, யாரோ ஒரு டி.ஐ.ஜி. என்று சொல்லி, முதலமைச்சர் அவர்களுக்குச் சொந்தக்காரர் என்று சொல்லி, ஆதாரமற்ற ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். அவர் யார், எப்படிப்பட்டவர் என்று சொன்னால், நன்றாக இருக்கும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அவர் யார் என்று சொல்வதற்கு அல்ல நிரூபிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். இந்த உரிமைப் பிரச்சினையை நாங்கள் எடுத்துக்கொண்டு எனக்கு வேண்டிய. . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சொல்லும்போது ஆதாரத் தோடு சொல்லிவிட்டால், அதற்கென்று விசாரணை வைக்கவேண்டிய அவசியம் ஏற்படும்போது, வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தப் பிரச்சினையில் ரொம்ப ஆழ மாக, அடிப்படையாகப் போக வேண்டாம். விரிவாக விசாரணையில் வைத்துக் கொள்ளலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த மாதிரி நிலைமைகள் இன்றைய தினம் நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே நான் சார்ந் திருக்கின்ற கட்சியின் தலைவர்களும் கண்காணிக்கப்படுகிறார்கள். இருந் தாலும் இந்த அவையினுடைய உறுப்பினர் என்ற முறையில், இந்த அவைக்கு வருகின்ற நேரத்திலே கூட, வீட்டைவிட்டு புறப்பட்டவுடனே, எதிர் வீட்டிலே ஒரு காரை நிறுத்தி எங்கே புறப்படுகிறார், என்ன செய்கிறார் என்றெல்லாம் கண்காணிப்பதைப் பார்க்கும்போது, உள்ளபடியே எங்களுடைய உரிமைகளை, இந்த மன்றத்திலே உறுப்பினராகச் செயல்படக்கூடிய உரிமையை இந்த அரசாங்கம் பறிக்கிறது என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்திலே நான் வைத்துக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, ஒரு உறுப்பினர் என்ற முறையிலே என்னிடம் சிலர் தங்களுடைய பிரச்சினைகளை முறையிட வருகிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் எதிர்க் கட்சிக்காரர்களிடத்திலே குறை களைச் சொல்லி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்பது ஜனநாயகத்திலே கடைபிடிக்கப்பட்டு வரும் மரபாகும். அப்படி வருகின்றவர்களைக்கூட, "எதற்காக வருகிறீர்கள்? என் எம்.எல்.சி.-யைப் பார்க்க வருகிறீர்கள்? இரவு 00 மணிக்கு வீட்டுக்கு முன்னாலே அரசாங்கத் வேண்டும்?" என்று கேள்விகளை நின்றுகொண்டு, கேட்டு அச்சுறுத்து தினுடைய சி.ஐ.டி. அதிகாரிகள் பாதுகாப்பற்ற நிலை உருவாகி கிறார்கள். உறுப்பினர்களுக்கு

யிருக்கிறது. இந்த நிலை நீடித்தால், மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் உத்தரவிட்டால், இந்த அவையிலேயே கூட தங்கிவிட நான் தயாராக இருக்கிறேன். ஏனென்றால், வெளியிலே பாதுகாப்பு இல்லை. எதிர்க் கட்சிக்காரர்களுக்கு, எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு இந்த மன்றத்தின் தலைவராக இருக்கின்ற தாங்கள் தான் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இந்த உரிமைப் பிரச்சினையை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த உரிமைப் பிரச்சினையின் மீது என்னுடைய தீர்ப்பை பின்னர் வழங்குகின்றேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்த அவையில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கும், அரசு தன்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கும் தாங்கள் வாய்ப்பு அளித்து, தீர்ப்பு அளிப்பது தான் மரபு என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒத்தி வைப்புத் தீர்மானமாக இருந்தால்தான் அந்த நிலை. இதிலே இதுவரையிலும் அந்த மரபு கிடையாது. இதை முன்னோடியாகவோ, மரபாகவோ ஆக்கக்கூடாது. முன்பு ஒருமுறை மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் பிரச்சினை வந்தபோது அனுமதித்தேன். ஆனால், அது மரபு அல்ல. இதிலே அவசியம் இல்லை. குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார். விசாரணைக்கு வரும். என்னுடைய தீர்ப்பை பிறகு சொல்கிறேன்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தமிழ்நாடு வர்த்தகர் கழகம் ஹர்த்தாலில் ஈடுபட்டிருப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்று சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, நான் நான்கு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். அவற்றில் இது எந்தத் தீர்மானம் என்று தெரியவில்லை.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நல்லவேளையாக நான்குக்கு மேல் கொடுக்கவில்லை. நான்குக்கு மேல் கொடுத்தவர்களும் இருக்கிறார்கள். தமிழ்நாடு வர்த்தகர் கழகம் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி ஹர்த்தாலில் ஈடுபட்டிருப்பது குறித்த ஒத்திவைப்புத் தீர்மானம் இது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தமிழ்நாடு வர்த்தகர் கழகத்தினர் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி அதாவது ஒருமுனை விற்பனை வரி வேண்டும், கூடுதல் விற்பனை வரி ரத்துசெய்யப்பட வேண்டும், ஒரே லைசென்ஸ் முறை வேண்டும், வணிகர் நல வாரியம் அமைக்க வேண்டும், மார்க்கெட்டிங் கமிட்டி தொல்லைகள் ஒழிக்கப்பட வேண்டும், சிறு வியாபாரிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையிலே இந்தியத் தலைமை நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின் அடிப்படையில் கலப்பட தடுப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும், வியாபாரிகளுக்கு மேலவையிலே பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கைகளை நீண்ட நாட்களாக அரசிடம் அவர்கள் வைத்து, வாதிட்டு, அவைகள் நிறைவேற முடியாத சூழ்நிலையிலே அவர்கள் இன்றையதினம் நாடு பூராவும் கடையடைப்பும், உண்ணாவிரதமும் மேற்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக பொது மக்கள் வெளியிலே எதுவும் வாங்க முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பொதுமக்கள் அல்லல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி விரிவாக இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க அதற்குரிய சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தமிழ் நாடு வர்த்தகர் கழகம் ஈடுபட்டிருக்கின்ற இந்த ஹர்த்தாலின் நோக்கங்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஹர்த்தால் திட்டம் தொடர்ந்து செயல்படும் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதன் விளைவாக இப்போது இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு சென்னையிலே உணவு விடுதிகளிலே திடீரென்று விலையுயர்வு ஏற்பட்டிருக்கிறது. 1 ரூபாய் 60 காசு என்று இருந்த உணவு இப்போது 2 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. அதற்குரிய காரணம் ஹர்த்தால் என்று சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குரிய கேன்டீனில் கூட உணவின் விலை உயர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளைப் பயன்படுத்திக்கொண்டு உணவு விடுதிகளிலே விலைகளை உயர்த்தும் நிலைமைகள் ஏற்பட்டிருப்பதால், அது பொது மக்களுக்கு மிகுந்த அவதியைக் கொடுப்பதால், இதைப்பற்றி விவாதிக்க இந்த மேலவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு பல இடங்களில் கடையடைப்பும், உண்ணாவிரதமும் இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஒன்றை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய கோரிக்கைகள் இவைகள், இந்தக் கோரிக்கைகள் தீர்க்கப்பட வேண்டும், இல்லாவிட்டால் கடையடைப்பு நடத்துவோம், உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று அவர்கள் அரசையோ, அரசுச் செயலாளரையோ அல்லது அமைச்சர்களையோ சந்தித்துச் சொல்லவில்லை. பார்த்ததாகவும் எனக்குத் தெரியவில்லை.

(பிற்பகல் 5-00)

இப்படிப்பட்ட பொது மக்களுக்குத் தேவையான, மிக அத்தியாவசியமான பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் எல்லாம் இது போன்ற போராட்டங்களில் ஈடுபடுவதற்கு முன்னால் எவ்வளவு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். வியாபாரப் பெருமக்கள் இப்படிப்பட்ட போராட்டங்களில் ஈடுபடும்போது, கடையடைப்புகளில் ஈடுபடும்போது, இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்களும் பொது வாழ்க்கையில் அக்கறை கொண்டுள்ளவர்கள் அத்தனை பேரும் இதிலே இருக்கிற தன்மை நிலைமைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமுதாயத்தின் நலனில் யார் யார் அக்கறை கொண்டு பாடுபடுகின்றார்களோ அவர்களெல்லாம் இதைச் செய்ய வேண்டியது கடமை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வியாபாரப் பெருமக்களின் கோரிக்கைகளைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடும்போது, ஒருமுனை வரிபற்றியும் பல்முனை வரி பற்றியும் குறிப்பிட்டார்கள். இதிலுள்ள தன்மை நிலைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த அரசு பதவிப் பொறுப்பை ஏற்ற பிறகு, பல்முனை வரி விதிக்கப்பட்டிருந்த நான்கு பொருள்களுக்கு ஒருமுனை வரிவிதிப்பை ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் சிறு எளிய, மற்றும் சிறு வியாபாரிகளைப் பொறுத்தவரையில், ஒருமுனை வரியைவிட பல்முனை வரி விதிப்புதான் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எப்படியென்றால், பல்முனை வரி விதிப்பிருந்தால், சிறு வியாபாரிகளைப் பொறுத்தவரையில், ரூபாய் 50,000 அளவுக்கு வியாபாரம் நடந்தாலும், அவர்கள் வரி செலுத்த வேண்டியதில்லை



ருமுனை வரியாக இருந்தால் ரூபாய் 10 அளவுக்கு பொருளை விற்றாலும் ...த்தான வரி செலுத்த வேண்டும். எனவே பல் முனை வரி விதிப்பை சிறு வியாபாரிகளின் நன்மையைக் கருதியே வைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல.

(உறுப்பினர்கள் இடையில் பேசிக்கொண்டிருந்ததால், அமைச்சர் அவர்கள் ...ம் உரையை நிறுத்திக்கொண்டு பிறகு தொடர்ந்தார்.)

தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். அவையில் உள்ள பலரும் பேசுவது என் காதில் விழுகிறபோது, நான் எதைச் சொல்கிறேன் என்பது என் காதில் சரியாக விழவில்லை. (சிரிப்பு)

ஆக, அது மட்டுமல்ல. எழுதிப் படித்தாலாவது அப்படியே படிக்க முடியும். ஆனால் இன்றைக்கு இங்கே வந்த பிறகுதான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி எனக்குத் தகவல் கிடைத்தது. தீர்மானம் இன்றைய தினம் வருகிறது என்றும், எடுத்துக்கொள்ளலாமா என்றும் என்னைக் கேட்டார்கள். நானும் சரி என்று சொல்லிவிட்டேன். எனவே எழுத்து மூலமாக வைத்துக்கொண்டு படிக்கவில்லை.

திரு. க. இராமமூர்த்தி: தீர்மானத்தைப்பற்றி இப்போதுதான் தனக்குத் தெரியும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். எனவே தீர்மானம் குறித்த முழுமையான தகவல் அவரிடம் இருக்காது. இதை நாளைக்கு எடுத்துக்கொள்வதானாலும் பரவாயில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் தயாராக இல்லை என்று சொல்லவில்லை. எழுதி வைத்துக்கொண்டு படிக்கவில்லை என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். எழுதிப் படிப்பது என்பது வேறு. எழுதி வைத்துக் கொள்ளாமல் பதிலளிப்பது என்பது வேறு. அதைத்தான் சொல்ல வந்தேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு, வியாபாரிகள்மீது புதிதாக வரியைப் போட்டதா என்றால், இல்லை. இந்த அரசு பொறுப் பேற்ற பிறகு எந்தப் பொருளின் மீதாவது வரியை ஏற்றியிருக்கிறதா என்றால், இல்லை. அது மட்டுமல்ல. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, வியாபாரிகளுக்கு

எந்தச் சிக்கலையாவது உண்டாக்கியிருக்கிறதா என்றால், இல்லை. இந்த அரசு பொறுப்பேற்கச் சொல்வதற்கு முன்னாலே ஆராய்ந்து, பரிசீலிப்பது என்பவைகள் பல பிரிவுகளாக இருந்தன. அது சங்கடமாக இருக்கிறது என்று வியாபாரிகள் சொன்னபோது, அதையெல்லாம் இந்த அரசுதான் ஒன்றாக ஆக்கியது. இதிலுள்ள சங்கடங்களை ஆராய, இந்த அரசு வந்த பிறகு, ஒரு கமிட்டி போட வேண்டும் என்று கேட்டார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் 'கெய்வார்' தலைமையில் ஒரு கமிட்டியை இந்த அரசு நியமித்தது. அந்தக் கமிட்டியும் 116 சிபாரிசுகளை இந்த அரசாங்கத்திற்குச் செய்திருக்கிறது. இதைக் குறித்து நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு கமிட்டி நியமித்து, அந்தக் கமிட்டி அரசாங்கத்திற்கு 116 சிபாரிசுகளைக் கொடுத்த பிறகு, இன்றைய தினம் இந்த அரசு 83 சிபாரிசுகளின்மீது தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசைக் காட்டிலும் வேகமாக யாராவது உத்தரவு போட்டிருந்தால், அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சர் அவர்களை நாங்கள் பாராட்டுகிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அது மட்டுமல்ல. சில பொருள்களின்மீது இருந்த வரியை இந்த அரசு எடுத்திருக்கிறது. குறிப்பாக 'பன்' பொறை, கச்சாத் துணிகள், வெண்ணெய் போன்றவைகள் மீதான வரியை இந்த அரசு நீக்கியிருக்கிறது. ஆபரணங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த நான்கு சதவீத வரியை இரண்டு சதவீதமாக ஆக்கியிருக்கிறது. 'காட்டன் ஹொசியரியார்ன்' மீது இருந்த வரியை மூன்று சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாகக் குறைத்திருக்கிறது இந்த அரசு. அதைப் போலவே ஏழைகள் வாகனமாக இருக்கும் சைக்கிள் மீது—மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் கார் வைத்துக்கொள்ளலாம்—இருந்த வரியைக் குறைத்திருக்கிறோம். இப்படி இந்த அரசு வந்த பிறகு வியாபாரிகள் குறித்த எந்த அளவுக்கு பரிவோடு காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கே நன்கு தெரியும். அவர்களுக்கு நாங்கள் எதையும் செய்யவில்லை என்று சொன்னாலும், வியாபாரிகளுக்குத் தொல்லை தரும் வகையில் புதிய வரி எதையும் போடவில்லை, புதிய சோதனைச் சாவடிகளைப் போடவில்லை, புதிதாகப் பரிசோதனை எதையும் செய்யவில்லை என்பதை இந்த அவையின் மூலம் இந்த மாநில மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த அவையில் உள்ள உறுப்பினர்களும், பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களும், சமுதாய நலனில் அக்கறையுள்ள



வர்களும் இதைப்பற்றி பொது மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பொது மக்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களை நடுநிலைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தில் வசூலிக்கப்படுகிற வரியில் 100-க்கு 85 சதவீதம் ஒருமுனை வரியின் மூலம்தான் கிடைக்கிறது. 15 சதவீதம்தான் பல்முனை வரி விதிப்பின் மூலமாகக் கிடைக்கிறது. அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. சிறு வியாபாரிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கிற வகையில், அதே நேரத்தில் அரசாங்கத்திற்கும் சங்கடம் இல்லாத வகையில், எதையெதைச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய இந்த அரசு காத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அவைகளையெல்லாம் இந்த அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்கிற நிலையில் இந்தப் பொருள் குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி என்னுடைய அனுமதியை நான் மறுக்கிறேன்.

## 5. தகவல் கோரல்.

### (1) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் மேலும் மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான முன்னறிவிப்புக் கொடுத்திருந்தேன். அவற்றின் நிலைமை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்றைக்குத்தானே முதல் நாள். உறுப்பினர்கள் கொடுத்த மற்ற ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அனைத்தும் பரிசீலனையில் இருக்கின்றன.

### 6. அறிவிப்பு.

#### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1—2—1980 ஆம் நாளான இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைத் தெரிவிக்கிறேன்.

| | | |
|---|---|---|
| 2—2—1980 | — | ஆளுநர் உரையின்மீது விவாதம். |
| 3—2—1980 | — | ஞாயிறு — விடுமுறை. |
| 4—2—1980 முதல் 6—2—1980 | | ஆளுநர் உரையின்மீது விவாதம். |
| 7—2—1980 | — | ஆளுநர் உரையின் மீது விவாதமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரையும். |
| 8—2—1980 | — | கூட்டம் இல்லை. |
| 9—2—1980 | — | தனி உறுப்பினர் அலுவல். |
| 10—2—1980 | — | ஞாயிறு — விடுமுறை. |
| 11—2—1980 முதல் 13—2—1980 | — | அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |

மேலவை வழக்கம்போல் மாலை 4 மணி முதல் 7 மணி வரை நடைபெறும்.

#### (2) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு திருத்தம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் 1980, பிப்ரவரித் திங்கள் 4-ஆம் நாள், திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு முன்னதாகச் செயலாளருக்கு அனுப்பப்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



### 7. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளில் 8-வது விதியின்கீழ், மேலவையின் 5-வது கூட்டத் தொடருக்கு, கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமிக்கின்றேன் :—

1. டாக்டர் இரா. சனார்த்தனம்.
2. திரு. வே. தங்கபாண்டியன்.
3. திரு. பா. ரா. தாமஸ்.
4. திரு. ஜெ. எம். மியாகான்.

### 5. தகவல் கோரல்—தொடர்ச்சி.

#### (2) அமைச்சரின் ராஜினாமா குறித்து.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். தமிழக அமைச்சர்களில் ஒருவர் தமது பதவியை இராஜிநாமா செய்து விட்டதாக இன்றைய பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அந்த அமைச்சர் இந்த மேலவையின் உறுப்பினராக இல்லாத காரணத்தால், அதுபற்றிய விவரத்தை எங்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. என்றாலும் அவர் மிக முக்கியமான துறைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார் என்ற காரணத்தால்—அதாவது தொழில் துறை மற்றும் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை ஆகியவற்றிற்கு பொறுப்பேற்றுக்கொண்டிருந்தார் என்ற காரணத்தால்—அந்தத் துறைகள் இன்றையதினம் ஸ்தம்பித்துப் போகின்ற அளவுக்கு அவருடைய இராஜிநாமா அமைந்திருக்கிறது. இது குறித்து எந்தத் தகவலும் இந்த அவைக்கு இல்லை. அந்த அமைச்சர் இராஜிநாமா செய்தாரா? அவர் பத்திரிகைகளுக்குப் பல தகவல்களைக் கொடுத்திருக்கிறாரே. அவைகள் உண்மைதானா என்ற தகவலும் இல்லை. அதோடு அமைச்சருக்கே பாதுகாப்பில்லை என்ற காரணத்தைக் காட்டி, அவர் ராஜிநாமா செய்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதால், அவைக்கு அது மிக முக்கியமான ஒன்றாகி விட்டது. இதுபற்றிய உண்மையை அறிய வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். அந்த அமைச்சர் தற்போது இருக்கிறாரா இல்லையா, அவர் ஏற்றிருந்த துறைகளுக்கு உரிய பொறுப்பை அவர் தொடர்ந்து வகித்து வருகிறாரா அல்லது இராஜிநாமா செய்திருப்பது

உண்மையா என்பது பற்றிய சரியான தகவல் இந்த அவைக்கு இதுவரை தரப்படவில்லை. இந்தத் தகவல் இந்த அவைக்கு ஏன் தரப்படாமல் இருக்க வேண்டும் அல்லது ஏன் இந்தத் தகவல்கள் அவையிலிருந்து மறைக்கப்பட வேண்டும்? புதிதாக அமைச்சர் யார் இருக்கிறாரா அல்லது தொழில் துறை வேறு யாருடைய பொறுப்பிலாவது விடப்பட்டு இருக்கிறதா என்ற விவரமெல்லாம் இந்த அவைக்குத் தெரியாத நிலை இருக்கிறது. எனவே இந்த விவரங்கள் எல்லாம் இந்த அவைக்குக் கிடைப்பதற்கு, தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5.10)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அரசுத் தரப்பில் ஏதாவது சொல்ல விரும்புகிறார்களா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மேலவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பாக ஒரு பிரச்சினையை நல்லுணர்வோடும் உள்ளத்தோடும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடும் எழுப்பினார்கள். அதிலே ஆபத்தான கேள்வி ஒன்றையும் எழுப்பினார். இராஜினாமா செய்ததாகக் கருதப்படுகிற அமைச்சர் உயிரோடிருக்கிறாரா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவர் இருக்கிறாரா என்றார்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அவர் இருக்கிறாரா என்று கேட்டார். அவர் இருக்கிறார், அவர் இராஜினாமா செய்தது உண்மை. இந்த இராஜினாமா நேற்று முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது. இன்று காலையிலே அது கிடைத்திருக்கிறது. அதிலே அவர் என்னென்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் என்பதைப்பற்றி அரசின் தரப்பில் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டார்கள். இங்கே ஒரு விதி "பதவி விலகிய அமைச்சரது விளக்கம்" என்ற தலைப்பில் அத்தியாயம் 11-ல் விதி 56 (1)-ல், "அமைச்சர் பதவியை விட்டு விலகிய உறுப்பினர் ஒருவர் தாம் பதவியை விட்டு விலகியதற்கான விளக்கத்தை தலைவரின் இசைவைப் பெற்றுக் கூறலாம்.

(2) அவ்வாறு கொடுக்கப்படும் விளக்கத்தின் பிரதி ஒன்று வருக்கும், அவை முன்னவருக்கும், விளக்கம் கொடுக்கப்பட இருக்கிற நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.



ஆயினும், எழுத்து மூலமாக விளக்கமாக இல்லாவிடினும் அவ்விளக்கத்தின் ருக்கத்தை அல்லது அதன் முக்கிய கூறுகளை தலைவருக்கும், அவை முன்னவருக்கும் விளக்கம் கொடுக்கப்பட இருக்கிற நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே தெரியப்படுத்த வேண்டும்.

(3) வினாக்கள் முடிவுற்ற பின், அந்நாளுக்குரிய அலுவல் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பிற அலுவல்கள் தொடங்கப்படுவதற்கு முன், அவ்விளக்கம் கூறப்பட வேண்டும்.

(4) அவ்விளக்கத்தின் மீது எவ்வித விவாதமும் இருக்கலாகாது; ஆனால், அவ்விளக்கத்திற்குப்பின் அதை அதனோடு தொடர்புடைய பொருத்தமான விளக்கம் ஒன்றினை அமைச்சர் ஒருவர் கூறலாம்" என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே இராஜினாமா செய்த அமைச்சர் தன்னிலை விளக்கம் என்ற பெயரில் அறிக்கையை இந்த மன்றத்திற்கு அளித்ததற்குப் பிறகு, அரசின் சார்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, அந்த வாய்ப்பு இந்த அவைக்குக் கிடையாது. ஏனென்றால் இராஜினாமா செய்த அமைச்சர் அவர்கள் இந்த அவையின் உறுப்பினர் அல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை, "அமைச்சர் இராஜினாமா செய்தார் என்பது உண்மையா இல்லையா" என்பதுதான். இராஜினாமாவுக்கான காரணங்கள் என்ன என்பது தனியாக விவாதிக்க வேண்டிய விஷயம். இந்த அவையின் உறுப்பினராக அவர் இல்லாததால், அவருடைய அறிக்கை இந்த அவைக்கு வருகிற வாய்ப்பில்லை. ஆனால் அவர் இராஜினாமா செய்தது உண்மைதான் என்று அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, நான் படித்தது, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளில், அமைச்சரைப்பற்றிக் கூறியிருப்பது தான். விதிகளின் அடிப்படையிலே நான் கூறியவைகள் சரியென்று கருதுகிறேன். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி ஒத்துக் கொள்வார் என்று நம்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய உறுப்பினர் அமைச்சராக இருந்து ராஜினாமா செய்தால் தலைவருடைய அனுமதியோடு இந்த அவையில் வந்து அறிக்கையைத் தர முடியும். ஆனால் அவர் இராஜினாமா செய்த பிறகு இந்த அவைக்குள் நுழைய முடியாது. ஆகவே . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தெரிந்துகொள்ள உரிமையுண்டு. ஏனென்றால் அமைச்சர் சம்பந்தப்பட்டிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போது தரப்பட்டுள்ள தகவலோடு திருப்தி அடைய வேண்டும். பின்னால் அந்த நிலை வருகிறபோது பார்க்கலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீது விவாதம் நடக்கவிருக்கிறது. இரண்டு துறைகளுக்குப் பொறுப்பு வகித்த அமைச்சர் இராஜினாமா செய்திருக்கிறார். அந்தத் துறைகளை இப்போது யார் பொறுப்பில் வைத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தால், அவரைப் பார்த்துப் பேச வாய்ப்பாக இருக்கும். ஆகவே அதை அறிவிக்க அமைச்சரவை முன்வர வேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் என்ற முறையிலும், அந்த இலாக்காவை ஒதுக்கியவன் என்ற முறையிலும், பொறுப்பிலே உள்ள அமைச்சர் பதவி விலகினால், அந்த இலாக்காக்கள் முதலமைச்சரிடம் வந்து விடுகின்றன.

## 5. ஆளுநர் உரையின்மீது விவாதம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, உரை @ நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றனர்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 104-122 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றனர்".

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பு நல்கியதற்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது இந்த அரசு ஆற்றக்கூடிய பணியைக் குறித்தும், இனி செய்யக்கூடிய காரியங்களைக் குறித்தும் தரப்படுகிற ஒரு குறிப்பாகும். அந்தக் குறிப்பின் அடிப்படையிலே அதனைத் தொடர்ந்து அரசு பல்வேறு பணிகளை ஆற்றும். ஆளுநர் உரையை ஆதரித்து சிறப்பான கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சம்பிரதாய அடிப்படையில், "இதில் உப்பில்லை ; காரமில்லை" என்று வேண்டாத மருமகளைப்பற்றிக் குறைபடுகிற மாமியாரைப் போல சொல்லக் கூடும் என்றாலும் கூட, சம்பிரதாயங்களைக் கடந்து அதிலே இருக்கிற உள்ளுணர்வைப் புரிந்து கொள்ளுவார்களேயானால், நிச்சயம் அவர்கள் கோபம் தணியும், வேகம் தணியும் என்ற எண்ணத்தோடு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

சென்ற ஆண்டு இறுதியில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் இந்த நாட்டிலே பெரிய பாதிப்புகள் ஏற்பட்டன ; பாதைகள் பழுதடைந்தன ; வீதிகள் சீர்குலைந்தன. அத்தனை பாதிப்புகளையும் செம்மைப்படுத்துவதற்கும், சீர்படுத்துவதற்கும் இந்த அரசு பெரிய முயற்சிகளை மேற்கொண்டது. நீலகிரி மாவட்டத்திலும் பெரிய சேதங்கள் ஏற்பட்டன. பெருவெள்ளத்திற்கு முன்பாகவே பழுதடைந்த பாதைகளை செம்மைப்படுத்துகிற காரியத்தில் ஈடுபட்டார்கள். அதைப் போலவே மதுரை மாநகரிலும், உலகத் தமிழ் மாநாடு நடக்கவிருப்பதைக் கருத்திற்கொண்டு பாதைகளைச் செப்பனிடும் பணியில் ஈடுபட்டார்கள். பெரு வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளைச் செம்மைப்படுத்துகிற காரியங்கள் நடந்து வருகின்றன என்பதை ஆளுநர் உரையின் மூலமாகத் தெளிவாக உணர முடிகிறது.

பயிரிடுபவர்களுடைய பயிர் பாதிக்கப்படாமலிருக்க, அவர்களுடைய குறையை நீக்க இந்த அரசு எப்படி அணுகியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஒரு பக்கம் பார்த்தால், "எந்த வரியையும் கொடுக்காதே" என்று விவசாயிகளைப் பார்த்து திசை திருப்புகிற முயற்சியின் குரல்; இன்னொரு பக்கத்திலே கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டிய மைய அரசு, "மாநில அரசு நிதி திரட்டுவதில்லை, விவசாயிகளிடம் நிதியைத் திரட்ட வேண்டும்" என்று தாக்கீது அனுப்புகிறது. இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையிலே இந்த ஆட்சி விவசாயிகள் பிரச்சினையிலே எப்படி அணுகியிருக்கிறது என்பதை ஆளுநர் உரையின் வாயிலாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளித்திருக்கிறது. தக்காவிக் கடன்களைத் தள்ளுபடி செய்திருப்பதால், 8.51 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் பயன் அடைந்திருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் தங்களிடம் கடன்பட்ட விவசாயிகளுக்குச் சில சலுகைகள் அளிக்க முன்வந்தபோது, அதற்காக வழிவகை செய்திட 16 கோடி ரூபாயை முன்பணமாக அரசு கொடுத்து உதவியிருக்கிறது. ஒன்பது மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 27.5 கோடி ரூபாய் உதவி செய்திருக்கிறது அரசு. காரணம் பெரிய வங்கிகளிடம் கடன் பெற்றவர்கள் திரும்பக் கட்டியிருந்தாலும்கூட, வங்கிகள் எல்லாம் முழுக் கடனையும் திரும்பச் செலுத்தாத காரணத்தால், ரிசர்வ் வங்கியிடமிருந்து பணம் பெற முடியாத நிலையிலே மேலும் கடன் அளிக்க முடியாது, சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்து விவசாயிகள் மிகப் பயனடைய அரசு வழிவகை செய்திருக்கிறது. விவசாயிகளின் நலனில் அரசு தன்னுடைய பார்வையைச் செலுத்தியிருக்கிறது.

(பிற்பகல் 5-20)

ஆனால் நாட்டிலே, விளைபொருள்களுடைய விலை குறைந்து விட்டால், விவசாயிகள் கூக்குரலிடுகிறார்கள். விலை ஏறிவிட்டால், வீதிகளிலே கூக்குரல் கேட்கிறது. ஒரு அரசுக்கு இரண்டு நிலைகளையும் சமாளிக்கும் ஒரு கட்டாயம் இருக்கிறது. அந்த நிலையிலே விலை வீழ்ச்சி ஏற்படாமலிருப்பதற்கு என்ன செய்யலாம் என்பதற்கு நல்ல பல ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு அரிசி, கோதுமை ஆகியவற்றிற்கு, சேம கையிருப்பு வைத்திருக்கிறது. அதைப்போலவே மற்ற வேளாண்மைப் பொருள்களையும் பொறுத்து மத்திய அரசு அதே முறையைக் கையாளுமானால், நிச்சயமாக இந்த விலை வீழ்ச்சியை ஓரளவுக்கு தடுத்து நிறுத்தலாம். அது மட்டுமல்ல, பருவ மழை பொய்க்கின்றபோது, கடனால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயி மேலும் கடனாளி ஆகிறான். அதனால், கடனிலே முழுப்பகுதியையோ, ஒரு பகுதியையோ தள்ளுபடி செய்யக்கூடிய அளவுக்கு நிதி வசதியை ஏற்படுத்திக்





கொடுப்பதற்கு இந்த அரசுக்கு மத்திய அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் உரையிலே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் தொடர்பாக இப்போது தமிழகத்திற்கு வந்திருக்கின்ற மத்திய அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுடைய கடனைப் போக்குங்கள். போக்கவில்லை என்றால், எங்களைக் கேளுங்கள். இதைத்தான் நாங்கள் இவ்வளவு காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். இந்த சூழ்நிலையிலே ஆளுநர் அவர்கள் உரையிலே கேட்டிருக்கின்ற வேண்டுகோள் அவர்களைப் போன்ற பெரியவர்களின் முயற்சி காரணமாக நிச்சயமாக ஈடேறும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அடுத்து, ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் மூலம் பல்வேறு பொருள்களை விற்கவும், அதற்கு ஊக்கம் அளிக்கவும் ஒரு நூறு கோடி ரூபாய் திட்டத்தை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. அது மட்டுமல்ல, வேளாண்மைக்குத் தேவையான இடுபொருள்கள், அதாவது இன்புட்ஸ்-களின் விலைகளையும் கட்டுப்படுத்தி வைக்கவும், பல்வேறு துணைப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யவும், இந்த அரசு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இதே அடிப்படையிலே நீங்கள் பார்ப்பீர்களானால், கடன்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும், அவர்கள் புதிய கடன் பெறுவதற்கு வேண்டிய வசதிகளை அளிப்பதற்கும் மேலும் இந்த விவசாயிகள் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காணவும் மத்திய அரசு எந்த அளவிலே உதவி செய்ய வேண்டும் என்பதையும் ஆளுநர் அவர்கள் உரையிலேயே குறிப்பிட்டிருப்பது இந்த அரசு விவசாயிகளுடைய பிரச்சினையிலே எந்த அளவுக்குக் கண்ணோட்டத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக்கும். அது மட்டுமல்ல, குத்தகைதாரர்களுக்கு இதற்கு முன்பு ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் என்று இருந்ததை மூன்று ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் என்ற அளவுக்கு மாற்றியிருப்பதன் மூலம் குத்தகைதாரர்கள் என்ற வடிவிலே பெரிய நிலச்சுவான்தார்கள் நிலையில் இருப்பவர்களை மாற்றம் செய்வதன் மூலமாக மேலும் பல பேருக்கு நிலம் கிடைக்கும் சூழ்நிலை உருவாகும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

இன்னொன்று. பழங்குடி மக்களை ஏமாற்றி அவர்களுடைய நிலங்களை சிலர் கடனுக்குக் கையெழுத்து வாங்குகிறோம் என்று காட்டி அபகரிக்கின்ற நிலைகள் நம் நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன. அண்மையிலே செய்தித்தாள்கள் மூலம் அப்படி ஏமாற்றப்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றி நம்மாலே அறிய முடிந்தது. அதைத் தடுப்பதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்கும் புதிய சட்ட முன்வடிவு கொண்டுவருவதாகத் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல காரியமாகும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

காலாகாலத்தில் மழை பெய்ததாலும், அரசு எடுத்த நடவடிக்கைகளாலும், தமிழ் நாட்டினுடைய உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. விவசாயிகளிடமிருந்து நேரடியாகவோ, வர்த்தகர்களிடமிருந்து லெவியாகவோ கட்டாயக் கொள்முதல் செய்யவில்லை. மத்திய அரசு நிர்ணயித்ததைவிட, குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 105 என்று கொடுத்து நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்கி வருகிறோம். அந்தக் கொள்முதல் நிறுவனங்களை, நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்தி வருகிறது. அது மட்டுமல்ல, கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள் இன்று நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு காலத்திலே நியாய விலைக் கடைகள் வருமா என்று கேட்டார்கள். இப்போது நடப்பதை அவர்களே பார்ப்பார்கள் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, நீர் வசதிகளைப் பயன்படுத்துகின்ற நிலைகளிலே இந்த அரசு ஆறு, குளம், ஏரி ஆகிய நீர் நிலைகளைப் பயன்படுத்துவதோடு, நிலத்தடி நீரையும் பயன்படுத்துகின்ற வகையில் பெரும் அளவிலே முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அது எதிர்கால மக்களுடைய வளர்ச்சிக்கும் விவசாயிகளுக்கும் துணையாக அமையும்.

அடுத்து, வன வளத்தை நினைத்துப் பார்க்கின்றபோது, ஆளுநர் அவர்கள் உரையிலே வன வளத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு நல்ல முயற்சியை மேற்கொள்ள இருப்பதையும், அதற்கு என்று புதிய சட்டங்கள் வர இருப்பதையும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். காரணம் நம்முடைய நாட்டிலே வனப் பொருள்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டிருக்கின்றது என்றால், அங்கே உள்ள மரங்களையெல்லாம் சிலர் வெட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள். கொள்ளையடிக்கிறார்கள். இதை இந்த நாட்டிலே ஒரு கொள்ளைக் கூட்டம் செய்துகொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே அப்படிச் செய்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலேயும், மலைப் பகுதியிலே பெரு மழையின் காரணமாக பெரும் நிலச் சரிவுக்குக்கூட அது காரணமாக இருக்கின்ற காரணத்தினாலேயும், இந்த முயற்சிகளை எடுத்துக்கொள்கிறார்கள். இந்த முயற்சிகள் பாராட்டக்கூடியவை.

அடுத்து, தொழில் கொள்கையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தொழில் கொள்கையை இந்த அரசு எப்படி வைத்திருக்கிறது என்பதையும், தொழில்கள் பெருக்கத்திற்கு இந்த அரசு எந்த முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறது என்பதையும் ஆளுநர் அவர்கள் உரையின் வாயிலாக அறிய முடிகிறது. காரணம் தொழில் வளர்ச்சி இல்லை என்பது போலவும், இந்த அரசுக்கு



கு தொழில் கொள்கை இல்லாதது போலவும் ஒரு பக்கம் பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது. இதில் உள்ளபடியே மத்திய அரசு செய்கின்ற காரியத்தையும் நாம் கொஞ்சம் கவனத்தில் கொண்டு பார்க்க வேண்டும். மத்திய அரசைச் சார்ந்த தொழில் முதலீடுகளைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, 1969-70-லே எட்டு சதவிகிதமும், 1976-77-ல் நான்கு சதவிகிதமும் அதனுடைய முதலீடாக இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில், இங்கே இருக்கும் வேலையில்லாத நிலைமையையும், மக்களுடைய பொருளாதார நிலையிலே உள்ள தாழ்வு நிலையையும் எண்ணிப் பார்க்கின்றபோது, மத்திய அரசு பெரிய அளவிலே முதலீடு செய்வதற்கு இனியாவது எண்ணிப்பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அத்தோடு சேலம் உருக்காலைத் திட்டம், ஒருங்கிணைந்த உருக்காலைத் திட்டம் மற்றும் இதர பகுதியிலும் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வது பயனுள்ள ஒரு காரியமாக இருக்கும் என்பதை இந்த உரையின் வாயிலாக வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அடுத்து, சிறு தொழில்கள். குடிசைத் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க, பின்தங்கிய 24 மாவட்டங்களில் முதலீடு செய்து, மான்யம் கொடுத்து 241 பொருள்கள் சிறு தொழிலிலே தயாரிக்கப்படுவதை, தமிழகத்திலே இருக்கின்ற அரசு நிறுவனங்கள் வாங்குவதற்கு வழிவகை செய்கின்ற வகையில் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. நலிந்த தொழில்களுக்கு மூலதன உதவியும் செய்வதற்கு வழிவகைகள் செய்திருக்கிறார்கள். சிறு தொழில்களுக்கு எந்த அளவிற்கு ஊக்கம் கொடுக்கப்படுகிறது என்பதற்கும் அந்த ஊக்கத்தின் காரணமாக என்ன விளைவுகள் வந்திருக்கின்றன என்பதற்கும் நான் உதாரணம் சொல்லித் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டில் இரண்டாயிரம் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருக்கிறோம். அதற்கு மேலும் 2,600 தொழிற்சாலைகள் அமைகின்ற அளவுக்கு, சிறுதொழில்களில் ஈடுபடுகின்ற அளவுக்கு உற்சாகம் பெருகியிருக்கிறது. அதற்குக் காரணம் மாவட்ட மையங்கள் மூலமாக தொழில்கள் தொடங்குவதற்கும், தொழில்கள் நடத்துவதற்கும், அவற்றை எப்படி லாபகரமாக நடத்த முடியும் என்பதை எடுத்துச் சொல்லித் தருகின்ற அளவுக்கும் இந்த அரசு வழிவகைகள் செய்து தந்திருக்கிறது.

அது மட்டுமல்ல. பட்டு உற்பத்தியில் பெரிய அளவில் கவனம் செலுத்தியிருக்கிறது. முசுக்கொட்டைப் பயிர், எட்டு ஆயிரம் ஏக்கரிலே பயிரிடுகிற முயற்சி மேலும் அதிகரித்து, இப்போது கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஏக்கரை எட்டுகின்ற அளவுக்கு அந்தத் தொழில் வளர்ந்திருக்கிறது.

தூத்துக்குடி ஆல்காலிக் கெமிக்கல் நிறுவனம் 1982-லே தன்னுடைய உற்பத்தியின் ஆரம்பக் கட்டத்தைத் தொடங்க இருக்கிறது என்பது சுவையான ஒரு செய்தியாகும். தொழில் துறையிலே ஒரு வளர்ச்சியை நோக்கி இப்போது மாநிலம் சென்று கொண்டிருக்கின்றது என்பதை இது எடுத்துக்காட்டுவதாக இருக்கும். அத்துடன் கரும்பின் சக்கையிலிருந்து காகிதம் செய்யும் அரசு நிறுவனம் அதனுடைய பணியிலே ஆக்கபூர்வமாக ஈடுபட்டு இருக்கிறது.

அடுத்தபடியாக, சென்னை பெருநகர வளர்ச்சியை எண்ணிப் பார்க்கிற போது, சென்னை நகர் பெருகிக்கொண்டு வருகிறது என்பதையும், மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் உணர்கிறோம். நகர வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக மக்களுக்கு ஏற்ற வகையிலே உலக வங்கி உதவியுடன் முதல் கட்டப் பணி முடிந்து தற்போது 51 கோடி ரூபாயிலே இரண்டாவது கட்ட நடவடிக்கையிலே இருக்கிறார்கள். இந்த நிலையிலே மத்திய அரசு ரயில்வே இலாகாவில் ஒரு வழி ரயில் விரைவில் ஓடும் வகையில் அமைக்கப்படும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். சென்னை தூத்துக்குடி ரயில் அகலப் பாதை அமைப்பதன் மூலமாக தூத்துக்குடி துறைமுகத்தை முறையாக நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும், அது பின்தங்கிய பகுதிகளுக்குப் பயன் தருவதாக இருக்கும் என்பதையும் ஆளுநர் அவர்கள் உரையிலே வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

அடுத்து, இந்த அரசு கிராம வளர்ச்சியிலே எந்த அளவுக்கு அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். கிராமம்தான் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு வழிகோலியாக இருக்க வேண்டும் என்பதையும் நாம் அறிவோம். அந்த அடிப்படையிலே நழுவிப்போன காரணத்தினாலேதான் நாட்டு மக்களுடைய நலன் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து, கிராம வளர்ச்சியிலே கவனம் செலுத்தியிருக்கிறார்கள். அடிப்படை வசதிகள் அமைந்த மாவட்டம் ஒன்றிலும் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னிறைவு சிறப்புத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படப்போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

அடுத்து, வேலைக்கு உணவுத் திட்டம். "வயிற்றுக்குச் சோறு உண்டு கண்டீர், இங்கு வாழும் மனிதர் எல்லோருக்கும்" என்ற பாடல் வரிகள் காதுக்கு இனிமையாக இருக்கின்றன. இன்றைக்கு செயல் வடிவத்திலே அந்தத் திட்டம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது.





ஒரு காலத்திலே சம்பளம் என்ற சொல்லுக்குக்கூட "சம்பு" என்றால் நெல், "அளம்" என்றால் உப்பு என்ற பொருள்தான். அதனாலே அரிசி பெறுவதைத்தான் அந்தக் காலத்திலே வழக்கமாக வைத்திருந்தார்கள். இப்போதுகூட நம் நாட்டிலே "ஏதும் வேலையில்லை ஐயா, ஏதாவது காசு போடு ஐயா" என்ற குரல்தான் கேட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் வேலையும் தந்து உணவும் தருகிற திட்டம் செம்மையாக நடந்து வருகிறது. இந்த நிலையிலே மேலும் அதிகப்படியாக அரிசியை மத்திய அரசு ஒதுக்குமானால், இந்தத் திட்டத்தை இன்னும் விரிவாக நடத்துவதற்கு வசதியாக இருக்கும். மேலும் சிறந்த முறையிலே இந்தத் திட்டங்களையெல்லாம் நடத்துவதற்கு மத்திய அரசின் உதவியை ஆளுநர் அவர்கள் உரையிலே கோரி எதிர்பார்ப்பது நியாயமான ஒன்றாகும்.

அடுத்து, மருத்துவத் துறையிலே நடமாடும் மருத்துவ மனைகள் நாடெங்கும் பெருகி நல்ல பணியாற்றிக்கொண்டிருப்பதையும், சில நகரங்களில்கூட இருதய நோய்ப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருப்பதையும் பார்க்கும் போது, மக்களுடைய நல்வாழ்விலே மேலும் இந்த அரசு காட்டுகின்ற அக்கறை வெளிப்படுகிறது.

அடுத்து, கல்வியைப்பற்றி எண்ணிப் பார்க்கிறபோது, தொழில் கல்விதான் வாழ்வு தரக்கூடிய கல்வியாக இருக்கிறது. தொடர்ந்து ஆண்டாண்டுதோறும் ஒரு கல்வியைப் படித்து பட்டம் பெற்றவர்கள் எல்லாம் ஏதோ பட்டம் பெற்றோம் என்ற பெருமை பெற்றவர்களாக இருந்தார்களே தவிர, அவர்களாக, அவர்களுக்கென்று ஒரு தொழிலைத் தேடிக்கொள்கின்ற வாய்ப்போ, அறிவோ பெற்றவர்களாக அவர்கள் இருக்கவில்லை. அதைக் கருத்திலே கொண்டு, இன்று பள்ளிகளிலே கல்வி நிலையங்களிலேயே, தொழிற் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்து, சோதனைக் கூடங்கள் அமைக்கவும், அவைகள் மூலமாக அவர்கள் வேலை அனுபவம் பெறவும் இன்னும் வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள ஆளுநர் உரையிலே காணப்பட்டிருக்கின்ற குறிப்புகள் வழிவகை செய்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

அடுத்து, உடற்பயிற்சிக் கல்விக்குத் தனி இயக்குநரகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏதோ விளையாட்டுத்தானே என்று விட்டுவிடாமல், அதிலேயும் மக்கள் நல்ல திறமையோடு இருக்க வேண்டுமென்று, அந்த இயக்குநரகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உலக அரங்கிலே ஒரு நாடு இன்னொரு நாட்டோடு போட்டியிட்டு, வெற்றி பெற்று, சில பகுதிகளைப் பெற்றுப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. இப்போது எதிலே

பெருமை என்றால் விளையாட்டுத் துறையிலே ஒரு நாடு எந்த அளவிலே வெற்றி பெற்றிருக்கிறது, எத்தனை பதக்கங்களைப் பெற்றிருக்கிறது என்பதிலேதான். ஒரு சிறிய நாடாக இருந்தாலும், உலக அரங்கிலே அந்த நாட்டிற்கு, அந்த நாட்டின் விளையாட்டு வீரர்கள் பெருமை தேடித் தருவதை எண்ணிப் பார்க்கிறபோது, அந்த முயற்சியில் நாளைய தமிழகம் அந்தப் பெருமைக்குரிய மனிதர்களை உருவாக்குமென்பதை மகிழ்ச்சியோடு எண்ணிப் பார்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, வீட்டு வசதி என்ற தலைப்பிலே, ஐந்து ஆண்டுகளில் கிராமப் புறங்களில் ஒரு லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தை உருவாக்கி, இந்த ஆண்டு 20,000 வீடுகள் கட்ட முதலில் திட்டமிட்டு, 30,000 வீடுகள் என்பதையும் கடந்து, 38,000 கடன் மனுக்கள் ஏற்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறபோது, அந்தத் திட்டம் சிறந்த வெற்றியைத் தரப் போகிறது என்று கருத முடியும்.

அடுத்து, தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் குடியிருக்கும் காலனிகள் அத்தனைக்கும் மின் விளக்கு அளிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அவர்கள் வாழ்விலேயே ஒளி பூத்துக் குலுங்கும் நிலை உருவாகியிருக்கிறது என்பது தெரிகிறது. மேலும் தாழ்த்தப்பட்டோர் வாழும் காலனிகள் அனைத்திற்கும் இணைப்புச் சாலை, குடிநீர் வசதி, இடுகாட்டுக்குப் பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து அளிப்பதற்கான சிறப்புத் திட்டமொன்றையும் அரசு மேற்கொள்ள இருக்கிறது. இந்தத் தாழ்த்தப்பட்டோர் காலனிகள் மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் 5,000 காலனிகளில் செயல்படுத்தப்படுமென்று தெரிவித்திருப்பது சிறப்பான ஒன்றாகும்.

கிராம நகர்ப் பகுதிகளிலுள்ள ஏழைகளின் கடன் தொல்லை ஒரு பெரிய பிரச்சினையாகும். நாட்டிலுள்ள பெரிய நகரங்களில் என்னதான் வேலையில் இருந்தாலும், அவர்களுக்கு இருக்கும் சிறு கடன்களால் அவர்கள் குடும்பங்கள் பாதிக்கப்பட்டு, அந்தக் கடன் தொல்லையில் அந்தக் குடும்பங்கள் ஆழ்ந்து கொண்டிருப்பது கிராமங்களிலும் இருக்கிறது, நகரங்களிலும் இருக்கிறது. அதை ஒழிப்பதற்கான ஒரு திட்டத்தை இந்த அரசு கொண்டுவர இருக்கிறது என்று ஆளுநர் அவர்கள் உரையிலே கூறப்பட்டிருப்பது மெத்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இது மட்டுமல்ல. தமிழ் நாட்டின் எல்லையைக் காப்பாற்றியவர்களுக்கும், மொழிப் பற்றின் காரணமாகச் சிறை சென்றவர்களுக்கும் உதவித் தொகை வழங்குவதற்கான சட்டமுன்வடிவு வர இருக்கிறது என்பதை,



மொழிப் போராட்டத்தில் பங்கு பெற்றவன் என்பதால், உள்ளபடியே மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல. மொழிப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள், பாளையங் கோட்டைச் சிறைக்குச் சென்றவர்கள் யார் யார் என்ற பட்டியலையும், அது போல் எல்லைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள் யார் யார் என்ற பட்டியலையும் போட்டு, அவர்கள் பெயர்கள் எல்லாம் விடுபட்டுப் போய்விடக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் வரலாறை நாமே மறைத்தால் என்னவாகும் என்பதையும் நினைத்துக்கொண்டு, அனைவருடைய பெயர்களையும் எழுதுகிற ஒரு முயற்சியை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்று அறிவித்திருப்பது மாணவர்கள் உலகத்திற்கு மகிழ்ச்சியான செய்தியாகும்.

அடுத்து, கேரள எல்லைக்கு அருகில் அமைந்திருக்கும் கண்ணகி கோயில் சுற்றுலாப் பயணிகள் பார்க்கக்கூடிய இடமாதலால், அதைப் புறக்கணிக்கக் கூடாது என்று பல ஆண்டுகளாக முயற்சி எடுக்கப்பட்டது. இப்போது இந்த அரசு கேரள அரசின் துணை கொண்டு, அதை ஒரு சுற்றுலா இடமாகவும், பயணிகள் வர வசதியான இடமாகவும் அதை ஆக்குகின்ற முயற்சிகளையும் மேற்கொண்டிருப்பது மகிழ்வைத் தருகிறது.

அடுத்து, அறநிலையத் துறையின் நிர்வாகத்தினைச் சீராக்கி மேம்படுத்த இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது. அது மட்டுமல்ல. அறக்கட்டளைகள் அமைக்கிறார்கள். அறக்கட்டளைகளை நல்ல நோக்கங்களுக்காக அமைக்கிறார்கள். ஆனால் அவற்றைப் பயன்படுத்தும்போது, அந்த நோக்கங்கள் நிறைவேறுவதில்லை. இடையிலே சிலருடைய எண்ணங்கள் காரணமாக, அவற்றைத் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்வதை மாற்றி, அறக் கட்டளைகள் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கத்தோடு செயல்பட வழி வகைகள் காண இருப்பது சிறந்த காரியமாகும்.

அடுத்து, தொழில் தகராறு சட்டம் 12 (3) என்பதைப்பற்றிப் பல பேச்சுக்கள் இந்த அவையிலே கேட்டுக்கொண்டிருந்தோம். அதிலே சில மாற்றங்கள் செய்து, தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது குறித்து ஆளுநர் அவர்கள் அறிக்கையிலே அறிய மெத்த மகிழ்ச்சியடைகிறோம்.

அடுத்து, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களில் 18 வயது உடையவர்கள் வாக்களிக்கவும், பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஒதுக்கீடு தரவும் அரசு முயற்சிகள் மேற்கொண்டிருப்பது சிறந்த காரியமாகும். காரணம், இப்போது கல்வி பெறுகின்ற அளவில் 18 வயதானவர்கள் அரசியல் தெளிவும், அரசியல் அறிவும் பெறுகிறார்கள் என்பதால். அதை இந்த அரசு விரைவில் செய்வதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, முன்னாள் ராணுவத்தினரைக் கொண்டு நகரங்களிலே பாதுகாப்புச் செய்வோம் என்று அரசு அறிவித்துள்ளது. நகரங்களில் அடிக்கடி திருட்டுக்கள் போகின்றன என்பதைப் போலவும், திருட்டுக்கள் நடக்கின்றனவோ இல்லையோ அதைப்பற்றிப் பிரச்சாரம், அதைப்பற்றிய பீதி எங்கு பார்த்தாலும் இருக்கிறது. ஏதோ சட்டம் ஒழுங்கு சரியாக இல்லை, எங்கும் பாதுகாப்பு இல்லை என்பதுபோல் பேசப்படுகிறது. இன்னும் பத்திரிகைகள் செய்யும் வேடிக்கை ஏதோ சென்னை நகரில் உள்ள பெண்கள் வெளியே வர அச்சப்படுகிறார்கள் என்றெல்லாம் செய்தி போடும் நேரத்தில், அரசு அறிவித்திருக்கும் செய்தி நல்ல மனத் தெம்பைத் தருமென்று கருதுகிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒருவன் ஒரு குளத்தில் விழுந்து விடுகிறான். 10 பேர்கள் விழுந்தடித்துக் கொண்டு போய் அவனைக் காப்பாற்றியபோது, தன்னை அவர்கள் காப்பாற்றினார்களே என்று நன்றி சொல்வதை மறந்துவிட்டு, யார் என்னைத் தள்ளினீர்கள் என்று அந்தப் பத்து பேர்களைப் பார்த்துக் கேட்பதைப்போலத்தான் காவல் துறை செய்யும் நல்ல காரியங்களைக்கூட, இவர்கள் ஒன்றும் செய்யவில்லை, பணியாற்றவில்லை என்று சொல்வதை எண்ணிப் பார்த்து, இப்போது ஓய்வு பெற்ற ராணுவத்தினரை இதற்காகப் பயன்படுத்துவது சிறந்த ஒரு காரியம். அதோடு தமிழக எல்லைப்புற ஓரங்களில் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் நமது நிலங்களை ஆக்கிரமிக்காமல் தடுக்கவும், இது போன்ற அமைப்புக்களைச் சேர்ந்தவர்களைப் பயன்படுத்துவோமென்று தெரிவித்திருப்பது சிறந்த காரியமாகும்.

அடுத்து, வருவாய் வாரியத்தை நீக்குவது என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க் கட்சியிலே இருந்த காலந்தொட்டு சொல்லி வந்த ஒரு காரியமாகும். ஆனால் அதைச் சொன்னார்களே தவிர, அதைத் தொட அஞ்சினார்கள். ரெவின்யூ போர்ட் என்ற அமைப்பிலே இருந்தவர்கள் அதை விட்டுக் கொடுப்பதற்கும், அதை விட்டு நீங்குவதற்கும்கூட முடியாத ஒரு கட்டத்திலே, துணிந்து இந்த முடிவு எடுத்ததற்காக அரசைப் பாராட்டுகிறேன்.



ஆனால் 'ஹெட் ஆஃப் தி டிபார்ட்மெண்ட்' என்று சொல்லும்போது, செயலாளர்களுக்கு மேலே அவர்கள் என்றால், இப்போது இருக்கும் முறையினுடைய மறு வடிவமாக இல்லாமல், 'ரீஜனல்' என்ற முறையில்—அதாவது மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மேல் ஒருவர் என்ற முறையில்—ஒரு அமைப்பாக உருவாக்கி, செயல்படுத்துவது எண்ணிப் பார்க்கத் தக்க ஒன்றாகும். சிறிய நிலங்கள் குறித்த பிரச்சினையிலே தாசில்தார் தவறாக எழுதிவிட்டால், அதை எடுத்துக்கொண்டு சென்னையிலுள்ள ரெவின்யூ போர்ட் வரை ஒரு ஏழைக் குடியானவன் அலைவதையெல்லாம் மாற்றி, மாவட்ட அளவிலே அல்லது 'ரீஜன்' அளவிலே செயல்படும் நிலைமையையும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காரைக்குடி பல்கலைக் கழகம் உருவாக வேண்டுமென்று டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் கனவு கண்டார்கள். தன்னுடைய சொத்தையெல்லாம் வாரிக் கொடுத்தார்கள். அவருடைய கனவு நிறைவேறும் அளவிற்கு, இந்த அரசு அதற்காக மேற்கொள்ளும் முயற்சியைப் பாராட்டுகிறேன். மதுரைப் பல்கலைக் கழகம் ஒரு தமிழ் பல்கலைக் கழகமாகவும், சென்னைப் பல்கலைக் கழகம் பல்கலை. கழகமாகவும், அண்ணா பல்கலைக் கழகம் தொழில் பல்கலைக் கழகமாகவும் காரைக்குடி பல்கலைக் கழகம் மின் இயல் பல்கலைக் கழகமாகவும், கோவைப் பல்கலைக் கழகம் பல தொழில் பல்கலைக் கழகமாகவும், திருச்சி பல்கலைக் கழகம் சமூக இயல் பல்கலைக் கழகமாகவும், இருந்து தமிழகம் கல்வி அறிவில் சிறந்து விளங்க உதவுமென்று கருதுகிறேன்.

இப்போது ஆசிரியர்கள் பிரச்சினை என்று பார்க்கிறபோது—பட்டதாரி ஆசிரியர்கள் இருக்கிறார்கள், கல்லூரி ஆசிரியர்கள் இருக்கிறார்கள்—எல்லோருக்கும் சில குறைபாடுகள் இருக்கின்றன. அரசு நினைக்கிற காரணம் ஒன்றாக இருந்தாலும், பல்கலைக் கழகம் நினைக்கிற காரணம் ஒன்றாக இருந்தாலும், சில தனியார் கல்லூரிகள் ஏதோ தொழில் நடத்துவதுபோல நினைத்து, கல்லூரிகளையும் தொழிற்சாலைகள் என்று கருதி, அதன் காரணமாக அவர்கள் செய்யும் காரியங்களால், ஆங்காங்கே போராட்டங்கள் நடக்கின்றன. பார்ப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், அரசுக்கு எதிராக ஆசிரியர்கள் போராடுகிறார்கள், பல்கலைக் கழகத்திற்கு எதிராக ஆசிரியர்கள் போர்க் குரல் கொடுக்கிறார்கள் என்றுதான் கருதுவார்கள். உண்மை படியே அதுவல்ல. பல்கலைக் கழகத்திற்கு முன்னாலே நிற்கிறார்கள் என்று சொல்லும்போது, சாந்தி நிலையிலிருந்து கலவரம் புறப்படுகிறது என்பதுதான். இதிலே யார் தவறு செய்கிறார்கள் என்பதை அரசு எண்ணிப் பார்க்க

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1980 பிப்ரவரி 1

வேண்டும். இப்போது 'டீச்சர்ஸ் கவுன்சில்' என்ற அமைப்பை உருவாக்க அரசு முடிவு செய்திருக்கிறது. அது விரைவில் உருவாக வேண்டும். அதில் யார் யார் அங்கம் பெற வேண்டுமென்று சொல்லும்போது, பட்டதாரி ஆசிரியர் கழகம், தமிழாசிரியர்கள் கழகம், கல்லூரி ஆசிரியர்கள் கழகம் இவற்றை யெல்லாம் அங்கீகாரம் செய்ய வேண்டும். காவல் துறைச் சங்கத்தை அங்கீ காரம் செய்துள்ள நாம், கல்லூரி ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள் சங்கத் தையா அங்கீகாரம் செய்யாமல் விட்டுப் போகிறோம்! அதை விரைவில் செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல. பட்டதாரி ஆசிரியர்கள் 1973-லே ஒரு போராட்டம் நடத்தினார்கள். தங்கள் உரிமைகளுக்காகப் போராடினார்கள். 15 நாட்கள் சிறை சென்றார்கள். அப்படி 15 நாட்கள் சிறை சென்ற பிறகு, அவர்கள் தந்த மன்னிப்புக் கடிதத்தை நம்முடைய ஆட்சிக் காலத்தில் திரும்பப் பெற் றோம். அந்த நாட்களை அவர்கள் சிறப்பு விடுப்பாகக் கருத வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். எப்போது மன்னிப்புக் கடிதத்தைத் திரும்பப் பெற் றோமோ, அப்போது அந்த நாட்களைச் சிறப்பு விடுப்பாகக் கருதுவதுதான் அதோடு இணைந்த காரியமாக இருக்குமென்றும், அதைச் செய்ய வேண்டு மென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையிலே முதல் முதலிலே குறிப்பிட்டுள்ள ஒரு வாச கத்தை மட்டும் சொல்லி, என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலே முதல் வாசகம் 1977-லே உருவான ஒரு அரசுக்கு எந்த முறையிலே வாழ்த்து தெரிவித்திருக்கிறார்கள் என்றால், "ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் மலர்ந்து வளங்கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நாம் அண்ணாவின் கொள்கை வழி நின்று, ஆக்க பூர்வமான ஒத்துழைப்பை நல்கு வோம்" என்று. அந்த அடிப்படையிலே இப்போது அமைந்திருக்கும் அரசுக்கு அதே ஆதரவு முழக்கங்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறோம். ஆனால் இப்போது ஒரு மாறான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தியாவிலே ஒரேயொரு வாக்கைத் தந்து சட்டமன்றத்திற்கும், நாடாளு மன்றத்திற்கும் யாரையாவது அனுப்புகிறபோது எடுக்கப்பட்ட முடிவுகள் வேறு. இடையிலே சட்ட மன்றங்கள் கலைக்கப்பட்டபோதும், மற்ற நேரங் களிலும் ஒரு நேரத்தில் மாநிலத்திற்கும், ஒரு நேரத்தில் நாடாளுமன்றத் திற்கும் தேர்தல் நடக்கும்போது, ஒரு மனிதன் நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு முடிவையும், சட்ட மன்றத் தேர்தலில் ஒரு முடிவையும் கொள்வதை யாரும் தவிர்க்க முடியாது. காரணம் வெளிநாட்டுக் கொள்கை மாநில



1980 பிப்ரவரி 1] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

(பிற்பகல் 5-40)

அதிகாரம் இல்லை. அது மத்திய அரசிடம் இருக்கிறது. அந்தக் கொள்கை யாரிடம் இருக்க வேண்டுமென்று முடிவு செய்கின்ற பொறுப்பு வாக்காளர் களிடம் இருக்கிறது. விமானப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து போன்றவை இன்றையதினம் மத்தியிலே இருக்கிறது. வாக்காளர்கள் வாக் களித்த உடனேயே சட்ட சபையைக் கலைத்து விடுங்கள், கலைத்து விடுங்கள் என்று சொல்வது சரியல்ல. இந்தச் சொற்களை எங்கே கேட்போம் என்றால் போராட்டம் நடைபெறும் இடத்தில் கேட்போம். விட்டு சரியாக வரவில்லை யென்றால், உடனே 'கலைத்து விடுங்கள், கலைத்து விடுங்கள்' என்று சொல்லு வார்கள். போராட்டத்திலேயே கலைக்க முடியாத ஒன்றை ஆட்சியிலே கலைக்க எப்படி ஒத்துக்கொள்வது? நீண்டகால அவகாசம் வேண்டுமென்ப தற்காகக்கூட அல்ல. கூட்டாட்சித் தத்துவத்திற்கு, இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்ற ஜனநாயக வாதிகள் என்ன முடிவு எடுக்க இருக்கிறார்கள் என்பது தான் இன்றைய பிரச்சினை. முடிவைப் பார்த்த உடனேயே இப்படி ஒவ் வொரு தடவையும் ஒவ்வொருவரும் கேட்டுக்கொண்டிருந்தால், எத்தனை தேர்தல் நடத்த வேண்டியிருக்கும், எத்தனை கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கும்? கூட்டாட்சித் தத்துவத்திலே மத்தியிலே ஒரு அரசை அமைக்க நடைபெறும் தேர்தலையொட்டி அதன் முடிவு வேறொரு விதத்தில் முடிகின்ற சந்தர்ப்பத்தில், நிலையாக இருக்கின்ற ஒரு மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்று கேட்க உரிமையில்லை. இந்திய அரசியல் சட்டத் திலேயே இதற்கு இடமிருக்கிறது. கூட்டாட்சி காப்பாற்றப்பட வேண்டும். வாக்குச் சீட்டுதான் முடிவு என்று எண்ணினால், எதிர்காலம் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மத்திய அரசுக்குத் துணையாக இருந்து அவர்களின் நல்ல பணிகளுக்கு நம்முடைய ஆதரவினைத் தந்திருக் கிறோம். அதைத் தொடர்ந்து தருவோம். மாநிலங்கள் வலிமையாக இருக்க வேண்டுமென்றும் மாநில சுயாட்சி என்றும் சொல்லுகிறோம். ஒரு கூட் டாட்சி அமைப்புக்கு, மாநில அமைப்புக்கு ஆபத்து வந்தால், அனைவரும் எவ்வாறாவது கட்டிக் காக்க வேண்டும். இன்றைக்கு எங்களுக்கு வருவது நாளைக்கு உங்களுக்கும் வரலாம். அந்த அடிப்படையில் ஆளுநர் கருத் துக்கள் ஜனநாயகத் தத்துவத்திற்குத் தெரிவித்த வாழ்த்துக்கள். 1977 ஆக இருந்தாலும், இப்பொழுது என்று சொன்னாலும், ஜனநாயக முறைக்கு எதி ராக எந்தக் கட்சி நடந்திருந்தாலும், அதை நியாயம் என்று நான் சொல்ல மாட்டேன். அந்த அநியாயத்தை நாமும் செய்தால், ஜனநாயகம் எங்கே போய் நிற்கும்? ஜனநாயகத்தைக் காக்க முன்பிருந்த ஆட்சிக்கு ஆதரவாக தமிழ் நாட்டிலிருந்து தந்திகள் எல்லாம் விரைந்தபோது, தமிழ் நாட்டிலே யிருந்து மட்டுமல்ல, வெளி நாடுகளிலிருந்தும் தந்திகள் விரைய வேண்டுமென்று

நான் குரல் கொடுத்தவன் என்ற முறையில், அந்த உயிர்த் துடிப்பு இன்றைக்
கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜனநாயகத்தைக்
காப்பாற்ற அனைவரும் ஒன்று திரண்டு இந்த அரசுக்கு ஆதரவைத் தர
வேண்டுமென்பதைத் தெரிவித்து என் உரையை இத்துடன் முடித்துக்கொள்
கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகுத் அவைத் தலைவரவர்களே,
மாட்சிமை தங்கிய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்
பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் இங்கே ஒரு மலிவுப் பதிப்பை
வெளியிட்டார்கள். அதாவது கவர்னர் ஆற்றிய உரையை மீண்டும் திருப்பிச்
சொன்னார்கள். இந்த அரசு அற்புதமான காரியங்களை ஆற்றி, தமிழ்
நாட்டு மக்களைச் சந்திக்க இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைய
தினம் சந்தி சிரிக்கிற ஒரு அரசை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.
காபந்து சர்க்கார் தயாரித்துக் கொடுத்த அறிக்கையை கவர்னர் வாசித்திருக்
கிறார். மானம், மரியாதை, ஜனநாயகத்தில் பற்று இருந்தால், ஆட்சியில்
ஒட்டிக்கொண்டிருக்க மாட்டார்கள். என்றைக்கு நாடாளுமன்றத்திற்குத்
தேர்தல் நடந்து முடிவு வந்ததோ அன்றைக்கே இந்த அரசு ராஜிநாமா செய்
திருக்க வேண்டும். கருநாடக முதலமைச்சர் ராஜிநாமா செய்தது ஒரு முன்
உதாரணம். நாட்டு மக்களுடைய தீர்ப்பை அவர் உடனே ஏற்றார். ஏற்
கெனவே தமிழ் நாட்டை ஆளுகிற அ.தி.மு.க. கட்சி "மக்கள் குரலே மகேசன்
குரல்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில்
மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள். அந்த மக்களுடைய குரலை மகேசன்
குரலாக ஏற்றிருக்க வேண்டும். மக்கள் ஒரு நல்ல தீர்ப்பை அளித்ததற்குப்
பிறகும் ஆட்சியிலே ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல் முடிவு வெளி
யான அன்றைக்கே ராஜிநாமா செய்திருந்தால், இந்த நாட்டு மக்கள் உங்களை
இரு கரம் கூப்பி வணங்கியிருப்பார்கள். ஜனநாயகத்தின் தத்துவத்தை
ஏற்றிருக்கிறார்கள் என்று சொல்லி, மக்கள் உங்களைப் பாராட்டியிருப்
பார்கள்.

திண்டுக்கல் இடைத் தேர்தல் முடிவு வெளியான உடனேயே ஜனநாயகத்
தின் தீர்ப்பை ஏற்று ராஜிநாமா செய்யுங்கள் என்று சொன்னீர்கள். அது
மட்டுமல்ல. தந்தி இந்திரா காந்தியின் மடியில் இருக்கிறது என்றும் சொன்
னீர்கள். ஒரு நாடாளுமன்ற இடைத் தேர்தல் முடிவு வெளியான உடனேயே
கொக்கரித்தீர்கள். ஊர் ஊராக, தெருத் தெருவாகச் சென்று ராஜிநாமா
செய்ய வேண்டுமென்று சத்தம் போட்டுப் பேசினீர்கள். இன்றைக்கு 38
நாடாளுமன்றத் தொகுதியிலும் உங்களுடைய முகத்தில் கரி வாரிப் பூசியிருக்



கிறார்கள். என்ன பதில் சொல்லுகிறீர்கள்? மாண்புமிகு முதலமைச்சர்
திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுடைய சொந்தத் தொகுதியான
இராமநாதபுரத்திலேயே இலட்சம் ஓட்டுகள் வித்தியாசத்தில் திராவிட முன்
னேற்றக் கழகம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. இங்கே உட்கார்ந்திருக்
கின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சென்ற காலத்திலே கோயம்
புத்தூரில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று சட்ட மன்றத்தில் நுழைந்த
வுடன் ஜனநாயகம் வெற்றி பெற்றுவிட்டது என்று சொன்னீர்கள். அது
மட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்திலிருந்து இறங்க
வேண்டுமென்றும் சொன்னீர்கள். அண்ணா பெயரை நீங்கள் அடிக்கடி
சொல்லுகிறீர்கள். அது மட்டுமல்ல. திராவிட பாரம்பர்யம் என்று சொல்லி
நாட்டு மக்களை ஏமாற்றுகிறீர்கள். தேர்தல் முடிவு வெளியான அன்றே,
உடனேயே மக்கள் அளித்த தீர்ப்புக்குத் தலை வணங்கி, ஜனநாயகத் தீர்ப்பை
ஏற்று ஆட்சியை விட்டு விலகியிருக்க வேண்டும்.

கருநாடக முதலமைச்சர் தம்முடைய முதலமைச்சருக்கு மிக நெருங்கிய
நண்பர் என்று அரசியல் வட்டாரத்தில் சொல்லுவார்கள். கருநாடக
முதலமைச்சர் திரு. அர்ஸ் ஒரு முன் உதாரணமாக இருந்தார். என்றைக்கு
மாநில மக்கள் தங்களுடைய ஆட்சிக்கு விரோதமாகத் தீர்ப்பு அளித்தார்
களோ அன்றைக்கே ஜனநாயகத்திற்கு ஒரு முன் மாதிரியாக அவர்கள் நடந்து
கொண்டார்கள். இங்கே மானப் பிரச்சினை என்றுகூட சொன்னார்கள்.
அது மட்டுமல்ல. ஒரு தொகுதியில் நடைபெற்ற தேர்தல் நாட்டினுடைய
மானப் பிரச்சினை என்றும் சொன்னார்கள். வெற்றி பெறா விட்டால்,
மானம் போகும் என்று கூட சொன்னார்கள். ஒரு தொகுதியில் மட்டுமா
மானம் போயிருக்கிறது? 38 தொகுதியிலும் மக்கள் இந்த ஆட்சியாளர்களின்
மானத்தை வாங்கியிருக்கிறார்கள். சென்னை மத்திய தொகுதியிலே மட்டு
மல்ல, தமிழ் நாட்டிலேயுள்ள அத்தனை தொகுதிகளிலும் மக்கள் இவர்களுடைய
மானத்தை வாங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு எந்த முகத்தோடு ஜனநாய
கத்தைப்பற்றிப் பேசுகிறீர்கள்?

அது மாத்திரமல்ல. இந்த ஆளுநர் உரையிலேயேகூட தமிழ் நாட்டினுடைய
மிகப் பெரிய கொள்கைப் பிரச்சினையை அறிவிக்கிற நேரத்தில் முரண்பாடு
கவர்னர் உரை வருகிறது. சட்டமன்றம் கூடுகிறது. சட்டமன்றம் கூடப்
போகிறது என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு
வந்து விட்டது. மதுவிலக்குபற்றி இன்றைக்கு ஆளுநர் உரையிலே எதுவும்
சொல்லப்படவில்லை. அப்படியானால் உங்களுடைய மதுவிலக்குக் கொள்
கையை ஆளுநர் ஏற்றுக்கொள்ளவில்லையென்பது தெளிவாகப் புரிகிறது.

காரணம் உங்களுக்கும் ஆளுநருக்கும் கருத்து வேறுபாடு. உண்மையிலேயே நீங்கள் அதைப்பற்றி உரையிலே சொல்லியிருந்தால், அவர்கள் அதை மறுத்திருப்பார்கள். இன்றைக்கு உங்களால் தயாரித்து அளிக்கப்பட்ட ஆளுநர் உரையிலே மிகப் பெரிய கொள்கைப் பிரச்சினை இடம் பெறவில்லை.

டாக்டர் இரா. ஜனார்த்தனம் : ஆளுநரைப்பற்றி . . .

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஆளுநர் உரையைப்பற்றித்தான் . .

டாக்டர் இரா. ஜனார்த்தனம் : அரசுக்கு எதிராக ஆளுநர் செயல்படுகிறார் என்று உறுப்பினர் கூறுகிறார். இதுபற்றி ஆளுநர் சேலத்தில் பேசியபோது, இதனுடைய நியாய உணர்வை வலியுறுத்தியிருக்கிறார்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஆளுநர் உரையிலே இன்றைக்கு அரசாங்கத்தினுடைய மிகப் பெரிய கொள்கையான மதுவிலக்குக் கொள்கை குறிப்பிடப்படவில்லை. அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Mr. Deputy Chairman, Sir, the Governor's views have no relevance to the Governor's Address, since it is the Government's Address. I do not think we need discuss about the Governor's personal views of which we are not prepared to take notice.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member need not refer to the personal views of the Governor.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அரசாங்கத்திற்கு தைரியம் இருந்தால் அதைச் சேர்த்திருப்பார்கள். அவ்வாறு சேர்த்திருந்தால், அவர் மறுத்திருப்பார். ஒரு வாரத்திற்கு முன்பு தமிழ் நாட்டில் மிகப் பெரிய கொள்கைப் பிரச்சினையை அறிவித்த பிறகு தயாரித்த ஆளுநர் உரையில், தைரியம் இருந்தால் சொல்லியிருக்கலாம். அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் டாக்டர் இரா. ஜனார்த்தனம் அவர்கள் குறிப்பிட்டது ஆளுநர் அவர்கள் சேலத்தில் நிகழ்த்திய உரையைப்பற்றியது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நான் சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரையைப்பற்றித்தான் சொல்கிறேன். ஏனென்றால் நடைபெற்ற தேர்தலை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டார்கள். 20 ஆண்டுகளுக்கு ஆட்சியை அசைக்க முடியாது என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல. "எம்.ஜி.ஆர்.



பெயரைச் சொன்னால் போதும்; 20 ஆண்டுகள் எங்கள் ஆட்சியை அசைக்க முடியாது" என்றும் சொன்னார்கள். ஜனநாயகத் தத்து அனைவரும் சேர்ந்து காப்பாற்ற வேண்டுமென்கின்ற கருத்தினை மா உறுப்பினர் டாக்டர் இரா. ஜனார்த்தனம் அவர்கள் சொன்னார்கள். றைக்கு என்ன சொன்னார்கள்? மக்கள் தீர்ப்புக்கு விரோதமாக ஆட்சி நடிக்கக் கூடாது என்று சொன்னார்கள். தி.மு.க. வுக்கு ஜன்னாய் இருக்கிறது என்று சொன்னார்கள். நாடாளுமன்றத்திற்கு பெற்ற ஒரு இடைத் தேர்தலில் ஆளும் கட்சி தோற்றவுடன் ராஜிநாமா வேண்டும், ஜனநாயகத் தத்துவத்திற்குத் தலை வணங்க வேண்டும் நீங்கள் போட்ட சட்டம் இன்றைக்கு ஓட்டையாக இருக்கிறது. இந் யாளர்களுக்கு நான் மெத்த பணிவோடு ஒன்றைச் சொல்லிக்கொ "காலம் உங்களுக்கு பதில் சொல்லியாகிவிட்டது. மக்கள் அளித்த தீர் பிறகும், நீங்கள் ஆட்சியிலே ஒட்டிக்கொண்டிருப்பது சரியல்ல. உங்களை வெளியேற்றி விட்டார்கள். காலத்தின் கட்டளையை ஏற் ளுங்கள். மீண்டும் நீங்கள் நாட்டு மக்கள் மத்தியிலே வலம் வருவது ஏற்கனவே நீங்கள் right to recall பற்றிச் சொல்லியிருக் தேர்தல் மூலம், மக்கள் அளித்த வாக்கின் அடிப்படையில், மக்க உங்களுக்கு இருந்த நம்பிக்கையை இழந்து விட்டார்கள். அன்றைச் நாடாளுமன்ற இடைத் தேர்தல் முடிவு வெளியான உடனேயே உங்களை திரும்பி அழைத்து விட்டார்கள், ராஜிநாமா செய்யுங்கள் சொன்னீர்கள். இன்றைக்கு அந்த மக்களே திரும்பி உங்களை விட்டார்கள்".

(பிற்பகல் 5-50)

மத்திய அரசாங்கத்திற்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள், அது மாநில அரசுக்குப் பொருந்தும் என்று கேட்டார்கள். மத்திய அர பிரச்சினை பற்றிப் பேசப்பட்டது, மாநில அரசின் பிரச்சினை பேசப்பட்டது. ஊருக்கு ஊர் உள்ள பிரச்சினைபற்றிப் பேச இங்கே எத்தனையோ பிரச்சினைகளில் இந்த அரசாங்கம் சரியான காரியங்கள் செய்யத் தவறியதால்தான் இந்தத் தீர்ப்பை மக்கள் உ வழங்கியிருக்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தல் முடிவை நீங்கள் கொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும். மத்திய அரசு தலையி அரசைக் கலைக்க வேண்டும் என்பது தேவையில்லை. நீங் ராஜிநாமா செய்யுங்கள். நாம் மக்களைச் சந்திப்போம். மக்கள் கட்சிக்கு வாக்களிக்கிறார்களோ அந்தக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு அந்த அடிப்படையிலே நான் உங்களை அழைக்கிறேன். இன்றைக்

அரசு கலைந்துவிடும் என்றும், கலைப்பதற்கு யாரோ வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள் என்றும், அப்படி கலைத்தால் கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஆபத்து வந்துவிடும் என்றும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இன்றைக்கு வேதனைப்படுகிறார்கள். நீங்கள் அவ்வாறு வேதனைப்பட வேண்டாம். நீங்களாகவே ராஜிநாமா செய்யுங்கள். திருமதி இந்திரா காந்தி அம்மையாருக்கோ அல்லது மத்திய அரசுக்கோ அப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தாமல், நீங்களே ராஜிநாமா செய்துவிட்டு தேர்தல் களத்திலே ஜனநாயகத் தத்துவத்தை எடுத்துச் சொல்லி, 2½ ஆண்டுக் காலம் செய்த பணிகளை, இங்கே வாசித்துக் காண்பித்த பெரிய . . .

MR DEPUTY CHAIMAN: They seem not to oblige the hon. Member. The hon Member may go to the next point. I do not object to the hon. Member speaking about it. I do not deny the right of the hon. Member to speak. Since they seem not to oblige the hon. Member, the hon. Member may go to the next point.

திரு. வே. தங்கப்பாண்டியன் : I am simply saying you are in the last days of the longest drama நீங்கள் உங்களுடைய நாடகத்தின் கடைசி அத்தியாயத்திற்கு வந்திருக்கிறீர்கள். அ.தி.மு.க ஆட்சி தன்னுடைய நாடகத்தின் கடைசி அத்தியாயத்திற்கு வந்திருக்கிறது. மதிப்பிற்குரிய அமைச்சர் பெருமக்களே!—நான் இன்னும் சொல்வேன்—ஜனநாயகத்தைப்பற்றி அடிக்கடி சொல்வீர்களே எங்கே அந்த ஜனநாயகம்? ஒரு தொகுதியிலே தோற்றதற்கு அன்றைக்குச் சொன்னீர்களே, இன்றைக்கு எந்த முகத்தோடு நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மக்களை சந்திக்கப் போகிறார்கள்? டெல்லிக்குச் சென்று தி.மு.க. அங்குள்ளவர்களின் காலிலே விழுந்துவிட்டது என்று சொன்னவர்கள் எத்தனை பேர்கள், இன்றைக்கு எத்தனை நாட்களாக எத்தனை பேர்களின் கால்களிலே விழுந்துகொண்டிருக்கிறார்கள்? மத்திய அரசுக்கு நீங்கள் ஆதரவு தருவதுபற்றி எங்களுக்கு ஆட்சேபணையில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசிக்கொண்டு வரும்போது—அவருடைய உற்சாகத்தை, உணர்ச்சியை தாராளமாகப் பாராட்டுகிறேன்—"நீங்கள் டெல்லிக்குச் சென்று எத்தனை தலைவர்களின் கால்களிலே விழுந்தீர்கள் என்று எனக்குத் தெரியாதா?' என்று கேட்டதற்கு மட்டும் நான் பதில் சொல்கிறேன். காலிலே விழுகிற புத்தி எங்களுக்கு இல்லை. காலை வாரிவிடும் புத்தியும் எங்களுக்கு இல்லை. இன்னும் சொல்



கிறேன். தன்மான உணர்ச்சியோடு, தனித்தன்மையோடு டெல்லியிலுள்ள தலைவர்களைச் சந்தித்து நிலைமைகளை விளக்கிவிட்டு வந்தவர்கள் நாங்கள் என்பதை பணிவன்போடு இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தம்பி தங்கப்பாண்டியன் அவர்களுக்கே என்னைப்பற்றித் தெரியும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தன்மானம் ஒருவருக்கே சொந்தமானதல்ல. தன்மானம் ஒரு பொதுச் சொத்து. அது அத்தனை பேருக்கும் இருக்கிறது. இதே தன்மானத்துக்காகப் போராடியவர்கள் மீது அன்றைக்கு குற்றம்சாட்டியவர்கள், அந்த முறையைப் பின்பற்றுகிறார்களே, அதைத்தான் அண்ணன் நாஞ்சிலார் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இது அண்ணன்-தம்பி சண்டையா அல்லது விவாதமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இன்னொன்று, இந்த ஆட்சியை மக்கள் வேண்டாம் என்று சொல்வதற்கு . . .

MR. DEPUTY CHAIRMAN: The hon. Member Thiru Ramamoorthi seems to be worried about the relationship.

THIRU K. RAMAMOORTHI: Sir, I am very much worried.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்துவதற்குக் காரணம் நாட்டு மக்கள் மத்தியிலே இந்த அரசு தோல்வியடைந்துவிட்டது என்பது மட்டுமல்ல, எல்லாத் தரப்பு மக்களின் நம்பிக்கையையும் இந்த அரசு இழந்துவிட்டது. ஒன்றைச் சொல்கிறேன், ஒரு சிறு காரியத்தைக் கூட இந்த அரசால் கெட்டிக்காரத்தனமாகச் செய்ய முடியவில்லை. அருப்புக்கோட்டையில் வாகைகுளம் முதலமைச்சர் அவர்களின் தொகுதி. அங்கே குடிநீர்ப் பிரச்சினை இருந்தது. ஓராண்டு காலத்திற்கு மேலாக பிரச்சினையை அரசிடம் வைத்தார்கள், இங்கே ஊர்வலம் வந்தார்கள், உண்ணாவிரதம் இருந்தார்கள், அமைச்சர்களைச் சந்தித்தார்கள். இவ்வளவுக்கும் பிறகு 5 உயிர்களை இழந்த பிறகுதானே இன்றைக்கு அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே வாதாடியபோது, போராடியபோது, எடுத்துச்சொன்னபோது கௌரவத்தோடு இருந்துவிட்டு, 5 உயிர்களைக் குடித்த பிறகுதான் இந்த அரசு செயல்பட்டது. இன்றைக்கு

அந்தப் பகுதிக்குச் செல்ல முடியவில்லையே! எப்படி அருப்புக்கோட்டை தொகுதியிலே மக்கள் உங்களுக்கு வாக்களிப்பார்கள்? விவசாயிகள் கோவணமாக . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அருப்புக்கோட்டைத் தொகுதியிலே அதிகமான வாக்குகள் இந்த அரசு பெற்றிருக்கிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** 45 ஆயிரத்துக்கு மேல் வாக்குகள் பெற்று ஓங்காரக் கூச்சல் இட்டார்கள். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் சமமான வாக்குகள் பெற்றிருக்கிறது. வெறும் 500 வாக்குகள் வித்தியாசத்தை நீங்கள் கௌரவமாகக் கருதினால், அதைவிட இந்த ஆட்சிக்கு, இந்த முதலமைச்சருக்கு வேறு அவமானமான காரியம் இல்லை. அருப்புக்கோட்டைத் தொகுதி மட்டுமல்ல, அங்குள்ள ஐந்து தொகுதிகளிலும் . . .

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** 48 லட்சம் வாக்குகளைப் பெற்று இரண்டு இடங்களைப் பெற்றிருக்கிறோம். 42 லட்சம் வாக்குகளைப் பெற்று 16 இடங்களைப் பெற்றுக்கிறார்கள். ஆகவே, வாக்கு வித்தியாசத்தைப் பற்றிப் பேசக்கூடாது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** சட்டமன்றத் தேர்தலின்போது நாங்கள் 42 லட்சம் வாக்குகள் பெற்று 48 இடங்களைக் கைப்பற்றியபோது, இந்தக் கணக்கு அவர்களுக்கு மறந்துவிட்டது. அப்போது இந்தக் கணக்கு எடுபடவில்லை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** கணக்கு எப்போதுமே நினைவில் இருக்கிறது. எப்போதுமே அதைச் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், தேவைக்கேற்றபடி பயன்படுத்துவதில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அரசியல்வாதிகளுக்கு ஞாபக மறதி. அமைச்சர் அவர்களுக்கும் ஞாபக மறதி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்களும் அரசியல்வாதி தான்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** விவசாயிகளுடைய பிரச்சினைகளை இந்த அரசு புறக்கணித்தது. அவர்கள் ஊர்வலம் வந்தார்கள். சில நியாயமான கோரிக்கைகளை விவசாயிகள் வைத்தார்கள். திரு. நாராயணசாமி நாயுடு இந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்குவதா? போடு அவர் மீது



கொலை வழக்கு என்று கொலை வழக்கு போடப்பட்டது. சங்கரன்கோவிலிலே இருக்கிற சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் கொலை செய்யப்பட்டதற்கு, கோயம்புத்தூரிலே இருக்கிற திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் மீது கொலை வழக்கு போடப்பட்டது. விவசாயிகள் ஊர்வலம் வருகிறது. அதற்குத் தடை விதிக்கிறார்கள். விவசாயிகள் கோவணம் கட்டி ஊர்வலம் வருகிறார்கள். அந்தக் கோவணத்தை அவிழ்த்துவிடுகிறார்கள். விவசாயிகளுடைய நிலைமை அந்த அளவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. என்.ஜி.ஓ.க்கள் போராடுகிறார்கள். காவல் துறையினர் தங்களுடைய கோரிக்கைகளை வெளியிடுகிறார்கள். போராடுகிறார்கள். ஆனால் அவர்கள் பின்பு வேலைக்கு வந்ததை அங்கே இருக்கிற டி.ஐ.ஜி. அவர்கள் படம்பிடித்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்குக் கொடுத்திருக்கிறார். அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்ட அல்லது தள்ளி வைக்கப்பட்டிருப்பவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை. ஆகவே பொது மக்களுக்கும், என்.ஜி.ஓ.-க்களுக்கும் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை. எதிர்க்கட்சிகளையும், எதிர்க்கட்சித் தலைவர்களையும் பழி வாங்கும் கோப உணர்ச்சி இந்த அரசுக்கு இருக்கிறதே அதற்காக இந்தத் தேர்தலின் மூலம் மக்கள் இந்த அரசைப் பழிவாங்கியிருக்கிறார்கள். கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் மீது எத்தனை பொய் வழக்குகள் போட்டு அவரைக் கேவலப்படுத்தி, அவருடைய குடும்பத்தைக் கேவலப்படுத்தி இருக்கிறது இந்த அரசு. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதைப் போன்று இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகள்.

இன்றையதினம், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஒரு அமைச்சர் இரவு 2 மணிக்கு ஒரு காவல்காரரைப் போல் உட்கார்ந்து கொண்டு, என்ன நடக்கிறது என்பதைக் கண்காணித்துக்கொண்டிருக்கிறார். இதைவிட இந்த அரசாங்கத்திற்கு என்ன கேவலம் இருக்கிறது? மக்களுடைய வரிப்பணத்திலே வேலை செய்கிற ஒரு அமைச்சருக்கு இரவு 3 மணிக்கு உறுப்பினர் விடுதியிலே வந்து அமர்ந்துகொண்டு கண்காணிக்கின்ற அந்த அதிகாரத்தை யார் கொடுத்தது? ஏன் அப்பேர்ப்பட்ட கேவலமான தன்மை இந்த அமைச்சர்களுக்கு? ஒரு அமைச்சர் போன் செய்வது, இந்த எம்.எல்.ஏ. இருக்கிறாரா, அந்த எம்.எல்.ஏ. இருக்கிறாரா என்று கேட்பது, சி.ஐ.டி. அதிகாரிகள் எங்களைச் சுற்றுவது . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த ஆதாரத்தோடு சொல்கிறாரோ தெரியவில்லை. ஆனால், காரிலே பூமாலை கட்டிக்கொண்டு மூன்று அமைச்சர்கள் முன்பு ஒருமுறை இருந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : வேண்டுமானால் பெயரைச் சொல்லட்டுமா? ஊரைச் சொல்லட்டுமா? உட்கார்ந்து இருந்த ஆளைச் சொல்லட்டுமா? வேண்டாம். இந்த மந்திரி அமைச்சர்கள் கீழே இறங்கி வந்து ஒரு ஆட்சியைக் காப்பாற்ற வேண்டாம். அமைச்சர் ஒருவர் இந்த அரசை விட்டுப் போய் விட்டார். அவர் அறிக்கை ஒன்று விட்டிருக்கிறார். இந்த அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்? 20 சட்டமன்ற உறுப்பினர்களை இந்த முதலமைச்சர் பதுக்கி வைத்திருக்கிறார், கட்டாயப்படுத்தி வைத்திருக்கிறார். வேண்டுமானால், அவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் விவரம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களைப்பற்றி ஒரு குறிப்பை திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சொல்கிறார்கள். அவர் அந்த அறிக்கையில் கையொப்பம் இட்டிருக்கிறாரா என்பதை இந்த அவைக்குத் தெரிவித்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அவரே கையெழுத்துப் போட்டு பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்தது.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member should first of all send it to me and only after getting permission of the Chair. he can show it to the House.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அவர் பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்தது. அதன் நகல் என்னிடம் இருக்கிறது. வேண்டுமானால் . . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : கையிலே ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு இது மாண்புமிகு அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களால் எழுதப்பட்டது என்று சொல்கிறார். "அந்தக் கடிதத்தை அவர் தான் எழுதினாரா? அவருடைய கையெழுத்து இருக்கிறதா?" என்று கேட்கிறேன். அதற்குப் பதில் சொன்னால் நன்றாக இருக்கும்.



திரு. வே. தங்கப்பாண்டியன் : என் மீது உரிமைப் பிரச்சினை எழுப்பினால் கூட, உரிமைக் குழுவிலே அதை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன். அவர் பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்ததன் காப்பி தான் என் கையிலே இருக்கிறது.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : "கையிலே வைத்திருக்கும் அந்தக் காப்பியிலே கையெழுத்துப் போட்டிருக்கிறாரா? ஆதாரம் இருக்கிறதா?" என்று கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்லிவிட்டால் போதும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : கையெழுத்து தேவையில்லை. நிருபர்களுக்கு அவர் கொடுத்ததின் காப்பி.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : கையெழுத்துப் போட வேண்டிய அவசியம் இருக்கிறதா, இல்லையா என்பதல்ல. கையெழுத்துப் போட்டதை வைத்துக்கொண்டுதான் பேசுகிறாரா இல்லையா என்பதுதான் பிரச்சினை.

(பிற்பகல் 6-00)

திரு. வே. தங்கப்பாண்டியன் : நான் அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்ட நகலைக் கையிலே வைத்துக்கொண்டு பேசுகிறேன். அதில் கையெழுத்துப் போட்டிருக்கிறாரா என்றால், அதைத் தலைவர் அவர்களிடமே காட்டத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நான் அறிய விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம் கையிலே ஒரு காகிதத்தை வைத்துக் கொண்டு பேசுகிறாரே, அதில் அந்த அமைச்சர் கையெழுத்துப் போட்டிருக்கிறாரா இல்லையா என்பதுதான். அதற்கு மட்டும் உறுப்பினர் அவர்கள் பதில் சொன்னால் போதும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இது எனக்குக் கிடைத்த கடிதம். அந்த அமைச்சர் அவர்கள் நிருபர்கள் மத்தியில் கொடுத்த அவருடைய ஸ்டேட்மெண்டின் காப்பி. அதுதான் என்னிடம் இருக்கிறது. அவருடைய 'லெட்டர் ஹெட்டில்' இருக்கிறது. இது அவையின் உரிமை மீறிய செயல் என்றால், அதை, தலைவர் அவர்களே, தங்களிடம் தருவதற்கு தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நான் இதை உரிமை மீறல் பிரச்சினை என்று கூற முன்வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கடிதத்தை தம் கையில் வைத்துக்கொண்டு இது அமைச்சர் திரு. சௌந்திர பாண்டியன் அவர்களால் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறார். அப்படியானால் அந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறாரா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வியெல்லாம். அது ஆதாரபூர்வமான கடிதம் தானா என்றுதான் கேட்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** இது மாண்புமிகு முதலமைச்சருக்கு அந்த அமைச்சர் எழுதிய கடிதத்தின் நகல். அவைத் தலைவர் அவர்களே, தங்களிடம் நான் இதைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். தாங்கள் இதை 'டீடெயில்டாகப்' பார்த்துவிட்டு பிறகு ஒரு முடிவுக்கு வரலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் தம் கையிலே ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். அதை வைத்துக்கொண்டு அதைக் குறிப்பிட்டு இங்கே பேசியபோது, நான் அதைக் காட்டக் கூடாது என்று சொல்லி விட்டேன். அதை அவர் படிக்க முயன்றார்கள். அந்தக் கடிதத்தைப் படிப்பதென்றால் என்னிடம் முன்கூட்டியே சொல்லிவிட்டுத்தான் அனுமதி பெற்று படிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு அவர் என்னிடம் கடிதத்தைக் காட்டவுமில்லை, கொடுக்கவும் இல்லை. அதைப் படிக்கவும் இல்லை. எனவே இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்குப் போக வேண்டும் என்று உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** ஆக, இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அரசியல் வாதிகளை, விவசாயிகளை, அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை மற்றும் எல்லோரையும் புறக்கணித்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்த அரசாங்கத்தைப் பார்த்து அன்போடு அல்ல— ஜனநாயகத் தத்துவத்தின் அடிப்படையில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்த ஆட்சியாளர்கள் இன்றைய தினம் இடிந்துபோன கோட்டையிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே அரசியல் வெளவால்கள்தான் இருக்கின்றன. அங்கே பதவிப் பித்தர்கள் மட்டுமே இருக்கிறார்கள். எனவே நான் கேட்கிறேன், சுயமரியாதை உணர்வோடு, தமிழக மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்று, ராஜினாமா செய்துவிட்டு, மீண்டும் தேர்தல் களத்திற்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சியாளர்களை மக்கள்



சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லி, இந்த கவர்னர் உரையை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசும்போது 'இடிந்து போன கோட்டையில் இந்த ஆட்சியாளர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள். கோட்டை பலமாகத்தான் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். ஆனால் அவர் எந்த அர்த்தத்தில் சொன்னார் என்பதுதான் தெரியவில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** சரிந்து போன கோட்டை என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். ஏற்கெனவே ஒரு அமைச்சர் அங்கேயிருந்து காலி செய்துவிட்டார். அது மட்டுமல்லாமல், பல சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கட்சியைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த சரிந்து போன கோட்டை விரைவில் இடிந்து போன கோட்டையாகிவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இது அவரவர் அபிப்பிராயத்தைப் பொறுத்தது.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முனைகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் திரு. சனார்த்தனம் அவர்கள் "ஆளுநர் உரையில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்றெல்லாம் சில நண்பர்கள் கூறுவார்கள்" என்று குறிப்பிட்டு அதற்கு ஒரு கதையையும் இங்கே சொன்னார்கள். 'வேண்டாத மனைவி சோறு போடுகிறார்கள் என்றால் அதில் உப்பு இருக்காது. அதைப்போலத் தோன்றும்' என்று அவர் இங்கே குறிப்பிட்டார். அதாவது மனைவியிடம் வெறுப்பு இருப்பவனுக்கு அப்படித் தோன்றும் என்று குறிப்பிட்டார். ஆனால் தான் விரும்பும் ஆசை நாயகி இருக்கிறாளே, அவள் இலையைப் போட்டு சோறு போடுவதற்கு முன்பே, அவளுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டே சிலர் இலையையே சுவைத்துத் தின்று விடுவதும் உண்டு. இப்படி வேண்டாத மனைவியைப் போல் கருதிக் கொண்டு விமரிசனம் செய்பவர்கள் ஒரு புறம்.

விரும்புகிற ஆசை நாயகியாகக் கருதிக் கொண்டு இலையைத் தின்கிறார்களே அப்படிப்பட்டவர்கள் செய்கிற விமரிசனம் ஒரு புறம். ஆனால் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் நிலையில் நடுநிலையில் இருந்து கொண்டு பார்க்கிறவர்களுக்குத்தான் இதில் உப்பு இருக்கிறதா, உறைப்பு இருக்கிறதா என்பதைச் சரியாக உணர்ந்து உரைக்க முடியும் என்ற நிலையில் நான் சொல்லுகிற கருத்துக்களை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். அந்த வகையில் நான் பார்த்தபோதும் இந்த ஆளுநர் உரையில் உப்புமில்லை உறைப்புமில்லை என்பதையே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் பல்வேறு புதுமைகளையெல்லாம் என்னைப் போன்றவர்களும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் எதிர்பார்த்தார்கள். புதிய திட்டங்களைப்பற்றிய அறிவிப்புகளை எதிர்பார்த்தார்கள். ஆனால் 'பழங்கதைகள் சொல்வதில் ஒரு மகிமை இல்லை' என்று பாரதியார் சொன்னதைப் போல் இந்த அரசோ மிகப் பெரிய சாதனையைச் செய்து விட்டதைப்போல் சில பட்டியல்களை இந்த ஆளுநர் உரையில் தந்திருக்கிறார்கள். அதிலே எதும் புதுமையில்லை; மகிமையில்லை. அது மட்டுமல்ல, புதிதாக புரட்சிகரமான திட்டங்கள் எதாவது சொல்லப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால், அப்படியும் ஒன்றும் இல்லை. அண்மையில் அமைந்த பாண்டிச்சேரி மாநில அரசு ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அதாவது படித்து வேலையில்லாமல் இருக்கிற பட்டதாரிகளுக்கு இனி மாதந்தோறும் ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படும் என்று அண்மையில் அமைந்த அந்தப் புதுவை மாநில அரசு அறிவித்திருக்கிறது. அதைப் போன்ற புரட்சிகரமான திட்டம் இந்த ஆளுநர் உரையில் ஏதேனும் இருக்கிறதா என்று நானும் தேடித் தேடிப் பார்த்தேன். அதுபற்றிய 'சொல்' தான் இந்த உரையில் காணப்படுகிறதே தவிர, அதுபற்றிய திட்டம் எதுமில்லை என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களையெல்லாம் இந்த அரசு எதிரிகளாகவே கருதுகிறது என்பதற்கு என்னாலே ஏராளமான எடுத்துக் காட்டுகளைச் சொல்ல முடியும். அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, தேர்தலில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர், ஜனதா கட்சியினுடைய பெரியவர் திரு. பா. ராமச்சந்திரன் அவர்கள் தேர்தலுக்குப் பிறகு ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தக் கருத்தை தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு வெளியிட்டார்கள். அவர் இப்போது ஆட்சி பீடத்தில்





இருக்கிற அ.தி.மு.க. வினுடைய கூட்டணியைச் சார்ந்து நின்று தேர்தலில் போட்டியிட்டார்கள். அவர் சொன்ன கருத்து. "அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போலீஸ்காரர்கள், விவசாயிகள் ஆகியவர்களுக்கு தமிழக அரசின்மீது ஏற்பட்ட அதிருப்தியே தமிழ் நாட்டில் அ.தி.மு.க.—ஜனதா கூட்டணி படு தோல்வியடைந்ததற்குக் காரணம் ஆகும்". இது அவர் தெரிவித்த கருத்து. அவர் தேர்தலில் நேரடியாக ஈடுபட்டு அதற்குப் பின்னாலே கண்ட அனுபவத்தின் பயனாக இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், போலீஸ்காரர்கள் ஆகிய இவர்களையெல்லாம் இன்றையதினம் அரசியல்வாதிகளாக ஆக்கியதே இந்த அ.தி.மு.க. அரசுதான் என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

அரசு ஊழியர்கள் சங்கம், ஆசிரியர்கள் சங்கம், போலீஸ்காரர்கள் சங்கம், விவசாயிகள் சங்கம் ஆகிய இவைகளெல்லாம் அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்ட சங்கங்கள் அல்ல. அரசு ஊழியர்கள் சங்கமானாலும், ஆசிரியர்கள் சங்கமானாலும் மற்ற எந்த சங்கமானாலும் தம் கோரிக்கைகளை எழுப்பிக் குரல் கொடுத்தாலே, அவர்களெல்லாம் அரசுக்கு எதிர் தரப்பானவர்கள் என்று இந்த அரசு கருதிக் கொண்டு, அந்தச் சங்கங்களையெல்லாம் உடைக்கிற முறையில் அதற்கான முயற்சிகளை இந்த அரசு செய்கிற காரணத்தால், அத்தகைய அரசாங்கத்தின் எதிர்ப்பை, அரசாங்கத்தின் வலிமையை எதிர்க்க யாருடைய துணையை நாடுவது என்று அந்தச் சங்கங்களின் பொறுப்பாளர்கள் எண்ணிப் பார்த்து, எப்பொழுது யார் யாருடைய துணையைப் பெற்று தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமோ அத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் அவசியம் ஏற்பட்டதால், அவர்கள் அரசியல் வாதிகளின் பின்னாலே செல்லும் நிலைக்கு ஆளாகிறார்கள். அவர்களையெல்லாம் அழைத்து வைத்து, பிரச்சினைகளை விவாதித்து, முடியும் என்றால் முடியும், இல்லையென்றால் இல்லை என்று சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்துகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருந்தால், இத்தகைய அவல நிலை கடந்த தேர்தலில் ஏற்பட்டிருக்காது என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை எதற்கு சொல்லுகிறேன் என்றால், ஆளுநர் உரையில் 'சங்கங்கள்' என்ற தலைப்பில் 15-வது பக்கத்தில், 27-வது பத்தியில் ஒரு வாசகத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "இப்போதுள்ள நிலையில் தொழிற் தகராறு சட்டத்தின். . . . தொழிற்சாலையில் வேலை செய்யும் பெரும்பான்மை

யோரின் பிரதிநிதிகளாக இல்லாதபொழுதும், தற்போதுள்ள விதியின்படி, சங்கங்கள் அவ்வாறு ஒப்பந்தங்கள் செய்து கொள்ள வகை இருக்கிறது. தொழிற்சங்க உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களில் மிகப் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொண்ட 12(3) ஒப்பந்தம், வேலை நிறுத்த அறிவிப்பு முதலியவை மட்டுமே எல்லோரையும் கட்டுப்படுத்தும் என்று தெளிவாக்கு வதற்கான சட்டத் திருத்தம் ஒன்று அவையின் ஒப்புதலுக்குக் கொண்டு வரப் படும்." என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. வேலை நிறுத்தத்திற்கு பெரும்பான்மையோரின் ஆதரவு தேவை என்று சொல்லுகிற அரசு, ஒரு சங்கத்தை ஆரம்பித்து நடத்துகிறபோது, அது பெரும்பான்மையோரைக் கொண்ட சங்கமா, அதை அங்கீகரிப்பதா இல்லையா என்று ஆராய்ந்து பார்த்துத்தானே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்படி நியாய பூர்வமான உணர்வுகளை விட்டுவிட்டு, வேறு நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபடுகிறபோது, அதை எப்படி நம்மாலே ஏற்றுக்கொள்ள முடியும்

இன்றைய தினம் நான் அவையிலே சங்கங்கள் என்ற தலைப்பிலேயே பேச விரும்புகிறேன். இந்த நாட்டிலே பரம்பரையாக நீண்டகாலமாக முறை யாக சில சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவைகள் எல்லா அரசுகளின் காலத்திலேயும் கோரிக்கைகள் வைத்துப் போராடியிருக்கின்றன. அது சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் ஆட்சியானாலும் சரி, பெருந் தலைவர் காமராஜர் ஆட்சியானாலும் சரி, பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியானாலும் சரி, பெரியவர் திரு. பக்தவத்சலம் ஆட்சியானாலும் சரி, டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலேகூட சரி, அவர்கள் ஆட்சிக் காலத் திலெல்லாம் அந்தச் சங்கங்கள் போராடியிருக்கின்றன. போராட்டங்கள்

(பிற்பகல் 6-10)

நடைபெற்றே இருக்கின்றன. அப்பொழுதெல்லாம் இருந்த அரசுகள் சங்கங் களை உடைக்க, அரசியல் சாயம் பூசி தங்களது கட்சிக்காரர்களைக் கொண்டு புதிய சங்கங்களை உருவாக்க முயற்சிக்கவே இல்லை.

*** மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லுவதை மாண்புமிகு உறுப்பினர் ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா என்று சொன்னால், நன்றாக இருக்கும். அதே நேரத்தில் நாங்கள் சங்கத்தைத் தனிக்கவில்லை. அப்படி தி.மு.க.வால் தனிக்கப்பட்டிருப்பதாக சர்க்காரியா கமிஷனால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பெரும்பான்மையோருடைய அபிப்பிராயத்திற் கேற்ப அந்தச் சங்கம் அமைய வேண்டும் என்ற முறையில் சட்டத் திருத்தம் வர வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையில் பெரும்பான்மையோரின் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று வரும்போது, அதை என் அரசு ஏற்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. உதாரணத்திற்கு என்.ஜி.ஜி.ஓ. சங்கத்தைக் கூறலாம். 46 ஆண்டுகளாக இயங்கி வருகிற சங்கம் அது. அந்தச் சங்கத்திலுடைய மாநில செயற்குழு, பொதுக் குழு ஆகிய அமைப்புகள் எல்லாம் சேர்ந்து விவாதித்து கோரிக்கைகளை வைத்துப் போராடுகிறபோது, அதை உடைக்க வேண்டுமென்பதற்காகவே இந்த அரசு புதியதோர் தலைவரை உருவாக்கி அவர் கையில் ஆயிரம் இரண்டாயிரம் பேர் களை வைத்துக் கொண்டு அவர்களுக்கு அங்கீகாரத்தைத் தந்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், புதிய சங்கத் தலைவரை அமைச்சர்கள் அழைத்துக் கொண்டு ஊர் பூராவும் சுற்றி, அதிகாரிகளைப் பார்த்து, நிதி திரட்டிக் கொடுங்கள் என்று கேட்டு அவர்களை மாநாடு நடத்தச் சொல்லி, அதன்பின் "இந்தச் சங்கம் கேட்கிறது, அதனால் தருகிறோம்" என்ற அறிவிப்பையும் செய்திருக்கிறார்கள். இதற்கு முன்னும் மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த மாநாடுகளுக்குப்பின் அரசு அறிவிப்புகளைச் செய்யும்போது, பொது வாகத்தான் முன்பிருந்த அரசுகள் சொல்லியிருக்கின்றன. துரதிருஷ்டவச மாக, ஒரு முன்மாதிரி இல்லாமல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு தனி நபருடைய பெயரைக் குறிப்பிட்டு, அவரும் அவர் பின்னே செல்பவர் களும் வேண்டிக் கேட்டதற்கிணங்க அறிவிக்கிறேன் என்று அரசு விழாவிலே அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்வதால், ஒரு சார்புடைய அவர்களுடைய பின்னாலே மற்றவர்கள் செல்ல வேண்டும்; இல்லையென்றால் தண்டிக்கப்படுவார்கள் என்ற உணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது. இதன் காரணமாகத்தான் மற்றச் சங்கங்களில் இருப் பவர்கள் எல்லாம் உள்ளுணர்வாலே உந்தப்பட்டு இந்த ஆட்சிக்கு எதிராகச் செயல்படக் கூடிய அளவிற்கு மாறிவிட்டார்களோ என்ற ஐயப்பாடு எழுகிறது.

காவலர்கள் சங்கம் பற்றி ஏதேதோ பேசப்பட்டது. முன்னாலே காவலர் சங்கம் போராட்டம் நடத்தியபோது, அதே நேரத்தில் மற்றொரு சங்கமும் போராட்டத்தை நடத்தியது. அந்தப் போராட்டத்திற்கும், இந்தப் போராட்டத்திற்கும் வேறுபாடு இருந்தது. ஆட்சியில் இருப்பவர்கள், பெரும் பான்மையோர் உறுப்பினராக இருக்கக் கூடிய காவலர் சங்கத்திற்கு அங்கீ காரம் அளிக்காமல் சிறுபான்மையோர் உறுப்பினராக இருக்கக்கூடிய சங்கத் திற்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார்கள். இப்படி இரண்டு சங்கங்கள் போராடு கிறபோது, ஒன்றைச் சேர்ந்தவர்களைத் தண்டிப்பதும், மன்னிப்பதும் இருந்

தவர்களை அடிப்பதும் தங்களுக்கு வேண்டிய மற்றொரு சங்கத்தைச் சேர்ந்தவர்களை காலையிலே பிடித்து மாலையிலே விடுவதும் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. போராடிய காவலர்கள் மீது வழக்குப் போட்டு செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரே அரசை எதிர்த்து போராட்டம் நடத்துபவர்களைப் பாராட்டுகிறார். ஆளும் கட்சியை எதிர்த்துப் போராடுகிற சங்கத்திற்கு ஆதரவாக ஆளும் கட்சி உறுப்பினரே பேசியிருக்கிறார். அவ்வாறு பேசுவதற்கு அவருக்கு உரிமையுண்டு.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, போராட்டம் என்றால் அரசை எதிர்த்துத்தான் இருக்க வேண்டும் என்றல்ல. கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட போராட்டங்களுக்கு அரசு எப்போதும் உரிய மதிப்பைத் தரும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கியதற்காக நன்றி. போராட்டம் நடத்துகிறார்கள் என்றால், ஏன் எதிரி என்று கருதுகிறார்கள்? அவர்களை ஏன் நசுக்குகிறார்கள்? ஏன் அவர்களை அழைத்துப் பேசமாட்டேன் என்கிறார்கள்? பேச அழைத்து விட்டு, பிறகு போங்கள் என்று ஏன் திருப்பியனுப்புகிறார்கள்? ஆனால் ஆளும் கட்சிக்கு ஆதரவாக உள்ள மற்றொரு சங்கத்தினருடன் பேசுகிறார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அரசு ஆதரிக்கிற சங்கம் போராடுகிறபோது அவர்களுக்கு ஒரு சலுகை, மற்றச் சங்கங்கள் போராடுகிறபோது அவர்களுக்கு வேறு முறை என்ற மரபு இப்போது இருக்கிறது.

வள்ளுவர் கூறுகிறார், "கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம் நடுவொரீஇ அல்ல செயின்" என்று. ஆட்சி பீடத்தில் அமர்கிற வரையில்தான் ஒருவர் அரசியல்வாதி. ஆட்சிக்கு வந்து உட்கார்ந்த பிறகு, அவர் எல்லோருக்கும் அமைச்சர்.

1976ஆம் ஆண்டில் தஞ்சையிலே தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்ற மாநில மாநாடு நடந்தது. அப்போது கல்வியமைச்சராக இருந்த நாவலர் அவர்கள் அங்கு வந்திருந்தார்கள். தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்றத்திற்கு அரசு அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று அம் மாநாட்டிலே வேண்டுகோளை விடுத்தோம். அப்போது அவர், "நான் ஒரு அமைப்புக்கு வேண்டியவன் அல்ல. இப்போது அமைச்சராக வந்துவிட்டேன். எல்லோருக்கும் நடுவராக இருக்க வேண்டும். ஒரு சார்பாக இருக்கக்



கூடாது. 57 சங்கங்கள் இருக்கின்றன. யாருக்கு அங்கீகாரம் அளிப்பது? அங்கீகாரத்தை விட அன்பு பெரியது. ஆகவே உங்கள் மீது அன்பு வைத்திருக்கிறேன்" என்று சொன்னார்கள். அதே நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்லவில்லை. அந்த அளவிற்கு அவர் அவரைச் சார்ந்த கட்சியினர் ஆட்சி செய்தபோது நடுநிலையாக இருந்தார்கள். ஆகவே அரசு நடுநிலையாக இருக்க வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நான் எதிர்த் தரப்பிலேயிருந்து பேசுபவனாகக் கருதக்கூடாது. ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையில் சொல்கிறேன். எனக்கும் கொள்கையுண்டு, கோட்பாடு உண்டு. அதை தேர்தல் காலத்தில் காட்டுவதுண்டு. ஆனாலும் அ.இ.மு.க. அமைச்சரவையில் உள்ள கல்வி அமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்று திரும்பி வந்ததற்குப் பின்னாலே, அவருக்கு வரவேற்பு அளித்து, அந்த நேரத்திலே கல்வி அமைச்சர் அவர்கள் செய்த சாதனைகளைப்பற்றிப் புள்ளி விவரத்தோடு எடுத்து வைத்து இயக்க உணர்வோடு வாழ்த்தியிருக்கிறேன். அதை மறந்து அமைச்சர் அவர்கள் அரசியல் நோக்கத்தோடு செயல்படுகிறார்கள் என்று சொன்னால், இப்படிச் செய்துதான் என்ன பயன்?

ஆசிரியர் இயக்கங்கள் 57 இருக்கின்றன. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் இயக்கங்கள் இரண்டு, மூன்று இருக்கின்றன. ஆனால் ஒரு இயக்கத்திற்கு மட்டும் ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதென்றால், என்ன பொருள்? 11-4-1979 அன்று பல கோரிக்கைகளை எடுத்து வைத்து இங்கே நான் பேசினேன். அதன் அடிப்படையிலே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், "மீனாட்சி சுந்தரம் கேட்டதால் பதில் சொல்லுகிறேன்" என்று சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையிலே. . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, மேலவையில் ஒரு உறுப்பினர் கேள்வியைக் கேட்கிறார். அதற்குப் பதில் சொல்கிறபோது அவர் பெயரை நான் ஏன் சொல்ல வேண்டும்?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** சட்டப் பேரவையில் பெயரைச் சொல்ல வேண்டியதில்லை, இயக்கத்தின் பெயரைச் சொன்னாலே போதும். சட்ட மன்றத்தில் இரண்டு முறை ஒருவர் பெயரைச் சொல்லி அவர் தலைமையிலான சங்கம் வைத்த கோரிக்கைக்குப் பதில் சொல்லுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அந்த இயக்கத்திற்கு இவர் பின்னணியாக இருந்து அதை முன்னேற்ற ஆசைப்படுகிறார் என்ற எண்ணம் பரவலாக ஏற்பட வாய்ப்பு

இருக்கிறது. அப்படி கல்வி அமைச்சரவர்கள் இரண்டு முறை சட்டப் பேரவையிலே பேசினார். ஆகவே எங்கள் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்று அவர்கள் வெளியே பேசுகிறார்கள். இப்படி சங்கத்தை உடைக்கிற செயலில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லுகிற நேரத்தில், மற்றொரு குற்றச் சாட்டையும் சொல்ல விரும்புகிறேன். இதைக் கோபத்தோடு சொல்லவில்லை, இந்த நடைமுறையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் சங்கத்தை உடைக்கிற முயற்சி நடைபெற ஒரு இயக்கம் தோற்றுவிக்கப்படுமானால், அது மேலவை உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் தலைமையில் இருக்கின்ற ஆசிரியர் மன்றமாகத்தான் இருக்கும் என்பதை அனைவரும் அறிவார்கள். அந்த முயற்சியிலே எனக்கும் பங்கு உண்டு என்பதை அவர்களும் அறிவார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தவறாகக் கருதிக்கொண்டு அப்போது துணை இருந்திருக்கிறார். நாங்கள் அந்த வகையிலே உடைக்கவில்லை. அந்த இயக்கத்திலே இருந்து கொள்கை ரீதியாகப் போராட்டம் நடத்தி வெளியே வந்தோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் எப்போது துணையிருந்தார்? அமைச்சர் ஆவதற்கு முன்னாலேயா அல்லது பின்னாலேயா?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அமைச்சர் துணையிருந்த அந்த இரகசியத்தை அவர் வெளியிட்டதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர் சொல்லுகிற அந்த நோக்கத்திலே உருவாக்கவில்லை என்பதை மேடை போட்டுப் பேசத் தயாராக இருக்கிறேன். இப்போது இங்கே அதைப்பற்றிச் சொல்ல வரவில்லை. அந்த அமைப்பினுடைய பெயரைச் சொல்லிப் பேசியது மட்டுமல்லாமல், வேறு ஒன்றையும் அமைச்சர் அவர்கள் செய்தார்கள். பல முறை அமைச்சரைக் கேட்டுப் பார்த்துவிட்டுத்தான் வேறு வழியில்லாமல் பேசுகிறேன். ஆசிரியர்களுக்கென்று குழு அமைக்கப்படுகிறது. "மேல்நிலைக் கல்விக் குழுவிலே ஆசிரியர்கள் அமைப்புக்கு ஒரு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆகவே ஒரு ஆசிரியரைப் போட வேண்டுமென்று நினைத்தேன். அவர் பெயர்தான் நினைவுக்கு வந்தது, போட்டேன்" என்று அமைச்சர் சொன்னார். ஆசிரியர் என்றாலே அவருடைய நினைவுதான் வருகிறது அமைச்சருக்கு.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, குழுக்களைப் போடுகிறபோது திரு. மீனாட்சிசுந்தரம் போன்றவர்களைப் போட வேண்டுமென்ற நோக்கத்திலேதான் போட ஆரம்பித்தேன். ஆனால், இப்படி ஒரு குறிப்பிட்ட குழுவிலே அங்கம் வகிக்க வேண்டுமென்ற முறையில் கோரிக்கை வந்தபோது, அந்தவிதமான விருப்பத்தைக் கைவிட்டு விட்டேன். நண்பர் திரு. மீனாட்சிசுந்தரம் வேறு யாரோ, வேண்டாம் என்ற உணர்வில் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களைக்கூட முதியோர் கல்விக் குழுவில் போட்டிருக்கிறோம். போடுவதில் கஷ்டம் இல்லை. ஆனால் ஒத்துழைப்புத் தேவை என்று கருதுகிறோம். குறிப்பிட்ட ஒரே குழுவில் போட வேண்டுமென்று உரிமையோடு பேசுகிறபோதுதான் இந்தப் பிரச்சினை. ஆகவே இந்தப் பிரச்சினையே வேண்டாம், வேறு வழியில் காரியத்தைச் சாதிப்போம் என்ற நிலை ஏற்படுகிறது.

(பிற்பகல் 6-20)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கை பற்றி நான் கேட்டபோது பதில் அளித்து, அப்போது நான் அதை ஏற்றுக் கொண்டேன். ஆனால் அதன் பின்னாலும் அடுத்து அடுத்து எடுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் இந்த நிலைமைதான் என்றால் எப்படி நினைப்பது? அந்தச் சங்கத்தினர் ஒரு மகாநாட்டை நடத்தினார்கள். அந்த மகாநாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவர். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் துணைத் தலைவர். அவர்களை எல்லாம் போட்டு அவர்களே ஒரு மகாநாட்டை நடத்தினாற்போல் நோட்டீஸ்களும் போட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி இந்த அவையிலேயே நானும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அது தவறுதான். கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவைமுன்னவர் இங்கே சொன்னார்கள். ஆனால் நடவடிக்கை ஏதுமில்லை. இந்த மாநாட்டின் காரணமாக அமைச்சர்களின் பெயரைப் பயன்படுத்தியதன் காரணமாக அவர்களுக்கு 96 ஆயிரம் ரூபாய் வரை நிதி கிடைத்திருக்கிறது. அதையே காட்டி அவர்கள் அரசிடமும் நிதி பெற்றிருப்பதாகப் பேசியிருக்கிறார்கள். மேடையிலேயே அப்படிப் பேசி வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இவ்வாறு வேறுபட்டமுறையிலே செயல்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல், அரசு ஊழியர்கள் அமைப்பின் அறப் போராட்டம், ஆசிரியர்கள் அமைப்பினுடைய போராட்டம் எல்லாம் நடந்தன. அந்த ஆசிரியர்கள் போராட்டம் அரசை எதிர்த்து நடந்ததல்ல என்று மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மற்றவர்கள் போராட்டம் அப்படியல்ல, அவர்கள் கோரிக்கைகள் வேறு இருந்தாலும், அவர்கள் ஆட்சியைக் கவிழ்க்கப் போராடினார்கள் என்றும் சொல்கிறார்கள். அதிலே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போராட்டத்திலே கலந்துகொண்டு சிறை சென்றவர்கள் . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் 25 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, இன்னும் ஐந்து நிமிடங்களில் உறுப்பினர் அவர்கள் முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்று வந்தவர்களுக்கு நடந்த பாராட்டுக் கூட்டங்களிலே அமைச்சர் அவர்கள் சென்று பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றித்தான் சொல்கிறேன். அப்படிப் பங்கெடுத்துக் கொள்வதுகூட அவர்களுக்கு ஆசிரியர்களிடையே ஒரு வாய்ப்பளிக்கக்கூடியதாக ஆகிவிடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் நன்றி தெரிவிப்புக் கூட்டமாக, பாராட்டு கொடுக்கின்ற கூட்டமாக நடத்தினார்கள். அவர்கள் சிறை சென்றவர்களை, தங்களைத் தாங்களே, பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : போராட்டம் என்று நடந்திருக்கிறது. அந்தப் போராட்டத்தில் பங்கேற்று போராடி சிறை சென்று வந்த பின்னால், அவர்கள் நடத்தும் பாராட்டுக் கூட்டத்திலே அமைச்சர் அவர்கள் பங்கேற்றால், சிறை சென்றவர்கள் போராட்டத்தில் வெற்றி பெற்றதற்காக நடத்துகின்ற கூட்டத்தில் தலைமை ஏற்றால், அந்தக் குறிப்பிட்ட ஆசிரியர்கள் சங்கத்தைப்பற்றி அரசு அதிகாரிகள் என்ன நினைப்பார்கள்? இந்தச் சங்கத்திற்கு அரசு உதவி உள்ளது என்று நினைப்பார்கள். எனவே, இந்தச் சங்கத்தின் பின்னாலேதான் செல்ல வேண்டும் என்ற ஒரு நிலைமையை அந்த அதிகாரிகளிடத்திலே அமைச்சர் அவர்கள் தோற்றுவித்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத்தான் நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்





வேறு சங்கங்களும் கோரிக்கைகளை வைத்திருக்கின்றன. ஆனால், முன்பெல்லாம் ஜி.ஓ.-க்கள் போடுகின்றபோது, எப்படிப் போடுவார்கள் என்றால் representation has been received from various associations' என்ற ஒரு வாக்கியத்தைப் போடுவார்கள். இன்றையதினம் ஒரு குறிப்பிட்ட அமைப்பினுடைய பெயரைப் போட்டு, "இவர்கள் 'ரெப்ரசன்ட்' செய்தார்கள். எனவே இதை நாங்கள் தருகிறோம்" என்ற வகையிலே ஜி.ஓ.-க்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இன்று ரெகக்னைஸ்டு யூனியனுக்கே அரசிடமிருந்து பதில் வருவதில்லை. என்.ஜி.ஓ.-வினருக்கு பதில் சொல்வதில்லை. அப்படிப்பட்ட ஒரு அமைப்பை இந்த அரசு, ஊக்குவித்து, 'அன்-ரெகக்னைஸ்டு' யூனியன் வைக்கின்ற கோரிக்கைகளுக்கு, அரசுக்கு வேண்டியவர்களாக இருக்கிறவர்கள் வைக்கிற கோரிக்கைகளுக்கு பதில் சொல்லப்படுகிறது. ஏன் அந்த பதில் வேறு சங்கங்களுக்கு வருவதில்லை? இந்த அரசிலேதான் அரசு நடந்துகொண்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் வேண்டியவர்கள். நாங்கள் எல்லாம் வேண்டாதவர்கள். இதனால் நான் உங்களை எதிர்த்து நாங்கள் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய அவசியத்திற்கு ஆளாகிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். இனிமேலாவது இப்படிப்பட்ட நடவடிக்கைகளை வைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். நண்பன் என்பவன் தவறு செய்யும்போது இடித்துக் காட்ட வேண்டும். நான் நண்பன். ஆகவேதான் இப்படி இடித்துக் காட்டி குரல் கொடுக்கிறேன். இப்படி வேகமாகக் குரல் கொடுக்கிறேனே என்று நினைக்க வேண்டாம். என்னுடைய குரலில் சத்தம் தான் அதிகமாக இருக்கும். அதைக் கோபம் என்று கருதிக்கொள்ளக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். சில அமைப்புகளில் 'ஆமாம் சாமி' போடுபவர்கள், 'ஜால்ரா' போடுபவர்கள் எப்போதுமே இருப்பார்கள். இப்படியிருப்பவர்களுக்குத்தான் அதிகமாக ஆக்கம் அளிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைமைகளை அரசு உருவாக்கினால், நிச்சயமாக ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், போலீஸ்காரர்கள் ஆதரவைப் பெற முடியும். இதிலே 'பார்ஷியாலிட்டி' காட்டாதீர்கள் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, ஆசிரியர்களுடைய சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுப்பது பற்றிய பிரச்சினை. இன்றைக்கு அந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. அங்கீகாரம் அளிக்கின்ற பிரச்சினை வருகின்றபோது, சில விதிமுறைகளை வைத்து அங்கீகாரம் அளிக்கிறார்கள். அப்படி அங்கீகாரம் அளிக்கின்றபோது, ஒரு சில விதிமுறைகளை வகுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதை நான் வர

வேற்கிறேன். ஆனால், எந்தச் சங்கத்தினுடன் நெருக்கமாக இருந்து கொண்டிருக்கின்றீர்களோ, அந்தச் சங்கத்திற்கு அதைச் செய்கின்றார்கள். அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கும்போது, அவர்களுக்கு வேண்டிய மாதிரியான முறைகளை, விதிமுறைகளை வகுப்பதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபடுகிறார்கள். அப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்துக்கொண்டால், காவலர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்கள் கூட, காவலர்கள் போராட்டத்தையும் மிஞ்சிய அளவிலே போராட்டம் நடத்தவேண்டிய அவசியம் வரும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எல்லோருக்கும் நடுநிலையில் இருக்க வேண்டும். அரசும் அப்படி இயங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, உயர்நிலைப் பள்ளிகளிலே 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என்று இரண்டு பிரிவுகள் இருந்தன. இந்த இரண்டு பிரிவுகளையும் இணைக்கின்ற பணியை நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் செய்தார்கள். அதைப்பற்றி நான் அதிகமாக விமர்சிக்கவில்லை. இது குறித்து நீதி மன்றத்திலே வழக்குப் போடப்பட்டு, அதற்கான ஒரு தீர்ப்பும் வந்திருக்கிறது. அதன்படி மாநில அரசு 'ஏ' பிரிவுக்கு என்று ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும், அதை மாநில அரசு செய்ய முயலவில்லை. இதன் காரணமாக 'ஏ' பிரிவில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு ஏற்படக்கூடிய உணர்வு என்னவென்றால், அமைச்சரானவர்கள் 'பி' பிரிவில் பணியாற்றியவர்கள், அவர்கள் இன்று மந்திரியாக வந்திருக்கிறார்கள், ஆகவே 'பி' பிரிவுக்கு அதிகம் சலுகை அளிக்கக் கூடிய வகையிலே அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறார்கள் என்றும், 'ஏ' பிரிவு ஆசிரியர்களைப் புறக்கணிக்கிறார்கள் என்றும் நினைக்கிற நிலையை உருவாகியிருக்கிறது. அந்த நிலைமை ஏற்படாமல் இருக்கக்கூடிய அளவுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசுகிறபோது, மிகச் சிறப்பாக இந்த அரசு அதைச் செய்திருக்கிறது என்று இங்கே பேசினார்கள். பொதுமக்கள் என்று வருகிறபோது அதில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வெள்ள நிவாரணம் தேவை என்று கேட்டு, அதற்கு அரசும் ஒரு உத்தரவைப் போட்டது. நான் கூட மூன்று முறை அதுபற்றிய போராட்ட பேட்ஜ் அணிந்து வந்திருந்தேன் வெள்ள நிவாரணம் பற்றிய கோரிக்கையை வைத்து இந்த அவையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பின்னர் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் உடனே ஒரு உறுதிமொழி தந்தார்கள்



14—2—1979-லே சொன்னார்கள். இன்று வரை முகவை மாவட்டத்தில் 'அட்டா' தொகை கொடுக்கவில்லை. உறுதிமொழிப்படி ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அவையிலே தந்த உறுதிமொழி அது. அந்த உத்தரவாதம் செயலுக்கு வரவில்லை. அமைச்சர் அவர்களுக்கு மதிப்பு இல்லை. மதிப்பில்லாத இடத்திலே அமைச்சர் ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று புரியவில்லை. ஆக அந்த உறுதிமொழி அமுலுக்கு வரவில்லை. ஆசிரியர்கட்கு வெள்ள நிவாரணமும் கிடைக்கவில்லை. இங்கே உத்தரவுகள் போடுகிறார்கள். ஒரு உத்தரவை அரசு போடுகிறது. தான் போட்ட உத்தரவை தானே நிறைவேற்றமுடியாத, கையாலாகாத அரசாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்த வெள்ள நிவாரணம்பற்றி பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் ஆணையிடப்பட்டது. ஆனால், அங்கே அவர்கள் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பணம் அளிக்கப்படுமா என்பதும் சந்தேகமாக இருக்கிறது. நெல்லை மாவட்டம், குமரி மாவட்டம், முகவை மாவட்டம் போன்ற இடங்களில் இந்த நிலைமைதான் இருக்கின்றது. வெள்ளம் வந்து இப்போது வெள்ளமே வடிந்துவிட்டிருக்கிறது. அடுத்த முறை வெள்ளம் வருவதற்கு முன்பாவது இத்தொகை கிடைக்குமா என்று ஐயப்பாடாகத்தான் இருக்கிறது. நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்குச் சலுகை என்று உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொன்னார்கள். நானும் ஒரு விவசாயிதான். ரூ. 40 கோடிக்குச் சலுகை கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். என்னைப்பொறுத்து, ஒரு நாலு காசுகூட கிடைக்காத அளவுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கே தெரியாத அளவுக்குத்தான் நிவாரணம் கொடுக்கப் பட்டிருக்கிறதோ என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பிற்பட்ட சமுதாயத்தினருக்குச் சலுகை கொடுப்பதற்கு ரூ. 9,000 என்று வருமான வரம்பை நிர்ணயம் செய்தார்கள். இது அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்கட்கும் மிகவும் பாதிப்பாக அமைந்தது. அப்போது கோரிக்கைகளாக வைத்து வாதாடும்போதெல்லாம் செய்யாத அரசு இன்றையதினம் இந்த வருமான வரம்பை ரத்து செய்திருக்கிறது. 31 சதமாக இருந்ததை உயர்த்தி 50 சதம் என்று சலுகைகளை அரசு வாரி வழங்கியிருக்கிறது. இதைப்பற்றி டாக்டர் கலைஞர் அவர்கள்கூட பேசியிருக்கிறார்கள். அவர் கூறியதைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு கல்யாணத்திலே சாப்பிட்டுச்

கொண்டிருந்தவர், சாப்பாடு போடுகின்றவர் வருகின்றபோது, சோறு இன்னும் கொஞ்சம் போடுங்கள் என்று கேட்டபோது, அவர் கோபத்தில் கொஞ்சம் என்ன அப்படியே கொட்டுகிறேன் என்று கொட்டினாராம். அதுமாதிரி 50 சதவிகிதம் கொடுத்திருக்கிறார்கள். அரசின் செயல் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியதைப் போலத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : அப்படி என்றால் 50 சதவிகிதம் தேவையில்லை என்று கருதுகிறாரா?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : 50 சதவிகிதம் என்பதை 60 சதவிகிதமாக ஆக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். நான் குறிப்பிட விரும்புவது மற்றொன்று, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் என்று இருப்பது ஏன் அப்படியே இருக்கிறது? அது ஏன் உயர்த்தப்படவில்லை? அதை அதே சதவிகிதத்தில் உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் ஏன் வரவில்லை? அதனால் தானோ என்னவோ அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள், இதில் முதல்வர் பாராமுகமாக இருக்கிறார்களென்று கருதி, வெளியேறி விட்டாரோ என்று சந்தேகம் வருகிறது.

ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை விரைவிலே நடத்தி முடித்திட வேண்டுமென்று பல முறை வேண்டுகோள் விடப்பட்டது. அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன், வேறு ஒன்றும் தெரியாது என்று சினிமாப் பாட்டைச் சொன்னார்கள். அதற்குப் பிறகு ஒரு நாளைச் சொன்னார்கள். சென்ற கூட்டத்தில் பேசும்போது, 'உள்ளதைச் செய்வேன், சொன்னதைச் செய்வேன், வேறு ஒன்றும் தெரியாது' என்று அமைச்சரவர்கள் முன்னால் சொன்னதற்குப் பொருள் கொள்ளவேண்டுமா என்று நான் கேட்டேன். இப்போது உள்ளாட்சித் துறைத் தேர்தல்களை நடத்தி விடுகிறோமென்று அறிவித்தார்கள். அதற்குப் பின்னாலே என்னவாயிற்று? 18 வயதுடையவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப் போகிறோமென்று சொல்லி, அதன்மூலம் கால அவகாசம் கேட்டு, மீண்டும் தேர்தல்களைத் தள்ளி வைக்க சூழ்ச்சி செய்திருக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன். இதனால் நாங்கள் பாதிக்கப்படுகிறோம். ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கேயுள்ள ஆணையாளர்களின் அட்டவாடித்தனம் அதிகமாகியிருக்கிறது. அதிகாரிகள் ஆளுகிறார்கள்.





ஆசிரியப் பெருமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலைமைகளைப் போக்க தேர்தல்களை வையுங்கள் என்று சொல்லுகிறோம். ஆனால் தேர்தல்களை வைக்க உங்களுக்கு அவகாசம் ஏது? நீங்கள் தேர்தல்களை வைக்க மாட்டீர்கள். வைக்க முடியாதென்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். தேர்தல்களை வைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. சொன்ன சொல்லை நிறைவேற்ற முடியாத அமைச்சரவையாக இது இருக்கிறது. இதை உண்மையாகக் குறிப்பிட்டுக் காட்ட நான் ஆசைப்படுகிறேன்.

ஆட்சியை விட்டுப் போகு முன் சொல்லியதைச் செய்துவிட்டு வெளியே போகவேண்டும். ஒரு வாரமோ, இரண்டு நாட்களோ, பத்து நாட்களோ, அல்லது இரண்டு மாதங்களோ தெரியவில்லை. அப்படியெல்லாம் மக்கள் பேசுகிறார்கள். ஆனால் நீங்கள் கொடுத்துள்ள வாக்குறுதிகள் அதிகமாக இருக்கின்றன. காலாகாலத்திற்கு உங்களைப் பாராட்ட வேண்டும். சொன்னவற்றை, உடனடியாக ஆணைகளாக, அதாவது இரண்டு நாட்களுக்குள், வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், வருங்காலத்தில் இவர்கள் செய்தார்கள் என்ற நன்றியோடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், போலீஸ்காரர்கள் அனைவரும் உங்களைப் பாராட்டுவதற்கு வாய்ப்பாக இருக்குமென்று சொல்லி, ஆளுநர் அவர்கள் உரையிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று மீண்டும் சொல்லி, அமைகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்** : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரை மீதான விவாதத்திலே கலந்து கொண்டு உரை நிகழ்த்துவதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆளுநர் அவர்களின் உரை பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தங்கப் பாண்டியன் அவர்களும், திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் இங்கே வீற்றிருக்கும் அமைச்சர்களை உற்று உற்றுப் பார்க்கிறேன். அவர்களிடம் உற்சாகம் இல்லை, உயிரோட்டம் இல்லை, உணர்வும் இல்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : துணைத் தலைவரவர்களே, நிறைய இருக்கிறது, எதையும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : மாண்புமிகு உறுப்பினரவர்களின் பேச்சில் தான் உற்சாகம் இல்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்** : போகப் போக உற்சாகம் வரும். அது போன்றுதான் கவர்னர் அவர்கள் அறிக்கையும் இருக்கிறது. அந்த அறிக்கைக்கு உயிரோட்டம் கொடுக்கும் முறையிலே மாண்புமிகு உறுப்பினர்

டாக்டர் சனார்த்தனம் அவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டாலும், அவர்களிடமிருந்து வார்த்தைகள்தான் வந்தனவே தவிர, அதிலே உயிரோட்டம் இருந்ததாகத் தெரியவில்லை.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அழகாக ஒன்றைச் சொல்லுவார்கள். மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு என்பது அண்ணா அவர்கள் சொன்னது என்று அடிக்கடி சொல்லுவார்கள். கடந்த 2½ ஆண்டுக் காலத்தில் இந்த ஆட்சியின் சாதனையைக் காட்டிலும், மக்களிடம் ஏற்பட்டுள்ள வேதனை அதிகமாக இருக்கிறது. அதனால்தான் பொங்கல் பரிசாக அவர்கள் தமிழகத்திற்கு என்ன கொடுத்தார்கள் என்றால், புரட்சித் தலைவர் ஆண்டது போதும் என்று சொல்லிவிட்டார்கள். புரட்சித் தலைவரவர்கள் மக்கள் கொடுத்த தீர்ப்பை மதிப்பார்கள், அதில் மிகுந்த நம்பிக்கை உள்ளவர்கள் என்ற நம்பிக்கையை இன்னும் நான் வைத்துக்கொண்டுதான் இருக்கிறேன். இன்றைக்கு இதுபோன்ற நிலைமைகள் ஏற்படக் காரணம் என்ன? உலையிலே இட்ட அரிசி சோறாவதற்கு முன்பு நெருப்பை அணைத்துவிட்ட காரணத்தால், அரை வேக்காடாகிறது. அதுபோல 5 ஆண்டுகள் நீங்கள் ஆட்சி செய்ய உத்தரவாதம் கொடுத்திருந்தாலும், 2½ ஆண்டுக் காலத்தில் மக்கள் உங்களை உதாசீனப்படுத்திவிட்டார்கள். இன்றைக்கு நீங்கள் இருக்கும் நிலைமை, இராவணன் போர்க் களத்தில் படை இழந்து, மண் இழந்து, முடி இழந்து நிற்பது போலத்தான். இன்றைக்கு நீங்களெல்லாம் மக்கள் மன்றத்திலே நிராயுதபாணிகளாக நிற்பது குறித்து பரிதாபப்படுகிறோம். இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதைப்பற்றி தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கோரிக்கை விடுகிறேன். காரணம் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையானாலும் சரி, மற்ற துறைகளானாலும் சரி, அரசு பொறுப்பேற்ற பின்னாலே கூட்டுறவின் குரல் வளையை நசுக்கிவிட்டார்கள். இதை ஒரு முறையல்ல, பல முறை பேசியிருக்கிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, இரண்டு அமைச்சர்களிடம் நான் சென்றிருக்கிறேன். குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் அறைக்கும், கூட்டுறவுத் துறை பொறுப்பேற்றுள்ள அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறைக்கும் சென்றிருக்கிறேன். எதற்காகச் சென்றேன் என்றால், பொதுப் பிரச்சினை குறித்துச் சென்றேன். நான் மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களிடம் தமாஷாகப் பேசியிருக்கிறேன். "நீங்கள் இந்தப் பிரச்சினைகளைச் செய்து முடிப்பதற்கு முன்பாக அமைச்சர் பதவியை விட்டே போய் விடுவீர்கள்போல் இருக்கிறதே" என்று. "நீங்கள் போக வேண்டாம், இருக்க வேண்டும். ஆனால் பிரச்சினைகளைத் தீருங்கள்" என்று சொல்கிறேன்.



கூட்டுறவுச் சங்கங்களுக்கு அமைச்சர்களாக இருக்கின்றவர்கள் வருகின்றபோது, அவர்கள் காலடி எடுத்து வைத்தால் நல்லது நடக்குமென்று சொல்லுவார்கள். ஆனால் நமது அமைச்சரவர்கள் காலடி எடுத்து வைத்த கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் கலைக்கப்பட்டுவிட்டன. இங்குள்ள அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அடிக்கடி சொல்லுவார்கள். 'நாங்கள் அமைச்சர் பொறுப்பு ஏற்ற பின்பு அரசியல் கண்ணோட்டத்தோடு பார்ப்பது கிடையாது. அரசியல் சாயம் பூசுவது கிடையாது. அரசு வேறு, அமைப்பு வேறு. மக்களுடைய பிரச்சினைகளைக் கட்சி சார்பற்ற முறையில் பார்ப்போம்" என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு கூட்டுறவுத் துறையில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால், ஒன்றைக் குறிப்பிடுகிறேன். நாமக்கல் தாலுக்காவில் பச்சுடையான்பட்டி என்ற கிராமம் இருக்கிறது. அது ஒரு ஐ.ஆர்.டி.பி., யூனியனில் இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய கிராம மக்களுக்குக் கடன் சலுகை கொடுக்கிறார்கள். 2 ஆயிரம் ரூபாய் கடன் என்றால், 500 ரூபாய் தள்ளுபடி செய்கிறார்கள். அங்கே டைரக்டர் தேர்தல் முடிந்து போய்விட்டது. பிரசிடெண்ட் தேர்தல் நடக்க வேண்டும். தேதி அறிவிக்கப்பட்டு விட்டது. பாக்ஸ் வந்து விட்டது. தந்தி வந்து அதிகாரி விடுமுறை போட்டுவிட்டுப் போய்விடுகிறார். இதுவரை தேர்தல் நடக்கவில்லை. 2 மாதங்களாகத் தேர்தல் நடக்கவில்லை. என்ன காரணம்? ஆசிரியர்கள் தவறு செய்துவிட்டால், தலைமை ஆசிரியரிடம் போய்ச் சொல்வதுபோல, இதற்கு முதலமைச்சரவர்களைப் பார்க்க முடியுமா? கடவுளை வேண்டுமானாலும் பார்க்க முடியும், முதலமைச்சரவர்களைப் பார்க்க முடியாது. எங்களுக்கெல்லாம் ஒரு பெருமை. அந்தப் பெருமை என்னவென்றால், முதலமைச்சரவர்களை அமைச்சர்களாலும் பார்க்க முடியவில்லை என்பதுதான். அதுதான் எங்களுக்கெல்லாம் பெருமை. (சிரிப்பு) அதைத்தான் நாங்கள் மக்களிடம் சென்று, கூறுகிறோம். நீங்கள் முதலமைச்சரைப் பார்த்துச் செய்யக் கூடாதா என்று மக்கள் கேட்கிறார்கள். நாங்கள் மட்டும் முதலமைச்சரைப் பார்க்க முடியாது என்பதல்ல, அமைச்சர்களேகூட அவரைப் பார்க்க முடியாது என்று நாங்கள் சொல்லுகிறோம். ஆகவே முதலமைச்சரவர்கள் மக்கள் பிரதிநிதிகளை மதித்து, அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயல்பட்டால், இந்த மாதிரிக் கோலத்தில் உட்கார்ந்திருக்க வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் '2 நாட்கள்' என்று சொன்னது போல் நான் சொல்லத் தயாராக இல்லை. திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கூறியதுபோல் அர்ஸ் போன்ற நல்ல உதாரணமாக இருக்க வேண்டுமென்றும்

நான் சொல்லவில்லை. நான் அதைக்கூட குறிப்பிடவில்லை. ஆனால் பஜன் லாலாக மாற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) அவர் போல இல்லா விட்டாலும் பரவாயில்லை . . .

*** மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன மாற்றம் காண்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. எனக்குக் கால் வலி. எனக்கு மற்றவர்களைப் பார்த்தால் ஒன்றும் தெரியவில்லை.

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம் :** அமைச்சரவர்களுக்குக் கால் வலி என்று எனக்குத் தெரியாது. நான் சும்மா ஒரு வார்த்தைக்குச் சொன்னேன். ஏதோ நான் சொன்னதைப் புரிந்துகொண்டு, 'எனக்குக் கால் வலி, அதனால் அப்படி உட்கார்ந்திருக்கிறேன்' என்று சொன்னார்கள். நான் எல்லோரையும் பார்த்துத்தான் அப்படிச் சொன்னேன்.

கூட்டுறவுத் துறையிலே இது போன்று பல சங்கங்கள் அங்கே இருக்கக் கூடிய சாதாரண ஏழை விவசாய மக்களுக்குக் கடன் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன. இன்னொரு உதாரணமும் சொல்ல விரும்புகிறேன். சேலத்திலே, பொன்னம்மாபேட்டையிலே சேலம் நகர வங்கியின் கிளையைத் திறப்பதற்கு பொன்னம்மாபேட்டைக்குப் போயிருந்தோம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் அங்கே சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதைத் திறக்கும்போது நகர வங்கியின் தலைவரைப் பாராட்டினார்கள். இது போன்று மேலும் கிளைகள் திறக்க வேண்டுமென்று வாழ்த்தினார்கள். அப்படிச் சொல்லிவிட்டு வந்து 15

(பிற்பகல் 6-10)

நாட்களுக்குள் அதைக் கலைத்து விட்டார்கள். காரணம் தலைமைப் பொறுப்பிலே இருந்தவர் நகர காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவர். ஆகவே அவர் அங்கு இருக்கக் கூடாது என்று அரசியல் கண்ணோட்டத்திலே அந்த மாதிரிச் செய்தார்கள். இன்றைக்கு இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்களிலே அதை யாராவது மறுக்க முடியுமா? கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், வேறு கட்சிக்காரர்களை யாரையாவது ஆலோசனைக் கமிட்டியில் போட்டிருக்கிறார்களா? இல்லை. நீங்களே மேடை போட்டு, பேசி பாராட்டைப் பெறுவதில் பிரயோஜனம் இல்லை. எதிர்க் கட்சியில் இருப்பவர்களையும் மேடையிலே உட்கார வைத்துப் பேச வேண்டும். அவர்கள் வாயாலேயே 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்தது போல் வேறு யாரும் செய்யவில்லை' என்று சொல்ல வேண்டும்.



ஆனால் இப்பொழுது நீங்களே மேடையிலே சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லுகிறீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைய பேருந்துகள் விட்டிருக்கிறீர்கள். உலக வங்கி அளித்த உதவியினால் விட்டீர்கள். மகிழ்ச்சிதான். ஆனால் ஸ்டிக்கர் கட்டி, வாழை மரம் நட்டு அலங்கரித்து பஸ் வந்துவிட்டது, பஸ் வந்துவிட்டது என்று ஏன் விளம்பரப்படுத்துகிறீர்கள்? அன்றைய தினம் கலைஞர் ஆட்சியைப்பற்றி நீங்கள் என்னென்ன பேசினீர்கள்? விளம்பரத்தாலேயே இன்றைக்கு நீங்கள் தேய்ந்துகொண்டே இருக்கிறீர்கள். மிக அதிகமாக விளம்பரம் செய்துகொண்டிருக்கிறீர்கள். தேர்தல் நாள் வரை பஸ் இல்லை. உண்ணாவிரதம், போராட்டம் நடத்தியும் பஸ் விடவில்லை. நாளைக்கு ஓட்டுப் பதிவு. இன்றைக்குப் பஸ் வந்து நிற்கிறது. இதுவும் உங்களுடைய தோல்விக்கு ஒரு காரணம். இதுபோன்ற கெட்ட மரபுகள் தேவையில்லை. 'சீப் பாப்புலாரிட்டி' தேவையில்லை. மக்களை ஏமாற்ற முடியாது. மக்களுக்கு புரட்சித் தலைவர் மீது பெரிய நம்பிக்கை இருக்கிறது என்று சொன்னார்கள். மக்களைப்பற்றி சாதாரணமாக செம்மறியாட்டுக் கூட்டம் போல நினைத்து விட்டார்கள். மக்களை ஏமாற்றலாம் என்று பார்த்தீர்கள். இன்னும் சொல்லப்போனால், புரட்சித் தலைவர் அவர்கள் இரண்டு விரல்களைக் காட்டினால் போதும், (மாண்புமிகு உறுப்பினர் இரண்டு விரல்களை காட்டினார்) நாட்டு மக்கள் அனைவரும் ஓட்டுப் போடுவார்கள் என்று அமைச்சர்களிலிருந்து தொண்டர்கள் வரை சொல்லி விட்டார்கள். அப்படிச் சொல்லி என்றைக்கும் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கலாம் என்று நினைக்க வேண்டாம். இன்றையதினம் மக்கள் உஷாராக இருக்கிறார்கள். கூட்டுறவு வங்கிகள் கலைக்கப்பட்டு பல வங்கிகளில் இதுவரை ஸ்பெஷல் ஆபிஸர் போடப்படவில்லை. கடன்கள் முறையாக வழங்கப்படவில்லை. இப்படிப்பட்ட சங்கடமான சூழ்நிலையில் 9 கூட்டுறவு வங்கிகள் மூலம் 27.8 இலட்சம் ரூபாயை கடன் கட்டியவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சாதாரண விவசாயப் பெருங்குடி மக்கள் கடன் வாங்க முடியாதபடி செய்திருக்கிறார்கள். ஏன் இந்த அரசியல் காழ்ப்புணர்ச்சி? சேலத்தில் குறிப்பாக நாமக்கல்லில் 3 கூட்டுறவு சங்கங்கள் நடைமுறையில் இருக்கின்றன. உங்களுக்கு தேர்தலில் ஏன் வீழ்ச்சி ஏற்பட்டது என்றால் சொன்னதைச் செய்யவில்லை, செய்யாததைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நாமக்கல்லில் பெரிய மருத்துவ மனை ஒன்று இருக்கிறது. இன்றைக்குக்கூட அங்கே லைட் வசதியில்லை. பெரிய தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிட்டலில் நோயாளிகள் வராந்தாவில் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரவிலே ஒரு நோயாளி வந்தால், இன்னொரு நோயாளியை மிதிக்க வேண்டியதுதான். இதுபோல் சாதாரண விஷயங்களைக் கூட உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நீங்கள் கவனிப்ப

இல்லை, அது மாத்திரமல்லாமல் இன்றைக்கு அந்தப் பகுதியிலேயுள்ள சுகாதார நிலைமை பற்றி பல முறை இங்கே பேசியிருக்கிறேன். இங்கே இருக்கின்ற மாண்புமிகு சுற்றுலா அமைச்சருக்குக்கூட அதுபற்றி நன்கு தெரியும். கொல்லிமலைக்குக் கீழே, அடிவாரத்தில் 5 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். பேருந்து ஒன்றும் அங்கே போக முடியாது. மாட்டு வண்டிகூட அங்கே போக முடியாது. அங்கே சுகாதார வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பல முறை வேண்டியுள்ளேன். சுகாதாரத் துறை முதல்வர் அவர்களுடைய பொறுப்பில் இருந்தபோதுகூட, எழுதியிருக்கிறேன். இதுவரை அதைச் செய்யவில்லை. ஏதாவது கைவிட்டு செய்திருக்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நீங்கள் செய்திருக்கிறீர்களா? செய்திருக்கிறோம் என்று உங்களால் சொல்ல முடியாது. சொல்லாத வகையிலே சும்மா இருந்துவிட்டீர்கள். ஊர் ஊராகச் சென்று வெற்றி விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். மக்கள் உங்களைப் புரிந்துகொண்டார்கள்.

அடுத்தபடியாக, லோக்கல் போர்டுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். லோக்கல் போர்ட் தேர்தல் பற்றி மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் அறிவித்துக் கொண்டிருந்தார்கள். இதுபற்றி கலைஞரை பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டார்கள். அமைச்சரது அறிவிப்புபற்றிக் கேட்டார்கள். "அறிவிப்பு மந்திரி" என்று அமைச்சரது அறிவிப்புபற்றி கருத்துச் சொன்னார்கள். அறிவிப்பு வருகிறது. ஆனால் தேர்தல் நடைபெறுவதில்லை. தேர்தல் எப்ரல் மாதம் நடைபெறும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஓட்டுப் போடுகிறவர்களின் வயது வரம்பைக் குறைக்கப் போகிறார்கள். மேலும் ஓட்டுப் போடுகிறவர்களின் பட்டியலை சரி பார்க்க வேண்டும். இன்னும் காலம் தள்ளிப் போவதற்கு இதெல்லாம் காரணமாக அமையுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

ஆளுநர் உரையிலே தேடித் தேடிப் பார்த்தேன். தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். தமிழகம் தொழில் துறையில் மீண்டும் முதலிடம் பெற திட்டம் தீட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தொழில்கள் முன்னேற அதற்கு அத்தியாவசியமாக, உறுதுணையாக இருக்கக் கூடியது மின்சாரம். அதைப்பற்றி ஆளுநர் உரையில் ஒன்றுமே சொல்லப்படவில்லை. மின்சாரத் துறை பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கலைஞர் ஆட்சிக் காலத்தில்கூட அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அப்போது அவருக்கு இரண்டு துறை கொடுத்தார்கள். முதலில் போக்குவரத்துத் துறை அமைச்ச





ராக இருந்தார். பிறகு லோக்கல் போர்டுக்கு அமைச்சராகப் பொறுப்பேற்றார். எந்தத் துறையை அவரிடம் கொடுத்தாலும் அவர் புரட்சிகரமாகச் செய்வார் என்று நாமெல்லாம் அப்போது அவரைப் பாராட்டினோம் என்பது, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்குக்கூடத் தெரியும். தாங்களும் அதை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இன்று அவர் சாயம் போன சட்டைபோல கன்னா பின்னா என்று இருக்கிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முதலில் உறுப்பினர் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். இரண்டாவது சொன்னதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை. (சிரிப்பு) அதாவது துணைத் தலைவர் அவர்களே தாங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று முதலில் உறுப்பினர் சொன்ன கருத்தை தான் ஏற்றுக்கொள்கிறேன். "சாயம் போன சட்டை" என்று இரண்டாவது சொன்னதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை.

**திரு. ஆர். பாலசுப்பிரமணியம்:** இப்போது கிட்டர் சென். 55 சதவிகிதம் மின்சார கட் என்று சொல்லுகிறார்கள். ஒரு பக்கத்திலே தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்காக மத்தியிலிருந்து அதிக நிதி பெற வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். அதுவும் உறுதியான கொள்கையாக, உத்தரவாதமாகச் சொல்லியிருக்கிறார்கள். தொழில் வெற்றிகரமாக நடக்க மின்சாரம் மிக மிகத் தேவை. அதைப் பற்றி உரையிலே ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில் 55 பெர்சென்ட் கட் என்று வேறு சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையில் தொழிற்சாலைகளை வைத்து என்ன பண்ணப் போகிறீர்கள்? தொழிற்சாலைகளை விட்டுவிடுவோம். விவசாயிகளுக்கு என்ன மின்சாரம் கிடைக்கிறது? இரவு காலத்திலே 4 அல்லது 3 மணி நேரம்தான் மின்சாரம் கிடைக்கிறது. நாங்களெல்லாம் கிராமத்திற்குப் போக முடியவில்லை. "நீ அங்கே வந்து பார்" என்று சொல்லுகிறார்கள். மின்சாரம் இல்லாமல் இருட்டாக இருப்பதால், வயல் வெளியில் பாம்பு இருக்கிறது. பூச்சி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். "அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் வரும்போது, இதையெல்லாம் சொல்லுங்கள், அங்கே அழைத்துப் போய்க் காட்டுங்கள்" என்று நான் சொல்லியிருக்கிறேன். மின்சார அளிப்பு ஏற்றத் தாழ்வால் எவ்வளவோ மோட்டார்களின் காயில் எரிந்துபோயிருக்கின்றது. விவசாயிகளுக்கு பெரிய இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் திட்டம் தீட்ட வேண்டாமா? இன்றைக்கு மிக மிக அத்தியாவசியமானது ஒன்றாக மின்சாரம் மாறிவிட்டது. அந்தக் காலத்தில் தான் லாந்தர் விளக்கு வைத்துத்

தான் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தேன். இன்றைக்கு மின்சார வசதி இல்லாமல் தூக்கம் வரவில்லை. பழக்கப்பட்ட காரணத்தால் இந்தமாதிரி நிலை. இங்கே இருக்கக்கூடிய சில அமைச்சர்களுக்கு ஏ.சி., குளு குளு வசதி இல்லாவிட்டால், தூக்கம் வருவதில்லை. (சிரிப்பு) எல்லாம் பழக்கதோஷம். ஆகவே இன்றையதினம் மின்சாரம் மிக மிக அத்தியாவசியமான ஒன்று. அதிலே கொஞ்சம்கூட கவனம் செலுத்தப்படவில்லை. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்த அரசுமீது மிக மிக வெறுப்பு இருக்கக் காரணம் இந்த மின்சாரம் தான். இந்த அரசின் பேரிலே விவசாயப் பெருங்குடி மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள், போலீஸ்காரர்கள் இன்னும் சமுதாயத்திலுள்ள அத்தனை வர்க்கத்தினரும் வெறுப்புடன் இருக்கிறார்கள். அப்படியானால் அவர்களுக்காக இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லையென்று அர்த்தமா? இல்லை. உரிய காலத்திலே செய்யவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஒரு பிரச்சினை தோன்றிய உடனேயே அவர்களை அழைத்துப் பேசினால், பிரச்சினைமுடிந்து விடும். இன்றைக்கு வா, நாளைக்கு வா, அவர் இல்லை, இவர் இல்லை என்று காலம் தாழ்த்துகிறார்கள். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்திலே நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். பிரச்சினைகளை உடனுக்குடன் பேசி முடிவு செய்யுங்கள். பிரச்சினைகளை உரிய காலத்திலே பேசி முடிவு செய்யுங்கள். காலம் தாழ்த்தாதீர்கள். அப்படியானால்தான் எந்தப் பிரச்சினையானாலும் சமாளிக்க முடியும். எத்தனை நாட்கள் நாங்கள் ஆட்சியில் இருந்தால் என்ன, எப்போதும் நாங்கள் மக்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று மாண்புமிகு குடிநீர் வடிகால் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மேலவையில் அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள். அதனால் தான் தைரியம். (சிரிப்பு) எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, மீண்டும் மக்களிடத்தில் தைரியமாகப் போகக் கூடிய, சந்திக்கக் கூடிய தகுதியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஆகவே ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய உங்களுக்கும் நான் சொல்லிக் கொள்வதெல்லாம் தைரியமாக மக்களைச் சந்திக்கின்ற ஒரு பக்குவத்தை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். காரணம் தேர்தல் பிரச்சாரத்தின்போது என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். நம்முடைய முதல்வர் அவர்களுக்கு ஏற்பட்ட சம்பவம் பற்றியும் தெரியும். முன்பு அவர் தெய்வம்போல் மக்களுக்குக் காட்சியளித்தார். ஆனால் இந்தத் தேர்தலில் அவர் கிராமங்களுக்குச் செல்ல முடியவில்லை. மக்கள் விரோதியாக மாறிவிட்டார். இதற்கு என்ன காரணம்? கிராமத்து மக்களைப்பற்றி இவர்கள் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள்.





"எங்கள் கிராமத்திற்கு வரக் கூடாது, போங்கள்" என்று சொல்லி பகிஷ்காரம் செய்கிறார்கள்." இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்தபோது அண்ணா தி.மு.க. வெற்றி பெறாது என்று நாங்கள் நினைத்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே இப்பேர்ப்பட்ட நிலைமை என்றால், மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தத்திற்கு என்ன நிலைமை என்று பார்க்க வேண்டும். ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும் மக்களைச் சென்று சந்திக்கின்ற தைரியத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும், ஸ்திரமான முறையில் செய்து முடிக்க வேண்டும். அப்படி முடித்தால்தான் மதிப்பும் மரியாதையும் வரும். எங்களது ஊரில் உள்ள கொல்லிமலையைப்பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிறோம். எப்படியாவது அந்த இடத்தை ஒரு டூரிஸ்ட் சென்டராக ஆக்க வேண்டும் என்று சொல்லி, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-50)

## 9. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

* 1. Notification issued with G.O. Ms. No. 1646, Commercial Taxes and Religious Endowments, dated the 16th October 1979 appointing the 16th day of October 1979, as the date on which the Tamil Nadu Levy of Ryotwari Assessment on Free-hold Lands Act, 1972 (Tamil Nadu Act 31 of 1973) shall come into force in the State of Tamil Nadu. [Laid on the table of the House under section 22 (2) of the Tamil Nadu Levy of Ryotwari Assessment on Free-hold Lands Act, 1972 (Tamil Nadu Act 31 of 1973).

* 2. Notification issued with G.O. Ms. No. 1073, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 20th September 1979 in regard to inclusion of the post of Geological Assistants in the Engineering Wing of the Agriculture Department within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

* 3. Notification issued with G.O. Ms. No. 2271, Home, dated the 10th September 1979 in regard to an amendment to Rule 163 (*b*) of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

* 4. Notification issued with G.O. Ms. No. 2272, Home, dated the 10th September 1979 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

5. Fourth Annual Report of the Tamil Nadu Ceramics Limited for the year 1977-78. (English and Tamil). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

6. Third Annual Report of the Tamil Nadu Tea Plantation Corporation Limited for the year 1977-78. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

* 7. Notification issued with G.O. Ms. No. 1478, Rural Development and Local Administration, dated the 21st September 1979 in regard to an amendment to the rules relating to Budget and Allotment of Funds in respect of Panchayats, published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-123 of 1962, dated the 1st February 1962 (Notification No 11) at page No. 67 of the Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette,* dated the 14th February 1962. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

8. Eighth Annual Report of the State Industries Promotion Corporation of Tamil Nadu Limited for the year 1978-79 (SIPCOT). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

* 9. Notification issued with G.O. Ms. No. 1581, Commercial Taxes and Religious Endowments, dated the 25th September 1979 in regard to amendments to Schedules I and II to the Tamil Nadu Entertainments Tax Act, 1939. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]



* 10. Notification issued with G.O. Ms. No. 1591, Commercial Taxes and Religious Endowments, dated the 3rd October 1979 in regard to an amendment to Schedule I to the Tamil Nadu Entertainments Tax Act, 1939. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 **(Tamil Nadu Act X of 1939)].**

11. Third Annual Report of the Thanthai Periyar Transport Corporation Limited for the year 1978. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

* 12. Notification issued with G.O. Ms. No. 1164, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 13th October 1979 in regard to inclusion of the post of Technical Inspectors and Technical Instructors redesignated as Junior Technical Assistant within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

* 13. Notification issued with G.O. Ms. No. 1167, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 15th October 1979 in regard to inclusion of the post of Flim Librarian in the Office of the Director of School Education, Madras within the purview of the Commission. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India].

* 14. Notification issued with G.O. Ms. No. 1072, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 20th September 1979 in regard to inclusion of the post of Senior Instructor in Sugar Technology at the Institute of Chemical Technology, Madras within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India].

15. Third Annual Report of the Tamil Nadu Handicrafts Development Corporation Limited for the year 1975-76 (English and Tamil). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

* 16. Notification issued with G.O. Ms. No. 1667, Commercial Taxes and Religious Endowments, dated the 24th October 1979 in regard to an amendment to the Tamil Nadu Chit Funds Rules, 1964. [Laid on the table of the House under section 63 (4) of the Tamli Nadu Chit Funds Act, 1961 (Tamil Nadu Act 24 of 1961)].

* 17. Notification issued with G.O. Ms. No. 1169, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 15th October 1979 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, in Volume I of the Tamil Nadu Services Manual, 1977. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India)].

* 18. Notification issued with G.O. Ms. No. 1679, Commercial Taxes and Religious Endowments, dated the 27th October 1979 in regard to an amendment to the Revenue Department Notification II—I No. 1061 of 1965, dated the 12th March 1965, published at pages 1—6 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 15th March 1965. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

19. Annual Report of the Tamil Nadu Industrial Development Corporation Limited for the year ending 31st March 1979. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

20. Annual Report and Accounts of the Tamil Nadu Cements Corporation Limited for the year ending 31st March 1979. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

* 21. Notification issued with G.O. Ms. No. 1592, Commercial Taxes and Religious Endowments, dated the 3rd October 1979 in regard to an amendment to rule 32 (L) of the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 22. Notifications issued with G.O. Ms. No. 1582, Agriculture, dated the 9th August, 1979 in respect of change of address of certain regulated markets in Tirunelveli Market Committee under section 5 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act XXIII of 1959).]

* 23. Notification issued with G.O. Ms. No. 1715, Agriculture, dated the 1st September 1979 in respect of sugarcane jaggery in all forms in Madurai Market Committee under section 4 (1) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid



on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act XXIII of 1959).]

* 24. Notification issued with G.O. Ms. No. 1855, Agriculture, dated the 26th September 1979 in regard to amendments to the Agriculture Department Notification No. II (2)|AG|774|79, dated the 19th January 1979, published at pages 69-71 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 7th February 1979. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act XXIII of 1959).]

25. The Tamil Nadu Government's review on the working of the Tamil Nadu Industrial Investment Corporation Limited for the financial year 1977-78 together with the Twenty-ninth Annual Report and Statement of Accounts. (TIIC). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

& 26. Notification issued with G.O.Ms. No. 1107, Rural Development and Local Administration, dated the 21st July 1979 in regard to an amendment to rule 5 (b) (ii) of the Tamil Nadu Municipal General Service Rules, 1970. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 27. Notification issued with G.O. Ms. No. 2486, Home, dated the 29th September 1979 in regard to an amendment to rule 155-A (2) of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

& 28. Notification issued with G.O. Ms. No. 585, Co-operation, dated the 21st September 1979 in regard to an amendment to rule 29 of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

& 29. Notification issued with G.O. Ms. No. 1180, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 17th October 1979 in regard to exclusion of the posts of Deputy Commissioner of Civil Supplies, Assistant Commissioner of Civil Supplies and Assistant Commissioner of Civil Supplies in the Civil Supplies Department from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

& 30. Notification issued with G.O. Ms. No. 1811, Home, dated the 19th July 1979 in regard to an amendment to rules 6-A and 49-J(v) of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

& 31. Notification issued with G.O. Ms. No. 358, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 21st March 1979 in regard to inclusion of the post of Associate Lecturer in Salesmanship in Technical Education Department under Tamil Nadu Educational Subordinate Service within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

& 32. Notification issued with G.O. Ms. No. 1761, Commercial Taxes and Religious Endowments, dated the 30th March 1965, published at pages 1-5 of Part II-Section I of the Tamil Nadu Government Gazette, Extraordinary, dated the 31st March 1965. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

& 33. Notification issued with G.O. Ms. No. 1858, Home, dated the 25th July 1979 in regard to amendments to rule 285-A of the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).

& 34. Notification issued with G.O. Ms. No. 1758, Rural Development and Local Administration, dated the 6th November 1979 in regard to amendments to the rules relating to the levy of house-tax on basis other than annual or capital value, published with the Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A, 489|1961, dated the 26th April 1961 at page 44 of Supplement to Part V of the Tamil Nadu Government Gazette, dated the 10th May 1961. [Laid on the table of the House under section 192 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958, (Tamil Nadu Act XXXV of 1958).]

35. Notification issued with G.O. Ms. No. 1838, Agriculture (AU. 1), dated the 25th September, 1979 in regard to an amendment to the Schedule to the Tamil Nadu Agricultural University Act. 1971. [Laid on the table of the House under section 53 (2) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]



& 36. Notification issued with Government Memorandum No. 43691|Tr.I|79-2, Home, dated 24th March 1979 appointing the Accountant or Manager or Officer-charge of the Department attending to collection work in the branches of the Indian Overseas Bank in the places specified in the Schedule thereto to exercise and perform the functions of the Licensing Officers under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 in respect of non-transport Vehicles in the places specified in the said Schedule. [Laid on the table of the House under section 25(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

37. Annual Report of the Tamil Nadu Public Service Commission for the year 1977-78 [G.O. Ms. No. 988, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 31st August 1979]. [Laid on the table of the House under Article 323 (2) of the Constitution of India.]

& 38. Notifications issued with G.O Ms. No. 2028, Agriculture, dated the 2nd November 1979 specifying 21st November 1979 as the date on which the Tamil Nadu Land Improvement Schemes Act shall come into force in the areas specified in the Schedule and declaring the areas specified in the Schedule as notified areas for the purpose of the said Act. [Laid on the table of the House under section 44 (3) of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959).]

& 39. Notification issued with G.O. Ms. No. 629, Co-operation, dated the 11th October 1979 in regard to amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119(4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

& 40. Notification issued with G.O. Ms. No. 1893, Agriculture, dated the 4th October 1979 relating to the declaration of Kanyakumari district as notified area for the purpose of the Tamil Nadu Agricultural Produce Markets Act in respect of raw rubber in all forms. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

& 41. Notification issued with G.O. Ms. No. 1892, Agriculture, dated the 4th October 1979 relating to the control over the purchase and sale of cotton in the revenue taluks of Tirupattur, Chengam, Tiruvannamalai and Polur in North Arcot district under section 3 of the Tamil Nadu Agricultural Produce Markets

Act, 1959. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

& 42. Notification issued with G.O. Ms. No. 2023, Agriculture, dated the 2nd November 1979 relating to the control over the purchase and sale of brinjal in South Arcot district under section 3 of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

43. Fifth Annual Report of the Tamil Nadu Salt Corporation Limited for the year 1973. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

& 44. Notification issued with G.O. Ms. No. 915, Public Works (Electricity), dated the 22nd May 1979 in regard to amendments to the Tamil Nadu Electricity Duty Rules, 1939. [Laid on the table of the House under section 9(5) of the Tamil Nadu Electricity Duty Act, 1939 (Tamil Nadu Act V of 1939).]

& 45. Notification issued with G.O. Ms. No. 1637, Agriculture, dated the 20th August 1979 in regard to an amendment to the Agriculture Department Notification No. II(2)|AG|1467|78, dated the 21st March 1978, published at pages 199-200 of Part II Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated the 5th April 1978, as subsequently amended. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act XXIII of 1959).]

*B. Reports, Notifications and Other Papers.*

£ 1. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Ordinance. 1979 (Tamil Nadu Ordinance No. 21 of 1979).

£ 2. The Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance No. 22 of 1979).

£ 3. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance No. 23 of 1979).



£ 4. The Tamil Nadu Debt Relief (Second Amendment) Ordinance 1979 (Tamil Nadu Ordinance No. 24 of 1979).

& 5. The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Amendment Ordinance, 1980 (Tamil Nadu Ordinance No. 1 of 1980).

& 6. The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Ordinance, 1980 (Tamil Nadu Ordinance No. 2 of 1980).

7. Eleventh Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1976 to 31st March 1977.

8. The Interim Report of the Inquiry Commission of Justice Thiru W. S. Krishnaswami Naidu, B.A., B.L., Retired Madras High Court Judge, regarding the excesses committed during the period of three and half years from 1st January 1972 to 31st May 1975, prior to the Emergency, (Part III) (Tamil).

@ 9. Address by the Governor of Tamil Nadu to both Houses of the Tamil Nadu Legislature assembled together on 30th January 1980.

---

* Sent by post to all M.L.Cs. on 15th December 1979.
$ Sent by post to all M.L.Cs. on 19th December 1979.
& Sent by post to all M.L.Cs. on 21st January 1980.
@ Laid on the Table of the House on 30th January 1980.

## இணைப்பு I

[17 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 6-க்கான விடையைக் காண்க.]

(அ) 10-ம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் ஒருவர் கூடத் தேர்ச்சி பெறாத உயர்நிலைப் பள்ளிகள் மாநிலத்தில் 26 ஆகும். 11-ம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் ஒருவர் கூடத் தேர்ச்சி பெறாத உயர்நிலைப் பள்ளிகள் மாநிலத்தில் 21 ஆகும்.

(இ) 10-ம் வகுப்பில் ஒருவர் கூடத் தேர்ச்சி பெறாத உயர்நிலைப் பள்ளிகளின் பெயர்கள் பின்வருமாறு :—

1. சி.எஸ்.ஐ. செவிடு உயர்நிலைப்பள்ளி, கோட்டாரம் (நாகர்கோவில் கல்வி மாவட்டம்).
2. அரசு உயர்நிலைப்பள்ளி, இளியூர் (இராமநாதபுரம் கல்வி மாவட்டம்).
3. அரசு உயர்நிலைப்பள்ளி, புதுமடம் (இராமநாதபுரம் கல்வி மாவட்டம்).
4. அரசு உயர்நிலைப்பள்ளி, பொய்யாநத்தல் (இராமநாதபுரம் கல்வி மாவட்டம்).
5. அரசு உயர்நிலைப்பள்ளி, ஹைவேவ்ஸ் (பெரியகுளம் கல்வி மாவட்டம்).
6. அரசு உயர்நிலைப்பள்ளி, கருப்பட்டி (உசிலம்பட்டி கல்வி மாவட்டம்).
7. அரசு உயர்நிலைப்பள்ளி, ஓ. வேலி, நியூஹோப் (போஸ்டு) (நீலகிரி கல்வி மாவட்டம்).
8. அரசு உயர்நிலைப்பள்ளி, உட்டனப்பள்ளி (கிருஷ்ணகிரி மாவட்டம்).
9. அரசு உயர்நிலைப்பள்ளி, என்புதுப்பட்டி (நாமக்கல் கல்வி மாவட்டம்).
10. அரசு உயர்நிலைப்பள்ளி, திருக்கலம்பூர் (புதுக்கோட்டை கல்வி மாவட்டம்).
11. அரசு உயர்நிலைப்பள்ளி, வயலோகம் (புதுக்கோட்டை கல்வி மாவட்டம்).
12. அரசு உயர்நிலைப்பள்ளி, அனகாபுரம் (அரியலூர் கல்வி மாவட்டம்).
13. அரசு சையது முர்துசா உயர்நிலைப்பள்ளி, திருச்சி-8.





14. அரசு உயர்நிலைப்பள்ளி, இலகல்பூண்டி (விருத்தாசலம் கல்வி மாவட்டம்).
15. அரசு உயர்நிலைப்பள்ளி, தேவதானப்பட்டி (திண்டிவனம் கல்வி மாவட்டம்).
16. அரசு உயர்நிலைப்பள்ளி, காணூர் (கடலூர் கல்வி மாவட்டம்).
17. அரசு உயர்நிலைப்பள்ளி, கிருஷ்ணபுரம் (கடலூர் கல்வி மாவட்டம்).
18. அரசு உயர்நிலைப்பள்ளி, கருப்பேரி (கடலூர் கல்வி மாவட்டம்).
19. அரசு உயர்நிலைப்பள்ளி, காட்டுப்பாக்கம் (செய்யார் கல்வி மாவட்டம்).
20. அரசு உயர்நிலைப்பள்ளி, அத்தியூர் (திருவண்ணாமலை கல்வி மாவட்டம்).
21. அரசு உயர்நிலைப்பள்ளி, தாதாரெட்டிபள்ளி (வேலூர் கல்வி மாவட்டம்).
22. அறிஞர் அண்ணா உயர்நிலைப்பள்ளி, பரந்தூர் (காஞ்சிபுரம் கல்வி மாவட்டம்).
23. அரசுநலத்துறை உயர்நிலைப்பள்ளி, இருசம்பாக்கம் (காஞ்சிபுரம் கல்வி மாவட்டம்).
24. அரசு உயர்நிலைப்பள்ளி, காவேரிராஜபுரம் (திருவள்ளூர் கல்வி மாவட்டம்).
25. மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, கே. பகோடா வீதி, சென்னை-4.
26. மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, கோக்ரேன் பேசின் தெரு, சென்னை-21.

11-ம் வகுப்பில் ஒருவர்கூடத் தேர்ச்சி பெறாத உயர்நிலைப்பள்ளிகளின் பெயர்கள் பின்வருமாறு :—

1. அரசு உயர்நிலைப்பள்ளி, ஹைவேவ்ஸ், எஸ்டேட் (பெரியகுளம் கல்வி மாவட்டம்).
2. அரசு உயர்நிலைப்பள்ளி, பூலத்தூர் (பெரியகுளம் கல்வி மாவட்டம்).
3. அரசு உயர்நிலைப்பள்ளி, கருப்பட்டி (உசிலம்பட்டி கல்வி மாவட்டம்).
4. மாநகராட்சி ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, பெரியார் (மதுரை கல்வி மாவட்டம்).

5. இண்டர்நேஷனல் உயர்நிலைப்பள்ளி, பிச்சானூர் (கோயம்புத்தூர் கல்வி மாவட்டம்).

6. அரசு உயர்நிலைப்பள்ளி, புளியம்பட்டி (கிருஷ்ணகிரி கல்வி மாவட்டம்).

7. அரசு உயர்நிலைப்பள்ளி, சர்கார் சோலப்பட்டி (சேலம் கல்வி மாவட்டம்).

8. அரசு உயர்நிலைப்பள்ளி, சிறுவாக்குர்பட்டி (சேலம் கல்வி மாவட்டம்).

9. அரசு உயர்நிலைப்பள்ளி, குருவிகுளத்துப்பட்டி (கரூர் கல்வி மாவட்டம்).

10. அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, பாச்சூர் (பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம்).

11. அரசு உயர்நிலைப்பள்ளி, பாலக்குறிச்சி (நாகப்பட்டினம் கல்வி மாவட்டம்).

12. அரசு உயர்நிலைப்பள்ளி, இலகல்பூண்டி (விருத்தாசலம் கல்வி மாவட்டம்).

13. அரசு உயர்நிலைப்பள்ளி, திருத்துறையூர் (கடலூர் கல்வி மாவட்டம்).

14. அரசு உயர்நிலைப்பள்ளி, காட்டுப்பாக்கம் (செய்யார் கல்வி மாவட்டம்).

15. அரசு உயர்நிலைப்பள்ளி, அழிவிடைத்தாங்கி (செய்யார் கல்வி மாவட்டம்).

16. அரசு உயர்நிலைப்பள்ளி, மண்டகொளத்தூர் (திருவண்ணாமலை கல்வி மாவட்டம்).

17. சி.எஸ்.எம். நகராட்சி உயர்நிலைப்பள்ளி, பிள்ளையார்பாளையம் (காஞ்சிபுரம் கல்வி மாவட்டம்).

18. அரசு உயர்நிலைப்பள்ளி, திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் கல்வி மாவட்டம்).

19. அரசு உயர்நிலைப்பள்ளி, ஆண்டார்குப்பம் (செங்கல்பட்டு கல்வி மாவட்டம்).



20. மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட், சென்னை-2 (தென் சென்னை கல்வி மாவட்டம்).

21. ஸ்ரீ அஹோபில மட ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளி, மதுராந்தகம் (செங்கல்பட்டு கல்வி மாவட்டம்).

2. முதல் தர மாணவர்களுக்கே இடம் கொடுக்கும் நிலை தனியார் நடத்தும் உதவி பெறும் உயர்நிலைப்பள்ளிகளில் நிலவுதல், மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்பில் தனிக் கவனம் செலுத்தி வீட்டில் பயிற்சி அளிக்காமலிருப்பது; பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு மதிப்பெண்கள் கூடப் பெறுமளவிற்கு மாணவர்களைத் தயார் செய்யத் தலைமையாசிரியரும், ஆசிரியர்களும் தவறும் நிலை முதலியன ஒருவர்கூடத் தேர்ச்சி பெறாததற்கான பொதுவான காரணங்களாகக் கருதப்படுகின்றன.

## இணைப்பு II

[44 ஆம் பக்கத்தில் இனம் 8க்கான அடிக்குறிப்பைக் காண்க]

*Esteemed Members of the Legislature.*

I am happy to welcome you all to this session in the New Year.

2. At the outset, I would like to extend my hearty welcome to the new Government at the Centre. I am sure that the new Union Government would take steps to gain the confidence and co-operation of the States and also to help them in discharging their duties to the people. I consider it appropriate to recall here the views of the Government of Tamil Nadu expressed in the Governor's address after a new Government was formed at the Centre in 1977 :—

"......... my Government will extend its constructive co-operation, based on Anna's philosophy, to the Centre in their efforts for building up a democratic, socialistic and prosperous India on Gandhian lines. At the same time, we shall take every opportunity to strongly advocate the claims of Tamil Nadu, whether they relate to political, cultural, economic or linguistic issues, with a view to ensure that the legitimate rights and interests of our State and of our people obtain due recognition and response from the Centre..............it is now being increasingly recognised that the Centre can be strong, only if the States are also strengthened. We trust that the imbalances in our federal Constitution in this regard will be rectified at an early date through appropriate constitutional amendments and we shall support all efforts in this direction. We are also confident that with more powers we can make rapid progress in our efforts for improving the development and welfare of Tamil Nadu."

3. The decision of the Central Government to implement the 20-Point Programme as indicated in the President's address deserves praise. Members are well aware that the party in power in Tamil Nadu welcomed this programme even at the time of its announcement earlier and effectively propagated it among the people. In particular, the scheme was instrumental in abolishing the bonded labour in Tamil Nadu. To implement this programme in a proper manner this Government will extend all its support to the Union Government.

4. I would like to mention with pride, the peaceful manner in which the recent Parliamentary elections were conducted in Tamil Nadu. On behalf of the Government, I express my happiness about the emergence of the desire for safeguarding our democratic traditions and for protecting the rights of the electorate.



5. The Government took speedy and timely measures with a sense of dedication in giving relief to the people affected by the recent heavy floods in many districts of our State. Many social service organisations and students' organisations also played an active role in these relief measures. Many lives have been saved on account of the proper precautionary steps and the extension of immediate relief. On our request, the Central Government sent a team to assess the quantum of assistance for relief measures. The Government of Tamil Nadu would like to thank the Government of India for announcing the Central assistance on the basis of this Committee's report. It is really commendable that the State Government acted promptly by ordering relief measures allocating substantial funds, without waiting for the decision of the Central Government on the quantum of assistance.

6. On account of the write-off of the Takkavi loans ordered by the State Government, 8.51 lakhs agricultural families have benefited. The Government has already given an assistance of Rs. 16 crores to the Co-operative Banks to enable them to pass on the benefits announced earlier by the Government to the ryots. The Central Co-operative Banks were not able to obtain financial assistance from the Reserve Bank of India in view of the heavy overdue positions. As a result, even those who have repaid their loans were not able to get further loans from the co-operatives. To obviate this difficulty, the Tamil Nadu Government has given an assistance of Rs. 27.5 crores to nine Central Banks. This will enable those who have repaid the loan to get further loans from the co-operatives. I am sure that the Members will welcome this measure.

7. The food situation in Tamil Nadu continues to be comfortable. There is no compulsory procurement either directly from the ryots or through a levy on the traders. A number of direct procurement centres are being run by the Civil Supplies Corporation on behalf of the State Government. In these centres, paddy has been purchased from the ryots at the rate of Rs. 105 per quintal, which is higher than the price notified by Government of India. All the villages have been covered under the 'one-village-one-shop' scheme of this Government and these shops are functioning well. When there was the likelihood of a sugar shortage recently, Government took immediate steps to ensure distribution of sugar for family cards throughout the State. The crisis was successfully averted in view of the timely measures taken by the State Government.

8. It is necessary to keep the prices of agricultural inputs under control so as to keep the cost of cultivation at reasonable levels. At the same time, it is necessary to ensure proper and steady prices for agricultural commodities. Appropriate floor prices for essential agricultural produces should also be fixed so that there is incentive for the ryots to cultivate them confidently. It is inescapable that the Government of India take steps to procure and maintain buffer stocks in many such commodities. Such an arrangement is at present available for rice and wheat. I request that the Government of India take steps to extend this arrangement to cover other major agricultural commodities as well. Though it may not be possible to write-off the entire co-operative and other loans, when the ryots are unable to repay them on account of the repeated failures of the monsoon, it is imperative that the Central Government evolves a National policy to give suitable relief for such agriculturists and also take steps to create necessary Fund for this purpose. At this juncture, I would like to welcome the statement of the President of India in his recent Address to the Parliament :

"It will be the Government's endeavour to ensure proper remunerative prices to the farmer for his produce."

It is hoped that the Central Government would take early steps to implement this policy. The State Government has drawn up a massive scheme to enlarge the facilities in the regulated markets at a cost of about Rs. 100 crores so that the ryots are encouraged to increase the sale of their produce through the regulated markets. This scheme has been forwarded to the Government of India for being posed to the World Bank. Further, with the concurrence of the Government of India, an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Act will be brought before the House.

9. In this Session, a Bill will be brought forward to prohibit purchase of lands of scheduled tribes by non-tribals. Government recently promulgated an Ordinance reducing the ceiling on lands held by tenants to three standard acres from five standard acres. Government is of the opinion that by this measure, concentration of large extent of lands with some tenants will get reduced and the tenancy of lands would get distributed among the landless poor. A Bill to replace this Ordinance will be brought before the House.

10. Speedy steps will be taken up to develop the forest wealth of this State. The Government will be vigilant in prevention of illegal felling and smuggling of trees and in punishing the offenders severely.



11. Tamil Nadu has been in the forefront in utilising its water resources. Our State has utilised the surface water fully. The State has exploited its ground water potential to a substantial extent and in fact in certain areas there has been over-exploitation. The Government will continue to hold talks with neighbouring States on the utilisation of their surplus waters. Such utilisation will not only increase agricultural production in the country but also create employment in drought prone areas.

12. It is well known that only by proper industrial development, the Nation can become strong. It is seen from the particulars given below that the Central investment in Tamil Nadu has been dwindling in the past few years as compared to other parts of the country :—

CENTRAL INVESTMENT.

| | All India. | Tamil Nadu. | Percentage. |
|---|---|---|---|
| | [Rupees in crores] | | |
| Up to 1969-70 .. | 3,885 | 312 | 8 |
| Up to 1976-77 .. | 11,451 | 467 | 4 |

Tamil Nadu's share of Central investment upto 1969-70 was 8 per cent, whereas it has come down to 4 per cent by 1976-77. Tamil Nadu is a State having very high percentage of population below the poverty line ; the number of unemployed is also very high in Tamil Nadu. These two major problems of our State can be tackled by the Centre, increasing its direct investment and taking other appropriate policy decisions to encourage industrial development. I would like to request the Union Government to take steps to reduce regional imbalances by investing larger amounts in Tamil Nadu. The first phase of the Salem Steel Project for which the foundation stone was laid by the Prime Minister should be completed speedily. Further, the other phases of setting up the Salem integrated steel plant should be expedited so as to give an impetus for industrial development in this region.

13. Tamil Nadu Government continues to encourage small industries and cottage industries. The Government is implementing a new scheme of capital subsidy to small scale industries to be set up in 24 backward taluks. Recently, the Government has ordered that Government departments and public sector undertakings must purchase their requirements in respect of 241 articles

from small industries only. The Government has also initiated of a new scheme for equity assistance to revitalise sick small industries. During this year, as against the target of setting up 2,000 match units, steps have been taken for establishing 2,600 such units. During full production, these units will provide employment opportunities for 52,000 persons. Members may recall the decision of Government to give fillip to sericulture industry by expanding cultivation of mulberry over 8,000 acres. As against this targeted area, about 7,000 acres have been covered by November 1979 and it is estimated that by the end of the financial year 10,000 acres will be covered. As announced in my last address, active steps are being taken to establish the Soda Ash Plant by Tuticorin Alkali Chemicals Limited, which is expected to go into production by early 1982. To implement the Government's decision to produce paper from bagasse, a Public Sector Corporation has been set up and preliminary steps are being taken.

14. Apart from being the State capital, Madras City functions as commercial hub of and the gateway to the South. The Tamil Nadu Government has been implementing various schemes for the development of Madras Metropolitan area. Steps have been taken for the clearance for the second stage of the World Bank aided Urban Development Project at a cost of Rs. 57 crores, even while implementing the first stage of the Project. I would like to reiterate here that the Mass Rapid Transport System is the only solution to solve the traffic problem of the City. It would be my strong plea with the Union Government that the work on this scheme should be commenced atleast in the coming year. I would like to point out that as years go by, apart from the problems getting complicated, the cost would also increase. The Central Government must also take steps to convert the metre gauge railway line from Madras to Tuticorin to broad gauge. Only by this step, it would be possible for the country to draw the full benefits of the Tuticorin Port and also to develop the industrially backward areas on this route.

15. This year, the self-sufficiency scheme for providing basic amenities in an integrated manner has been started in 5 blocks in every district. It is proposed to expand the scheme and implement it in 100 more blocks in the coming year.

16. The centrally assisted Food For Work Programme should be expanded further to create more job opportunities. It is my wish that the Tamil Nadu Government which is implementing



this scheme successfully, should be further encouraged by the Government of India by larger allocation of rice. Members will be happy to know that the Employment Guarantee Scheme announced by this Government is being implemented vigorously.

17. In this State, Mobile Medical Units have been rendering a good service. It is proposed to enlarge this scheme. Government will also set up specialities like Cardiology in hospitals of the small towns.

18. In Higher Secondary Schools, Vocational Education is being taught in a commendable manner. The Government will take steps to raise its standard and to provide laboratory facilities and equipments to these schools. This Government considers that at the school education stage itself, students should obtain necessary work experience and that they should get trained in vocations useful to the society. To achieve this, vocational education will be introduced in high schools in stages.

19. The Members may be aware of the interest taken by the State Government in promoting sports activities and the setting up of a separate Directorate of Sports and Youth Services. Schemes for Physical Education will be expanded significantly in the coming year. The students will be given special training to enable them to act as a protective force for the society, whenever necessary.

20. In my last address, I informed the House that a scheme for construction of one lakh houses in rural areas will be implemented over a period of five years. I am happy to state that this scheme is making good progress. As against the targeted number of 20,000 houses, steps have been taken for construction of 30,000 houses. Till now, applications for loans for 38,000 houses have been sanctioned. Government is taking steps to expand the scheme with necessary assistance from HUDCO and other financial institutions.

21. This State is very keen to promote the welfare of Harijans and also to see that full protection is available to them. All necessary steps are being taken in this direction.

22. It is a matter of satisfaction that all the Harijan colonies in the State have been electrified. Government will immediately take up a special scheme to provide other basic amenities like drinking water-supply, link roads and pathway to burial ground to all the Harijan Colonies. This 'Harijan colonies Development Programme' will be implemented in 5,000 colonies in the coming

year. Steps will also be undertaken to construct permanent buildings for all Government Harijan Welfare School buildings in the next year.

23. It is proposed to enact a Legislation on Debit Relief to safeguard the interests of the poor people in Rural and Urban areas, who suffer from a heavy debt burden. Necessary Bill for this purpose will be placed before the House in this Session.

24. Government is preparing a Bill for rendering assistance to those who suffered for the cause of Tamil language and for the merger of Tamil speaking areas with tamil Nadu. This will be brought before the Legislature soon.

25. My Government proposes to hold talks with the Government of Kerala on the Kannagi temple near Kerala border. Flowing from the fruitful results of the talks, I hope necessary facilities for people to visit the temple will get developed. The State Archaeology Department will conduct excavations and research at this place and many other places. Historic places will be developed into tourist spots with necessary facilities for both Indian and foreign tourists. This will result in increased foreign exchange earnings and creation of job opportunities.

26. The Government will take all steps to improve the administration of religious and charitable endowments. In particular, steps will be taken up to fulfil the objectives and desires of the persons who have created such endowments.

27. A settlement with Trade Unions under section 12(3) of Industrial Disputes Act is binding on all workers. As per this provision, it is now possible, even for Trade Unions which do not represent the majority of the workers, to conclude such a settlement. It is proposed to bring a Bill to make it clear that a settlement under section 12(3) of the Industrial Disputes Act or a strike notice will be binding on everyone, only if it is approved by Unions representing a majority of the workers belonging to Trade Unions.

28. The Members are aware that the Government has announced the conduct of elections to Panchayats, Panchayat Unions, Municipalities and Madras Corporation. It is proposed to bring amendments for reducing the age of voting to 18 and amendments providing for reservation of adequate seats to women and harijans.



29. Government has recently announced a scheme for utilising the services of ex-servicemen for providing security in the City. This scheme will be enlarged to cover more areas. It is proposed to station police force in border areas of the State, to assist maintenance of law and order and also to prevent offences like encroachment and smuggling of forest produce.

30. This Government which has been effecting many administrative reforms, proposes to abolish the Board of Revenue and appoint independent Heads of department. I would like to inform the Members that speedy steps will be taken to implement this decision.

31. From the days of Perarignar Anna, an opinion has been widely held that a University should be established at Karaikudi. The Government will address the University Grants Commission emphasising the need for this University.

32. The Tamil Nadu Legislature has a hoary tradition of offering constructive suggestions to the Government and maintaining its decorum. I am sure that the Members would extend their full cooperation for conducting the current session also in the same tradition.

33. I wish all the members good luck in the service of the people of Tamil Nadu. Let us all work together to see that poverty and unemployment are ended as early as possible.

Vanakkam.

மேன்மை தங்கிய சட்ட மன்ற உறுப்பினர்களே,

இவ்வாண்டின் புதிய கூட்டத் தொடருக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

2. புதிதாக மத்தியில் அமைந்துள்ள ஆட்சிக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நல்வரவேற்பு கூற விரும்புகிறேன். அனைத்து மாநிலங்களின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பெறும் வகையிலும், மாநிலங்கள் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றுவதற்கு உறுதுணையாக அமையும் வகையிலும் புதிதாக மலர்ந்துள்ள மைய அரசு செயல்படுமென்று நான் நிச்சயமாக நம்பு

கிறேன். 1977-ல் மத்திய அரசு புதிதாக அமைந்த பிறகு, இவ்வரசின் கருத்துக்களை ஆளுநர் உரையின்போது வெளியிட்டதை இங்கு மீண்டும் குறிப்பிடுவது பொருத்தமாகுமென்று கருதுகிறேன்.

“எனது அரசாங்கத்தின் சார்பில், ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் மலர்ந்து வளங்கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, நாம் அண்ணாவின் கொள்கை வழி நின்று, ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குவோமென உறுதி கூறுகிறேன். அதே நேரத்தில் தமிழ்நாட்டின் அரசியல், கலாச்சார, பொருளாதார, மொழிப் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் திடமாக வாதாட அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவோம். அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் நியாயமான உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க மத்திய அரசு செவி சாய்த்துச் செயல்பட ஆவன செய்வோம் . . . . மாநிலங்களையும் வலுப்படுத்தினால்தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன் மூலமாக விரைவில் போக்கப்படுமென நம்புகிறோம். இதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் முழு ஒத்துழைப்பு அளிப்போம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதன் மூலம், தமிழ்நாட்டினை வளங்கொழிக்கச் செய்வதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் விரைவான முன்னேற்றம் காண முடியுமென நம்புகிறோம்”.

3. குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிட்டபடி 20 அம்சத் திட்டத்தை மைய அரசு அமுல் நடத்த முன் வந்திருப்பது பாராட்டுதற்குரியது. இத்திட்டம் முன்பு வெளியிட்டபோதே, இப்போது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள கட்சி அதனை வரவேற்று, மக்கள் மத்தியில் அத்திட்டத்தின் கருத்துக்களை வலியுறுத்தி பிரச்சாரம் செய்ததை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். குறிப்பாக, தமிழகத்தில் கொத்தடிமை முறை ஒழிக்கப்பட இத்திட்டம் உதவி செய்தது. இத் திட்டத்தை சீரிய முறையில் நிறைவேற்றுவதில் இம்மாநில அரசு, மைய அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

4. அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பொதுவாக அமைதிச் சூழ்நிலையிலே நடைபெற்றதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். ஜனநாயக மரபுகளைப் பேணிக் காக்கும் பண்பும் வாக்காளப் பெருமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற விழைவும் [illegible] எண்ணி என் அரசின் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



5. சென்ற ஆண்டு இறுதியில் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் ஏற்பட்ட பலத்த வெள்ளத்தைச் சமாளிப்பதில் விரைவாகவும் கடமையுணர்ச்சியுடனும் செயல்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துன்பங்கள் ஏற்பட்டதைக் குறைக்கும் முயற்சியில் அரசு சிறப்பாக ஈடுபட்டது. மேலும், பல்வேறு தொண்டுள்ளம் கொண்ட நிறுவனங்களும் மாணவர் அமைப்புகளும் துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபட்டன. முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டதன் விளைவாக, ஏற்பட்டிருக்கக்கூடிய உயிர்ச் சேதங்கள் பெருமளவிற்குத் தவிர்க்கப்பட்டன; தொடர்ந்து நிவாரணப் பணிகளும் செயலாக்கப்பட்டு வருகின்றன. நமது அழைப்பிற்கிணங்கி, உடனடி நிவாரணப் பணிகளுக்கு உதவி செய்வதற்காக, அறிக்கை சமர்ப்பிப்பதற்குக் குழு ஒன்றை மத்திய அரசு அனுப்பி வைத்தது. இந்தக் குழுவின் அறிக்கையின் மீது, மத்திய அரசு அண்மையில் நிதி உதவிபற்றிய தனது முடிவினை அறிவித்ததற்குத் தமிழக அரசின் நன்றியினைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். மத்திய அரசின் நிதியுதவி பற்றிய முடிவு தெரியும்வரை காத்திராமல், உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆணைகள் பிறப்பித்தும், தக்க நிதி ஒதுக்கீடுகளைச் செய்தும் தமிழக அரசு முனைப்பாகச் செயல்பட்டுள்ளது அனைவரும் பாராட்டுதற்குரியது.

6. தக்காவிக் கடன்களை அரசு தள்ளுபடி செய்ததன் விளைவாக 8.51 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. அரசு அறிவித்த கூட்டுறவுக் கடன் பற்றிய சலுகைகளைக் கூட்டுறவு நிறுவனங்கள் விவசாயிகளுக்கு அளிப்பதற்கு வகை செய்திட, அரசு 16 கோடி ரூபாய் வழிவகை முன்பணமாகக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுத்து உதவியுள்ளது. கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் ஏற்பட்ட சுணக்கம் காரணமாக, மத்திய கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து பணம் பெற முடியாத நிலையில் இருந்து வந்தன. இதன் விளைவாக, முறையாகக் கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்கள்கூட, தேவையான கடன்களை மீண்டும் பெற முடியாத கவலையான சூழ்நிலை இருந்து வந்தது. இதனைத் தவிர்த்து, கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு மீண்டும் கடன் கிடைக்கச் செய்வதற்காக, தமிழக அரசு ஒன்பது மத்திய கூட்டுறவு வங்கிகளுக்காக மொத்தம் 27.5 கோடி ரூபாய் அண்மையில் கொடுத்து உதவியுள்ளது. இதனை உறுப்பினர்கள் வரவேற்பார்களென்று நம்புகிறேன்.

7. தமிழ் நாட்டில் உணவு நிலைமை திருப்திகரமாக இருந்து வருகிறது. விவசாயிகளிடமிருந்து நேரடியாகவோ, வர்த்தகர்களிடமிருந்து லெவியாகவோ கட்டாயக் கொள்முதல் எதுவும் செய்யப்படவில்லை. மத்திய அரசு நிர்ண

பித்ததை விட உயர்ந்த விலையில் குவிண்டாலுக்கு 105 ரூபாய் கொடுத்து, நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்குவதற்கென அரசின் சார்பில் நேரடிக் கொள்முதல் நிலையங்களை நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வருகின்றது. கிராமந்தோறும் நியாயவிலைக் கடைகள் அமைக்கும் இந்த அரசின் திட்டத்தின் கீழ், எல்லாக் கிராமங்களிலும் நியாயவிலைக் கடைகள் நல்ல முறையில் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. மேலும், அண்மையில் சர்க்கரைத் தட்டுப்பாடு ஏற்படவிருந்த சூழ்நிலையில், அரசு உடனடியாகத் தீவிர நடவடிக்கைகள் எடுத்து, மாநிலம் முழுவதிலும் பொது மக்களுக்குக் குடும்ப அட்டைகள் மூலம் சர்க்கரை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, தட்டுப்பாடு ஏற்படாமல் வெற்றிகரமாக நிலைமையைச் சமாளித்தது.

8. வேளாண்மைக்குத் தேவையான இடு பொருள்களின் (Inputs) விலைகளைக் கட்டுக்குள் வைத்து, அதன் மூலம் சாகுபடிச் செலவை நியாயமான அளவில் இருக்கச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் பெரும் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படாமல், சீரான விலையில் வேளாண்மைப் பொருள்களை விற்பதற்கான ஏற்பாடுகளும் உருவாக்கப்பட வேண்டும். முக்கியமான பல்வேறு விளை பொருள்களின் அடிப்படை விலைகள் பெரிதும் வீழ்ச்சி அடைந்து விடாமல் இருப்பதற்கேற்றவண்ணம், விவசாயிகள் நம்பிக்கையுடன் அவற்றை விளைவிக்க ஊக்கம் அளிக்குமுகமாக, பல்வேறு விளை பொருள்களுக்கு தக்க அடிப்படை விலையை நிர்ணயிக்க வேண்டும். மேலும், அப்பொருள்களில் சேமக் கையிருப்பு (buffer stock) வைத்திருப்பதற்கான முறையில் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்வது தவிர்க்க முடியாததாகும். தற்போது, அரிசி, கோதுமை ஆகியவற்றுக்கு இருந்துவரும் இத்தகைய ஏற்பாட்டை மற்ற பல வேளாண்மைப் பொருள்களுக்கும் விரிவாக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், விவசாயிகள், கூட்டுறவு இயக்கத்தின் மூலமும் மற்ற வழிகளிலும் பெறும் கடன்களைப் பருவ நிலை தவறும்போது திருப்பிச் செலுத்த முடியாமல் தொடர்ந்து இன்னலுறும் நேரத்தில், அந்தக் கடன்கள் முழுவதையும் ரத்துச் செய்ய முடியாவிட்டாலும், அவர்களுக்குத் தக்க சலுகைகளை அளிப்பதற்கான, நாடு தழுவிய கொள்கையொன்றை மத்திய அரசு உருவாக்கி, அதற்கேற்றதொரு நிதி அமைப்பினையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நமது குடியரசின் தலைவர், நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின்போது "உழவர்களுக்கு அவர்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு உரிய விலைகள் கிடைப்பதற்கான முயற்சிகளை





இந்த அரசு மேற்கொள்ளும்" எனக் கூறியுள்ளதை எனது அரசின் சார்பில் வரவேற்பதோடு, அதனைச் செயல்படுத்தும் பணியில் மைய அரசு தீவிரம் காட்ட வேண்டுமெனவும் விரும்புகின்றேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளை அளிப்பதற்கும், அவற்றின் மூலம் விவசாயிகள் பல்வேறு விளை பொருட்களை விற்பதற்கு ஊக்கமளிப்பதற்கேற்ற வகையில் அவற்றைத் திருத்தியமைப்பதற்கும் சுமார் 100 கோடி ரூபாய் செலவிலான பெரிய திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது. உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றுவதற்காக இத்திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட வரைவும், மத்திய அரசின் ஒப்புதலுடன், விரைவில் அவைமுன் கொண்டு வரப்படும்.

9. பழங்குடியினர் நிலங்களைப் பிறர் வாங்குவதைத் தடுப்பதற்கான சட்ட வரைவுகள் இக்கூட்டத் தொடரில் அவையின் ஒப்புதலுக்காகக் கொண்டு வரப்படும். குத்தகைதாரர்கள் ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ளக்கூடிய குத்தகை நில உச்சவரம்பு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் அளவாக இருந்தது. இதை 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் அளவுக்குக் குறைக்க, அவசரச் சட்டமொன்றை அரசு அண்மையில் பிறப்பித்தது. இதன் மூலம், குத்தகைதாரர்கள் மிகப் பெருமளவில் நிலங்களை வைத்துக் கொள்வதைத் தவிர்த்து, பலருக்கும் நிலங்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு உருவாகுமென்று அரசு நம்புகிறது. இந்த அவசரச் சட்டத்தை மாற்றி, நிரந்தரமான சட்டமாக்குவதற்கான சட்ட வரைவும் அவைமுன் கொண்டு வரப்படும்.

10. இம் மாநிலத்தின் வனவளத்தைப் பெருக்குவதற்கான சில நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். அத்துமீறி மரங்களை வெட்டுதல், அவற்றைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் ஆகியவற்றைத் தடுப்பதிலும், இக்குற்றமிழைப்போருக்குக் கடுந் தண்டனை வழங்க ஏற்பாடு செய்வதிலும் அரசு முனைப்பாக இருக்கும்.

11. தமிழ்நாடு தன்னகத்தேயுள்ள நீர் வசதிகளைப் பயன்படுத்துவதில் முன்னணியில் இருந்து வருகிறது. ஆறு, குளம், ஏரிகளில் உள்ள நீரை முழுமையாகப் பயன்படுத்துவதோடு, நிலத்தடி நீரையும் (Ground Water) மிகப் பெரும் அளவுக்கு நமது மாநிலம் பயன்படுத்தி வருகிறது; ஒருசில இடங்களில் அளவுக்கும் அதிகமாகவே நிலத்தடி நீர் பயன்படுத்தப்படுகிறது. அண்டை மாநிலங்கள் தம்மிடமுள்ள உபரி நீரை தமிழ்நாட்டுக்கு அளிப்பதற்காக, அம் மாநிலங்களுடன் தமிழ்நாடு அரசு இணக்கமான முறையில் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தும். இதன் மூலம் நாட்டின் உற்பத்தி பெருகுவதுடன், வறண்ட பகுதிகளில் வேலை வாய்ப்பும் பெருகும்.

12. நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதன் மூலம் நமது நாட்டை பலம் பொருந்திய நாடாக ஆக்க முடியுமென்பது தெளிவு. தொழில் வளர்ச்சிக்கான மத்திய அரசின் முதலீடுகள், நாட்டின் பல்வேறு பகுதிகளுடன் ஒப்பு நோக்கும்போது, கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் குறைவாகவே இருந்து வருகின்றதென்பது கீழ்வரும் புள்ளி விவரத்தின் மூலம் தெளிவாகும்.

மத்திய அரசின் முதலீடு.

| | இந்தியா முழுவதும். | தமிழ் நாட்டில். | சத விதம். |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடிக் கணக்கில்) | | |
| 1969—70 வரை .. | 3,885 | 312 | 8 |
| 1976—77 வரை .. | 11,451 | 467 | 4 |

1969-70 வரையில் செய்யப்பட்ட முதலீடுகளில் தமிழ்நாட்டின் பங்கு 8 சத விதமாக இருந்தது. 1976-77 ஆம் ஆண்டில் இந்த சதவிதம் 4 ஆகக் குறைந்துள்ளது இதிலிருந்து தெரியவரும். மக்கள் தொகையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் சதவிதம், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அதிகமான அளவில் இருந்து வருகின்றது. வேலையற்றோர் எண்ணிக்கையும் தமிழ்நாட்டில் அதிகமான நிலையில் இருந்து வருகின்றது. மத்திய அரசு தக்க முறையில் நேரடியாகத் தொழில் முதலீடுகள் செய்வதன் மூலமாகவும், தொழில் வளர்ச்சிக்கு மற்ற வகைகளில் வழி கோலுவதன் மூலமாகவும் தமிழ்நாட்டின் இப்பெரும் பிரச்சினையைச் சமாளிக்க முடியும். தொழில் முதலீடுகளில் பல்வேறு பகுதிகளிடையே ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சீர்செய்யும் முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு, தமிழ் நாட்டில் கூடுதல் முதலீடுகள் செய்ய வேண்டுமென்றும் இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன். இன்றையப் பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்ட சேலம் உருக்காலைத் திட்டத்தின் முதற் கட்டத்தை விரைந்து செயல் படுத்துவதோடு, ஒருங்கிணைந்த உருக்காலைத் திட்டத்தின் இதர பகுதி களையும் உடனடியாக அமைப்பதன் மூலம் இப்பகுதியின் தொழில் வளர்ச் சிக்கு அடிகோலும்படி மத்திய அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

13. தமிழ்நாடு அரசு, சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றது. தொழிலில் பின்தங்கிய 24 வட்டங் களில் புதிதாக நிறுவப்படும் சிறு தொழில்களுக்கு முதலீட்டு மானியம் வழங்கும் புதிய திட்டமொன்றைத் தமிழக அரசு செயல்படுத்தத் தொடங்கி



யுள்ளது. அரசின் பல்வேறு துறைகளும் அரசைச் சார்ந்துள்ள நிறுவனங் களும் தத்தம் தேவைகளுக்காகப் பொருள்களை வாங்கும் நேரத்தில், 241 பொருள்களை, அவற்றை உற்பத்தி செய்யும் சிறு தொழில்களிடமிருந்தே பெற வேண்டுமென்றும் அண்மையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நலிந் துள்ள தொழில்களுக்கு மீண்டும் உயிரூட்டும் முயற்சியில் சிறு தொழில் களையும் உள்ளடக்கி, அவற்றிற்குத் தேவையான மூலதன உதவி செய்வதற் கான மற்றுமொரு புதிய திட்டத்தையும் தமிழ்நாடு அரசு அண்மையில் செயல்படுத்தத் துவங்கியுள்ளது. இவ்வாண்டு 2,000 தீப்பெட்டி உற்பத்தி செய்யும் அமைப்புகள் புதிதாக உருவாக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்ட தற்கு மாறாக, இதுவரை மொத்தம் 2,600 நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை முழுத் திறனுடன் செயல்படும் பொழுது, மொத்தம் சுமார் 52,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும். 8,000 ஏக்கரில் புதிதாக முசுக்கட்டை பயிரிடுவதன் மூலம் பட்டுத் தொழிலில் பெரியதொரு வளர்ச்சியை ஏற்படுத்த அரசு திட்டமிட்டது பற்றி உறுப்பினர் களுக்கு நினைவிருக்கலாம். இதற்கு எதிராக, 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முடிய 7,000 ஏக்கர் பரப்பில் புதிதாக முசுக்கட்டை பயிரிடப்பட்டு, இந்த நிதி ஆண்டு இறுதிக்குள் சுமார் 10,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படு மென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனது சென்ற உரையின்போது நான் குறிப்பிட்டவாறு தூத்துக்குடியில் ஆல்கலி கெமிகல் நிறுவனம் ஆலையை நிறுவு வதற்கான வேலைகளை முனைப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. இவ் வாலை 1982 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே உற்பத்தியைத் தொடங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் செய்வதற்கான அரசின் முடிவைச் செயல்படுத்த, அரசு நிறுவனம் ஒன்று பதிவு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

14. சென்னை நகரம், தமிழ்நாட்டின் தலைநகரமாக அமைந்துள்ளது மட்டுமன்றி, தென்னகத்தின் நுழைவாயிலாகவும் வணிக மையமாகவும் விளங்குகின்றது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக்காக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றது. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் பெரு நகர வளர்ச்சித் திட்டத்தின் முதல் கட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், 57 கோடி ரூபாய் செலவிலான இரண்டாம் கட்டத்திற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரின் போக்குவரத்து நெரிசலைச் சமா ளிப்பதற்கான ஒரே வழி, விரைவு நகர் இரயில் (Mass Rapid Transit System) அமைப்பதன் அவசியமென்பதை இங்கு நான் மீண்டும்

எடுத்துக் கூற விரும்புகின்றேன். விரைவு இரயில் போக்குவரத்து அமைப்பதற்கான பணிகளை வரும் ஆண்டிலாவது மத்திய அரசு தொடங்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நாட்கள் செல்லச் செல்ல பிரச்சினை சிக்கலாவதுடன், செலவும் அதிகமாகிவிடும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையிலான குறுகிய இருப்புப் பாதையை (Metre gauge) அகலப் பாதையாக (Broad gauge) மாற்றுவதற்கு மத்திய அரசு விரைவாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதன் மூலமாக, தூத்துக்குடி துறைமுகம் நாட்டிற்கு நன்முறையில் பயன்பட வாய்ப்பு ஏற்படும்; தொழிலில் பின்தங்கிய பல்வேறு பகுதிகள் தொழில் வளர்ச்சி பெறவும் வகை ஏற்படும்.

15. கிராமங்களில் தேவையான அடிப்படை வசதிகளை ஒருங்கிணைந்த முறையில் தருவதற்காக, இந்த ஆண்டு மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஒரு ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுச் சிறப்புத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டது. இதனை விரிவாக்கி, அடுத்த ஆண்டு மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

16. வேலை வாய்ப்பு வசதிகளை பெருக்குவதற்காக, மைய அரசு நடத்தி வரும் "வேலைக்கு உணவு" திட்டத்தை மேலும் தொடர்ந்து விரிவாக்க வேண்டும். இத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி வரும் தமிழக அரசிற்கு மைய அரசு இன்னும் அதிக அளவில் அரிசி ஒதுக்கீடு செய்து ஊக்குவிக்க வேண்டும் என்பது எனது ஆசை. இத்தருணத்தில், தமிழக அரசு அறிவித்த "உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்" சென்னையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என மகிழ்ச்சியுடன் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

17. நடமாடும் மருத்துவ நிலையங்கள் இம்மாநிலத்தில் அருந்தொண்டாற்றி வருகின்றன. இத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும். பெரு நகரங்களில் உள்ள மருத்துவ மனைகளிலும்கூட இதய நோய் சிகிச்சை போன்ற சில சிறப்புப் பகுதிகள் ஏற்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

18. இப்போது மேல் நிலைக் கல்விக்கூடங்களில் சிறப்பாகத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இக்கல்வியின் தரம் உயர்வதற்கும், இப் பள்ளிகளுக்கு வேண்டிய கருவிகளைக் கொடுத்து சோதனைக்கூடங்கள்



அமைப்பதற்கும் அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். பள்ளிக் கல்வி நிலையிலேயே மாணவர்களுக்கு வேலை அனுபவம் ( work experience ) தேவை என்றும் அவர்கள் சமூகத்திற்குப் பயன்படக்கூடிய தொழில்களில் பயிற்சி பெறுதல் அவசியம் என்றும் இந்த அரசு கருதுகிறது. எனவே, உயர்நிலைப் பள்ளிகளிலும் தொழிற் கல்வி போதிப்பதற்கான ஏற்பாடுகள் படிப்படியாகச் செய்யப்படும். இக்கல்வி முறைகள் பல்வேறு மாவட்டங்களிலும் பரவலாக அமையும்.

19. உடற்பயிற்சி, விளையாட்டுத் துறைகளில் தனி இயக்குநரகம் அமைத்து, அரசு சிறப்பாகச் செயலாற்றி வருவதை உறுப்பினர்கள் அறிவார்கள். மாணவ, மாணவியருக்கு உடற்பயிற்சி அளிக்கும் திட்டங்கள் வரும் ஆண்டில் பெரிய அளவில் விரிவாக்கப்படும். தேவைப்படும்போது மாணவ, மாணவியர் சமுதாயத்திற்கு நல்லதொரு பாதுகாப்பு அரணாகத் திகழும் வண்ணம், அவர்களுக்குப் பல்வேறு சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப் படும்.

20. சென்ற ஆண்டு எனது உரையின்போது நான் குறிப்பிட்டதைப் போல், [illegible] ஒரு இலட்சம் வீடுகள் கிராமப்புறங்களில் கட்டி உதவும் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு இதன்கீழ் 20,000 வீடுகள் கட்ட முதலில் திட்டமிட்டதற்குப் பதிலாக, தற்போது 30,000 வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 38,000 விண்ணப்பதாரர்களுக்குக் கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி நகர வளர்ச்சி நிறுவனம் மற்றுமுள்ள நிதி நிறுவனங்களின் உதவியைப் பெற்று இத்திட்டத்தை மேலும் விரிவாக்குவதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது.

21. தமிழக அரசு, தாழ்த்தப்பட்டோர் நலன்களை பேணிக்காப்பதிலும், அவர்களது உரிமைகட்கு முழுப் பாதுகாப்பு தருவதிலும் மிகுந்த கடப்பாடு கொண்டுள்ளது. இவற்றுக்கான தக்க நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகின்றது.

22. தமிழகத்திலுள்ள அனைத்து தாழ்த்தப்பட்டோர் காலனிகளுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டு விட்டது என்னும் செய்தி மகிழ்ச்சியளிக்கக்கூடியதாகும். மேலும், தாழ்த்தப்பட்டோர் வாழும் காலனிகள் அனைத்திற்கும் இணைப்புச் சாலை, குடிநீர் வசதி, இடுகாட்டிற்கு பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து அளிப்பதற்கான சிறப்புத் திட்டமொன்றை

உடனடியாக அரசு மேற்கொள்ளும். இந்த 'தாழ்த்தப்பட்டோர் காலனிகள் மேம்பாட்டுத் திட்டம்' வரும் ஆண்டில் 5,000 காலனிகளில் செயல்படுத்தப் படும். மேலும், அரிசன நலத்துறைப் பள்ளிகள் அனைத்திற்கும் தேவைப் படும் நிலையான கட்டிடங்களும் அடுத்த ஆண்டு கட்டுவதற்கான பணியும் மேற்கொள்ளப்படும்.

23. கிராமங்களிலும் நகர்ப் பகுதிகளிலும் கடன் தொல்லையால் அவதி யுறும் ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு அளிப்பதற்காக ஒரு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்படும்; இதற்கான சட்ட வரைவு இக் கூட்டத் தொடரில் அவை முன் வைக்கப்படும்.

24. தமிழ் மொழிப் பற்று, அதன் பாதுகாப்பு இவற்றிற்காகவும் தமிழ் பேசும் பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்ற ஆர்வத்துடன் செயல்பட்டதாலும், இன்னலுற்ற தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்க சட்ட வரைவு ஒன்றை அரசு தயாரித்து வருகின்றது. இது, விரைவில் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்காக கொண்டுவரப்படும்.

25. நமது மாநிலத்தில், கேரள எல்லைக்கு அருகில் அமைந்திருக்கும் கண்ணகி கோயில் பிரச்சினை பற்றி எனது அரசு கேரள அரசோடு பேச்சு வார்த்தைகள் நடத்தும். இதன் விளைவாக, அக் கோயிலை மக்கள் சென்று பார்ப்பதற்கான வசதிகள் உருவாக்கப்படும். மாநில அரசின் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினர் இங்கும் மற்ற பல இடங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்வார்கள். சரித்திரப் புகழ்பெற்ற இடங்கள் சுற்றுலா மையங்களாக மாற்றப்பட்டு, வெளிநாட்டினரும் நம் நாட்டினரும் அவற்றைக் காண ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டப்படுவ துடன் வேலை வாய்ப்புகளும் பெருகும்.

26. அறநிலையத்துறை நிறுவனங்களின் நிர்வாக அமைப்புகளைச் சீராக்கி மேம்படுத்த இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற் கொள்ளும். குறிப்பாக, அறக்கட்டளைகளுக்குப் பொருள் எழுதி வைத் தோரின் நோக்கங்களும் விருப்பங்களும் நிறைவேறும்வண்ணம் அவைகள் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

27. இப்போதுள்ள நிலையில், தொழிற் தகராறு சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் தொழிற்சங்கங்கள் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள், எல்லாத் தொழிலாளர்களையும் கட்டுப்படுத்துவதாக அமைகின்றன. தொழிற் சாலையில் வேலை செய்யும் பெரும்பான்மையோரின் பிரதிநிதிகளாக



இல்லாதபொழுதும், தற்போதுள்ள விதியின்படி, சங்கங்கள் அவ்வாறு ஒப்பந்தங்கள் செய்து கொள்ள வகை இருக்கின்றது. தொழிற்சங்க உறுப்பி னர்களாக உள்ள தொழிலாளர்களில், மிகப் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொண்ட 12 (3) ஒப்பந்தம், வேலை நிறுத்த அறிவிப்பு முதலியவை மட்டுமே எல்லோரையும் கட்டுப்படுத்தும் என்று தெளிவாக்குவதற்கான சட்டத் திருத்தம் ஒன்று அவையின் ஒப்புதலுக்குக் கொண்டு வரப்படும்.

28. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சி ஆகிய உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்த அரசு அண்மையில் முடிவு எடுத்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். பதினெட்டு வயது வந்தோர் அனைவரும் தேர்தல்களில் வாக்களிக்க வகை செய்வதற்கான சட்டத் திருத்தம் செய்யவும் தாய்மார்களுக்கும் தாழ்த்தப்பட் டோருக்கும் தக்க இட ஒதுக்கீடு பற்றிய சட்டத் திருத்தங்கள் செய்யவும் அரசு உத்தேசித்துள்ளது.

29. முன்னாள் இராணுவ வீரர்களை நகரப் பாதுகாப்புப் பணியில் ஈடு படுத்தும் திட்டமொன்றை அரசு அண்மையில் அறிவித்துள்ளது. இது, மேலும் பரவலாக்கப்படும். மாநிலத்தின் எல்லையோரப் பகுதிகளில் சட்டம், ஒழுங்கு நல்ல முறையில் பாதுகாக்கப்படவும், ஆக்கிரமிப்பு, வனப் பொருள்களைக் கடத்துதல் போன்ற குற்றங்களைத் தடுப்பதற்கும் ஆங்காங்கே நிரந்தரமாகக் காவல் படை இருத்தி வைக்கப்படும்.

30. நிர்வாகச் சீரமைப்புகளைத் தேவைப்படும்போதெல்லாம் தொடர்ந்து செய்து வரும் தமிழக அரசு, வரும் ஆண்டில் வருவாய் வாரியத்தை நீக்கி, அதற்குப் பதிலாக தனித்தனியான துறைத் தலைவர்கள் (Heads of Department) அமைப்பதென முடிவு எடுத்துள்ளது. இதனை நிறை வேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென் பதை மன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

31. காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்ற கருத்து பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்தே பொதுவாக நிலவி வருகின்றது. இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவிற்கு அரசு பரிந்துரை செய்யும்.

32. தமிழ்நாடு சட்ட மன்றம் ஆக்கப்பூர்வமான யோசனைகளை அரசுக்கு நல்கி, பண்பாடு குன்றாமல் தனது நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் சீரிய பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இந்த மரபு குன்றாமல், வரும்

சட்டமன்றக் கூட்டத்தொடர் அமைய வேண்டுமென்றும் அதற்கு உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் மனமார்ந்த முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்.

33. தமிழக மக்களின் நலன்களுக்காக, மன்ற உறுப்பினர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளும் வெற்றி பெற விழைகின்றேன். வறுமையும் வேலையின்மையும் விரைவில் தீர்வதற்காக நாமனைவரும் ஒரு சேர உழைப்போமாக!

வணக்கம்.

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

சனிக்கிழமை, 1980 பிப்ரவரி 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. இரங்கற் தீர்மானம்.

### முன்னாள் மேலவை உறுப்பினர், அமைச்சர் திரு. கே. ஆர். காரந்த் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, திரு. கே. ஆர். காரந்த், ஒருங்கிணைந்த சென்னை மாநில முன்னாள் அமைச்சர் அவர்கள், பெங்களூரில் 1—2—1980 தேதியன்று இயற்கை எய்தினார்.

அவர் 1926 முதல் 1929 வரை இம்மேலவையில் உறுப்பினராக இருந்தார். 1937-ல் சென்னை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், சிறிது காலம் பாராளுமன்றச் செயலாளராகவும் பணியாற்றினார். 1946 முதல் 1947 வரை திரு. பிரகாசம் அவர்களின் அமைச்சரவையில் வருவாய்த் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று பணியாற்றினார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்..

[உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.]

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### Sri Ranganathar Devasthanam, Singavaram.

*11. Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(a) the extent of lands owned by Sri Ranganathar Devasthanam of Singavaram village in Ginjee taluk;

(b) the number of persons who are enjoying illegal possession of the said lands ; and

(c) the action taken to get rid of encroachment on temple lands ?

### ஸ்ரீ ரெங்கநாதர் தேவஸ்தானம், சிங்கவரம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செஞ்சி வட்டம், சிங்கவரம் கிராமத்திலுள்ள ஸ்ரீரெங்கநாதர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ?

(இ) மேற்சொன்ன நிலங்களின் சுவாதீனத்தை சட்டத்திற்கு மாறான வகையில் அனுபவித்து வரும் நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(உ) கோயில் நிலங்களை ஆக்கிரமித்துள்ளவர்களை வெளியேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) 50, 90 எக்கர்.

(இ) 21 பேர்.

(உ) மேற்படி ஆக்ரமிப்புக்காரர்களை வெளியேற்ற அவ்வாலய பரம்பரை அறங்காவலருக்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு உத்திரவிடப் பட்டும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளாததாலும் மேலும் ஆலயத்திற்குச் சேரவேண்டிய குத்தகை பாக்கிகளை வசூல் செய்ய நடவடிக்கை மேற் கொள்ளாததாலும் ஆலய நலனை உத்தேசித்து அறங்காவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யவும், ஆலய நிர்வாகக் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யவும் திண்டிவனம



அருள்மிகு லக்ஷ்மி நாராயணப் பெருமாள் ஆலய செயல் அலுவலரை சட்டப் பிரிவு 53 (4)-ன் கீழ் தக்காராக நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி: இவ்வாறு ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களில் எவ்வளவு பேர் நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு உட்பட்ட நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் அல்லது விவசாய வருமான வரி செலுத்துகிறவர்கள் என்ற தகவலை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. இந்தக் கோயிலின் நிலங்களில் எவ்வளவு நிலத்தை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரம் மட்டும்தான் எனக்குத் தரப் பட்டிருக்கிறது. மற்ற விவரம் இல்லை. ஆனால் ஒரு குத்தகைதாரர் மட்டுமே 33 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார் என்ற விவரம் இங்கே எனக்குத் தரப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : சமுதாயத்தில் கொஞ்சம் செல்வாக்கு படைத்த வர்களே இது போன்ற நிலங்களை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். குறிப் பிட்ட இந்தக் கோயிலின் நிலத்தைப் பொறுத்த வரையில், மிக நீண்ட கால மாக இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் இருந்து வருகின்றன என்பது மட்டுமல்ல, இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டிருக்கும் திண்டிவனம் அருள்மிகு லெட்சுமிநாராயண சுவாமி திருக்கோயிலின் நிருவாக அதிகாரியின் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களேகூட இதுபோன்ற ஆக்கிரமிப்பு ஆபத் திற்கு உள்ளாகியிருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? எனவே இந்த நிலையில் இவ்வாக்கிரமிப்புகளை நீக்கத் தேவையான தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு பெரிய அதிகாரிகளை இந்தப் பணியில் ஈடுபடுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தற்போது இக்கோயிலுக்குத் தக்கா ராக நியமிக்கப்பட்டிருக்கும் திண்டிவனம் அருள்மிகு லெட்சுமி நாராயணசுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்களிலேயே இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இது ஏதோ ஒரு ஆலயத்தில் மட்டும் நடை பெறுகிற நிகழ்ச்சியாக இல்லை. தமிழகத்திலுள்ள பல்வேறு ஆலயங்களில் இப்படி நடைபெறுகின்றது. அவைகளையெல்லாம் கண்டுபிடித்து நிவர்த்தி செய்யும் முயற்சிகளை நாம் எவ்வளவுதான் வேகமாக எடுத்துக் கொண்டாலும், அவை ஆமை வேகத்தில்தான் நடைபெறுகின்றன. குறிப்பாக இந்தக் காரியத்

தில் ஒழுங்கு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அறநிலையத் துறைத் துணை ஆணையருக்குத் தெரிவிக்கப்பட்டு, மாதங்கள் 6 கடந்த பிறகும், இன்னும் நடவடிக்கை சரியாக எடுக்கப்படவில்லை என்று தெரிந்து, இப்போது கடுமையான நடவடிக்கையை அவர் மேற்கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அந்த அதிகாரி மீதே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. த. சந்தோஷம் : 'கிரிமினல் டிரஸ்பஸ்' போன்ற ஆக்கிரமிப்புகளில் கிரிமினல் சட்டத்தின் 447-வது விதிப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சட்ட விதி 452-ன் கீழ் அந்த ஆக்கிரமிப்புக்குள்ளான நிலங்களை மீட்கவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஏதாவது நடவடிக்கை மேற் கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** கோயிலின் அறங்காவலர்தான் இந்த மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த ஆலயத்திற்கு ஒரு பரம்பரை அறங் காவலர் இருக்கிறார். இந்தத் திருக்கோயில் திண்டிவனத்திற்கு அருகில் இருந்தபோதிலும், அவர் சென்னையில்தான் இருக்கிறார். இப்படி பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆக நடவடிக்கை எடுக்க வேண்டிய அறங்காவலரே எப்படி நாம் ஆண்டவனைக் காண முடியாதபடி தம் கண்ணுக்கு தெரியாதபடி இருக்கிறாரோ, அப்படி சென்னையில் இருப்பதால்தான் கோயிலின் நிலங்களை யெல்லாம் யார் யாரோ இன்றையதினம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கூர்ந்து பார்த்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்தப் பரம்பரை அறங்காவலர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்ற காரணத்தால்தான், இன்றையதினம் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அற நிலையத்துறை ஆணையிட் டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : ஆலயத்தின் அறங்காவலருடைய ஒத்துழைப் போடுதான் இந்தக் கோயில் நிலங்களில் ஆக்கிரமிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தால், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற அடிப்படையில், வேறு நிலமற்றவர்கள் இந்த நிலங்களை ஆக்கிரமிப்பு செய்யும் முயற்சியில் ஈடுபடும்போது, அரசு அவர்களுக்குத் துணை நிற்குமா ? அல்லது குறைந்தபட்சம் அவர்களின் முயற்சிகளைத் தடுக்காமல் இருக்கவாவது முன்வருமா ? ஒரு சிலரே கொள்ளை அடிப்பதற்கு பதிலாக நிலமில்லாதவர்கள் இந்த நிலங்களை ஆக்கிரமிப்பு செய்ய அரசு துணை நிற்குமா?



**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** ஒரு சட்ட விரோதமான காரியத்தைத் தடுப்பதற்காக மற்றொரு சட்ட விரோதமான காரியத்தை ஊக்குவிப்பது என்பது முடியாது என்றாலும், ஆலய நிலங்களை ஏழை எளிய மக்களாக இருப்பவர்கள், நிலமற்றவர்களாக இருப்பவர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டும், அதன் மூலம் அவர்கள் பயன்பெற வேண்டும் என்ற அடிப்படையில்தான் குத்தகை நில உடமை உச்ச வரம்பு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருந்ததை அண்மையில் 3 ஸ்டாண்டர்டு ஏக்கராக இந்த அரசு குறைத்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் இந்த வினாவைக் கேட்டதற்குப் பிறகே, இந்த ஆக்கிரமிப்பு விவரம் அரசாங்கத்தின் கவனத் திற்கு வந்தது. அதற்குப் பிறகுதான் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, பரம்பரை அறங்காவலர் தெரிந்தோ தெரியாமலோ இதுபோன்ற காரியங்களுக்கும் குறைகளுக்கும் காரணமாக இருக்கிறார் என்பதால்தான் அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, நிலங்களை மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று திட்டவட்ட மான ஆணைகள் அறநிலையத் துறையால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

## *Renovation of Temples.*

* 12 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government are giving any financial assistance for the renovation of temples in Tamil Nadu; and

(*b*) if so, the expenditure incurred for the renovation of temples in South Arcot and North Arcot districts during 1975-76, 1976-77 and 1977-78 ; and

(*c*) the amount granted for the renovation of Natarajar Temple at Chidambaram ?

## ஆலயங்கள் புனரமைப்பு.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் ஆலயங்கள் புனரமைப்புக்காக அரசு ஏதேனும் நிதி உதவி வழங்கி வருகின்றதா ?

(இ) ஆம் எனில், 1975-76, 1976-77 மற்றும் 1977-78 ஆகிய ஆண்டுகளில், தென் ஆற்காடு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள ஆலயங்கள் புனரமைப்புக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(உ) சிதம்பரத்தில் உள்ள நடராஜர் ஆலய புனரமைப்புக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) ஆம்.

(இ) 1975-76, 1976-77, 1977-78 ஆகிய ஆண்டுகளில், வட ஆற்காடு மாவட்டத்தில் 83 கோயில்களுக்கு திருப்பணிக்காக ரூபாய் 8,70,000 அரசு மான்யமாகவும், தென்னாற்காடு மாவட்டத்தில் 94 கோயில்களுக்கு ரூபாய் 7,00,000 அரசு மான்யமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

(உ) சிதம்பரம் அருள்மிகு நடராஜர் ஆலயத்திருப்பணிக்காக ரூபாய் 3.5 இலட்சம் அரசு மான்யமாக வழங்கப்பட்டு உள்ளது. மேலும் ஆணையாளர் பொது நல நிதியிலிருந்து ரூபாய் 20,000-மும் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சிதம்பரம் அருள்மிகு நடராஜர் ஆலயத்தின் புனரமைப்புக்காக ரூபாய் 45 லட்சம் செலவில் ஒரு திட்டம் திட்டப்பட்டு அதற்கு அரசும் ஒப்புதல் அளித்ததாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. அது உண்மையா ? அப்படியானால் அந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக ரூபாய் 3.5 லட்சம் தற்போது கொடுக்கப்பட்டிருக்கிறதா ? தேவைப்படும் ரூபாய் 45 இலட்சத்தையும் அரசே முழுமையாக ஏற்க இருக்கிறதா என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அருள்மிகு நடராஜர் ஆலயத்தின் திருப்பணிக்காக 33 இனங்களுக்கு ரூபாய் 45 லட்சம் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த இனங்களை மறு பரிசிலனை செய்து பார்த்ததில், அவைகளின் எண்ணிக்கை 27 ஆகக் குறைக்கப்பட்டு சுமார் 30,76,000 ரூபாய் திருப்பணிக்காகச் செலவிடலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த ரூபாய் 30.76 லட்சத்தில் அரசாங்கத்தின் உதவித் தொகை ரூபாய் 19.96 லட்சமாகும். அறக்கொடையாளர்கள் மூலமாக, பொதுமக்கள் மூலமாக ரூபாய் 10.80 லட்சம் வசூல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அரசு தரவேண்டிய ரூபாய் 19.96 லட்சத்தில்தான் இப்போது இந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.



(பிற்பகல் 4-10)

**திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் :** தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீரங்கம் ஆலயத்திற்கு 'யுனஸ்கோ' விடமிருந்து நிதியுதவி கிடைக்கப் பெற்றதாகச் செய்திகள் வந்தன. அப்படியென்றால் சிதம்பரத்தில் உள்ள நடராசர் ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்த, புராதனப் பெருமை வாய்ந்த ஆலயம் என்ற வகையில் அதன் தொன்மையைக் காக்க 'யுனெஸ்கோ'விலிருந்து நிதியுதவி பெற அரசு முயற்சி எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** 'யுனஸ்கோ' விலிருந்து அப்படி நிதியுதவி அளிப்பதாகத் தகவல் இல்லை. ஸ்ரீரங்கம் ஆலயத்திற்கு சில பொருள்களைத்தான் தந்திருக்கிறார்கள், ரூபாயாகத் தரவில்லை. ரூபாய் தருவதாகத் தகவல் இருந்தால், அப்படிப்பட்டதொரு திட்டம் யுனஸ்கோவிடம் இருந்தால், அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

ஒரு சிறிய திருத்தம். முன்பு பதில் சொல்லும்போது அரசு உதவியாக ரூபாய் 19.96 இலட்சம் செலவிட்டதாகச் சொன்னேன். அரசும் மற்றும் மானியங்கள் எல்லாம் சேர்த்து 19.96 இலட்சம் ரூபாய். தர்ம சிந்தனையாளர்கள் நிறைவேற்றிய திட்டம் ரூபாய் 10.80 இலட்சமாகும்.

THIRU G. VASANTHA PAI : Sir, when this renovation work is undertaken, will the Government see that some of our good monuments do not go abroad under the guise of renovation ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்த புதுப்பிக்கின்ற வேலை அங்கேயிருக்கின்ற கட்டிடங்களுக்கும், கோபுரங்களுக்கும் மட்டும். ஆலயத்திற்குள்ளே போய் எந்தப் பொருளையும் அப்புறப்படுத்துகிற வேலை நடைபெறவில்லை. வெளியே இருக்கிற கோபுரத்தைப் பழுது பார்க்கிற போது, அதன் மூலம் கடத்தப்படுகிற நிகழ்ச்சி நடைபெறாது. வேறு எப்போதாவது நடந்தால், எப்போதும் போல் அது தடுக்கப்படும்.

THIRU G. VASANTHA PAI : Sir, even the outside is sometimes taken away. In the museums in some of the places like Richmond and Baltimore, we find that they have got one column of Indian Architecture and inside that we find an indication " Donated by an unknown donor ".

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அப்படிப்பட்ட 'டொனேஷன்' கொடுக்கிறவர்கள் யார்; எப்படிக் கொடுத்தார்கள் என்பது தெரியாது. இப்படிப்பட்ட திருப்பணி நடக்கிற காரியத்தின் மூலம் திருட்டு நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சில ஆலயங்கள் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றன. சில ஆலயங்கள் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் வராமல் இருக்கலாம். சிதம்பரம் நடராசர் ஆலயமும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. அந்த ஆலயத்திற்கு மக்களுடைய வரிப் பணத்திலிருந்து நிதியுதவி செய்யப்படுவதால், அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ஒழுங்கான முறையில் செலவு செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்தத் திருப்பணிக் காரியங்கள் மிகப் பெரிய செல்வாக்கு வாய்ந்த நம்பிக்கைக்குரியவர்கள் கொண்ட குழுவிடத்திலே ஒப்படைக்கப்பட்டு செய்யப்பட்டு வருகின்றன. அரசினுடைய உதவியிலே மாத்திரம் இந்த வேலைகள் நடைபெறவில்லை. தனியார் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு உதவி செய்கிறார்கள். ஆகவே அந்தக் காரியங்களுக்குண்டான கணக்கு வழக்குகள் அறநிலையத் துறையின் ஆணையாளரின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கேள்வியின் முற்பகுதியில் "இந்தக் கோயில் அரசின் ஆளுகைக்கு உட்படவில்லையே, அதற்கு அரசு செலவு செய்கிறதே" என்று கேட்டிருக்கிறார்கள். அது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். இந்த மன்றமும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்றுதான். சரித்திரப் புகழ் பெற்ற அந்தக் கோயில் தனியார் சொத்தைப் போல பாவிக்கப்படுகிற நிலையை மாற்ற உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்ய அரசு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : சிதம்பரம் கோயிலைப் பொறுத்த வரையில், அரசு நிதியிலிருந்து இத்தனை இலட்சம் ரூபாய்களைக் கொடுப்பது நியாயம்தானா என்ற கேள்வியை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு, தென்னாற்காடு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் பல ஆலயங்கள் புனரமைப்புக்கு மிகவும் தகுதி வாய்ந்த நிலையிலே இருக்கின்றன. பல கிராமங்களில் தொன்மை வாய்ந்த கோயில்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. குறிப்பாக திண்டிவனம், திருவக்கரை போன்ற இடங்களில் ஈஸ்வரன் ஆலயம் இருக்கிறது. அவற்றையெல்லாம் புனரமைக்க முன்னுரிமை தந்து நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கிராமங்களில் உள்ள ஆலயங்களுக்கு உதவி வழங்க வேண்டுமென்ற திட்டத்தை அரசு கூர்ந்து கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று விரும்பி அதற்கான ஆணைகளைப் பிறப்பிக்கவிருக்கிறது. அதற்கு முன்பாக ஆயிரம் ரூபாயை கிராமப் பகுதிகளுக்குக் கொடுக்கலாம் என்ற திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. அதை அதிகரிக்க வேண்டுமென்று அரசு தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்ததன் பேரில், அறநிலையத் துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. சிதம்பரத்தில் உள்ள தில்லை நடராஜர் கோயில் மாத்திரமல்ல, தமிழகத்தின் சிற்பக் கலை, கட்டடக் கலை ஆகிய பெருமையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கிய புராதனச் சின்னங்கள் என்ற வகையில் மற்ற கோயில்களையும் பாதுகாக்க வேண்டிய கடமையும் அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## *Public Relations Officers*

* 13 Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) the number of Public Relations Officers whose services were terminated during the years 1977-78 in the Information and Public Relations Department of Tamil Nadu . and

(*b*) of them, the number of persons reinstated and the basis on which they were reinstated ?

### மக்கள் தொடர்பு அதிகாரிகள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் 1977-78 ஆம் ஆண்டுகளில், மக்கள் தொடர்பு அதிகாரிகள் எத்தனை பேர் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் ?

(இ) அவர்களில் மீண்டும் எத்தனை பேர் எந்த அடிப்படையில் வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) ஒருவரும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1980 பிப்ரவரி 2

**திரு. ம. சங்கரலிங்கம்:** மக்கள் தொடர்பு அதிகாரிகள் பலர் வேலையிலிருந்து நீக்கப்படுகின்றனர். அவர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். அதில் சிலரை வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வழங்கப்பட்டு அவர்கள் வேலையிலும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் திரும்பவும் தங்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மனுச் செய்திருக்கிறார்கள். இவையெல்லாம் எல்லோருக்கும் தெரிந்ததே. அப்படி இருக்கும்போது அமைச்சர் அவர்கள் "இல்லை" என்று பதில் சொன்னால் எப்படி?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** கேட்கப்பட்டிருக்கின்ற வினா, "தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் 1977-78 ஆம் ஆண்டுகளில் மக்கள் தொடர்பு அதிகாரிகள் எத்தனை பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள்?" என்பது. 1977-78-ல் அப்படிப்பட்ட பதவியே இல்லை. யாரும் நீக்கப்படவில்லை. அதைத்தான் பதிலாகச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அவர்கள் பதவியில் இருந்த காலத்திற்குரிய பதிலை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். 1976 ஆம் ஆண்டு அன்றைக்கு மக்கள் தொடர்பு அதிகாரிகளாகப் பணியாற்றிய 59 பேர்களை அன்றைய அரசு, அந்தப் பதவிகள் தேவையில்லையென்று கருதி பதவிகளை ரத்து செய்து, வேலை நீக்கம் செய்தது. அவர்களில் நான்கு பேர்கள் அதற்குப் பிறகு வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இந்த அரசு ஏற்பட்டதற்குப் பிறகு, அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள் என்பதையோ, வழக்கின் அடிப்படை என்னவென்பதையோ பார்க்காமல் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களில் தகுதியானவர்களை, அரசுப் பணிக்குரிய பட்டங்களைப் பெற்ற சுமார் 46 பேர்களைத் தேர்ந்தெடுத்து இத்துறையில் உள்ள பதவியில் அமர்த்தியிருக்கிறது. அதற்கு முன்னாலேயே நான்கு பேர்களை அரசு வேறு துறைகளில் அமர்த்தியிருக்கிறது. ஆக 50 பேர்கள் வேலை பெற்றிருக்கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மக்கள் தொடர்புத் துறையின் பணி பெருகியிருப்பதால் இன்னும் பலரை அந்தத் துறையில் வேலைக்கு அமர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?



1980 பிப்ரவரி 2]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இப்போது உடனடியாக அப்படிப்பட்ட உத்தேசம் ஒன்றுமில்லை. ஆனால் அவசியமிருக்கிறது. அதை அரசு பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மக்கள் தொடர்பு அதிகாரிகளாக பணியாற்றி வேலையிழந்தவர்களில் 50 பேர்களுக்கு மீண்டும் வேலை அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அவர்கள் வேலையில்லாமல் இருந்த காலத்திற்கு ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டார்களா? அப்படியானால் அது வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படி வழங்குகிற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அவர்கள் புதிய அலுவலர்களாகத்தான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். புதிய துறைகளிலேயும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட வயதைத் தாண்டியவர்களாதலால், வயது வரம்பு விதியைத் தளர்த்தி அதிகப்படியான சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். வேலை செய்யாத காலத்திற்குரிய சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற பிரச்சினை அவர்களிடத்திலே எழவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வேலையிழந்த 59 பேர்களில் 50 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் இந்தத் துறையில் வேலை வாய்ப்புகள் உருவாகக்கூடிய சூழ்நிலை இருப்பதாகவும் சொன்னார்கள். புதிய சூழ்நிலை உருவாகும்போது, மீதமுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முன்னுரிமை அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அப்படிப்பட்ட வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறபோது, முன்னாள் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். மேலதிகாரியாக இருந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் குறிப்பு இருக்கிறது. அவர்கள் செய்த பணியைப் பற்றிய விவரங்கள் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்து, தகுதியைப் பார்த்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். தகுதியுடையவர்கள் நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

(பிற்பகல் 4.20)

**திரு. கோ. சி. மணி:** அரசாங்கப் பணியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் உயர்நீதி மன்றம் சென்று, தற்போது உயர்நீதிமன்றம் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. அப்படிப் போட்ட உத்தரவு சரியானதல்ல என்று இருக்கிறது.

வெளியேற்றப்பட்டவர்களை அரசாங்கம் திரும்ப எடுத்துக்கொண்டதா? அந்த இடைவெளிக் காலத்தில் பணியில் இல்லாவிட்டாலும், அதற்கு அரசு பொறுப்பேற்று அந்தச் சம்பளத்தையும் கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** சமீபத்திலே 4 பேர்கள் உயர் நீதி மன்றத்திற்குப் போனார்கள். அதைத் தொடர்ந்து ஒரு தீர்ப்பு தரப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அது கொள்கை உரிமை மீதான தீர்ப்பாக இருக்கின்ற காரணத்தினாலே, அரசுக்கு அந்த உரிமை இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதைப்பற்றி ஆராய்ந்து, இது கொள்கையை மாற்றுகின்ற தீர்ப்பாக இருக்கின்ற காரணத்தினால், அதன் மீது புல் பெஞ்சுக்கு, மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாமா என்பதைப்பற்றி சட்டத் துறை பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அது முடிந்த பிறகு அதைப்பற்றி அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**புலவர் புலமைப்பித்தன்:** இந்த 59 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதற்கு உரிய காரணம் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இதற்கு முன்னாலே 1976 ஆம் ஆண்டு அவசர நிலை அமுலில் இருந்த காலத்திலே, மாநிலத்தில் ஆளுநர் பொறுப்பில், குடியரசுத் தலைவர் ஆட்சி நடத்தியபோது நடைபெற்ற ஒன்று. அதற்கு உட்காரணம் உண்டா என்று எனக்குத் தெரியாது. கோப்புகளிலிருந்து எனக்குக் கிடைக்கின்ற காரணம் அவர்கள் அன்றைக்கு அமுலுக்குக் கொண்டுவந்த அரசின் 20 அம்சத் திட்டங்களைப் பற்றியெல்லாம் சரியான முறையில் விளம்பரம் செய்யவில்லை; அவர்கள் அரசின் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்துகொள்ளவில்லை; அப்படிப்பட்ட பதவியே தேவையில்லை; என்று அரசு நினைத்தது. அந்தப் பதவியே இல்லாததால், அவர்கள் இயற்கையாகவே வேலையை இழந்துவிட்டார்கள். அவர்கள் வேலை உறுதி செய்யப்படாமல், நிரந்தரம் செய்யப்படாமல் இருந்ததும் ஒரு காரணமாகும்.

### *Collegiate Teachers Certificate.*

* 14 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government are aware of the procedure that teachers, even after they get B.T. or B.Ed. degree from recognised university, should obtain Collegiate Teachers Certificate; and

(*b*) if so, whether the Government will come forward to revoke this procedure?



### கல்லூரி ஆசிரியர்கள் சான்றிதழ்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பி.டி. அல்லது பி.எட். பட்டம் பெற்ற பின்னரும், ஆசிரியர்கள் கல்லூரி ஆசிரியர்கள் சான்றிதழ் (Collegiate Teachers Certificate) வாங்க வேண்டும் என்று ஒரு நடைமுறை உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இந்த நடைமுறையை ரத்து செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) தமிழ்நாடு கல்வி விதிகள், விதி 13-ன்படி, தலைமை ஆசிரியர் மற்றும் பி.டி. ஆசிரியர்கள் "கல்லூரி ஆசிரியர்கள் சான்றிதழ்" பெற்றிருக்க வேண்டும்.

(இ) இந்த நடைமுறையை ரத்து செய்வது குறித்து எதும் குறிப்புகள் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பி.டி. அல்லது பி.எட். பட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகங்களால் கொடுக்கப்பட்ட அந்தப் பட்டங்கள் தமிழக அரசினாலும் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, அந்தப் பதவிகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுடைய பட்டங்களை மீண்டும் கல்லூரிக் கல்வித் துறையினுடைய பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்றால், வீணான கால தாமதம் ஏற்படுகிறது. இது ஒரு தேவையில்லாத விதிமுறையாகும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன விதி எண் 13 நடைமுறைக்குத் தேவையில்லாத ஒன்றாகும். இதனால் அலுவலகத்திலுடைய நேரம் தான் பாழ் ஆகிறது. இந்தத் தேவையற்ற விதிமுறையை மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபடியும் பரிசீலனை செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தச் சான்றிதழ்கள் விதி 138-ன்படி விண்ணப்பத்தின்மீது பி.டி. அல்லது பி.எட். பட்டம் பெற்றவர்களுக்கு கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தால் அளிக்கப்படுகிறது. விதி 154-ன்படி, இவ்வாசிரியர்கள் ஒழுக்கமும் பண்பும் இல்லாதவர்களாகவோ, கடமையில் கவனக் குறைவாக இருப்பவர்களாகவோ, வேண்டாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகவோ கருதப்பட்டால், இவர்களது சான்றிதழை தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ ரத்து செய்ய பள்ளிக் கல்வி இயக்குநருக்கு

அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பல்கலைக் கழகம் வழங்கும் பட்டங்களை பள்ளிக் கல்வி இயக்குநர் நீக்கவோ, ஒத்தி வைக்கவோ முடியாதாகையால், தனியார் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் மற்றும் பி.டி. ஆசிரியர்களும் "கல்வாரி ஆசிரியர்கள் சான்றிதழ்" பெற்றிருக்க வேண்டும் என வற்புறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஆசிரியர்களுக்கு வேறு எந்த சிரமமும் இல்லை என்ற நிலையில் இதை ரத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: நான் ஆசிரியர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது என்று கூறவில்லை. பல்கலைக் கழகம் கொடுத்த பட்டங்களை அரசு அங்கீகரித்த பிறகு, இந்தப் பட்டங்களை கல்வித் துறையின் பரிசீலனைக்கு அனுப்புவது வீணானது. அவர்களுடைய அலுவல் நேரம் தான் வீணாகும் என்பது என் கருத்து. ஏதாவது தவறுகள் செய்யும் ஆசிரியர்களைப் பொறுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், அதற்கு தேவையான விதிமுறைகள் நம்முடைய கல்வித் துறை விதிமுறைகளில் இருக்கிறது. அதையே பயன்படுத்தி அந்த ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். இது பழமையிலே ஏற்படுத்தப்பட்ட விதிமுறையாகும். இது எப்போதும் இருப்பதனால், கல்வித் துறையினுடைய அலுவல் நேரம் பாழாகின்றது என்பதற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வித் துறையில் எத்தனையோ சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். இந்தச் சீர்திருத்தத்தையும் செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்கள் ஒழுக்கமும் பண்பும் உடையவர்களா என்பதை, மிகவும் கவனத்தோடு பணியாற்றுகின்றவர்களாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், அவர்கள் ஒரு பள்ளியிலிருந்து வேறு பள்ளிக்குச் செல்லும்போது தெரிந்துகொள்ள முடியும். அப்படி இல்லையென்றால், அவர்கள் வேறு பள்ளியில் சேர முடியாத நிலை ஏற்படும். அரசைப் பொறுத்த மட்டில், இந்த சர்டிபிக்கேட்டை வைத்துத்தான் அது தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே இந்தச் சான்றிதழ் தேவை என்று கருதுகிறோம்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, இறுதியாக நான் 13 ஆம் எண்ணுள்ள வினாவிற்கு அளித்த விடையிலே ஒரு சிறு திருத்தம் சொல்ல விரும்புகிறேன். 46 பேர்களுக்கு செய்தித் துறையிலேயும் 4 பேர்களுக்கு வேறு துறையிலேயும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக 46 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது. 13 பேர்களுக்கு இன்னும்



வேலை அளிக்கவில்லை. அவர்கள் வேலை பெறாமல் இருக்கிறார்கள் அல்லது இந்த அரசுத் துறையிலேயே இல்லாமல் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Tamil Pandits*

* 15 *Q*.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the Association of Tamil Pandits, that Senior Tamil Pandits who had hitherto been teaching up to XI Standard were not given chance to teach Tamil in Higher Secondary Schools at present; and

(*b*) if so, the action taken thereon?

### தமிழ் ஆசிரியர்கள்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பதினோராவது வகுப்பு வரை பயிற்றுவித்து வந்த பணி மூப்புடைய தமிழாசிரியர்களுக்கு தற்போது உயர் இடைநிலை வகுப்புகளில் தமிழ் பயிற்றுவிக்கும் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்று தமிழாசிரியர் கழகத்திடம் இருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்ததுண்டா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்களுக்கு அரசாணை நிலை எண் 1091, கல்வி, நாள் 15—6—1978-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியுடைய ஆசிரியர் கிடைக்காவிடில், முதுகலைப் பட்டம் (எம்.ஏ.) பெறாத புலவர், வித்வான் அல்லது பி.ஏ. (பட்டம்) தமிழ் தகுதியுடன் பண்டிட் பயிற்சி அல்லது பி.எட். பயிற்சி உடைய தமிழாசிரியர்களுக்கு மேல் நிலைப் பள்ளி வகுப்புகளை நடத்த வாய்ப்பு அளிக்க ஆணையிடப் பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம்: அரசு ஆணைப்படி முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் தமிழ் ஆசிரியர்களாகக் கிடைக்காவிட்டால், தமிழாசிரியர்கள் புலவர் பட்டம் பெற்றவர்களை, பணி மூப்பு அடிப்படையிலே நியமிக்கலாம்

[1960 பிப்ரவரி 2

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களில் முதுகலைப் பாடங்களில், பி.எ. ஹிஸ்டரி, பி.எஸ்.சி. மேத்ஸ் எடுத்துப் படித்துவிட்டு வருகிறார்கள். அவர்களுக்கு மற்ற புலவர் பட்டம் பெற்றவர்கள் போல தமிழ் பயிற்சி இருக்க முடியாது. பி.எ., பி.எஸ்சி. பட்டம் பெற்றவர்களில் முதுகலைப் பட்டப் படிப்பிலும் ஒரே பாடத்தை எடுத்து பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அரசு திருத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தத் தமிழாசிரியர்களை நியமிப்பதில் அல்லது வேறு ஆசிரியர்களை நியமிப்பதில் இந்த முன்னுரிமை வழங்குவதில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து நமக்கு ஏற்புடைய ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி அரசு பரிசிலிக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மேல்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொடங்கிய காலம் முதலே இந்தக் கோரிக்கையை வைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அரசாங்கம் அதைச் செய்வதற்கு இல்லை என்பதற்கு அந்த விதிமுறைகளைப் படித்துக் காட்டினார்கள். ஒரு குறிப்பிட்ட காலம் பணியாற்றிய பிறகாவது, ஒரு குறிப்பிட்ட அடிப்படையிலே நீண்டகாலம் சர்வீஸ் உள்ளவர்கள் என்ற அடிப்படையிலே, சிலருக்காவது வாய்ப்புக் கிடைக்கக்கூடிய அளவுக்கு வழி ஏற்படுத்தி, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ? தகுதியில்லாத ஆசிரியர்கள் கிடைக்காத காலத்திலே அவர்கள் பணியாற்றலாம் என்று சொல்லி அரசு ஒரு உத்தரவு போட்டிருப்பினும், அப்படி அவர்கள் பணி செய்யும்போது, இடையிலே அவர்களை பழைய இடத்திலேயிருந்து புதிய இடத்திற்கு அனுப்புகிற முறையும் இருக்கிறது. அதைத் தடுக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தத் தகுதிகளைப் பற்றி நாம் பேசுகிறபோது, இதற்கு முன்னாலே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்தை அரசு பரிசிலிக்கும் என்று நான் கூறினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பணி மூப்பின் அடிப்படையிலே, சீனியாரிட்டி உள்ள ஆசிரியர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று கூறுகிற கருத்து அரசுக்கு ஏற்புடையது அல்ல. காரணம் அத்தகைய முறையைப் பின்பற்றினால், தமிழாசிரியர்களுக்கு மட்டுமல்ல, மற்ற ஆசிரியர்களுக்கும் வாய்ப்புக்கள் குறையும். அத்துடன் மேல்நிலைப் பள்ளிக் கல்விக்குள்ள தகுதியைக் குறைக்க முடியாது.' அந்த முயற்சியால் மேல்நிலைப்



1960 பிப்ரவரி 2]

பள்ளிக் கல்வி சீர்குலையக் கூடிய ஆபத்து இருக்கிறது. ஆகவே அதை நாம் கவனிக்க முடியாது. அதை ஏற்பதற்கில்லை. இரண்டாவதாகச் சொன்ன கருத்தை அரசு பரிசிலிக்கும்.

## *Levy of Fees in Schools.*

* 16 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education he pleasel to state—

(*a*) whether it is a fact that the Education Finance Review Committee of the Government has recommended the levy of fees in the Secondary and Higher Secondary Schools ; and

(*b*) if so, the action taken thereon ?

### பள்ளிகளில் கல்விக்கட்டணம் வசூலித்தல்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. பா. ரா. தாமஸ் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசின் கல்வி நிதி மறுஆய்வுக்குழு உயர் நிலைப்பள்ளிகளிலும், மேல் நிலைப் பள்ளிகளிலும் கல்விக்கட்டணம் வசூலிக்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் கட்டணம் வசூலிப்பது குறித்து தற்போதுள்ள நிலைமையில் மாற்றம் எதுவும் தேவை என அரசு கருதவில்லை.

(பிற்பகல் 4-30)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மேல்நிலைப் பள்ளிகளிலே ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளில் படிக்கும் மாணவர்களிடம் கட்டணம் வாங்கும் நடைமுறையை இப்போது அரசு பின்பற்றி வருகிறது. இதற்கு ஆதரவாக உயர்நீதி மன்றமும் அண்மையிலே தீர்ப்பு அளித்திருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளிலே ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளுக்குக் கட்டணம்

வாங்குவதுபோல, உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளில் படிக்கும் மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, கல்விக்காகச் செலவு செய்யும் பணத்திற்கு ஈடாக, சமுதாயத்திற்குக் கிடைக்கும் பல்வேறு பயன்களை ஆராய்ந்து நாம் இலவசக் கல்வியைத் தந்து கொண்டிருப்பதை சில கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்து, பல்வேறு கட்டணங்களிலே, பணத்தைத் தரக் கூடியவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார்களென்றாலும், இப்போது இருக்கும் சலுகைகளை நீக்கிவிட்டு, கட்டணம் வசூலிக்கும் நிலைமையைச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசு கல்விக்காகக் கட்டணம் வசூலிப்ப தில்லை என்று முடிவெடுத்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். என்றாலும் தனியார் பள்ளிகளிலே கட்டணம் இல்லாவிட்டாலும்கூட, நன்கொடைகள் என்றும், கட்டிடங்களுக்காக நிதி என்றும் வசூலிப்பதை அரசு அறியும். இது போன்ற வசூல்களை, அந்தப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குத் தொடர்பு இல்லாத வகையில் பொது மக்களிடமிருந்து செய்ய அரசு தக்க வழிவகைகளைச் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பள்ளிகளுக்கு நாம் தந்திருக்கிற அறிவுரை, மாணவர்களை அனுமதிக்கின்ற காலத்தில் அவர்களிடமிருந்து நன்கொடைகள் வசூலிக்கக்கூடாது, தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் வசூலிக்கக்கூடாது என்பது, பள்ளியின் வளர்ச்சிக்காக அரசின் அனுமதி பெற்று மற்றவர்களிடம் நன்கொடை வசூலிப்பதை அரசு தடுக்கவில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** பல உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகள் சாதாரண சிறப்புக் கட்டணங்களைக்கூட கட்ட முடியாத ஏழைகளாக இருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய கல்வி பாதிக்கப் படுகிறது. ஆகவே ஏழைகள் எந்தவிதமான சிறப்புக் கட்டணமும் கட்ட வேண்டாமென்ற நிலையை அரசு உருவாக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஏழைகளுக்கு, அந்தக் கட்டணத்தைக் கட்ட வசதியற்றவர்களுக்கு நாம் வசதி செய்ய வேண்டு மென்ற கருத்தை நான் வரவேற்கிறேன். அரசு அது குறித்துப் பரிசீலிக்கும்.





### *Relief Measures in Kanyakumari District.*

* 17 *Q.*—Thiru M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether it is a fact that a sum of Rs. 55 lakhs was allotted during the financial year to rectify the damages and also to repair the breaches in channels, ponds and tanks due to rain in Kanyakumari District in 1978-79 ;

(*b*) if so, whether any representation has been received by the Government seeking permission to carry forward the balance amount in the next financial year ; and

(*c*) if so, the action taken thereon ?

### கன்னியாகுமரி மாவட்டத்தில் நிவாரண வேலைகள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) இவ்வாண்டு (1978-79) கன்னியாகுமரி மாவட்டத்தில் மழையால் ஏற்பட்ட சேதங்களை அகற்றவும், கால்வாய்கள், குளங்கள், ஏரிகள் இவற்றில் ஏற்பட்ட உடைப்புகளை பழுது பார்க்கவும் 55 லட்சம் ரூபாய் இந்த நிதி யாண்டில் ஒதுக்கப்பட்டிருந்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதில் செலவானதுபோக எஞ்சிய நிதியை அடுத்த நிதியாண்டில் தொடர்ந்து செலவு செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கோரி முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) 1978-79 நிதியாண்டுக்கு 17 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 16.09 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது.

(இ) & (உ) ஒதுக்கப்பட்ட தொகை முழுதும், அநேகமாக செலவு செய்யப்பட்டு விட்டதால் இக்கேள்விக்கு இடமில்லை. ஆனால் 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 5 லட்சம் திருநெல்வேலி-கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : 1978-79 ஆம் ஆண்டில் 55 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக மாவட்ட ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அறிவித்து, அந்த வட்டாரத்திலுள்ள நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அமைச்சரவர்கள் 17 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். அதன் அடிப்படையிலே 16—7—1979ல் பொதுப்பணித் துறை அமைச்சரவர்களுக்கும், நிதித் துறை அமைச்சரவர்களுக்கும் நான் கடிதம்கூட எழுதியிருந்தேன். எனவே எந்த முறையில் அந்த அறிவிப்பு வந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 17 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்ததே தவிர, 55 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்வது சரியல்ல. ஆகவே இருக்கின்ற குறிப்புகளில் 17 லட்சம் ரூபாய் என்றுதான் இருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : நான் சொல்லவில்லை. அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று மாவட்ட ஆட்சி மன்றக் குழுவில் மாவட்டக் கலெக்டர் அவர்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்து, அது நாளிதழ்களில் போடப்பட்டது. அரசு தாராளமாக வழங்கியிருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஆனால் அது 17 லட்சம் ரூபாயோடு நின்றுவிட்டது. இத்தகைய நிலைமைகள் இனிமேல் வராமலிருக்க அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது போன்ற தவறான தகவல்கள் கொடுத்திருந்தால், அது அவருடைய சொந்தக் தகவல்களாகத்தான் இருக்க முடியும். ஆனால் அரசுத் தரப்பில் சொல்வது, 17 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செலவு செய்யப்பட்டதாகக் கணக்குகள் காட்டப்பட்டிருக்கின்றன என்பதுதான்.

திரு. கோ. சி. மணி : மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிக்கின்ற சர்க்கார் சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் அவருடைய சொந்த அறிவிப்புகளா ? அப்படியானால் தவறான புள்ளிவிவரம் கொடுத்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 55 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னதற்கு எந்த விதமான ஆதாரத்தையும் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கோடிட்டு, குறிப்பிட்டுக் காட்டவில்லை. இருந்தாலும் அப்படி யாராவது தவறான தகவல்களைக் கொடுத்தால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. ம. சங்கரலிங்கம் : நான் வேண்டுமானால் என்னுடைய கடிதத்தின் நகலைக் கொடுக்கிறேன். பொதுப் பணித் துறை அமைச்சரவர்களுக்கு எழுதியிருக்கிறேன். அதில் சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டத்தில் கலெக்டர் அவர்கள் சொன்னார்கள் என்று அந்தக் கடிதத்தில் சொல்லியிருக்கிறேன். அப்படி எழுதியதற்கு, 9—5—1979-ல் திரு. ப. பழநி, பி.ஏ., அரசு சார்புச் செயலாளரிடமிருந்து பதில் வந்தது. நாங்கள் 17 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறோம் என்று அந்தக் கடிதத்தில் சொல்லவில்லை. தங்களுடைய கடிதம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தையே வாசிக்கிறேன். "தங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றது". 55 லட்சம் ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று நான் எழுதிய கடிதம் கிடைத்திருக்கிறது. "தலைமைப் பொறியாளரின் கருத்தை அறிவதற்காக தங்களுடைய கடிதத்தின் நகல் அனுப்பப்பட்டிருக்கிறது" என்று சார்புச் செயலாளர் பதில் எழுதியிருக்கிறார். சென்ட்ரல் கவர்ன்மென்ட்டில்—சமஷ்டி சாம்ராஜ்யத்தில் இருக்கக்கூடிய அமைச்சருக்கு எழுதினால்கூட அவருடைய கையெழுத்துப் போட்டு பதில் கிடைக்கும். ஆனால் சார்புச் செயலாளருக்காகப் பிறுன் கையெழுத்துப் போட்டு பதில் வந்திருக்கிறது. அதில்கூட மறுக்கவில்லை.

## New Channel to Lower Thirukkazhippalai Village

* 18 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether it is a fact that the Hon. the Minister for Agriculture and Irrigation has given an assurance a few months ago about cutting a new Channel from Pichavaram Regulator to Lower Thirukkazhippalai Village, Chidambaram Taluk; and

(*b*) if so, whether action will be taken to dig the channel in the ensuing fasli ?

### கீழ்திருக்கழிப்பாளைக்கு புதிய வாய்க்கால்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சிதம்பரம் வட்டம், கீழ்திருக்கழிப்பாளை என்ற ஊருக்கு பிச்சாவரம் செகுலேட்டரிலிருந்து புதிய வாய்க்கால் வெட்டித் தருவதாக, சில மாதங்களுக்கு முன்பு, மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சரால் உறுதியளிக்கப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், வருகிற பசலிக்குள் வாய்க்கால் வெட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) திட்டத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. கூடிய விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தத் திட்டத்திற்கு மதிப்பீடாக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு? இந்தத் திட்டத்தினால் எத்தனை ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் கிடைக்குமென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்தத் திட்டத்திற்காக 87 ஆயிரம் ரூபாய் செலவில் மதிப்பீடு ஒன்று பாசனத் தலைமைப் பொறியாளரால் அனுப்பப்பட்டிருக்கிறது. இதன் மூலம் சுமார் 196 ஏக்கர் 83 சென்ட் நிலம் புதிதாகப் பாசனம் பெறுவதுடன், 455 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தத் திட்டத்தை எத்தனை நாட்களில் அல்லது மாதங்களில் நிறைவேற்றித் தருவார்கள் என்ற உறுதிமொழியை மாண்புமிகு அமைச்சரவர்கள் தருவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அப்படிப்பட்ட உறுதியை எல்லாம் தாங்கள் சொல்வதற்குத் தயாராக இல்லை. ஆனால் வெகு சீக்கிரத்தில் முடிக்கப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கோவை மாவட்டத்தில் வறட்சிப் பகுதியான அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகளுக்கும் பாசன வசதி செய்து தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களுடைய அனுமதி கிடைத்தால் கண்டிப்பாக பதில் சொல்லுகிறேன். மூலக் கேள்விக்கும், உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. தலைவர் அனுமதி கொடுத்தால் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சம்பந்தம் இல்லாததை அவசியமென்று அமைச்சரவர்கள் நினைத்தால் பதில் சொல்லலாம். பதிலை என்மீது ஏன் போட வேண்டும்? (சிரிப்பு).





**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கோவை மாவட்டத்தில் அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கேரள அரசாங்கத்தோடு பாண்டியாறு-பொன்னம்புழா திட்டம் பற்றிப் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி இந்த பவானித் திட்டத்தின் மூலமாக அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்க முடியுமென்ற நிலையும் இருக்கிறது. இவைகளை அரசு பரிசீலித்து, செயல்படுத்த இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Prohibition Offences*

* 19. *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Khadi and Handlooms be pleased to state the number of (i) ordinary (ii) three star and (iii) five star Hotels in Madras City against which action has been taken under the Tamil Nadu Prohibition Act, 1937 (Act X of 1937) from 1st July 1977 to 6th August 1978 ?

## மதுவிலக்கு குற்றங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு கதர் கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் (சட்டம் எண் 10/1937), 1—7—1977 முதல் 6—8—1978 வரை சென்னைநகரில் எத்தனை (1) சாதாரண, (2) மூன்று நட்சத்திர (3) ஐந்து நட்சத்திர ஓட்டல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:** (1) சாதாரண ஓட்டல்—இல்லை.

(2) மூன்று நட்சத்திர ஓட்டல்கள்—மூன்று.

(3) ஐந்து நட்சத்திர ஓட்டல்—ஒன்று.

**திரு. க. இராமமூர்த்தி :** இப்போது பூரண மதுவிலக்கைத் தளர்த்தி அரசாணை பிறப்பித்திருக்கிற நிலையில், ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கைவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன். தளர்த்தி வெளியிடப்பட்டிருக்கிற அரசாணை எதுவரை இருக்கிறது? எந்த அளவில் மதுவிலக்கு தளர்த்தப் பட்டிருக்கிறது ?

[1980 பிப்ரவரி 2

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : 1—7—1977 முதல் 6—8—1978 வரை மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் எத்தனை ஓட்டல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது மூலக் கேள்வி. உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : ஏற்கெனவே மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் தண்டனைக்கு ஆளானவர்களுடைய தண்டனை குறைக்கப்பட வேண்டும் அல்லது முடிவுற்றதாகக் கருதி அவர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அறிவித்ததாக பத்திரிகைகளில் செய்தி கண்டோம். அவருடைய அறிவிப்புக்கும், ஏற்கெனவே மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது ஆனவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கும் சம்பந்தம் உண்டா? இரண்டுக்கும் சம்பந்தமில்லாத வகையில் அது செயல்படுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : உரிமம் பெற்ற ஏதேனும் உணவு விடுதிகளில் தவறு நடந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதாவது அவர்கள் செலுத்தியிருக்கின்ற டெப்பாசிட் தொகையிலிருந்து ஓரளவு பிடித்தம் செய்து, அதையே தண்டனையாகக் கருதி, தொடர்ந்து அத்தகையவர்களுக்கு உரிமம் வழங்கப்படுகிறது. தற்போது மதுவிலக்குக் கொள்கை சம்பந்தமாக எடுத்திருக்கின்ற முடிவுக்கும் ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை.

திரு. த. சந்தோஷம்: இந்தத் தவறுகளைச் செய்தவர்கள் மீது நீதிமன்றத்தின் மூலம் வழக்கு தொடரப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : 1977-78-ஆம் ஆண்டில் 6 உணவு விடுதிகள் சோதனை செய்யப்பட்டு அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எந்தவிதமான வழக்கும் நீதிமன்றத்தில் இல்லை.

திரு. செ. முத்துசாமி : 3 நட்சத்திர ஓட்டல், 5 நட்சத்திர ஓட்டல் என்றால் என்ன ? எனக்கு விளங்கவில்லை. அதற்கான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அளிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இருந்தாலும் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'சம்பந்தமில்லை. இருந்தாலும்' என்று ஒவ்வொருவரும் சொல்லுகிறார்கள். (சிரிப்பு). சொல்லுங்கள்.



980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: நட்சத்திர ஓட்டலுக்கான விளக்கத்தை உறுப்பினர் கேட்டார். ஓட்டல்களில் வந்து தங்குகின்றவர்களுக்கு அளிக்கப்படுகின்ற வசதிகள், வந்து தங்குகின்றவர்களின் தரம், ஓட்டல்களை நிர்வகிக்கின்ற முறை இப்படிப்பட்ட வசதிகளை துக்குதான் அடிப்படையில் ஓட்டல்களுக்கு நட்சத்திரம் வழங்கப்படுகிறது.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : தலைவரவர்களே . . .

THIRU G. VASANTHA PAI : Sir, it is according to the cost. The three-star hotel. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்தவரை நான் கூப்பிட்டு விட்டேன். அவர் சொல்லட்டும்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : ஒரு 3 நட்சத்திர ஓட்டலில் விவசாய சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடுவுக்கு கூட்டம் போட இடம் கொடுத்ததற்காக இத்தகைய நடவடிக்கை அந்த ஓட்டல் மீது எடுக்கப்பட்டதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தி இப்போது பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற உத்தரவில் குடிபோதையில் இருப்பவர்களைக் கைது செய்யத் தேவையில்லை என்று இருப்பதாக அறிகிறேன். அதுபோலவே ஓட்டல்களில் குடிபோதையில் இருக்கின்றவர்களுக்குத் துணை போகின்ற வகையில் யாராவது இருந்தால், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்காமலிருப்பது என்பது தான் அரசின் கொள்கையா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : புதிய மதுவிலக்குச் சட்டப்படி, தனி இடத்தில் மது அருந்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை. பொது இடங்களில் குடிபோதையில் இருந்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : பொதுவாக சமுதாய விரோதமான காரியங்கள் நட்சத்திர ஓட்டல்களில்தான் பாதுகாப்புடன் நடைபெறுகின்றன. நமது நாட்டில் நட்சத்திர ஓட்டல்கள் கட்ட அனுமதிப்பது, கடன் தருவது

இவையெல்லாம் சரியான காரியங்கள்தானா? பெரிய ஆடம்பரமான ஓட்டல்கள் கட்டுவதைத் தடுப்பது இந்த அரசாங்கத்தின் கொள்கையா? இதுவரை அப்படி இல்லாவிட்டால், இனிமேலாவது ஆடம்பர ஓட்டல்கள் கட்டப்படுவது தடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** கேள்வி இலாகா மாறி வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விஷயம் மாறிப் போகவில்லை. ஆனால் இலாகாவே மாறிப் போச்சு (சிரிப்பு).

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு துணை வினா கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது வந்துள்ள மதுவிலக்குச் சட்டம் சம்பந்தமான அறிவிப்புக்கும் முன்பு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கும் தொடர்பு இல்லை என்று சொல்லியிருந்தாலும், அதுபற்றி இங்கே சில விஷயங்களையும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நானும் ஒரு கேள்வி கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் சொன்னது மற்றி விஷயங்கள் நேர் தொடர்புடையவை இல்லை என்று சொல்லியிருந்தாலும் என்று சொல்லி உறுப்பினர் அவர்களும் ஆரம்பிக்கிறார்களா? (சிரிப்பு).

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** "முதலில் சொல்லக் கூடாது என்று சொல்லியிருந்தாலும்" என்று சொல்லி, பிறகு விடை சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த மதுவிலக்குச் சட்டத்திலே அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மதுவிலக்கு சம்பந்தப்பட்ட தவறு செய்தால், அவர்களுக்கு இரண்டு மடங்கு தண்டனை என்று வழிவகை இருந்தது. இப்போது தளர்த்தப்பட்டுள்ள புதிய உத்தரவின் மூலம், மது பெர்மிட் வழங்குவதைப் பொறுத்தவரை, அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இரண்டு மடங்கு மது வழங்க அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களை அப்பழக்கத்திலிருந்து திருத்தி நல்வழிப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்பட்டதும், அமைதியான சொல்லப்போ பிரச்சாரத்தின் மூலம் மதுவிலக்கை மக்கள் மத்தியிலே பரப்ப வேண்டும், அதன் மூலம் குடிப் பழக்கத்திற்கு ஆளானவர்களை அதிலிருந்து மீட்க வேண்டும் என்பது தான்.

## *Foreign Exchange Earned by Export of Handloom Cloth*

* 20 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Khadi and Handlooms be pleased to state—

(*a*) the amount of foreign exchange earned by the Tamil Nadu Government in the export of handloom cloth to the foreign countries during 1978; and

(*b*) the amount of foreign exchange expected during 1979?

## கைத்தறித்துணி ஏற்றுமதியினால் கிடைத்த அந்நியச் செலாவணி.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கதர் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1978 ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு கைத்தறித்துணி ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம், தமிழ்நாடு அரசுக்குக் கிடைத்த அந்நியச் செலாவணி எவ்வளவு?

(ஆ) 1979ஆம் ஆண்டில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் அந்நியச் செலாவணி எவ்வளவு?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** (அ) 1978—79 (1—4—1978 முதல் 31—3—1979 முடிய) வருடத்தில் தமிழ்நாட்டிலிருந்து ரூபாய் 55.36 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள், ஏற்றுமதி செய்யப்பட்டன.

(ஆ) 1979—80 (1—4—79 முதல் 31—3—1980 முடிய) ஆம் வருடத்தில் தமிழ்நாட்டிலிருந்து ரூபாய் 60 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்ய, என்ன முறை பின்பற்றப்படுகிறது? எந்தெந்த நாடுகளுக்கு கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: அயல் நாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதில் இரண்டு பிரிவுகள் இயங்குகின்றன. ஒன்று தனியார் துறை, மற்றொன்று கூட்டுறவுத் துறை. தனியார் துறை மூலம் எக்ஸ்போர்ட்டர்ஸ் என்று சொல்லப்படுகின்ற பல்வேறு ஏற்றுமதியாளர்கள் மூலம் பல்வேறு நாடுகளுக்கு துணிகளை ஏற்றுமதி செய்கிறார்கள். கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை, கோஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்கிற அரசாங்க அமைப்பு மூலம் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு டவல்கள், ஷீட்டுகள் போன்ற துணி ரகங்களை ஏற்றுமதி செய்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: * * *

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது என்ன கேள்வி?

திரு. சி. இராமலிங்கம்: தலைவரவர்களே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இத்தோடு விட்டுவிடுங்கள்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: உறுப்பினர் கேட்ட கேள்வியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கினால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் * * * கேட்ட கேள்வியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன். பத்திரிகைகளும் இதைப் பிரசுரிக்கக் கூடாது.

திரு. க. இராமமூர்த்தி: 1978-79 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலிருந்து 55.36 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள், அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இதிலே அரசுத் துறை மூலம், கூட்டுறவுத் துறை மூலம் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணிகள் மூலம் வந்த அந்நியச் செலாவணி எத்தனை கோடி ரூபாய்? கைத்தறித் துணி விற்பனை மூலம் தனியாருக்கும் கிடைத்துள்ள அந்நியச் செலாவணி எவ்வளவு கோடி ரூபாய்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: கோஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்கிற அரசு அமைப்பு 1976-77 ஆம் ஆண்டுத் துவக்கப்பட்டது. துவங்கிய வருடத்தில் 75 இலட்சம் ரூபாய் அளவுக்குத்தான் ஏற்றுமதி

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



செய்திருக்கிறோம். 1979-80ஆம் வருடத்தில் 2 கோடி ரூபாய்க்கு கைத்தறித் துணிகளை கோஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்கிற அமைப்பின் மூலம் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று [illegible] செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். [illegible] 5 ஆண்டுகளுக்குள் நாம் ஏற்றுமதி செய்ய வேண்டியவைகளை [illegible].

திரு. எ. என். வெங்கடேசன்: எந்தெந்த நாடுகளுக்கு நாம் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்கிறோம்? எந்தெந்த நாட்டிலிருந்து நமக்கு அதிகமாக அந்நியச் செலாவணி கிடைக்கிறது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: கூட்டுறவு அமைப்பின் மூலம் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு கைத்தறித்துணி அனுப்பப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள [illegible] டவல் போன்ற கைத்தறித் துணிகளுக்கு ஆஸ்திரேலியாவில் நல்ல மார்க்கெட். அவர்கள் அதிகமாக ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: 55.36 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டதில் 75 இலட்சம் ரூபாய் அந்நியச் செலாவணி தான் கூட்டுறவுத் துறை மூலம் அல்லது அரசுத் துறை மூலம் கிடைத்ததாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால், இந்தத் துறையை தனியார் துறை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது என்று பொருள். இந்த நிலையில் தமிழக அரசு துறை மூலம், அதாவது கூட்டுறவுத் துறை மூலம் [illegible] கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று மத்திய அரசிடம் கோரிக்கை [illegible] ஏற்றுமதி பூராவையும் கூட்டுறவுத் துறைக்குப் பெற்றுத் தர மத்திய அரசைக் கேட்குமா, வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மத்திய அரசு கோட்டா கொடுப்பது பிரைவேட் எக்ஸ்போர்ட்டர்களுக்கு மட்டும் தான். அரசுத் துறை மூலம், அதாவது கூட்டுறவுத் துறை மூலம், எவ்வளவு வேண்டுமானாலும் வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்யலாம். அமைப்பை ஆரம்பித்த நாளன்றிலிருந்து இதுவரை 75 இலட்சம் ரூபாய்க்கு கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி சம்பாதித்திருக்கிறோம். இந்த ஆண்டிறுதிக்குள்ளாக அதை 2 கோடி ரூபாயாக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது. இன்னும் வருகின்ற ஆண்டுகளிலேயும் பல சேவைகளை விரிவுபடுத்துவோம். அதிகமாக ஆர்டர் வருகின்ற குறிப்பிட்ட ரக கைத்தறித் துணிகளின் உற்பத்தியை அதிகரித்தல் போன்ற பூர்வாங்க வேலைகளை

யெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே அதிகமான ஆர்டர்களைப் பெற்று செயல்படுத்திக்கொண்டிருக்காமல் பூர்வாங்க வேலைகளை முழுமையாகச் செய்தபின் அதிகமான ஆர்டர்களைப் பெற்று வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளோம்.

(பிற்பகல் 4-50)

**திரு. த. சந்தோஷம் :** கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதற்கு ஒரு தூண்டுகோலாக இருக்கும் அளவிலே அரசாங்கம் அவர்களுக்கு ஏதாவது மானியம் கொடுக்கிறதா? கொடுக்கிறதென்றால் எந்த அடிப்படையில்? இப்படிப்பட்ட கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அந்நியச் செலாவணி வருவதால், அதை ஊக்கப்படுத்த, அவர்களுக்கு மானியம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாருக்கு மானியம் வழங்குவது என்று குறிப்பிடுகிறார் என்று விளங்கவில்லை. ஏற்றுமதி ரகங்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு சாதாரண ரகங்களை நெய்வதற்கு இருப்பதைவிட கூலி அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. எனவே, ஏற்றுமதி ரகங்களை அவர்கள் விரும்பி உற்பத்தி செய்கிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : Are the Government aware that except in respect of the handloom cloth exported from Coimbatore district, there are periodical complaints from foreign buyers including the Supermarkets in America that the quality of the garments is of a very low order ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தனியார் துறையிலே ஏற்றுமதி செய்கின்ற ஏற்றுமதியாளர்கள் அனுப்பும் துணிகளைப் பொறுத்த வரையில், இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. இது மத்திய அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசு கட்டுப்பாடு விதிக்க முடியும். மாநில அரசு ஏற்றுமதி செய்கின்ற பணிகளுக்கு இதுவரையிலும் நல்ல மதிப்பு கிடைத்திருக்கின்றது. குறைபாடுகள் எங்கிருந்தும் வரவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** ஏற்றுமதி செய்யப்படுகின்ற கைத்தறி ஆடைகள் தனியார் துறை மூலமாக செய்யப்பட்டாலும் கூட, அவற்றை 'பிராசஸ்' (Process) செய்வது, முறைப்படுத்துவது, அவற்றைத் தயாரிக்கின்ற



தொழிற்கூடங்கள் எல்லாம் முறையாக அமைய வேண்டுமென்ற அளவிலே அரசு குறிப்பாக நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா? பல இடங்களிலே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற துணிகளை உற்பத்தி செய்யும் இடங்களில் தொழிலாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாது இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதைப் போக்க என்ன நடவடிக்கை இந்த அரசு எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** 'டெக்ஸ்டைல் டெவலப்மென்ட் கமிஷன்' என்று மத்தியிலே ஒரு அமைப்பு இருக்கிறது. அதைச் சார்ந்த அதிகாரிகள் இப்படிப்பட்ட தனியார் ஏற்றுமதியாளர்களுடைய தொழிற்கூடங்களிலே சென்று பார்வையிடுகிறார்கள். நாம் சமீபத்திலே கொண்டுவர இருக்கின்ற நெசவாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்தக் குறைபாடுகள் அகற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (1) பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளின் காலவரையறையற்ற உண்ணாவிரதம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. திரு. சங்கரலிங்கம், திரு. மீனாட்சிசுந்தரம், திரு. நல்லசிவன் ஆகியோர் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் காலவரையறையற்ற உண்ணாவிரதம் இருப்பது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மதுரை பல்கலைக் கழகத்தின் முன்னாள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரம் கல்லூரியில் ஆசிரியராக இருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட திரு. தியாகராஜன் 24—1—1980 அன்று காலவரையறையற்ற உண்ணாவிரதம் ஆரம்பித்து, அவர் 27—1—1980 ஆம் நாளன்று கைது செய்யப்பட்டு, அன்று மதுரை நகர் முழுவதும் உள்ள கல்லூரிகள் அடைக்கப்பட்டு மாணவர்களும், ஆசிரியர்களும்

சேர்ந்து போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். பிறகு 28 அல்லது 29 ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி மன்றத் தலைவருடைய அலுவலகத்தின் முன்னர் கன்னியாகுமரி மாவட்ட பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் காலவரையறையற்ற உண்ணாவிரதம் ஆரம்பித்து, ஆர்ப்பாட்டமும் நடந்தது. 1—2—1980-ல் அவர் கைது செய்யப்பட்டார் என்றும், இன்று அங்கேயுள்ள எல்லாக் கல்லூரிகளும் அடைக்கப்பட்டு, சுமார் 600 ஆசிரியர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும் மத்தியானம் 1 மணி அளவிலே தந்தி மூலம் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இப்படி எல்லா ஆசிரியர்களும் போராடிக் கொண்டிருக்க, மாணவர்களும் சில பகுதிகளில் அவர்களுக்காக அனுதாபப் பட்டு போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி 4 ஆம் தேதி சென்னையிலேயும் பல பகுதிகளிலே போராட்டம் நடக்க இருப்பதாக அறிவிப்புகள் வருகின்றன. இவைகளைப் பார்க்கின்றபோது, நம்முடைய மாநிலம் முழுவதும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மத்தியிலே ஒரு அமைதியில்லாத சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? இதை எப்படித் தீர்க்க வேண்டும் என்பதைப்பற்றி இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அரசுக்கு எடுத்துச்சொல்லவும், அரசு என்ன கருதுகிறது என்பதை நாங்கள் தெரிந்து மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், இந்தப் பொருள்பற்றி விவாதிக்க வேண்டியது மிகவும் அவசியம். எனவே, தலைவர் அவர்களே, இதை நாங்கள் தங்கள் மூலமாக அரசுக்கு உணர்த்துவதோடு, இந்தப் பிரச்சினையை விவாதிக்க தாங்கள் அனுமதி தந்து, விவாதித்து நல்ல முடிவுக்கான வழிவகைகளைச் செய்யவேண்டி யிருப்பதால் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்துப் பேசுவதற்கு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லாமல் விட்ட கருத்துக்களை மட்டும் சொல்லி நேரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விவரங்களையெல்லாம் சொன்னார்கள். பொதுவாகவே, கல்லூரி ஆசிரியர்களானாலும் சரி, பள்ளி ஆசிரியர்களானாலும் சரி, தனியார் நிருவாகத்தினர் அரசு பிறப்பிக்கின்ற எந்த ஆணையையும் செயல்படுத்தாமல், இந்தமாதிரி



காரியங்களைத் தொடர்ந்து செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இவைகள் ஏற்கெனவே கொண்டுவரப்பட்டிருக்கின்றன. பல்வேறு பகுதிகளிலே போராட்டங்கள் நடந்துகொண்டிருப்பதற்கு இதுபோன்ற நிலைமைகள்தான் காரணம். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, இந்த நிலைமைகளையெல்லாம் பரிசீலித்து இங்கே இருக்கின்ற சான்றோர்கள் எல்லாம் தருகின்ற கருத்துக்களின் அடிப்படையில் நாம் என்ன நடவடிக்கையை அரசுத் தரப்பிலே மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி நல்ல முடிவெடுக்க நிச்சயமாக, தலைவர் அவர்களே, தாங்கள் இதிலே சற்று அவகாசம் தந்து விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** சென்ற ஆண்டு இதே அவையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படி 12—3—1979 ஆம் நாள் வெளியிட்ட 23371 என் ஜி.ஓ.-வையும் மீறி, 7—4—1979-லே தனியார் கல்லூரி ஆசிரியர் நீக்கப்பட்டிருக்கிறார். ஒன்பது மாதத்திற்குப் பிறகு அது சம்பந்தமாக பல்கலைக் கழகம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதற்குப் பிறகு, இப்போது பல்கலைக் கழகத்தின் உத்தரவை அரசு நீக்கிவைத்து இதைப் பரிசீலனை பண்ண 4 பேர் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியிலே 'டைரக்டர் ஆஃப் கலீஜியேட் எஜுகேஷன்' ஒருவராக இருக்கிறார். இந்த அம்மையார் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் சென்றபோது, கல்லூரி நிர்வாகம் செய்த செயலை நியாயப்படுத்தியவர்கள். அவரை இந்தக் கமிட்டியிலே போட்டால், என்ன நியாயம் கிடைக்கும்? எனவே, இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரத்தில் உள்ள விவேகானந்தா கல்லூரியில் கணித உதவிப் பேராசிரியராக திரு. கே. தியாகராஜன் என்பவர் தற்காலிகமாகப் பணியாற்றி வந்தார். பணிக்காலம் முடிந்துவிட்ட காரணத்தால், திரு. தியாகராஜன் கல்லூரி நிர்வாகத்தினரால் பணியினின்றும் விடுவிக்கப்பட்டார். இப்பணி நீக்கத்திற்கு மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்பொருட்டு 24—1—1980 அன்று திரு. தியாகராஜன் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் முன்னால் உள்ள பொதுவான சாலையில் உண்ணாவிரதம் தொடங்கியிருந்ததாக அறியப்படுகிறது. இக் காரணத்தால் 27—1—1980 அன்று அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால், மருத்துவரால்

உடல்நிலை ஆய்வு செய்யப்பட்டு, பின்னர் காவல் துறையினரால் அவர்கள் ஊர்தியில் மருத்துவ மனைக்கு ஏற்றிச் செல்லப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டதாகவும் அங்கு நாள்தோறும் அவருக்கு குளுகோஸ் தண்ணீர் ஊசி மூலம் கொடுக்கப்படுவதாகவும், அதை அடுத்து அன்னாரின் உடல்நிலை சீரடைந்து வருவதாகவும் அறியப்படுகிறது. அவர் உணவும், மருந்தும் வாய் மூலம் சாப்பிட மறுப்பதாகவும் அறியப்படுகிறது.

திரு. தியாகராஜன் மதுரை ஆசிரியர் சங்க உறுப்பினர் ஆவார் என்றும் அறியப்படுகிறது. இச் சங்கம் கூட்டு நடவடிக்கைக் குழுவின் ஒரு பகுதியாகும். கூட்டு நடவடிக்கைக் குழு அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம், வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். திரு. தியாகராஜன் நிர்வாகத்தின் உத்தரவை எதிர்த்து அரசுக்கு மனுச் செய்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தப் பிரச்சினையை மீளவும் ஆராய மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் கீழ்க்கண்டவர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட ஒரு அனைக் கமிட்டியை அமைத்துள்ளது.

1. கல்லூரிக் கல்வி இயக்குநர்,

2. பொறியியல் கல்வி இயக்குநர்,

3. மருத்துவக் கல்வி இயக்குநர்,

4. துணைச் செயலாளர், கல்வித் துறை.

இந்தக் கமிட்டி 8—2—1980-ல் கூடி கல்லூரி நிர்வாகத்தினரையும், திரு. தியாகராஜனையும் விசாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 5-00)

திரு. தியாகராஜன் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் இந்தக் கல்லூரியிலிருந்து மேல் படிப்பிற்காக விடுமுறையில் சென்றவருடைய பணியிடத்தில் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகு அந்தக் கல்லூரியில் முறையாக வேலை செய்து கொண்டிருந்தவர் போனதன் காரணமாக ஒரு வேகன்சி வந்தது. அந்தப் பணியிடத்தில் திரு. தியாகராஜன் நியமிக்கப் பட்டார். இப்போது கமிட்டியின் முன்னுள்ள அல்லது ஆசிரியர்கள் முன்னுள்ள அல்லது அரசின் முன்னுள்ள பிரச்சினையெல்லாம் மேல் படிப்பிற்காக விடுமுறையில் சென்றவருடைய பணியிடத்தில் நியமிக்கப்



பட்டவர் முதலில் சேர்ந்திருக்கிற காரணத்தால், அவருடைய பணிக்குப் பாதுகாப்பு அளிப்பதா அல்லது ஒழுங்கான வேகன்சி ஏற்பட்ட இடத்தில் பணியில் சேர்ந்திருக்கும் நபருக்குப் பணிப் பாதுகாப்பு கொடுப்பதா என்பதுதான். இந்தப் பிரச்சினை இன்றையதினம் ஒரு பொதுப் பிரச்சினையாகி இருக்கிறது. நானே ஆசிரியர்கள் சங்கத்திடம் ஒன்றைக் கேட்டுக்கொண்டேன். நீங்கள் இப்படிப்பட்ட நிலைமையில் அரசு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கருதுகிறீர்களோ அதை தீர்மான வடிவில் உங்கள் சங்கத்தின் மூலமாக நிறைவேற்றி அரசாங்கத்திற்குத் தெரிவியுங்கள் என்றேன். இப்படித் தெரிவித்தால், இது தியாகராஜன் பிரச்சினைக்கு மட்டுமல்லாமல், வேறு கல்லூரியில் இதுபோன்ற ஒரு பிரச்சினை உருவாகும்போது, இதைப் போன்ற நடவடிக்கையை மேற்கொள்ள அது உதவியாக இருக்கும் என்று சொன்னேன். ஆனால் இதுவரையில் ஆசிரியர் சங்கம் தங்கள் முடிவை தீர்மானமாகவோ, கோரிக்கையாகவோ அல்லது யோசனையாகவோ அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டு இது ஒரு பொதுப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், அந்த அடிப்படையில்தான் அந்தக் கமிட்டியே இந்தப் பிரச்சினையை அணுகுமே தவிர, தனிப் பட்டவர்களை மனதில் வைத்துக்கொண்டு அணுகாது என்ற உத்தரவாதத்தைத் தந்து, எனவே இந்தப் பிரச்சினையைப் பற்றி மேலும் விவாதிக்க அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

(2) திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி நிருவாகம் ஆசிரியர் ஒருவரைப் பணி நீக்கம் செய்தது குறித்து அனைத்துக் கல்லூரி ஆசிரியர் சங்கம் நடத்தி வரும் போராட்டத்தில் மாணவர் மீது காவல் துறையினர் நடத்திய தடியடிப் பிரயோகம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. பி. ஆர். தாமஸ், திரு. பி. ரா. வெங்கடகிருஷ்ணன் ஆகியோர், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி நிர்வாகம் ஆசிரியர் ஒருவரைப் பணி நீக்கம் செய்தது குறித்து அனைத்துக் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம்

நடத்தி வரும் போராட்டத்தில் மாணவர்கள் மீது காவல் துறையினர் நடத்திய தடியடிப் பிரயோகம் குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் நிருவாகம் திரு. சேவியர் பிச்சையா என்ற ஆசிரியரை விதிமுறைகளுக்கு முரணாக பணியிலிருந்து வெளியேற்றம் செய்தது. அதற்குக் காரணம் சென்ற ஆண்டு அதே செயின்ட் ஜோசப் கல்லூரியில் பணியாற்றி வந்த 27 ஆசிரியர்களை அக் கல்லூரி நிருவாகம் வேலை நீக்கம் செய்தபோது, இந்த ஆசிரியர்கள் சங்கத்தினர் அதை எதிர்த்து அதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். அத்தகைய நடவடிக்கைக்காகப் பழி வாங்கும் வகையில் இன்றையதினம் அக்கல்லூரி நிருவாகம் இவ் வேலை நீக்க நடவடிக்கையை மேற்கொண்டது. இதை எதிர்த்து ஆசிரியர்கள் சங்கம் போராட்டம் தொடங்கியபோது, கல்லூரி மாணவர்களும் இப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு தந்து, அவர்களும் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தார்கள் என்பதற்காக காவல் துறையினர் மிகக் கடுமையாக மாணவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தார்கள். மிகக் கடுமையான தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதன் காரணமாக 10 மாணவர்களின் நிலைமை கவலைக்கிடமளிப்பதாக இருக்கிறது என்று எனக்குத் தந்தி வந்திருக்கிறது. திருச்சிக் கல்லூரி மாணவர்களான இவர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து திருச்சிப் பகுதியிலுள்ள புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரி மாணவர்கள், அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இந்த நிலைமை திருச்சி மாவட்டத்தில் மட்டுமல்லாமல் மற்ற மாவட்டங்களுக்கும் தொடரக்கூடிய சூழ்நிலை, அபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர் வேலை நீக்கம் செய்யப்பட்டது ஒருபுறம். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது காவல் துறையினர் மேற்கொண்ட தடியடிப் பிரயோகம் ஒருபுறம் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது எவ்வாறு பொது முக்கியத்துவமும் அவசர அவசியமுமானது என்பதைப்பற்றி உறுப்பினர் சொல்ல வேண்டும். பிரச்சினையின் உள்ளே போய் அதை விவாதிப்பது கூடாது என்று நான் பல முறை இங்கே எடுத்துச் சொல்லியும் இப்படியே போனால் என்ன ஆவது ?



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அதைத்தான் சொல்லுகிறேன். தடியடிப் பிரயோகம் காரணமாக இந்தச் சூழ்நிலை மற்ற இடங்களுக்கும் பரவக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை, மாணவர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், இது குறித்து அவையில் விவாதிக்க வேண்டும் என்று கோரி, இப் பொருள் குறித்து விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சியில் இந்தச் சம்பவம் கடந்த 30-ஆம் தேதி நடைபெற்றிருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக மாணவர்கள் ஒன்றாக ஒரு இடத்தில் கூடியபோது, காவல் துறையினர் அவர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்ததன் காரணமாக இந்தப் பதட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது இதில் மிக முக்கியமான அம்சமாகும்.

அங்கே சுமார் 300 மாணவர்கள் தான் கூடினார்கள் என்று சொல்லப்படுகிறது. 300 மாணவர்களைச் சமாளிப்பது என்பது காவல் துறையினருக்கு மிகப் பெரிய காரியமல்ல. ஆனாலும் அந்த மாணவர்கள் மீது நியாயமில்லாமல் தடியடிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. காவல் துறை விதி எண் 30-படி திருச்சி நகரத்தில் 10 நாட்களுக்கு தடை உத்தரவு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையின் விதி எண் 30-படி, 10 நாட்களுக்கு நகரில் தடையுத்தரவு அமுலில் இருக்கும் என்பதே அங்கே பதட்ட நிலைமை நிலவுகிறது என்பதற்கு அத்தாட்சியாகும். ஆகவே இதுபோன்ற நிகழ்ச்சிகள் மேலும் மேலும் பல இடங்களில் தொடரக்கூடிய நிலை இல்லாமல், இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இச் சம்பவத்திற்கான காரணங்களையும் விளைவுகளையும்பற்றி விவாதித்து முடிவெடுக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பணிபுரிந்து வந்த திரு. பிச்சையா (பயிற்றுநர்) என்பவர் மீது கல்லூரி நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை

எடுத்தது. அதன் விளைவாக அவர் பணியினின்றும் நீக்கப்பட்டார். பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் அன்னாரை மீளப் பணியில் அமர்த்த வேண்டும் என்று கூறி போராட்டம் நடத்தி வருகிறது. திரு. பிச்சையா சென்னைப் பல்கலைக் கழகத்திடம் முறையீடு செய்ததன் பேரில், மேற்படி பல்கலைக் கழகம் நிபந்தனையில்லா மன்னிப்புக் கடிதம் ஒன்றை திரு. பிச்சையா தரும் பட்சத்தில் அவரை ஏதாவதொரு கல்லூரியில் பணியில் அமர்த்த உதவி செய்யக்கூடும் எனத் தெரிவித்தது. ஆனால் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் இந்த நிபந்தனைக்கு உட்படவில்லை. கல்லூரி முதல்வருடன் பேசி இப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண திருச்சி மண்டல துணை இயக்குநர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 29—1—1980 அன்று செயின்ட் ஜோசப் கல்லூரி முன்பு போராட்டம் நடத்தினார்கள். அவர்களில் 19 பேர் கல்லூரி முன்பு திரு. பிச்சையாவை மீண்டும் பணியில் அமர்த்தக் கோரி அடையாள உண்ணாவிரதம் இருந்தனர். இவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஜமால் முகம்மது கல்லூரி, நேஷனல் கல்லூரி மற்றும் உருமு தனலக்ஷ்மி கல்லூரியைச் சார்ந்த 575 மாணவர்கள் கோஷங்களை எழுப்பிக்கொண்டு செயின்ட் ஜோசப் கல்லூரிக்குள் நுழைய முயன்றனர். ஆனால் அவர்கள் கல்லூரியில் நுழையாமல் காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அவர்களைக் கலைந்து செல்லும்படி காவல் துறையினர் கேட்டுக் கொண்ட போதிலும் அவர்கள் அவ்வாறு செய்யாமல் கல்லெறிவதில் ஈடுபட்டனர். இதனால் காவல் துறை அதிகாரிகள் சிலரும், மாணவர்கள் சிலரும் சிறு காயம் அடைந்தனர். காவல் துறை எச்சரிக்கை செய்த போதிலும், மாணவர்கள் தொடர்ந்து கல்லெறிவதில் ஈடுபட்டதால், கூட்டத்தைக் கலைக்க லேசான பிரம்படி உபயோகப்படுத்தப்பட்டது. காயம் அடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி கொடுக்கப்பட்டது. சில மாணவர்கள் கைது செய்யப் பட்டனர். தற்போது நிலைமை கட்டுக்கடங்கி இருப்பதாக திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதோடு இந்தப் பிரச்சினைபற்றி கல்லூரி நிருவாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்துமாறு கல்வித் துறையின் செயலாளர் அவர்களையும் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்தப் பேச்சுவார்த்தை மூலமாக சீக்கிரமாக



ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று இந்த அரசு நம்புகிறது. எனவே இந்தப் பொருள் குறித்து மேலும் விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க வேண்டி அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி, அனுமதி மறுக்கிறேன்.

(3) இராமநாதபுரம் மாவட்டம் எஸ்.பி.கே. கல்லூரி திருவாகம் ஆசிரியர் ஒருவரை அடித்தது குறித்து அனைத்து ஆசிரியர் பேரவை உண்ணா விரதம் மேற்கொண்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பி. ஆர். லட்சுமிகாந்தன் மற்றும் க. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் இராமநாதபுரம் மாவட்டம் எஸ்.பி.கே. கல்லூரி திருவாகம் ஆசிரியர் ஒருவரை அடித்தது குறித்து அனைத்தாசிரியர் பேரவை உண்ணாவிரதம் இருப்பது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மான விதிகளின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் கல்லூரணி எஸ்.பி.கே. மேல்நிலைப் பள்ளி திருவாகம், நான் சென்ற முறை குறிப்பிட்டதைப் போலவே ஆசிரியர் ஒருவரை விதிமுறைகளுக்கு முரணாகப் பணி நீக்கம் செய்தது. அது மாத்திரமல்லாமல், ஓர் ஆசிரியரை அடித்து அவரை அடைத்து வைத்துக் கட்டாய ராஜினாமா கடிதத்தை அவரிடமிருந்து வாங்கி அவரை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. இது மட்டுமல்ல. நேற்றைக்கு எனக்கு வந்த தந்தி ஒன்றில் குடவாசல் பகுதியில் ஒரு தனியார் பள்ளியின் ஆசிரியர் தாக்கப்பட்டிருக்கிறார். அதைப் போலவே தஞ்சையில் தனியார் பள்ளி ஆசிரியர் இருவர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். வைகையாவின் அருகில் உள்ள மணக்குண்டு என்ற இடத்தில் ஒரு தனியார் பள்ளி ஆசிரியர் ஒருவர் கட்டி வைக்கப்பட்டு அடிக்கப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவதால் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை

ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இராமநாதபுரம் மாவட்டம் கல்லூரணி எஸ்.பி.கே. மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிப்பதன் மூலமாக இந்தப் பிரச்சினையில் எடுக்கப்படும் முடிவு மூலம் பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவு ஏற்படும் என்ற காரணத்தால், இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எஸ்.பி.கே. கல்லூரி நிருவாகத்தில் உள்ள குறைபாடுகள் மற்ற பிரச்சினைகள் குறித்து இதே மன்றத்தில் நான் விவாதித்திருக்கிறேன். ஆனாலும் இன்னமும் அந்தத் தவறான முறைகேடுகள் அங்கே செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பணிநீக்கம் செய்யப்பட்ட அந்தக் கல்லூரியினுடைய முதல்வரை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டுமென்று பல்கலைக் கழகம் ஆணையிட்டுவிட்டது. தமிழக அரசும் ஆணையிட்டுவிட்டது. ஆனால் பல்கலைக் கழகத்தின் ஆணையைத் துச்சமென உதறித் தள்ளிவிட்டார்கள். தமிழக அரசின் ஆணையை கல்லூரி நிர்வாகத்தினர் உதறித் தள்ளிவிட்டார்கள். இந்த நிலை நாளுக்கு நாள் நீடித்துக்கொண்டே போகிறது. அந்த கல்லூரி நிர்வாகத்தில் முறைகேடுகள் இருக்கின்றன. மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்தில் சீர்கேடுகள் நடைபெறுகின்றன. அரசுக்கே சவால் விடுவது போல நிர்வாகத்தினர் நடக்கின்றனர். இப்படிப்பட்ட நிர்வாகத்தினரை அனுமதித்தால், இந்த நிலை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகும். இது நல்லதல்ல. மேலும் மதுரைப் பல்கலைக் கழகம் தேவையான நடவடிக்கையை எடுப்போம் என்று அறிவிப்பைக் கொடுத்திருப்பதால் இதைப்பற்றி தீர்வு காண விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டையிலுள்ள எஸ்.பி.கே. கல்லூரி நிர்வாகம் அக்கல்லூரியின் முதல்வரைத் திறமையற்றவர் எனக் கருதி அன்னாரைப் பேராசிரியராகப் பதவியிறக்கம் செய்து ஆணை பிறப்பித்தது. இதுகுறித்து மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திற்கும் தெரிவிக்கப்பட்டு பல்கலைக் கழகத்தின் அனுமதி கோரப்பட்டது.



தன்னைப் பதவியிறக்கம் செய்து வழங்கப்பட்ட ஆணை குறித்து முதல்வர் திரு. பி. இராஜதுரை பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்தார். பல்கலைக் கழகம் திரு. இராஜதுரையை திரும்பவும் முதல்வராக எடுத்துக் கொள்ளுமாறு கல்லூரி நிர்வாகத்தைக் கோரியது. கல்லூரி நிர்வாகம் அதனை ஏற்கவில்லை. எனவே திரு. இராஜதுரை அரசுக்கு மேல் முறையீடு செய்தார். கல்லூரி நிர்வாகமும் பல்கலைக் கழகக் கோரிக்கையை எதிர்த்து அரசுக்கு மேல் முறையீடு செய்தது. அரசு இந்த இரு மேல் முறையீடுகளையும் பரிசீலித்து, திரு. இராஜதுரை, முதல்வர் பதவியிலிருந்து பேராசிரியராகப் பதவியிறக்கம் செய்யப்படுமுன், தமிழ்நாடு தனியார் கல்லூரிகளில் ஒழுங்காற்றுச் சட்டத்தின் விதிமுறைகளில் உள்ள சரியான வழிமுறைகள் பின்பற்றப்படவில்லையாதலால், அவ்விதி முறைகளைப் பின்பற்றுவதற்காக முழு வழக்கையும் கல்லூரி நிர்வாகத்திற்குத் திருப்பி அனுப்பியும், சட்டப்படி இந்த வழக்கு முடிவடையும்வரை திரு. இராஜதுரை கல்லூரியின் முதல்வராக மீண்டும் பணியிலமர்த்தப்படவும் ஆணையிட்டது.

இந்த அரசு ஆணையை எதிர்த்து கல்லூரி நிர்வாகம் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைச் சமர்ப்பித்து இடைக்காலத் தடையும் வாங்கியது. உயர்நீதி மன்றம் 11—1—1980 நாளிட்ட தனது தீர்ப்பில் திரு. இராஜதுரை முதல்வராக மீண்டும் பணியமர்த்தப்பட வேண்டும் என்ற அரசாணையை ரத்து செய்தும், இந்த முழு விவரங்களையும் ஆராய்ந்து மீண்டும் ஒரு முடிவு எடுக்க அரசுக்குத் திருப்பி அனுப்பியும், அவ்வாறு ஆராயும்போது முதல்வர் திரு. இராஜதுரைக்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும் போதுமான வாய்ப்புகள் கொடுக்கவும் உத்தரவிட்டது.

முதல்வர் பதவியிலிருந்து பேராசிரியராகப் பதவியிறக்கம் செய்ய சட்டப்படி செல்லத்தக்க உத்தரவு எதுவும் தற்போது இல்லாததினால், முறையான உத்தரவு வரும்வரை திரு. இராஜதுரை முதல்வராகப் பணிபுரிய எவ்விதத் தடையும் இல்லை எனவும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இது குறித்து ஒரு சமரசத் தீர்வு காண கல்லூரிக் கல்வி இயக்குநர் 26—1—1980 அன்று மதுரையில் எஸ்.பி.கே. கல்லூரியைச் சார்ந்த ஆசிரியர்கள், நிர்வாகத்தினர், திரு. இராஜதுரை மற்றும் மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். இதன் விளைவாக கல்லூரி இப்போது திறக்கப்பட்டு நடந்து வருகிறது.

மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகக் கண்காணிப்பாளர் ஒருவர் எஸ்.பி.கே. கல்லூரியில் இருந்து நிலைமையைக் கவனித்து வருகிறார். திரு. இராஜதுரை இன்னமும் பணியில் அமர்த்தப்படவில்லையெனத் தெரிகிறது.

எஸ்.பி.கே. கல்லூரி ஆசிரியர்களிடையே மதுரை-காமராஜ் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், சேராதவர்கள் என இரு பிரிவுகள் உள்ளதாகத் தெரிகிறது. மேற்படி கல்லூரியில் ஆசிரியர் எவரும் நிர்வாகத்தால் அடிக்கப்பட்டதாகத் தகவல் எதுவும் இல்லை. இது குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று மண்டல துணை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்தப் பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்து முடியுமென்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே இது குறித்து இந்தச் சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்துப் பேசத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லையென்று கருதி அனுமதி மறுக்கிறேன்.

### 4. தகவல் கோரல்.

### ஓர் உறுப்பினருடைய உந்துவைத் திருட முயற்சி குறித்து.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, may I mention a matter ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சொல்லுங்கள்.

THIRU G. VASANTHA PAI : Sir, yesterday at 5 p.m. when I was going out of the House, I found that there had been an attempt to burgle my car and the monogram from behind my car—Standard—had been removed. I have given a complaint to the Secretary as well as the Assistant Secretary. Today I have given it in writing.



We, members, come and park our cars and when we are here, we should have peace of mind that our cars will be looked after. I request the Hon. Minister, through you, Mr. Chairman, to see that adequate protection is given to our cars, especially the owner-driven cars. The cars of those members who have their drivers will be naturally looked after by them. When we park our cars here, they should be looked after in a proper fashion.

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. வசந்த பை அவர்கள் நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி என்னிடமும் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தகவல் காவல் துறைக்கு முறையாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கார்களை அவைக்குப் பக்கத்திலே நிறுத்தினாலும் சரி அல்லது வேறு சோலையில் நிறுத்தினாலும் சரி அவற்றை முறையாகப் பாதுகாக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இப்பொழுது நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். மேலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாது என்ற உறுதியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அது தொடர்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய காருக்குச் செல்கிற நேரத்தில் சந்தேகத்திற்குரிய நபர்கள் இருந்தார்கள் என்றால், அவர்களை அடையாளம் காட்ட முடியும் என்று எனக்குத் தெரிவிப்பார்களேயானால், அவர்களைக் கண்டுபிடித்து தண்டனை கொடுக்க வாய்ப்பாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

### 5. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே நான் காரசாரமாகப் பேசுவது வழக்கமில்லை என்பதைத் தாங்களும் அறிவீர்கள். இன்றைக்கும். . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** காரமாகப் பேசுவது வழக்கமில்லாமல் இருக்கலாம்; ஆனால் சாரமாகப் பேச வேண்டும்.

**திரு. த. சந்தோஷம் :** காரமாகப் பேசாமல், அதே சமயத்தில் சாரமாக இந்த அரசின் மீது ஒரு சில குற்றச்சாட்டுகளைச் சொல்ல விரும்புகிறேன். அப்படிச் சொல்லும்போது, நான் எதிர் அணியின் விரோதத்தின் அடிப்படையிலே, உள்நோக்கத்தோடு சொல்லுகிறேன் என்று கருதாமல் “Constructive Criticism” ஆக எடுத்துக்கொண்டு, அரசு தன்னைத்

நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்த அரசு மட்டுமல்லாமல், பின்னால் வரும் அரசுகளும் இந்தக் கருத்தைக் கொண்டு நல்ல நிலையில் நடக்கும் என்ற எண்ணத்தில் இந்தக் குற்றச்சாட்டுகளைச் சொல்ல விரும்புகிறேன்.

சமீபத்தில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலைப்பற்றி இங்கிலாந்து நாட்டில் புகழ்பெற்ற "மான்செஸ்டர் கார்டியன்" என்ற பத்திரிகையில் விமர்சனம் வந்தது. அதிலே, "Governments lose elections; Opposition parties rarely win them.' " என்று முக்கியமாக மத்திய அரசைக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள். "இந்தத் தேர்தலின் விளைவு அரசாங்கம் செய்த தவறினால் ஏற்பட்ட தோல்வியாலே ஒழிய எதிர்க்கட்சி செய்த சாதனையால் அல்ல" என்று எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசைப்பற்றி எழுதியிருந்தாலுங்கூட, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும் கூட, இந்த ஒரு கருத்து மிகவும் பொருத்தமென்று நினைக்கிறேன். சென்ற இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு மக்களின் ஆதரவையும், நம்பிக்கையையும் பெருவாரியாகப் பெற்றிருந்த அரசு இரண்டரை ஆண்டுக் காலத்திற்குள் இவ்வளவு சீக்கிரத்தில் மக்களின் நம்பிக்கையை இழந்து, ஆதரவை இழந்து நிற்கிறது. அதற்கு இந்த அரசு செய்த தவறுகள்தான் காரணம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பாராளுமன்றத்தின் தாய் (Mother of Parliaments) எனப் போற்றப்படும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 18-வது நூற்றாண்டில் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அங்கே இருந்தவர்கள் "எக்லிசியாஸ்டிகல்ஸ்" என்றும் "பிரஸ்பிட்டேரியன்" என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தார்கள். அவர்களுக்குள்ளே அடிக்கடி சண்டை ஏற்பட்டது. உள்நாட்டுக் குழப்பம், கலகம் ஏற்பட்டது. அந்த அரசாங்கம் அந்தக் கலகத்தை அடக்க போதிய நடவடிக்கை எடுக்காததால், அங்கு மைனாரிட்டியாக இருந்த "பிரஸ்பிட்டேரியன்கள்" மிகவும் கொடுமைக்குள்ளானார்கள். அப்போது அவர்கள் சார்பாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. கிராம்வெல்,



"The basic and primary duty of the Government is to govern. Govern or get out."

என்று சொன்னார். அந்த அவையிலே மிகவும் கடுமையாக அவர் பேசினார். ஐம்பது வருடங்களுக்கு முன்பாக நடந்த இதை நான் வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் படித்திருக்கிறேன். அவர் சொன்னதில் ஒன்றை மாத்திரம் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

"The basic and primary duty of the Government is to govern". என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். நூறாண்டு முழுவதும், மாநிலம் முழுவதும் நடத்தினார்கள். நானும் அதில்

(பிற்பகல் 5.20)

பங்கு கொண்டேன். அற்புதமான கவிஞரை நியமித்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். நாடக நடிகைகளுக்கும், புலவர்களுக்கும் இதர கலைஞர்களுக்கும் நல்ல உதவித் தொகையைக் கொடுக்க வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் நாம் பாராட்ட வேண்டியதுதான். மதுரைப் பல்கலைக் கழகத்தின் பெயரை மாற்றினார்கள். அது வேண்டாத ஒன்று. மேலும் அதை மாற்றியது தன் பொறுப்பாகத்தான் என்று அன்றுள்ள துணைவேந்தர் சொல்லி வருகிறார். அவர் பெயரும் காமராசர்தான். அதற்கு விருதுநகர் காமராசர் பெயரை வைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் குழப்பத்தில்தான் இருக்கிறது. கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். ஈரோட்டைத் தலைநகராக ஆக்கி அதற்குப் பெரியார் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல நல்ல காரியங்களையெல்லாம் செய்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் ஒரு நல்ல ஆட்சி செய்ய வேண்டிய காரியம் தான். நாங்கள் நல்ல ஆட்சி செய்துவிட்டோம் என்று சொல்வது பொருந்தாது. நல்ல ஆட்சி என்பதைப்பற்றி பொது மக்கள் எப்படி நினைக்கிறார்கள்? சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். பொதுமக்கள் அமைதியாக நிம்மதியாக வாழ்க்கை நடத்த வழி ஏற்படுத்தித் தரவேண்டும். நாட்டின் எழுத்தர் ஒரு தகப்பனார் ஒரு சிறந்த முறையிலே, ஒரு நம்பிக்கையோடு வேலைக்குச் செல்வதற்கு வாய்ப்பிருக்க வேண்டும். அங்கே எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் அவர்கள் வேலை செய்வதற்கு வசதிகள் செய்து தர வேண்டும். மாலை வேலை முடிந்து திரும்புவதற்கு வாகன வசதிகள்

இருக்க வேண்டும். குழந்தைகள் பள்ளிகளுக்குச் சென்று பிறகு ஒழுங்காகத் திரும்புவதற்கு, அச்சம் இல்லாமல் இருப்பதற்கு வழி வகுக்க வேண்டும். இதையெல்லாம்தான் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். இதையெல்லாம் சரிவரச் செய்து கொடுத்தால்தான், நல்ல ஆட்சி நடைபெறுகிறது என்று அவர்கள் கருதுவார்கள். இந்த அளவுகோலை வைத்து இந்த 2½ ஆண்டுக் காலம் இந்த அரசாங்கம் நடந்து வந்ததா என்று பரிசீலனை செய்தால், சுருக்கமாகச் சொன்னால் குழப்பங்களும், ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் இல்லாத நாட்களே இருந்ததில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதிலும் போராட்டங்களும், கிளர்ச்சிகளும், உண்ணாவிரதங்களும் மேற்கொள்ளப்படாத நாட்களே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். வேலை நிறுத்தங்கள் எத்தனை நாட்கள் நடந்தன? போக்குவரத்துக் கழகங்களில் வேலை நிறுத்தங்கள் நடந்தன. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் நடந்தது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் நடந்தது. இப்படிப்பட்ட வேலை நிறுத்தங்கள் நடந்தபோது, எவ்வளவு பேர்கள் அலுவலகங்களுக்குப் போவது தடைப்பட்டது? எவ்வளவு பேர்கள் கல்லூரிகளுக்குப் போவது தடைப்பட்டது? எவ்வளவு பேர்களுக்கு நிச்சயதாம்பூலங்களுக்குப் போவது தடைப்பட்டது? மக்கள் இதனால் எவ்வளவு அவதிப்பட்டிருக்கிறார்கள்? எத்தனையோ காரியங்கள் தடைப்பட்டன. ஆசிரியர்கள்கூட பல இடங்களில் போராட்டம் நடத்தியிருப்பதாகத் தெரிகிறது. கவர்ன்மெண்ட் எம்ப்ளாயீஸ் வேலை நிறுத்தம் வந்தது. எல்லாவிதமான அரசு அலுவலர்களும் வேலைநிறுத்தம் செய்தார்கள். இறுதியாக போலீசாரும் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஏன், சொல்லப்போனால் வழக்கறிஞர்களாகிய நாங்கள்கூட வேலை நிறுத்தம் செய்து போராட்டம் நடத்தும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் எளிதில் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். சிறிய காரணங்கள்தான். அதைத் தடைப்படுத்தியிருக்கலாம். சில கோரிக்கைகளைத்தான் வைத்தார்கள். அவையும் மறுக்கப்பட்டு விட்டன. அந்தக் கோரிக்கைகளுக்கு தகுந்த காலத்திலே ஒரு உறுதியான நிலையிலே தீர்வு கண்டிருக்க வேண்டும். அவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் போராட்டம் நடத்துகிறார்கள். நீதிபதி விசாரணை வேண்டும் என்று கேட்டார்கள். ஒரு ஆணை ஆய்வாளர் காவல் நிலையத்தில் வழக்கறிஞரை அடித்துவிட்டார் என்பதற்காக நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டார்கள். அந்தத் ஆணை ஆய்வாளரை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இறுதியாக நிறைய காலம் கழித்து நீதிபதி விசாரணை போட்டார்கள். கடைசியாக 4, 5 நாட்களுக்குப் பிறகு ஆய்வாளரை மாற்றினார்கள். ஆரம்பத்தி





லேயே இதைச் செய்திருக்கலாம். ஆரம்பத்திலேயே இதைச் சொல்லிவிட்டிருந்தால், வழக்கறிஞர்களும் ஏற்றுக் கொண்டிருப்பார்கள். இத்தனை கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டிருக்காது. என்னுடைய கட்சிக்காரர் ஒருவர், படித்த இளைஞர் ஒருவர் பாதிக்கப்பட்டிருக்கிறார். அவர் இந்தப் போராட்டத்தினால் ஒரு மாதம் சிறையில் இருக்க வேண்டி நேர்ந்தது. அவருக்குத் தண்டனை வழங்கிவிட்டார்கள். நாங்கள் வெளியே இருந்ததால், ஜாமீன் மனு கொடுக்க முடியவில்லை. நாங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால், யாருக்கும் ஜாமீன் மனு போடக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அதனால் அவருக்காக ஜாமீன் மனு போடவில்லை. அவர் ஒரு மாதம் சிறையில் தண்டனை அனுபவித்தார். இப்படிப்பட்ட ஒரு கஷ்டமான சூழ்நிலை உருவாகியது. அது தகுந்த நேரத்திலே உறுதிப்படுத்தப்பட்டு, நீதிபதி விசாரணை என்று ஏன் ஆரம்பத்திலேயே போட்டிருக்கக்கூடாது? பிறகு மதுரையிலேயிருந்து அந்தக் ஆணை ஆய்வாளரை கமுதிக்கு மாற்றினார்கள். அதை ஏன் ஆரம்பத்திலேயே செய்திருக்கக்கூடாது? அரசாங்கம் குறித்த காலத்திலே, தகுந்த காலத்திலே முன்னேற்பாடாக நடவடிக்கை எடுத்திருந்தால், இந்தப் போராட்டத்தைத் தடுத்திருக்கலாம். அப்படி தடைப்படுத்தவில்லை. இந்தப் போராட்டத்தில் பலருக்கும் கஷ்டம் ஏற்பட்ட பிறகுதான், அரசு தலையிட்டு அவசர அவசரமாக அந்தக் கோரிக்கைகள் நியாயமானவையா இல்லையா என்பதைக்கூட கருதாமல் பின்னர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இதனால் பொதுமக்கள் இந்த அரசாங்கத்தின்மீது பெரிதும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்கத்தின் முதல் தவறு சரியான நேரத்திலே சரியான முடிவுகளை எடுத்து உறுதியான, வலுவான காரியத்தை நடத்தாதது. அதனால் பல்வேறு போராட்டங்கள் ஏற்பட்டு மக்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது இந்த அரசு செய்த முதல் தவறு என்று கருதுகிறேன். இரண்டாவதாக, பொது மக்கள் ஒரு நல்ல ஆட்சி என்று எதைக் கருதுகிறார்கள்? இந்த அரசாங்கம் பொருளாதார மாற்றத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும். உதாரணமாக வாலிபர்களுக்கு அவர்கள் படித்து முடித்தவுடனே, வயதுவந்தவுடனே வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். அவர்களுக்கு உணவு, உடை போன்ற அத்தியாவசியமான பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். இதற்கு ஏற்பாடுகளைச் செய்வதை அரசாங்கம் தன்னுடைய அடிப்படைக் கடமையாகக் கருதியிருக்க வேண்டும். அதற்கு ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும். இதை எப்படிச் செய்ய வேண்டும்? நிச்சயமாக ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்று சொல்ல முடியும். அதை தொழில் அபிவிருத்தியின் மூலம்தான் தீர்க்க முடியும். ஆனால் இந்த 2½

ஆண்டுக் கால ஆட்சியைப் பரிசீலனை செய்து பார்த்தால், நிச்சயமாக நம்முடைய தமிழ் நாட்டிலே தொழில் முன்னேற்றமில்லை. பெரும்பாலும் இருந்த தொழில்களும்கூட ஓரளவுக்கு மூடப்பட்டிருக்கின்றனவே தவிர, வேலை வாய்ப்பு அதிகமாக அளிக்கக்கூடிய தொழில்கள் தமிழ் நாட்டில் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் தொழில் அமைச்சர் என்று தனியாக ஒருவர் நியமிக்கப்படாமல், முதலமைச்சர் அவர்களே இந்தத் தொழில் துறையையும் தன்னுடைய கையில் வைத்துக்கொண்டிருந்தது. நாம் கடவுளைக் கூடப் பார்த்து விடலாம் போலிருக்கிறது. முதலமைச்சரைப் பார்ப்பது அரிதாக இருக்கிறது. அது மிகவும் உண்மை. அதற்கு நான் உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் பெயர் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டாம் என்று விதியிருக்கிறது. வட இந்தியாவிலிருந்து ஒரு பெரிய தொழிலதிபர் தமிழ் நாட்டிலே 33 தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சென்னைக்கு வந்திருக்கிறார்கள். பல நாட்களாக காத்திருந்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து இதுபற்றி பேசி எப்படியாவது அனுமதி பெற்றுவிட வேண்டுமென்று முயற்சி செய்திருக்கிறார். ஒரு வாரமாகியும் கூட, அவரால் முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க முடியவில்லை. இந்த நிலைமையில் கர்நாடக முதலமைச்சர் திரு. அர்ஸ் அவர்கள், இதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். அவர் தொலைபேசி மூலமாக அவரை தன்னுடைய விருந்துக்கு அழைத்து, அவரது விருந்து மேஜையிலேயே உரையாற்றி அவருக்கு 200 ஏக்கர் நிலத்தையும் அர்சன் செய்து கொடுத்து, இன்னும் மானியங்கள் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே அமைக்கப்பட இருந்த தொழிலை கர்நாடக மாநிலத்திலே ஆரம்பிக்க இப்போது ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இது மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே மதுரா கோட்ஸ், பென்னர் இந்தியா போன்ற நிறுவனங்கள் ஏற்பட்டிருக்க வேண்டியவை. அவைகள் கர்நாடகத்திலும், ஆந்திர மாநிலத்திலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 5.30)

இப்படிப் பார்க்கப் போனால், நம்முடைய தமிழ் நாட்டுக்கு எவ்வளவோ நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வட நாட்டுத் தொழிலதிபர்கள் என்று சொன்னேனே, அவர்கள் ஆரம்பித்திருக்கிற தொழிற்சாலைகளின் மூலதனம் 50 கோடி ரூபாய். அந்தத் தொழிற்சாலைகளில் முழு உற்பத்தி ஏற்பட்ட பிறகு, அங்கே 10 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்குமென்று எதிர்பார்க்கி



றார்கள். 10 ஆயிரம் பேர்களுக்கு தமிழகத்தில் வேலை வாய்ப்பு கிடைப்பதை நாம் பறி கொடுத்துவிட்டோம். 50 கோடி ரூபாய் தமிழகத்தில் மூலதனம் செய்யப்படுவதை நாம் இழந்துவிட்டோமென்ற நிலைமை வருந்தத்தக்க நிலைமையாகும். இதைக் கண்டு பொது மக்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள். இந்த இரண்டும் அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையாகும். ஆனால் செய்யத் தவறிவிட்டது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் பொது மக்கள்தான். இதனால் அவர்கள் அதிருப்தி அடைகிறார்கள். இதை அரசாங்கம் உணர்ந்து, எதிர்காலத்தில் போராட்டங்கள், கிளர்ச்சிகள் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே தலையிட்டு, அவைகளைத் தவிர்க்கும் வழி வகைகளைச் செய்துவிட வேண்டும். வலுவான, உறுதியான அரசாங்கம் ஆட்சி நடத்த வேண்டும். போராட்டம் நடந்த பிறகு, அதற்குப் பணிந்து கொடுப்பது, வளைந்து கொடுப்பது என்ற முறையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செய்ய வேண்டாத, செய்ய முடியாத, செய்யத் தகாத காரியத்தை அரசாங்கம் செய்து, தோல்வியுற்றிருக்கிறது என்று இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதுதான் மதுவிலக்குத் திட்டம். மது விலக்குத் திட்டம் எத்தனையோ நாடுகளில் அமல் செய்யப்பட்டு அது தோல்வியுற்றிருக்கிறது என்று அறிந்திருந்தும் இந்த அரசாங்கம் ஏதோ மற்றவர்கள் யாரும் செய்ய முடியாததை தாங்கள் செய்துவிடுவோமென்ற தவறான எண்ணத்தில் இறங்கி, அதனால் அடைந்துள்ள நஷ்டம், கஷ்டம் அளவிட முடியாது. ஒரு வருடத்தில் மது விலக்கின் மூலம் இழந்துள்ள வருமானம் சுமார் 200 கோடி ரூபாய் என்று மதிப்பிடுகிறார்கள். இப்படி $2\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில் சுமார் 500 கோடி ரூபாயை இழந்திருக்கிறோம். 500 கோடி ரூபாய் இருந்திருந்தால், எத்தனையோ தொழிற்சாலைகளை அமைத்திருக்கலாம். மக்களுக்குச் சிறப்பான சேவையைச் செய்திருக்கலாம். இதனால் மக்கள் வேறு கஷ்டப்பட்டிருக்கிறார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். It is not the duty of a Government to make saints and Sanyasis of its people. நிச்சயமாக மக்களை பரிசுத்தவான்களாகவும், சாமியார்களாகவும் ஆக்குவது அரசாங்

கத்தின் கடமையல்ல. அதற்கு சமயவாதிகள் இருக்கிறார்கள். அவர்கள் அதைப் பார்த்துக்கொண்டு போகிறார்கள். மக்கள் அனைவரையும் நல்லவர்களாக்கி விடலாமென்று ஆரம்பித்து, நமக்குக் கிடைத்ததெல்லாம் கடைசியில் கொலைகள், கொள்ளைகள், திருட்டுக்கள், பொதுவாகச் சட்ட மீறல்கள் அதிகமாகி இருப்பது என்பதுதான். முதலாவதாக மது விலக்குச் சட்டத்தை மீறுகிறார்கள். அதன் காரணமாக ஏற்படும் துணிச்சலுடன் மற்ற குற்றங்களைச் செய்கிறார்கள். அதுதான் அமெரிக்காவில் கண்ட அனுபவம். அமெரிக்காவில் மதுவிலக்கு இருந்தபோதுதான் 'கேங்ஸ்டரிசம்' அதிகமாகியது. மதுவிலக்குதான் 'பூட்-லெக்கர்ஸ்' என்ற வர்க்கத்தை உருவாக்குகிறது. சட்டம், ஒழுங்கு அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று உணர்ந்து, மது விலக்குச் சட்டத்தை அமெரிக்கா ரத்து செய்தது. இப்போது அதை இந்த அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அப்படி உணர்ந்தாலும், மது விலக்கை முற்றிலும் எடுத்து விடாமல், ஏதோ தளர்த்தியிருக்கிறோமென்று ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். மது விலக்கைத் தளர்த்தல்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். காலஞ்சென்ற தேச பக்தர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் ஒரு சமயம் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. "Having the virtues of none but possessing the vices of both" என்று சொன்னார்கள். தளர்த்தியிருக்கும் நிலை இருக்கிறதே, அது அரைகுறை ரத்து செய்தல் என்பதுதான். பூரணமாகவும் ரத்து செய்யவில்லை, பூரணமாகவும் அமல் நடத்தவில்லை. இரண்டுக்கும் மத்தியில் செய்கிறார்கள். பூரண மது விலக்கால் ஒருசில குடும்பங்களுக்கு நன்மை கிடைக்குமென்றால், இதனால் அது கூடக் கிடைக்காது. 25 ரூபாய் கொடுத்து பெர்மிட் வாங்கிக்கொண்டு, குடிக்காமல் இருந்தவன்கூட குடிக்கத்தான் போகிறான். பூரணமாக ரத்து செய்துவிட்டால், 200 கோடி ரூபாய் கிடைக்கும். ஆனால் தளர்த்தியதன் காரணமாக 25 கோடி ரூபாய்தான் வரும். எனவே மதுவிலக்கால் ஏற்படும் நன்மையும் வரவில்லை. மது விலக்கை ரத்து செய்வதால் ஏற்படும் பலனும் கிடைக்கவில்லை. ஆனால் இரண்டாலும் ஏற்படும் தீமைகள்தான் வரும். எனவே இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மது விலக்கைத் தளர்த்தினால் மட்டும் போதாது. மது விலக்கை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும். அரைகுறை நடவடிக்கையால் எந்தக் காரியத்திலும் வெற்றி பெற முடியாது. உறுதியான மனதுடன் இவற்றை நிறைவேற்ற வேண்டும். அந்த முறையில் மது விலக்கில் தீவிரமான முடிவை எடுத்து, அதைப் பரிபூரணமாக ரத்து செய்ய வேண்டும். பக்கத்தில் உள்ள பெங்களூருக்குப் போனால் ஒவ்வொரு தெருவிலும் 5 அல்லது 6 கடைகள்—பீர், பிராந்தி, ரெஸ்டாரண்ட்—இருக்கின்றன. அதனால் அங்கு இருக்கிறவர்கள் பண்பாட்டில் குறைந்தவர்களா? அல்லது நாம் என்ன





பரிசுத்தவான்களா? மது விலக்கு அமுலில் இருந்த காலத்தில் புள்ளி விவரத்தைப் பார்க்க வேண்டும். கிரிமினல் துறையில் அனுபவம் உள்ளவன் என்ற முறையில் சொல்கிறேன், கொலைகள், கொள்ளைகள், திருட்டுக்கள் தான் ஜாஸ்தியாகி இருக்கின்றன. இந்த நிலையிலே நாம் இன்னமும் மறைமுகமாகப் பற்று வைத்துக்கொண்டிருப்பது . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் கிரிமினல் துறையில் எந்த முறையில் அனுபவம் உள்ளவர்கள்?

**திரு. த. சந்தோஷம் :** கிரிமினல் துறையில் பலவிதமான அனுபவங்கள் இருக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வழக்கறிஞர் என்ற முறையில் அனுபவம் இருக்கிறது.

**திரு. த. சந்தோஷம் :** கிரிமினல் துறையில் இரண்டு, மூன்று முறையில் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எந்தெந்த முறையில் என்று சொல்ல வேண்டிய தேவையில்லை.

அடுத்தபடியாக, ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறோம். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு, குறிப்பாக ஆசிரியர்கள், பட்டதாரிகள் மத்தியிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு அடிப்படையான, போதுமான திட்டங்கள் யாதும் ஆளுநர் உரையில் இல்லை என்பதற்காக வருந்துகிறோம் என்ற திருத்தத்தைக் கொடுத்திருக்கிறோம். அது அநேகமாக நிறைவேறுமென்று நினைக்கிறேன். அதுபற்றி எனது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு. பா. ரா. தாமஸ் அவர்களும் திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் பேசுவார்கள். நான் அதிலே ஒரு குறிப்பிட்ட அம்சம் பற்றிப் பேச விரும்புகிறேன். சட்டப் படிப்பு படித்து பட்டம் பெற்றிருக்கிறார்களே, அவர்கள் மத்தியில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிப் பேச விரும்புகிறேன். நான் சட்டக் கல்லூரியிலே மாணவனாக இருந்தபோது 'காம்போசிட் மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருந்தது. தமிழகம் மாத்திரமல்ல, ஆந்திரத்தில் பெரும் பகுதி, கன்னடத்தில் ஒரு பகுதி, கேரளத்தில் ஒரு பகுதி என்று சேர்ந்து இருந்தது. இந்தப் பகுதிகள் அனைத்துக்கும் சேர்த்து, சென்னையிலே ஒரேயொரு சட்டக் கல்லூரிதான் இருந்தது. இப்போது ஆந்திரம் கிடையாது, கன்னடத்தில் இருந்த பகுதி கிடையாது, மலபார் பகுதியும் கிடையாது. ஆனால் ஒரு கல்லூரியாக இருந்ததை 6 சட்டக்

கல்லூரிகளாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். சென்னை, பாண்டிச்சேரி, அண்ணாமலை நகர், மதுரை, திருச்சி, கோவை ஆகிய 6 இடங்களில் சட்டக் கல்லூரிகளை அமைத்திருக்கிறார்கள். இதன்மூலம் ஓராண்டுக்குக் குறைந்த பட்சம் ஆயிரம் பேர்கள் பி.எல். பட்டத்தோடு வெளியே வருகிறார்கள். இப்படிக் கல்லூரிகளை அதிகப்படுத்துகின்ற நேரத்திலே, அந்தக் கல்லூரிகளிலிருந்து வெளியே வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படவில்லை. அதனுடைய விளைவு என்னாகிறது என்பதைப் பார்க்க வேண்டும். மாணவர்கள் சட்டக் கல்லூரிகளில் சேர்ந்த பிறகு, தங்களுடைய எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறார்கள். அநேகமாக வேலை வாய்ப்புக்கு வழியில்லை என்றும், வக்கீல் தொழிலிலும் வருமானம் இல்லை என்பதைக் காண்கிறார்கள். ஏதோ 4, 5 பேர்கள்தான் இந்தத் தொழிலில் சம்பாதிக்கிறார்கள். இந்த நிலைமையில் படித்து என்ன செய்வது என்று எண்ணுவதால், சட்டக் கல்லூரியில் ஒழுங்கீனங்கள் ஏற்படுவது என்பது சாதாரணமான நிலைமைதான். அங்கே போனால் எல்லாவிதமான ஒழுங்கீனங்களும் காணப்படுகின்றன. சட்டக் கல்லூரிக்குள்ளே கஞ்சாகூட நுழைந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அங்கே எல்லாவிதமான தீர்பழக்கங்களும் இருக்கின்றன. அவர்கள் தங்களின் எதிர்காலத்தில் அவநம்பிக்கை கொண்டு, தாங்கள் இனிமேல் வேலையில்லாமல் காலத்தைக் கழிக்க வேண்டியவர்கள்தானே என்ற 'சென்ஸ் ஆஃப் ப்ரஸ்டிரேஷன்' காரணமாக அப்படி நடக்கிறார்கள். 1978-79 ஆம் ஆண்டில் மதுரை சட்டக் கல்லூரியிலே மொத்தம் கல்லூரி நடைபெற்ற நாட்கள் 40 தான் குறைந்தது 150 நாட்களாவது நடைபெற்றிருக்க வேண்டும்.

(பிற்பகல் 5.40.)

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் சட்டக் கல்லூரியில் கஞ்சா எல்லாம் புழங்குகிறது என்று குறிப்பிட்டார். அவைக் குறைப்பிலிருந்து அந்த வார்த்தையை நீக்குவது பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் மாணவர்கள் மத்தியில் அது ஒரு பிரச்சினையாக ஆகிவிடும்,





சட்டக் கல்லூரியில் கஞ்சா என்ற வார்த்தையை நீக்குவதன் மூலம் உறுப்பினருக்குகூட இது பாதுகாப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** It is not an unparliamentary word. அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியதில்லை. அவர் சொல்லிய கருத்து அவைக் குறிப்பில் இருக்கலாம். இன்னொரு உறுப்பினர் வேறொரு கருத்தைச் சொன்னால், அதுவும் அவைக் குறிப்பில் இருக்கலாம்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** உறுப்பினர் பேசும்போது, பொதுவாக கல்லூரிகளில் என்று சொன்னால், நலமாக இருக்கும். குறிப்பாக சட்டக் கல்லூரி என்று குறிப்பிடுவது அவ்வளவு நல்லதல்ல.

**புலவர் புலமைப்பித்தன் :** சிறைக் 'கஞ்சா' வீரர்கள் அங்கே இருக்கிறார்கள் என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறைமுகமாகக் குறிப்பிட்டார்களோ என்னவோ. (சிரிப்பு)

**திரு. த. சந்தோஷம் :** எந்த அளவுக்கு ஒழுக்கம் அங்கே கையாளப்படுகிறது என்பதைத்தான் நான் சொன்னேன். அங்குள்ள extreme நிலைமையைப் பற்றி நான் குறிப்பிட்டேன். பல தவறுகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு உறுப்பினர் அப்படி குறிப்பிட்டதற்காக நான் வருந்துகிறேன். மருத்துவக் கல்லூரியிலும் கூட அப்படி இருக்கிறது. சட்டக் கல்லூரியை மட்டும் ஏன் குறிப்பிடுகிறார்கள் என்பதுதான் எனக்கிருக்கிற வருத்தமெல்லாம். பொதுவாக 'கல்லூரி' என்று சொல்லலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினருக்கு சட்டக் கல்லூரியைப்பற்றி மட்டும்தான் தெரியும். இதர உறுப்பினர்களுக்கு மற்ற கல்லூரிகளைப்பற்றித் தெரியும். அவருக்குத் தெரிந்ததை அவர் சொல்லுகிறார். உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்ததை அவர்கள் சொல்லலாம்.

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கூட அதைத்தான் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். தாங்களே தீர்ப்பளித்து விட்டீர்கள். தாங்கள் குறிப்பிட்டது மாதிரி, எனக்குத் தெரிந்ததைத்தான் நான் சொல்ல முடியும். எவ்வளவு தூரம் அங்கே ஒழுங்கின்மை நிலவுகிறது என்பதை நான் குறிப்பிட்டேன். மதுரை சட்டக் கல்லூரி 40 நாட்கள்தான் நடந்திருக்கிறது. சென்னை சட்டக் கல்லூரி அதைவிட மோசம்.

30 நாட்கள்தான் நடந்திருக்கிறது. இந்த நிலையில் நிச்சயமாக சட்டக் கல்லூரிகள் மூலம் படித்து பட்டம் பெற்று வருகின்றவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று நான் அரசை வற்புறுத்த விரும்புகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் அரசுக்கு இதுபற்றி சில ஆலோசனைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பிட்ட சில வேலைகள் இருக்கின்றன. அவர்களுக்குள்ள வேலை என்னவென்றால், இரண்டு தரப்பினரையும் கேட்டு, இரண்டு தரப்பினருடைய சாட்சிகளையும் கேட்டு, அதனை அலசி ஆராய்ந்து தீர்ப்புக்கூற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். தாசில்தார Deputy Registrar of Co-operative Societies, R.D.O., Labour Conciliation Officers. போன்ற அதிகாரிகள் இரண்டு தரப்பு சாட்சிகளையும் கேட்டு, அதனை அலசி ஆராய்ந்து அதற்குப் பிறகு ஒரு முடிவெடுத்து தீர்ப்புக் கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள். Quasi-judicial functions. என்று அப்படிப்பட்டவர்களைச் சொல்லலாம். நீதிபதி செய்ய வேண்டிய, அதை ஒத்த வேலையை அவர்கள் செய்கிறார்கள். அப்படிப்பட்ட வேலைகளை சட்டப் படிப்பு படித்து வருகின்றவர்களிடம் ஒப்படைத்தால், அல்லது அவர்களுக்கு ஒதுக்கிடு செய்தால், ஓரளவுக்கு அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். அது ஒரு நல்ல நிலைமையை நிச்சயம் உருவாக்கும். இந்த ஆலோசனையை முன்பொரு முறை கூட நான் இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். அரசு அதை ஆராய்ந்ததா என்று தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கிட்டத்தட்ட அரை மணி நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 6 உறுப்பினர்கள் இன்னும் பேச வேண்டியிருக்கிறது. கூடுமானவரை சுருக்கமாகப் பேசி விரைவில் முடிக்க வேண்டும்.

**திரு. த. சந்தோஷம் :** இரண்டாவதாக வேறொரு யோசனையையும் அரசுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். Sub-Registrar Office, District Registrar Office போன்ற அலுவலகங்களில் பத்திரங்கள் பதிய வருகின்றன. நூறு ரூபாய்க்கு 10 சதவிகிதம் கட்டணம் கட்ட வேண்டும். 50 ஆயிரம், 75 ஆயிரம் ரூபாய்க்கு மேலுள்ள ஒத்தி, கிரயம், செட்டில்மென்ட் போன்ற பத்திரங்கள் இருந்தால் ஏதாவது ஒரு வழக்கறிஞரைக் கொண்டு Certified that I, have scrutinised this document and found it in order என்கிற முறையில் ஒரு சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்



ற விதியை ஏற்படுத்தலாம். அதற்கென்று ஒரு குறிப்பிட்ட தொகையை,
தாவது ஒரு 50 ரூபாயை Notary Public என்கிற முறையில் வசூலித்
ல், மிகவும் நல்லது. அதற்கான ஏற்பாட்டினை இந்த அரசு அவசியம்
ய்ய வேண்டும். பொதுவாக பத்திரங்களைப் பதிவு செய்ய
நகின்றவர்களுக்கு அதிலுள்ள நுணுக்கங்கள் அவ்வளவாகத் தெரிவதில்லை.
ந்த முறையைக் கொண்டு வருவதன் மூலம் சட்டம் படித்தவர்களுக்கு
லை வாய்ப்பு கிடைக்கும். அதுமட்டுமல்ல, தவறாக, அநியாயமாக,
நாவசியமாக படிக்கத் தெரியாதவர்கள், பாமர மக்கள் பலவிதமான
வகாரங்களுக்கு ஆளாகிறார்கள், ஏமாற்றப்படுகிறார்கள். அப்படிப்பட்ட
லைகளைத் தவிர்க்கவும் இது உதவும். பல்விதமான விவகாரங்கள்
டாமலிருக்க இந்தத் திட்டம் மிகவும் உதவிகரமாக இருக்கும். அதற்கேற்ற
கையில் ஒரு சட்டம் கொண்டுவந்து, இது தொடர்பாக இறுதி முடிவு
க்கலாம்.

மூன்றாவதாக, ஒன்றே ஒன்றைச் சொல்லி என் உரையை முடிக்க விரும்பு
றேன். சாதாரணமாக இரண்டாம் வகுப்பு நீதிபதியை (சப்-மாஜிஸ்ட்டி
ரட்) நியமிப்பதைப் பொறுத்தவரை, இரண்டு ஆண்டுகள் வழக்கறிஞராக
ருந்த அனுபவம் இருக்க வேண்டுமென்று முன்பு இருந்தது. சென்ற 3
ண்டுகளாக அந்த விதியை விடுத்து அரசு அலுவலகங்களில் ஈடுபட்டிருப்
பர்களை நியமிக்கிறார்கள். சாதாரணமாக காறி எம்போரியத்தில்
னேஜராக இருந்தவரைக்கூட சப்-மாஜிஸ்ட்டிரேட் ஆகப் போட்டிருக்
றார்கள். அரசாங்க அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற
எல். பட்டம் பெற்றவர்களை இன்றையதினம் சப்-மாஜிஸ்ட்டிரேட் ஆகப்
ாட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வழக்கறிஞர் தொழிலில்
்தவித அனுபவமும் கிடையாது. தீர்ப்பு எழுதுதல், ஜட்ஜ்மென்ட்
ழுதுதல் போன்ற பணிகளில் எந்தவித அனுபவமும் இல்லை. இரண்டு
ப்பு சாட்சிகளையும் கூப்பிட்டு, சாட்சியங்களைப் பதிவு செய்வது பற்றிய
்தவித அனுபவமும் அவர்களுக்கு இல்லை. இதனால் சில விரும்பத்தகாத,
பறான நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே இரண்டு ஆண்டுகள்
டாயம் வழக்கறிஞராக இருந்த அனுபவம் இருக்க வேண்டுமென்கிற
rom the bar) ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும்.
ப்படிக் கொண்டு வந்தால், சட்டம் படித்து வேலையில்லாமல் இருப்பவர்
நக்கு ஓரளவுக்கு நிவாரணம் கிடைக்கும்.

[1980 பிப்ரவரி 2

கடைசியாக, நீதித்துறைப்பற்றி ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். 'நீதிக்குத் தலை வணங்கு' என்ற படத்தில் முதல்வர் அவர்கள் நடித்தார்கள். சமீப காலமாக நீதித் துறை புறக்கணிக்கப்பட்டு உதாசினப்படுத்தப்படுகிறது என்று நீதிபதிகளில் பலர் உணர்ச்சியோடு கூறுகிறார்கள். மூன்றாவது ஊதிய ஆணைக் குழுவில் பெருத்த அநீதி அவர்களுக்குச் செய்யப்பட்டது என்று பலரும் கூறுகிறார்கள். அதுபற்றி வரவு செலவுத் திட்ட அறிக்கை மீதான விவாதத்தின்போதுகூட நான் எடுத்துச் சொன்னேன். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மதுரையில் ஒரு சேல்ஸ் டாக்ஸ் அப்பலேட் இருக்கிறது. அதுபோல் கோவையிலும் சென்னையிலும்கூட இருக்கின்றன. நீதிபதிதான் அந்தக் குழுவுக்குத் தலைவர், டிப்பார்ட்மென்டிலுள்ள ஒரு சாதாரண உறுப்பினர் செயர்மேனைவிட அதிகமாக ஊதியம் வாங்கிக் கொண்டிருக்கிறார். இவர் நீதித் துறையிலுள்ளவர் என்பதற்காக இவருக்கு ஊதியம் குறைவு. அவர் வருவாய் துறையிலிருந்து வந்திருப்பவர், அவருக்கு ஊதியம் அதிகம். தலைவரைக் காட்டிலும் உறுப்பினருக்கு ஊதியம் அதிகம். இதுபோல் அநேக ஆதாரங்களை நீதித் துறையிலுள்ளவர்கள் என்னிடம் கொடுக்கிறார்கள். இப்போது அவர்கள் தங்களுடைய மனுவை ஒரு நபர் குழுவிடம் (Anomalies Commission) கொடுத்திருக்கிறார்கள். தங்களுடைய குறைகளை அந்தக் குழுவிடம் முறையிட்டிருக்கிறார்கள். மற்றவர்களைப்போல் இவர்கள் வெளியே வந்து ஆர்ப்பாட்டம், ஊர்வலம், வேலை நிறுத்தம் போன்ற துறைகளின் மூலம் கோரிக்கைகளைக் கொடுக்கமாட்டார்கள். கொடுக்கவும் முடியாது. எவ்வளவு பெரிய கடமைகளைச் செய்கிறார்கள். பொறுப்பான வேலையைச் செய்கிறார்கள் என்பதை அரசாங்கம் பெரிய மனது வைத்து உணர்ந்து, தாமாக முன்வந்து அவர்களுக்கு அனுகூலமாக மேலும் நியாயமான ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக அரசாங்கம் நீதித் துறையைப் புறக்கணிக்கிறது என்று சொன்னேன். 'அரசாங்கத்திற்கு நீதிபதிகள் மீதே நம்பிக்கையில்லாத அளவுக்கு இப்போது சட்டங்கள் இயற்றப்படுகின்றன. முன்பெல்லாம் அரசாங்கம் இயற்றும் சட்டங்களில் ஒரு சில நியதிகள் கடைப்பிடிக்கப் பட்டன. இப்போது மினிமம் தண்டனை 6 மாதம் என்று சட்டங்கள் போடும்போது, வழிவகை செய்கிறார்கள். 6 குழந்தைகளுக்குத் தாயான ஒரு ஏழை குற்றவாளியாக வந்தாலும்கூட, அவள் நிலையைப் பார்த்து இரங்கி தண்டனையைக் குறைத்துக் கொடுக்க இப்பொழுது வழிவகையில்லை.



1980 பிப்ரவரி 2] [திரு. த. சந்தோஷம்]

அந்த அளவுக்கு குறைந்த பட்சம் 6 மாதம் தண்டனை என்று இப்போது சொல்லியிருக்கிறார்கள். முன்பெல்லாம் வந்த 'கஸ்டம்ஸ் ஆக்ட்' போன்ற சட்டங்களில் The minimum imprisonment should be six months provided that for special adequate reasons to be recorded in the judgment the period of imprisonment may be less than six months. என்று இருக்கும் நீதிபதிக்கு முன்பெல்லாம் ஒரு 'டிஸ்கிரிஷனரி பவர்' வழங்கப்பட்டது. இப்போது வருகின்ற சட்டங்களில் அப்படிப்பட்ட அதிகாரம் வழங்கப்படவில்லை. இனி மேல் வருகின்ற சட்டங்களில் எல்லாம் அவசியம் 'டிஸ்கிரிஷனரி பவர்' வழங்கப்பட வேண்டும். அந்த அதிகாரத்தை வழங்கி அரசாங்கத்துக்கு நீதிபதிகள் மீது நம்பிக்கை இருக்கிறது என்பதைக் காட்ட வேண்டும். அவர்கள் மீது அரசாங்கத்துக்கு நம்பிக்கை இருந்தால்தான், பொதுமக்களுக்கும் நீதிபதிகளிடம் மரியாதை உண்டாகும்.

அடுத்தபடியாக, நான் ஒரு விஷயத்தை அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறேன். திரு. வசந்த பை கூட ஒவ்வொரு சமயம் என்னைக் கிண்டல் செய்வார். சென்ற வரவு செலவுத் திட்ட அறிக்கையில் ஏழைகளுக்கு சட்ட உதவி இலவசமாக அளிக்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். இப்போது ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி மாநிலத் தலைநகரில் செயல்பட்டு வருகிறது. உண்மையாகவே அரசாங்கத்துக்கு ஏழைகளுக்கு அவசியம் இலவசச் சட்ட உதவி அளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் இருக்குமானால், கூடுமானவரை அவர்கள் இருக்கும் இடத்திலேயே, door-steps என்று சொல்லுவார்களே, அதற்கேற்ற வகையில் அந்த வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இலவசச் சட்ட உதவி தேவைப்படுகிறவர்களுக்கு அவர்கள் இருக்கும் பக்கத்திலேயே நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஏழைக்கு இலவசச் சட்ட உதவி தேவை என்று வைத்துக்கொள்வோம். இங்கேயுள்ள உயர்நீதிமன்றத்தில் அவருக்கு இலவசச் சட்ட உதவி தேவை என்றால், அங்கேயிருந்து அவரை இங்கே வரச் சொன்னால் எப்படி? இலவசம் என்று சொல்கிறோம். அவருக்கு எவ்வளவு போக்குவரத்துச் செலவு ஏற்படும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். உண்மையாகவே இலவசச் சட்ட உதவியை ஏழைகள் பெற வேண்டுமென்றால், அவசியம் மாநிலத்தின் பல இடங்களிலும் நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். குறிப்பாக மாநிலத்தின் மையமான இடத்தில் உயர்நீதிமன்றம் இருந்தால், பரவாயில்லை. சென்னை, மாநிலத்தின் ஒரு கோடியில் இருக்கிறது. ஒரு

ஹைக்கோர்ட் பெஞ்சை மதுரையில் வையுங்கள் என்று மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அப்படி வைத்தால், அது தெற்கே உள்ளவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

(பிற்பகல் 5-50)

1973 ஆம் ஆண்டிலே திரு. மாதவன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, இந்தப் பிரச்சினை பற்றிச் சொன்னபோது கொள்கை அளவிலே அதை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றுவதாக உறுதிமொழி அளித்தார்கள். இப்போது 7 ஆண்டுகள் ஆகின்றன. முன்பு திரு. முதலியார் அவர்கள் இருந்தபோதுகூட அரசு இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதை நிறைவேற்றுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, இதை முக்கியமாக, மக்கள் பிரச்சினையாகக் கருதி, ஏற்றுக்கொண்டு, நீதிபதிகளுடைய வசதிக்காக என்று அல்ல—வெகு சீக்கிரத்தில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு ஓரளவு அதிகமாக நேரம் எடுத்ததற்கு மன்னிப்புக் கேட்டு, அமைகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின் மீது சில வார்த்தைகளை சொல்ல முன்வருகிறேன் எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய அட்வகேட் திரு. சந்தோஷம் அவர்கள் மதுவிலக்குக் கொள்கைபற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர் மிகுந்த அனுபவம் உடையவர். மதுவிலக்கினால் வரக்கூடிய கஷ்டநஷ்டங்களையெல்லாம் தெரிந்தவர். அதற்கு நான் மறுப்புச் சொல்லவில்லை. வேதங்களை நம்புகிறார்கள், வேதங்களில் இந்த மதுவைச் சாப்பிடச் சொல்லவில்லை. புராணங்களை நம்புகிறார்கள், புராணங்களில் மதுவைச் சாப்பிடச் சொல்லவில்லை. மற்ற இதிகாசங்களை நம்புகிறார்கள். அவைகளிலேயும் கூட மதுவை யார் யார் உபயோகப்படுத்துவது என்ற முறை இருக்கிறது. நம்முடைய நாட்டு சீதோஷ்ண நிலைமைக்குத் தகுந்தவாறுதான் நாம் நடந்து கொள்ளவேண்டும். அமெரிக்கா, லண்டன், ஜெர்மனி, ஜப்பான் போன்ற இடங்களிலே உள்ளவர்கள் குடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அங்குள்ளவர்கள் குடிக்கிறார்கள் என்றால், அது அந்தந்த நாட்டு சீதோஷ்ண நிலைமையைப் பொறுத்தது. நம்முடைய நாட்டு சீதோஷ்ண நிலைமையை அறிந்து தான் மகாத்மா காந்தி அவர்களும், மாண்புமிகு அண்ணா அவர்களும் மதுவை அறவே ஒழித்தார்கள். மது இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அந்த வழியைப் பின்பற்றி நடக்கக்கூடிய நம்முடைய அரசு எடுப்பார் கை பிள்ளை மாதிரி—கிராமங்களிலே சொல்வார்களே, என்னப்பா அங்கே ஒருவன் போகிறானே அவன் பிள்ளை பிடிப்பவன், பிள்ளை பிடிப்பவன் போகிறான்



என்று சொல்வார்களே, அந்த மாதிரி இங்கே சட்டசபையிலே பேச வந்திருப்பவர்கள்கூட குடித்துக்கொண்டு வந்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையிலே இன்றைய தினம், இவ்வளவு அவசர அவசரமாக மதுவிலக்குக் கொள்கையை இப்படிக் கொண்டு வரக்கூடிய அவசியம் என்ன? அதற்கு என்ன விளக்கம் எல்லாம் சொல்கிறார்கள்? கீதையை எடுத்துப் பார்த்துச் சொன்னார்களா? எதை வைத்துச் சொல்கிறார்கள்? இல்லை வள்ளுவன் சொன்னதை வைத்துக்கொண்டு சொல்கிறார்களா? இதற்கு என்ன காரணம் என்று என் போன்றவர்களுக்குத் தெரியவில்லை. நான் நிபுணன் அல்ல. ஒரு தனி சூழ்நிலை இந்த நிலைமைக்குக் காரணம் என்று சொல்கிறார்கள். அது என்ன சூழ்நிலை என்று தெரியவில்லை. அப்படிக் கொண்டு வந்துவிட்டு, அம்மையார்கள் எல்லாம் கணவன்மார்களை மாற்றிவிடுவார்கள் என்று சொல்கிறார்கள். 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் குடித்தால், அவர்களுடைய குடும்பத்தில் உள்ளவர்கள் அதைத் தவிர்த்து விடுவார்கள், அவர்களுடைய துணைவியர்கள் எல்லாம் அதைத் தவிர்த்து விடுவார்கள் என்று சொல்கிறார்கள். இது என்ன நிலைமை? இரண்டு பேராவது வந்து உட்கார்ந்து பேசித்தானே இந்த முடிவெடுத்திருப்பார்கள். இது என்ன நிலைமை? இவர்களிடம் சொல்லி என்ன பயன்? இப்படிச் செய்வதைவிட குடித்துக்கொண்டு போங்கள் என்று சொல்லியிருக்கலாமே. நம்முடைய நண்பர்கள் சொன்னதுபோல, குடித்து குட்டிச்சுவராகப் போங்கள் என்று சொல்லியிருக்கலாமே. அதை விட்டுவிட்டு, ஊரிலே உள்ள தாசில்தார்கள் எல்லாம் குபேராக ஆவதற்கு 25 ரூபாய், 25 ரூபாய் என்று கொடுத்து அனுமதி வாங்கலாம் என்று முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இந்த முடிவை 10 பேராவது கான்பரன்சிலே கூடிப் பேசித்தானே எடுத்திருப்பார்கள். எதற்காக 25 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டும்? 200 கோடி ரூபாய் வருமானத்தை இழந்து, 25 ரூபாய், 35 ரூபாய் என்று வைத்து 25 கோடி ரூபாய் வருமானத்திற்காக, ஊராருடைய திட்டுதல்களையெல்லாம் வாங்கிக் கட்ட வேண்டுமா? உங்களைப் பார்க்க பாவமாக இருக்கிறது. எதற்காக பி.ஐ.டி.கள் எல்லாம் இதற்கு இருக்கிறார்கள்? அவர்களுடைய வீடுகளைப் பார்த்தால், அங்கே 4 பாட்டில்கள், 5 பாட்டில்கள் இருக்கின்றன. என்ன காரணத்திற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? கலைஞர் அல்லவா இதைக் கொண்டு வந்தார், நாங்களா கொண்டு வந்தோம் என்று கேட்கிறார்கள். அவர் கொண்டு வந்தார்,

வீட்டுக்குப் போய்விட்டார். உங்களுடைய கதி என்ன? இன்றைக்கா, நாளைக்கா என்பது பிரச்சினை. அந்த வேலை பிள்ளை பிடிப்பவர்கள் கையிலே இருக்கிறது. (சிரிப்பு). நாங்கள் உங்களை . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** பிள்ளை பிடிப்பு நடந்துகொண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா?

**திரு. க. இராமமூர்த்தி:** அது சட்டபூர்வமாக நடந்து கொண்டிருக்கிறது என்று ஆளும் தரப்பிலே சொல்கிறார்களா?

**திரு. செ. முத்துசாமி:** பிள்ளை பிடித்தல் எப்படி நடைபெறுகிறது என்று தெரியவில்லை. அங்கே பிள்ளை பிடிப்பதற்கும், இங்கே பிள்ளை பிடிப்பதற்கும் என்ன பொருள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இந்தமாதிரி குறுக்குக் கேள்வி போட்டு, தூண்டிவிட்டு அதன்மூலம் ஒன்று கிடக்க ஒன்று பேசிவிட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. நேற்று அவர் சொன்னதைப் பார்த்தால், ஆளுநர் அவர்கள் படித்த உரையைப் பூராவும் அவரும் படித்தார். ஆனால், யாராவது அதற்காக ஒரு அனுதாபமாவது அவருக்குச் சொல்கிறார்களா? வெளியிலே வந்தால், அவரை சட்டாம்பிள்ளை என்று சொல்கிறார்கள். ஊரிலே இருக்கும் பள்ளிக்கூடங்களைப் பார்த்தால், அங்கே வகுப்பிலே நன்றாகப் படிக்கின்ற பையனை சட்டாம்பிள்ளை என்று அழைப்பார்கள். ஆசிரியர் வகுப்பில் இல்லாத நேரங்களில் அவன்தான் மற்ற மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து, கவனித்துக் கொள்வான். அதுபோல ஆளுநர் அவர்களுடைய உரையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்தார்கள். வெளியிலே போனவுடனே அவரை 'சட்டாம்பிள்ளை' என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், ஏன் உங்களுக்கு இப்போது இந்தக் கெட்ட பெயர்? இதைவிட சும்மா இருந்திருக்கலாமே. சொல்வதைச் செய்வதில்லை, சும்மா இருக்காமல் முடியாத காரியங்களைச் செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். 5 ஏக்கர் வைத்திருந்தவர்கள் எல்லாம் குத்தகைதாரர்கள் என்று இருந்தது. இப்போது 3 ஏக்கர் வைத்திருப்பவர்கள் எல்லாம் குத்தகைதாரர்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையை கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு என்ன தேவை? அரிசன காலனிகளுக்கு 'லைட்' கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவன் குடிக்க கஞ்சியில்லாமல் குப்புறப் படுத்திருக்கிறான். அவனுடைய வாழ்க்கைக்கு ஒரு வழி





யில்லை. ஆனால் அவனுடைய வீட்டிலே 'லைட்' இருக்கிறது. வீட்டிலே குடிக்க ஒன்றும் இல்லை. பஞ்சப் பாட்டு பாடிக்கொண்டிருக்கிறான். இதையெல்லாம் சாதனை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் படித்தார்கள்.

(பிற்பகல் 6-00)

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்களைப் பொறுத்தவரையில், ஏதோ புத்தகமாக அடித்துக் கொடுத்துவிட்டார்கள்; ஆகவே அவரும் அதைப் படித்துக் காட்டிவிட்டார். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் உயர்வாகப் பேசவும் தயாராக இல்லை, தாழ்த்திப் பேசவும் தயாராக இல்லை. இந்த அரசாங்கத்தைப் பார்த்து நான் கேட்க விரும்புவதெல்லாம், உங்களால் செய்ய முடியாத காரியத்தை எதற்காகச் செய்கிறேன் என்று சொல்கிறீர்கள். எதற்காகக் கூட்டம் போட்டு இப்படிப் பேச வேண்டும்? ஒன்றைச் செய்தால் சரியாகச் செய்ய வேண்டும்.

எதற்காக போலீஸ்காரர்களுக்குச் சங்கம் அமைக்க அனுமதி கொடுத்தீர்கள்? ஒரு பயலுக்கும் சங்கம் வைக்க அனுமதி கிடையாது. எல்லோரும் வீட்டிற்குப் போங்கள் என்று சொல்ல வேண்டியதுதானே நியாயம். அதைச் செய்யாமல் அவர்களைப் பார்த்து சங்கம் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு அந்தச் சங்கத்திற்கு 'நாங்கள் தான் பிரசிடெண்டாக இருப்போம்' என்றால் எப்படி முடியும்? எங்கள் கிராமத்தில் ஒரு சங்கம் வைக்கலாம் என்று அனுமதி கொடுக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் போய் ஊரில் உள்ள ஆயிரம் பேரைக் கூட்டி ஒரு சங்கத்தை அமைக்கிறேன். அப்படி நான் அமைக்கிற சங்கத்திற்கு யார் தலைவராக இருப்பது? (அமைச்சர் திரு. கா. இராசா முகமதுவைச் சுட்டிக்காட்டி.) ஒரு பாவமும் அறியாத அமைச்சர் திரு. இராசா முகமது எதிரில் இருப்பதால் சொல்ல நேரிடுகிறது. நான் அமைக்கிற சங்கத்திற்கு திரு. இராசா முகமதுதான் தலைவராக இருக்க வேண்டும் என்று சொன்னால், எப்படி இருக்கும் சங்கம்? அது மாதிரிதானே இந்த அரசாங்கத்தின் நடவடிக்கை இருக்கிறது. எங்கள் ஊரில் இருக்கிற போலீஸ்காரர்களுக்கு எதற்காக சங்கம்? அவர்கள் கையிலே துப்பாக்கியைக் கொடுத்து தவறான காரியம் செய்கிறவர்களைப் பார்த்து சுடு என்றுதானே சொல்ல வேண்டும். அதைச் செய்யாமல் அவர்களுக்குச் சங்கம் வைத்துக்கொள்ள அரசாங்கம் அனுமதி கொடுத்ததால்தானே, இன்றைக்கு அவர்கள் எல்லாம் துப்பாக்கியைத் திருப்பிப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். அவர்களுக்குச் சங்கம் வைத்துக்கொள்ள உரிமை கொடுத்துவிட்டு, உங்களுடைய தலைமையை அவர்கள் ஏற்க வேண்டும் என்றால் அது எப்படி

நடக்கும்? எதற்காக இந்தக் கடைசிப் படலத்தில் இப்படியெல்லாம் இந்த அரசாங்கம் செய்யவேண்டும்? சொல்லப் போனால் எல்லாம் முடிந்த காலத்தில் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வது தேவைதானா? முடிந்த படலமாகப் போய்விட்ட நேரம் இது. இந்த முடிந்த படலத்தில் பிள்ளை பிடிக்கிற ஆள் வந்துவிட்டார்கள். இன்றையதினம் யார் அதிகமான பிள்ளைகளைப் பிடிக்கிறார்களோ அவர்கள்தான் அரசாங்கம் நடத்தலாம் என்ற நிலைமை உருவாகிவிட்டது. இதை நான் அரசாங்கத்தில் இருப்பவர்களைப் பார்த்து மட்டும் சொல்லவில்லை. எல்லாக் கட்சிக்குமே சொல்லுகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது 'முடிந்த படலம்' என்றார்கள். அதற்கு என்ன விளக்கம் என்று சொன்னால் பரவாயில்லை. (சிரிப்பு).

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: திரு. நல்லசிவன் அவர்கள் மிகுந்த அனுபவசாலி. எல்லா விவரமும் தெரிந்தவர். அவர் நான் சொன்னதுபற்றி விளக்கம் கேட்கிறார். அதை நான் பின்னாலே சொல்கிறேன். தயவு செய்து 'ஊடே ஊடே' என் பேச்சைத் தடைப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். எந்த இடத்தில் எந்தக் காரியம் சரியாக நடைபெறுகிறது? ஒரு ஊரிலாவது எல்லாம் சரியாக நடைபெறுகிறது என்று சொல்ல முடியாது. எந்தக் காரியமாவது ஆக வேண்டும் என்றால், நாம் முதலில் நம் மணி பர்சில் எவ்வளவு வைத்திருக்கிறோம், போகிற இடத்தில் 'அவன் எவ்வளவு கேட்பான்' என்று பார்த்துக்கொண்டுதானே போக வேண்டிய நிலை இருக்கிறது. இதைச் சொல்லும்போது இங்கே எதிரில் அமர்ந்திருக்கும் அமைச்சர்களைப் பார்த்து நான் குற்றம் சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. நாட்டிலே நடைபெறும் நடப்பைத்தான் நான் இங்கே பேசுகிறேன். அமைச்சர்களுக்குத் தெரியாத சங்கதி எதையும் நான் பேசிவிடவில்லை.

விவசாயிகளைப் பொறுத்தவரையில்கூட, இந்த அரசாங்கத்தால் ஒன்றும் செய்துவிட முடியாது. அவர்களின் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடுவைப் பிடித்து அடைத்துவிட்டால் அல்லது அவர் மீது கொலை கேஸ் போட்டு விட்டால், சங்கம் போய்விடும் என்று நினைப்பது தவறு. இன்றைய தினம் மக்களிடம் என்ன நினைப்பு வந்துவிட்டது என்றால், சங்கம் வைத்துக் கொண்டு இந்த அரசாங்கத்திடம் கூச்சல் போட்டால்தான், காரியம் நடக்கும் என்றாகிவிட்டது. ஷாப் கடைக்காரர் சங்கம், பெட்டிக் கடைக்காரர் சங்கம் என்று எல்லோரும் சங்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 5-வது வகுப்பு மாணவர்கள் இனி இந்த வாத்தியாரிடம் படிக்க மாட்டோம் என்று சொல்லி



ஸ்டிரைக் செய்யவும் அதற்கு என்று ஒரு சங்கமும்தான் இன்னும் வைத்துக் கொள்ளவில்லை. இந்த வாத்தியார் எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லி அந்த மாணவர்கள் மட்டும்தான் இன்னும் சங்கம் வைத்துக் கொள்ள வில்லை. மற்றபடி முதியோர் சங்கம், இளைஞர் சங்கம் என்றெல்லாம் வந்து விட்டது. 5-வது வகுப்பு மாணவர்களும் சங்கம் வைத்துக் கொண்டால் எல்லாம் முடிந்து போய்விடும். ஐயா நல்லசிவன் அவர்களே, தங்களுக்கு இப்போது புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். இதுதான் கடைசிப் படலம் (சிரிப்பு).

நம்மைப் பார்த்து மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் கேலி செய்ய மாட்டார்களா? என்னடா இப்படி ஒவ்வொருத்தரும் எம்.எல்.ஏ.க்களை விரட்டிக் கொண்டு போகிறார்களே என்று கேலி செய்ய மாட்டார்களா? இந்த ஆட்சியின்போது இப்படி ஒரு பெரிய அக்கப்போரைக் கொண்டு வந்து விட்டீர்களே என்றுதான் வருத்தப்படுகிறேன். கேட்டால் சாதனை, சாதனை என்று சொல்லுகிறார்கள். என்னடா சாதனை என்றால், அரிஜன காலனிக்கு விளக்குப் போட்டுவிட்டோம் என்கிறார்கள். குடிநீருக்குப் பணம் ஒதுக்கி விட்டோம் என்கிறார்கள். அப்படித்தான் பணம் ஒதுக்குகிறீர்களே, அது சரியாகவாவது செலவழிக்கப்படுகிறதா என்றால், அதுவும் இல்லை. 100 ரூபாய் ஒதுக்கினால் அதில் 75 ரூபாய் போக்குவரத்துக்கும், வந்து போகிறவர்களுக்கும் சரியாகப் போய்விடுகிறது. 25 ரூபாய்தான் வேலைக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதற்கும் தோதாக உங்கள் கட்சிக்காரர்கள் தான் இந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லிவிடுகிறீர்கள். கேட்டால், இது எங்கள் பாலிசி என்கிறீர்கள். என்ன பாலிசி இது? தப்பு தவறு செய்கிறவர்கள் யார் என்று ஆட்சியில் இருக்கிற உங்களுக்கும் தெரியும், ஊரிலே இருப்பவர்களுக்கும் தெரியும். அவர்களைப் போய் உங்கள் கட்சிக்காரர்கள் என்று சொல்லுகிறீர்கள். இப்படியே இருந்தால் எத்தனை நாளைக்கு ஜனங்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்?

முதலமைச்சரைப் பொறுத்தவரையில், அவரிடம் ஒரு தப்பும் இல்லை என்பது என்னுடைய எண்ணம். அவர் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 40 சீட்டுகளைக் கேட்கவில்லை. (உறுப்பினர் தனது இரண்டு விரல்களை மட்டும்

காட்டி) இப்படித்தான் கேட்டார். ஜனங்கள் அவருக்கு இரண்டு சீட்டு மட்டும் கொடுத்துவிட்டார்கள். அவரைப் போய்த் தோற்றுவிட்டார் என்றால் எப்படி? அவர் கேட்டது இரண்டுதானே? இரண்டும் கிடைத்துவிட்டது (சிரிப்பு).

ஆட்சியாளர்களாகிய உங்களால் எதைச் செய்ய முடியாதோ அதைச் செய்வதாகச் சொல்லவேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எந்தக் காரியத்தை நீங்கள் சொன்ன மாதிரி நிறைவேற்றியிருக்கிறீர்கள்? இப்படி செய்ய முடியாத காரியத்தைச் செய்வதாகச் சொல்லுவதால்தானே கேள்வியே வருகிறது? இப்போது வேலைக்கு உணவு என்று 3 லட்சம் டன் அரிசி கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறீர்கள். நீங்கள் எல்லாம் கிராமாந்திரத்திலிருந்துதானே வருகிறீர்கள். எங்கோ கல்கத்தா பம்பாயிலிருந்து வரவில்லையே? உங்களுக்குத் தெரிந்ததையே நான் சொல்லுகிறேன். அந்த அரிசி எல்லாம் என்ன ஆனது? அரிசியை பெரிய பெரிய கோடோனில் அடைத்து வைத்திருந்தீர்கள். வேலைக்கு உணவு என்று கொடுக்க ஆரம்பித்த போது, வேலை செய்த பெண் ஒருத்தியும் அதை வாங்க மாட்டேன் என்று சொல்லிவிட்டாள். எல்லாம் காண்ட்ராக்ட் வேலை. நிறுவித் தருகிறோம் என்று சொல்லி காண்ட்ராக்ட்க்கு விட்டுவிட்டார்கள். மக்களுக்கே இது போய்ச் சேர வேண்டும் என்று ஏற்பாடு செய்கிறோம் என்றீர்கள். மக்கள் அந்த அரிசியை வாங்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அதிகாரிகள் என்ன செய்தார்கள்? வியாபாரிகளை போய்ப் பிடித்து அவர்களிடம் அதைத் தள்ளிவிட்டார்கள். எங்களைப் போன்றவர்கள் ஒரு வேலையும் நடக்கவில்லை என்று அரசாங்கத்தில் இருப்பவர்களிடம் புகார் செய்ததும் அதிகாரிகள் இதைத் தான் செய்தார்கள். அரசாங்கம் அதிகாரிகளை நெருக்கியதும், அதிகாரிகள் இந்த வேலையைச் செய்தார்கள். இதுதான் கன்னியாகுமரியிலிருந்து, திருநெல்வேலியிலிருந்து சென்னை வரை நடந்தது. 100 யூனிட் மண் வெட்டினால் அதை 300 யூனிட்டாகப் போட்டார்கள். அப்படித்தான் 300 லட்சம் டன் அரிசி செலவானது என்று கணக்குக் காட்டிவிட்டார்கள். 100 ரூபாய்க்கு வேலை செய்யவேண்டும் என்றால் 20 ரூபாய் அளவுக்குத்தான் மண் வெட்டுகிறார்கள். மற்றதெல்லாம் போக்குவரத்தில் போய்விடுகிறது. கடைசியில் இங்கே இருப்பவர்களுக்குத்தான் கெட்ட பெயர் வருகிறது.

மாண்புமிகு திரு. என். இராகவானந்தம்: எந்த ஊரில் அப்படி நடந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், அதை விசாரித்து நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.





திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: ஒரு ஊர் பாக்கியில்லாமல் இது நிலைமை. ஜில்லாக்களில் கலெக்டர்களைப் பொறுத்தவரையில், கள் கோடோனைத் திறந்து காட்டி இதில் உள்ள நல்ல மூட்டைகளையே துக்கொண்டு போங்கள் என்றுதான் சொல்லுகிறார்கள். அங்கே எங்கே மூட்டை இருக்கிறது? ஒரு கோடோனில் 50,000 மூட்டைகள் வைத்திருக்ர்கள் என்றால், அதில் எல்லா மூட்டைகளுமே கெட்டுப் போயிருக்கும் து, நான் எந்த ஊரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று அமைச்சர்
து, நான் எந்த ஊரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று அமைச்சர்
ம்புகிறார்? வேண்டுமானால் எனக்கு ஒரு கார் கொடுத்து அரசாங்கத்தி ந்து இதைப் பதிவு செய்ய ஒரு அதிகாரியையும் கொடுத்து, எல்லா ஊருக் போய் வரச் சொன்னால், போய் வந்து சொல்லுகிறேன். எங்கள் ஜில்லா ல மட்டுமாவது போய் வர கார் கொடுங்கள், நான் போய் வந்து சொல்லு ன்.

(பிற்பகல் 6-10)

படிப்பட்ட தவறுகளை எல்லோரும் சேர்ந்துதான் செய்கிறார்கள். த மாதிரியான முறையில் நம்முடைய நிர்வாகம் நடைபெறுகிறது. டசியில் இங்குள்ள 18 பேர்களுக்குத்தான் அதனுடைய பலன் வந்து கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் முடிக்க ண்டும்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: 20 நிமிடங்கள் தாங்கள் பேசியது ரும் சகிக்க முடியாத காரியமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, ண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, இங்குள்ள 15 பேர்களுக்குத் ன் வருகிறது என்று சொன்னார்கள். என்ன வருகிறதென்று தெரிய ல்லை. எந்த ஆதாரத்தில் பேசுகிறார்கள் என்றும் புரியவில்லை.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: இங்குள்ள 15 பேர்கள்தான் அமைச்சர்கள்தான்) அவ்வளவு தவறுகளையும் பண்ணிவிட்டார்கள் என்று ரில் பேசவேண்டி வருகிறது. இவர்கள் மீது குறை சொல்ல வேண்டும்

என்பது என்னுடைய நோக்கமல்ல. அப்படி மக்கள் பேசுகிறார்கள். மக்கள் பேசித்தானே எங்களை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். இன்றைக்குள்ள இந்த நிலைமைக்கு மக்கள்தானே காரணம். நாங்கள் இவர்களைப்பற்றி என்ன என்னுகிறோம் என்றால், இவர்கள் நல்ல காரியங்கள் செய்ய வேண்டும் என்பதுதான். ஏனென்றால் இவர்களுடைய காலம் முடியக்கூடிய நேரம் வந்துவிட்டது. மற்றொரு கட்சிக்காரன் தப்பு பண்ணும்போது, அதைப் பற்றி அப்போது பேசிக்கொள்ளலாம். இப்போது இவர்களிடம் தானே பேச வேண்டியிருக்கிறது.

கேள்வி நேரத்தின்போது நான் கேட்ட கேள்வி சம்பந்தமில்லாத கேள்வி என்று தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நட்சத்திர ஓட்டல் ஒன்றை விரட்டிப் பிடித்ததற்குக் காரணம், யாரோ ஒருவருக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சொன்னதாகவும் அவருக்கு அந்த ஓட்டல் இடம் கொடுத்ததால் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் வெளியே பேசப்படுகிறது. ஓட்டல் கோகுலாவில் திரு. நாராயணசாமிக்கு இடம் கொடுத்து விட்டார்கள் என்பதற்காக அந்த ஓட்டல் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் போலும். சும்மா கிடந்த திரு. நாராயணசாமியை இந்த தேசம் போற்றும் நாராயணசாமி நாயுடுவாக ஆக்கிவிட்டார்கள். ஊரில் உள்ள விவசாயிகள், 'எங்களுக்கு ரொம்ப குறை இருக்கிறது அதைத் தீர்க்க திரு. நாராயணசாமி கிட்டே போகிறோம்' என்று சொல்லி அவர் பின்னாலே போகிறார்கள் அந்த அளவுக்கு சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்து விட்டார்கள்.

மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்கள், எந்த ஊரில் தண்ணீர் இல்லையென்று பார்த்து வந்து சொல்லுங்கள் என்றார். எப்படிச் சொல்லுவது ? ஏதாவது ஒரு ஊரிலாவது தண்ணீர் இருந்தால்தானே. கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்கும்படி கடந்த ஆறு வருடங்களாகச் சொல்லிப் பார்த்துவிட்டேன். நிலத்தடி நீரைக் கொண்டு வந்து கொடுக்கிறோம் என்று அரசினர் சொல்லுகிறார்கள். "குடிநீர் பைப்புகள்தான் போடப்பட்டுவிட்டதே, அழ்கிணறுகள் எதற்கு?" என்று கேட்கிறார்கள். பைப்பைப் போட்டால், ஆடு மாடுகள் தண்ணீர் குடிக்க முடியுமா ? இவர்கள் எல்லாம் எங்கேயோ இருந்தவர்கள் மாதிரி பேசுகிறார்கள். குளம் வெட்ட வேண்டுமென்று சொன்னால், பைப்தான் வந்துவிட்டதே, குளம் ஏன் என்று கேட்கிறார்கள். டாக்டர் சனார்த்தனம் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். குளம், ஆறு குட்டை இவைகளை சீர்படுத்த பல்லாயிரக்கணக்கான ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறதென்று சொன்னார்கள். பைப் போடப்பட்டுவிட்டது, குளம் வேண்டாம், குட்டை வேண்டாம் என்று சொல்லுவது சரியல்ல.





ஆடுகள் வந்தால் அவற்றுக்குத் தண்ணீர் கொடுப்பது எப்படி? பிள்ளைகளுக்கு புட்டியில் பால் கொடுப்பதைப் போல், இரப்பர் குழாய்களை மாட்டியா கொடுக்க முடியும் ? ஆகவே எங்கிருந்தோ வந்தவர்கள் மாதிரி நிர்வாகத்தை நடத்தினால் சரியாக வருமா ? இவர்களை நாங்கள் ஏப்ரல் மாதம் வரையில்தான் கேட்க முடியும். அதற்குள் இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் ? அதற்குப் பிறகும் நாங்கள் திரும்பவும் வருவோம். இந்த இடத்தை விடமாட்டோம். ஆகவே நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன காலனிகளுக்கு இணைப்புச் சாலைகள், மின்சார விளக்குகள் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். தயவு செய்து என்னோடு வரட்டும், வந்து கிழக்கு இராமநாதபுரம் திருவாடானை தாலுக்காவில் வந்து பார்க்கட்டும். அரிசனங்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளட்டும். அரிசன காலனிகளுக்கு லைட் போடப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு அத்தியாவசியமான சோற்றுக்கே வழியில்லை, குடியிருக்க வீடு இல்லை. அப்படி இருக்கும்போது அவர்களுக்கு லைட் போடுகிறோம் என்றால் எப்படி ? இப்படிப்பட்ட நிலையில் 40 பாராளுமன்ற இடங்களில் 38 போய்விட்டன ; இரண்டுதான் கிடைத்தன என்று வருத்தப்பட்டால் எப்படி ?

விவசாயிகளுக்காக எத்தனை கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் ? அவர்களுக்கு எத்தனை கோடி ரூபாய் கடனாக இருக்கிறது ? அவர்கள் பட்டிருக்கும் மொத்தக் கடனும், ஒரு கம்பெனிக்காரனிடம் இருக்கும் கடனுக்குச் சமமாகத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். எத்தனையோ கோடி ரூபாயை கம்பெனிக்காரர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியின் மூலமாகப் பல கம்பெனிகளைப் போய்ப் பார்த்தேன். அதில் இரண்டு கம்பெனிகள் தர வேண்டிய கடனைப் பெற்றாலே போதும். அது விவசாயிகளுக்குக் கொடுத்ததைப் போல 40 மடங்கு இருக்கும். விவசாயிதானா கிடைத்தான், விரட்டி விரட்டிப் பிடிக்க? ஆகவே விவசாயிகள் பட்டிருக்கும் கடன் பூராவையும் தள்ளுபடி செய்துவிட்டு புதிதாகக் கணக்கை ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் விமோசனம் ஏற்படும். துணைத் தலைவர் அவர்கள் நான் 20 நிமிடங்கள் பேசிவிட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 30 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: இது சரித்திரத்தில் பெரிய பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இரண்டு பேர் பேசுவதும், பிறகு அமைச்சர் பதில் சொல்லுவதும், அதற்குப் பிறகு "அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை தள்ளுபடி செய்கிறேன்" என்று தலைவர் அவர்கள் சொல்லுவதும் எல்லாம் சம்பிரதாயமாகத்தான் நடக்கிறது. ஆகவே இன்று நான் இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு ஆளும் தரப்பிலிருந்து நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடர்ந்து இரண்டாவது நாளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எதிர்க் கட்சியிலே இருக்கிற நாங்கள் நன்றி தெரிவிக்க முடியாவிட்டாலும், நன்றி தெரிவிக்க முடியாமைக்கான காரணங்களை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பொதுவாக கவர்னர் அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை சட்டமன்ற கூட்டுக் கூட்டத்தைத் துவக்கி உரையாற்றுவது என்பதும், ஆளும் தரப்பிலிருந்து உரையைத் தயாரித்து அதை கவர்னரிடத்திலே கொடுத்து உரையாற்றுவது என்பதும் மரபாகக் காக்கப்பட்டு வருகிறது.

(பிற்பகல் 6-20)

கவர்னர் அவர்கள் ஆற்றுகின்ற உரையில் காணப்படுகின்ற கோட்பாடுகளை, கொள்கைகளை, யார் அமுல் நடத்துகிறார்கள்? அவர்கள் எடுத்துச் சொல்கின்ற கருத்துக்கள் நமக்குச் சொந்தம் என்ற அளவுக்குத்தான் இருக்கிறோம். அத்தனை பேர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேதான் எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் ஆதிபாக இப்போது எப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்கிறார்கள்? இந்த ஆட்சி இந்த 2½ ஆண்டுக் காலமாக செய்த காரியங்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆட்சி செய்த முன்னேற்றக் காரியங்கள் என்ன என்று சொல்லியிருக்கிறார்கள். சொன்னதைச் செய்யாததைச் சொல்லியிருக்கிறார்கள். செய்ததை எடுத்துச் சொன்னார்கள். இதுவரை எதற்கோ ஆட்பட்டிருந்தவர்கள்கூட, உளமாற உங்களுக்கு யோசனை சொல்லுகின்றவர்கள்கூட, அண்மையிலே ஊர்



அறிய, உளமாற இதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் 'அப்போசிஷன்' கட்சியினர். எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் பேசினார்கள் என்று சொல்கிறார்கள். இவர்கள்தான் எல்லாக் காரியங்களுக்கும் தூண்டுகோலாக இருக்கின்றார்கள் என்று ஆளுங் கட்சியினர் சொல்கிறார்கள். இந்த ஆட்சிக் கட்சி, ஆட்சிக்கு வந்த அன்று முதல் இன்று வரை அதைப்போலவே பாடிக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் செய்துகொண்டிருக்கிறார்களே தவிர, இன்னும் வேறு ஒன்றும் செய்யவில்லை. எங்களைத் தவிர, அதாவது ஆளும் கட்சிக்கு எதிர்க் கட்சியாக, எதிரிக் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர மற்றவர்களும், இதுவரை பொதுவானவர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்களும்கூட, இதுவரை சொல்லிவந்த கருத்துக்களுக்கு ஒத்துழைப்புத் தருவதுபோல இருந்தவர்கள்கூட, ஆட்சிக் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட தெளிந்து வருகிறார்கள் என்று நினைக்கிறேன்.

கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில் மிக முக்கியமான ஒன்றைச் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிக்கைப்படி அவர் அதில் அத்தனையுமே சொல்லவில்லை. மதுவிலக்கைத் தளர்த்தியிருக்கிறார்கள். அடுத்து இன்னொரு நாள் ஒரு சில சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். மதுவிலக்கு அமுலில்தான் இருக்கும், ஆனால் அதில் சலுகைகள் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி விதிகளைத் தளர்த்தியிருப்பதைக் கூட கவர்னர் உரையில் சுட்டிக்காட்டாமல் போனது ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை. இன்றைக்கு இருக்கின்ற ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்ச உணர்வு அதற்குக் காரணமா? அதை எடுத்துச் சொல்லும் தகுதியை இழந்துவிட்டதா? அதற்கு என்ன காரணம்? அப்படிப்பட்ட கருத்தைச் சொல்லாமல் வெறும் புள்ளிவிவரங்களை அள்ளித் தெளித்திருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரங்களைப்பற்றி நாட்டிலே தேடிப்பார்த்தால் அவைகள் காணக் கிடைக்காதவைகளாகத்தான் இருக்கின்றன.

கவர்னர் உரையில் ஆளுங் கட்சியினர் 20 அம்சத் திட்டத்தை ஆதரித்திருக்கிறார்கள். இந்த 20 அம்சத் திட்டத்தை இதற்குமுன் எதிர்த்தவர்கள் யார்? 20 அம்சத் திட்டத்தை அமுல் படுத்துகின்றபோது, எங்கள் ஆட்சி கலைக்கப் படுகின்றபோது, அந்தத் திட்டத்திலுள்ள பல திட்டங்களில் சிலவற்றை நிறைவேற்றுகின்ற நிலையிலேதான் இருந்திருக்கிறோம். அவற்றை நிறைவேற்றுகின்ற அளவிலேதான் இருந்தோம் என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றிய எங்களுக்கு இல்லாத உரிமை என்ன இருக்கிறது? அதைப்பற்றி கவர்னர் அவர்கள் படிக்கின்ற உரையில்தான் சொல்லியிருக்கிறார்கள். அதை கவர்னர் அவர்கள் மூலமாகச் சொல்லி,

அதன்மூலம் நாட்டு மக்களை ஏமாற்றக் கருதுகிறார்கள். நாட்டு மக்கள் இனியும் ஏமாறத் தயாராக இல்லை. அதை உண்மை என்று சொல்லி இனியும் நாட்டு மக்களை ஏமாற்ற முடியும் என்று நினைக்கிறார்களா? நாட்டு மக்கள் அப்படி ஏமாறத் தயாராக இல்லை. காரணம் அவர்கள் ஏமாந்து ஏமாந்து ஆட்சியாளர்களுடைய மந்திர தந்திர ஜாலவித்தைகளைப் பல தடவை பார்த்துப் பார்த்துப் பழகி, அது பழையதாகிவிட்டது. நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். அவர்களுக்கு மான ரோசம் இல்லை என்று பேசினார்கள். நான் அப்போது இங்கு இருந்திருந்தால் அதைச் சொல்லாமல் தடுத்திருப்பேன். இது மான ரோசம் இருக்கக்கூடியவர்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி. இதை நான் ஏன் கேட்கிறேன்? இப்போது நாட்டை ஆளுகின்ற முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அது பத்திரிகையில்கூட வந்திருக்கிறது. நம் ஆதரவு பெற்ற வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யாவிட்டால், நம்முடைய மானம் மரியாதை அத்தனையும் போய்விடும். பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்யாவிட்டால், மானம் மரியாதை அத்தனையும் போய்விடும் என்று பொதுக் கூட்டத்திலே அவர்கள் சொன்னார்கள். அவரை ஆதரிக்கின்ற பத்திரிகையிலேகூட கொட்டை எழுத்துக்களில் அது வந்திருக்கிறது. அவர் வாக்குப்படி அது போய்விட்டது என்றுதானே பொருள். அதைத்தான் நான் இப்போது நினைவூட்டுகிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்கு, நான் வாக்காளர்களை ஊக்குவிப்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மானம் மரியாதை போய்க்கொண்டிருக்கிறது. இப்போதுதான் மக்கள் கரும்புச் சாற்றைத் தெளித்திருக்கிறார்கள். கரும்புச் சாற்றைத் தெளித்ததன் நோக்கம் அடுத்து எறும்பை மேயவிடத்தான். அவர்கள் எறும்பை மேயவிட இருக்கிறார்கள். யாருக்கோ கரும்புச் சாற்றைத் தெளித்திருக்கிறார்கள் என்று நாக்கிலே தடவிப் பார்த்துக்கொண்டிருக்கிறவர்களிடம் எறும்பை விட இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய பழைய நண்பர்களாக இருக்கின்ற காரணத்தினாலே, அவர்களுக்கு ஒரு உறுதுணையாக இருக்கும் என்பதால் இதைச் சொல்லிக்கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் ஆட்சிக்குப் பிறகு, இன்றைக்கு இருப்பவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு விவசாயிகளுடைய கடன் சுமையைக் குறைப்பதற்கு, அவர்களின் கவலையைத் தீர்ப்பதற்கு, கடனைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு கடன் கிடைக்கச் செய்ய, புதிய கடன் வழங்க மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு நிதியுதவி அளித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் கடன் கிடைக்கச் செய்வதற்காக, அரசு என்பது மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு மொத்தம் 27.5 கோடி ரூபாய் கொடுத்து உதவியுள்ளதாகச் சொல்



கிறார்கள். இப்படி 27.5 கோடி ரூபாய் உதவி அளிக்கப்பட்டு, அந்த கூட்டுறவு வங்கிகள் அந்த உதவியை வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியும் கடன் செலுத்துகின்றவர்களுக்குப் புதிய கடன் கொடுக்க முடியவில்லை. மறுபடியும் நிதியில்லை என்ற அறிக்கை வருகிறது. இந்தக் கூட்டுறவு வங்கிகள் தோன்றிய காலத்திலிருந்து இப்படிப்பட்ட கொடுமைகள் ஏற்பட்டதில்லை. ஆனால் இப்போது இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மத்திய கூட்டுறவு வங்கிகள் திரும்ப கடன் கொடுக்க முடியவில்லை. விவசாயிகள் புதிய கடன்கள் வாங்க முடியவில்லை. கடனைச் செலுத்தியவர்கள்கூட கடன் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே நான் மத்திய வங்கி விட்ட அறிக்கையை இந்த அவையிலே காட்டியிருக்கிறேன். அதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். இன்றைக்கு எப்படித்தான் அவர்கள் மனம் விட்டுச் சொல்கிறார்களோ? ரூபாய் 27.5 கோடி உதவி செய்திருக்கிறோம் என்றால், அரசு செய்த அந்த உதவியை என்ன செய்தார்கள் என்றுதான் கேட்கிறேன். கடனைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்காவது கடன் கொடுக்க வேண்டுமென்பதற்காக, ரிசர்வ் வங்கியிடமிருந்து பணம் பெற முடியாத நிலையில், மத்திய வங்கிகளுக்கு உதவி செய்தும், அவர்களுக்குப் புதிய கடன்கள் கிடைக்கவில்லை. மத்திய வங்கிகளுக்கு இந்த உதவியை எப்போது செய்தார்கள்? அவர்கள் சாகுபடி செய்ய வேண்டாமா? அவர்கள் கடன் வாங்கித்தான் சாகுபடி செய்ய முடியும். குறிப்பிட்ட காலத்தில் கடன் பெற்றார்களா? அதைப்பற்றி யாருக்குக் கவலை? சாகுபடி காலம் முடிந்த பிறகு கடன் பெற்றார்களா? கடன் வாங்கித்தான் விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டும் என்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், அவர்கள் எப்படிச் சாகுபடி செய்ய முடியும்? குறிப்பிட்ட காலத்தில் கடன் கொடுக்கவில்லை. தேவையான காலத்திற்குப் பிறகு எதற்கு உதவி? நாங்கள் பெரிய பெரிய காரியத்தைச் செய்திருக்கிறோம் என்று புள்ளிவிவரங்களைக் காட்டுகிறார்கள். செய்யாத காரியங்களையெல்லாம் விளம்பரப்படுத்துகிறார்கள்.

தக்காவி கடன்பற்றிச் சொல்கிறார்கள். இந்தத் தக்காவி கடன் யார் கொடுத்தது? இப்போதுள்ள அரசு எத்தனை பேர்களுக்கு அந்தக் கடன் சுமையிலிருந்து ரிலீஃப் கொடுத்திருக்கிறது? அது குறித்து எந்தவிதமான தகவலும் இல்லை. இந்தக் கடனைப்பற்றி அரசினர் வரிந்துகட்டிக் கொண்டு விளக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது பல ஆண்டுகளாக இருந்துகொண்டிருக்கின்ற கடன். 23, 24 ஆண்டுகளாக இருந்த கடன்களைத் தள்ள வேண்டாம். அது ஒரு அசட்டாக, ஒரு சொத்துக் கணக்காக சொத்து இருப்பதாக, கணக்கில் இருக்கட்டும் என்று சொல்கிறார்கள். அதை அதிகாரிகள் தள்ளி வைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதைத் தள்ளுபடி செய்தோம் என்று சொன்னால், அதைவிட மாய்மாலம் வேறு என்ன இருக்க முடியும்?

அதையும் இதையும் சேர்த்துக் கூட்டினால் 8 கோடி ரூபாய்க்கு வருகிறது.
கணக்குப்படி கூட்டிச் சொல்லப்பட்டிருக்கிறது. எத்தனை குடும்பங்கள் இத
னால் பயன் பெற்றுள்ளன ? இதனால் 8.51 லட்சம் விவசாயக் குடும்பங்கள்
பயன் பெற்றுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அடடா, இதற்கு எத்தனை
விளம்பரங்கள் ? கொடுத்த கடன் தக்காவிக் கடன். இந்தக் கடனை
இவர்கள் தள்ளி வைத்துவிட்டார்கள். இந்தக் கடனைத் தள்ளி வைத்து என்ன
உபயோகம் ? இந்தக் கடனை அவர்கள் எந்த ஆட்சியில் வாங்கினார்கள் ?
இந்த அரசு வந்து யார் யாருக்குக் கடன் கொடுத்திருக்கிறது ? கூட்டுறவுக்
கடனை நம்பி விவசாயிகள் மற்றவர்களிடம் கடன் வாங்கிச் செலவு செய்திருக்
கிறார்கள். கூட்டுறவுச் சங்கக் கடனை வாங்கி உரம் வாங்கலாம்,
மண்ணெண்ணெய் வாங்கலாம் என்றெல்லாம் நம்பினார்கள். ஆனால் அவர்
களுக்கு எந்தக் கடனும் கிடைக்கவில்லை.

அடுத்து, குத்தகைதாரர் வாரத்தை மாற்றியமைப்பதுபற்றிச் சொன்
னார்கள். ஏற்கெனவே குத்தகை வாரம் இருந்ததை 75 : 25 என்று ஆக்கி
யிருக்கிறார்கள். இதுவரை குத்தகைதாரர்களுக்கு 60 என்று இருந்ததை 75
ஆக ஆக்கியிருக்கின்றதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிலச்சுவான்தாரர்
களுக்கு 40 என்று இருந்ததை 25 ஆக ஆக்கியிருக்கின்றதாகச் சொல்லியிருக்
கிறார்கள். சட்டசபையிலே இதைச் சொன்னார்களே.

(பிற்பகல் 6-30).

வருஷம் முக்கால் ஆகிவிட்டது, அது என்னவாயிற்று ? இந்த அவையிலே
தான் கேட்டேன், வருவாய்த் துறை அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள்.
'பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்' என்று பதில் சொன்னார்கள். என்ன
பரிசீலனை ? எங்கள் ஊரில் "பரியில் பிடித்த மீனை சிலையில் கட்டிக்
கொண்டு போகிறாள் பொம்பளை" என்பதைத்தான் பரிசீலை என்று சொல்
லுவார்கள். அதாவது மீனை சிலையில் அள்ளிக்கொள்கிறாள் பொம்பளை.
60 என்பதை 75 ஆக்க வேண்டும், 40 என்பதை 25 ஆக்க வேண்டும். இதில்
என்ன பரிசீலனை இருக்கிறது ? இதை ஏன் சொல்ல வேண்டும் ? அதுவும்
சொன்னது யார் ? மாநிலத்தின் முதல் மந்திரி சொல்கிறார். அவர் வாயி
லிருந்து வரும் அத்தனையும் சட்டம். இருந்தும் ஏன் செய்யவில்லை ?
75 : 25 என்று வரும் என்று சொன்னது என்னவாயிற்று ? இன்னுமா பரிசீல
னையில் இருக்கிறது ? தினத்தந்தியில் கொட்டை எழுத்தில் போட்டு



விட்டார்கள். அதைப் பார்த்துவிட்டு இவன் 75 : 25 என்கிறான், அவன்
60 : 40 என்கிறான். இன்னும் குத்தகை பாக்கி அளக்கவில்லை. அவர்களைச்
சந்தியில் விட்டு போலீஸ் ஸ்டேஷன்வரை போகச் சொன்னது யார் ? நெல்லை
அளக்க முடியவில்லை. ஒருவன் வாங்க மாட்டேன் என்கிறான், மற்றவன்
கொடுக்க மாட்டேன் என்கிறான் என்று சொல்லுகிறார்கள். முதல் மந்திரி
சொல்கிறார் என்று ஒருவன் தினத்தந்தியைக் காட்டுகிறான். ஒருவரோடு
ஒருவர் சண்டை போட்டுக்கொண்டு நடுரோட்டில் நிற்கிறார்கள். எதற்காக
இப்படிச் சொல்ல வேண்டும் ? தெரியவில்லை என்றால், சும்மா இருக்க
வேண்டும். 40 என்பதை 25 ஆகக் குறைத்து விட்டார், 60 என்பதை 75 ஆக
உயர்த்திவிட்டார் என்று பிரச்சாரம். அதற்குப் பிறகு மற்ற அமைச்சர்கள்
கூட்டுறவுச் சங்கக் கடன் தள்ளுபடி செய்யப்படுமென்று சொல்லுகிறார்கள்.
சொல்லிய மறு நாளே ஜப்தி பண்ணி சட்டி பானையை ரோட்டில் வைக்
கிறார்கள். அமைச்சர் சொல்லியிருக்கிறாரே என்றால், அதிகாரிகள் அதற்கும்
இதற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லுகிறார்கள். தேர்தலுக்கு முன்னால்
ஜப்தி நிறுத்தி வைக்கப்படுகிறது, தேர்தலுக்குப் பின்பு ஜப்தி பண்ண ஆரம்
பித்துவிடுகிறார்கள். எதற்காக இப்படிச் செய்ய வேண்டும் ? மக்கள் ஏமாந்து
கொண்டே இருக்க மாட்டார்கள். அவ்வளவு இளிச்சவாயர்களல்ல ஜனங்கள்.
இப்போது அவர்களைச் சாதாரணமாக நினைக்க முடியாது. கொஞ்ச நாளில்
புரிந்துகொள்வார்கள். கிராமபோன் ரிகார்ட் மாதிரி சொன்னதையே சொல்லிக்
கொண்டிருந்தால், அதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். என்னைப்
பொறுத்தவரையில், இன்னும் கொஞ்ச நாட்கள் இந்த ஆட்சி இருக்க வேண்டும்.
இன்னும் நிறைய சந்தி சிரிக்க வேண்டியதெல்லாம் இருக்கிறது. என்னைப்
பொறுத்தவரையில், இந்த ஆட்சி நீங்க வேண்டுமென்ற எண்ணம் கிடையாது.
இங்கேயே இருக்கலாம். மக்கள் உங்களைச் சுத்தமாகப் புரிந்துகொண்டு சுத்த
மாகக் காலி பண்ண வேண்டும். கடந்த 2½ ஆண்டுகளில் என்ன நடந்திருக்
கிறது ? மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் பல நன்மை
களைச் செய்திருக்கிறார்கள், அதற்காகப் பாராட்டுகிறேன் என்று சொன்
னார்கள். நான்கூட நினைத்துக்கொண்டேன், எதைக் கூறப் போகிறார்
என்று. அவர் சொன்னது, பாராட்டினதுகூட ஆஸ்தான வித்வானை நிய
மித்தது, கலைஞர்களுக்குப் பரிசு கொடுத்தது போன்றவைகளுக்குத்தான்.
அரிசனக் காலனிகளுக்கு லைட் போட்டதுபற்றிச் சொன்னார்கள். 4,500
ரூபாய் மதிப்பில் வீடு கட்டி, சாவியை அவனிடம் கொடுத்து, வீட்டிற்கு
அனுப்பிய நாங்களெல்லாம் அயோக்கியர்கள் என்று சொன்னார்கள். தலையை
உள்ளே வைத்தால் காலை வெளியே வைக்க வேண்டும், காலை உள்ளே வைத்
தால், தலையை வெளியே நீட்ட வேண்டும் என்று சொன்னார்கள். இது
மனிதர்கள் வாழும் வீடா அல்லது குருவிகள் வாழும் வீடா என்று கேட்
டார்கள். இப்போது தலையையும், காலையும் உள்ளே வைக்கும்படி வீடு

கட்டிக் கொடுக்கக்கூடாதா? 20,000 வீடுகளைக் கட்ட திட்டமிட்டு, மனுக்கள் பெற்றுவிட்டோமென்று சொல்லுகிறார்கள். 2,500 ரூபாய் கடன், 600 ரூபாய் மானியம். அரிசனங்களுக்கு வட்டியில்லை, அரிசனங்கள் அல்லாதவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன். இதற்கு ஒரு விளம்பரம்! வீடு கட்டிக் கொடுக்கிறோமென்று சொல்லி, 4,500 ரூபாய் போட்டு, 30,000 வீடுகள் கட்ட திட்டம் போட்டு, கட்டியவன் அயோக்கியன். மனை இல்லாதவனுக்கு மனை கொடுத்து, 4,500 ரூபாயில் வீடு கட்டி, திறப்பு விழா நடத்தி, பஸ் கம்பெனியை விட்டு ஏற்றி வந்து, விழாவில் உட்கார வைத்து, சாவியை கொடுத்து, இந்த வீடு உனக்குச் சொந்தம். அதில் போய் படுத்துத் தூங்கு என்று சொன்னவன் அயோக்கியனா? இப்போது அதுவும் இல்லை. மனை இருந்தால் 600 ரூபாய் மானியம், 2,500 ரூபாய் கடன் தருகிறோம் என்று சொன்னது இப்போது 1,500 ரூபாயாகியிருக்கிறது. இதற்கு விளம்பரம். இதற்கு என்ன விளம்பரம் செய்யப்படுகிறது? கிராமப் புறங்களில் வீட்டு வசதிகளைப் பெருக்க இத்தனை வீடுகள் கட்ட மனுக்கள் பெற்றிருக்கிறோம் என்று விளம்பரம் செய்யப்படுகிறது. ஏதோ நாட்டிலே இனாமாகத் தருவதுபோலச் சொல்லப்படுகிறது. இப்படி எத்தனை ஆண்டுகளுக்கு பொய்ப் பிரச்சாரம், தப்புப் பிரச்சாரம் இருக்க முடியும்?

சோழன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. அதில் ஒருவர் வேலை பார்த்தார். அவர் பெயர் கருணாகரன். வேலை பார்க்கும்போது அவர் இறந்து போனார். அதற்குப் பிறகு விழா வைத்தார்கள். அந்த விழாவிற்கு அவருடைய மனைவியை அழைத்து வந்து, அவருக்கு ஒரு எழுத்தர் வேலை போட்டுக் கொடுத்தார்கள். அவர் படித்தவர். எனவே எழுத்தர் வேலை கிடைத்தது. 25—9—1979-ல் வேலை கிடைத்தது. வேலை செய்து கொண்டிருந்த கணவர் இறந்துபோன அதே இடத்தில் வேலை தருகிறோம் என்று சொல்லி மேடையில் விளம்பரம் செய்தார்கள். அங்கேயே உத்தரவு போட்டு, அந்த உத்தரவைக் கொடுத்தார்கள். அவர் வேலையில் சேர்ந்தார். ஆனால் 7—1—1980-ல் அந்த அம்மாளுக்கு வேலை நீக்க உத்தரவு, விழா நடத்தாமல் கொடுத்தார்கள். விழா நடத்தி வேலை கொடுத்தார்கள் 25—9—1979-ல். அவர்களும் வேலையில் சேர்ந்தார்கள். ஆனால் 7—1—1980-ல் வேலை நீக்க உத்தரவைக் கொடுத்திருக்கிறார்கள். என்ன காரணம்? என்ன அவசியம் இதற்கு? விழா நடத்தியதற்கான போட்டோக்களை வைத்திருக்கிறேன். தலைவருக்கு அவற்றைக் காட்டுகிறேன். (தலைவரிடம் புகைப்படங்களைத் தருகிறார்) வேலை கொடுத்ததற்கான உத்தரவும் இருக்கிறது, வீட்டுக்குப் போகச் சொன்ன உத்தரவும் இருக்கிறது. இவர்களாக, பெருந்தன்மையாக, விதவைகளை அப்படிச் சும்மா விட்டு விடக்கூடாது என்று சொல்லி, அழைத்து வைத்து, விழா நடத்தி, பத்திரிகையில் விளம்பரம் போட்டார்கள். அவருக்கு



வேலை கொடுத்தது பத்திரிகையில் வந்தது. ஆனால் வீட்டுக்குப் போனது பத்திரிகையில் வரவில்லை. அவர்கள் என்ன செய்தார்களோ அது இப்போது நடக்கிறது. அவர்கள் யார் யாருக்கு என்ன பண்ணினார்களோ அதை ஊரில் இருக்கிறவன் பண்ணுகிறான். அவர்கள் என்ன பேசினார்களோ. அதுவே ஆயுதமாக வருகிறது. இதை அவர்கள் அனுபவிக்கவில்லை, நாங்கள் அனுபவிக்கவில்லை. நாடு அனுபவிக்கிறது. கேவலம் பஸ்ஸில் போக முடியவில்லை. என்ன பேசுகிறார்கள்? எவ்வளவு கேவலமாகப் பேசுகிறார்கள்? இந்தக் கட்சியை மட்டும் நான் பார்த்திருந்தால் பரவாயில்லை. காங்கிரஸ் கட்சியின் ஆட்சியைப் பார்த்திருக்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த அவையிலே இருந்தேன். டீக் கடையில் டீ குடிக்கும்போது எதைப்பற்றிப் பேசுகிறார்கள்—டீக்கு சர்க்கரை இல்லை என்றா பேசுகிறார்கள்? இன்றைக்கு 40 பேர்கள் போய்விட்டார்களாமே, இந்த ஓட்டலுக்கு எல்லோரையும் கூட்டிக் கொண்டு போயிருக்கிறார்களாமே என்று பேசுகிறார்கள். இவ்வளவு பெரிய சட்ட மன்றக் கூட்டம் நடக்கிறது. என்றைக்காவது இருக்கைகள் காலியாக இருந்ததா? எந்த ஆட்சியிலாவது சட்ட மன்றம் கூடிய நாளிலிருந்து, கவர்னர் உரையில் இவ்வளவு காலி இருந்ததா? என்னவாயிற்று?

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் டீக்கடையில் பேசுகிறார்கள் என்று தெரிவித்தார்கள். முதல் நாள் அப்படிப் பேசிக் கேட்டிருப்பார். அப்படி நடக்காத நிலையில், மறுநாள் என்ன பேசினார்கள் என்று தெரிவித்தால் சிறப்பாக இருக்கும்.

திரு. கோ. சி. மணி: சொல்ல வேண்டுமா, இதோ, அதைச் சொல்ல வேண்டுமா? (சிரிப்பு) நன்றாகப் புரிகிறது. இருக்கவேண்டிய இடத்தில் இருந்துகொண்டு, பேச வேண்டியதைப் பேசுகிறார் என்பது தெரிகிறது.

நான் சொல்ல வேண்டிய பிரச்சினைகள் இரண்டு. இன்றைக்கு விவசாயிகள் கடன் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். நான்கு பசலிக்கான தொகை பாக்கியை செலுத்திவிட்டார்கள். ஒரு பசலி தொகை பாக்கி செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். இந்தப் பசலி தாளடி, சம்பா தஞ்சை ஜில்லாவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. என்ன சொல்லப் போகிறார்கள்? பாதிக்கப்படவில்லை என்று சொல்லப் போகிறார்கள். இப்படிச் சொல்லிக் கொண்டே காலத்தை ஓட்டுவது, அவர்கள் ஒன்றுமில்லாமல் கடனுக்கு

[திரு. கோ. சி. மணி]   [1980 பிப்ரவரி 2

விண்ணப்பிப்பது, ரெனிவ்யு போர்ட் பழைய கடன்களை ஒத்திவைப்பது, ஒத்திவைத்து அவன் கடன் வாங்குவது, இப்படி இருக்கிறது. இதற்கு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டாமா? தண்ணீரை முன்னாடி திறந்து விட்டு

(பிற்பகல் 6.40.)

விட்டார்கள். இதுவரை எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில் காவிரியைத் திறந்து விட்டோம் என்று சொன்னார்கள். முன்னாடியே சுத்தமாகத் தண்ணீரைத் திறந்து விட்டுவிட்டார்கள். மாண்புமிகு வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் அவையில் உட்கார்ந்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் இல்லாவிட்டாலும், மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் பேசுவதைக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். அதேபோல மன்னியாற்றில் தண்ணீரே இல்லை. அந்தப் பகுதியில் இப்போது தான் பயிரிட்டிருக் கிறார்கள். பிப்ரவரி 15 ஆம் தேதி வரையாவது மன்னியாற்றிலே தண்ணீர் வரவேண்டும். அதேபோல காவிரியிலும் தண்ணீர் வர வேண்டும். அந்தப் பகுதியில் ஒரு தடவை போட்ட பயிர் எல்லாம் கெட்டுப் போய்விட்டதால் மறுபடியும் சாகுபடி செய்திருக்கிறார்கள். தண்ணீரே இல்லாத வகையில் இப்படிப்பட்ட தவறுகளை ஆட்சியாளர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த உதவியையாவது கடைசியாகச் செய்யவேண்டும். கடைசி என்று நான் சொன்ன உடனே ஆட்சியாளர்களுக்குக் கடைசி என்கிற எண்ணத்தில் சொல்ல வில்லை. கடைசி சாகுபடி என்பதால் சாகுபடிக்குக் கடைசி என்பதைத்தான் சொல்கிறேன். தயவுசெய்து இப்போது வைத்திருக்கின்ற விதிமுறையைத் தளர்த்தி தண்ணீர் விடவேண்டும். மன்னியாற்றிலும் விடவேண்டும் காவிரி யிலும் விடவேண்டும். எதில் வேண்டுமானாலும் தப்பு செய்திருக்கலாம். ஆனால் கூட்டுறவுத் துறையில் தப்பு செய்யவே கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற கோ. சி. மணியைப் போன்றவர்களை கொடுமைப்படுத்துவதை விட்டுவிட்டு, துறையின் முன்னேற்றத்துக்காக நாட்டுக்கு ஒரு சதவிகிதம் நல்லது செய்யலாமே. எங்களை அழிக்கவா மென்று எங்கள்மீது கேஸ் போட்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் கையாடல் செய்த, 4 ஆயிரம் ரூபாய் தவணையைக் கட்ட முடியாத ஒருவரை அட்வைசரி போர்டில் போட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டுகளைக் கலைத்தார்கள். அவர்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அவர்கள் அரசைக் கலைக்க வேண்டுமென்று சொன்னால் மட்டும் உடனே ரோஷம் வருகிறது. யாரைக் கேட்டு பஞ்சாயத்து போர்டுகளைக் கலைத் தார்கள்? விளக்கு எரியவில்லை, அதனால் பஞ்சாயத்து போர்டுகளைக்



1980 பிப்ரவரி 2]   [திரு. கோ. சி. மணி]

கலைத்தோம் என்று சொன்னார்கள். பிரசிடென்டுகளை எல்லாம் பதவியி லிருந்து வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். இப்போது விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யாமல் இருப்பதால், மக்கள் அவர்களை வீட்டுக்குப் போகச் சொல்லப் போகிறார்கள். பஞ்சாயத்துக்களைக் கலைக்க எப்படி அதிகாரம் இருந்ததோ அதுபோல் மக்களுக்கும் உங்கள் அரசைக் கலைக்க அதிகாரம் இருக்கிறது. பஞ்சாயத்து போர்டு இருந்தால் மட்டும் அவர்கள் மக்களின் குறைகளைப் போக்க மாட்டார்களா? இப்போது மட்டும் ரோடெல்லாம் போட்டாய் விட்டதா? தண்ணீர் ஒழுங்காக வருகிறதா? லைட் எல்லாம் ஒழுங்காக எரிகிறதா? இப்போது எந்தெந்த லைட் எரிகிறது, எந்தெந்த குழாய்களில் தண்ணீர் ஒழுங்காக வருகிறது, எங்கெங்கு ரோடு போடப் பட்டிருக்கிறது என்று நாங்கள் ஆட்சியாளர்களைக் கேட்கக் கூடாதா? அன்றைக்கு எந்தெந்த ஊர்களில் அரிசி வினியோகம் சரியாக இல்லையென்று எங்களைப் பார்த்துக் கேட்டார்களே. எதனால் பஞ்சாயத்து பிரசிடென்டு களை வீட்டுக்குப் போகச் சொன்னார்கள்? ஆயிரக்கணக்கான பஞ்சாயத்து போர்டுகளைக் கலைத்தார்களே, இன்றைக்கு நூற்றுக்கணக்கில் உள்ளவர் களைக் கலைக்க முடியாதா? குறைபாடுகள் இருந்தால், இப்போது கிராம சேவக்குகளைத்தான் கேட்க வேண்டியிருக்கிறது. பல்புகளைப் போடும்படி அவர்களைக் கேட்டால், எங்களுக்கு உத்தரவு வரவில்லையென்று அவர்கள் சொல்கிறார்கள். வாய்ச் சொல்லுக்கு மட்டும் உங்களுக்கு எந்தக் குறைச் சலும் இல்லை.

ஓட்டலில் குடிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். ஓட்டலில் அல்லது தனி அறையில் குடிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ரோட்டில் கூட குடித்துக்கொண்டு நடக்கலாம். அங்கே குடித்தான், இங்கே குடித்தான் என்று அவர்கள்மீது 'வேறு கேஸ்' காத்திருக்கிறது. மதுவிலக்குக் கொள் கையைப் பொறுத்தவரை, இப்போழுது முழுமையாக அவிழ்த்து விட்டு விட்டார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரை, மகாத்மா காந்தியின் மறு உருவம். அப்படிப்பட்ட வர்களைப்பற்றி நான் பேசலாமா? மகாத்மா காந்தி உயிருடன் இருந்திருந் தால், இவரிடம் அவர் கற்றிருப்பார் என்பதுபோல் அன்றையதினம் பேசினார்கள். அப்படிப்பட்டவர்களுடைய ஆட்சியில் இப்படி முழுமையாக மது விலக்கை அவிழ்த்து விடலாமா?

எங்கள் தலைவர் அன்றையதினம் மதுவிலக்குக் கொள்கை தொடர்பாக முடிவு எடுத்தபோது கூட "கொழுந்து விட்டு எரியும் நெருப்பு வளையத் துக்குள் கொளுத்தப்படாத கற்பூரமாக எத்தனை நாளைக்குத்தான் தமிழ்நாடு இருக்க முடியும்?" என்று சொல்லி நிரந்தரமாகக் கூட அல்ல,

[திரு. கோ. சி. மணி] [1980 பிப்ரவரி 2

தற்காலிகமாகத்தான் ஒத்தி வைத்தார்கள். இப்போது மறுபடியும் சுத்தமாக அவிழ்த்து விட்டார்கள். இவ்வளவு கொஞ்சநாளைக்குள் கொள்கையில் ஏன் இவ்வளவு மாறுதல்? அமைச்சர்கள் எல்லாம் எழுதிக் கொடுத்ததை அவர் கிழித்துப் போட்டிருப்பார் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே அவர்களுக்கு இப்போது நேரமில்லை. இந்த நாட்டையும் எங்கே காப்பாற்றப் போகிறார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்க முடியாமல் என்னுடைய வருத்தத்தையும் குறைபாடுகளையும் சொல்லி இத்துடன் விடைபெறுகிறேன். வணக்கம்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Mr. Deputy Chairman, Sir, I am grateful to you for giving me this opportunity.

As a social worker, I would like to record here that I have never been a member of any political party nor do I have any intention of joining any party in the future. What I am going to convey here is, therefore, my views, as a social worker, on problems relating to the welfare of women and children. Naturally, my views would be impartial and unbiassed. Gandhiji has said that a social worker should be fearless and this is possible only if he or she is above party politics.

I would like personally to record my grateful thanks to the Hon. the Chief Minister who, in spite of compulsion, has not thought of scrapping or even suspending prohibition. I mention about compulsion because we have heard the present Minister for Finance at the Centre, a very able administrator, saying that the States are free to follow their policies on Prohibition in view of the fact that we have, in India, a federal set-up where the States have their own rights. It is natural for him, as Finance Minister, to be worried about providing funds to the 22 States and the Union Territories. So, he may find this to be an easy solution. But, at what cost ? The Governor's Address has welcomed the successful implementation of the 20-Point Programme. This programme will have no meaning if we are going to encourage poverty still further. The Finance Minister at the Centre will have to find more funds to afford succour to the poor under the 20-Point Programme and to raise the standard of those who form more than 40 per cent of our population and who are already steeped in poverty.



1980 பிப்ரவரி 2] [Thirumathi Mandakini Krishnamurthi]

Removal of Prohibition is going to make those people still poorer and there will not be any salvation for them. Our welfare schemes will have no meaning if we are thinking in a light way about Prohibition. I am sorry to say that the vital subject of Prohibition is so lightly dealt with. Very recently, I read a news item that, after the swearing-in ceremony in Pondicherry, people were remarking that they could drink as they liked. But, there are also people who shed tears having in view the safety of women. May I tell the House that most of the crimes like rape, murder and robbery are committed only by those who are under the influence of drink?

(பிற்பகல் 6.50)

Many traffic accidents take place when the driver is under the influence of drink and injustices to women are all done under the influence of drink. Hence, if we are really concerned about the safety of women, we shall not treat this lightly. Some people have gone further to say that Prohibition helps family planning. May I request them not to suggest this costly method of family planning as our traditional methods are more economical ? Investigations have shown that children of addicts have some abnormalities. Do we want our progeny to be weak ? We are a virile nation and we want our people to be virile. I read a news item in an international paper that the great Vodka is causing concern to Russian authorities, since drink has caused great havoc among the younger generation. This has caused a fall in intellectual standards among the young naturally resulting in fall in scientific pursuits. How many of our younger generation have come to attainment of Nobel Prize standard ? Drink will worsen the situation and we can never aspire to have Nobel Prize winners in scientific pursuits. Do we want our future generation to be weak ? If not, we should not treat prohibition lightly.

When Prohibition was suspended in 1973-74, it was I who first came out with a number of articles in papers and took active part in Satyagraha. The Tamil Nadu Press was very considerate in publishing them. People warned me : " If you oppose the Government, you and your institutions will suffer ". This did not deter me as I was tackling a social problem in an unbiassed manner. I would like to plead with our Hon. the Chief Minister that he should pursue the policy of Prohibition, as he is a votary of Prohibition, and I would request him to withdraw the concessions that he has announced. I am sure women would welcome his action if he withdraws the concessions. I would also like to record here

that if there is any attempt to scrap or suspend prohibition in Tamil Nadu, I will be the first to start an agitation against such a move as I did in 1974-75, without fear or favour.

Prohibition is an integral part of the 20-Point Programme. Drink and dowry are two Devils which have caused untold suffering to the people. To check the growth of drink offences, it is essential to punish the illicit distillers. But so far as the drink addicts are concerned, we can think of opening a Home for them where psychological treatment could be given to them.

The great noble lady Mother Teresa is an example to our social workers and she has opened in western countries a number of Homes for such addicts. During my recent visit to Australia, I saw these sisters of charity carrying fully drunk non-violent people lying on roads to these Homes for treatment and for weaning them away from drink. I, therefore, appeal that such Homes could be opened for these drink addicts instead of awarding them jail terms so that their families may not suffer. There is need for the formation of a Prohibition Advisory Council composed of those dedicated to the cause without any party politics; only those who have no political affiliations should be its members and these Advisory Councils could be formed in districts and rural areas.

Regarding safety of women, I have to appeal once again to the Government, as I have repeatedly done before, that Karate, Jujutsu and Kung Fu should form an integral part of our Physical Education Training Programme. These teachers can in turn teach them to their students in Schools. Those who have already passed and are working as Physical Education Teachers could be given an orientation course for training in these Karate, etc. We have now a Director of Sports and it is a welcome sign. I hope this will be quickly done. Private coaching is expensive; hence, there is necessity for Government-sponsored training. I would like to say that if women know self-defence methods, parents will have no fear and the police will have no worry. These methods can be constantly demonstrated through the media of Television. If a few women give good treatment to some rough necks and eve teasers, such atrocities would be minimised. In the later sixties, after the Ravindra Sarover incident in Calcutta, I wrote a number of letters regarding self-defence. The Press was kind enough to give wide publicity to those letters and I was congratulated by many people,



uding Thiru M. G. Ramachandran who had just then released his 1, " Adimai Penn ". As he is now at the helm of affairs of the te, I am sure that he will quickly see that these programmes are luded in the Physical Education programme.

Since the eradication of the dowry system is an active programme under the 20-Point Programme, I would like to make a few ggestions about that. What we want is not cheap publicity by king young men to go from door to door saying "நான் தட்சணை வாங்கமாட்டேன். To my knowledge and If I am correct, lf of them have married happily with dowry amounts in their ckets. What we need is temporary homes for the women-victims the dowry system. In this respect. we have a fine example of Gujarathi gentleman of Bombay. As an aluminium industrialist, amassed wealth but did not get married. His mother advised m to start a chain of Bapuna Ghars, where women could be ceived, irrespective of the differences in their incomes. She made is suggestion because suicides due to the dowry system were very mmon in Gujarat. He started such homes in seven or eight places cluding Bombay and Calcutta. Grants for such homes were ven by the Lotus Trust. In 1968-69, I applied for grant for arting such a home. The Lotus Trust were willing to give the ant but their condition was that the application should come rough the State Government. The State Government wanted the ant for their own Vigilance Home whereas the Lotus Trust anted a home to be started with the ideal of housing the victims f the dowry system. Somehow. the Government were averse to e Hindi type of name 'Bapuna Ghar'. I suggested that I would ithdraw my application if the Government would start a home ith the ideal of housing the victims of the dowry system. I even iggested that if the Government had any objection to the name Bapuna Ghar ", they could name the institution as 'Thanthayar llam'. But. due to the coming in of certain prejudices, the Trust ecame upset and nobody was benefited. In social service, personal prejudices should not come. Anyway, it is all an old story iow. What we can do now is to start separate wings in service iomes to receive such women so that suicides may be avoided and iverted. I have a reason for suggesting this. If we start separate iomes for this type of women, it would cost more and we can start only a very few homes. On the other hand, we are already iaving a number of Service Homes and each of those Homes can iave a separate wing where the women who find it difficult to carry on due to the dowry evil can find immediate succour. Normally. 75 per cent of such women get reconciled after some time and

their husbands come and take them back. The remaining 25 per cent can become permanent inmates of the Service Homes and a training programme can be started for them. Quick action and early implementation of schemes form part of the foundation for the success of any welfare programme. Delay in such matters is harmful. Those who have already become victims of the dowry system have to be provided immediate succour.

Apart from providing succour to the victims of the system, we should also find ways and means for eradicating the dowry evil from society. For this, I would suggest that we may start a Marriage Funding Corporation. This evil is very rampant in the Hindu society. Though the Muslims and the Christians have no such system. they have also started it anew. I appeal to them not to come under the influence of the dowry-system prevalent in the Hindu community. In the Hindu religion, there is a common belief that feeding a poor person and arranging the marriage of a deserving girl would earn for a person a lot of 'Punya'. We can approach people who have such belief and collect donations from them to fund the Marriage Funding Corporation. This Corporation can invest its surplus funds in organisations like the TIDCO or the Tamil Nadu Transport Development Corporation where they pay interest at about 12 per cent.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிமுடிக்கும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

Thirumathi MANDAKINI KRISHNAMURTHI : This Corporation can give loan to deserving parents for the marriage of their daughters. Normally, the parents may have a feeling of self-pride and they may not accept anything free. So, they may be given loans at a low interest of, say, 4 or 5 per cent. This will, to some extent, avoid the ill-effects of the dowry-system. This Corporation can have an organisation for marriage-counselling and also an arrangement for recording the marriages. The number of Kalyana

*(பிற்பகல் 7.00)*

Mandapams run by the Hindu Religious Endowments Department can be let free of rent for such marriages. I am sure we can solve the problem to some extent by this kind of relief. To this, a Marriage Counselling Council could be attached and we can get the help of people who are interested in the abolition of dowry. In many Tamil journals, we see a number of photographs of young men who say "நான் வரதட்சிணை வாங்க மாட்டேன்" and



most of these men belong to the lower middle class families. These Councils can utilise the offer of these young men and see that they are happily married to the girls who had approached the councils for marriage. It is heartening to find that only young men from the lower middle class have greater sympathy than the boys of the affluent society. I would call them great failures, because it is their habit to demand four F's, namely, Flat, Fiat, Fridge and Foreign trip. I think it is very much degrading for young women to marry such young men and they should come forward to refuse to marry such young men, so that such demand for money will come down. I was away from India and I could not go through the script of the drama on dowry evil sent by Mr. P. Nilakantan, Director of the Film Institute, by name, "Manamagal Vandhal". On my return, I read this book and again and again I asked myself the question. Should such a sad end come to the two girls due to dowry evil? Such dramas could be enacted on the occasion of marriages that are to be celebrated by the Marriage Council, so that people will be educated on the evils of dowry since it is one of the important programmes of 20-point Programme.

I have spoken at great length on social welfare measures. Now I would like to congratulate our Hon. Chief Minister and our Hon. Education Minister and the staff of the Education Department on the successful implementation of plus Two Vocational stream. It is very flexible and in spite of vocationalisation, the academic virtue of the scheme is also maintained, and thereby the standard is upheld. I am sure this will improve day by day.

Then there is mention about Flood Relief. I wish to state that this is the first time, the loans and advances are sanctioned expeditiously and in a considerate manner. This is the first time we, as Managers of the institutions, received a circular from the department asking us : "What is the extent of your loss? In what way have the institutions suffered during the floods?" We have already furnished the details of the damages caused and I am sure that the Education Department will take quick action to sanction grants for repairs to those buildings.

Sir, I have only one more point to make. Now, for getting recognition for these institutions, structural stability certificates have to be obtained in respect of the buildings in which the institutions are located. These structural stability certificates are given by the Public Works Department. The Engineers of that Department are always very busy and delays occur in getting the certifi-

cates. Therefore, I think that we can have a separate Engineer in the P.W.D. to deal with applications for the issue of structural stability certificates. Even in cases where the Engineer of the P.W.D. gives a structural stability certificate for a period of 10 or 20 years, the Collector gives a licence only for 1-1|2 years. So, the institution has to go through the arduous process of getting the certificate year after year. If there is any delay, the institution gets letters from the Department threatening withdrawal of recognition. Therefore, I would like to suggest that some easy method may be introduced to ascertain the structural stability of the buildings.

With these words, I conclude my speech and I hope that the various welfare programmes would be quickly implemented. Thank you.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 4—2—1980 அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.*

*பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.*

*(பிற்பகல் 7.05)*

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

46. Notification issued with G.O.Ms. No. 1468, Commercial Taxes and Religious Endowments, dated the 12th September 1979 in regard to delegation of powers to Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Department in respect of nomination of trustees under section 49 of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. [Laid on the table of the House under section 116(3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959]

47. Notification issued with G.O. Ms. No. 1304, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 30th November 1979 in regard to inclusion of the post of Social Worker in the Tamil Nadu Jail Subordinate Service within the Commission's purview. [Laid on the table of the House under Article 320(5) of the Constitution of India].



48. Notification issued with G.O. Ms. No. 2040, Revenue, dated the 14th September 1979 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 3987 (*b*) of 1971, dated the 7th September 1971, published at page 2 of Part II Section 1 of the *Tamil Nadu Government* Gazette Extraordinary, dated 8th September 1971, as subsequently amended. (English and Tamil). [Laid on the table of the House under section 18(4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969)].

49. Notification issued with G.O. Ms. No. 2713, Home, dated the 30th October 1979 in regard to amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

50. Notification issued with G.O. Ms. No. 3146, Home (Transport-I), dated the 22nd December 1979 exempting the vehicles WBG 9683, TMX 9675 and TMP 9884 belonging to the Trade Representation of the U.S.S.R. in India, Madras Branch from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, with effect from the 1st January 1980. [Laid on the table of the House under section 25(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

51. Notification issued with G.O. Ms. No. 1767, Commercial Taxes and Religious Endowments, dated the 29th November 1979 in regard to an amendment to Rule 18 of the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

52. Fourth Annual Report of the Tamil Nadu Civil Supplies Corporation Limited. Madras for the year 1975-76. (Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

53. Notification issued with G.O. Ms. No. 2025, Agriculture, dated the 2nd November 1979 in regard to declaration of notified market area in respect of Melur Market under section 5(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

54. Notification issued with G.O. Ms. No. 1775, Commercial Taxes and Religious Endowments, dated the 3rd December 1979 in regard to an amendment to the Revenue Department Notification III No. 162 of 1972, dated the 9th December 1971, published at page 372 of Part III of the *Tamil Nadu Government Gazette*, dated the 15th March 1972. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

55. Notification issued with Government letter No. 110747|AMII|79-2, Agriculture, dated the 17th December 1979 in regard to an amendment to the Agriculture Department Notification No. II (2)|AG|2978|79, dated the 7th May 1979, published at page 269 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 23rd May 1979, as subsequently amended. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

56. Notification issued with G.O. Ms. No. 2670, Home, dated the 25th October 1979 in regard to an amendment to rule 275 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

57. Notification issued with G.O. Ms. No. 2199, Agriculture, dated the 5th December 1979 in regard to amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962 [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

58. Fifth Annual Report of the Poompuhar Shipping Corporation Limited for the year 1979. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1959)]

B. Reports, Notifications and other Papers.

*Nil.*

---

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

இங்கட்கிழமை, 1980 பிப்ரவரி 4.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் ற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 21, 22, 23 ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Inspectresses of Girls' High Schools*

* 24. *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the hon. he Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that there is a post called Inspectress f Girls' High Schools exclusively for the Girls' High Schools, while ersons of both sex are being appointed for the posts of District ducational Officer and Chief Educational Officer in the Education epartment; and

(*b*) whether the Government are considering a proposal to bolish this post ?

மகளிர் பள்ளி ஆய்வாளர்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித்துறையில் மாவட்டக் கல்வி அலுவலர், மாவட்ட தன்மைக் கல்வி அலுவலர் போன்ற பதவிகளுக்கு ஆண் அதிகாரிகளும், பண் அதிகாரிகளும் நியமிக்கப்படும்போது, மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு என்று ஒரு தனி அலுவலர் (Inspectress of Girls' High Schools) ருப்பது உண்மையா ?

(இ) இப்பதவியை நீக்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து குகிறதா ?

[1980 பிப்ரவரி 4

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம். பெண்கள் படிக்கும் பள்ளிகளை பெண் அதிகாரிகள் ஆய்வு செய்வதுதான் பொருத்தமானது என்ற காரணத்தால் மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் பதவி இருந்து வருகிறது.

(இ) இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பெண்கள் படிக்கின்ற பள்ளிகளுக்கு பெண் அதிகாரிகள்தான் இருக்க வேண்டு மென்ற முறையை மாற்றுவதற்கான பரிசீலனை இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது Panal Inspection என்ற முறையைப் புகுத்தியிருக்கிறார்கள். இந்த முறையின் மூலமாக, பக்கத்திலே இருக்கின்ற மகளிர் பள்ளித் தலைமையாசிரியர்கள் அல்லது மூத்த ஆசிரியர்கள் மகளிர் பள்ளிகளில் நடத்தும் பாடங்களைக் கண்காணிக்கின்ற வசதி யிருக்கிறது. ஆகவே Inspectress பதவி தேவையில்லை யென்பது என்னுடைய கருத்து. ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு மாவட்டக் கல்வி அதிகாரிகளும், ஒரு முதன்மைக் கல்வி அதிகாரியும் இருக்கும்போது, Inspectress Post தேவையில்லை, அதை மாற்ற வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேனல் இன்ஸ்பெக்ஷன் என்பது பாடங்களையெல்லாம் சரியாக நடத்துகிறார்களா என்று பார்ப்பது. ஒவ்வொரு பாடத்திற்கும் ஒருவரைப் போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள், பெண்கள் படிக்கிற பள்ளிகளுக்கு பெண் அதிகாரி இருந்தால் நல்லது என்று கூறுவார்கள் என்று எதிர் பார்த்தேன். அப்படியிருந்தால், அது வரவேற்கத்தக்கது. ஆனால் அதற்கு மாறாக இன்ஸ்பெக்ட்ரஸ் பதவியை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்து கிறார்கள். பெண்கள் கல்விக்காக தனி பெண் அதிகாரிகள் மேல் மட்டத் திலேயே இருக்க வேண்டும் என்று விரும்புவதுதான் இப்பொழுதிருக்கிற சிந்தனை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஆண்கள் பள்ளிகள் மாவட்டக் கல்வி அதிகாரியின் கட்டுப்பாட்டுக்குள்ளும், பெண்கள் பள்ளிகள் Inspectresses கட்டுப்பாட்டுக்குள்ளும் என்று பிரிக்கப் பட்டிருப்பதால், நிர்வாகத்திலே பல கோளாறுகள் நடைபெறுகின்றன என்பதை நடைமுறையிலே நாங்கள் உணர்கிறோம். ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த நடைமுறைக் கோளாறுகளை நிவர்த்திக்க மாற்று வழி செய்ய முன்வருவார்களா ?



1980 பிப்ரவரி 4]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கோளாறுகள் எதையும் எங்கள் கவனத்திற்குக் கொண்டுவராமல், இருக்கின்ற அதிகாரிகள் தேவையில்லை என்ற பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக் கிறார்கள். சங்கடங்கள் ஏதாவது இருந்து அவற்றை எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால், இப்பொழுதிருக்கிற அமைப்பை வைத்துக் கொண்டே தீர்க்க முடியுமா என்று பார்க்கலாம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** ஆண்கள் பள்ளிகளுக்கு பெண் மாவட்டக் கல்வி அதிகாரிகள் சென்று ஆய்வு செய்கிறார்கள். அதைப்போலவே பெண்கள் பள்ளிகளுக்கு ஆண்கள் சென்று ஏன் ஆய்வு நடத்தக் கூடாது? இந்த டிஸ்பாரிட்டி ஏன்? ஆண் டி.ஈ.ஓ.-வாக இருந்தாலும் பெண் டி.ஈ.ஓ.-வாக இருந்தாலும், பெண்கள் பள்ளியை ஆய்வு செய்யலாம் என்ற புதிய முறையைப் புகுத்த அரசு ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பெண்களுக்காக பிரத்தியேகமான நடவடிக்கை தேவைப்படுகிறது என்று இன்றும் நம்புகிறோம். ஆகவே இந்த பிரத்தியேகமான அதிகாரிகள் இருக்க வேண்டியது அவசியம்.

**திரு. செ. முத்துசாமி :** தற்பொழுது இன்ஸ்பெக்டரஸ் ஆக இருக்கக் கூடியவர்களுக்கு 'ஏ'-வில் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களுக்குக் கீழே உள்ள ஆசிரியர்களை நியமிக்கவும், மாறுதல்களைப் போடவும் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் 'பி'-யில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் இல்லை. ஒன்று இந்த இரண்டு அதிகாரங்களையும் கொடுக்க வேண்டும் அல்லது இந்த அதிகாரங்களையெல்லாம் முதன்மைக் கல்வி அதிகாரியிடம் வழங்க வேண்டும். ஏதாவது ஒருமுகமான அதிகாரத்தை வழங்க வேண்டும். அத்தகைய நடைமுறையைக் கொண்டுவர அரசு முயலுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பிரச்சினையை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாவட்டக் கல்வி அலுவலர்களைப் பொறுத்த வரையில், 50 முதல் 60 பள்ளிகள் வரையில் ஆய்வு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் இன்ஸ்பெக்டரஸ் ஆஃப் கேர்ல்ஸ் ஸ்கூல்ஸ்-ஐப் பொறுத்த வரையில், மாவட்டத்தில் உள்ள 110 முதல் 120 பள்ளிகள் வரையில் ஆய்வு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே ஆசிரியர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் பெருத்த காலதாமதம் ஏற்படுகிறது. எனவே இந்தப் பதவியை மாவட்டத்திற்கு இரண்டு மூன்று என்று அதிகரித்து 50 முதல் 60 வரை பள்ளிகளை ஒரு இன்ஸ்பெக்டரஸ் ஆஃப் ஸ்கூல்ஸ் ஆய்வு செய்யும் நிலையை உருவாக்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. தாமஸ் அவர்களும் ஒரே அணியில் இருந்துகொண்டு, இரண்டு முரணான கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். ஒருவர் இன்ஸ்பெக்டரஸ் பதவியை ஒழிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்; மற்றொருவர் அந்தப் பதவியின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று சொல்கிறார். திரு. தாமஸ் அவர்கள் சொன்ன யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ம. சங்கரலிங்கம்: பெண்கள் கல்வி மிகப் பின்தங்கியிருந்த சமயத்தில் பெண்கள் கல்வியை ஊக்குவிக்கிற நிலையில் தனி பெண்கள் பள்ளியை ஏற்படுத்தவும், ஆய்வு செய்ய பெண் அதிகாரிகளை நியமிக்கவும் வேண்டிய நிலை இருந்தது. இப்பொழுது ஓரளவு வளர்ந்து இரண்டு நிலையும் சமமாக இருக்கின்றது. சில பகுதிகளில் பெண்கள் கல்வியில் மிஞ்சியிருக்கிறார்கள். சில பகுதிகளில் இரண்டு சாராரும் சேர்ந்தும் படிக்கிற நிலை இருக்கிறது. கல்வி அதிகாரிகளிலே பெருமளவு பெண்கள் இருக்கிறார்கள் என்றும் சொல்லப் படுகிறது. ஆகவே இந்தத் திட்டத்தை புனராலோசனை செய்து, மாற்றி திருத்தியமைக்க அரசு தன்னுடைய சிந்தனையைச் செலுத்துமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசாங்கத்தினுடைய இன்றைய கருத்து, இத்தகைய பெண் அதிகாரிகள் இருக்க வேண்டும் என்பதுதான்.

## *Mobile Science Laboratory Vans*

*25 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether Mobile Science Laboratory Vans are functioning in all the educational districts in the State to cater to the needs of Science teaching;

(*b*) the amount allotted for each such van for a year for the purchase of equipments and chemicals; and

(*c*) the amount actually spent in each educational **district** during 1977-78 ?



## அறிவியல் ஆய்வுக்கூட இயல் ஊர்திகள்.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அறிவியல் கல்வித் தேவைகளை நிறைவு செய்வதற்காக, இம் மாநிலத்திலுள்ள கல்வி மாவட்டங்கள் எல்லாவற்றிலும் அறிவியல் ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் இயங்கி வருகின்றனவா?

(இ) ஆய்வுக்கூடச் சாதனங்களும் இரசாயனப் பொருள்களும் வாங்க ஒவ்வொரு ஊர்திக்கும் ஆண்டொன்றுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது?

(உ) இந்த வகையில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், 1977-78-ஆம் ஆண்டில் உண்மையில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தற்பொழுதுள்ள 58 கல்வி மாவட்டங்களில் 42-ல் இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட ஊர்திகள் செயல்பட்டு வருகின்றன.

(இ) & (உ) இந்த 42 இயங்கும் ஆய்வகங்களில் பெரும்பாலானவை அண்மை ஆண்டுகளில் வாங்கப்பட்டவை. ஆகையால் ஆண்டுதோறும் உபகரணங்கள் வேதியியல் பொருள்கள் ஆகியவற்றுக்காகச் செலவிடத் தேவைப்படவில்லை. ஆயினும் 1977-78-க்கு முன் வாங்கியிருந்த 36 இயங்கும் ஆய்வக ஊர்திகளுக்கு ஊர்திக்கு ரூ. 2,000 வீதம் அறிவியல் உபகரணங்கள் மற்றும் வேதியியல் பொருள்கள் 1976-77, 1977-78 ஆண்டுகளில் வாங்கி வழங்கப்பட்டன.

திரு. பா. ரா. தாமஸ்: இந்த ஆய்வுக்கூட ஊர்திகளுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள தொகை மிகவும் குறைவாக இருப்பதால், அதனுடன் இணைக்கப் பட்டுள்ள உதவி ஆசிரியர்கள் தங்களுடைய பணியைச் சிறப்பாகச் செய்ய முடியவில்லை. ஊர்திகளுக்கு வேண்டிய டீசல், பெட்ரோல் ஆகியவை தேவையான அளவிற்குக் கிடைக்கவில்லை. இரண்டாவதாக, ஆய்வுக் கூடத்திலுள்ள இரசாயனப் பொருள்களை போதுமான அளவிற்கு வாங்க முடியாததால் ஊர்திகள் செயலற்றுப் போயிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? ஆகவே, ஒதுக்கீட்டை அதிகரிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட புகார்கள் எங்கள் கவனத்திற்கு வரவில்லை என்றாலும் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

[1980 பிப்ரவரி ௪

திரு. க. இராமமூர்த்தி : 58 கல்வி மாவட்டங்களில் 42 கல்வி மாவட்டங்களுக்குத்தான் அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிடைக்காத 16 மாவட்டங்கள் எவையெவை ? எத்தனை ஆண்டுகளாகக் கிடைக்கவில்லை ? எப்பொழுதிலிருந்து இந்த வசதி கிடைக்க அரசு ஏற்பாடு செய்யும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தென் சென்னை, சைதாப்பேட்டை, திருவள்ளூர், திண்டிவனம், கரூர், ஈரோடு, சென்னை கிழக்கு, திருப்பூர் ஆகிய கல்வி மாவட்டங்களுக்கு இதுவரையில் இந்த வண்டிகள் வழங்கப்படவில்லை. நிதி வசதிகளுக்கேற்ப அங்கும் வழங்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு வாகன வசதி இல்லாததால், பல நேரங்களில் இந்த அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகளைப் பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நான்கைந்து கல்வி மாவட்டங்களுக்கு அதிகாரியாக இருக்கக் கூடிய முதன்மைக் கல்வி அதிகாரிக்கு இதுவரை வாகன வசதிகள் இல்லாத நிலைமையைக் கருத்திற் கொண்டு, அவர்களுக்கென தனியாக வாகனங்களை வழங்கும் முயற்சியில் அரசு ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த வண்டிகளை மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் தங்களுடைய பணிகளுக்காகப் பயன்படுத்துவதை அரசு விரும்பவில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் யாராக இருந்தாலும் பயன்படுத்தக்கூடாது என்பது நம்முடைய நோக்கம். அவர்களுக்குத் தனியாக வாகனம் வழங்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அது தனியாகச் செய்யப்படும்.

(பிற்பகல் 4-10)

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த இயங்குகின்ற அறிவியல் வண்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை பள்ளிகளுக்குச் செல்ல வேண்டும் ? குறைந்த அளவு அவர்கள் எத்தனை 'பிராக்டிகல்' நடத்த வேண்டும் என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா ? அந்த வண்டிகள் எந்தப் பள்ளிகளுக்குப் போய் வருவதாக ரிப்போர்ட் இருக்கிறது ? அறிவியல் கூட வசதியில்லாத பள்ளிகளிலும் அவர்களே எல்லா பிராக்டிகல்களும் டெமான்ஸ்ட்ரேஷன்களும் செய்யவேண்டியதாக இருக்கிறதா ? அதற்கு கண்காணிப்பு முறை இருக்கிறதா ? அந்த முறைப்படி செயல்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுவரையில் இருந்துவந்த 32 வண்டிகளுக்கான விவரங்களில் சராசரி விவரப்படி ஆண்டுதோறும் சுமார் 62 பள்ளிகளுக்கு பரிசோதனைகள் செய்து காட்டியிருக்கின்றன. சராசரியாக



ஒவ்வொரு வண்டியும் 51 நாட்கள் சோதனை செய்து காட்டியது என்ற விவரம் இங்கே தரப்பட்டிருக்கிறது. எல்லாப் பள்ளிகளுக்குமே பரிசோதனைக் கூட வசதிகள் இல்லை என்று நாம் சொல்லிவிட முடியாது. அப்படி இல்லாத பள்ளிகளுக்குத்தான் நாம் இவைகளை அனுப்பிக்கொண்டிருக்கிறோம். இதிலே கூடுமானவரையில் அரசினுடைய தற்போதைய கருத்து மாணவர்களே பரிசோதனை செய்ய வேண்டும் என்பதுதான். 1967-ல் எலக்டிவ்ஸ், இப்படிப் பாடங்களை எடுத்ததன் மூலம் கடந்த 10 ஆண்டுக்காலம் பரிசோதனை செய்கின்ற வாய்ப்பு இல்லாமல் விஞ்ஞான அறிவு வளர்ச்சியானது பெருமளவுக்கு பாதிக்கப்பட்டது. மாணவர்களே பரிசோதனை செய்ய வேண்டுமென்ற திட்டத்தைத்தான் கொண்டு வரவேண்டும் என்று நாம் கருதுகிறோம். 10-வது, 11-வது வகுப்பில் நாம் போதித்தாகவேண்டும் என்று அந்த முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். என்றாலும், ஆரம்ப நிலையிலேயே எல்லா மாணவர்களும் பரிசோதனை செய்ய வேண்டும் என்றும், அது பரிட்சைக்குரிய பாடம் என்றும் கருதுகிறோம். அதை வலியுறுத்துகிறோம். நம்முடைய நோக்கம், 9-வது, 10-வது வகுப்பிலேயே கூட மாணவர்கள் பரிசோதனை செய்ய வேண்டுமென்பதுதான். ஆகவே இந்த முறையில் நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன யோசனைகள், கருத்துக்கள்பற்றி நிச்சயமாகக் கவனத்தில் கொண்டு, அந்த மாணவர்களுக்கு, பரிசோதனை செய்கின்ற வாய்ப்புத் தருகின்ற முறையைக் கொண்டு வந்து, அந்த முறையில் அவர்களுக்கு விஞ்ஞான அறிவைப் போதிக்க விரும்புகிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : எல்லாப் பள்ளிகளிலும் உடனடியாகச் செய்ய முடியாது என்பதற்காகத்தான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது கொண்டுவரப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. எத்தனை பள்ளிகள் விஞ்ஞானக் கூட வசதி பெற்றிருக்கின்றன என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அங்கெல்லாம் வண்டிகள் போகவேண்டிய அவசியம் இல்லை என்பதை நிர்ணயம் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு செய்ய வேண்டும். அதை அரசு செய்ய முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வருகின்ற 13-ஆம் தேதிகூட இந்த ஆய்வுக்கூட வண்டிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு நடத்துகின்ற டெபுடி இன்ஸ்பெக்டர்கள் கூட்டத்தை திருச்சியிலே கூட்ட இருக்கிறோம். அப்போது அதைப்பற்றிப் பரிசீலித்து தக்க முடிவுகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## National Foundation for Teachers' Welfare.

* 26 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the balance amount remaining as on 1st October 1978 out of the amount collected in the State for the National Foundation for Teachers' Welfare;

(b) whether any complaints have been received to the effect that the teachers are not getting financial assistance properly from this fund; and

(c) if so, whether the Government will come forward to distribute the amount Districtwise and disburse on a wider scale?

### ஆசிரியர்கள் நல தேசிய நிறுவனம்.

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர் நல தேசிய நிறுவனத்துக்காக (National Foundation for Teachers' Welfare) மாநிலத்தில் திரட்டப்பட்ட தொகையில் 1—10—1978 நாளன்றுள்ள தொகை எவ்வளவு?

(இ) இந்த நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கு சரியான முறையில் உதவி கிடைப்பதில்லை என்று புகார்கள் ஏதேனும் வந்திருக்கின்றனவா?

(உ) ஆம் எனில், இந்த நிதியை மாவட்ட ரீதியாகப் பிரித்து பரவல் முறையில் உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ரூ. 16,69,278.

(இ) போதிய நிதி உதவி கிடைக்கவில்லை என்றும், பண உதவி வேண்டுமென்றும் கோரிக்கைகள்தான் வந்துள்ளன. சரியான முறையில் உதவி கிடைப்பதில்லை என்ற புகார்கள் இல்லை

(உ) ஆசிரியர் நல நிதி மாநில அளவில் பயன்படுத்தப்படுவதாலும், மாநில முழுமைக்கும் உள்ள எல்லா ஆசிரியர்களின் நலனுக்காக பயன்படுத்துவதாலும் மாவட்ட ரீதியாக நிதியைப் பிரித்து பரவல் முறையில் உதவி செய்தல் ஏற்புடைத்ததாக இருக்காது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆசிரியர்களுக்கு, பாதிக்கப்பட்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கு அல்லது தேவைப்படுகின்ற ஆசிரியர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் இந்த நிறுவனமே அமைக்கப்பட்டிருக்கிறது. இது அதிகாரக் குவியல் முறையில் அமைக்கப்பட்டிருப்பதனால், ஆசிரியர்களுக்கு





தக்க நேரத்தில் உதவி கிடைக்கவில்லை. அது ஒரு முக்கியமான புகார். ஆதலால் மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதன்மைக் கல்வி அதிகாரிகள் அல்லது மற்ற மாவட்டக் கல்வி அதிகாரிகள் அடங்கிய குழுவை அமைத்து, அந்தக் குழுவில் ஆசிரியர்கள் அவர்கள் மனுவைக் கொடுக்கலாம் என்று முறையை மாற்றி அமைத்தால், தக்க நேரத்தில் உதவி கிடைக்க வாய்ப்பு ஏற்படும். இதைச் சற்று பரவலாக ஆக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த ஒரே நோக்கத்திலேயே அதை நாம் பார்த்து பரவலாக்க முயற்சிக்கின்றபோது, வேறு பல சங்கடங்கள் ஏற்பட வழியிருக்கிறது. இது அகில இந்திய ஆசிரியர்கள் நல நிதியோடு தொடர்புடையது. மாநில அளவிலே செயல்படுத்த வேண்டிய ஒன்று. நாம் நமக்கு வருகின்ற புகார்களையும் சங்கடங்களையும் நீக்க தக்க முறைகளை வகுத்துக்கொள்ளலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரு ஒரு அமைப்பு என்பது சரியாக இருந்தால்தான் உதவி சரியாகக் கிடைக்கும். அதன் பெயரே National Foundation for Teachers' Welfare என்பது. தேசிய நிறுவனம் என்று சொல்லிக்கொண்டு டெல்லியிலேயேதான் இந்த அமைப்பு இருக்க வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்து, அங்குதான் மனுக்கள் கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுப்போமானால், அது இன்னும் மோசமான நிலையைத்தான் ஏற்படுத்தும். நடைமுறையிலே பல ஆசிரியர்களுடைய சங்கடங்கள் எங்களுக்குத் தெரிந்திருக்கின்றன. அந்தக் காரணத்தினால்தான் சொல்கிறேன். இதைப் பரவலாக்கினால்தான், தேவைப்படுகின்ற ஆசிரியர்களுக்குத் தக்க நேரத்தில் உதவி கிடைக்கும். ஆகவே இதுவரையில் இந்த அமைப்பு இல்லாவிட்டாலும், இனிமேலாவது அந்த விதிமுறையை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட ஒரு கருத்து இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : 1973 ஆம் ஆண்டு வரை 46 லட்சம் ரூபாய் ஆசிரியர்கள் நல நிதியில், தேசிய நிறுவனத்தால் திரட்டப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு ரூபாய் ஆசிரியர்களுக்கு உதவியாக அளிக்கப்பட்டிருக்கிறது? தமிழ் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் அதன் பலனை ஆசிரியர்கள் அனுபவித்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதிலே மிக முக்கியமான ஒன்று, இந்த 40 லட்சம் ரூபாயில், 20 லட்சம் ரூபாய் ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கு பட்ட மேற்படிப்புத் தொகையாக ஒதுக்கப்பட்டு, அந்தத் தொகையிலிருந்து கிடைக்கக்கூடிய வட்டியிலிருந்து 400 பிள்ளைகளுக்கு, ஒரு நபருக்கு 500 ரூபாய்க்கு மேற்படாமல் வருடத்திற்கு உதவித் தொகையாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை சென்ற ஆண்டிலிருந்து ஆரம்பித்திருக்கிறார்கள். அதுபோலவே, சென்னையில் ஆசிரியர்கள் இல்லம் கட்டுவதற்காக பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மீதம் இருக்கும் பணம், எதிர்பாராமல் அவர்களுக்கு ஏற்படுகின்ற செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஒருவர் தானே செலவு செய்ய முடியாத அளவுக்கு, ஏதாவது நோயினால் பாதிக்கப்பட்டாலோ, தன்னால் தாங்க முடியாத அளவுக்குத் துன்பத்திற்கு ஆட்பட்டாலோ, இதிலிருந்து நாம் ஓரளவுக்கு தொகையைத் தந்துகொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே தான் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் இந்தத் தொகை போதுமானதாக இல்லை. அதிகப்படியாக வந்தால், நாம் நிறைய ஆசிரியர்களுக்குச் செய்யலாம்.

திரு. செ. முத்துசாமி : கேரள மாநிலத்திலே ஒவ்வொரு மாவட்டக் கல்வி அதிகாரியிடமும் அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் விண்ணப்பங்களுடன் அழைக்கப்படுகிறார்கள். அப்படி வரக் கூடிய விண்ணப்பங்களைப் பரிசீலித்து ஆசிரியர்களுக்கு உதவிசெய்யக் கூடிய ஒரு நடைமுறையை அங்கே வைத்திருக்கிறார்கள். இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த முறை இங்கேயும் நடைமுறைப்படுத்தப்படுமா ? தற்போது அளிக்கப் படும் குறைந்தபட்ச உதவி எவ்வளவு, அதிகபட்ச உதவி எவ்வளவு என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய ஒரு வரம்பை நாம் வகுத்துக்கொள்ளவில்லை. அவரவர்களுடைய நிலைமைக்கு ஏற்பத்தான் இந்த உதவியைச் செய்கிறார்கள். ஒரு பெரிய ஆபரேஷன் செய்யவேண்டிய நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டால், அப்போது உதவி செய்கிறார்கள். கிட்னி ஆபரேஷன் போல மருத்துவத்துக்கு அதிகச் செலவாகக்கூடிய ஒரு நோயினால் கஷ்டப்பட்டால், அப்போது ஓரளவுக்குக் கொடுத்து உதவுகிறார்கள். ஆகவே அந்த வரம்பை நாம் வைத்துக்கொள்ளவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன மற்றொரு யோசனையைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.



கேரளாவிலே பின்பற்றுகின்ற முறையைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : ஆசிரியர்கள் தேசிய நிறுவனத்திற்கு நம் மாநிலத்திலிருந்து கொடுக்கப்படுகிற தொகை எவ்வளவு ? அந்த முழுத் தொகையையும் மத்திய அரசினுடைய உதவியோடு பெறுகிறோமா அல்லது நம்முடைய மாநிலத்திலிருந்து திரட்டப்படுகிற நிதியிலே ஒரு பகுதியை மத்திய அரசு எடுத்துக்கொள்கிறதா ? ஆசிரியர்களுக்கு என்று எவ்வாறு நிதி ஒதுக்கப்படுகிறது ? திட்டவட்டமாக இந்த நிதிக்கு நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு வற்புறுத்துகிறதா என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 30—9—1978 வரைக்கும் நாம் மத்திய அரசின் பொது நிதிக்குத் தரவேண்டிய தொகை 5.17 லட்சம் ரூபாயாகும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஆசிரியர் இல்லம் கட்டுவதற்கு, சென்னையிலே கட்டுவதற்கு, ஆசிரியர்கள் நல நிதியிலிருந்து நிதி தரப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இரண்டொரு மாவட்டங்களைத் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலுமே அந்த ஆசிரியர்கள் இல்லங்கள் கட்டுவதிலே தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அப்படிப் பட்ட இல்லங்களை அனைத்து மாவட்டங்களிலும் கட்ட இந்த நிதியிலிருந்து நிதி வழங்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அனைத்து மாவட்டத் தலைநகரங் களிலும் இத்தகைய ஆசிரியர்கள் இல்லங்கள் வரவேண்டுமென்றுதான் அரசு வற்புறுத்துகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

திரு. பா. ரா. தாமஸ் : நமது மாநிலத்திலே திரட்டப்படும் தொகையிலே ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டினை மத்திய அரசு எடுத்துக்கொள்கிறது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பிற மாநிலங்களில் நாம் திரட்டுகின்ற அளவிற்கு உயர்ந்த அளவிலே திரட்டுவதில்லை. நாம் திரட்டுகின்ற நிதியிலே ஒரு விழுக்காடு எடுத்துக்கொள்வதால், நம்முடைய மாநிலத்திலுள்ள ஆசிரியர் களுக்கு இழப்பு ஏற்படுகிறதென்று கேள்விப்படுகிறேன். அவ்வாறு இழப்பு

[1980 பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி பெரிய இழப்பு ஏற்படுவதாகப் படவில்லை. அதைச் செலுத்துவதன் மூலம் வேறு சில நன்மைகளை நம்முடைய ஆசிரியர்களுக்குப் பெற்றுத் தர முடியும்.

திரு. செ. முத்துசாமி : சென்ற கூட்டத் தொடரின்போது கல்வி அமைச்சரவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு இலவசமாகப் படிப்புச் சொல்லித் தருவதற்கு ஆசிரியர் நல நிதியிலிருந்து ஒரு அளவு நிதி அளிக்க ஏற்பாடு செய்வோமென்று சொன்னார்கள். அமைச்சரவர்களுடைய அறிவிப்பின்படி நிதி மிகவும் குறைவாக இருக்கிறது. அப்படியானால் ஆசிரியர்களுடைய குழந்தைகளின் இலவசப் படிப்பிற்காக என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதைக்கு இந்த நிதி யிலிருந்து தருவதாகத்தான் திட்டம். இதிலிருந்து தர முடியாத நிலைமையில் வேறு திட்டங்களை அரசு ஆராயும்.

## *Protected Drinking Water to Siluppanoor*

* 27 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether any protected drinking-water scheme for Siluppanoor Village, Chenthurai Panchayat Union, Tiruchirappalli District is under the consideration of the Government; and

(*b*) if not, whether the Government will come forward to implement the scheme in future?

## சிலுப்பனூருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், செந்துறை ஒன்றியத்தைச் சேர்ந்த சிலுப்பனூருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) இல்லையெனில், எதிர்காலத்தில் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(இ) ஆம்.



பிப்ரவரி 4]

திரு. க. இராமமூர்த்தி : அந்தப் பகுதி மிகுந்த பின்தங்கிய பகுதி படதோடு, தண்ணீர் தட்டுப்பாடு நிரந்தரமாக உள்ள பகுதி என்பதால், மச்சரவர்கள் கொஞ்சம் பரிவோடு இதைப் பரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் ல்வதுபோல, அது தட்டுப்பாடு உள்ள ஊரல்ல. அது பிரிவு 6-ல் அடங்கி ாது. பிரிவு 6 என்று சொன்னால், நல்ல குடிநீர் நிலைகள் உள்ள சிற்றூர் பதாகும்.

திரு. செ. முத்துசாமி : பெண்ணாடத்திலுடைய அக்கரையில் உள்ளது ப்பனூர். அமைச்சரவர்கள் அங்கே தண்ணீர் தட்டுப்பாடு கிடையாதென்று ன்னார்கள். இங்கே கேள்வி கேட்டிருப்பது, பாதுகாக்கப்பட்ட தண்ணீர் திட்டம் வழங்கப்படுமா என்பதுதான். அது குக்கிராமமாக க்கிறது. அந்தக் கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வெகுசீக்கிரம் க அமைச்சரவர்கள் பரிவோடு ஆவன செய்வார்களா என்று அறிய ம்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சிலுப்பனூர் சிற்றூரில் ஒரு ந்த பொதுக் கிணறு உள்ளது. இதில் தேவையான அளவிற்குக் குடிப்பதற்கு ந்த தண்ணீர் இருந்தும், பொது மக்கள் அதைப் பயன்படுத்துவதில்லை. ருக்கு அருகாமையில் சுமார் 300 மீட்டர் தொலைவிலுள்ள வெள்ளாற் யிலிருந்து குடிநீர் எடுத்துப் பயன்படுத்துகிறார்கள். பொதுவாக ச்சிற்றூரில் குடிநீர் பற்றாக்குறை இல்லை. இச்சிற்றூர் பிரிவு 6-ல் அடங்கி ள்ளதால், இது நல்ல நீர் ஆதாரங்கள் கொண்ட சிற்றூராகும். இதர ிவுகள், அதாவது 1 முதல் 5 வரை அடங்கியுள்ள சிற்றூர்களுக்கு குடிநீர் தி செய்யப்பட்ட பிறகு, இச்சிற்றூரில் குடிநீர் வழங்கும் திட்டத்தைச் யலுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

## *Staff of Tamil Nadu Co-operative Housing Society.*

* 28 Q.—PULAVAR PULAMAIPITHAN : (on behalf of hiru K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for abour be pleased to state--

(*a*) whether it is a fact that the staff of the Tamil Nadu o-operative Housing Society observed token fast on the 24th eptember, 1979 ; and

(*b*) if so, the reasons therefor?

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்க ஊழியர்கள்.

புலவர் புலமைப்பித்தன் (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு
தொகையில் 1—10—1978 நாளன்றுள்ள தொகை எவ்வளவு?
பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்க ஊழியர்கள் 1979, செப்டம்பர் 24-ம் நாள் வாக்கில் அடையாள உண்ணாவிரதமிருந்தனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்க ஊழியர்களில் ஒரு பிரிவினர், ஒரு தொழிற் சங்கம் அமைத்து, அதன் மூலமாக பல கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்க நிர்வாகத்தை வற்புறுத்தி வந்தனர். இக்கோரிக்கைகளில், சம்பள விகிதங்களை மாற்றியமைத்தல், அகவிலைப்படி உயர்த்துதல், மருத்துவப்படி உயர்த்துதல், பலவிதமான விடுப்புகளில் கூடுதல் சலுகைகள் கோருதல், பதவி உயர்வுக்கு வழி காணுதல், பணி ஓய்வுகால ஊதியம் முதலியன அடங்கும். இவற்றில் நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை உடனே நிறைவேற்றுமாறு, முன் எச்சரிக்கை ஏதுமின்றி, 24—9—1979 முதல் 3—10—1979 முடிய கோஷங்களை எழுப்பியும், 4—10—1979 முதல் 17—10—1979 முடிய தொடர் உண்ணாவிரதம், தர்ணா போன்ற போராட்டங்களையும் நடத்தினர்.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know whether the dispute between the employees and the management has been settled, because from reports received I believe, the work of the Housing Society has been considerably affected because of the employees' agitation?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sir, a settlement has been reached under section 18(1) of the Industrial Disputes Act on 4th January 1980.

திரு. செ. முத்துசாமி: கடந்த காலத்தில் இந்த அரசாங்கம் நிதியை ஒதுக்கியிருந்தும், அங்கே உள்ளிருப்பு வேலை நிறுத்தம் என்ற முறையில் பைல்களைத் தொடாமல் இருந்ததால், பல வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வழங்கப்படாமல், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக் கூடிய ஊழியர்களை இங்கே வரவழைத்து, வேலை செய்து கொண்டிருந்த நிலை இருந்ததால், பல வீடுகள் கட்டுவது பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை



அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தப் பாதிப்பை நீக்க, செட்டில்மெண்ட் ஏற்பட்ட பிறகு விரைவுபடுத்தி, அவற்றைக் கட்டும் முயற்சிகளில் தக்க கவனம் எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: செட்டில்மெண்ட் ஏற்பட்டு விட்டது. எல்லாம் முறையாக நடைபெறும்.

திரு. க. இராமமூர்த்தி: உண்ணாவிரதத்திற்குப் பிறகு எத்தனை கோரிக்கைகளுக்கு அரசு இணங்கியிருக்கிறது? உண்ணாவிரதம் ஏற்பட்டதற்கு முன்பாகவே அந்தக் கோரிக்கைகளுக்கு இணங்கியிருந்தால், வேலை நடக்காமல் தவிர்த்திருக்கலாம் அல்லவா? எனவே தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இனியாவது வேகமாக ஈடுபட்டுச் செயல்படுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஒரு ஜனநாயக நாட்டில் போராட்ட முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. போராட்ட முறை ஏற்றுக் கொள்ளப்பட்டபோது, இரு சாராரையும் ஒரு ஒப்பந்தத்திற்குக் கொண்டுவர சமரச அதிகாரிகள் முயற்சி செய்கிறார்கள். Nobody should show undue haste. மிக அவசரமாகப் போனால் சமரசம் அழிந்துவிடும். எனவே நிதானமாக அவர்களை அழைத்து, எப்படியாவது செட்டில்மெண்ட்டுக்குக் கொண்டு வர வேண்டுமென்று அக்கறை காட்டியதால்தான் 4—1—1980-ல்—என்னுடைய பிறந்த நாள் அது—செட்டில்மெண்ட் ஏற்பட்டு, இப்போது திருப்தியாக நடைபெறுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதனால்தான் பண்ணினார்கள் என்று எண்ணிவிடப் போகிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: செட்டில்மெண்ட், பிறந்த நாளுக்காகச் செய்யப் பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

## *Special Scheme to reduce Road Accidents*

* 29 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government have proposed to introduce any Special Scheme to reduce the number of road accidents; and

(b) whether there is any proposal with the Government to introduce Special Schemes to prevent the occurrences of the predominant factors among the road accidents, taking into account the road accidents during a particular year?

## சாலை விபத்துக்களைக் குறைக்க தனித்திட்டம்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கு தனித்திட்டம் ஏதேனும் கொண்டு வர அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஏதேனும் ஒரு குறிப்பிட்ட ஆண்டு ஏற்பட்ட சாலை விபத்துக் களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, விபத்துக்குரிய காரணங்களில் எஞ்சி நிற்கும் சில காரணங்களையேனும் தடுக்க, சிறப்புத் திட்டங்கள் கொண்டு வரும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சார்பில்) : (அ) ஆம்.

(இ) சாலைப் போக்குவரத்துப் பயிற்சி நிறுவனத்தில் கனரக வண்டிகளை ஓட்டுவதில் இளைஞர்களுக்கு முனைப்புடன் பயிற்சி அளிக்கும் ஒரு திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : அண்மை ஆண்டுகளில் சாலை விபத்துக்கள் அதிகப்பட்டுக்கொண்டு சென்று, பல பெரும் விபத்துக்கள் ஏற்பட்டு, பல உயிர்கள் பறிக்கப்படுவதை எல்லோரும் அறிவோம். எனவே அதைத் தடுக்க தீவிரத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். இப்போது பயிற்றுநருக்கு மாத்திரம் பயிற்சி அளித்தால் போதுமானதல்ல. அரசுப் பேருந்துகளை ஓட்டிச் செல்லுகிறவர்கள் மாத்திரமல்ல, அவர்களுக்கு எதிரே வரும் லாரிகள் ஒழுங்காக வர வேண்டும், மற்ற வாகனங்கள் ஒழுங்காக வர வேண்டும். எனவே இதைப்பற்றி விரிவாக ஆராய்ந்து, அதற்கு ஒரு நல்ல திட்டத்தைத் தயாரித்து, ஓர் வெள்ளை அறிக்கையை அரசு அவையில் வைத்து, அதன்மீது உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிந்து தெளிந்த முடிவை அரசு அமல் படுத்துமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : 1977-78 ஆம் ஆண்டை அடிப்படையாக வைத்து, அந்த ஆண்டிலே ஒட்டுமொத்தமாக நடைபெற்ற விபத்துக்களைப்பற்றி ஒரு முழு ஆய்வு அரசின் மூலமாகச் செய்யப் பட்டிருக்கிறது. இதிலே பல்வேறு அரசுப் போக்குவரத்து நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், அதிகாரிகள், விற்பன்னர்கள் எல்லாம் கலந்து, அந்த ஆய்வை நடத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னது போல், வேகக் கட்டுப்பாடு மட்டுமே ஒரு விபத்தைத் தடுத்து விட முடியாது என்பது தெரியும். எதிரே வரக்கூடிய வண்டிகள் எப்படி இருக்க வேண்டும். சாலைகள் எப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன என்பவைகளைக் குறித்து





நெடுஞ்சாலைத் துறையுடன் இணைந்து ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. அதிலே முக்கியமான பரிந்துரை, ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு வலது பக்கத்தில் மூடப்பட்ட கதவுகளுக்கு வகை செய்வது; மாட்டு வண்டிகள் போன்றவை களுக்கு ஒளி பிரதிபலிக்கக்கூடிய தட்டுக்களைப் பொருத்துவது; விபத்துக்கள் இல்லாமல் ஓட்டுகிறவர்களுக்கு ஊக்கத் தொகையாகப் பரிசுகள் வழங்குவது; விபத்துக்களுக்கான காரணங்களில் மிக முக்கியமாக சாலை இருந்தால் அதை மாற்றியமைப்பது—இப்படிப் பல்வேறு திட்டங்களை இந்த ஆய்விலிருந்து எடுத்து, செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைத்து, அவர்களுடைய கருத்துக்களைப் பெறுவது நல்லதென்று இன்னொரு முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். இதை அரசு கவனத்தில் கொள்ளும்.

(பிற்பகல் 4-30)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : குறிப்பாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் உருவாக்கப்பட்ட அன்று முதல் தொடர்ந்து அதிலே பயணம் செய்கின்ற பயணிகள் விபத்துக்கு உள்ளாகிறார்கள் அல்லது உயிரிழக் கின்றார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் கூட ஒரு சாலைப் போக்குவரத்து விபத்திலே சமீபத்தில் உயிரிழந்தார்கள். குறிப்பாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் போன்ற போக்குவரத்துக் கழகத்திலே விபத்து ஏற்படக் காரணம் புதிதாக நியமிக்கப்படுகின்ற ஓட்டுநர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் அல்ல என்பதுதான் என்று சொல்லுகிறார்கள். ஏதோ ஒரு புதிய போக்குவரத்துக் கழகத்திற்கு ஓட்டுநர்கள் தேவை என்பதால், போதிய அனுபவம் இல்லாதவர்களை நியமித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அது உண்மையா? எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நெடுந்தூர விரைவுப் பேருந்துகளை ஓட்டுவதற்கு ஓரளவு முன் அனுபவம் பெற்றவர்களைத்தான் நியமிக்கின்றோம். அவர்கள் இளைஞர்களாக இருந்தாலும் கூட, தகுந்த பயிற்சி கொடுக்க வேண்டுமென்று கருதி, இப்போது அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. விரும்பத்தகாத ஒன்று சமீபத்தில் நடந்தது, சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் விபத்திலே பலியாகியிருக்கிறார்கள். விபத்து ஏற்படுவதற்கான காரணங்கள் பல. எதிர்த்தாற்போல் பல வருகிறது. லாரி வருகிறது, உரிய நேரத்தில் பஸ் ஓட்டாமல் ஓட்டுநர் 3 அல்லது 4

நாட்கள் தொடர்ந்து ஓட்டுவது, பேருந்து ஓட்டுநருடைய கட்டுப்பாட்டைத் தாண்டி ஓடுவது போன்ற பல்வேறு காரணங்களால் விபத்துக்கள் ஏற்படு கின்றன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கும் விபத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. வள்ளுவர் நெறியைத் தாங்கி வள்ளுவர் நெறி இந்த அளவுக்கெல்லாம் பின்பற்றப்படும்போது, இவைகள் எல்லாம் இன்னும் போக்கப்படத்தான் வாய்ப்பிருக்கிறது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தொலைவு தூர துரிதப் பேருந்துகளில் அடிக்கடி விபத்து ஏற்படுவதற்கான காரணங்களை அரசு ஆராய்ந்திருக்கிறதா? அப்படியானால் வருங்காலத்தில் விபத்துக்கள் ஏற்படாமலிருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : எதிர்க் கட்சித் தலைவரும் இதையே தான் கேட்டார். அவருக்குச் சொன்ன பதில் தான் இப்போது உறுப்பினர் கேட்டதற்கான பதிலும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : சாலை விபத்துக்கள் கடந்த காலங்களில் குறிப்பாக சென்னை நகரில் பெருகியுள்ளன. ஒரு பத்திரிகை ஆய்வின் மூலம் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் நடக்கின்ற விபத்துக்களை விட சென்னை நகரில் அதிகம் என்று சொல்லியிருக்கிறது. அதிலே குறிப்பாக அரசுப் பேருந்துகளால் தான் இத்தகைய விபத்துக்கள் அதிகம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மனதில் கொண்டு, அரசு இதுபற்றி மறுபரிசீலனை செய்யுமா? பெரும்பாலான விபத்துக்களுக்கு ஓட்டுநர்கள் தான் காரணம் என்கிற முடிவுக்கு அரசு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஓட்டுநர்கள் மட்டுமே விபத்துக்குக் காரணமல்ல. ஏற்கெனவே நான் சொன்ன பதில்களில் விபத்துக் களுக்கான பல காரணங்களைச் சொல்லியிருக்கிறேன். சாலை பராமரிப்பு மிக முக்கியமானது. சாலைகள் நல்ல சாலைகளாக இருக்க வேண்டும். இப்பொழுதுள்ள நிலைமை முன்புமாதிரி அல்ல. விரைவு வண்டிகள், மின்னல் விரைவுப் பேருந்துகள் என்று பேருந்துகள் நடைமுறைக்கு வந்திருக்கின்றன. முப்பது மணி நேரத்தில் முன்பு சென்றுகொண்டிருந்த இடங்களுக்கு 10 மணி நேரத்தில் இப்பொழுது போகிறோம். ஆகவே நெடுந்தூர விரைவுப் பேருந்துகள் ஓடுகின்ற சாலைகள் நன்றாக இருப்பது மிக மிக முக்கியம். அதனால்தான் இப்பொழுது விபத்துக்கள் ஏற்பட்டால், உடனே சாலை பராமரிப்புத் துறையுடன் தொடர்பு கொண்டு, அவர்களையும் அழைத்துக் கொண்டு போய் விபத்து நடக்கின்ற இடத்திலுள்ள சாலையை எப்படி மாற்றியமைப்பது என்பதையெல்லாம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஓட்டுநர்கள் மட்டுமே காரணமல்ல.



டாக்டர் இரா. சனார்த்தனம் : விபத்து ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்திருப்பதாக அதைப்பற்றிய ஒரு பட்டியலையே அமைச்சரவர்கள் கொடுத்தார்கள். விபத்து ஏற்படுவதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. பெரும்பாலும் லாரிகள் தான் விபத்து ஏற்படுவதற்குக் காரணம். பொதுவாக விபத்து காலை நேரத்தில் தான் ஏற்படுகிறது. காலை 1 மணி முதல் 3 மணி வரை குறிப்பாக லாரிகளை ஓட்டவிடக் கூடாது. ஆகவே விபத்துக்களைத் தடுக்கும் வகையில் லாரிகள் ஓடுவதை காலை 1 மணி முதல் 3 மணி வரை நிறுத்தி வைக்க வேண்டுமென்ற உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : உறுப்பினர் சொன்ன முறையை சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கடைப்பிடித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த முறை நடைமுறையில் பல பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. உரிய நேரத்தில் லாரி மூலம் சரக்குகளைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டி யிருக்கிறது. அப்படி நிறுத்தி வைத்தால், அதன் விளைவாக பகல் நேரத்தில் லாரிகளை அதிக வேகமாக ஓட்டும்போது, வண்டிகளுக்கு வழியில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் பார்த்துத்தான், பிறகு அந்த முறையைக் கைவிட்டுவிட்டார்கள். காலை 1 மணி முதல் 3 மணி வரை அதிகமாக விபத்து ஏற்படுகிறது என்று உறுப்பினர் தெரிவித்தார். ஆனால் காலை 4 மணி முதல் 5 மணி வரை தான் அதிகமாக விபத்து ஏற்படுகிறது. இன்னும் வேறு எந்தெந்த வகையில் எப்படியெப்படி விபத்தைக் குறைக்கலாம் என்பதையும் பரிசீலிக்க வேண்டும். உறுப்பினர் குறிப்பிட்டமாதிரி, இந்த நேரத்தில் லாரிகளை ஓட்டக் கூடாது என்பது வர்த்தக ரீதியாக பல சங்கடங்களை ஏற்படுத்தும் என்பதையும் அரசு உணர்ந்திருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : பெரும்பாலான விபத்துக்களுக்கு ஓட்டுநர்கள் காரணமல்ல என்று அமைச்சரவர்கள் சொன்னாலுங்கூட, தொலை தூர துரிதப் பேருந்துகளில் சமீப காலங்களில் நடந்த விபத்துக்களைக் கணக்கெடுத்துப் பார்த்தால், அவற்றில் பெரும்பாலானவற்றில் சம்பந்தப் பட்டிருக்கும் ஓட்டுநர்கள் சென்னை நகரிலுள்ள பேருந்துகளில் ஓட்டுநர்களாக இருந்தவர்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா ? அல்லது அதைப்பற்றி அரசு இனிமேலாவது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல், ஓட்டுநர்கள் விபத்துக்கு எந்த வகையில் காரணம் என்பதை அரசு ஏற்கெனவே ஆய்வு செய்திருக்கிறது. சமீபத்தில் ஏற்படுத்தியிருக்கி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் இளைஞர்களை ஓட்டுநர்களா நியமித்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் சென்னை நகரில் ப பேருந்துகளை ஓட்டிக் கொண்டிருந்தவர்கள் என்றும். அவர்கள் தொலை தூ

[1980 பிப்ரவரி 4

விரைவுப் பேருந்துகளை ஓட்டி அனுபவம் இல்லாதவர்கள் என்றும், அவர்களுக்குத் தகுந்த பயிற்சி இல்லையென்றும் பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றைப் பற்றி ஆய்வு செய்யப்படும். அதுமட்டுமல்ல. நெடுந்தொலைவு துரிதப் போக்குவரத்தைப் பொறுத்த வரை, பழைய வண்டிகளை அனுப்பாமல் தடுக்க வேண்டும். புதிய வண்டிகளைத் தான் விட வேண்டும். அதையும் இப்போது பரிசீலனை செய்து புதிய வண்டிகளாகத் தான் இருக்க வேண்டும், எஞ்சின் கோளாறு ஒன்றும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் அரசு வற்புறுத்தியிருக்கிறது. இனிமேல் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாமலிருக்க அரசு முனைப்பாகச் செயலாற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** காராக இருந்தாலும், பஸ்ஸாக இருந்தாலும், லாரியாக இருந்தாலும் இவைகளையெல்லாம் ஓட்டுகின்றவர்கள் 5 முறை விபத்துக்கு உள்ளானால், சிங்கப்பூரிலுள்ள போக்குவரத்து சட்டதிட்டங்களைப் போல், அப்படிப்பட்டவர்களுடைய டிரைவிங் லைசன்ஸை கேன்சல் பண்ணுவதுபற்றி இந்த அரசு ஏதாவது பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** உறுப்பினர் தெரிவித்த யோசனை, மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, நல்ல யோசனை தான். ஆனால் அதிலே சில பிரச்சினைகளும் எழும். விபத்துக்களைப் பொறுத்தவரை, அவற்றை நாம் கண்டிப்பாகத் தவிர்த்தாக வேண்டும். பொதுவாக சாலைப் போக்குவரத்து விதிகளை அனைவரும் ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும். தொலை தூரத்திற்குச் செல்லுகின்ற வண்டிகளுக்கு வேகக் கட்டுப்பாடு வேண்டும். தொலை தூரத்திற்குச் செல்லுகின்ற வண்டிகள் புதியவைகளாகவும், எஞ்சின் கோளாறு இல்லாதவைகளாகவும் இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. தொடர்ந்து 3 முறை வண்டிகளை ஓட்டி விபத்துக்குக் காரணமாக இருந்தவர்களைக் குறித்து, தனியாகப் பரிசீலித்துப் பார்ப்பது நல்லதுதான். அரசு நிச்சயம் இதை கவனத்தில் கொள்ளும்.

THIRU J. M. MIAKHAN: Apart from the condition of roads and the inefficiency of the drivers, accidents are caused because of the attitude of the pedestrians and others who use the roads. Will the Government consider giving instruction to children in schools in traffic regulations and rules of the road so that the accidents may be minimised to a great extent ? Further, the condition of the vehicles is also very important. So far as our country is concerned, nearly 90 per cent of the vehicles are not fit to run on the roads, since their brakes are not kept in proper condition. Will the Government take proper steps to see that they are kept in proper road-worthy condition?



1980 பிப்ரவரி 4]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** உறுப்பினர் சொன்னது மிக முக்கியமான கருத்து. பாதசாரிகள் கவனக் குறைவாக, பொழுது போக்காக நடு ரோட்டில் பேசிக்கொண்டு போகிறார்கள். இவற்றையெல்லாம் தவிர்க்கும் வகையில் எந்த அளவுக்கு அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க முடியும் என்பதையும் யோசிக்க வேண்டும். உறுப்பினருடைய உணர்வு குறித்து கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. அத்தகையவர்களுக்கு எந்த வகையில் பயிற்சி அளிக்கலாம் என்பதுபற்றி கவனத்தில் கொள்ளப்படும். ஆனால் இப்பொழுது கூட சிறு குழந்தைகளுக்கு டிராபிக் விதி முறைகளைக் கடைப்பிடிப்பது எப்படி என்பதுபற்றிப் பயிற்சி கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். எதிர்காலத்தில் இன்னும் அதிகமான பேர்களுக்குப் பயிற்சி அளிப்பதுபற்றி கவனத்தில் கொள்வோம். மேலும் புது வண்டிகள்தானா, இயந்திரக் கோளாறு எதுவும் இல்லாத வண்டிகள் தானா, முழு அளவிற்கு ஓட்டுவதற்குத் தகுதியான நிலைமையில் இருக்கிறதா என்றெல்லாம் பார்த்து, அதன் பிறகுதான் பேருந்தை நெடுந்தொலைவுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** இவ்வாறு விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஓட்டுநர்களுக்கு சில சமயங்களில் நடத்துநர்களும் உதவி செய்கிறார்கள். நெடுந்தொலைவு விரைவுப் பேருந்தில் ஓட்டுநருக்கு அருகே நடத்துநர் அமர்ந்துகொண்டு கையைக் காட்டி அவரைக் கட்டுப்படுத்துவதை நானே பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன். அது பாராட்டத்தக்கது. விபத்து நடக்கும்போது, விபத்து நடந்த இடத்திலேயிருந்த சந்தர்ப்பம், சூழ்நிலை இவற்றையெல்லாம் திரைப்படமாக ஆக்கி நடத்துநர், ஓட்டுநர் ஆகியோருடைய இருக்கைக்கு முன்னால் மற்றும் அவர்களுடைய அலுவலகங்களில் வைக்க வேண்டும். விபத்து ஏற்படுகின்ற சூழ்நிலை, சந்தர்ப்பம் இவைகளையெல்லாம் படமெடுத்து தெளிவாக விளக்கி உரிய இடங்களில் வைத்தால், வருங்காலத்தில் எப்படி விபத்துக்களைத் தடுக்கலாம் என்கிற முன் அறிவிப்பாக அது ஓட்டுநர்களுக்கும் நடத்துநர்களுக்கும் அமையும். இதுசம்பந்தமாக அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இப்படிப்பட்ட விபத்துக்கள் நடந்ததற்குப் பிறகு சம்பந்தப்பட்ட ஓட்டுநரையும் பயிற்சிப் பள்ளிக்கு அனுப்புகிறோம். அந்தப் பயிற்சிப் பள்ளியிலே இந்த விபத்தின் காரணமாக என்னென்ன பின் விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை அவர்களுக்குச் சொல்கிறார்கள். இரண்டாவது இப்போது சமீபத்திலேகூட சோழன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே சாலை விபத்துக்கள் ஏன் ஏற்படு

கின்றன, அதனால் எப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதை விளம்பரம் மூலமாக, திரைப்படம் மூலமாக விளக்குகிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல ஒரு குழுவை நாம் அமைக்கும்போது, இப்படிப்பட்ட நல்ல ஆலோசனைகளை வைத்து, அவைகளை பரிசீலித்துச் செயல்படுத்த அரசு தயாராக இருக்கிறது.

## *Office buildings of Highways Department*

* 30 *Q*.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(*a*) the quantum of amount being paid as rent every year for the office buildings and godowns of Highways Department; and

(*b*) whether the Government will consider the construction of permanent office buildings in the lands belonging to Highways Department in the District and Taluk Head-quarters ?

## நெடுஞ்சாலைத்துறை அலுவலகக் கட்டிடங்கள்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெடுஞ்சாலைத்துறை அலுவலகங்கள், கிடங்குகள் ஆகியவற்றிற்காக வாடகையாக ஆண்டுதோறும் எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

(இ) மாவட்ட, வட்டத் தலைநகரங்களில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் நிரந்தரமாக அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) ரூ. 17,20,419 (நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை, தேசிய நெடுஞ்சாலை, பாம்பன் பால வேலைத் திட்டம் முதலான துறைகளின் அலுவலகங்கள், கிடங்குகளுக்காக).

(இ) தற்பொழுது திட்டம் எதுவும் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதிலே அலுவலகங்களுக்காக எவ்வளவு தொகை வாடகையாகக் கொடுக்கப்படுகிறது ? கிடங்குகளுக்கென்று எவ்வளவு தொகை வாடகையாகக் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தமிழ் நாடு நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை தலைமைப் பொறியாளரின் அலுவலகமும், தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளரின் அலுவலகமும் தற்சமயம் சேப்பாக்கத்தில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான அலுவலகக் கட்டிடத்தில்



அமைக்கப்பட்டுள்ளன. பாம்பன் பாலத் திட்டத்தின் தலைமைப் பொறியாளர் அலுவலகமும், வெள்ள நிவாரண வேலைகளுக்கான தலைமைப் பொறியாளர் அலுவலகமும் மற்றும் தேசிய நெடுஞ்சாலை மேற்பார்வைப் பொறியாளர், கோட்டப் பொறியாளர் அலுவலகங்களும், உலக வங்கித் திட்ட மேற்பார்வைப் பொறியாளர், கோட்டப் பொறியாளர் அலுவலகங்களும் சென்னையில் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. சென்னையில் இருக்கும் இந்த அலுவலகங்களுக்காக மட்டும் ஆண்டுதோறும் செலுத்தப்படும் வாடகை ரூ. 3.33 லட்சம். கிடங்குகளுக்கான தகவல் தற்போது என்னிடத்திலே இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இவ்வளவு பெருந்தொகை வாடகையாக தனியாருக்குக் கொடுக்கப்படுகிறது. நெடுஞ்சாலைத் துறைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் சொந்தமாக மனைகள் போதுமான அளவுக்கு இருக்கின்றன. ஆகையால் படிப்படியாக, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும், வட்டத் தலைநகரங்களிலும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான அலுவலகங்களையும், கிடங்குகளையும் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : 1978-79 ஆம் ஆண்டுப் பகுதி—2 புதிய வேலைகளுக்கான திட்டத்தின்கீழ், சென்னை நகரின் இயங்கும் நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த அலுவலகங்களுக்கென ரூ. 35 லட்சம் செலவில் தனியாக ஒரு கட்டிடம் கட்ட அரசின் ஆணை கோரப்பட்டது. சென்னை சேப்பாக்கத்தில் பாரத சாரணர் சங்கம் அமைந்துள்ள இடத்தில் காலியாக இருக்கும் இடத்தில் மேற்குறிப்பிட்ட கட்டிடம் கட்ட ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. ஆனால் சாரணர் இயக்கத்தின் தலைமை ஆணையர் அவ்விடத்தை இத்துறைக்குத் தர ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, இத்துறைக்குச் சொந்தமான இடத்திலேயே கிண்டியில் வல்லபாய் படேல் சாலைக்கு வடபுறம் அமைந்திருக்கும் காலியான இடத்தில் கட்டுவதென உத்தேசிக்கப்பட்டு இக் கட்டிடத்திற்கான விளக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. சென்னையில் தேவைப்படும் கட்டிடம் கட்டி முடித்த பிறகு, இத்துறைக்கென அலுவலகக் கட்டிடங்கள் பிற இடங்களில் கட்டுவதை சிறுகச் சிறுகச் செயல்படுத்தலாம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையைச் சேர்ந்த பெரும்பான்மையான அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்திலேயே இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த புள்ளிவிவரத்தின் படி, இன்னும் இந்த வட்ட அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களிலேயே

இருக்கின்றன. நீண்ட தொலைநோக்குத் திட்டத்தோடு ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டத்திலும் இதுபோன்ற அலுவலகங்கள் கட்டுவதோடு, குறிப்பாக நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சிமெண்ட், கம்பி, போன்ற பொருட்கள் ஏராளமாகத் தேக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பாதுகாப்பு இல்லாமல் ரோடுகளிலும், சாலை ஓரங்களிலும் கிடக்கின்றன. இதனால் இவைகள் வீண் விரயமாகின்றன. ஆகவே, அவைகளைப் பாதுகாப்பாக வைக்க சரியான கோடவுன்களை உருவாக்க அரசு ஏதாவது நீண்டகாலத் திட்டம் உருவாக்கத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** தற்போது அத்தகைய திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அலுவலகங்கள் கட்டுகின்ற திட்டம் மேற்கொள்ளும்போது, அலுவலர்களுக்கும் சேர்த்து வீடுகள் கட்டித் தருவது அவசியமாக இருக்கிறது. இந்தத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் அடிக்கடி மாற்றப்படுவதால், அவர்கள் மாற்றலாகிப் போகின்ற இடங்களில் வீடுகள் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அலுவலகங்கள் கட்டப்படும்போது, அலுவலர்களுக்கும் வீடுகளைக் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா ? அப்படிப்பட்ட திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி :** அத்தகைய திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** நெடுஞ்சாலை என்பது பெரிய தொல்லைப்பிடித்த ஒரு வேலை. நம்முடைய மதிப்பிற்குரிய அம்மையார் அவர்களுக்கு நெடுஞ்சாலை பற்றிய வேலை புதிது. நெடுஞ்சாலை பற்றிய பிரச்சினைகள் சென்னையிலேயும் இருக்கின்றன, நகரங்களிலேயும் இருக்கின்றன, கிராமங்களிலேயும் இருக்கின்றன. எல்லாவற்றையும் எடுத்துச்சொல்ல எங்களைக் காட்டிலும் லட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். ஒரு நாதியும் இல்லாமல், எட்டிப் பார்க்காமல் கிராமங்களில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான நிறைய பொருட்கள் வீணாகின்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவன் ஒன்றை எடுத்துக் கொண்டு போகிறான். போட்டிருக்கிற கல்லை வேறொரு காண்ட்ராக்ட்காரன் அள்ளிக்கொண்டு போகிறான் கம்பியை இன்னொருவன் திருடிக்கொண்டு போகிறான்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவர் குறுக்கிட்டு எழுந்தனர்.)





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவரைக் கேட்க விடுங்கள். (உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவரைப் பார்த்து) நீங்கள் கேளுங்கள்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** ஒரு காண்ட்ராக்டர் ஒரு இடத்திலுள்ள கல்லை எடுத்துக்கொண்டுபோய் வேறொரு இடத்திலே ரோடு போடுகிறான். இந்த நிலைமைகளை டி.டி.சி.யில் கேட்டால், "உங்கள் ஊரில் இருக்கும் ரோடு நல்ல ரோடு அங்கே புதிதாகத் தேவையில்லை" என்று பதில் வருகிறது. ஆகவே, நேரடியாகப் பார்த்து தக்க ஏற்பாடும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிலைமைகளைப் பார்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சுற்றுப்பிரயாணம் செய்வார்களா என்று கேளுங்கள், வினா வேண்டும்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** இந்தத் தொடர் கூட்டம் முடிந்தவுடனே அப்படிப்பட்ட ஒரு சுற்றுப்பிரயாணத்தை நான் மேற்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்திலே இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

### ஒத்திவைத்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். லெட்சுமிகாந்தன் அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்திவைக்கப்படுகிறது.

## 3. தகவல் கோரல்.

(1) திரு. வே. தங்கப்பாண்டியன் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டு, பதில் கொடுக்கப்படாதது குறித்து.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். மூன்று நாட்களுக்கு முன்பு கொடுத்திருந்தேன். அரசாங்கத் தரப்பிலிருந்து, எதிர்க் கட்சி சார்பாகக் கொடுக்கிற அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு 3 நாட்களுக்குள் பதில்

கொடுக்காவிட்டால், அந்தத் தீர்மானத்தின் நோக்கமே தோல்வியுறுகிறது. மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானங்கள் சீக்கிரம் வர தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் அவர் என்றைக்குக் கொடுத்தார்களோ அன்றைக்கே என்னுடைய பார்வைக்கு வந்தது. இந்தப் பிரச்சினை சம்பந்தமாக, தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எந்தப் பொருள்பற்றி என்று சொன்னால் கூட பரவாயில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் சொன்னபோதே சொல்லி விட்டிருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஒத்திவைப்புத் தீர்மானம் இப்போது எடுக்கவில்லை. பேச்சுவார்த்தை நடந்து முடியக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் ஒன்று சொல்கிறேன். நான் அனுமதிக்குமுன் நடக்கும் ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன பொருள் பற்றியது என்று சொல்வது மரபு அல்ல. அது நம் மூன்று பேர்களுக்கும் இடையே உள்ள ஓர் அந்தரங்க ஏற்பாடாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : பேச்சுவார்த்தை முடிந்த பிறகு அதுசம்பந்தமாக அறிக்கை மன்றத்திலே வைக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : மரபு பற்றிய ஒரு விளக்கம். ஒத்திவைப்புத் தீர்மானம் ஒரு முக்கியமான பிரச்சினையைக் குறித்துக் கொடுத்தால், அந்தப் பிரச்சினை தீர்ந்த பிறகு, அறிக்கை வைக்கலாம் என்று சொல்வது; தலைவர் அவர்களே, எங்களுடைய உரிமையைப் பாதிக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே நாங்கள் கொடுத்து, இந்தப் பேச்சுவார்த்தை நல்ல முறையில் நடந்து வெற்றிபெறும் என்று சொன்னால், அப்போது எங்களுடைய நோக்கமும் நிறைவேறுகிறது, பிரச்சினையும் முடிகிறது. ஆகவே, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்காமல், தலைவர் அவர்களே, தாங்கள் பாதுகாப்புத் தர வேண்டும்.





மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த பிறகு, அரசு அதை பேச்சுவார்த்தைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. தீர்மானம் கொடுத்ததற்குப் பிறகு, அரசே தனியாகப் பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று ஆரம்பித்தால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது சரி. ஆனால், இந்தப் பிரச்சினையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்ததற்கு முன்பே, ஜனவரி மாதம் 24-ம் தேதியிலிருந்து முழுஅளவிலே பேச்சுவார்த்தை நடக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, நேற்று பேசியிருக்கிறோம். இன்று காலையிலேயும் பேசியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்திருக்கிறார்கள். உயர் அதிகாரிகளோடு கலந்து பேச வேண்டிய சில பிரச்சினைகளும் இருக்கின்றன. எனவே, இந்த விஷயத்தில் பேச்சுவார்த்தை முடிந்த பிறகு, ஒரு முழு அளவிலே என்ன நடந்திருக்கிறது என்பதை சபைக்குச் சொல்லலாம் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன்னவர் அவர்களுக்கு, அதையே நீங்கள் அங்கீகரித்து, என்ன நடந்தது என்று சொல்லி, இந்தமாதிரி பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன, மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துகிறோம், பிரச்சினை சுமுகமாக முடியும் என்று நம்புகிறோம் என்று சொன்னால், ஆறுதலாக இருக்கும் அல்லவா ?

திரு. செ. முத்துசாமி : நாட்டிலே முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. உண்ணாவிரதம், போராட்டங்கள் என்று நடத்துகிறார்கள். இவைகளை, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். இந்தமாதிரி நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கத்திற்கு ஊர் மக்களின் சார்பில், போராட்டங்கள் நடக்கும்போதோ, அல்லது உண்ணாவிரதம், மறியல் நடக்கும்போதோ, அவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது எங்களுடைய கடமை. இவ்வாறு நாட்கள் தள்ளிப் போகும்போது நாங்கள் என்ன நோக்கத்திற்காக அந்தத் தீர்மானங்களைக் கொண்டுவருகிறோமோ அது பாதிக்கப்படுகிறது. அந்த நிலையிலிருந்து பாதுகாப்பு கொடுத்து, நாங்கள் தீர்மானங்கள் கொடுத்தால், அடுத்த நாள் அவைகள் எடுத்துக்கொள்ளப்படும், பதில் சொல்லப்படும் என்று சொல்லி தகவல் தலைவர் அவர்கள் மூலமாக வந்தால் நல்லது.

(பிற்பகல் 4-50)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைச் சொல்வதற்கு இவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டுமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைவர் அவர்களின் அறைக்கு வந்தபோதே, நான் இதைக் குறிப்பிட்டேன். அவர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கும் விவரத்தைக்கூட சொன்னார். இன்றைக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள், அது நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என்று அவருக்கு பதில் சொன்னேன். நாளைக்கு அதை எடுத்துக் கொள்ளுவோம் என்பது அவருக்கும் தெரியும். அவையிலேயே அதைத் தெரிவிக்க வேண்டுமென்றால், அதையும் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, நானும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதைப்பற்றி நான் கேட்கவில்லை யென்றாலும் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எல்லாவற்றிற்கும் ஒரே பதில்தான். விரைவில் அவைகளை எடுத்துக்கொள்ளுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நான் இங்கே கேட்பது ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் குறித்து. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது உரிமைப் பிரச்சினை குறித்தது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எல்லாவற்றிற்கும் முதலில் சொன்னதே பதிலாகும்.

### (2) 42-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு முன்னறிவிப்பை ஒத்திவைத்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லேட்சுமிகாந்தன் அவர்களின் கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு ஒத்தி வைக்கப் படுகிறது.

**திரு. சி. ரா. லேட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான அறிக்கையை உறுப்பினர்களுக்கு வழங்கி விட்டார்கள். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கில்லை என்பதற்காக அதை ஒத்திப் போடுவதை விட, அவையின் முன்னவர் அவர்கள் இருப்பதால், அவரே இதைப் படித்துவிடலாம். இன்றைய நிகழ்ச்சியிலேயே அதுவும் முடிந்து விடும். நானும் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது விளக்கமோ துணைக் கேள்வியோ எழுப்புவதாக இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று வருகிறபோது, அது குறித்து துணைக் கேள்வி எழுப்புவதற்கு வாய்ப்புண்டு. எனவேதான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஒத்தி வைக்கலாம் என்று சொன்னோம். அதுவுமல்லாமல், இது ஒரு கொள்கை சம்பந்தமான ஒன்றாக இருப்பதால், இதற்குரிய அமைச்சர் அவர்கள் பதில் தருவதுதான் சரியாக இருக்கும். அமைச்சர் அவர்கள் இல்லை என்பதால், உறுப்பினர் துணைக் கேள்வி போடவில்லை என்று சொல்லி, அதன் காரணமாக இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது சரியல்ல.

### 4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான தமது திருத்தங்கள் குறித்த முன்னறிவிப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை முழுமையாகப் படிக்காமல் என்னுடைய தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் என்று சொன்னாலே போதும். முழுவதுமாகப் படிக்க வேண்டாம் என்று கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்கள் தயவு செய்து உறுப்பினர்களுடைய திருத்தங்களை முழுமையாகவே படிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்கள் விரும்புவார்களானால், எனக்கு ஆட்சேபனையில்லை. நேரமாகுமே என்றுதான் சொன்னேன்.

***திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் கடைசியில் எனது கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளுமாறு முன்மொழிகிறேன்:

"சிறுபான்மை சமுதாயத்தினருக்கும், அரிசன மக்களுக்கும், பாதுகாப்பற்ற நிலைமை உருவாகி பல பகுதிகளில் இவர்கள் துன்புறுத்தப்படுவதும், தொல்லைக்குள்ளாக்கப்படுவதும் மிகுந்து காணப்படுவதையும், அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு வழங்கப்படும் முறைகள் பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்படாதது வருந்தத்தக்குரியதாகும்."

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

* THIRU K. RAMAMOORTHY: I move the following amendment:—

"Add the following at the end:

but regret to note :

(i) the deterioration and ultimate failure of law and order situation in the State which has led to the insecurity to the life and property of the people;

(ii) the inability of the Government to effectively implement the Prohibition Act and for the issue of a Government Order which virtually scraps Prohibition in the State;

(iii) the non-mention of the loss of confidence which the people of this State have clearly expressed against the A.I.A.D.M.K. Government in the recent elections necessitating the Ministry to resign and get away".

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : தலைவர் அவர்களே, நான் இதனை வழிமொழிகிறேன்.

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்காணும் திருத்தத்தை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழிகிறேன் :

"இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதை குறிப்பிட்டும், அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை குறித்தும் ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்படாதது வருத்தத்திற்குரியதாகும்."

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழிகிறேன்:

"அரசு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியதால், விவசாய சங்கம் தங்களுடைய கோரிக்கைகளை தெரிவித்து மாநில அளவில் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தும், அதற்குத் தகுந்த பரிகாரம் எடுக்காதது குறித்தும், மாநில அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருத்தத்திற்குரியதாகும்."



திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட எனது திருத்தத்தை, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழிகிறேன் :

"காவல் துறையினர் தங்களுடைய கடமையை ஆற்ற முடியாத நிலைமையில் ஆளுங்கட்சியினர் தலையீடு ஏற்பட்டு, நிர்வாகம் சீர்குலைந்து இருப்பதையும், அதைத் தடுப்பதற்கு அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருத்தத்திற்குரியதாகும்."

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே. இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

* THIRU P. R. THOMAS : Sir, I move the following amendment—

"Add the following at the end:

'but regret to note that there is no positive or adequate proposals in the said address for eradication of unemployment, especially among Trained Teachers and Graduates"'.

திரு. செ. முத்துசாமி : இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, I move the following amendment:—

"Add the following at the end:

but regret to state that there is no statement on the Policy relating to Prohibition"

and

"also regret to state that the efforts which this Government would take to solve the problem of floor crossing through its good offices with the Central Government have not been indicated."

The amendment was duly seconded by Thiru A. R. Damodaran.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட எனது திருத்தங்களை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழிகிறேன் :

"ஆசிரியர்களின், அரசு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளாகிய போனஸ், மாதந்தோறும் மருத்துவப்படி, ஓய்வு பெறுவோர் அனைவருக்கும் பணிக்காலத்தைக் கணக்கில் கொள்ளாமல் ரூபாய் 10 ஆயிரம் அளித்தல்.

வெள்ள நிவாரணம்—கட்டாய சேமிப்புத் தொகை ஆகியவைகளை வெள்ளப் பாதிப்புப் பகுதிகளில் ஆசிரியர்களுக்கு இதுகாறும் பட்டுவாடா செய்யப்படாதது.

ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் ஆங்காங்கே தாக்கப்படுவதும், அவர்களுக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியிருப்பது—ஆகியவை பற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே எதும் குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்குரியது."

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட எனது திருத்தங்களை, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழிகிறேன்.

"1. அகவிலைப்படி உயர்வு குறித்தும்.

2. ஆசிரியர் பணி நியமனக் குழு நியமிப்பது பற்றியும்.

3. இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்துவது பற்றியும்.

4. மருத்துவப்படி வழங்குவது பற்றியும்.

5. தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் தனி ஊதிய விகிதம் அளிப்பது பற்றியும் பட்டதாரி ஆசிரியருக்கு பணிப்படி கொடுப்பது பற்றியும்.

6. பி.டி., புலவர் பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு அத்தகுதிக்கேற்ற ஊதியம் வழங்குவது பற்றியும்.

7. அரசு கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பணியாற்றும் தற்காலிக ஆசிரியர்களை சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு ஆஜராகாமல் ஆந்திர மாநிலத்தில் செய்துள்ளது போல் நிரந்தரம் செய்வது பற்றியும்.





8. மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரையின்படி மகப்பேறு விடுப்பு பெண்களுக்கு 90 நாட்கள் வழங்குவது பற்றியும்.

9. ஒரு மாத போனஸ் வழங்குவது பற்றியும்.

10. அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் உள்ளாட்சி நிறுவன ஆசிரியர்களுக்கும் தனியார் துறை ஆசிரியர்களுக்கும் வழங்குவது பற்றியும்,

11. சிறுபான்மையினர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிப்பது பற்றியும்.

12. நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கவர்னர் ராஜ்பவன் ஊழியர்களுக்கு அளிப்பது போல் கோடைகால படி (சீசனல் அலவன்ஸ்) வழங்குவது பற்றியும்.

13 20 ஆண்டு பணிக்கால அடிப்படையில் சிறப்பு நிலை அளிப்பது பற்றியும்.

14. ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வெள்ள முன்பணம் வழங்காதது பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்குரியதாகும்."

திரு. எ. ஆர். தாமோதரன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

(பிற்பகல் 5-00)

* THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, Sir, I thank you for the opportunity given to me. I would like to say that there are many good points in the Governor's Address but I would like to refer to some in particular.

Sir, I join in paragraph 4 of the Governor's Address wherein he has commended the peaceful manner in which the recent Parliamentary elections were conducted in Tamil Nadu. For the first time I did not see so many taxis plying and carrying voters though, of course, there were a few. But, the whole thing appeared to be very peaceful either because the people were not very much interested in the outcome or because there was a general apathy towards what was happening in different parts of the State and in different States also. It is noteworthy that the people, on two occasions, expressed their definite will to throw out the existing order or the existing form of Party Government at the Centre and opted for a new Government. As things would have it, there has been a failure or disappointment on the part of those entrusted with the governance of the country and a consequent disappointment in the people who elected them

to authority, with the result that the Government at the Centre has got changed. The nearest parallel to it happend when the great War-veteran, Sir Winston Churchill, soon after the War, was thrown out of office in the United Kingdom. He came back to power at a later date. This is the nearest parallel to what has happened in our country. It augurs well for our democracy that there should be a constant surveillance on the people in power and also on what they stand for whether their Party system is functioning properly in this country or whether people are looking for opportunities to stay in power and acquire favour by crossing the floor. Thirumathi Indira Gandhi has promised in her election manifesto that she will prevent floor-crossing and attempts to destabilise Governments in the States. But, it is something of a shock to many of us when we find that those attempts are taking deep root. It does not augur well and a recurring feeling that we may go back to the days of the Emergency is now coming over most of us. The recent happenings at the Centre are not very much to our liking. The recent disclosure in the Vaidialingam Commission's Report of sons getting some periodic acts of favouritism at the hands of their fathers and the exposure of that to the public eye do not seem to be conducive to the propoer development of our democracy . Things like this should be put a stop to. Whether they be wives or sons or daughters and whether they are related to the previous Prime Minister, the new Prime Minister or the successive Prime Minister, these people should be told their proper place. It is very necessary that we must adhere to principles and develop some properties on character in public life. Morality also should be there and it should really control the governance of this country. People who just change, like a chameleon, their Party affiliation and also their principles should not be encouraged to do so. For this, there should be an early legslation and it should cover all persons in this country. The Representation of the People Act should be amended and, if necessary, the Constitution also should be amended and floor-crossing should once and for all be stopped in this country. I am glad that the Governor's Address has referred to the recent Parliamentary elections in Tamil Nadu. But I am sorry to note that there is no mention in the Address about floor-crossing, about throwing out the acknowledged Governments from their seats of power or resorting to destablistation process just at the time or on the eve of the Rajya Sabha Elections which are to take place very shortly. If we are going to run the govenance of the country merely on the basis of who should be in power and how they should be in power without regard to principles, I do not know where our democracy would go. The people did not like many things that were happening in this country and they put the politicians



in their proper place in the two Elections held in 1977 and 1980. It is an outstanding example of how the people could exercise their power in a democracy. On this, all the democratic as well as Parliamentary Governments in the world have congratulated our electorate. Even after the people have shown their will, the people at the top do not realise what the mandate is that has been given to them by the people and how they should act to fulfil that mandate. I am sorry to say that we are not accepting the verdict of the people but are going in our own way once we have come to power.

I, therefore, would like to add at the end of the motion of thanks to the Governor's Address, as follows :

> "also regret to state that the efforts which this Government would take to solve the problem of floor crossing through its good offices with the Central Government have not been indicated."

Then, Sir, I go to another important matter, namely, the Prohibition policy of this Government. It has been asserted, time and again, on the floor of this House, probably from 1939 when the Prohibition Act came into force that if the Government want to have a legislation which interferes with the personal likes and dislikes of the people, the Government should see that it is properly implemented and enforced. But, nowhere, efforts are made in this direction. Every time a legislation impinging on the rights or personal likes and dislikes of the people comes in, what happens is that the measures and the agency for its implementation fail, and the Government lose their revenue, while somebody else makes money. When once the Government fail to implement it properly, I think it is proper to acknowledge defeat and at least save Government's revenues. We want money for many important things and social measures in the State. We cannot afford to lose money in following blindly the policy of Prohibition. No doubt everybody likes to see that his neighbour is not drunk. By all means, we can banish drunkenness. If a person wishes to have a drink, let him have it in private. I do not see how the Government can prevent a person from having a drink. Why should the Government pursue the policy of Prohibition, trying to interfere with the likes and dislikes of the people ? The Government can say : "All right you can drink ; but up to a limit. You must confine yourself to your homes. You cannot drink in public. You cannot be allowed to come to public places in a drunken vein ". The Government must boldly come forward to make such a policy statement on the floor of this House. Prohibition may be restricted to drunkenness alone. The Government should take courage to

say so when they are not able to implement their Prohibition policy successfully. It has been brought to the notice of the Government that the implementation of the Prohibition policy has not been successful. If the Government come forward to say boldly that Prohibition is restricted to drunkenness and public drunkenness, then they could be said to have understood and felt the pulse of the people, and acted according to the people's wishes.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

We are all aware of the drawbacks of Prohibition and the inability of the Government to implement it successfully and effectively. The Government should acknowledge their defeat and it is time that we teach the people what they should do but not impose our will. I, therefore, move that we must add at the end of the Motion of Thanks to the Governor's Address " but regret to state that there is no statement on the Policy relating to Prohibition ". I request that these amendments may be accepted by the House in the interest of the people and in the practical view of the present circumstances and I hope this House will accept these two amendments which I have moved.

(பிற்பகல் 5-10)

Sir, I now come to the main Address itself. In paragraph 10 of the Governor's Address, it has been stated :

> " Speedy steps will be taken to develop the forest wealth of this State. The Government will be vigilant in prevention of illegal felling and smuggling of trees and in punishing the offenders severely."

This has been stated with some sort of emphasis. I am glad to see that the Government want to deal with the offenders severely. But, I will cite a small instance. I am a frequent visitor to many of the tourist spots in this State. In those places, I very often find that replicas of the works of art existing in those places are being made on the spot itself. These replicas may soon fill the place of the originals. I find this is true not only in this State but in several States in the North also. Recently, I had been to Konarak. There, I found a mason sitting along with some artisans and making a replica of a particular portion of the brick-chariot. I asked him why he was doing that. He told me that some portions of that chariot had been smuggled and that he and the others were replacing them. On the other side on a raised platform round the chariot, I was surprised to see hippies sitting in a row. It seemed that some of them were using that place for sleeping overnight also. I saw this in Konarak which is one of the biggest



archaelogical monuments in our country. It is one of the finest monuments that you can find in Orissa or elsewhere. Then, what do we find when we go abroad ? We see big museums in different countries and we see very big museums in America. I have seen at least ten of such museums during my recent visit. In those museums, we find a pavilion named ' India Pavilion '. Inside that pavilion, we find arches of stone, ' Nandhis, bulls ' and all that front our temples. By whom were they given. They were given by " an unknown donor ". I saw this regrettable feature in three museums at Baltimore, Richmond and Philadelphia in the United States of America. I am told that the same thing happens in other museums also like the one at San Francisco where our Nataraja idol was found. This means that a racket is going on under the guise of renovating temples and under the guise of applying some anti-termite spray for the wooden articles. Under such guises, the art treasures are going away and some replicas are being substituted in their place. There should be a watch and ward for every one of our national monuments. Otherwise, we will be bereft of everything of value. I am making this appeal with great respect to the persons in authority. I request them to see that the persons who are put in charge of our national monuments are officers of exemplary character because I know that fabulous prices are offered for these antiques. It is a matter of great pity to see that such a thing has happened at Belur. The Hoysala architecture at Belur is something outstanding. The pieces of stone architecture are outstanding and there also we find that many stones have been substituted in places. I noticed all this because I make periodical visits to these places. I take tourists who are my friends along with me. But every time I find that something is missing from some place. These are things which we should be very careful about. We have got many good monuments at Mahabalipuram. We should not allow any of those monuments at Mahabalipuram to go away from our custody. No sort of smuggling activity should be there. We should very soon have a rule to protect those monuments. Any development of the town inside Mahabalipuram should be prevented. The whole of Mahabalipuram area should be cordoned off and persons inside should be asked to move outside. It should be a protected place. Mahabalipuram is a place where there are monuments of world-wide interest. I have heard many people abroad asking me, " What is there in Mahabalipuram ? How are the five ' Ratha's ? What about the famous sculpture in the Temple on the shore ? " But, whenever we go to Mahabalipuram for a second time, we find that the conditions prevailing there are worse than what we had seen before. This is because of an exodus of population to that area. Every time we find more shops in the

area near the monuments themselves. Why not cordon off the monuments ? For example, if we go to Sandiago, a place where there is a sea-world we find that the whole area is cordoned off. For going into that area, they charge 5 dollars for foreigners and one dollar for the local people. For foreigners they do not charge the same amount of money as for local people. Likewise, in Mahupichu also, they charge 3500 local currency for foreigners while they charge 2600 local currency for the local people. Why should we not do the same thing here also ? Of course, in Nepal, Indians are charged at a concessional rate. The foreign tourists who go there have to pay for plane fare Rs. 600 whereas the Indians will have to pay like Nepalese only Rs. 250. Therefore, for any foreign tourist who comes to Mahabalipuram we can charge at least Rs. 25 instead of Rs. 5 as at present. I would stress that the whole area in Mahabalipuram should be cordoned off. This will help to protect the monuments and will also enable the Government to collect money from the tourists for its maintenance. Now, a lot of tourists want to visit places of tourist interest like Mahabalipuram. Therefore, these places of tourist interest should be kept free from depradation by smugglers and anti-social elements. We will be able to earn much by way of foreign exchange if we increase the charges for the tourists from abroad. At the same time, the rates for our own people can be reduced so that the students and others may go and visit these places. But, let not the students go and write on the walls of the temples at Mahabalipuram. I find that this practice has recently developed. Sir, these have to be protected. It is mentioned that the ex-Servicemen will be utilised for such things. If they are going to be utilised, the Government may put them under the Army so that the Army may attend to the protection of our National Monuments in the country. I do not agree with the proposal to utilise the ex-Servicemen for providing security in the City and other places. The responsibility of providing security to the people in the City should be entrusted with the ordinary policemen and not with the ex-Servicemen. The ordinary policemen should be put in charge of prevention of ordinary. crimes and their detection. The policemen should be taken off from bandobust arrangements and bandobust duties. Ministers and other V.I.P's go abroad and come from abroad. There should be, if necessary, separate security force to provide bandobust and security arrangements. Ordinary policemen should not be put on bandobust duty. The bandobust activities are responsible for the ordinary policemen not fulfilling the task for which they are intended. This has been happening for a very long time. In no other country I have seen important persons received or given send-off by persons in such large numbers



as in this country. Time and again I have mentioned in this House that in other countries, even the President of the country is received by his security officials and also by a few high officials. A large number of people, as in our country, do not go and receive those dignitaries and there is no crowding and blockading of airport and railway station. Consequently, there is no necessity to make any bandobust arrangements in those places. If it is considered that such reception and bandobust activities are important, then the Government should have a separate force for that purpose, without entrusting that responsibility to the ordinary policemen, and that substitute force could be used for Republic Day parades and for presentation at the times of arrival and departure of high dignitaries and other persons in charge of our administration. If the ordinary policemen are entrusted with the task of providing bandobust to dignitaries, the police stations will be bereft of police personnel and they will not be able to watch the ordinary crimes and protect the life and property of the common people. Consequently, what is happening to-day is the absence of law and order.

Then, I would like to mention sports. I am very happy to note that a separate Directorate of Sports and Youth Services has been set up. While welcoming the setting up of such a Directorate, I find that grounds and areas meant for sporting activities are being eroded and they are disappearing from the City. Very big playgrounds meant to encourage sports activities of young people, sponsored by the Corporation, are disappearing from different parts of the City. We find a lot of buildings constructed in those places either by the Housing Board or by the Slum Development Board because we want to give to all people a place to live within the city. This sort of development of the City should be stopped in a metropolis. The City cannot develop in a congested manner. No doubt, it may be possible for the Government to bring water through mains to the people in such congested areas. When buildings are put up within the City, the lung space which is absolutely necessary for the metropolis is taken away. My hon. Friend was just mentioning about Singapore. Another friend was talking about some other part of the world. I am sure many of the Members here have gone abroad. Wherever we go in foreign countries, don't we find everywhere playgrounds maintained by Corporations or by the Government and are they not plentiful in

(பிற்பகல் 5-20)

those areas ? Don't we find plentiful of national parks in most places in the United States of America ? Even in a so-called under-developed country like South America, I found big playgrounds. For example, I saw the Maraccana stadium, the ground in which

Pele, the famous footballer plays. It is in Rio de Jenero and it can accommodate 1,03,000 persons. What big and spacious play-grounds do they have for the people! But, the metropolis does not look congested and it looks as a sprawling area. Why should we not do like that? Why should we not develop the City in the interior and why should we have the development in the sea-shore, thus spoiling the beauty of the City? Why should we have the tenements for fishermen right in front of the sea-shore in a congested way? We find that there are three buildings in an area where there should be only one. These are responsible for spoiling the beauty of our City of Madras. Madras which was once a beautiful City is fast becoming a place of Housing Board colonies and slums in all its length and breadth. I do not approve of this policy for the development of the City. The area around the Theosophical Society has been invaded and Padmanabha Nagar and other areas have been built up. The whole of the frontier of the Elliotts Beach has now been invaded with buildings. I can under-stand it if we have the buildings sparsely distributed with plenty of land-space in between. But, what is the use of recklessly building without any sense of town planning? Just now, a state-ment was made in the House about traffic accidents. I would like to cite the example of Brazilia, the new capital of Brazil. It has been built by an expert Mr. Otto Numeyor and he has built it in such a way that no accident at all can take place. There are 22 blocks of three floors or 11 blocks of ten floors which constitute a colony. That colony has a super-market or what they call a departmental store plus a Police Station, a Fire Service Station, a nursery school and a small zoo for the children. Cars only go round the colony and they can never get into the colony. There are many places in the world where streets are kept closed for traffic. In Munich in West Germany, Curiba in Brazil and several other places all over the world, we can find sprawling markets alongside the roads, but no vehicle is allowed to go on those roads. Why cannot we have the same arrangement in Broadway, Subash Chandra Bose Road and other places in Madras? We can close those areas for vehicular traffic so that people could walk about and buy their things. There are plenty of kiosks in those areas and let the people walk to those places instead of driving up in their cars and creating a traffic jam. I am certain that many of us have gone abroad and have been these things. Why should we not follow the good things here instead of following the bad things? The hon. Member Thiru Veerasami just now mentioned about traffic accidents and quested the example of Singapore. Let me also quote 'the example of the United States of America. Once, I was going by t highway in the United States





of America. It was an Expressway. Within twenty seconds of the driver of my vehicle having exceeded the speed-limit, I was able to see through the mirror three lights flickering in the back. He was overtaken by the Police and he was charged 35 dollars on the spot for overspeeding, i.e., going beyond the limit of 60 miles per hour. The Police Officer said that he was charging 35 dollars and that if the driver wanted to contest, he could go to the Court. Irrespective of the position a person occupies in life, the Police-man there does this. If we give that power to the Policeman here, all the traffic accidents will stop. Let them chase the lorries, fine the drivers on the spot and then let there not be any appeal to a Minister or a strike. If the driver exceeds the speed limit, the Policeman should prove it with the help of an appropriate gad-get which he should carry with him. Then, the fine should be a very heavy fine. In that case, I am certain that the lorry drivers will not repeat their antics again. But, at the same time, the Policemen themselves should be aware of the due process. In America, the Police are afraid of the due process of law and they will not exceed their limits. But when once they find that a per-son is a delinquent, they will catch him and they will not let him off. It is so far as the traffic offences are concerned.

Then, Sir, I would like to mention about training of children. The hon. Member Thiru Miakhan just now said that children should be trained as to how to walk along the roads and how to between as respectable citizens. I may point out here that there is a place called LAPLATKA where there is a Republic exclusively for children. Children are sent there for training for a week or ten days. They have got a miniature Parliament, a miniature police station, a miniature judiciary, a miniature Presidential Office and everything in miniature. These children are trained in civic life in that place. I am not saying that we should copy them. We can have similar places of training for our children in our own way. Instead of depending upon the schools to give such training, we can have a place of training where we must have the replicas of all things. Children can be sent there and taught how they should conduct themselves with the Members of the Legislature, on the road and how they should behave in hospitals where they should refrain from making noise which would affect the patients and how they should conduct themselves in an emer-gency like fire, how they should help people when they are drow-ned, etc. All this training could be given in a place for about a week and the children will be able to see all things in miniature fashion. I, therefore, commend that our Government should start giving training to children, not by holding conferences but by providing actual visual education. Our Television could also be

used for the purpose, not in the way programme is given now but in a more appealing way, with less of talk and more of action. Unfortunately in our T.V. programmes today there is too much of talking and one man goes on talking all the time, as I am doing today.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member has at last realised it.

THIRU G. VASANTHA PAI : Sir, I said so in humility and I expected the Chair to remark that I was not wasting the time of the House.

Then, I come to the question of handloom garments. Yesterday there was a question about that and I was surprised to find in most of the foreign countries our handloom articles, the price of which is marked as 14 dollars, come to the basement in the supermarkets and departmental stores and marked for sale for 50 cents. Nobody comes forward to buy them even at that reduced price of 50 cents. It is because after sometime, they lose their texture and they do not look like what they appear to be at the first instalment. There is no proper quality control over the articles exported. There is failure to check quality before export.

Before concluding my speech, I want to say something about our Deer Park. Before 1977, I had been to the Deer Park and I had seen very big stags and deer of all description. I was told that suddenly there was a Government order to prevent the Riding Club members from going through the deer park or anywhere near that. These members of the riding club were going through the Park and probably their going through the Park acted as a sort of caution to the poachers. I find within the last two or three years—during which period there was a road being built next to the Cancer Institute and Mahatma Gandhi Mandap—big deer have almost vanished from the park. When I went to the Deer Park

(பிற்பகல் 5-30)

next to the Raj Bhavan last month, I found, to my utter surprise, four carcasses of deer sans skin and sans horns lying in the open. One was hanging from the trees very near the Raj Bhavan. One was lying near the lake and vultures were sitting on it and eating it up. I had never seen such a ghastly sight ever before in my life. I have been going to the Deer Park periodically and I have always seen deer and stags of at least 5 or 10 years of age. They have all vanished and now there are only small ones. Poaching has been going on inside the Deer Park. The Deer Sanctuary of ours next to the Raj Bhavan, is a very important one. It is a



place to which many tourists go because we do not find deer in such large numbers in any other place. I would, therefore, request the Forest Department which has to preserve the forest wealth of our country to look into this. If the Deer Sanctuary next to the Raj Bhavan belongs to the Central Government, the attention of that Government should be drawn to the poaching that has been going on in the Deer Sanctuary. I do not know why the Raj Bhavan authorities stopped the surveillance by the members of the Riding Club in this area. That has been definitely a disservice because poachers have come instead.

In conclusion, I would like to mention about the reduction of voting age in the elections to local bodies to be held this year and also the reservation of adequate seats for women. While I agree with these proposals, I do feel that the young people in our State should be given adequate education in civic life. If this is done, there will be a proper fulfilment of the principles of democracy in this country. Thank you.

*திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைபற்றி என் கருத்தைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேதகு ஆளுநர் ஆற்றிய உரைக்காகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசும் போது, இதை எல்லோரும் குறை சொல்வார்களே தவிர, யாருமே பாராட்ட மாட்டார்கள் என்று அறிவித்தார்கள். அவர் என்னுடைய நண்பர் என்பதற்காக அல்ல, உண்மையாகவே மன மகிழ்ச்சியோடு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

“புதிதாக மத்தியில் அமைந்துள்ள ஆட்சிக்கு தமிழ் நாட்டு மக்களின் சார்பில் நல்வரவேற்பு கூற விரும்புகிறேன். அனைத்து மாநிலங்களின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பெறும் வகையிலும், மாநிலங்கள் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றுவதற்கு உறுதுணையாக அமையும் வகையிலும் புதிதாக மலர்ந்துள்ள மைய அரசு செயல்படுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்” என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். புதிதாக மத்தியில் அமைந்துள்ள ஆட்சிக்கு தமிழ் நாட்டு மக்களின் சார்பில் நல்வரவேற்பு கூற விரும்புகிறேன் என்று முதல் வாக்கியத்தையும் சொல்லி நிச்சயமாக நம்புகிறேன் என்ற வாக்கியத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அதற்காகவும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. இப

ஆளுநர் உரையாக இருந்தாலும் கூட, இன்றைய ஆட்சியின் கருத்து தான் இது என்பதை நாமெல்லாம் மிக நன்றாக அறிவோம். இப்போது புதிதாக மலர்ந்துள்ள புதிய மத்திய அரசைப்பற்றிக் கொஞ்சம்கூட ஐயப்பாட்டுக்கு இடமில்லாமல் உறுதி கூறியிருக்கிறார்கள் என்பதைப் பாராட்டுகிறேன்.

இதைத்தான் 3 மாதங்களுக்கு முன்பே திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னது. கருத்திலே வேறுபாடு இல்லை. ஆனால் காலத்திலேதான் மாறுபாடு என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தியாவுக்கு இந்திராவின் ஆட்சிதான் வர வேண்டும். நிலையான ஆட்சியை அமைக்க அவர்களால்தான் முடியும் என்கிற குரலை முதலில் கொடுத்தவர்கள் எங்கள் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான்.

அப்போது "இந்திரா அம்மையாரை ஜெயிக்க விட மாட்டேன், கூட்டாட்சிதான் அமைய வேண்டும். கூட்டாட்சிதான் அமையும், ஒரே கட்சி ஆட்சிக்கு வந்தால் அது சர்வாதிகாரமாக அமையும், இந்திரா மீண்டும் பிரதமரானால் இன்னும் 21 ஆண்டுகளுக்குத் தேர்தலே வராது" என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால், 23 நாட்களுக்குள் இவ்வளவு அழகாக மனம் திருந்தி இந்திரா காந்தி அம்மையாருடைய மத்திய அரசுக்கு உங்களுடைய நம்பிக்கையையும், பாராட்டுதலையும் தெரிவித்திருக்கிறீர்கள். அதைத்தான் நான் முதலில் நன்றி உணர்வோடு வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

நாங்கள் கொஞ்சம் முன்னறிவுடன் சொன்னோம். அவர்கள் பட்டறிவுடன் சொல்கிறார்கள். ஆகவே கருத்தில் வேறுபாடு இல்லை. காலத்திலே தான் மாறுபாடு. 25 ஆண்டுகளுக்கு தேர்தலே வராது என்று முன்னே கவலைப்பட்டவர்கள் இப்போது வெகு விரைவிலே தேர்தல் வந்து விடுமோ என்று கவலைப்படும் நிலையை அடைந்திருக்கிறார்கள். 25 ஆண்டுகளுக்குத் தேர்தலே வராது என்று சொன்னீர்களே, உங்களுடைய ஐயப்பாட்டைப் போக்கத்தானோ என்னவோ விரைவிலே தேர்தலைக் கொண்டு வர வேண்டுமென்று இப்போது ஏற்பாடுகளைச் செய்கிறார்களோ என்னவோ. (சிரிப்பு). ஆனாலும் நீங்கள் இப்போது தேர்தலே வரக்கூடாது என்று கூறுகிறீர்கள்.

இருபது அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்தபோதே, அன்றையதினம் எதிர்க்கட்சியாக இருந்த அன்றைய திராவிட முன்னேற்றக் கழகம் அதை வரவேற்றதாக முன்னிலை கொண்டாடுகிறது. ஆனால் ஆளுங்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் 20 அம்சத் திட்டத்தை அதற்கு முன்னாலேயே முன்னறிவுடன் செயல்படுத்திக் கொண்டிருந்தது. இருபது அம்சத் திட்டத்தில் பல பகுதிகளை ஏற்கெனவே டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி விட்டார்கள். ஆகவே அது கொண்டு வரப்பட்டபோதும் அதை



வர் வரவேற்றார். ஏற்கெனவே பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கி ாம், எஞ்சிய திட்டங்களையும் நிறைவேற்றுவோம் என்றுதான் அன்றைய ாம் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அறிவும் முன்னறி ன், நாங்கள் செயல்பட்டிருக்கிறோம். இப்போது நீங்கள் முன்னுரிமை டும் பாராட்டுகிறீர்கள். தமிழகத்திலேயுள்ள கொத்தடிமை முறையை க்க 20 அம்சத் திட்டம் உதவி செய்தது என்று சொல்லியிருக்கிறீர்கள். த்திட்டத்தைச் சரிய முறையில் நிறைவேற்றுவதில் இப்பாதிலே ஆக, ய அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும்" என்று சொல்லியிருக்கி கள். இது எந்த அளவுக்கு சரி? கொத்தடிமை முறை ஒழிக்கப்பட ண்டுமென்பது சில குறிப்பிட்ட ஜாதியாருக்கு மட்டுமல்ல, பண்ணை வி களுக்கு மட்டுமல்ல, இப்பொழுது சில எம்.எல்.ஏ.க்களுக்கும், அமைச்ச க்கும் கூட அது தேவைப்படுகிறது. அந்த நிலையில் அவர்கள் இருப்ப அறிகிறேன். அவர்கள் கொத்தடிமைகளைப் போல நடத்தப்படுவ கிறேன். இதற்கு மேல் இதைப்பற்றி நான் விளக்குவது அவ்வளவு தல்ல என்பதால் இத்துடன் விட்டுவிடுகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் கடந்த 2½ ஆண்டுகளாக இன்ன இன்ன திட்ட ா நிறைவேற்றியிருக்கிறோம் என்று சொல்லக்கூடிய வாசகங்கள் இருக் னவா என்று தேடினேன். ஒரே ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி படுதாக மட்டும் அறிவித்திருக்கிறீர்கள். அதாவது "சாமத்தியமாக யவிலைக் கடைகள் அமைக்கும் இந்த அரசின் திட்டத்தின்படி, எல்லா மங்களிலும் நியாய விலைக் கடைகள் நல்ல முறையில் தற்போழுது ல்பட்டு வருகின்றன" என்று ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறீர்கள். ய விலை இப்போது எங்கே இருக்கிறது? எல்லாக் கிராமங்களிலும் ய விலைக் கடைகள் செயல்படுகின்றன என்று நீங்கள் சொல்வது எந்த வுக்கு உண்மையாக இருக்கும்? பொய் என்று நான் சொல்லக்கூடாது. போது கத்தரிக்காய் விற்கிற விலை என்ன? வெங்காயம் விற்கிற விலை ா? தக்காளி விற்கிற விலை என்ன? இதையெல்லாம் எண்ணிப் பார்க்க ண்டும். இவற்றின் விலைகளையெல்லாம் பார்த்த பிறகு, ஒருவேளை ாய விலைக் கடை என்பதற்குப் பதிலாக அச்சுப் பிழையின் காரண நியாய விலைக் கடை என்று சொல்லியிருக்கிறார்களோ என்னவோ ற ஒரு சந்தேகம் எனக்கு வருகிறது. இது தவிர, ஆளுநர் உரையில் ஒன்றையும் உங்களால் சொல்லிக் காட்ட முடியவில்லை.

முக்கமாக உள்ள சில வாக்குறுதி வார்த்தைகள் ஆளுநர் உரையில் காணப் ன்றன. அவற்றில் சிலவற்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படு ன். எல்லாவற்றையும் சுட்டிக் காட்டினால் நேரம் அதிகமாகும் என்ப ஒன்றிரண்டை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன்.

"ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளை அளிப்பதற்கும், அவற்றின் மூலம் விவசாயிகள் பல்வேறு விளை பொருட்களை விற்பதற்கு ஊக்கமளிப்பதற்கேற்ற வகையில் அவற்றைத் திருத்தியமைப்பதற்கும் சுமார் 100 கோடி ரூபாய் செலவிலான பெரிய திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது" என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் செயல்படுத்தக் காணோம். அரசு திட்டம் வகுத்துள்ளது என்று தான் குறிப்பிட்டிருக்கிறீர்கள். எங்கள் கிராமத்தில் ஒரு பழமொழி சொல்லுவார்கள். "அடுத்த வருஷம் தாலி கட்டுவேன், அத்தை மகளே சுகமாயிரு" என்று சொல்லுவார்கள். அதுபோல் 100 கோடி ரூபாய் செலவிலான பெரிய திட்டத்தை அரசு வகுத்துள்ளது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

"இவ்வாண்டு 2,000 தீப்பெட்டி உற்பத்தி செய்யும் அமைப்புகள் புதிதாக உருவாக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டதற்கு மாறாக, இதுவரை மொத்தம் 2,600 நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்றுதான் குறிப்பிட்டிருக்கிறீர்கள். முதலில் 2,000 அமைப்புகள் அமைக்க வேண்டுமென்பது திட்டம். இப்போது 2,600 நிலையங்கள் அமைக்க ஏற்பாடு செய்வதாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். இதில் கூட கருமித்தனம் காட்ட வேண்டுமா? ஏன் ஒரு இரண்டு இலட்சம் அமைப்புகள் உருவாக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கக்கூடாதா? நீங்கள் செய்வதாக இருந்தால்தானே நிதி தேவை, முயற்சி தேவை. திட்டத்தில் எண்ணிக்கையை அதிகமாகக் காட்டக்கூடக் கருமித்தனமா?

அடுத்து, "1979 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் முடிய 7,000 ஏக்கர் பரப்பில் புதிதாக முசுக்கட்டை பயிரிடப்பட்டு, இந்த நிதி ஆண்டு இறுதிக்குள் சுமார் 10,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது" என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். சொல்லப்படுகிறது. பரவலாகப் பேசப்படுகிறது, கூறப்படுகிறது என்று சொல்லுவது மாதிரி நீங்களும் இங்கே எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். 10,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டுவிட்டீர்களா என்றால் அதுதான் இல்லை. அதே போல "கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் செய்வதற்கான அரசின் முடிவைச் செயல்படுத்த, அரசு நிறுவனம் ஒன்று பதிவு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன" என்று கூறியிருக்கிறீர்கள். இங்கும் "அத்தை மகளே சுகமாயிரு, அடுத்த வருஷம் தாலி கட்டுவேன்" என்று சொல்லுவது போல் "மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று சொல்லியிருக்கிறீர்கள்.

அடுத்து, "கிராமங்களில் தேவையான அடிப்படை வசதிகளை ஒருங்கிணைந்த முறையில் தருவதற்காக, இந்த ஆண்டு மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுச் சிறப்புத் திட்டமொன்று



செயல்படுத்தப்பட்டது. இதனை விரிவாக்கி, அடுத்த ஆண்டு மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது" என்று சொல்லியிருக்கிறீர்கள். அதுபோல் கிராமப்புறங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் கூட, "இந்த ஆண்டு 20,000 வீடுகள் கட்ட முதலில் திட்டமிட்டதற்குப் பதிலாக, தற்பொழுது 30,000 வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என்று சொல்லியிருக்கிறீர்கள். ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கிராமப்புறங்களில் கட்ட உதவும் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது என்றும் சொல்லியிருக்கிறீர்கள். முதலில் 20,000 வீடுகள் கட்டுவதற்கு திட்டம். இப்போது 30,000 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடுகிறீர்கள். "இதுவரை 38,000 விண்ணப்பங்களுக்குக் கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது" என்று சொல்லியிருக்கிறீர்கள். இதுவரை கடன் அளிக்கப்படவில்லை. ஆனால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இந்தி எதிர்ப்பு மற்றும் எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்க சட்ட வரைவு ஒன்றை அரசு தயாரித்து வருகின்றது என்று சொல்லியிருக்கிறீர்கள். சட்ட வரைவு தயாரிக்கப்பட்டால், எனக்கும் கூட பங்கு வரும். மாண்புமிகு தலைவரவர்கள் கூட சாட்சிக்கு வருவார்கள். எந்த மாதிரியான உதவித் தொகை என்று குறிப்பிடப்படவில்லை. மாத ஊதியமா என்றும் தெரியவில்லை. 100 ரூபாயா, 200 ரூபாயா இல்லை 250 ரூபாயா என்றும் தெரியவில்லை. இப்போது உதவித் தொகையை மூன்று வகைகளில் கொடுக்கிறார்கள். எந்த வகை உதவித் தொகை என்று தெரியவில்லை. "ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சி ஆகிய உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்த அரசு அண்மையில் முடிவு எடுத்துள்ளது" என்று இருக்கிறது. அதிலும் வழக்கமாக நாம் கேட்ட பல்லவி தான். அடுத்து "பதினெட்டு வயது வந்தோர் அனைவரும் தேர்தல்களில் வாக்களிக்க வகை செய்வதற்கான சட்டத் திருத்தம் செய்யவும் தாய்மார்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் தக்க இட ஒதுக்கீடு பற்றிய சட்டத் திருத்தங்கள் செய்யவும் அரசு உத்தேசித்துள்ளது" என்று சொல்லியிருக்கிறீர்கள்.

(பிற்பகல் 5-40)

(மாற்றுத் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனம் தலைமை)

ன்னாள் ராணுவ வீரர்களை நகர பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி எல்லாம்

அறிவிக்கப்பட்டுள்ளது, ஏற்பாடு செய்யப்படுகிறது, எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி எல்லாமே "அடுத்த வருடம் தாலி கட்டுகிறேன், அத்தை மகளே சுகமாய் இரு" என்று தான் . . .

திரு. வே. தங்கப்பாண்டியன் : அடிக்கடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "அத்தை மகளே சுகமாய் இரு" என்று சொல்கிறார்கள். அத்தை மகள் மீது அவ்வளவு பிரியமாக இருக்கிறாரா ?

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இளமை நினைவில் இருப்பார்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : தாலி கட்டினால்தான் அத்தை மகள் சுகமாய் இருக்க முடியும். 'அடுத்த வருஷம் தாலி கட்டுகிறேன்' என்பதை நம்பி எந்த ஏமாளியும் இருக்கமாட்டாள். இப்படி சொல்லிச்சொல்லி 2½ வருஷம் பார்த்தாகிவிட்டது. அடுத்த வருஷம் தாலி கட்ட நீங்களும் இருக்கமாட்டீர்கள், அத்தை மகளும் காத்திருக்கமாட்டாள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வலிவு உள்ள வாலிபன் வந்தால், திறமையுள்ளவன் யார் என்று அவள் தேர்ந்து கொள்ளட்டும்.

மதுவிலக்குக் கொள்கைபற்றி ஆளுநர் அவர்கள் உரையில் ஒன்றும் இல்லை. இதை எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் அனைவரும் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேறு எங்கோ பேசியிருக்கிறார். இங்கே பேசும்போது பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்த மதுவிலக்குச் சட்டத்தை இவ்வளவு கொடுமையாகக் கொண்டு வந்தபோது, இது தேவையில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அப்போது எதிர்த்தார்கள். நான் கூட கேட்டேன். நன்றாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. கமிஷனராக இருந்த அர்பான்ஸ்சிங் அவர்களும் மறுப்பு தெரிவித்து முழுமையாக அமுல்படுத்த முடியாது என்று சொல்லியிருக்கிறார். அப்பொழுது ஐ.ஜி. யாக இருந்த ஸ்டிரேசி அவர்களும் முழுமையாகச் செயல்படுத்த முடியாது என்று சொல்லி யிருக்கிறார். யாரை வைத்துக்கொண்டு முழுமையாக நீங்கள் அமுல்படுத்தப் போகிறீர்கள் என்று நான் அப்போது கேட்டேன். ஆனால், பிடிவாதமாக தாங்கள் நடத்தியே தீருவோம் என்று அப்போது சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இப்போது 25 ரூபாய்க்கு பெர்மிட் கொடுக்கச்சொல்லியிருக் கிறார்கள். இப்போது தாய்க்குலம் கண்ணீர் வடிக்கிறது. முதலிலே, மது விலக்கை தீவிரமாகக் கொண்டுவந்து, நாடுகடத்தும் அளவுக்கு சட்டத்தைக் கொண்டு வந்தது, அப்போதும் இந்தத் தாய்க்குலம் கண்ணீர் வடித்தது. இப்போது 25 ரூபாய்க்குப் பெர்மிட். தாசில்தார் ஆபீசிலே இருந்து பெர்மிட் வாங்கிக்கொள்ளலாம். இதற்கு என்ன காரணம்? தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்க இன்றைக்கு கருணை காட்டி இதைக்



கொண்டு வந்திருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இந்தச் சட்டமும் போதுமான முன்னேற்பாட்டோடு கொண்டுவரப்படவில்லை. அப்போது சொன்னதைக் கேட்காமல், செயல்பட்டு ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். முன்னால் சொன்னபோதே ஒழுங்குபடுத்தியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இந்தச் சட்டமும் முறையாக இல்லை. ஏற்கனவே, மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்து வதற்குக் கொண்டு வந்த சட்டத்திலேயும் பழைய குழப்பம் இருக்கிறது. இப்போது கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்டத்திலும் புதிய குழப்பம் இருக்கிறது. இரண்டும் சேர்ந்து சர்வ குழப்பம். ஏனென்றால் 30 வயதுக்கு மேல் இருந்தால், யாராக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், பெர்மிட் வாங்கலாம். அதற்கு 25 ரூபாய்தான் காணிக்கை. அந்தக் காணிக்கையைக் கொடுத்தால் இரண்டு யூனிட் கிடைக்கும். அந்த இரண்டு யூனிட்டுக்கும் இரண்டு பாட்டில்கள் கிடைக்கும். அதுவும் அரைக் கிணறு தாண்டுவதுதான். குடிக்கிறவனைத் திருப்திப்படுத்த பெர்மிட் கொடுத்த பிறகு, அவன் தன்னிறைவு அடையும்வரை கொடுக்க வேண்டும். இல்லையென்றால், அந்த இரண்டு பாட்டில்களையும் வாங்கிக்கொண்டு அவன் மீதித் தேவையைப் பூர்த்திசெய்ய வேறு வழிகளில் ஈடுபடுவான். வழக்கமாகக் குடிக்கிறவனுக்கு இரண்டு பாட்டில்கள் நான்கு நாட்களுக்குத்தான் வரும்.

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எத்தனை பாட்டில்கள் வேண்டும் என்று சொன்னால் நல்லது.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : நான் உங்களுடைய லைசென்சை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவில்லை. நாட்டு மக்களும் லைசென்சை எதிர் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. ஆனால், சட்டம் என்று ஒன்றை அமுல் படுத்தவேண்டுமென்றால், அதைச் சரியாகக் கொண்டு வரவேண்டும் என்று குறிப்பிடுகிறேன். இந்தமாதிரி அரைக்கிணறு தாண்டுகிற நிலையிலே தான் இந்தச் சட்டம் இருக்கிறது. இரண்டு பாட்டில்களை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு மாதம் பூராவும் தள்ள வேண்டுமென்றால், மீதி நாட்கள் வாசனையையா பிடித்துக்கொண்டிருப்பது? அவனுக்கு இருக்கும் தப்பாசையால் எங்கே கிடைக்கும் என்று பார்த்துப் போவான். இந்த முறைப்படி குடிக்கிறவன், குடிக்காதவன் எல்லோரும் பெர்மிட் வாங்குவார்கள். ஒரு வீட்டில் பத்து பேர்கள் இருந்தால். பத்து பெருக்கல் இரண்டு என்று இருபது பாட்டில்கள்வாங்கி அவற்றை வெளியே விற்கும் நிலைதான் ஏற்படும். ஒரு சட்டம் கொண்டுவரப்படுகிறதென்றால், கொண்டுவரும்போது அந்தச் சட்டத்திலே என்னென்ன ஓட்டைகள், குறைகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டுவர வேண்டும். மதுவிலக்குபற்றி ஆளுநர் அவர்களது

உரையிலே ஒன்றும் குறிப்பிடாவிட்டாலும், அவர்கள் சேலத்திலே பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரொம்ப மன வருத்தத்தோடு இந்த மதுவிலக்கைத் தளர்த்தியிருக்கிறார்கள், தாய்க்குலம் தான் இதைத் தடுக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். நல்ல யோசனைதான். நான் ஒன்று கேட்கிறேன், நாட்டின் அரசு குடிப்பதற்கு பெர்மிட்டையும், பாட்டிலையும் கொடுக்கும். வீட்டில் உள்ள அரசி மறியல் செய்து தடுக்க வேண்டும். இப்படி, குடும்பத்திற்கு உள்ளே குழப்பம். கணவன் குடிக்காமல் மனைவிமார்கள் தடுக்க வேண்டும். அல்லது புருஷன், பெண்டாட்டிக்குள்ளே சண்டை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இனி என்ன நடக்கும்? சண்டைதான் நடக்கப்போகிறது. அரசாங்கத்திடமிருந்து பெர்மிட் வாங்கி, கடையிலிருந்து பாட்டில் வாங்கிக்கொண்டு கணவன் வீட்டுக்குப் போவான். பெண்டாட்டி 'குடிக்காதே' என்று சொல்வாள். 'நீ என்னடி சொல்வது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெர்மிட் கொடுத்து, பாட்டில் வாங்கிக் குடிக்கச் சொல்லியிருக்கிறார், அவருடைய உத்தரவை அமுல்படுத்தாமல் இருப்பதா? நான் குடிப்பேன்' என்று சொல்வான். அவள் 'மேதகு ஆளுநர் அறிவுரை கூறியிருக்கிறார், என்னை தடுக்கச் சொல்லியிருக்கிறார், நான் தடுப்பேன்' என்று சொல்வாள். இப்படி, நான் குடிப்பேன் என்றும், நான் தடுப்பேன் என்றும் சொல்லி சண்டை போட, வீட்டிலே உள்ள நான்கு பிள்ளைகளும் பயந்து ஓடிப்போகும். பின்னர் அவர்களை யார் சமாதானப்படுத்த முடியும்? அங்கே சண்டை வந்துவிட்டால், அமைச்சர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது காவல் துறையினரோ கூட அங்கே போக முடியாது. ஏனென்றால் அது குடும்பச் சண்டை. அவர்களுக்குள்ளே அவர்களே சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்களும் சொன்னார் என்று நினைக்கிறேன். சண்டை வந்த பின்பு, கணவன் சொல்வான், "சகதர்மிணி, நமக்குள்ளே சண்டை-சச்சரவு எதற்கு, நாம் சமரசமாகப் போவோம்" என்று. உடனே, "என்ன சொல்கிறீர்கள், சுவாமி" என்று அவள் கேட்பாள். "என்னுடைய சுகத்திலேயும், துக்கத்திலேயும் சம பங்கு கொள்ள வேண்டிய பத்தினி" என்று அவன் சொல்ல, "ஆமா! அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும்போது, அப்படி தான் சொல்லித் தந்தார்கள்" என்று அவளும் சொல்ல, "ஆகையால் இந்த பாட்டிலிலே நீ பாதி, நான் பாதி சாப்பிடுவோம்" என்று அவன் சொல்வான். உடனே அவர்களுக்குள்ளே சமாதானம் ஏற்பட்டு, முதல் ரவுண்ட் முடியும். அப்புறம் அவர்களுக்கு ஒரு சந்தேகம். "என்ன பிராணநாதா!" "என்னடி தர்ம பத்தினி?" "இந்த இரண்டு யுனிட்டுகளுக்கும் இரண்டு பாட்டில்கள் தான் கொடுத்தார்களா? ஒரு மாதம் பூராவும் இரண்டு பேருக்கு இரண்டு பாட்டில் எப்படி அத்தான் போதும்?" என்று அவள் கேட்க, "கவலைப்படாதே



கண்ணே, உனக்குத்தான் 30 வயதுக்கு மேலே ஆகிவிட்டதே, உன் பெயரிலேயும் ஒரு பெர்மிட் வாங்கி வந்துவிடுகிறேன்" என்று சொல்லி வாங்கிவருவான். மீண்டும் அவர்களுக்குள்ளே சமாதானம். இரண்டாவது ரவுண்ட் முடிந்தது. அப்புறம் அவர்களுக்கு மூளை வேலை செய்ய ஆரம்பிக்கிறது. அவள் சொல்வாள், "பிராணநாதா, ஒரு யோசனை", "சொல்லடி சகதர்மிணி" என்று அவன் சொல்வான். "நமக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றன. ஒன்றுக்கு 9 வயது, இன்னொன்றுக்கு 8 வயது, மற்றொன்றுக்கு 7 வயது, கடைசி குழந்தைக்கு 6 வயது, மொத்தம் கூட்டினால் 30 வயது ஆகிறது. இந்த 30 வயதை வைத்து இன்னும் ஒரு பெர்மிட் மூன்றாவதாக வாங்கினால் என்னவென்று கேட்பாள். அது அருமையான யோசனை என்று இரண்டு பேரும் ஆனந்தக் கூத்து ஆடுவார்கள். இந்த நிலைமைதான் நாட்டிலே நடக்கப்போகிறதே தவிர, வேறல்ல. இந்த மதுவிலக்குக் கொள்கை அவ்வளவுக்கு கேலிக்கூத்தாக ஆகிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டத்தை உண்டாக்கும்போதே, அதிலே ஓட்டை வைத்து—வீடு கட்டுவதற்கு முன்பே வாசற்படி வைப்பது போல—அதிலே குழப்பம்.

எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூட குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம்கூட கொண்டு வந்தார்கள். இப்போது கடைகளுக்கு லைசென்ஸ் கொடுக்க இருக்கும் நடைமுறையிலே கஷ்டம். குடிப்பதற்கு பெர்மிட் வாங்க 25 ரூபாய் கொடுத்து 11 மணிக்கு தாசில்தார் ஆபீசிலே போனால் 12 மணிக்கு வாங்கிக்கொண்டு வந்துவிடலாம். ஆனால், ஒருவன் சின்ன பெட்டிக்கடை வைக்க வேண்டுமென்றால், அதற்கு 6 லைசென்ஸ் மொத்தம் வேண்டும். கார்ப்பரேஷன் லைசென்ஸ், போலீஸ் லைசென்ஸ், விட்டு லைசென்ஸ், கன்பெக்ஷனரி லைசென்ஸ், தொழில் லைசென்ஸ், டேப் லைசென்ஸ் இப்படி மொத்தம் 6 வரிகள் கட்டி லைசென்ஸ் வாங்க வேண்டும். ஒரு சின்ன வியாபாரிக்கு இவ்வளவு தொல்லைகள் இருக்கின்றன. இவற்றுக்காகத்தான் தமிழ் நாடு வியாபாரிகள் சங்கம் இப்போது போராட்டம் நடத்துகிறார்கள், உண்ணாவிரதம் இருக்கிறார்கள், கடையடைப்பு நடக்கிறது, கடையடைப்பு செய்தபோது மைலாப்பூரிலே ஒன்றுமே கிடைக்கவில்லை, மக்கள் மிகுந்த அவதிக்குள்ளானார்கள். இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அவர்கள் என்ன கேட்கிறார்கள், அதிகமாக ஒன்றும் கேட்கவில்லையே! ஒருமுறை வரி வேண்டும், பலமுறை வரி ரத்துசெய்யப்படவேண்டும், ஒரே லைசென்ஸ் முறை வேண்டும். ஒரு கடை கன்பெக்ஷனரி சம்பந்தப்பட்டது என்று சொன்னால், அதற்கென்று ஒரு லைசென்ஸ் வாங்க வேண்டும், அதுபோதும் என்று இருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு,

கன்பெக்ஷனரி தயாரிப்பாளரிடமிருந்து இன்னொரு கடையில் வாங்கிவைத்து விற்கிறார் என்றால், அப்படி வாங்கி வைத்து விற்பதற்கு தனியாக ஒரு லைசென்ஸ் என்று சொன்னால், எப்படி என்று கேட்கிறேன். மேலும், இந்த மார்க்கெட்டிங் கமிட்டியுடைய தொல்லைகள் தீரவேண்டும் என்று சொல்கிறார்கள்.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15 நிமிடங்களுக்கு மேலாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சிக்கிரம் முடிக்கவேண்டும்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** எனக்கு முன்னாலே பேசியவர்கள் 30 நிமிடங்களுக்கு மேலே பேசியிருக்கிறார்கள். நான் இன்றையதினம் பிரதான எதிர்க் கட்சியினுடைய செயலாளராக இருப்பதால், எனக்கு 30 நிமிடங்கள் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மார்க்கெட்டிங் கமிட்டியினுடைய தொல்லைகள் தீரவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றினால், மக்களுக்கு நலமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பாராளுமன்றத் தேர்தலிலே மக்கள் அளித்திருக்கிற தீர்ப்பு தெள்ளத்தெளிவாக இருக்கிறது. நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசும்போதுகூட, காரசாரமாகக் குறிப்பிட்டார்கள். அப்போது மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் மிகவும் சாமர்த்தியமாக ஒரு கணக்கைச் சொன்னார்கள். நான் திரைப்படத் துறையிலே பாடல்கள் எழுதிக் கொண்டிருந்தபோது எனக்குத் தெரியும், அவர் மானேஜராக இருந்தார், அவர்

(பிற்பகல் 5-50)

அப்போதே கணக்கிலே மிகவும் கைதேர்ந்தவர். ஆக அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கணக்கில் கைதேர்ந்தவர். அதன் காரணமாகத்தான் இந்த அவையிலும் மிகச் சாமர்த்தியமாக ஒரு கணக்கைக் காட்டினார்கள். "கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 47 லட்சம் வாக்குகளைப் பெற்ற அ.தி.மு.க.-வினராகிய நாங்கள் இரண்டு இடத்தைத்தான் பெற்றோம். ஆனால் 42 லட்சம் வாக்குகளை மட்டுமே பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நீங்கள் 16 இடத்தைப் பெற்றுவிட்டீர்கள். இரண்டு கட்சிகளுக்கும் இடையில் வாக்கு வித்தியாசம் 5 லட்சம். இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் 42 லட்சம் வாக்குகளைப் பெற்று 16 இடத்தைப் பெற்றபோது அ.தி.மு.க. 47 லட்சம் வாக்குகளைப் பெற்று 2 இடங்களை மட்டுமே பிடித்தது" என்றார். இதைக் கேட்கிறபோது, பலருக்கும் ஒன்று தோன்றும். 47 லட்சம் வாக்கு வாங்கிய கட்சிக்கு 16 பாராளுமன்ற இடங்கள் என்றால்,



47 லட்சம் வாங்கிய அ.தி.மு.க.-வுக்கு குறைந்தது 18 அல்லது 20 இடங்களாவது கிடைத்திருக்க வேண்டுமே என்று தோன்றும். ஆனால் அவருக்கு ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்ட இடங்கள் 16 தொகுதிகள். ஆனால் அ.தி.மு.க. போட்டியிட்ட இடங்கள் 24 இடங்கள். 16 தொகுதிகளில் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 42 லட்சம். ஆனால் 24 தொகுதிகளில் போட்டியிட்ட அ.தி.மு.க.-வுக்குக் கிடைத்த வாக்குகள் 46¾ லட்சம். அதாவது ஒரு தொகுதிக்கு அ.தி.மு.க. பெற்ற வாக்குகள் 1,98,000 சொச்சம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கியிருக்கும் வாக்குகளோ ஒரு தொகுதிக்கு 2,64,000 ஆகும். இரண்டுக்குமிடையில் வாக்கு வித்தியாசம் ஒரு தொகுதிக்கு 75,000 ஆகும். திராவிட முன்னேற்றக் கழகம் ஒவ்வொரு தொகுதியிலும் சராசரி 75,000 வாக்குகள்—¾ லட்சம் வாக்குகள் அதிகம் பெற்றிருக்கிறது. இதையெல்லாம் அப்படியே மறைத்துவிட்டு, "நீங்கள் 42 லட்சம் வாக்கு பெற்று 16 இடம் பெற்றிருக்கிறீர்கள், நாங்கள் 47 லட்சம் வாக்கு பெற்று 2 இடம் பெற்றிருக்கிறோம்" என்பது சரியில்லை. இந்தக் கணக்கு ஒருபுறம் இருக்கட்டும். தொகுதிக் கணக்குக்கு வருவோம்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 24 பாராளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு 22 இடங்களில் படுதோல்வி அடைந்தது. அதை ஒப்புக்கொள்ள வேண்டாம். இரண்டே இரண்டு இடங்களில்தான் அது வெற்றி பெற்றது. இதை வேண்டுமானால் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொள்ளலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் 16 பாராளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு 16 தொகுதிகளிலுமே முழுமையாக வெற்றி பெற்றிருக்கிறது. 16 தொகுதிகளில் நின்றோம்; அந்தப் 16 தொகுதிகளையும் முழுமையாக வென்றோம். இதற்கு முன்பு இப்படி நிகழ்ந்ததாகச் சரித்திரம் உண்டா? வரலாறு உண்டா? எங்காவது நீங்கள் கேட்டதுண்டா? பார்த்ததுண்டா? ஒரு கட்சி எத்தனை தொகுதிகளில் போட்டியிட்டதோ அத்தனை தொகுதிகளிலும் வெற்றிபெற்றதாக, ஒரு தொகுதியைக்கூட நழுவ விடாமல் வெற்றி பெற்றதாக உலக சரித்திரத்தில் சான்று உண்டா? அப்படிப்பட்ட புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். எனவே இந்தக் கணக்கைக் காட்டிக் கொண்டிருப்பது வெறும் வீண் வேலை என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இலக்கியத்திலே அஜாத சத்ரு என்று இராமனையும், அர்ஜுனனையும் குறிப்பிடுவார்கள். அஜாத சத்ரு என்றால் என்ன என்று நண்பர்கள் கேட்கக் கூடும். அஜாத சத்ரு என்றால் வெல்லுதற்கரிய வீரன் என்று பொருள்.

அப்படிப்பட்ட கலைஞருடைய தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்ட இடமெங்கும் வெற்றிவாகை சூடி தோளுயர்த்தி நிற்கிறது. ஆகவே இனிமேலும் இந்தக் கணக்கைக் காட்டிக் கொண்டிருப்பது வீண் வேலை என்று சொல்லிக்கொள்கிறேன்.

அன்றையதினம் பாடினான் பாரதி; "திமு திமு என மரம் விழுந்து காடெலாம் விறகான" செய்தியைப் போல என்று பாடினான். புதிய ருஷ்யாவைப்பற்றிப் பாடும்போது, பாரதி இதைப் பாடினான். அப்படி அ.தி.மு.க. என்ற ஆலமரம் முறிந்து விழுந்து கொண்டிருக்கிறபோது, ஒட்டடைக் குச்சியைக் கொண்டுபோய் முட்டுக் கொடுப்பதென்பது வீண் வேலை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நானோ ஒரு திருத்தமும் கொடுக்கவில்லை. திருத்தத்தை நிறைவேற்றப் போகிறவர்கள் யார் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. எனவே நான் திருத்தமும் கொடுக்கவில்லை. கோரிக்கை எதையும் வைக்கப் போவதுமில்லை. ஆனால் இயற்கை நியதி என்று ஒன்றிருக்கிறது. அதை மட்டும் நான் இங்கே நினைவுறுத்தப் போகிறேன். தலைவிதி, சத்தியம், தெய்வத் தன்மை போன்றது இயற்கை நியதி என்பது. "தினையை விதைத்தவன் தினையை அறுப்பான்; வினையை விதைத்தவன் வினையை அறுத்தேயாக வேண்டும்" என்பது இயற்கை நியதி. 1976 ஆம் ஆண்டில் கலைஞர் மார்பில் விசப்பட்ட வேல் இன்றைக்கு கலைஞருடைய கையோடு கையாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** 1976 ஆம் ஆண்டில் கலைஞருடைய மார்பில் யார் வேலை வீசியது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் தந்தால், நன்றாக இருக்கும்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** இது நாடறிந்த உண்மை. நான் வேலைப்பற்றியும் விமர்சிக்க விரும்பவில்லை. எறிந்ததைப்பற்றியும் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. யாரால் தூண்டிவிடப்பட்டது, யார் வேல் வீசியது என்பதெல்லாம் நாட்டிற்கே நன்கு தெரியும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இதில் அம்பும், அம்பு எய்தவர் ஆக இருவரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இதில் அம்பு அல்லது வேல் யார், வேலை எய்தவர் யார் என்ற விளக்கத்தையாவது உறுப்பினர் அவர்கள் சொல்லலாம்,



**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** எய்தவனை விட்டு அம்பை நோகும் அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் முட்டாள்கள் அல்ல. ஆகவேதான் சொல்லுகிறேன், 1976 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களை நோக்கி வீசப்பட்ட வேல் இன்றையதினம் அவருடைய கையில் கையோடு கையாக வந்து நின்றுவிட்டது. இதற்குத் திருக்குறளில் ஒரு அழகான உதாரணம் இருக்கிறது. படைச் செருக்கு என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் மிக அழகாகச் சொல்லுவார்:

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்."

யானையைப் பார்த்து தனது கைவேலை எறிந்த வீரன் வேறு வேல் இல்லையே என்று சுற்றிப் பார்க்கும்போது, தன்னுடைய மார்பில் இருக்கும் பகைவன் எறிந்த வேலைப் பிடுங்கி ஆகா வேல் கிடைத்துவிட்டது என்று மகிழ்ந்தானாம்—நகும் என்பார் வள்ளுவர். சிரித்தானாம். படைச் செருக்கு என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் இதைச் சொல்கிறார்.

அந்த வகையில் கலைஞர் அவர்கள் செருக்கோடு இருக்கிறார். அந்தக் கலைஞரின் ஆட்சியை இங்கே நினைவுபடுத்தி, "துள்ளி வருகுது வேல் சுற்றி நில்லாதே போ. பகையே, துள்ளி வருகுது வேல்" என்ற பாடலை மட்டும் நினைவுபடுத்தி முடிக்கிறேன். வணக்கம்.

THIRU J. M. MIAKHAN: Mr. Vice-Chairman, I thank you for giving me an opportunity to speak here during the discussion on the Governor's Address. I find nothing very encouraging in the Address, since they have only tried to gloss over very many things. On the last occasion itself, I said that it would be better if the Governor's Address gave details of achievements that had already been made, details of promises given earlier and how far they had succeeded in fulfilling them. Then it would be very useful to assess the performance of the Government. But they have given some more promises in this Address also and I do not know how far they are going to carry them out. As far as the promises are concerned, they look good and beautiful indeed.

It is mentioned in the Address that the food situation in Tamil Nadu is comfortable. I suggest that grains and pulses might be included in the list of items distributed through fair price shops. Fair price should be given to paddy and wheat and procurement should be made at a reasonable price.

On an earlier occasion, the Government promised to start an organisation to regulate the flow of persons seeking employment in foreign countries, especially in the Middle East. There is no

mention about it in this address. In States like Kerala, they have made very good progress and people who are going abroad have been regulated. They are provided with opportunities to work there and are not stranded there without employment. I request the Government to take up the proposal to form an organisation, as promised, so that the people who want to go abroad seeking employment might be properly enlightened. If that is done, they will not be exploited by certain agencies who get money from them promising employment but fail to provide them opportunities. In this way, the Government could relieve those people of their worries and difficulties.

Regarding the Mass Rapid Transit System which is mentioned in the Address, I think it is an essential item for the City of Madras. Unless that scheme is taken up and implemented, we cannot have development in Madras. Most of the commuters depend upon the railway for their transport, and already they are having a lot of inconvenience. Even if you increase the number of buses on the road, it will only increase the number of accidents and will not solve the problem. I request the Government of Tamil Nadu to see that this Mass Rapid Transit system comes through.

(பிற்பகல் 6-00)

There is no mention in this Address about the Prohibition policy of the Government. Prohibition is a social measure and I was hoping against hope that Prohibition would be implemented strictly by the Government. I do not know why they have somersaulted and the Government are on the verge of converting the State from dry to wet. I do not know the reason behind this. Perhaps, they are afraid to face the electorate and probably they feel that their defeat in the recent Elections was due to the Prohibition measure. But, Prohibition is a laudable measure. I do not know why they are dragging their feet now and have chosen to lessen the rigours and have practically abandoned the scheme. As far as our Party is concerned, we want Prohibition and we have said that the people should be weaned away from the habit of drink. It is only by that measure that the people and the country can be salvaged.

As regards the elections to local bodies, there is now a fond hope that very soon the elections will come through. But the Government have not given a definite date. For the past few years we have been seeing that these Panchayat Elections and Municipal Elections have been put off from time to time. I hope that at least this time, they will hold the elections by the end of April. For



the past seven or eight years, no elections were held to the local bodies and their administration is being run by officers. In a democratic system, Panchayats form the first tier while the State Legislatures and Parliament form the second tier and the third tier respectively. If democracy is to be firm at the grass-roots level, elections at the level of the first tier should be held. Unless those elections take place, we cannot have a proper democracy in our country. As a matter of fact, in Tamil Nadu, for the past ten years, elected persons are not conducting the affairs of the local bodies. Therefore, I request the Government not to postpone the elections further and to see that the elections are held at an early date. Only then, we will know where we stand and the affairs of the people will be conducted by the people. Unless the people know what they do to themselves, they may not appreciate whatever good measures the Government may undertake. If we give a child costly sweet, the child will take it just like any other sweet. Unless the child knows the cost of the sweet and how it is produced, he may not appreciate the usefulness of the sweet. Similarly, the people may not appreciate any measure or scheme undertaken by the Government unless they themselves can implement it and understand it. If they themselves implement the scheme, they will be able to do it in a proper way and public funds will not be wasted much. If done in that way, there will be greater appreciation for the measures undertaken by the Government. Therefore, I request the Government to consider all these and hold the elections to local bodies as early as possible.

Now, there is a Government at the Centre, run by a single Party, and I hope that it will be stable. Therefore, whatever genuine grievance we take up to the Centre will be looked into. Whatever we ask them, if it is for any genuine reason, will be looked into. I hope that the Mass Rapid Transit Scheme and the conversion of railway lines into broad-gauge will be implemented. A few months back, the then Railway Minister said that they were going to introduce a broad-gaguge line from Tuticorin to Erode via Dindigul and Karur. We were very happy about it. I do not know whether they have shelved the idea. In the Governor's Address, mention has been made only about requesting the Central Government to implement the scheme of converting into broad-gauge the railway line between Madras and Tuticorin. But, there was a separate new scheme for laying a broad-guage railway line from Tuticorin to Erode via Dindigul and Karur. It should also be taken up as has been promised earlier. I request the Government of Tamil Nadu to see at what stage the matter stands—whether it has been shelved or whether it is going to be taken up.

I also heard very recently that they were going to abandon the expansion of the Central Station at Madras. As a matter of fact, the land adjacent to the Central Station on the other side of the Cooum river belonged to an organisation with which I am also associated. It is a pioneer sports organisation known as the South Indian Athletic Association. For the past ninety years it has been doing yeoman service for sports and games and it has been conducting tournaments in sports like cricket, football, etc. When the Government wanted that land for the expansion of the Railway Station, in the larger interests of the public, we thought that we should forgo the land and hand over possession of the land to the Government. But, I fear that they are not going to implement the scheme. In that case, I request the Government of Tamil Nadu to see that at least till such time the scheme is implemented or till such time the land is put to some other useful public purpose, the land may be handed back to the Association so that they may conduct fairs and sports tournaments in the interests of the people. As a matter of fact, the Governor has stated in his Address that they are going to foster sports and I am glad about it. I suppose this is one direction and this is one scheme whereby they can sponsor sports because sports can be fostered and developed better if it is done through agencies which have dedicated themselves to this cause. I request the Government of Tamil Nadu to consider this favourably and do the needful. Thank you, Mr. Vice-Chairman.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது பேசுவதற்கான வாய்ப்பைப் பெற்றதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையைப் பொறுத்த வரையில், ஆசிரியர்களுக்கோ, அரசு ஊழியர்களுக்கோ இருக்கக் கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய அறிவிப்பு ஏதாவது இருக்கிறதா என்றால், எதுவுமே இல்லை என்ற காரணத்தால், அது ஏமாற்றத்தை அளிக்கிறது என்பதை முதல் முதலாக ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகவிலைப் படியைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே மத்திய அரசு கொடுத்திருக்கக் கூடிய முறையில் ஒன்று தர வேண்டியிருக்கிறது. மீண்டும் மத்திய அரசு இன்னுமொரு தவணை அகவிலைப் படியை கடந்த நவம்பர் மாதத்திலிருந்து தருவதற்கு இப்பொழுது பரிசீலித்து வருகிறது என்பதை மத்திய நிதியமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள்.





இங்கே ஆளுநருடைய உரையிலே அதைப் பற்றிய பேச்சே இல்லையென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு உடனடியாகப் பரிசீலித்து அதைத் தர வேண்டும்.

பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திலே 50 சதவிகிதம் பென்ஷன் தரும் திட்டத்தை அமுல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது குறித்து சென்ற கூட்டத் தொடரிலேயே நமது நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கு நாங்களும் நன்றி தெரிவித்தோம். ஆனால் அரசு இன்று வரையிலும் ஆணையைப் பிறப்பிக்கவில்லை. இந்த நாட்டிலே அறிவிப்புகள் அமுலாகாத காரணத்தால், அறிவிப்பை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடியவர்கள் கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றத்திற்குப் பின்னால் அது எரிச்சலாகி போராட்டத்திற்கு ஆளாகக் கூடிய நிலையை அரசாங்க இயந்திரம் உருவாக்குகிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் அறிவிக்கிற அறிவிப்பு பல மாதங்கள் ஆகியும் அமுலாகவில்லை என்றால், இந்த அரசு இயந்திரம் செயலற்றுப் போயிருக்கிறதா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தள்ளிப் போடுவதற்காகத்தான் இருக்கிறதா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதைப்பற்றி பலமுறை நான் சொல்லியிருக்கிறேன். நிதியமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பை நிதித் துறையே வழங்கவில்லையென்றால், நாங்கள் எங்கே சென்று சொல்லுவது?

ஆந்திர மாநிலத்தில் ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் 20 மாதம் பணிக்கொடை தருகிறார்கள். ஆனால் இங்கே அப்படித் தருவதில்லை. 20 மாதம் பணிக்கொடை தர இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்டுவந்தோம். அந்தத் திட்டத்தை சென்ற கூட்டத் தொடரில் கல்வியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்பொழுது உத்தரவு என்ன வந்திருக்கிறதென்றால், ஐயாயிரம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க எஸ்.சி.ஈ.ஆர்.டி.-க்கு பத்து இலட்சம் ரூபாயைத் தந்திருக்கிறோம் என்று உத்தரவு வந்திருக்கிறது. நாங்கள் கேட்டது ஐந்தாயிரம் ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் சம்பளம் தர வேண்டுமென்பது. அப்படி வழங்கினால், ஆண்டொன்றுக்கு 3 இலட்சம் ரூபாய் மட்டுமே செலவாகும். 3 இலட்சம் ரூபாய்க்கான திட்டத்தைச் சொன்னால், இவர்கள் பத்து இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி தந்து அத்தனைபேரையும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்குகிறோம் என்று சொல்லுகிறார்கள். ரூபாய் பத்து இலட்சத்திற்குப் பதில் இந்த அரசு 16,300 பேருக்கு இந்த செலவில் செகண்டரி கிரேட் சம்பளத்தைத் தர முடியாதா? கோர்ட்டிலே தீர்ப்புக்

[திரு. செ. முத்துசாமி] [1980 பிப்ரவரி 4

கிறார்கள். இந்த அரசு மக்களுடைய வரிப் பணத்தை சரியில்லாத முறையில் செலவிடுகிறது. கல்வி இலாக்கா சொல்லுவதையெல்லாம், தெளிவாகச் சிந்திக்காமல், அப்படியே ஏற்றுக் கொள்ளுவதென்றால், மிகச் சரியில்லாத திட்டமாக இருக்கும் என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே அவையில் இல்லை. மற்ற அமைச்சர்கள் இருக்கிறார்கள். அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பதால், இதை வலியுறுத்திச் சொல்லுகிறேன். இந்தத் திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக் கல்வி இயக்குநர் அபாரமான திறமையுடையவர், டாக்டர் பட்டம் பெற்றவர், பேச்சில் வல்லவர். ஆனால் ஆசிரியர்களுக்குச் செய்யக் கூடிய நன்மையில் மிகச் சரியில்லாத திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியராகப் பணியாற்றிய கல்வி அமைச்சர் அவர்கள் எப்படி அதை ஏற்றார் என்று புரியவில்லை. இதற்காக 10 இலட்சம் ரூபாயைச் செலவழிப்பது நியாயம்தானா? ஆகவே மறுபரிசீலனை செய்து, திட்டத்தை மாற்றி, இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்குங்கள் என்று கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஊதியக் குழு அரசு உத்தியோகத்தில் இருக்கக் கூடிய பெண் அரசு ஊழியர்கள், ஆசிரியைகள் ஆகியவர்களுக்கு 90 நாள் பிரசவ விடுப்பு அளிக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. தாய்க் குலத்திற்காகச் செய்யப்பட்ட அந்தச் சிபார்சை இந்த அரசு அமுலாக்காமலிருப்பது என்ன நியாயம் என்று பல முறை கேட்டேன். இன்னும் அது குறித்து ஆணைகள் வெளிவரவில்லை. மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் இருக்கக் கூடிய முரண்பாடுகளை, குறைபாடுகளைத் தீர்ப்பது குறித்து ஒரு குழு இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் மூன்றாவது ஊதியக் குழு செய்த சிபார்சு இன்று வரையில் அமுல்படுத்தப்பட வில்லை. இவ்வளவு பிற்போக்கான தன்மை ஜனநாயக சமதர்ம ஆட்சியில் ஏன் என்று புரியவில்லை.

ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே கடைசியாக ஒரு சில வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார்கள். "மகிழ்ச்சியோடு [illegible]கிறேன். தமிழக மக்களின் நலன்களுக்காக மன்ற உறுப்பினர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளும் வெற்றி பெற விழைகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் அவர்கள் சொல்லுவதாக இருந்தாலும், இதை அமைச்சரவையிலே இருக்கக் கூடியவர்கள் கூறியதாக எடுத்துக் கொள்ளுகிறேன். நாங்கள் இந்த



1980 பிப்ரவரி 4] [திரு. செ. முத்துசாமி]

(பிற்பகல் 6-10)

நாட்டு மக்களுக்கு நன்மை தேடித் தரவேண்டுமென்று எடுக்கக்கூடிய முயற்சிகளுக்குத் தடையாக இந்த நிர்வாக இயந்திரம் செயல்படுவதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும்போது, அதிலே வேகமாக நடவடிக்கை எடுக்காமலிருந்தால் அரசிடம் நாங்கள் எப்படி மதிப்பு வைத்துக்கொள்ள முடியும்? நாங்கள் இந்த அரசின் மீது கொண்ட அன்பின் காரணமாகத்தான் சொல்கிறேன். நாங்கள் அரசின் மீது மதிப்பு வைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் நான் இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அரசு நன்கு செயல்பட வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். அதைப்பற்றி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருப்பது எப்படி நியாயம்? இதை அரசு தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். நிர்வாக இயந்திரம் சரியாகச் செயல்படவில்லை என்று நான் நீண்ட காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்தில் இருந்த நிலைமையைச் சொல்ல விரும்புகிறேன். நான் 6 ஆண்டுக்காலமாக எம்.எல்.ஏ. ஆக இருந்தபோது இருந்ததைச் சொல்கிறேன். இப்போது நான் இரண்டாவது முறையாக அங்கத்தினராக வந்திருக்கிறேன். கடந்த காலத்திலே ஒரு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்தார்கள். இன்றைக்கு ஒரு முதலமைச்சர் இருக்கிறார்கள். எனக்கு இரண்டு முதலமைச்சர்களிடத்திலேயும் அனுபவம் இருக்கிறது. கடந்த காலத்திலே இருந்த முதலமைச்சர் அவர்கள் இங்கே அதிகநேரம் உட்கார்ந்திருப்பார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் இங்கே அதிகநேரம் உட்காரமாட்டார்கள். இரண்டு பேருக்கும் நடைமுறையிலே வித்தியாசம் இருக்கிறது. இன்னொன்றைப் பார்க்க வேண்டும். ஒரு முதலமைச்சர் அவர்களிடத்திலே, ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்களிடத்திலே, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளாகிய நாங்கள், எங்களுடைய குறைபாடுகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விருப்பம் இருக்காதா? அந்த விருப்பத்தை நிறைவேற்ற ஒரு முதலமைச்சர் வழி காணக்கூடாதா? முதலமைச்சர் அவர்களிடத்தில் எங்களுக்கு பேட்டியே கிடைக்கவில்லை என்று சொன்னால், பிரச்சினைகளை எப்படிச் சொல்வது? நீங்கள் பிரச்சினைகளை ஏற்றுக்கொள்ளுங்கள் அல்லது நிராகரியுங்கள். அதைப் பரிசீலித்துப் பார்த்து ஒரு ஆக்க திட்டம் அதைப்பற்றி இதமாகச் சொல்லி, இது நல்ல திட்டம் அல்லது நல்ல திட்டம் அல்ல என்று விளக்கலாம். முதலமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேசுவதற்கு கூட வழியில்லை என்று சொன்னால், நாங்கள் யாரை நம்பிச் செயல்படுவது? யாரிடத்திலே எங்கள் குறைகளைச் சொல்வது? இந்த வேறுபாடுகள் இருக்கின்றன. கடந்த

காலத்திலே முதலமைச்சர் கலைஞர் அவர்களிடத்திலே எனக்கு ஒரு அனுபவம் உண்டு. என்றைக்குப் பார்ப்பதற்கு என்று சென்றாலும், நேராகப் பார்த்துப் பேசிவிட்டு வந்த, அவருடைய அன்புள்ள பழக்கத்தை கடந்த காலத்திலே அனுபவித்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களின் பி.ஏ. வுக்கு ஃபோன் செய்கிறேன். முதலமைச்சர் அவர்களின் பி.ஏ., போனில் சொல்கிறார்கள், "நீங்கள் சேந்தமங்கலத்திலிருந்து ஃபோன் செய்து தெரிந்துகொண்டல்லவா வரவேண்டும்?" இதுதான் எளிய முறையா என்று கேட்கிறேன் நான். ஒரு சட்டமன்ற உறுப்பினர் சேந்தமங்கலத்திலிருந்து 'ட்ரங்க்' கால் போட்டுக் கேட்கும்போது, "முதலமைச்சரைக் கேட்டு தேதி நிர்ணயித்துச் சொல்கிறேன், மீண்டும் ஃபோன் செய்யுங்கள்" என்று சொல்கிறார். ஒரு நாள் மூன்றுமுறை போன் செய்கிறேன். இதில் என்ன நியாயம் இருக்கிறது? கட்சிக்கு எளிமையாக இருக்க வேண்டாமா? பிரதிநிதிகள் பார்ப்பதற்குக்கூட வாய்ப்பு வேண்டாமா? வெளியில் பேட்டி அளிக்க வேண்டாமா? நான் மனக்கசப்பில் தான் சொல்கிறேன். எனக்குப் பேட்டி கிடைக்காத காரணத்தால், சொல்கிறேன். எங்கள் சங்கடங்களைச் சொல்வதற்கு முதலமைச்சர் அவர்கள் வாய்ப்புத் தரவில்லையே என்பதனால்தான் சொல்கிறேன். எங்கள் சங்கடங்களைத் தீர்த்துக்கொள்வதற்கு வழியில்லையே என்ற சங்கடத்தைத் தான் நான் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்களிடத்திலே மாற்றம் தேவை. மற்ற அமைச்சர்களைப் பார்க்கச் சென்றால், அவர்கள் முதலமைச்சரைப் பாருங்கள் என்று சொல்கிறார்கள். 'அவர்களைத் தான் கேட்க வேண்டும், அவர்கள்தான் முடிவு எடுக்கவேண்டும்' என்று சொல்கிறார்கள். கல்வி அமைச்சர் அவர்களைப் பார்த்தால், அவரும் "முதலமைச்சரைப் பாருங்கள்" என்று சொல்கிறார். ஆனால் முதலமைச்சர் அவர்கள் கிடைப்பதில்லை. நாங்கள் எங்கே போய்ச் சொல்லிக் கொள்வது? யாரிடத்திலே சொல்வது? அதிகாரிகள் செயல்படுவதில்லை. கல்வி அமைச்சர் அவர்கள் முடிவெடுக்க முடியவில்லை. ஒன்றைச் சொல்லி நடவடிக்கை எடுப்பதற்கு முதலமைச்சர் அவர்களைப் பார்க்க முடிவதில்லை. நிலைமை என்ன ஆவது? அது மோதலிலே தான் முடிகிறது. சில காலம் அப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. அத்தகைய நடைமுறையை முதலமைச்சர் அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். இதை நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். ஒரு வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் மீது இருக்கக்கூடிய மரியாதையின் காரணமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நடைமுறையை மாற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் போராட்டம் நடந்தது. ஆசிரியர்களுடைய போராட்டம் நடந்தது. ஆசிரியர்களை அரசு விடுதலை செய்திருக்கிறது. அவர்கள்



மீது அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதுபோல, ஆசிரியர்களுக்குத் தந்திருக்கக்கூடிய அந்த நீதியை காவல் துறையிலே பணியாற்றியவர்களுக்கும் அளியுங்கள். ஆசிரியர்களையும் விடவா அவர்கள் சம்பளம் பெறுகிறார்கள்? அவர்களுக்கு ஒரு நீதியை வழங்கிக்கொண்டிருக்கிறார்களே, அது நியாயம் தானா? அதைப் பரிசீலித்துப் பார்க்கிறோம் என்று சொன்னார்கள். அதை நான் மெத்தப் பாராட்டுகிறேன். இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய கால மாற்றத்தில், உங்களுடைய நிலைமையிலே, இன்றைக்கு எடுத்திருக்கக் கூடிய முடிவுகளை பரிசீலித்துப் பாருங்கள். 'கடிதோச்சி மெல்ல எறிதல்' என்று சொல்வதுபோல, கடிதோச்சி, கொஞ்சம் நாளும் வைத்து, அவர்கள் இனி இப்படிச் செய்தால் என்ன நடக்கும் என்பது போல, அவர்களைப் பயப்படுத்தலாம் என்ற முடிவு எடுத்திருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அவர்கள் இன்றைக்குத் தெருவிலே நிற்கின்றார்கள். அவர்களையெல்லாம் வேலையில்லாமல் வெளியே விட்டு விடாதீர்கள். தயவு செய்து அவர்களையெல்லாம் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். யாராக இருந்தாலும், திரும்ப எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு பிரச்சினையிலும் தீர்வு காணுவதற்கு நேரிலே கண்டு பேச்சுவார்த்தை நடத்துவதும், பேசுவதும் நல்லது. பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைகளைக் கொஞ்சம் தள்ளிப் போடுவார்கள். வேகமாக வரக்கூடியவன் சமாதானம் பெறுவான். அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பார்த்தேன். அவர்கள் சொல்வார்கள். "நீங்கள் இன்னும் ஓராண்டு காலம் தள்ளி வைக்கக்கூடாதா? நான் இப்போதுதானே வந்திருக்கிறேன்" என்று சொல்வார்கள். அந்த உள்ளத்தைப் பாராட்டிப் பேசினோம். அதை நாங்கள் நாடு பூராவும் சொல்லிக் கொண்டிருந்தோம். அவர் 'ஓராண்டுக் காலம் எங்களுக்கு அவகாசம் கொடுக்கக்கூடாதா?' என்று கேட்டார்கள். ஒரு முதலமைச்சர் நீதிபதியிடத்திலே ஒரு கட்சிக்காரர் வாய்தா கேட்டது போல கேட்டார்கள். அந்த முதலமைச்சர் அவர்களின் தன்மையை நாங்கள் நாடு பூராவும் சொல்ல வேண்டியதாக இருந்தது. அதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அண்ணாவினுடைய நடைமுறையை, நாங்கள் சென்று பார்த்தபோது இருந்த நிலையைத்தான் நான் சொல்கிறேன். ஆதலால் ஆசிரியர்களுக்குக் தந்திருக்கக்கூடிய நீதியை போலீஸ்காரர்களுடைய காரியத்திலேயும் அரசு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற இரண்டு நாட்களுக்கு முன்னால் பேசும்போது, கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு உண்மையை இந்த அவையிலேயே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் ஒருவர் பேசுகின்றபோது, சங்கத்தை உடைத்த

ரலாற்றைப்பற்றிச் சொன்னார்கள். 'அந்த வரலாற்றிலே எனக்கும் ங்குண்டு' என்று சொன்னார்கள். ஒரு சங்கத்தை உடைப்பதிலே, கடந்த ாலத்திலே என்ன நடந்தது என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு அங்கத்தினர் திரு. 'ளட்சிசுந்தரம் அவர்கள் பேசிய நேரத்தில் நான் சொன்ன கருத்தானது ான் அமைச்சராக இல்லாத நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக இயக் த்திலே இருந்தபோது, நாங்கள் எடுத்துக்கொண்ட சில நடவடிக்கைகளைப் ற்றி எடுத்துச் சொன்னார்கள். நான் அதைத்தான் எடுத்துச் சொன்னேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ானும் அதைத்தான் சொல்கிறேன். சில நேரங்களிலே சில உண்மைகளை ாலம் கடந்துதான் மனிதர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். கால நெருக்கடியின் ாரணமாக ஒப்புக்கொள்கிறார்கள். இரண்டாவது உலக மகா யுத்த முடிவின் ின்னர் அங்கே ரஷ்ய நாட்டிலிருந்து மாலட்டோ தலைமையிலே சமாதான ூது ஒன்று செல்கிறது. பேச்சுவார்த்தையிலே அன்றைக்கு இருந்த மிக ோசமான நடைமுறையில் அவரைக் கொல்வதற்குச் செய்த சதியைப்பற்றி ர்ச்சிலே நீண்ட நாள் கழித்து, 'அதை என்னாலே மனத்திலே வைத்துக் கொள்ள முடியாது' என்று ஒரு நாள் 'உண்மையைச் சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டார்கள். அதுபோலவே உண்மைகள் என்றாவது ஒரு நாள் வெளி வந்தே தீரும். அதற்குக் கால அவகாசம் தேவை என்பதைக் கல்வி அமைச்சர் அவர்கள் நிலையிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். அவர்கள் அந்த வகையிலே இந்த அவையிலே அதைச் சொல்லியிருக்கிறார்கள். நான் கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துக்கொள்கிறேன். 'எல்லாச் சங்கங்களையும் ஒரே மாதிரியாகப் பாருங்கள். எல்லாச் சங்கங் களையும் ஒரே மாதிரி நடத்துவதற்கு முயற்சி எடுங்கள். உங்களுடைய உள்ளத்திலே அதற்கு இடம் கொடுங்கள்" என்று சொல்லிக்கொள்கிறேன்.

தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்த அளவில், நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். மூன்று சங்கங்களுடைய பிரதிநிதிகள் வேகமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது, ஒரு அர சாணை வருகிறது. நாங்கள் பிரச்சினைகளைத் தந்திருக்கிறோம். அவர்கள் போராடியிருக்கிறார்கள். நாங்கள் கல்வி அமைச்சர் அவர்களிடம் விவாதித்திருக்கிறோம். இன்னும் மற்ற சங்கங்களும் பிரச்சினைகளைத் தந் திருக்கின்றன. ஆனால் அரசாணையிடும்போது, ஒரு சங்கத்தை மட்டும் குறிப்பிட்டு, கல்வித் துறை ஆணை பிறப்பித்து, 'நாங்கள்தான் அதைச் செய் தோம்' என்ற நடைமுறையை அந்தச் சங்கம் உருவாக்கும் முறையில் கல்வித்





துறை அந்தச் சங்கத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு ஆடுவானேன்? அதை இன்றைக்கு அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எத்தனை பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குப் பல முறை கொண்டு வந்திருக்கி றார்கள்? உங்களுக்கு சென்றவிடமெல்லாம் பிரச்சினைகளைத் தரவில்லையா? விண்ணப்பங்கள் தரப்படவில்லையா? கல்வித் துறையிலே கொடுக்கப்பட்ட எங்கள் விண்ணப்பங்கள் எல்லாம் கட்டி வைக்கப்பட்டு விட்டனவா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவையில் அங்கத்தினர் அவர்கள் தலைவரைப் பார்த்துப் பேசவேண்டும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** நான் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் தலைவருடைய முகம் கொஞ்சம் எப்போதுமே பொலிவானதாக, அமைதியானதாக இருக்கும். நான் கொஞ்சம் வேகமாகப் பேசுவதனால் 'இங்கே பாருங்கள்' என்று சொல்கிறார்கள். நான் சற்று அமைதியாகவே பேசுகிறேன். ஏற்பட்டுவிட்டிருக்கக்கூடிய சங்கடங்களை நான் வெளியிட வேண்டியிருக்கிறது.

**திரு. ஆ. திராவிடமணி:** துணைத் தலைவர் அவர்களே, தலைவரைப் புகழ்வதின் மூலம் அதிக நேரம் எடுத்துக்கொள்ளலாம் என்று அங்கத்தினர் அவர்கள் நினைக்கிறார்களா?

**திரு. செ. முத்துசாமி:** நான் எனக்குரிய நேரத்தைத்தான் எடுத்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இரண்டாவது முறையாக இந்த அவையிலே தேர்ந்தெடுத்து வந்திருப்பவர் அங்கத்தினர் அவர்கள். ஆகவே அதுமாதிரி அவர்கள் நினைக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொன்னதற்கு ஒரு சந்தோஷப்படுத்த வேண்டுமென்ற முறையிலேதான் சொன்னேனே தவிர, வேறில்லை. அங்கத்தினர் திரு. திராவிடமணி அவர்கள் கூறிக்கொண்டதுபோல், நான் அத்தகைய நோக்கத்திலே சொல்ல வில்லை என்பதை அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன்:** இரண்டு முறைகள் உறுப்பினராக வந்தவர் அவர்கள், ஆகவே அப்படிப்பட்ட வாய்ப்பு எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று சொன்னார்கள். நான் ஒரு முறைதான் வந்திருக்கிறேன். நான் அப்படி எடுத்துக்கொள்வேன் என்று கருதுகிறீர்களா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அங்கத்தினர் அவர்கள் ஆரம்பத்திலேயே அனுபவம் வாய்ந்தவர் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஹையர் செகண்டரி கல்வியைப் பொறுத்த அளவில், கிராமங்களுக்குக் கொண்டு வந்திருப்பது சிறப்பானது என்று சொல்கிறார்கள். நான் கேட்டது ஜூனியர் கல்லூரிகளாக கிராமத்திலே வையுங்கள் என்பது. இன்றைக்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட பள்ளிகளைத் திறந்திருக்கிறார்கள். இந்தப் பள்ளிகளுக்கு வேண்டிய வசதிகளை இன்னும் சரியாகச் செய்யவில்லை. ஒரு பக்கத்திலே 1,500 பேராசிரியர்களை வேலையில்லாமல் வைத்திருக்கிறார்கள் என்று கல்லூரி டைரக்டர் அறிக்கை விட்டிருக்கிறார். இன்றைக்கு அந்தக் கல்லூரிப் பேராசிரியப் பெருமக்கள் அங்கே உட்கார்ந்துகொண்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். எங்களுடைய பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை என்று சொல்கிறார்கள்.

நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். பக்கத்திலே ஆந்திர மாநிலத்திலே உள்ள நடைமுறையைச் சொன்னேன். நான் சென்ற தொடர் கூட்டத்திலே இந்த மன்றத்திலே சொன்னேன். சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லாமல், ஆசிரியர்களை, அரசு ஊழியர்களை, தற்காலிகமாக இருந்தவர்களை அங்கே ரெகுலரைஸ் செய்திருக்கிறார்களே, பணி வரன்முறை செய்திருக்கிறார்களே, அந்த நடைமுறையை இந்த அரசு இங்கே செய்வதற்கு ஏன் தடுமாறுகிறது என்று கேட்டேன். வேறு ஏதோ ஸ்பெஷல் சர்வீஸ் கமிஷன் தேர்வு என்று சொல்லி இடையிலே ஒரு கௌரவப் பிரச்சினையாக அதைக் கருத வேண்டுமா? நம்முடைய டைரக்டர் அவர்களை அங்கே அனுப்பினால், ஆந்திராவில் இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்துவிட்டு வந்து ஒரு நாளிலே அந்த உத்தரவை எப்படி அமுல் நடத்துவது என்று சொல்லமாட்டார்களா, செய்யமாட்டார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த உள்ளம் இந்த அரசுக்கு ஏன் வரவில்லை? அதை ஏன் செய்ய மறுக்கிறது? இந்த அதிகாரிகள் ஸ்பெஷல் சர்வீஸ் கமிஷன் தேர்வு என்று சொன்னால், தமிழகத்தினுடைய நிலை ஆந்திராவினைவிட தாழ்ந்திருக்க வேண்டுமா? நான் அதைத் தான் கேட்க விரும்புகிறேன். நமது கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைக்கு கல்லூரி ஆசிரியப் பெருமக்களை, 10-ஏ (1) விதியின்கீழ் இருப்பவர்களைப் பணி வரன்முறை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான்கு போராட்டங்கள் நடந்தன. நான்கு போராட்டங்களில் மூன்று போராட்டங்களில் உறுதிமொழி கிடைத்தது. ஆனால் 3-வது போராட்டத்தின் உறுதிமொழி நிறைவேறியதாக இல்லை. சாகும் வரை பல்கலைக்கழகத்தின் முன்னால் ஆசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்பதைப்பற்றிக் கூட நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது நாளை எடுத்துக் கொள்ளப்படும். இருந்தாலும் இன்றைக்குப் பேச வாய்ப்பு கிடைத்தபோது, அந்தக் கல்லூரிப் பேராசிரியர்களுடைய பிரச்சினைகளில் இரண்டொன்றைப் பற்றியாவது அறிவிப்பு வழங்க வேண்டாமா? சென்ற முறை அறிவிப்பு வழங்கியதாகச் சொன்னார்கள். இங்கே துணைப் பேராசிரியர்களை பேராசிரியர்களாக ஆக்குவதுபற்றிச் சொன்னார்கள். அப்படிச் சொல்லவில்லை என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மீண்டும் அவர்களிடத்திலே கேட்டேன். கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே பேசும்போது அவர்கள் மீண்டும் அதையே தான் சொல்கிறார்கள் என்று பேராசிரியர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். ஒரு 4 வருடம், 5 வருடம் பணியாற்றியிருக்க வேண்டும் என்று ஒரு கொள்கையை நிர்ணயித்து ஒரு முடிவை அறிவியுங்கள். அதன்படி நடத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயலுங்கள். கொள்கை அளவில் ஏற்றுக் கொள்கின்றேன் என்றால், என்ன பொருள்? அது என்ன கொள்கை? அதிலே விரைந்து முடிவு எடுங்கள். நாங்கள் 3 வருடத்தில் முடிவெடுக்கிறோம், 4 வருடத்தில் முடிவெடுக்கிறோம் என்று சொல்லுங்கள். இந்த இந்தப் பிரச்சினைகள் முடிவெடுக்கப்படாமல் இருக்கின்றன என்று ஒரே பட்டியலையே அவர்கள் திரும்பவும் தந்துகொண்

(பிற்பகல் 6-20)

டிருக்கிறார்கள். அவர்கள் நேரடியாகச் சம்பளப் பட்டுவாடா கேட்கிறார்கள். கல்லூரிகளை நடத்துகிறவர்கள் இன்றைக்கு அதை வியாபாரம் போன்று நடத்துகிறார்கள். அதற்குப் பெயர் சேவை என்று சொல்லுகிறார்கள். பெரிய மனிதர்களைக் கூப்பிட்டு விழா நடத்துகிறார்கள். அந்தக் கல்லூரிகளை வைத்து சம்பாதனை நடத்துகிறார்கள். டிரஸ்ட் என்ற பெயரால் பல கோடி ரூபாய்களைச் சம்பாதிக்கிறார்கள். இதை கல்வி அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். ஆனால் அந்தக் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இது ஒரு ஜனநாயக அரசு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு. ஆனால் சட்டங்களைக் கொண்டுவர முடியவில்லை. கேட்டால், மத்திய அரசின் சட்டம் எதிராக இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இன்றையதினம் இந்துப் பத்திரிகையிலே படித்தேன். ஆந்திர மாநிலத்துக் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது என்று படித்தேன். எதனால்? அமைச்சரவை நேற்று முடிவு எடுத்ததன் அடிப்படையிலே, ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் தரப்படுமென்று அறிவிக்கப்பட்டதால், போராட்டம் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது

இங்கேகூட சில முடிவுகள் அமைச்சரவை முடிவுகளாக வருவதில்லை. கல்வி அமைச்சரவர்கள் சில நேரங்களில் சில முடிவுகளை அறிவிக்கிறார்கள். அதைக்கூடச் செயல்படுத்த முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமையிலே ஆசிரியர்கள் பிரச்சினை என்று வரும்போது, ஒட்டுமொத்தமாக அமைச்சரவை முடிவெடுத்து அறிவிக்க வேண்டும். கல்வி அமைச்சருக்குப் பொறுப்பில்லையா என்று கேட்கலாம். ஏன் சொல்கிறேன் என்றால், வழக்கு மன்றத் தீர்ப்பு அப்படி இருக்கிறது. அந்த வழக்கு மன்றத் தீர்ப்பைச் சொல்கிறேன். நாங்கள் முன்னாள் கல்வி அமைச்சரவர்கள் வாக்குறுதியாக இங்கு சொன்னதைக் கோர்ட்டில் கொண்டு போய் படித்தோம். அப்போது நீதிபதி அவர்கள், 'இது அமைச்சரவை முடிவல்ல, அமைச்சரவை முடிவுதான் அரசாங்கத்தின் முடிவு; எனவே ஒரு அமைச்சர் சொன்னதை அரசாங்க முடிவாக ஏற்றுக்கொள்ள முடியாது' என்று சொன்னார்கள். எனவே இத்தகைய பிரச்சினைகளுக்கு அமைச்சரவை முடிவாகச் சொல்லட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மருத்துவக் கல்லூரி விஷயத்திலேகூட அமைச்சரவை முடிவு அல்ல என்பதாலேதான் அது கோர்ட்டில் அடிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அமைச்சரவை முடிவெடுத்து இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரி ஆசிரியர்கள் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி தீர்வு காணுங்கள், முடிவு காணுங்கள். இதை மீண்டும் வளர்த்தாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினரவர்கள் விரைவாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் எற்கெனவே 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. செ. முத்துசாமி:** முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு அரசுப் பள்ளிகளிலே பதவி உயர்வு என்று தரப்படவில்லை. பி.எ., பி.டி. படித்தவர்கள் எம்.எ., பி.டி. படிக்கிறார்கள், அவர்களுக்குப் பதவி உயர்வு என்ற பெயரில் இல்லாமல், இந்தப் போஸ்டிலிருந்து இந்தப் போஸ்டிற்கு மாற்றப்படுகிறார்கள் என்று உத்தரவு போடுகிறார்கள். இதற்கு என்ன தேவை? கல்வித் துறைக்கு இதற்கு இவ்வளவு நாட்கள் வேண்டுமா? இரண்டு வருடங்கள் ஆகியும் இன்கிரிமென்ட் உண்டா இல்லையா என்ற கேள்விக்குத் தீர்வு இல்லை. போன கூட்டத்திலே கேட்டோம். அதற்கு முன்னாலே கேட்டோம். சென்ற கூட்டத்திலே கல்வித் துறை முடிவெடுக்கவில்லை என்று சொல்லி வெளி நடப்பு பண்ணினோம். ஆனால் இன்றைக்கும் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இப்படிப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படாமலிருந்தால், எப்படி நாங்கள் திருப்தியடைய முடியும்? நாங்கள் அங்கே செல்லும்போது, எங்களை இடிக்கிறார்கள். எனவே எங்களுக்கு அவர்கள் பிரச்சினை





களைச் சொல்ல வேண்டியது கடமையாகிறது. அவர்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியாக வேண்டும். எனவே இங்கே வெளியிடுகிறோம். அரசுப் பள்ளிகளில் பணியாற்றக்கூடியவர்களுக்குப் பதவி உயர்வு தரும்போது, எஃப்.ஆர். 22 (பி) படி இன்கிரிமென்ட் தர உத்தரவு போட கல்வித் துறைக்கு இவ்வளவு காலமா? இதை விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் துறையிலே தமிழிலே ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டேன். இலங்கை யாழ்ப்பாணம் பகுதியிலே தமிழர்கள் வாழ்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள் மருத்துவப் படிப்பைத் தமிழில் படிக்கிறார்கள். இது தமிழ்நாடு, முத்தமிழ் சங்கம் வளர்த்த நாடு. இந்தத் தமிழ் நாட்டில் கல்வித் துறையில் அல்லது மற்ற துறைகளில் இருந்து சாதாரண விஷயங்களில் கூட அரசு ஆணைகள் தமிழிலே இடப்படுவதில்லை. ஏதோ நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். காதிலே வாங்குகிறீர்கள். நடவடிக்கை எடுக்கும்போது, உத்தரவிலே கையெழுத்துப் போடும்போது இதைத் தெளிவாகச் செய்ய வேண்டாமா? தமிழுக்கு இதைவிட என்ன செய்யப் போகிறீர்கள்? ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சாதாரண மக்கள். அவர்கள் அரசாணைகளைப் படிக்கிறார்கள். இதிலே என்ன சட்டச் சிக்கல் வர இருக்கிறது? செயல்படுத்தக்கூடிய நடைமுறைகள், குறிப்புரைகள், அரசு ஆணைகள் இவைகளைத் தமிழிலேயே இடுவதற்கு இன்னும் முன்னேற்றம் வரவில்லை. இது என்ன தர்மம்? தமிழ் நாட்டிலே தமிழ் ஆட்சிமொழியாக இருக்கிறதென்று சொல்ல நிச்சயமாக நான் வெட்கப்படுகிறேன். நானும் சட்டமன்றத்தில் இருக்கிறேன் என்பதால் சொல்கிறேன். இதை உடனடியாக அரசு மாற்றியமைக்க வேண்டும். அதற்கான பொறுப்பிலிருந்து தவறக் கூடாது. அடுத்து, எந்த ஒரு அரசாணையிட்டாலும், தமிழில் போட வேண்டும். ஆங்கிலத்திலும் போட வேண்டுமென்று ஆசை அதிகாரிகளுக்கு இருந்தால், ஆங்கிலத்திலும் போடட்டும். ஆனால் தமிழில், தமிழர்களுக்காகப் போட வேண்டும். நாங்கள் ஆங்கிலத்தை விரும்பவில்லை. எங்களுக்கு ஆங்கிலம் புரியவில்லை. புரியாத ஆங்கிலத்திற்கு, ஒவ்வொரு வார்த்தைக்கும் இரண்டு அர்த்தங்களைச் சொல்லுகிறார்கள். தமிழில் போட்டால் இதுதான் அர்த்தம் என்று எங்களால் வாதாட முடியும். வாதாட முடியாத ஆங்கில மொழியை ஏன் சாதாரண நடைமுறைகளுக்குக்கூட வைக்கிறார்கள்? விஞ்ஞானத்தைச் சொல்லிக் கொடுக்க முடியவில்லை. மருத்துவக் கல்வியைச் சொல்லிக் கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். போகட்டும். மாணவர்களேகூட போராடினார்கள். சென்ற ஆட்சிக் காலத்தில் தமிழில்

படிக்க வேண்டுமென்று சொன்னபோது, இந்த நாட்டிலே போராட்டம் வந்தது. இன்றைக்குக்கூட கல்வி அமைச்சரவர்களுக்கு எண்ணம் இருக்கிறது. ஆனால் அது நிறைவேறவில்லையே.

சென்னையிலே பல்கலைக் கழகம் இருக்கிறது. கல்வித் துறையிலேயிருந்து வந்திருக்கக்கூடியவர்கள் இன்றைக்குத் துணை வேந்தராக இருக்கிறார்கள். அவர் வந்த பிறகுகூட M.Ed. படிக்க வசதியில்லை. அண்ணாமலையில் வைத்திருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பெரிய சிறப்பு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிலைமை எவ்வாறு தாழ்ந்திருக்கிறது என்பதை எண்ணும்போது, என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் கூட இது பெரிய கவுரவப் பிரச்சினைபோல் இருக்கிறது. இமாசலப் பிரதேசத்திலிருந்து M.Ed. பயிற்சி தருகிறார்கள். நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிறார்கள். பல ஆயிரக் கணக்கான ரூபாயை அவர்களுக்குச் செலுத்த வேண்டியிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகம் அது குறித்து ஒரு முடிவை எடுக்கக்கூடாதா? துணை வேந்தர் அவர்கள் ஏற்கெனவே கல்வித் துறையில் இருந்தவர்கள். பல ஆண்டுகள் கல்வித் துறையில் பணியாற்றியவர்கள். கெட்டிக்காரர் என்று அவரை நியமித்திருக்கிறார்கள். அவர் திறமையானவர். அவருடைய திறமையில் நம்பிக்கை இருக்கிறது. எனவே அவருடைய திறமை மக்களுக்குப் பயன்பட வேண்டாமா? ஆசிரியர்களுக்குப் பயன்பட வேண்டாமா? அந்த M.Ed. வகுப்பை அடுத்த ஆண்டிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தை 'அடானமஸ் பாடி' என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதிகாரிகள் ஏகப்பட்டவர்கள் சிண்டிகேட்டில் இருக்கிறார்கள். இன்றைக்கு கல்லூரி ஆசிரியர்கள் அதை ஜனநாயகப் படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மாணவர்கள் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்களின் பிரதிநிதிகள் என்று அவர்களும் சிண்டிகேட்டிலும், செனட்டிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு ஜனநாயக நாட்டிலே இருக்கக்கூடிய பல்கலைக் கழகம் தமிழிலே 4 ஆண்டுக் காலம் படித்து, புலமை பெற்றவர்களுக்கு பட்டத்தை ஒப்புக் கொள்ள மறுக்கிறது. இது என்ன நீதி? அவர்கள் தமிழிலே 4 ஆண்டுக் காலம் படிக்கிறார்கள். அதற்குப் பிறகு மீண்டும் பி.லிட். பரீட்சை எழுத வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்படி தமிழைத் தாழ்த்தி வைத்திருக்கக்கூடிய நிலைமைக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தை விடலாமா?



மதுரைப் பல்கலைக் கழகத்தை அனுமதிக்கலாமா? இதில் இந்த அரசின் கொள்கை என்ன என்று அறிவிக்க வேண்டாமா? சென்ற கல்வி அமைச்சரவர்கள் காலத்தில் கேட்டேன். அவர் 'அடானமஸ் பாடி' என்று சொன்னார்கள். அப்படியானால் அரசின் கொள்கை என்ன என்று கேட்டேன். அவர் அதற்குப் பதில் சொல்லவில்லை. இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று கேட்கிறேன். தமிழாசிரியர்கள் போராடுவது என்று நேற்று முடிவெடுத்திருக்கிறார்கள். அவர்களைப் போராடத்தான் விடப் போகிறார்களா? அரசுக்கு தமிழாசிரியர்கள் மீது அனுதாபம் இல்லையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புலவர் பயிற்சியிலே பட்டம் பெற்றவர்கள், பி.லிட். பட்டம் பெற தமிழிலேதான் எழுத வேண்டும். அதை எழுதுவதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது? அதைப் படிக்க அவர்களுக்கு என்ன கஷ்டம்? அவர்களுடைய தகுதியை உயர்த்திக்கொள்வதில் என்ன கஷ்டம்? அமெரிக்கா போன்ற நாடுகளிலே பட்டம் பெற்றவர்கள் எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை படிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த நாடு முன்னேறுவதுபோல நம்முடைய நாடு முன்னேறுவது எப்போது?

திரு. செ. முத்துசாமி: கல்வி அமைச்சரவர்கள் நல்லதொரு விளக்கம் தர எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் புலவர்களுக்கு நடத்தப்பட்ட பாடத் திட்டம், எம்.ஏ. (தமிழ்) கல்லூரியில் எடுத்துக்கொண்டு படிப்பவர்களுக்கு நடத்தப் பட்டிருக்கும் பாடத் திட்டம் இரண்டும் ஒன்றுதான். சொல்லப்போனால் சில பாடத் திட்டங்களைக் கூடுதலாக தமிழாசிரியப் பெருமக்கள், புலவர்கள் படிக்கிறார்கள். இப்படிப் படித்துவிட்டு, மேற்கொண்டு ஒரு தேர்வு எதற்காக? எம்.ஏ. (தமிழ்) கல்லூரியில் படித்திருந்தால், அது போதும். அதைவிடக் கடுமையாகப் படித்தவர்கள் மீண்டும் இரண்டு தேர்வுகள் எழுதினால்தான், முதுகலைப் பட்டம்பெற அல்ல, இளங்கலைப் பட்டம் பெற முடியும். இது சமநிலையற்றது. பல்கலைக் கழகங்கள் அடிமைத் தன்மையுள்ளவை, ஆங்கிலச் சிந்தனையுடையவை. ஆகவே சொல்கிறேன், தமிழ்ச் சிந்தனைக்கு அவைகளைக் கொண்டு வரவேண்டும். தமிழுக்கு மரியாதை கொடுக்க வேண்டும்.

மைசூரில் சொல்கிறார்கள், எம்.ஏ. படிக்க மிகக் கடுமையான ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று. எல்லோரும் கன்னடத்தில் எம்.ஏ. பட்டம் பெற வேண்டுமென்பதற்காகச் செய்திருக்கிறார்கள். மொழி வளர்ச்சியினுடைய ஒரு உரிமை நாட்டமாகத் தெரிகிறது. சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் கல்வி அமைச்சரவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். நடுநிலைப் பள்ளிகளிலே இருக்கிறவர்கள் தமிழாசிரியர்களாகவும், பட்டதாரி

ஆசிரியர்களாகவும் தேர்வு பெற்றிருந்தால், நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்களென்ற அறிவிப்பை வழங்கினார்கள். 200 பதவிகளையும் அதற்காக ஏற்படுத்தினார்கள். மலையாளம் முழுக்க முழுக்க மீடியமாக உள்ள கூடலூர் பகுதியில் இருக்கக் கூடிய ஒரு நடுநிலைப் பள்ளிக்கு ஒரு பி.டி. ஆசிரியரைத் தலைமை ஆசிரியராகப் போட்டார்கள், அதை 'அப்ஜெக்ட்' பண்ணிய பிறகு, ஒரு தமிழாசிரியரைப் போட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-30)

முழுக்க முழுக்க மலையாளம் மீடியமாக இருக்கக் கூடிய பள்ளியிலே தமிழாசிரியரைக் கொண்டு போய்ப் போடுகிறார்கள். எனவே சம்பந்தப்பட்ட அரசு ஆணைகள் வெளியிடப்படும்போது, தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் அந்தச் சலுகைகள் இல்லையா? கூடலூரில் ஒரு மலையாளப் பள்ளிக்கூடம் இருக்கிறது. தெலுங்கு, கன்னடம், உருது சொல்லிக்கொடுக்கும் பள்ளிக்கூடம் இருக்கிறது. சிறுபான்மையினரால் இருக்கக் கூடிய மொழி மைனாரிட்டிகளுக்கு தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற போல் சலுகைகள் இல்லை. தமிழ் ஆசிரியைப்பற்றி மற்ற மொழிக்காரர்கள் தவறாக நினைக்கிறார்கள். ஏற்கெனவே இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன். அவை பள்ளிக் கல்வி இயக்குநர் கூட கவனத்தில் கொள்ளவில்லை. இந்த விஷயத்தில் மட்டும் அரசு இதுவரை ஏன் உத்தரவு போடவில்லை? இதை நான் மீண்டும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு வாரத்திலேயே [illegible] உத்தரவு அரசிடம் வர வேண்டும். அதற்காகவே நான் காத்திருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 7 உறுப்பினர்கள் பேச வேண்டும். அவை 7 மணிக்கு முடிய வேண்டும். உறுப்பினர் இன்னும் இரு நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும். 30 நிமிடம் ஆகிறது.

திரு. செ. முத்துசாமி : விரைவில் முடித்துக்கொள்கிறேன். அதிகமாக, 20 வருட சர்வீஸ் ஆன அனைத்து ஆசிரியர்களுக்கும் சிறப்புத் தேர்வு நிலை வழங்க வேண்டும். இன்னும் அது வழங்கப்படவில்லை. அதை உடனடியாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் செய்திட வேண்டும். அடுத்த, அரசு ஊழியர்களுக்கு [illegible] அளிக்கிறார்கள் என்றால், அதே சலுகையை பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் நகராட்சிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிக் கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும். இப்போது அவர்களுக்கு அந்தச் சலுகைகளைக் கொடுப்பதில்லை. அவர்கள் மட்டும் என்ன பாவம்



செய்தார்கள்? அவர்கள் மட்டும் [illegible] போடுகிறார்கள். அவர்கள் போதிக்கின்ற கல்வியைத் தானே இவர்களும் போதிக்கின்றார்கள். இவர்களும் தன்னாலான கல்வி போதிப்பதைத் தானே [illegible] வாய்ப்புதல் அளிக்கிறார்கள். அப்படியிருக்க மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் அனைத்துச் சலுகைகளும் இவர்களுக்கும் [illegible] ஒரு கோரிக்கை ஆர்டரை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உடனே போட வேண்டும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று 1977-ஆம் ஆண்டு நாங்கள் போராடிப் பெற்றோம். ஆனால் அன்றைய நாங்கள் போராடிப் பெற்றது எங்களுக்கு உத்தரவாக இதுவரை கிடைக்கவில்லை. ஆசிரியர்களின் குழந்தைகளுக்குப் படிப்புக் கடன், [illegible] போன்ற சலுகைகள் உண்டு, இவர்களுக்கு இல்லையா? இது என்ன நியாயம்? இது ஜனநாயக நாடு. இங்கே சமதர்மம் பேசப்படுகிறது, ஆனால் நடைமுறையில் ஆசிரியர்களைப் பொறுத்தவரை, எங்கே சமதர்மம் இருக்கிறது? நடைமுறையில் அது இருக்க வேண்டாமா? மக்களை [illegible] அடைய வேண்டாமா? ஆகவேதான் அவர்களுக்கும் சமதர்மம், நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்கிறேன்.

டீச்சர்ஸ் சர்வீஸ் ரூலில் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டோம். அதை அமைக்க இருப்பதாகவும், விரைவாகச் செய்வதாகவும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத்தொடரின்போதே சொன்னார்கள். அதேபோல் ஆசிரியர்களுடைய சங்கத்திற்கு அங்கீகாரம் அளிப்பதாகக் கூட சொன்னார்கள். பெரும்பான்மை ஆசிரியர்களைக் கொண்ட சங்கங்களுக்கு அரசு அங்கீகாரம் [illegible] அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் [illegible] உடனடியாகக் கூட்ட வேண்டும். ஆசிரியர்கள் [illegible] பிரச்சினைகளுக்கு முடிவு [illegible] சென்ற கூட்டத் தொடரின்போதே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் [illegible] குழு என்கின்ற அந்தக் குழுவைப் போட்டார்கள். அதைப்பற்றி [illegible]. ஆனால் இதுவரை அந்தக் குழுவின் கூட்டம் கூட்டப்படவில்லை. கூட்டம் தள்ளித் தள்ளிப் போய்க்கொண்டேயிருக்கிறது. இன்னும் கூட்டப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் யாரிடத்தில் பிரச்சினைகளைச் சொல்வது, எப்படிச் சொல்வது, எப்படி தீர்ப்பது? [illegible] முக்கியமானவர்கள் [illegible] மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அப்போது அறிவித்தார்கள். அதற்காக நாங்களெல்லாம் நன்றி கூட தெரிவித்தோம். ஆனாலும் பலனில்லை. கூட்டம் இதுவரை

கூட்டப்படவில்லை. பிரச்சினைகளைச் சொல்ல இடமில்லை. பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் அடிக்கடி செல்லவில்லையா? செல்லாமலா இருக்கிறீர்கள்? இயக்குநர் செல்லவில்லையா? அரசுக் கல்விச் செயலாளர் செல்லவில்லையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உறுப்பினருடைய பேச்சு எங்கள் மீது தவறான கருத்தை உருவாக்குவதாக இருக்கிறது. மதுரையில் ஒரு முறை கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டு அங்கு ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக தள்ளிப் போடப்பட்டது. இந்த வாரம் போடலாம என்று இருக்கிறோம். ஆகவே எந்தத் தவறான நோக்கமும் இல்லை. அந்தக் கல்வி ஆலோசனைக் குழுவே எங்களால் நல்ல நோக்கத்தில் அமைக்கப் பட்டது. இன்னும் சொல்லப்போனால், யாருடைய வற்புறுத்தலின் பேரிலோ, ஆலோசனையின் பேரிலோ அல்லது மிரட்டலின் பேரிலோ அமைக்கப்பட்டதல்ல அந்தக் குழு.

திரு. செ. முத்துசாமி : நாங்கள் யாரையும் மிரட்டல் செய்தது கிடையாது. எங்களுடைய உரிமைகளை உணர்வோடு நாங்கள் வலியுறுத்திக் கேட்க முடியும். அப்படி நாங்கள் எங்கள் உணர்வுகளை வலியுறுத்தி மாண்புமிகு கல்வி அமைச்சரைக் கேட்கும்போது, அவர்கள் அதை எந்த விதத்தில் உணர்ந்தாலும், அதுபற்றி எங்களுக்குக் கவலையில்லை. 'நீங்கள் சொல்லாமலேயே நாங்கள் குழுவை அமைத்திருக்கிறோம்' என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்திருந்தாலும், அதற்காகவும் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் 1977 ஆம் ஆண்டிலேயே நாங்கள் மாநாடு நடத்தியபோது, கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கிறோம். குழுவைக் கூட்ட முயற்சி செய்யவில்லையென்று நான் சொல்லவில்லை. கூட்டம் கூட்டப் படவில்லை என்பது ஓராண்டாக இருக்கும் விஷயம். கூட்டத்தினைக் கூட்டாமல் தள்ளித் தள்ளி வைக்கப்படுகிறது. மீண்டும் மீண்டும் கூட்டத்தைக் கூட்டாமல் தள்ளி வைக்கப்படுகிறது. ஒரு முறை அமைச்சரவர்கள் சொன்னது மாதிரி, பெரு வெள்ளம் ஏற்பட்டது என்றே வைத்துக்கொள்வோம். அதற்கு முன் என்ன காரணத்தால் கூட்டப்படவில்லை? ஏன் அந்தக் கூட்டமும் நடைபெறாமல் போயிற்று? எங்கள் குறைகளை அவையிடத்தில் சொல்லத் தானே இங்கே நாங்கள் வந்திருக்கிறோம். யாரையும் குற்றம் சாட்ட அல்ல. எங்களுக்கு இருக்கிற குறைகளை அமைச்சரிடத்தில் சொல்லுகிறோம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : குற்றம் சாட்ட அல்ல என்று உறுப்பினர் சொன்னார். பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் போகிற அமைச்சர் ஏன் குழுக் கூட்டத்தைக் கூட்டவில்லை என்றும் சொன்னார். கூட்டுகின்ற நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினரைப் போன்றவர்கள் அவசியம் வர வேண்டும்.



திரு. செ. முத்துசாமி : கூட்டம் கூட்டவில்லை என்பது தான் என்னுடைய குறை. உடனே கூட்ட வேண்டுமென்று கோரிக்கையாக இப்போது நான் கேட்கிறேன். என்றைக்கு வேண்டுமானாலும், எந்த இடத்தில் வேண்டுமானாலும் கூட்டுங்கள். விரைவில் கூட்ட வேண்டும் என்பது தான் என்னுடைய நோக்கமெல்லாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விரைவாகக் கூட்ட வேண்டுமென்று உறுப்பினர் சொல்கிறார். அமைச்சரும் விரைவில் கூட்டுவதாகச் சொல்லியிருக்கிறார். பாக்கி உள்ள விஷயங்களை உறுப்பினர் கூட்டத்திலேயே பேசலாமே. (சிரிப்பு) ஏற்கனவே 35 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் குறிப்பிட்டதுமாதிரி பாக்கி விஷயங்களை அங்கே பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மற்ற உறுப்பினர்களும் பேச வேண்டும். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : 'பிக்' நிலையிலுள்ள பஞ்சாயத்து ஆசிரியர்களுக்கு பல குறைபாடுகள் உள்ளன. அவர்களுக்கு என்ன நிவாரணம் வேண்டும். 'பிக்' பஞ்சாயத்து யூனியன்களில் பணமில்லை. சரியாகப் பணம் போய்ச் சேர்வதில்லை. பணம் போய்ச் சேர்வதில் ஏற்பட்ட 'டிலே'. நீலகிரிக்கு ஆளுநர் போகிறார் என்றால், அவருக்குப் பின்னாலே அவருடைய அலுவலர்கள் போகிறார்கள். அவர்களுக்கு 'சீசனல் அலவன்ஸ்' கொடுக்கிறார்கள். வருஷம் பூராவும் அந்தக் குளிரில் நடுங்கிக்கொண்டு வேலை செய்கிறார்களே, அந்த ஆசிரியர்களுக்கு 'சீசனல் அலவன்ஸ்' கிடையாது. இங்கிருந்து சென்று சீசனை அனுபவிக்கப் போகிறார்களே இவர்களுக்கு மட்டும் தான் 'சீசனல் அலவன்ஸ்' உண்டு. "கும்பி எரியுது, குடல் கரியுது, கோலேந்திகளுக்கு குளு குளு ஊட்டி ஒரு கேடா?" என்று நான் சின்ன வாலிபனாக இருந்தபோது சொன்ன வார்த்தைகள் என் மனதில் இன்றைக்கும் பசுமையாக இருக்கின்றன. சீசனில் அங்கு வருகிறவர்களுக்கு 'சீசனல் அலவன்ஸ்' தருகிறார்கள். எதற்காகத் தருகிறார்கள்? சீசனில் சாதாரண மக்கள் அங்கு வருவார்கள். காய்கறி மற்றும் உணவுப் பொருள்கள் அனைத்தும் விலை ஏறும், செலவு அதிகமாகும் என்கிற நோக்கத்திலேதானே 'சீசனல் அலவன்ஸ்' தருகிறார்கள். அங்கு இருக்கிறவர்களும் இதன் மூலம் பாதிக்கப்படத் தானே செய்வார்கள். இங்கிருந்து சீசனை அனுபவிப்பதற்காகப் போகின்றவர்களுக்கு மட்டும் 'சீசனல் அலவன்ஸ்' கொடுப்பது நியாயமல்ல. ஆகவே அங்கு பணியாற்றுகின்ற ஆசிரியர்களையும் தயவுசெய்து கவனிக்க

வேண்டும். எல்லோரையும் நடுநிலையாகக் கருதவேண்டும். பாகுபாட்டை வளர்க்கக் கூடாது. நாங்கள் யாரையும் குற்றம் சாட்டவில்லை. எங்களுக்கு இருக்கின்ற குறைகளைத் தான் சுட்டிக்காட்டுகிறோம். கோரிக்கைகளை அரசினுடைய கவனத்திற்கு நாங்கள் சற்று வேகமாகக் கொண்டு வருவது கூட அரசினுடைய சிந்தனையை வேகப்படுத்தி, பிரச்சினைகளைத் தீர்த்து வேகமாக உத்தரவுகளைப் போட வேண்டுமென்பதற்காகத் தான். விரைவாகச் செயல்படுவார்கள் என்கிற நோக்கத்தில் அரசின் முன் கோரிக்கைகளை வேகமாக வைக்கிறோம். பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன். இன்னும் பல பிரச்சினைகளை வேகமாகத் தீர்க்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து அவற்றின் மீது சாதகமான உத்தரவுகளை விரைவில் அறிவிக்க வேண்டுமென்கிற என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இத்துடன் விடைபெறுகிறேன்.

* திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். ஆளுநர் உரையைப்பற்றி பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். நம்முடைய ஆளுநர் உரையிலே தமிழ் நாட்டினுடைய உணவு நிலைமையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவுப் பிரச்சினையை தமிழக அரசு தீர்த்திருக்கிறது என்ற அடிப்படையில், நான் சில விஷயங்களை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 3 ஆண்டுகளாக, புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தினுடைய உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. மட்ட ரக அரிசி கிலோ ரூ. 1.60 அன்றையதினம் கிடைத்தது. இன்றைக்கும் அதே தான் நிலை. கடந்த கால ஆட்சிகளை எடுத்துக்கொண்டால் அல்லது பார்த்து கவனித்தால், வருடா வருடம் அரிசி விலை ஏறும். ஆனால் ஏறிய பிறகு, இறங்கவே இறங்காது. இந்த முறையில் தான் கடந்த காலத்தில் அரிசியின் விலை இருந்து வந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. காங்கிரஸ் ஆட்சி அகற்றப் பட்டதற்குக் காரணம் அரிசி தான். காங்கிரஸ் ஆட்சி போய் 1967-ஆம் ஆண்டிலே பேரறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்தார்கள். அதுபோல் கலைஞர் ஆட்சி மாற்றப்பட்டதற்குக் கூட முக்கியமான காரணம் தஞ்சையிலிருந்து இரவோடு இரவாக லாரி லாரியாக அரிசி கடத்தப்பட்டது தான். அத்துடன் கலைஞர் ஆட்சியும் கலைக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு (திரு





(பிற்பகல் 6-10)

மாண்புமிகு உறுப்பினர்கள் குறுக்கிட முற்பட்டனர்) நீங்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லை—நான் பேசும்போது யாரும் குறுக்கிடக் கூடாது. பேசாமல் இருக்க வேண்டும். ஆட்சி கலைக்கப்பட்டது. இன்றைக்கு எங்களுடைய ஆட்சி அரிசி விலையிலேயும், உணவு வகையிலேயும் எங்கே தகராறு வைத்திருக்கிறது? பேசியவர்கள் யாரும் அதைப்பற்றிச் சொல்லவில்லை, இதைப்பற்றிச் சொல்லவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். இந்த அரசு சொன்ன கொள்கைகளை நிறைவேற்றினார்களா என்றெல்லாம் கேட்டார்கள். நாங்கள் என்ன கோரிக்கைகளை, கொள்கைகளை, சொன்னதைச் செய்யவில்லை. தேர்தலின் போது புரட்சித் தலைவர் இதைச் சொன்னார், தேர்தலுக்கு முன் அதைச் சொன்னார், ஆனால் செய்ய வில்லை என்று தெளிவாகச் சொல்லவில்லை. வெறும் பொத்தாம் பொதுவாக கல்லைப் போட்டு போனதிலே அடிப்படையிலோ அவர்களோ தவிர, குறிப்பாகச் சுட்டிக்காட்டி குறைபாடுகளை எடுத்துச் சொல்லவில்லை. போராட்டங்களைச் சந்தித்தார்களா? ஆசிரியர்களை, போலீசாரை அழைத்துப் பேசினார்களா, சுமுகமான முடிவு ஏற்படுத்தினார்களா என்றெல்லாம் கேட்டார்கள். நான் கேட்கிறேன், போராட்டங்கள் ஏற்பட்ட போது என்றைக்கு புரட்சித் தலைவர் அழைத்துப் பேசவில்லை? மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் பல முறை பேசியிருக்கிறார்கள். இப்போது இந்த நாட்டிலே போராட்டங்கள் [illegible] என்று சிந்தித்துப் பாருங்கள். [illegible] போராட்டம் நடத்தினார்கள். இது என்னுடைய சொந்தத் தொகுதி. இதைப்பற்றிச் சொல்கிறேன். 45 நாட்கள் போராட்டம் நடத்தி வேலை நிறுத்தம் செய்தார்கள். அதன் பிறகு பேச்சுவார்த்தையிலே அவர்களுக்கு அதிக ஊதியம் [illegible] நிர்ணயிக்கப்பட்டது. உடனே என்னவாயிற்று? 90 ரூபாய் [illegible] 250 ரூபாய்க்குப் போய்விட்டது. இது போராட்டத்தினால் [illegible] சம்பளம் உயர்ந்ததனால் ஏற்பட்ட விளைவு. நாங்கள் என்ன செய்ய முடியும்? 90 ரூபாய்க்கு வாங்கிய [illegible] 250 ரூபாய் கொடுத்து [illegible] தொழில் செய்ய முடியவில்லை. எங்களுக்கு லாபம் கிடைக்கவில்லை. [illegible] தொழிலாளர்களுடைய போராட்டங்களினால் [illegible] மக்களுக்கு ஏற்படும் துன்பங்களையும், [illegible] பார்க்க வேண்டும். முதலாளிகள் [illegible] ஆனால் அந்தச் சம்பளத்தை [illegible] மீது அந்தப் பாரத்தை [illegible] விலை [illegible] கூலியை ஏற்றி [illegible] ரூபாய் [illegible] கூலியைக்

குறைத்தும் நூல் விலையை அதிகமாக்கினார்கள். அதனால் நெசவாள மக்கள் பாதிக்கப்பட்டார்கள். கடைகளில்—ஜவுளியை விற்கும்போதும் அதிகமான விலைக்கு விற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. தீபாவளி சமயத்தின்போது. சராசரியாக மீட்டர் ஒன்றுக்கு 25 காசு அதிகமாக விற்றது. நூல் கிடைக்க வில்லை, விலையேறிவிட்டது. இதனால் பொருளாதாரம் சீர்கேடடைந்தது. சாதாரண மக்கள் கூட 4 அணா மீட்டர் ஒன்றுக்கு அதிகமாகக் கொடுத்து வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பொருளாதாரத்தை நாம் கூர்ந்து கவனித்து, பொருளாதார ஏற்றத்தாழ்வைப் போக்க வேண்டுமானால், போராட்டங்களைத் தவிர்க்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இங்கே பேசியவர்கள் எல்லாம், 'அந்த தொழிலாளியைச் சந்தித்துப் பேசினார்களா? தீர்வு காணப்பட்டதா?' என்றெல்லாம் கேட்டார்கள். இதற்கு முன்னாலே வெள்ளைக்காரன் காலத்திலேகூட போராட்டங்கள் நடந்தன. காங்கிரசார் ஆட்சிக் காலத் திலேயும் போராட்டங்கள் நடந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே போராட்டங்கள் இல்லையா? இங்கே விவசாயிகளைப்பற்றிப் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் போராட்டம் நடத்தியபோது, அவர்களைச் சுடவில்லையா? இன்றைக்குப் பேசுகின்ற நேரத்திலே எதைப் பேசுவது, எதைப் பேசக்கூடாது என்று இல்லாமல் போய்விட்டது. 'உடனே ராஜிநாமா செய்யுங்கள், ஆட்சியை விட்டு போய்விடுங்கள்' என்று பேசுகிறார்கள். ஒருவர் நாடிபிடித்துப் பார்க்கிறார், ஒருவர் ஜோஸ்யம் பார்க்கிறார், ஒருவர் ஜாதகம் பார்க்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூட, 'போவது தான் போகிறீர்களே, ஆசிரியர்களுக்குப் பல நன்மைகள் செய்துவிட்டுப் போகக் கூடாதா?' என்று சொன்னார். நாங்கள் தான் போகிறோமே. போகிற பிராக சும்மாவா போகும் என்று சொல்வார்களே. இன்றையதினம் சமுதாயத்திலே புகுத்து சில காரியங்களைச் சாதிக்க சந்தர்ப்பவாதிகள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். ஓட்டு வாங்குவது வேறு, ஆட்சி அமைப்பது வேறு. மத்தியிலே நாடாளுமன்றத்திற்கு நடந்த தேர்தலிலே தோற்றுவிட்டோம். ஒத்துக்கொள்கிறோம். அதற்காக இப்படியா பேசுவது? இந்த நாட்டிலே இன்றையதினம் மக்கள் நம்மிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறார்கள். கலைஞர் ஆட்சி இருந்தபோது, அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று சொன்னால், நாங்கள் அவைகளை மறுக்கவில்லை. ஆனால், புரட்சித் தலைவர் அவர்கள் செய்த நன்மைகளை ஏன் சொல்லவில்லை? ஏன் பாராட்டவில்லை? கலைஞர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைபற்றி இங்கே பேசினார்கள். கேளிக்கை வரி மூலம் வசூலாகும் பணத்திலிருந்து தான் அவர்களுக்கு அது அளிக்கப்படுகிறது. அதுவும் சினிமா மூலம்தான் அந்தப் பணம் வருகிறது.



கலைஞர்களுக்கு வயதாகி ஓய்வு பெறும் காலத்திலே என்ன வருமானம் இருக்கிறது? ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால், அவர்களுக்குப் பென்ஷன் வருகிறது. கலைஞர்கள் லட்சக்கணக்கிலே கூட சம்பாதிக்கிறார்கள் என்று சொல்லலாம். எல்லோரும் அப்படி சம்பாதிக்கவில்லை. ஏதோ ஒன்றிரண்டு பேர்கள் அப்படி சம்பாதிக்கலாம். நம்முடைய புரட்சித் தலைவர், சிவாஜி கணேசன் போன்றவர்கள் அப்படி சம்பாதிக்கலாம். சாதாரணமானவர்கள், 20, 30 வருட காலமாக நடித்துவிட்டு முதுமையிலே வறுமையில் வாடுகிறார்கள். இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அதைக் கிண்டல்செய்து, 'இவர்களுடைய ஆட்சியிலே கலைஞர்களுக்கு உதவி அளிக்கிறார்கள், இது ஒரு திட்டமா?' என்று கேட்கிறார்கள். நான் கேட்கிறேன், 'கலைஞர்கள் மனிதர்கள் இல்லையா? கேளிக்கை வரிமூலம் வரும் லட்சக்கணக்கான ரூபாயிலிருந்துதானே அவர்களுக்கு வழங்கப்படுகிறது, இதிலே என்ன தவறு?'

மதுவிலக்குபற்றி கவர்னர் உரையில் எதுவும் இல்லையென்று சொல்கிறார்கள். கள்ளுக் கடைகளைத் திறப்பதுபற்றிப் பேசும்போது, பலபேர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். யாரும் பாராட்டவில்லை. கண்டிக்கிறார்களே யொழிய பாராட்டவில்லை. ஒன்பது ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குத்தான் சலுகை என்று சொன்னதை மாற்றி இப்போது 50 சதவீதம் ஒதுக்கீடு என்று கொண்டுவந்திருக்கிறோம். இதைப் பாராட்ட வில்லை. அதிலே சொத்தை, இதிலே சொத்தை என்று சொல்லிக்கொண்டு கண்டிப்பதிலே இருக்கிறார்களே தவிர, நாட்டிலே இருக்கும் உணவு நிலைமை பற்றிப் பேசவில்லை, விலை உயர்வுபற்றிப் பேசவில்லை.

திரு. க. இராமமூர்த்தி: இருந்துகொண்டிருந்த நிலைமையை மாற்றி சீர்கேட்டைச் செய்துவிட்டு, மீண்டும் இப்போது மாற்றியிருக்கிறார்கள். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதனால்தான் பாராட்டவில்லை.

திரு. சி. இராமலிங்கம்: 'பேக்வார்ட் கிளாஸ் கமிஷன்' 50 சதவீதம் என்று ஆக்கினார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஏன் இன்னும் 2 சதவீதம் போடக்கூடாது என்று கேட்கிறார்கள். அந்த மாணவர்கள் எல்லாம் புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்தார்கள். 'நாங்கள் மந்திரி சபையிலே கூடிப்பேசி முடிவெடுக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். வேண்டாத பெண்டாட்டி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்ற மாதிரித் தான் நிலைமைகள் இருக்கின்றன. அது வேறு விஷயம். 'ஹரிஜனங்களுக்கு இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை, எங்கே பார்த்தாலும் சண்டை போடுகிறார்கள், அடிக்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குச் சொல்வேன், 'என்னுடைய

உறவுக்காரப் பெண் நர்ஸ் ஆக விருப்புரத்திலே வேலை பார்க்கிறாள். நான்கு குழந்தைகளோடு இருந்தவளைப் பின்தொடர்ந்து, பின்தொடர்ந்து அவளுடைய கணவனுக்கு அவளிடத்திலே சந்தேகம் ஏற்படும் அளவுக்கு சூழ்நிலைகளை உருவாக்கி, இப்போது அவளை கணவனிடமிருந்து பிரித்து விட்டார் ஒருவர்.' அதைப்பற்றி நான் இங்கே அதிகமாகப் பேச விரும்பவில்லை. இந்த அரசு ஹரிஜனங்களுக்குப் பாதகம் செய்கிறது என்று பேசுகிறார்கள், ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவருகிறார்கள். ஹரிசனங்களுக்கும், ஜாதி இந்துக்களுக்கும் இடையே சண்டை நடக்கிறது. உடனே விசாரணைக் கமிஷன் அமைக்கிறோம். முடிவு வருகிறது. அதிலே யார் மீது தவறு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஆட்சியின் மீது எந்தவிதத் தவறும் இல்லை. காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆட்சியாளர்கள் மீது, எங்கள் மீது குற்றம் சுமத்துவதற்கு ஒரு இடத்தில் கூட ஆதாரம் இல்லை. நான் பல இடங்களிலே நடந்த நிகழ்ச்சிகளை நேரிலே சென்று பார்த்தபோது, எனக்குத் தெரிய வந்தது என்னவென்றால், அங்கே நடந்த நிகழ்ச்சிகளுக்குக் காரணம் வர் தகராறுதான். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இருப்பது தான் இந்த ஜாதிச் சண்டை. அதை இந்த அவையிலே கொண்டுவந்து, 'ஹரிசனங்களுக்குப் பாதகம், ஹரிஜனங்களுக்குப் பாதகம்' என்று பேசி, மத்திய அரசுக்கு ரிப்போர்ட் அனுப்புவதற்கு இதுதானா சந்தர்ப்பம் என்று நான் கேட்க விரும்புகிறேன். மதுவிலக்கை எடுத்ததால், ஹரிசனங்களுக்கு பாதகம் வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஆனால், மதுவிலக்குக் குற்றத்திலே வந்த வழக்குகளின் விவரங்களைப் பார்த்தால், 100 குற்றவாளிகளில் 95 பேர்கள் ஹரிசனங்கள். அவர்களுக்காக நான் பலமுறை பேசியிருக்கிறேன். ஆகவே, மதுவிலக்கைத் தளர்த்தியதற்காக நீங்கள் பாராட்ட வேண்டும். இந்த உரையின் மீது பேசிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் இதிலே இருக்கும் நல்லதைப்பற்றிப் பேசாமல், 'உங்களுக்கு ஓட்டு கம்மி, ஜனங்கள் உங்களைப் போகச் சொல்லிவிட்டார்கள். 3 நாட்கள் இருப்பீர்களா. இல்லை 6 நாட்கள் இருப்பீர்களா, கூண்டோடு போவீர்களா?' என்று பேசுகிறார்கள். ஒரு மேலவை உறுப்பினர் பேச வேண்டிய பேச்சா இது? 'ஆனரபிள் மினிஸ்டர்' என்று சொல்கிறோம். தலைவர் அவர்களை 'ஆனரபிள்' என்று சொல்கிறோம். நம்முடைய சபை பிரபுக்கள் சபை. ஆனால் இங்கே பிரபுக்கள் போல யாருமே பேசவில்லை. இது சான்றோர்கள் சபை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், என்ன பேசுகிறார்? "ஆசிரியர்களுக்கு இரண்டு பெர்மிட் வேண்டும்" என்று பேசுகிறார். இது என்ன நியாயம்? கள்ளுக் கடை கோட்டாவில் இரண்டு பெர்மிட் ஆசிரியர்களுக்கு வேண்டுமா? இது என்ன பேச்சு? இப்படிப் பேசினால் ஆசிரியர்களைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள்?





திரு. செ. முத்துசாமி: இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சொந்தக் கருத்து என்று சொல்லியிருந்தால், குறுக்கீடு இல்லை. ஆசிரியர்கள் யாரும் அப்படிக் கேட்கச் சொல்லவில்லை. அது அந்த உறுப்பினர் அவர்களுடைய கருத்து. ஆகவே, அவரைப்பற்றி மட்டும் சொன்னால் நல்லது. ஆசிரியர்கள் அத்தனை பேரும் கேட்கிறார்கள் என்று சொன்னால், அது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-50)

திரு. கி. இராமலிங்கம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஆசிரியர்களுக்கு என்று கேட்டதாகத்தான் அவைக் குறிப்பில் கூட இருக்கும். எதைப் பேசுகிறோம், என்ன பேசுகிறோம் என்றில்லாமல், எதை வேண்டுமானாலும் பேசுவதா? இன்னொருவர் ஒன்றைச் சொன்னார்கள். அழகான முகத்தைக் கொண்ட இளம் பெண் வாழை இலையைப் போட்டு, அதில் சோறு போடுவதற்கு முன்பே, அந்த வாழை இலையைச் சாப்பிட்டு விடுவார்கள் சிலர் என்று பேசினார். ஒரு ஆசிரியர் பிரதிநிதியா இப்படியெல்லாம் பேசுவது? என்னைப் போல் படிக்காமல். இந்த அவையில் இருப்பவர்களும், மற்றும் வெளியில் இருப்பவர்களும் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று எண்ணிப் பார்க்காமல் பேசுவதா? இதையெல்லாம் நான் சொல்லுகிறேன் என்றால், உறுப்பினர்கள் இங்கே பேசும்போது, ஒரு வரைமுறைக்குள் பேச வேண்டும்.

தமிழ் நாட்டில் மொத்தம் 4½ லட்சம் பேர்தான் அரசு ஊழியர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய வாழ்க்கைக்காக சம்பள உயர்வு கொடுக்கிறோம், பென்ஷன் கொடுக்கிறோம். வீடு கட்டிக் கொடுக்கிறோம். இப்படி பல்வேறு விதமான சலுகைகளைச் செய்து கொடுக்கிறோம். இந்த 4½ லட்சம் பேர்களின் நல்வாழ்வுக்காக 5 கோடி மக்கள் தங்களின் வரிப்பணத்தைக் கொடுக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று இவர்களில் யாராவது எண்ணிப் பார்க்கிறார்களா? இந்த 5 கோடி மக்கள் நாட்டில் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று யாராவது எண்ணிப் பார்க்கிறார்களா? நெசவாளர்களைப் பற்றி யாராவது எண்ணிப் பார்க்கிறார்களா? வெய்யிலிலே கைவண்டி இழுப்பவர் கல்லுடைப்பவர் விவசாயத் தொழிலாளி அன்றாடம் கூலி வேலை செய்யும் தொழிலாளியைப் பற்றி யாராவது எண்ணிப் பார்க்கிறார்களா? இதைத்தானே நமது குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி குறிப்பிட்டார். இதைத்தானே நமது புரட்சித் தலைவர் அவர்களும் சொல்லுகிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்வோம் என்றுதானே நமது தலைவர் சொல்லுகிறார். இந்த வகையில் மக்களின் நன்மைக்கான பல திட்டங்களைக் கொண்ட இந்த ஆளுநர் அவர்களின் உரையை நான் மிகவும் பாராட்டி அமைகிறேன். வணக்கம்

* திரு. எ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல அம்சங்கள் பலவும் நிறைந்த ஆளுநர் உரையை நான் மனதார வரவேற்று, அதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு முன்பு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல கோணங்களிலிருந்து தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டார்கள். குறிப்பாக எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் மிக எளிய நடையில் மனம்விட்டு, சிறப்பாகவும் மிக நன்றாகவும் பேசினார்கள். அவர் இங்கே பேசிய எல்லாக் கருத்துக்களையும் எண்ணங்களையும் நான் முழுமையாகப் பகிர்ந்து கொள்கிறேன்.

இப்போதே காலம் அதிகமாகிவிட்டதால், நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளாமல், நல்ல அம்சங்கள் நிறைந்த ஆளுநர் உரையில் ஒரு சில அம்சங்களைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

துரிதப் போக்குவரத்துத் திட்டம், வீட்டு வசதித் திட்டம், செவன்யு போர்டு கலைப்பு ஆகியவைபற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் அவ்வூர்கள் மிக அதிகமான அளவுக்கு ரயில் போக்குவரத்தைத்தான் உபயோகிக்கிறார்கள். அங்கெல்லாம் 100-க்கு 80 சதவீதம் ரெயில் போக்குவரத்தைத்தான் உபயோகிக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு மாறாக சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், 100-க்கு 80 சதவீதம் அவ்வூர்கள் பஸ் போக்குவரத்தைத்தான் நம்பியிருக்கிறார்கள். இருபது சதவீதம் மக்கள் அல்லது பயணிகள் மட்டுமே ரயிலையும் மற்ற வேறுவகைப் போக்குவரத்து வசதிகளையும் நம்பியிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்துள்ள விவரப்படி, நாள்தோறும் பல்லவன் போக்குவரத்து பஸ்கள் மூலம் சுமார் 20 லட்சம் பயணிகள் சென்னையில் பயணம் செய்கிறார்கள். ரயில் மூலமாகச் சுமார் 4.0 லட்சம் பயணிகள்தான் பிரயாணம் செய்கிறார்கள். சென்னைப் பெருநகரின் தென் பகுதியில் அதாவது [illegible] பகுதியிலிருந்து அடையாறு பகுதி வரை வாழ்பவர்கள் எல்லோரும் பொதுவாக பஸ்களைத்தான் நம்பியுள்ளார்கள். ஆய்வு ஒன்றின்படி 1980-ஆம் ஆண்டில் சுமார் 7.6 லட்சம் பயணிகள் இந்தப் பகுதியில் மட்டும் நாள்தோறும் பயணம் செய்வார்கள் என்று சொல்லப்படுகிறது. அதில் பல்லவன் போக்குவரத்து பஸ்கள் மூலமாக சுமார் 3.1 லட்சம் பயணிகள் மட்டுமே பிரயாணம் செய்யக் கூடும் என்றும், எஞ்சியுள்ள 4.5 லட்சம் பயணிகள் நிலை பரிதாபத்திற்குரியது என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.





இப்படிப்பட்ட நெரிசலைத் தவிர்க்க ஒரு நல்ல திட்டம் வகுக்கப்பட்டது. அதுதான் Rapid Transit System (surface cum Elevated) என்பதாகும். இந்த நல்ல திட்டம் நீண்ட காலமாக ஆராயப்பட்டது. அது பல ஆண்டுகளாகவே பரிசீலனையில் இருந்து வருகிறது. நானே இரண்டு மூன்று முறை இந்த அவையிலேயே அதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். அந்தத் திட்டத்தின்படி மூன்று கட்டங்கள், அதாவது சென்னை பீச்சிலிருந்து லஸ் வரை 8.1 கிலோ மீட்டர் தூரம் முதல் கட்டம். இரண்டாவது கட்டம் லஸ் முதல் கஸ்தூரிபாய் நகர் வரை 4.3 கிலோ மீட்டர் தூரம். மூன்றாவது கட்டம் பீச்சிலிருந்து திருவொற்றியூர் வரை 9.3 கிலோ மீட்டர் தூரம். முதலில் இவ்வாறு 3 பகுதிகளாகத் தனித் தனியாக நிறைவேற்ற திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் பணத்தட்டுப்பாடு காரணமாக முதல் பகுதிக்கே 40 கோடி ரூபாய் ஆகும் என்ற காரணத்தால், அதை இன்னும் சுருக்கப்படுத்த வேண்டும் என்று அந்தத் திட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அதாவது பீச்சிலிருந்து பைக்கிராப்ட்ஸ் ரோடு வரை 5.2 கிலோ மீட்டர் தொலைவு. அடுத்தது பைக்கிராப்ட்ஸ் ரோடிலிருந்து லஸ் வரை 2.9 கிலோ மீட்டர் தொலைவு. இப்படி இரண்டாகப் பிரித்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் சமீபத்தில், மைய சர்க்கார் இந்தத் திட்டத்தையே கைவிட்டுவிட்டதாகச் செய்திகள் வந்தன. இது மிகவும் வருந்தத் தக்க விஷயம். சென்னை நகரின் இந்த நெரிசலைத் தவிர்க்க வேண்டுமானால், இப்படிப்பட்ட திட்டத்தைக் கைவிடுவது எந்த வகையிலும் சரியல்ல. இது உண்மையில் சென்னை நகரப் பயணிகளைப் பெரிதும் பாதிக்கும். அத்தகைய பாதிப்பு இல்லாமல் இருக்கும் வகையில் தமிழக அரசு தற்போது இந்த "RapidTransit system" திட்டத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கிறது. இந்தத் திட்டத்திற்காகத் தேவைப்படும் நிலத்தைக்கூட கொடுக்க தமிழக அரசு முன் வந்திருக்கிறது. அப்படி இருந்தபோதும், மத்திய அரசு ஏன் இதைக் கைவிட வேண்டும் என்று தெரியவில்லை. தற்போது புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கும் மத்திய சர்க்கார் இதை ஆலோசிக்க வேண்டும். தமிழக அரசு இதைப்பற்றி மத்திய அரசிடம் வற்புறுத்தி நிச்சயமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக எந்தெந்த வகையில் மத்திய அரசின் ஆதரவைப் பெற முடியுமோ அவ்வகையிலெல்லாம் விரைவாகப் பெற வேண்டும். அப்போதுதான் சென்னை நகரின் நெரிசல் குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலமாக பலருக்கு நல்ல வேலை வாய்ப்பு வசதிகள் கிடைக்கும். பல ஆயிரக்கணக்கான மக்கள் வேலை பெற்று பயனடைவார்கள்.

அடுத்து, வீட்டு வசதித் துறையில் தமிழ் நாடுதான் மற்ற எல்லா மாநிலங்களையும்விட மிகச் சிறந்த முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஹட்கோ-விலிருந்து மிக அதிகமான பணம் பெற்று ஏழைகளுக்கு வீடு கட்டித் தருவதில் தமிழ் நாடு தலைசிறந்து விளங்குகிறது. ஆண்டொன்றுக்கு 5,000 வீடுகளைக் குறைந்தபட்சம் அவர்கள் கட்டிக் கொடுக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் ரூ. 25 கோடி செலவில் ஏழை எளியவர்களுக்கு மிக அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க இருக்கிறது. இன்னும் உலக வங்கி, ஹட்கோ போன்ற மற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று இன்னும் சிறப்பாக நல்ல வழியில் வீட்டு வசதியைப் பெருக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருப்பதை அனைவரும் பாராட்ட வேண்டும்.

மூன்றாவதாக, ரெவின்யூ போர்டுபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இதைக் கலைப்பதற்கான ஒரு திட்டம் இருக்கிறது. அநேகமாக ஒவ்வொரு அரசு வரும்போதும் இதுபோன்று ஒரு திட்டம் வரும். அதாவது ரெவின்யூ போர்டு கலைக்கப்படும் என்று திட்டம் வரும். ஆனால் ஒரு முறைகூட இது நிறைவேறுவது இல்லை. இந்தத் தடவையாவது இந்தத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்ற வேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரெவின்யூ போர்டு என்பது ஆங்கிலேயர் நம்மை அடிமைப்படுத்தியிருந்தபோது கொண்டு வரப்பட்டது. அன்றைக்கு அந்த ரெவின்யூ போர்டு எந்த நிலைமையில் இருந்ததோ அதே நிலைமையில்தான் இன்றும் இருக்கிறது. இதனால் அதிகமாகக் காலதாமதம் ஆகிறதே தவிர, வேறு ஒன்றும் நடைபெறுவதில்லை, காலதாமதத்திற்கு வழி வகுப்பதைத் தவிர, ரெவின்யூ போர்டால் எந்த விதமான உபயோகமும் இல்லை. எனவே அதைக் கலைத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்பிருந்த அரசுகளைப்போல் இதை வெறும் பேப்பரில் மட்டும் வைத்துக்கொண்டிருக்காமல், சீக்கிரமாகக் கலைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பேசி முடியும் வரை அவையின் நடவடிக்கை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : கோவர்த்தவேலன்—குப்புசாமி ஒன் செய்த இந்த போர்டுக்கு பதிலாக வேறு சில அம்சங்களைக் கொண்டுவந்து அதைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே



7-00 மணியாகிவிட்டதால் நான் இன்னும் அதிகமாகப் பேச விரும்பவில்லை. இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து அவை மீண்டும் நாளை மாலை 4-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-00)

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்க் கிழமை, 1980 பிப்ரவரி 5.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Village Co-operative Credit Societies.*

* 31. *Q.*—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of Village Co-operative Credit Societies in South Arcot District, which, in spite of their inclusion in the larger viable units, have not handed over their records ; and

(*b*) the action taken thereon ?

### கிராமக் கூட்டுறவு கடன் வழங்கு சங்கங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கிராமக் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்கள், தனித்தியங்கக்கூடிய பெரிய அளவிலான பிரிவுகளுடன் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், தங்களது ஆவணங்களை ஒப்படைக்காமலுள்ள சங்கங்கள் எத்தனை ?

(இ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்தில் பிட்லாபுரம் கிராமக் கூட்டுறவுச் சங்கம் வையின் யூனிட்டாக மாற்றப்பட்ட வடாலப்பாக்கம் கூட்டுறவுச் சங்கத்தோடு சேர்க்கப்பட்ட பிறகும், ஆவணங்களை ஒப்படைக்கவில்லை. ஆவணங்களை ஒப்படைக்க மத்திய வங்கி சிறிது காலம் அவகாசம் கொடுத்தும், இன்று வரையிலும் அந்த ஆவணங்கள் ஒப்படைக்கப்படாததால், கிராம மக்கள் பலனை அடைய முடியாத நிலை இருக்கிறது. இதற்குக் காரணம், பிட்லாபுரம் கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்கெனவே இருந்தவர்கள் பினாமிகளின் பேரில் கடன்களை வாங்கி திரும்பக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதும், கையாடல்கள் நடந்திருக்கின்றன என்பதும்தான் என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்பது மத்திய வங்கி அதிகாரிகள் அத்தனை பேருக்கும் தெரிந்தும், இது வரை மேலே தகவலை அனுப்பாமல் இருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா ? இதுபற்றி இரண்டு, மூன்று முறை இந்த அவையிலே கேள்விகளை எழுப்பியும் இதுவரையிலும் இந்த விஷயத்தில் அக்கறை செலுத்தவில்லை என்பதை ஏற்று ஏதாவது நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : என்னிடத்திலே இருக்கின்ற குறிப்புகளின்படி அந்தத் தகவல்கள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன தகவலின் அடிப்படையில், உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து அதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குள் நான் வசிக்கிறேன் என்ற காரணத்தால், இந்தச் சங்கடங்களைப் போக்குகிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னையும் பரிசீலனை செய்ய அனுப்ப முன்வருவார்களா ? அப்படி அனுப்பினால், பணியாற்றத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பை நானே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சார்பாக ஏற்றுக்கொள்ளுகிறேன். விரைவிலே அதிகாரிகளின் வாயிலாக தகவல்களைப் பெற்றுத் தருகிறேன்.



## *Panchayat Union Staff and Teachers' Co-operative Banks.*

* 32. *Q.*—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru S. MUTHUSWAMY) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state--

(*a*) whether there is any proposal with the Government to form Panchayat Union Staff and Teachers' Co-operative Banks in every Panchayat Union for the welfare of the teachers and Panchayat Union staff ; and

(*b*) if so, the details thereof ?

ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள்—ஆசிரியர்கள் கூட்டுறவு வங்கிகள்.

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஊழியர்களின் நலனை முன்னிட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள்—ஆசிரியர்கள் கூட்டுறவு வங்கிகளை உருவாக்கும் கருத்துருவேதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : ஊராட்சி ஒன்றியத்திலே பணியாற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள் சார்பில் கூட்டுறவுத் துறை அத்தகைய ஒரு வங்கியை உருவாக்க முன்வந்தால், ஆசிரியர்களும், ஏனைய அரசு ஊழியர்களும் நிதியுதவி பெற வசதியாக இருக்கும். இப்பொழுது ஏனைய வங்கிகளில்தான் நிதியுதவி பெற வேண்டியிருக்கிறது. இப்பொழுது பள்ளிகளில் கூட ஆசிரியர்கள், மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்ற சமயத்தில், இத்தகைய ஏற்பாட்டைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அரசு ஊழியர்கள் கூட்டுறவு முறையில் வங்கிகள் அமைத்துக்கொள்ள வேண்டுமென்றால், ரிசர்வ் வங்கியின் அனுமதி தேவைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் வெளியாரிடமிருந்து டெப்பாசிட்டுகளைப் பெறக்கூடாது என்று ரிசர்வ் வங்கி சமீபத்திலே ஆணை பிறப்பித்துள்ளது. இந்த இரண்டு காரணங்களால் இப்படிப்பட்ட ஊராட்சி மன்ற பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்கள் வங்கிகளை அமைப்பதிலே சிரமங்கள் இருக்கின்றன. திரு. ராமஸ் அவர்கள் கேட்டதைப் போல ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊழியர்களுக்கு உதவி செய்வதற்காக, தமிழ் நாட்டில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் 196 ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க அரசு தயாராக இருக்கிறது. அதற்காக 200 உறுப்பினர்கள் சேர்ந்தால் அல்லது சங்கம் ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளில் சங்கத்திலிருந்து 5 இலட்சம் ரூபாய் கடன் வழங்கும் நிலையை உருவாக்கினால், அந்த ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி அதன் மூலம், சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், தனியாருடைய வட்டிக் கடனில் சிக்காமல் இருக்கவும், வீடுகளைக் கட்டிக் கொள்ளவும், வீடுகளைப் புதுப்பித்துக்கொள்ளவும் குழந்தைகளின் படிப்புக்கு உதவவும், திருமணச் செலவுக்கான கடனைப் பெறவும் வழிவகை செய்யும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : 196 ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் செயல்படுவதாகவும், எஞ்சிய ஒன்றியங்களில் சங்கங்களை அமைக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு வங்கிகள் செயல்படுவதாக இருந்தால், ஊழியர்கள், ஆசிரியர்கள் அந்தந்த வங்கிகளில் கடன் பெற வாய்ப்பு ஏற்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், தக்கலை பகுதியிலே, என்.ஜி.ஜி.ஓ.-க்கள் ரிஜிஸ்டர்ட் சிட்டை நடத்திக்கொண்டிருந்தார்கள். அதில் ஊழியர்கள் மாதந்தோறும் சீட்டு கட்டி பணம் பெறுகிற நிலை இருந்தது. இப்போது அரசு அதைத் தடை செய்து விட்டதால், அதற்கும் வழியில்லை. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வழங்கிய உரிமைப்படி தக்கலையில் இருக்கக் கூடிய அரசு ஊழியர்கள், சட்டப்படி பதிவு செய்யப்பட்ட சிட்டை நடத்திக்கொண்



டிருந்தார்கள். தமிழக அரசு தடை செய்ததால், அந்த முறையில் சீட்டு நடத்துவதற்கு வசதியில்லை. ஆகவே கூட்டுறவு முறையிலே ஒன்று சேர்ந்து வங்கியையோ, சங்கத்தையோ வைக்கலாம் என்று சொன்னார்கள். இப்போது அதுவும் தடைசெய்யப்படுகிறது. ஆகவே நமது அரசு ரிசர்வ் வங்கியோடு தொடர்பு கொண்டு, அந்தக் கூட்டுறவு வங்கிகளை ஏற்படுத்த ரிசர்வ் வங்கியின் அனுமதியைப் பெற முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன ஆலோசனையை இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 196 ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதிலே ஆசிரியர்கள், ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள், அரசு ஊழியர்கள் ஆகிய மூன்று தரப்பினரும் இருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் ஓரிடத்திலிருந்து மாறுதல் பெற்று வேறு இடத்திற்குச் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அவர்களும் அங்கம் வகிப்பதனால், வசூல் செய்வதில் தகராறுகள் ஏற்பட்டு, அந்தக் கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்கு பலவீனங்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதில் ஊராட்சி ஒன்றிய ஊழியர்களோடு தனியார் துறை ஆசிரியர்களும் பங்கேற்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குறிப்பாக கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேட்க வேண்டும். கேள்வி நேரத்தில் சொற்பொழிவுகளை நடத்தக்கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அந்த வகையில் அந்தச் சங்கங்களைச் செயல்படுத்த வழிவகைகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் கூறிய வற்றுள் பல்வேறு ஆலோசனைகள் புதைந்திருப்பதால், தனிக் கேள்வி போடுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

## *Ex-Servicemen Association.*

* 33. *Q.*—Thiru C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the number of Ex-Servicemen in Tamil Nadu ;

(*b*) whether any Ex-Servicemen Association has sent petition to the Government for its recognition ; and

(*c*) if so, the action taken thereon ?

## முன்னாள் இராணுவத்தினர் சங்கம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டிலுள்ள முன்னாள் இராணுவத்தினரின் எண்ணிக்கை எத்தனை ?

(இ) முன்னாள் இராணுவத்தினர் சங்கம் ஏதேனும் அரசின் அங்கீகாரம் கோரி மனு அனுப்பியுள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** (அ) சுமார் 57,320.

(இ) கீழ்க்கண்ட முன்னாள் இராணுவத்தினர் சங்கங்கள் அரசின் அங்கீகாரம் கோரி மனுக்கள் அனுப்பின—

(1) தமிழ் நாடு மாநில முன்னாள் இராணுவத்தினர் சங்கம், மதுரை;

(2) இந்திய முன்னாள் இராணுவத்தினர் சங்கம், மதுரை;

(3) வடஆற்காடு மாவட்ட ஓய்வூதியம் பெறும் படை வீரர்கள் சங்கம், வேலூர்.

(உ) மாநில அளவில் முன்னாள் இராணுவத்தினர் நல இயக்கமும், மாவட்ட அளவில் மாவட்ட முப்படை வாரியங்களும் முன்னாள் இராணுவத்தினரின் நலனுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் முன்னாள் இராணுவத்தினர் சங்கங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கத் தேவையில்லை என்று முடிவெடுக்கப்பட்டது.



(பிற்பகல் 4.10)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இதிலே மாவட்ட அளவிலே ஒரு சங்கம் அனுமதி கோரியிருக்கிறது. மாநில அளவில் இரண்டு சங்கங்கள் அனுமதி கோரியிருக்கின்றன. மாநில அளவிலே இருக்கின்ற ஏதேனும் ஒரு சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுத்தால், அந்தச் சங்கத்தினுடைய பிரதிநிதிகள் அரசிடம் உடனுக்குடன் தொடர்பு கொண்டு, அதிகாரபூர்வமான பேச்சு வார்த்தைகள் நடத்தி தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். இப்போதைய நிலைமையை மாற்றியமைத்து, ஒரு பெரிய சங்கத்திற்கு அங்கீகாரம் அளிப்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** தமிழ்நாட்டிலே மொத்தம் 44 முன்னாள் ராணுவத்தினர் சங்கங்கள் இருக்கின்றன. இந்த 44 முன்னாள் ராணுவத்தினர் சங்கங்களில் 3 சங்கங்கள் இன்றையதினம் தங்களை அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி மனு அனுப்பியிருக்கிறார்கள். இந்த மூன்று முன்னாள் ராணுவத்தினர் சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுத்தால், மீதியுள்ள 41 சங்கங்கள் நிலைமை என்ன ஆகும் என்பதை நாம் உத்தேசிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இதைப்பற்றி மாநில இயக்குநரிடம் கேட்ட நேரத்தில், இந்தச் சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டியதில்லை என்ற கருத்தை வெளிப்படுத்தியிருப்பதால், இந்தச் சங்கங்களுக்கு அங்கீகாரம் மறுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்த முன்னாள் ராணுவத்தினருடைய நலன்களைப் பற்றி விவாதிப்பதற்காக ஒரு Advisory Committee அமைக்கப்பட்டு அதில் சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மையா ? அந்த அடிப்படையிலே மேலவையிலே உள்ள உறுப்பினர் இடம் நிரப்பப்படாமல் காலியாக இருக்கிறதா ? அப்படி இருப்பது உண்மை என்றால், அந்த இடத்தை அரசு பூர்த்தி செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** அப்பேர்ப்பட்ட ஒரு குழு இன்றையதினம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலவையிலே உள்ள உறுப்பினர் ஒருவரும் அந்தக் குழுவிலே உறுப்பினராக இல்லை. மேலவை உறுப்பினர் அதில் இடம் பெறுவதற்கு விதிமுறைகள் இருக்குமென்றால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்து, மேலவை உறுப்பினர் ஒருவரை அந்தக் குழுவிலே உறுப்பினராக நியமிக்க அரசு நிச்சயமாகப் பின் வாங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1980 பிப்ரவரி 5

Thiru G. VASANTHA PAI : Sir, prior to the nationalisation of bus services, the Ex-Servicemen's Co-operative Societies were running buses throughout the State. Have the Government found an alternative by which the means of those Co-operative Societies could be met? Have the Government taken any steps to see that their interests are safeguarded in the transport field also?

**மாண்புமிகு திரு. க. உசேர. எட்மண்ட்:** பஸ்கள் தேசியமயமாக்கப்படுகின்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதற்கு முன், முன்னாள் ராணுவத்தினர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொண்டு வேறு பெருந்து வழித் தடங்களில் பேருந்துகளை கூட்டுறவுத் துறையிலே விடுகின்ற நிலைமை இருந்து வந்தது. நாளாவட்டத்திலே தேசியமயமாக்குகின்ற நிலைமை ஏற்பட்டதால், சில மாவட்டங்களில் பேருந்துகள் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. என்றாலும் சில மாவட்டங்களில் முன்னாள் ராணுவத் துறையைச் சார்ந்தவர்கள் சங்கங்கள் அமைத்துக்கொண்டு, அவர்கள் இன்னும் பேருந்துகளை ஓட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** சென்னை நகரத்திலே நடைபெறுகின்ற திருட்டுக்கள், கொள்ளைகள், கொலைகள் இவைகளைத் தடுக்க இரவு ரோந்துக்கு முன்னாள் ராணுவத்தினரைப் பயன்படுத்தலாம் என்று அரசு இப்போது ஒரு புதிய முயற்சியிலே ஈடுபட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி அவர்களை வேலைக்கு எடுக்கும்போது, அவர்களை இந்தச் சங்கங்களின் மூலமாக எடுக்கிறார்களா? இந்தத் திட்டத்தை சென்னை நகருக்கு மட்டுமல்லாமல், பிற பெருநகரங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உசேர. எட்மண்ட்:** சில இடங்களிலே ஏற்படுகின்ற கொலை, கொள்ளை போன்ற குற்றங்களைத் தடுப்பதற்காக ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற காவல் துறையினரோடு சேர்ந்து அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில், இந்த முன்னாள் ராணுவத்தினரை இந்தத் துறையிலே ஈடுபடுத்துவது என்று இந்த அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்து அறிவித்திருக்கிறது. இந்தத் திட்டம் சென்னை நகரத்திற்கு மாத்திரம்தானா, தமிழ்நாட்டிலேயிருக்கும் மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா, இந்த வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள் இந்த முன்னாள் ராணுவத்தின் சங்கம் மூலமாக எடுக்கப்படுவார்களா என்பது பற்றியெல்லாம் அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.



1930 பிப்ரவரி 5]

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாவட்டங்களில் ராணுவத்தினர் நல கமிட்டி என்று இருக்கிறது. அது மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அதிகாரிகளைக் கொண்டும், சில மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டும், அதாவது மாவட்ட கலெக்டரால் நியமிக்கப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகள் கொண்டும் இயங்குகிறது. அந்தக் கமிட்டியில் ராணுவத்தினருடைய பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஒன்று அல்லது இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கலெக்டர் அவர்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அந்தக் குழுவை கூட்டி விவாதிக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அந்தந்த மாவட்டங்களிலே உள்ள எல்லா முன்னாள் ராணுவத்தினரையும் உறுப்பினர்களாக, செயற்குழு உறுப்பினர்களாக, நிர்வாகக் குழுவிலும், மற்றவர்களையெல்லாம் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாகவும் ஆக்கி வைக்கிற அமைப்பாகச் செய்ய அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. க. உசேர. எட்மண்ட்:** முன்னாள் ராணுவத்தினர் நலன்களைப் பேணுவதற்கு, அவர்களுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்வதற்கு, ஏற்கெனவே மாநில மட்டத்தில் ஒரு குழு செயல்படுகிறது. அதிலே ஓய்வு பெற்ற முன்னாள் ராணுவ அதிகாரிகள் பணியாற்றுகின்ற நிலைமை இருக்கிறது. இன்றையதினம் நம் நாட்டிலே அது இருந்து வருகிறது. மாவட்ட ரீதியாக இருக்கின்ற முன்னாள் ராணுவத்தினர் நலனைப் பாதுகாப்பதற்கு என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே எல்லாக் குழுக்களும் செயல்படுகின்றன என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அந்தக் குழுக்களிலே சரியாக ராணுவத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்றால், அதை வேண்டுமென்றால் முறைப்படுத்தி அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் சங்கம் மற்றவைகள் எல்லாம் இருக்கின்றன. எல்லா ராணுவத்தினரும் உறுப்பினராக இருப்பதன் மூலமாகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் ராணுவத்தினருக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய முடியும் என்ற கட்டாயம் இப்போதைக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இருக்கின்ற நிர்வாகக் கமிட்டியில் பேரவை, மேலவை உறுப்பினர்கள் இரண்டொரு பேர்கள் இருக்கிறார்கள். அதிகாரிகள் மட்டும் 20 பேர்கள் இந்தக் கமிட்டியிலே இருக்கிறார்கள். இந்தக் கமிட்டியிலே கூடுதலாக ராணுவத்தினர் இருந்தால், அவர்களின் குறைகளை எடுத்துச் சொல்ல சாதகமாக இருக்கும். அந்த முறையில் இருப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாவட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கின்ற குழு என்றாலும் சரி, மாநில அளவிலே இருக்கின்ற குழுவாக இருந்தாலும் சரி, எந்தக் குழுவாக இருந்தாலும், அந்தக் குழுக்களிலே அங்கம் வகிப்பவர்கள் பெரும்பாலோர் முன்னாள் ராணுவத்தின ராக இருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல, அப்படி மாநில ரீதியாகச் செயல்படுகின்ற குழுவில் இப்போது தற்சமயம் முப்படையிலே அதிகாரிகளாக இருந்தவர்கள், முன்னாள் ராணுவத்தினரும் இருக்கிறார்கள். அவர்கள் அங்கு ஆலோசனைகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முன்னாள் ராணு வத்தினருக்கு இருக்கின்ற நியாயமான குறைகளை எடுத்துச் சொல்லி அந்தக் குழுவிலே தீர்வு காணுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்கிறார்கள். அதற்கு இப்போது பணியாற்றுகின்ற ராணுவத்தினரும், அதிகாரிகளுமே போதுமானது என்று அரசு கருதுகிறது.

திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்: அரசு வேலை வாய்ப்புகள் கொடுப்பதில் முன்னாள் ராணுவத்தினரின் குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு வேலை தரப்பட்டிருக்கிறது. இந்த உரிமை ரத்து செய்யப்பட்டு அவர் களுடைய குழந்தைகளில் யாருக்கேனும் ஒருவருக்கு மட்டும் முன்னுரிமை தரலாம் என்று ஆணை வந்திருக்கிறது. அவர்களுடைய குழந்தைகள் அனைவருக்குமே அந்த முன்னுரிமையை அளிக்குமாறு அரசு ஆணையிட பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு அங்கத்தினர் எழுப்பிய பிரச்சினைபற்றி இப்போது என்னிடம் எந்தவிதமான புள்ளி விவரமும் இல்லை. ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அப்பேர்ப்பட்ட குறைகள் இருக்குமானால், அதைப்பற்றி குழுவிலே விவாதித்து அதற்கான முடிவுகளை அரசு எடுக்கும்.

## Youth Service Corps.

*34. Q.—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government for giving another opportunity to the discharged personnel of the Youth Service Corps who, for various reasons could not sit for the previous Examination held by the Tamil Nadu Public Service Commission specially for them and some other special candidates; and

(*b*) if so, when that examination will be held?



## இளைஞர் அணியினர்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இளைஞர் அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட நபர்களுக்கும், மற்ற சிறப்புவகைப் பிரிவினருக்கும் தனியாக கடந்த முறை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் நடத்தப்பட்ட தேர்வினை பல் வேறு காரணங்களை முன்னிட்டு, எழுத இயலாமல் போனவர்களில், இளைஞர் அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட நபர்களுக்கு மீண்டும் தேர்வு எழுத வாய்ப் பளிக்கின்ற வகையில் அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அத்தேர்வு எப்போது நடைபெறும்?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: இதற்கு முன்னால் இளைஞர் அணியிலிருந்து வேலைக்கு வந்தவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக 1977 டிசம்பர் மாதத்தில் ஒரு தேர்வாணைக் குழுத் தேர்வு நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற வர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட்டுவிட்டதா? அப்படிக் கொடுக் கப்படவில்லை என்றால், இன்னும் எத்தனை பேருக்குக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: எல்லோருக்கும் இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை. வேலை கிடைக்காமல் இன்னும் இருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கை எத்தனை என்ற புள்ளிவிவரம் என்னிடம் இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: இளைஞர் அணியில் சேர்ந்தவர்களில் தேர்வு எழுதாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்காமல் இருக் கலாம். தேர்வாணைக் குழுத் தேர்வு எழுதி, வெற்றித் தேர்வு எழுதி தேர்வு பெற்றவர்கள் பற்றிய விவரம், எத்தனை பேர் இருக்கின்றனர் என்ற புள்ளிவிவரம் இல்லையென்றாலும், அத்தனை பேர்களுக்கும் வேலை கொடுக்க அரசு முன் வருமா?

[1980 பிப்ரவரி 5

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர் களுக்கு சில விதிகள் தெரியும். தேர்வாணைக் குழுத் தேர்விலே வெற்றி பெற்றவர்களுக்கு, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும்கூட, உடனடி யாக வேலை கிடைப்பதில்லை. அவ்வப்போது ஏற்படுகின்ற வேலை வாய்ப்பு களில்தான் அவர்களுக்கு வேலை கொடுப்பது என்று விதி இருக்கிறது. அப்படி நிரப்புவதுதான் வழக்கம். அந்த அடிப்படையிலேதான் ஒரு விசேஷத் தேர்வு நடத்தப்பட்டு, அதிலே தேர்ச்சி பெற்ற இந்த இளைஞர் அணியிலே உள்ளவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடம் தற்போது இல்லை. என்றாலும்கூட, அதற்கான காலி இடங்கள் வரும்போது, அவர் களுக்கு அந்த வேலைகளைக் கொடுப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்றவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் 1977 ஆம் ஆண்டு தேர்வு எழுதி, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிவு வெளியாகி, 1980 ஆம் ஆண்டுவரை அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? பொது வாக தேர்வாணைக் குழுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்களுக்கு ஓராண்டுக் குள்ளாக வேலை கிடைத்து வந்தது. அப்படியில்லாமல், மூன்று ஆண்டு களாக வேலை கொடுக்காமல் இருக்கக் காரணம், அந்தக் கோப்புகள் கோட்டையிலே தூங்குவதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** 1977 ஆம் ஆண்டு தேர்வாணை குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இன்னும் வேலையில் அமர்த்தப்பட வில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களா அல்லது இளைஞர் அணியைச் சேரா மற்றவர்களா என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லவில்லை ஆகவே அதற்கான விளக்கத்தை இப்போது சொல்ல முடியவில்லை இளைஞர் அணியைச் சேராத மற்றவர்கள் வேலை இல்லாமல் இருந்தால் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதில் இளைஞர் அணியையும் சேர்ந் வர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களும் இருக்கிறார்கள். மூன்று ஆண்டு களாகியும், அவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்பதுதான் என்னுடை



980 பிப்ரவரி 5]

கேள்வி. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைப் பரிசீலித்து, தேர் வாணைக் குழுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்களுக்கு வேலை கொடுக்க, நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** 1977 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இளைஞர் அணியைச் சேர்ந்த வர்களாக இருந்தால், அவர்களைப்பற்றி இந்தத் துறை பரிசீலிக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** எந்த வயது வரை 'இளைஞர்கள்' என்று குறிப்பிடுவார்கள்? டில்லியாவில் அதற்கு 30 வயது என்று வரையறை இருக்கிறது. அப்படி ஒரு வரையறையை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** தமிழ் நாட்டிலே 30 வயது என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன்:** இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள் தேர்வுகளில் தேர்வு பெற்ற பிறகும், இன்னும் வேலை பெறாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் அரசில் வேலை பார்த்திருப்பதால், இனிமேல் செய்யப்படும் நியமனங்களில் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, அதற்குப் பிறகு மற்றவர்களை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பது என்பது இல்லை. இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களுக்கு, தேர் வாணைக் குழு மூலமாக தனிப்பட்ட தேர்வு நடத்தப்படுகிறது. அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட முறையில் இடம் ஒதுக்கப்படு கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 1977 டிசம்பர் 28 ஆம் தேதி சிறப்புத் தேர் வாணைக் குழுத் தேர்வு நடைபெற்றது. அதில் வெற்றி பெற்றவர்களின் முடிவு 1978 ஏப்ரல் மாதம் 2 ஆம் தேதி அறிவிக்கப்பட்டது. அந்தத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் பலருக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. உதாரணத்திற்கு எண். 2334, எஸ். கார்த்திகேயன், பி.காம். என்பவருக்கு வேலை கிடைக்கவில்லை. அவர் ஏற்கெனவே 5 ஆண்டுகள் வேலை பார்த் திருக்கிறார். அவர் இப்போது 30 வயதைத் தாண்டும் நிலைமையில் இருக் கிறார். ஆகவே அவருக்கு இனிமேல் அரசாங்க வேலையில்லை என்று சொல்லும் நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே தேர்வாணைக் குழுத் தேர்வு எழுதும்போது 30 வயதைத் தாண்டாத அத்தனை பேர்களுக்கும், இப்போது எத்தனை வயதானாலும் வேலை உண்டு என்று உறுதி சொல்ல வேண்டும்.

மேலும் பப்ளிக் செக்டார் நிறுவனங்களில்—அரசு மேற்பார்வை செய்யும் தொழில் நிறுவனங்களில் இவர்களை நியமிக்காமல், ஆங்காங்கே உள்ள குழுக்கள் தனியாக நியமித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த இடங்களில் எல்லாம் இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்டுள்ள உறுதிமொழியைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

*Prisoners treated in Ceptral Prison, Madras.*

*35. Q.—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) the number of Residential Doctors working in the Hospital in Central Prison, Madras ; and

(*b*) the month-wise average number of prisoners who were treated as in-patients and out-patients during **1977** and **1978 ?**

*சென்னை மத்திய சிறையில் சிகிச்சை பெற்ற சிறைக் கைதிகள்.*

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மத்திய சிறையில் உள்ள மருத்துவ மனையில் பணியாற்றுகின்ற நிரந்தர (Residential) மருத்துவர்கள் எத்தனை பேர்?

(இ) 1977 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில், ஒவ்வொரு மாதமும் சராசரியாக தங்கு நோயாளிகளாகவும் (In-patients) வெளி நோயாளிகளாகவும் (Out-patients ) சிகிச்சை பெற்ற சிறைக் கைதிகள் எத்தனை பேர் ?

The Hon. Thiru K. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, Answer : (*a*) Two doctors ;

(*b*) Monthly average number of prisoners treated as in-patients ... 1,111 in 1977 and 1,025 in 1978

திரு. க. இராமமூர்த்தி: மத்திய சிறைச்சாலை சாதாரணமாக நிரம்பி வழிந்து கொண்டிருக்கும். பல நேரங்களில் அரசியல் போராட்டங்கள் விளைவாக அளவிற்கு அதிகமாக நிரம்பி வழிந்துகொண்டிருக்கும். இந்த நிலையில் அங்கே இரண்டு மருத்துவர்கள் போதாது என்பதை அரசு உணரு





கிறதா? பல நேரங்களில் இன்-பேஷண்ட்டாக இருப்பவர்கள், புற நோயாளிகள் (அவுட்-பேஷன்ட்ஸ்) என்ற வகையிலே, கால் முறிவு, கை முறிவு போன்றவைகள் ஏற்பட்டு, அவசரச் சிகிச்சை தேவைப்படும்போது, குறிப்பிட்ட நாட்களிலேதான் மருத்துவர்கள் பரிசோதிப்பார்கள், அதற்கு இடையிலே பார்க்க வேண்டுமென்றால், தலைமை அதிகாரிகள் அனுமதி வேண்டுமென்று சுற்று வழித் திட்டம் வைத்திருப்பதால், முறையாக உடனடியாக சிகிச்சை கிடைக்காமல் போகிறது. அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? இது என்னுடைய அனுபவபூர்வமாகக் கண்டஒன்று என்று சொல்லி, இதைத் தடுக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : As and when there is a heavy influx of agitational prisoners, if I may use a phrase like that, naturally the Government and the medical administration will devise such measures as to meet the extraordinary needs of the prisoners during those extraordinary days. But, normally, in the year 1977, 1,111 prisoners were treated in the Prison Hospital itself as in-patients and 9,075 prisoners were treated as out-patients. In the year 1978, 1,025 prisoners were treated as in-patients and 8,815 prisoners were treated as out-patients. The extraordinary circumstances or contingencies that have been described by the hon. Member will be borne in mind and certainly they will be met adequately by the Government.

திரு. க. இராமமூர்த்தி: மத்திய சிறைச்சாலையில் பணியாற்றுகிற மருத்துவர்கள், அந்த சிறை அதிகாரிகளுக்கும், அவர்களுடைய இல்லங்களுக்கும் அதிகாரபூர்வமற்ற முறையில் மருத்துவர்களாகச் செயல்படுவதால், அந்தச் சலுகையை வைத்துக்கொண்டு, சிறைக் கைதிகளுக்கு சரியான முறையில் மருத்துவ சிகிச்சை செய்யாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே சிறையில் பணியாற்றும் இரண்டு மருத்துவர்களும் சிறை அதிகாரிகள் இல்லங்களுக்குச் செல்லும் மருத்துவர்களாக இருக்கக் கூடாது என்று தனி ஆணை பிறப்பிக்கப்படுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : This is an indictment against the Jail officials as well as the Medical Officers of the Central Prison, Madras. If this complaint is recorded by putting it in writing and given to me, necessary investigation will be made and if the allegations are proved, certainly the necessary remedial measures also will be taken by the Government immediately.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: சென்னை மத்திய சிறைச்சாலையிலுள்ள மருத்துவ மனையில் இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது போதாதென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். இரண்டு டாக்டர்கள் இருந்தாலும், இரவு நேரங்களில் அங்கே டாக்டர்கள் இருப்பதில்லை. பொதுவாக உற்றார் உறவினர்களைப் பிரிந்துள்ள குற்றவாளிகள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும்போது, இரவு நேரங்களில் மாரடைப்பு போன்ற நோய்கள் வரும்போது, அவர்கள் உடனடியாக மருத்துவர்களைச் சந்தித்து, டிரிட்மென்ட் எடுக்க வசதிகள் அங்கே இல்லை. எனவே அங்கே 'நைட் டியூட்டி டாக்டர்' ஒருவரை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : The suggestion will be borne in mind and will be examined duly.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister be pleased to enlighten us on the percentage of the patients to the total strength in the prison ?

The Hon. Thiru K. NARAYANASWAMY : I have no mathematical material or statistics before me and I require notice.

திரு. வே. தங்கப்பாண்டியன்: சென்னை மத்திய சிறைச்சாலையில் மட்டும் இரண்டு மருத்துவர்கள் இருக்கிறார்களா அல்லது தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் இரண்டு மருத்துவர்கள்தான் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னது போன்று, இரவு நேரங்களில் சிறைக் கைதிகளுக்கு ஏற்படுகிற நோயினைக் கவனிக்க விசேஷமாக டாக்டர்கள் நியமிக்கப்படவில்லை. இனிமேல் இரவு நேரங்களில் கவனிக்க டாக்டர் நியமிக்கப் படுவார்களென்று கூறப்பட்டிருக்கிறது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் படுமா?

The Hon. Thiru K. NARAYANASWAMY : So far as the recommendation of the Ismail Commission is concerned, that has been considered by the Prison Reforms Commission and if a separate question is put, I will be in a position to give the answer. So far as the districts are concerned, the District Medical Officer is the chief Medical officer for the prison hospitals also. Two of his medical subordinates are appointed to the prison hospitals and they are in charge of the actual administration on the medical side.





(பிற்பகல் 4-30)

டாக்டர் இரா. சனார்த்தனம்: எனக்கும் சிறை அனுபவம் உண்டு. (சிரிப்பு). வெளியில் மருத்துவமனை இருக்கிற காரணத்தால் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மற்றவர்களுக்கு இல்லையென்று நினைத்துக் கொண்டீர்களா ?

டாக்டர் இரா. சனார்த்தனம்: பெரும்பாலும் சிறையை விட்டுச் செல்லுவதற்கும் அது ஒரு சந்தர்ப்பமாக இருக்கிறது. ஆகவே மிக முக்கியத் தேவையான, அத்தியாவசியமான மருத்துவ வசதிகள் அனைத்தையும் அங்கே அரசு செய்ய முன்வருமா ?

The Hon Thiru K. NARAYANASWAMY : I presume that the present medical administration inside the prison is adequate to meet such needs as have been described by the hon. Member.

Thiru A. R. DAMODARAN : Out of the more than 1100 people and 1,025 people treated as in-patients during 1977 and 1978 respectively, may I know if there were any fatal cases ?

The Hon. Thiru K. NARAYANASWAMY : I have no information. I seek notice.

## *Integration of Sub-Magistrates and Judicial Second-Class Magistrates.*

* 36. *Q.*—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) the number of Sub-Magistrates and Judicial Second Class Magistrates recruited from (i) the Bar and (ii) among the Ministerial Servants, from 1st January 1973 to 30th April 1979 ; and

(*b*) the position of the two categories after the proposed integration of the two Judicial Services is implemented ?

உதவி மாஜிஸ்டிரேட்டுகளையும் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளையும் ஒன்றாக இணைத்தல்.

திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) வழக்கறிஞர்களிடையேயிருந்தும், அமைச்சப் பணியாளர் களிடையேயிருந்தும் 1—1—1973 முதல் 30—4—1979 வரையில் நியமிக்கப் பட்ட உதவி மாஜிஸ்டிரேட்டுகள், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டி ரேட்டுகள் ஆகியோரின் எண்ணிக்கை யாது ?

(இ) இவ்விரு நீதித்துறை பணிகளையும் ஒன்றாக இணைக்க வேண்டு மென்ற கருத்து செயலுக்கு வந்த பின்னர், அவ்விரு வகையினரின் நிலை என்ன ?

The Hon. Thiru K. NARAYANASWAMY : (*a*) (i) The number of Sub-Magistrates now designated as Judicial Second Class Magistrates recruited from the services (from the Ministerial Services) for the period from 1st January 1973 to 30th April 1979 is 100 ;

(ii) The number of Judicial Second-Class Magistrates recruited from the Bar during the above period is 'Nil' ;

(*b*) It has been proposed that after integration, the proportion of appointment from among the members of the Bar and the Services may be 2:1 respectively.

திரு. ச. எஸ். வெங்கடேசன்: நீதித் துறையிலுள்ள இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளில் பலர் 7 வருடம், 8 வருடமாகப் பணியாற்றியும் இன்னும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. இது அரசுக்குத் தெரியுமா? அப்படி யானால் அவர்களுடைய நிலை என்ன? அவர்கள் எப்போது நிரந்தரமாக்கப் படுவார்கள் ?

The Hon. Thiru K. NARAYANASWAMY : The Government are acutely aware of the situation. The Government are taking adequate steps as early as possible for the proper integration of the Magisterial service and the Judicial service.

திரு. ச. எஸ். வெங்கடேசன்: எல்லா இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு களையும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாக ஆக்கி 1976 ஆம் ஆண்டிலேயே ஓர் உத்தரவு போடப்பட்டது. அந்த இன்டகிரேஷன் உத்தரவு இதுவரை



நிறைவேற்றப்படவில்லை. வெகு விரைவில், காலந்தாழ்த்தாமல், அதை நிறைவேற்ற வேண்டும். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்களா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY : The Government will do it as early as possible.

### *Office of Deputy Inspector of Schools, Kumaratchi.*

* 37. *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether any representation has been received by the Government that the Office of Deputy Inspector of Schools now functioning at Kumaratchi, Chidambaram taluk, South Arcot district, should be shifted to Chidambaram in the interest of teachers and the public ; and

(*b*) if so, the action taken thereon ?

பள்ளித்துணை ஆய்வாளர் அலுவலகம், குமராட்சி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்திலுள்ள குமராட்சி என்ற ஊரில் அமைந்துள்ள பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகத்தை, ஆசிரியர்கள் மற்றும் பொது மக்கள் நலனை முன்னிட்டு சிதம்பரத்திற்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட்டு அவரால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்ததில் பல்வேறு நிருவாகக் காரணங்களைக் கருத்திற்கொண்டு அவ்வலுவலகம் குமராட்சி மைய சமையக் கூடக் கட்டிடத்திலேயே தொடர்ந்து இருப்பது நல்லது என முடிவு செய்யப்பட் டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்தப் பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகம் சிதம்பரத்தில் இருந்தால், மிகவும் நல்லது. மிகப் பெரும்பாலான பள்ளிகள் சிதம்பரம் நகரிலேயேதான் இருக்கின்றன. ஆகவே இந்த

அலுவலகம் சிதம்பரத்திலேயே அமைக்கப்பட்டால், அரசுக்கு ஏற்படக்கூடிய நிர்வாகச் செலவு குறையும் என்று நடைமுறையில் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றிக் கொடுத்துள்ள மனுவிலே கோரிக்கையாக அது சொல்லப்பட்டிருக்கிறது. அரசுக்கு நிர்வாக ரீதியாக வசதியாகவும் இருக்கும். நிதிச் செலவும் குறையும். இப்படிப்பட்ட ஒரு யோசனை அல்லது கோரிக்கை அங்குள்ளவர்களிடமிருந்து வந்திருக்கும்போது, கல்வித் துறையிலிருந்து இதற்கு நேர் மாறான குறிப்பு அரசுக்கு வந்திருந்தாலும் கூட, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, இதை மறுபரிசிலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மைய சமையற்கூடம் நன்கு செயல்பட பள்ளித் துணை ஆய்வாளரின் நேரடி மேற்பார்வை மிக மிக அவசியம். இது ஒரு காரணம். இன்னொன்று: அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் மைய சமையற்கூடம் இப்போது இருக்கிறது. ஆகவே வாடகை தர வேண்டிய அவசியமில்லை. இன்னொன்று, மைய சமையற் கூட ஆய்வாளர் மற்றும் பள்ளித் துணை ஆய்வாளர் ஆகியோரால் காட்டுமன்னார் கோயிலுள்ள அரசாங்க துணைக் கருவூலத்திலிருந்து பணம் எடுக்க வசதியாக இருக்கிறது. இந்த மூன்று காரணங்களால் பள்ளித் துறை ஆய்வாளர் அலுவலகம் குமராட்சியிலேயே இருப்பது சிறந்தது என்று கருதப்படுகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** குமராட்சி ஒன்றியப் பள்ளிகளை மேற்பார்வையிட பள்ளித் துணை ஆய்வாளர்கள் தனியாக விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்கிற செய்தி வந்துகொண்டிருக்கிறது. அப்போதாவது இந்த அலுவலகத்தை சிதம்பரத்திற்குக் கொண்டு வருவதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசிலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்போது என்ன நடக்கும் என்பதைப்பற்றி இப்போதே நான் சொல்ல முடியாது. இப்போதுள்ள நிலைமையில் நாம் அதை மாற்றுவதற்கில்லை.

## *Non-payment of Salaries to Teachers.*

*38 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether any complaint has been received by the Government that some of the teachers of Gandhi Primary School of Kelaiyappillaiyur village, Kadaiyam Circle, Tirunelveli South Educational District were not paid their salaries for nine months; and

**(*b*)** if so, the action taken thereon ?



## ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாமை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென் கல்வி மாவட்டம், கடையம் சரகம், கேளையாப்பிள்ளையூரில் உள்ள காந்தி ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களில் சிலருக்கு ஒன்பது மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்று புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) மாணவர்கள் எண்ணிக்கைக் குறைவின் காரணமாக இப்பள்ளி ஆசிரியர்கள் சிலருக்கு ஊதியம் அளிக்கப்படவில்லை. எனவே, இப்பள்ளியில் இருந்த உபரியான இரு ஆசிரியர் பணியிடங்களை வேறு தேவையான பள்ளிக்கு மாற்றம் செய்யப்பட்டு அப்பணியிடங்களில் பணிபுரிந்த இரு ஆசிரியர்களும் வேலையில் 3—7—1978 முதல் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கேளையாப்பிள்ளையூரிலுள்ள காந்தி ஆரம்பப் பள்ளியில் இரு ஆசிரியர்கள், மாணவர்கள் எண்ணிக்கைக் குறைவினால் அதிகமான ஆசிரியர்கள் என்று கருதப்பட்டு, அந்த இரு பணியிடங்களுக்கும் அவர்களுக்குரிய 9 மாதச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. இப்போது வேறு பள்ளிக்கு அவர்களை அனுப்பியிருக்கிறார்கள். முன்னால் வேலை பார்த்த 9 மாதச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று இப்போது முறையீடு வந்திருக்கிறது. அரசு இதைப் பரிசிலனை செய்து கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதுமாதிரி ஏதாவது வர வேண்டுமென்றால், அதைத் தர வேண்டிய பொறுப்பு பள்ளி நிர்வாகத்திற்குத் தான் உண்டு. அரசுக்கு இல்லை.

**திரு. பா.ரா. தாமஸ் :** கல்வித் துறையில் 1976 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரு பள்ளியிலே மாணவர்கள் எண்ணிக்கை குறைந்தால் அது ஆசிரியருடைய பொறுப்பல்ல. ஆகவே இழப்பு எப்படி ஆசிரியருக்கு கல்வித் துறையே சம்பளம் வழங்கும் முறையைப் பின்பற்றி வந்துகொண்டிருக்கிறது. வேலையிழப்புக்கு அந்த இரண்டு ஆசிரியர்களும் காரணமாக இல்லாமல் இருக்கும்போது, சில நிர்வாகங்கள் பழி வாங்கும் நடவடிக்கையாக இப்படிப்பட்ட

செயல்களைச் செய்துகொண்டிருக்கும்போது, இதுபோன்ற நிலைமையை எண்ணிப்பார்த்து பரிசிலனை செய்து, அந்த ஆசிரியர்களுக்கு ஊதியத்தை வழங்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இன்றைக்கு அவர்களுக்கு வேலை தந்திருப்பது கூட அவர்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் தான். அதற்காக இப்போதுள்ள விதி முறைக்கு மாறாக, மாணவர் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், பொதுமக்கள் பணத்திலிருந்து அவர்களுக்கு நாம் சம்பளம் வழங்க வேண்டும் என்பது இப்போதுள்ள நடைமுறைக்கு ஒத்து வராது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கல்லூரிகள் ஆகட்டும், பள்ளிகள் ஆகட்டும், எங்காவது மாணவர்கள் எண்ணிக்கை குறைந்தால் அல்லது ஆசிரியர்கள் அதிகமாக இருந்தால், எல்லா ஆசிரியர்களுக்கும் அரசு சம்பளம் கொடுத்து வருகிறது. இது கடந்த 5, 6 ஆண்டுகளாகப் பின்பற்றப்படுகிறது. நடைமுறையிலும் இருந்து வருகிறது. உதாரணத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள காட்டாத்துறை என்ற ஊரிலுள்ள ஒரு தனியார் பள்ளியில் 8 ஆசிரியர்கள் அதிகமாக இருந்துகொண்டு சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வேறு பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள். சேளையாப்பிள்ளையூரிலுள்ள காந்தி துவக்கப் பள்ளியைப் பொறுத்தவரை, அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள ஏதாவது தகராறினால் அந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லையோ என்று நான் எண்ணுகிறேன். இல்லை, வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா ? இதுபற்றி அரசுக்கு ஏதாவது தெரியுமா ? அதிகமாக இருக்கின்ற ஆசிரியர்களுக்கு மக்களுடைய வரிப்பணத்திலிருந்து சம்பளம் வழங்குவது அரசின் கொள்கை அல்ல என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இருப்பினும் இதைத் தனியாக ஆராய்ந்து, தக்க பரிகாரம் காண மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசு நிதியிலிருந்து அவர்களுக்குச் சம்பளம் தர முடியாது. அவர்கள் வேலை செய்ததற்கு அந்த உரிமையைப் பெற வேண்டுமென்றால், நிர்வாகத்திலிருந்து அவர்களுடைய நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஒரு பள்ளியிலே உள்ள ஆசிரியர் மாணவர் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து, அந்த நியதியை ஒழுங்காகக் கடைப்பிடித்து, சம்பளம் வழங்க வேண்டிய பொறுப்பு பள்ளித் துணை ஆய்வாள



ருடையது. எப்போது மாணவர்கள் ஆசிரியர்கள் எண்ணிக்கை முரண்பட்டுவிட்டதோ, அப்போதே வேறு ஒரு பள்ளிக்கு அதிகமாக இருந்த ஆசிரியர்களை பள்ளித் துணை ஆய்வாளர் மாற்றியிருக்க வேண்டும். இப்போது அந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சம்பள இழப்புக்குக் காரணம் பள்ளித் துணை ஆய்வாளர் தான். ஆகவே அனுதாபத்துடன் இதை மறுபடியும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து சம்பளத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இரண்டு ஆசிரியர்களுக்கும் 9 மாதச் சம்பளத்தை வழங்க வேண்டுமென்று திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறார்கள். இப்போதிருக்கும் நிலைமையை தான் சொல்லியிருக்கிறேன். ஆய்வாளர் தான் அதற்குப் பொறுப்பு என்று உறுப்பினர் சொல்லுவதுமாதிரி ஒரு நிலை இருக்குமானால், அதைப்பற்றி அரசு நிச்சயமாக ஆய்வு செய்யும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இப்போதே தனியார் பள்ளிகளில் வேலை பார்த்து அதே நேரத்தில் ஆசிரியர்கள் ‘ சர்ப்ளஸ் ’ ஆக இருந்தாலும், அரசே அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறது. இந்தப் பள்ளிக்கூடத்திற்கு மட்டும் சர்ப்ளசாக இருந்த இரண்டு ஆசிரியர்களுக்கும் சம்பளம் வழங்காமலிருப்பதற்கு என்ன காரணம் ? எதனால் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை என்பதை அரசு தயவுசெய்து ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவர்கள் இதுகுறித்து ஆராய்வார்களா ?

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மற்ற பள்ளிகளுக்குத் தரப்படும் சலுகை இந்தப் பள்ளிக்குத் தரவில்லை என்ற குறைபாட்டை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதாக இருந்தால், அதைப்பற்றி நிச்சயமாக அரசு பரிசிலிக்கும்.

## *Tamil Nadu Wakf Board*

* 39 *Q.*—Thiru K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state (i) the extent and value of the movable and immovabale properties and (ii) the total acreage of arable dry and wet land under the control of the Tamil Nadu Wakf Board?

[1980 பிப்ரவரி 5

## தமிழ்நாடு வக்ஃப் வாரியம்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள (i) இயங்கும், இயங்காச் சொத்துக்களின் பரப்பும் மதிப்பும் யாவை ?

(ii) புன்செய், நன்செய் விளை நிலங்களின் மொத்தப் பரப்பு யாது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :**

| | ஏக்கராக்கள். | ரூபாய் கோடியில். | |
|---|---|---|---|
| (i) (அ) அசையும் சொத்துக்களின் மதிப்பு | .. | 0. 15 | 1955-ஆம் ஆண்டின் நில அளவை அறிக்கையின்படி. |
| (ஆ) அசையாத சொத்துக்களின் மதிப்பும் அதன் அளவும் (வீட்டு மனைகள், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள்) | 1,25,329 | 10. 96 | |
| (ii) பயிரிடுவதற்கான புன்செய் மற்றும் நன்செய் நிலங்களின் மொத்த ஏக்கராக்கள். | | | |
| புன்செய் | 67, 110 | .. | |
| நன்செய் | 50, 024 | .. | |
| (i) (ஆ)—வில் அடங்கியது) | | | |

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த நிலங்கள் அத்தனையும் வக்ஃப் போர்டின்கீழ் நேரடிப் பராமரிப்பின் கீழ் குத்தகையாகவோ, வாரத்திற்கோ விடப்படுகிறதா ? இதல்லாமல் வேறு பலர் ஆக்கிரமிப்பு மூலமாகவோ, சட்ட விதிமுறைகளுக்குப் புறம்பாகவோ அனுபவித்துக்கொண்டிருக்கிறார்களா செஞ்சி வட்டத்தில் இது எந்த அளவுக்கு இருக்கிறது என்ற விவரங்களைத் தர முடியுமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இப்போது நான் குறிப்பிட்டிருக்கிற இந்த சொத்துக்கள் வக்ஃப் போர்ட் என்று அழைக்கப்படுகிற பொதுவான அறக்கட்டளைக்குச் சொந்தமானது அல்ல. இவைகளை வஃப் வாரியம் நேரடியாக நிர்வாகம் செய்வதில்லை. தனிப்பட்ட முறையில் புனித காரணங்



1980 பிப்ரவரி 5]

களுக்காகவும், மத சம்பிரதாயங்களின்படி சில சடங்குகளை நிறைவேற்றவும், தனி நபர்களாலும் இன்னும் சொல்லப்போனால் முஸ்லிம் அல்லாதவர்களால் கூட வழங்கப்பட்டிருக்கிற சொத்துக்களை ஆங்காங்கே உள்ள வக்ஃப்கள் அமைப்புகள் பயன்படுத்தி வருகின்றன. அவைகளை அவர்கள் ஒழுங்காகப் பராமரிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்கும் பணியைத்தான் வக்ஃப் வாரியம் மேற்கொண்டிருக்கிறது. செஞ்சியைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட முறையிலே என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று கேள்வி கேட்டால், தக்க பதிலைக் கொடுக்க முடியும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** திருநெல்வேலி மாவட்டம் பொட்டல்புதூர் கோயிலிலே உள்ள நிலங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே பல பகுதிகளில் இருக்கின்றன. அதை நிர்வகித்த நிர்வாகிகள் 100 ரூபாய், 200 ரூபாய் என்று பெயரளவிலே வைத்துக்கொண்டு, 1 எக்கர் நிலத்தை தனியாருக்குக் கணக்கிலே கொண்டு வராமல் 20 ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டு கொடுத்திருக்கிறார்கள். ஒரு இஸ்லாமிய கல்லூரி ஆரம்பிக்க முயற்சி எடுத்தபோது, அந்த நிலத்தைக் கையகப்படுத்த முடியாத நிலை வக்ஃப் வாரியத்திற்கு வந்தது. இது போன்ற நிலை மாநிலம் முழுவதும் இருக்கிறது. இவைகளை எடுப்பதற்கு இந்த வக்ஃப் வாரியமோ அரசோ என்ன நடவடிக்கை எடுத்தது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இப்படிப்பட்ட குறைபாடுகள் வக்ஃப் வாரியத்தினுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பிறகு, குறிப்பாக 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு, குறைபாடுகள் மிகுதியாக உள்ள வக்ஃப்களை நேரடியாக வாரியமே நிர்வாகம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், நாகர்கோவிலில் 80 ஏக்கருக்கு மேல் நாம் கைப்பற்றியிருக்கிறோம். அதனுடைய இன்றைய மதிப்பு கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய். அதைப் போலவே உத்தமபாளையம் கல்லூரிக்குச் சொந்தமான இடங்களிலே இருந்தும் 1 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களை வக்ஃப் வாரியம் நேரடி நிர்வாகத்திற்கு எடுத்திருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, பொட்டல்புதூர் என்ற தர்கா இஸ்லாமியர்கள், குறிப்பாக அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் அதிகமாகச் செல்லக்கூடிய ஒரு சிறந்த தர்க்காவாகும். அதற்கு பல இடங்களிலே பல பேர் மானியமாக எழுதி வைத்திருக்கிறார்கள். மற்ற மதத்தைச் சார்ந்தவர்கள் கூட எழுதி வைத்திருக்கிறார்கள் இவைகளை சரியாகப் பராமரிக்க வேண்டுமென்றுதான் ஒரு தனி அலுவலரையே நாம் சமீபத்திலே நியமித்தோம். ஆனால் நிர்வாகிகள் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இது மத சம்பந்தப்பட்ட விஷயமாதலால், அரசு மிகவும் நிதானமாக இதிலே நடந்துகொள்ளவேண்டி

யிருக்கிறது. பொதுவாகவே இந்தமாதிரியான விஷயங்களிலே அவர்களுக்கே ஒரு இறை நம்பிக்கையும், பயமும் இருக்க வேண்டும். அவர்களை இது குறித்து அறிவுறுத்தி வருகிறோம். சட்டரீதியாகவும் பல நடவடிக்கைகளை வக்ஃப் வாரியம் எடுத்து வருகிறது.

THIRU J. M. MIAKHAN: May I know whether all the properties endowed by the Muslims as well as by other people have been covered by the Wakfs Act and come under the Wakf Board? I understand that very many properties and endowments have not been brought under the Wakf Board. May I know what the Government propose to do to bring them under the Wakf Board? Secondly, there are very many properties, especially in Chromepet and other places, which have been bequeathed by people. As far as Chromepet is concerned, about 600 acres have been bequeathed in one lane for a colony. Now, it is under alien occupation and the Wakf Board is not deriving any money. The lands are not used for the purpose for which they had been endowed. Will the Government look into this?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** வக்ஃப் வாரியத்தினுடைய கண்காணிப்பின் கீழ் இருக்கிற வக்ஃபிகளின் எண்ணிக்கை 5,600. இல்லாமல் பல இடங்களிலே வக்ஃப் வாரியத்தினுடைய கவனத்திற்கோ கண்காணிப்பிற்கோ வராமல் வக்ஃப்கள் இருக்கலாம். இருக்கிறது என்று கருதப்படுகிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கிறோம். இந்த விஷயங்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். வக்ஃப் நாமா என்று சொல்லப்படுகின்ற விதி எதற்காக எந்த நோக்கத்திற்கு, எந்தவிதமான காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்டிருக்கிறதோ அதை மட்டுமே செய்துவிட்டு, எஞ்சி இருக்கக்கூடிய லாபத்தை அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அனுபவித்துக்கொள்ளும் நிலைமையும் இருக்கிறது. அப்படியில்லாமல் பொதுக் காரியங்களுக்காகவும் வக்ஃப் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி பல காரியங்களுக்காகவும் வக்ப் இருப்பதால், அனைத்தையும் ஏக காலத்திலே சீர் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் கூட அரசு அவ்வப்போது கிடைக்கின்ற தகவல்களை வைத்து, தனிப்பட்ட அலுவலர்களை அனுப்பி, தவறுகள் இருந்தால், அவைகளை களைந்து வக்ஃப் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் அவைகளைக் கொண்டுவர நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்து வருகிறது.



திரு. பி. இராமலிங்கம்: சென்னையில் திருவல்லிக்கேணி, லாயட்ஸ் ரோட்டிலும், பல்லாவரத்தில் ஜமீன் பல்லாவரம் போன்ற பகுதிகளிலும் வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான காலி நிலங்கள் இருக்கின்றன. அவைகள் கைத்தறி நெசவுத் தொழில் செய்யும் முஸ்லிம்களுக்கு வீட்டுமனைகளாகப் பிரித்துக் கொடுக்கப்படுமா? அவர்கள் தங்குவதற்கு வீடுகள் இல்லாமல் சென்னையை விட்டு வெளியேறி வெளியூர்களுக்குச் செல்கின்றனர். ஆகவே, அவர்களுக்கு அரசு உதவுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். வக்ஃப் வாரியம் நேரடியாக எந்தச் சொத்துக்களையும் நிர்வாகம் செய்யவில்லை. வக்ஃப்கள் என்று சொல்லி தனிப்பட்ட முறையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற அறக்கட்டளைகளைச் சார்ந்த அமைப்புகள் சரியாக நிர்வாகம் செய்யவில்லை என்று தகவல் வந்தால் தான், வாரியம் தலையிடுகிறது. நேரடியாக எடுத்துக்கொள்வது என்பது ஒருசில இடங்களிலே தான் இருக்கிறது. எனவே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது எல்லாம் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான அல்லது அவர்களின் மேற்பார்வையில் உள்ள வக்ஃப்கள். திருவல்லிக்கேணி என்று சொன்னால், ஆற்காடு நவாப் என்டோமென்ட்டுக்குச் சொந்தமானதாக இருக்கலாம். இவைகளிலே எந்த அளவுக்குக் குறுக்கிட முடியுமோ அந்த அளவுக்குச் செய்யலாம். முழு அளவிலே கையகப்படுத்த முடியாது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: திப்பு சுல்தானுக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சேலத்தில் இந்த வக்ஃப் போர்டிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அதிலே மகனீசியம், இன்னும் பல கனிப் பொருட்கள் இருப்பதாகவும் அந்தக் கனிப் பொருட்களை அரசாங்கம் அல்லது வக்ஃப் போர்டின் அனுமதியில்லாமல் டாட்டா கம்பெனி இன்று அனுபவித்து வருகிறது என்றும் சொல்லப்படுவது உண்மையா? அப்படியானால் அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** சேலத்திற்கு அருகாமையில் இருக்கக்கூடிய செட்டிசாவடி என்கிற பகுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். பாலம் யுத்தத்திற்குப் பிறகு ஹைதர் அலியிடம் தோல்வியுற்ற பாலம் மன்னர் அந்தப் பகுதிகளை ஹைதர் அலியின் மேற்பார்வையில் விட்டிருக்கிறார். அதற்குப் பிறகு திப்பு சுல்தான் காலத்திலே அது வக்ப் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு யார் வைத்திருந்தார்கள் என்று தகவல் இல்லை. ஆதாரங்களும் இல்லை. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிகாலம்பற்றிய சில தடையங்கள்

கிடைத்திருக்கின்றன. அதற்குப் பிறகு கிடைத்த புகார்களை வைத்து, இது ஒரு வக்ஃபிக்குச் சொந்தமானதா இல்லையா, வக்ஃபிக்கு சொந்தமாக இல்லா விட்டால் கூட, அரசு இதை மேற்கொள்ள முடியுமா என்ற அடிப்படையில், நாங்கள் தீவிரமாக முயற்சி செய்து, முதற்கட்டமாக இன்றைக்கு அங்கே எடுக்கும் கனிவளங்களை கூட்டுத் துறையிலே செய்ய அரசு உள்ளே சென்றிருக்கிறது. இது தற்காலிகமான, மேலெழுந்தவாரியான நடவடிக்கை. இன்னும் ஆதாரபூர்வமான சான்றுகள் கிடைத்தால், நிச்சயமாக அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து, ஒன்று வக்ஃபிக்குச் சொந்தமான நிலம் என்று உறுதி செய்யும், அல்லது அரசே மேற்கொண்டு அரசின் நிலமாக மாற்றி அவைகளைப் பயன்படுத்த தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Small Industrial Units in Ramanathapuram District.*

* 40 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(*a*) whether it is a fact that the Small Industries Service Institute, Madras, have submitted a scheme to the Government for establishment of 180 Small Industrial Units during 1979-80 in Ramanathapuram District. which is a backward area;

(*b*) if so, the places where those Units will be established;

(*c*) the kinds of Industries that will be set up; and

(*d*) whether any Central aid has been obtained for this?

### இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுதொழில் அலகுகள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) சென்னை, சிறுதொழில் பயிற்சி நிலையம் (Small Industries Service Institute, Madras) என்ற அமைப்பு, பின்தங்கிய பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தில் 1979-80 ஆம் ஆண்டில் 180 சிறுதொழில் அலகுகளை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை அரசிடம் கொடுத்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இவைகள் அம்மாவட்டத்தில் எந்தப் பகுதிகளில் அமைக்கப்படும் ?

**(உ) எந்த** விதமான தொழில்கள் தொடங்கப்படும் ?



(எ) இதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவி ஏதும் பெறப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) ஆம்.

(இ), (உ) & (எ) விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில் நுட்ப, பொருளாதார அடிப்படையில் ஏறத்தாழ 37 வகையான தொழில் களுக்கு 10 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக இங்கே விவர அறிக்கை யில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1979-80 ஆகிய இந்த ஆண்டில் எந்த இடத்திலாவது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள 37 தொழில்களில் ஏதாவது ஒரு தொழில் துவக்கப்பட்டிருக்கிறதா ? அதற்காக அரசாங்கம் நிதியொதுக்கீடு செய்திருக்கிறதா ? அப்படியானால், எந்த ஊரில் துவக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-50)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : 1979-80 ஆம் ஆண்டில் இராமநாத புரம் மாவட்டத்திலே சிறு தொழில்களை குறிப்பாக ஊக்குவிக்கவும், தொடங் கவும் உரிய சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக மத்திய அரசின் சிறு தொழில் பணி நிலையம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் ஒரு செயல் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறது.

அந்த அடிப்படையிலே அந்தப் பணி நிலையத்தின் சார்பில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டு, 37 வகையான 100 சிறு தொழில்களை இங்கே தொடங்கலாம் என்று தமிழக அரசுக்கு அவர்கள் தற்போது பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த 100 தொழில்களும் நேரடியாக அரசே கடன் கொடுத்துத் துவக்கப்படுகிற தொழில்கள் அல்ல. மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக, வங்கிகளின் கடன் உதவி பெற்று ஆங்காங்கே தொழில்களை ஊக்குவிப்பது அல்லது ஆரம் பிப்பது என்று நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

இரண்டாவது ஆர்.ஐ.பி. (ஃபண்டு) என்ற ஒரு திட்டமிருக்கிறது, ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக உதவி செய்யும் பணத்திலிருந்து மார்ஜின் மணி அல்லது 'சீட் கேப்பிட்டல்' மணி எனப்படும் முன் வைப்புத் தொகையைக் கொடுத்து வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்க இந்தத் தொழில்களை ஆரம்பிக் கலாம் என்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கிறோம்.

---

@ 385-391 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1980 பிப்ரவரி 5

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவிற்கு சரியான பதிலைச் சொல்ல வேண்டுமானால், அவர் தனியாகக் கேள்வி போட்டால், எந்த எந்த இடங்களில் இந்தத் தொழில்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்ல முடியும். அவர்கள் பரிந்துரை செய்திருப்பது 37 வகையான 100 தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பதுதான். எந்தெந்த இடங்களில் என்றால், காரைக்குடியிலிருந்து காரியாப்பட்டி வரை பல இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு எவ்வளவு மூலதனம் தேவை என்று முடிவு செய்து இதன் மூலம் எவ்வளவு ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்பதையெல்லாம் இனிக் கணக்கிட வேண்டும். அதைப்போலவே இந்தத் தொழில்களைத் துவக்க முன்வருகிறவர்களுக்குக் கடன் கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்கப்பட இருக்கிறது. ஆனால் ஓராண்டுக் காலத்தில் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல் தேவைப்பட்டால், தனிக் கேள்வி போட்டால், விவரமாகப் பதில் சொல்ல இயலும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மத்திய அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில் 37 வகையான 100 சிறு தொழில்களை ஆரம்பிக்கலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் மத்திய அரசின் பங்கு, அதாவது நிதியுதவி உண்டா? மத்திய அரசு வெறும் சிபாரிசு மட்டும்தான் செய்கிறதா அல்லது மாநில அரசுக்கு நிதியுதவி ஏதேனும் செய்கிறதா? அல்லது தனி நபர்கள் தொழில் துவங்க ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசே அவர்களுக்குக் கடன் வழங்குவதில் முன்னுரிமை கொடுத்து மூலதன உதவியும் அளிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** சிறு தொழில் பணி நிலையம் என்பது மைய அரசின் சார்பில் இங்கே இருக்கின்ற ஒரு நிலையம். மத்திய அரசினுடைய ஆணைப்படி, தமிழகத்தில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு முன்னோடித் திட்டத்தை—செயல் திட்டத்தைத்—தயாரிக்க வேண்டும் என்று அவர்களுக்கு மத்திய அரசு ஆணையிட்டு, மத்திய அரசின் நிதி உதவியோடு இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனத்தினுடைய மிக முக்கியமான பணியே, இன்னின்ன வகையான தொழில்களை இந்தந்த மாவட்டத்தில் துவங்குவதானால், மூலப் பொருள்கள் கிடைப்பதில் பிரச்சினைகள் இருக்காது, அதைப் போலவே உற்பத்தியான பொருள்களை விற்பனை செய்வதில் பிரச்சினை இருக்காது, எனவே தொழில்களை நடத்துகிறவர்களுக்கு எந்த விதமான சிக்கல்களும் ஏற்படாது என்று அந்த அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரை செய்வதாகும். இப்படிப் பரிந்துரை செய்வதோடு மத்திய அரசின் பணி முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு



9 பிப்ரவரி 5]

ந்த் தொழில்களை ஊக்குவிப்பதற்கு பல்வேறு வகையான அமைப்புகளை
வைத்துக்கொண்டிருக்கிறோம். சிறு தொழில் வளர்ச்சிக்கான பல
மப்புகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் அந்தச் சிறு தொழில்களின்
ர்ச்சிக்கு ஊக்குவிப்புகளை அளிக்கின்றன. மைய அரசின் உதவியோடும்
ந்தப்படக்கூடிய அமைப்புகளும் இதில் பங்கு பெறுகின்றன என்பதைத்
வித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இராமநாதபுரம் மாவட்டத்தைப் போன்றே
மபுரி போன்ற பிற மாவட்டங்களிலும் சிறு தொழில்களை ஊக்குவிப்பதற்
இந்த அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன? வேலை
லாத படித்த பட்டதாரிகள் சிறு தொழில்களைத் துவங்க இந்த அரசு
தனும் முன்னுரிமை வழங்குகிறதா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இந்தச் செயல் திட்டம் என்பது
மாவட்டத்திற்கு ஒரு முன்னோடித் திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு
வு செய்யப்பட்டிருக்கிறது. இதையொட்டி ஆங்காங்கே இப்போது
மக்கப்பட்டிருக்கிற மற்ற தொழில் மையங்கள் மூலமாக—அது தர்மபுரி
வட்டமானாலும் சரி, வேறு மாவட்டமானாலும் சரி—அங்கே கிடைக்கிற
ப் பொருள்களை வைத்து அங்கெல்லாம் என்னென்ன வகையான சிறு
ழில்களை ஆரம்பிக்கலாம் என்று நாம் வகைப்படுத்தி, அங்கே தொழில்
த்த வருகிறவர்களுக்கு உதவி செய்கிறோம்.

படித்து வேலையில்லாமல் இருக்கிற பட்டதாரி இளைஞர்கள் இப்படித்
ழில் செய்ய முன்வந்தால், அவர்களுக்கு அரசு முன்னுரிமை கொடுத்து
ர்களெல்லாம் இத்தகைய சிறு தொழில்களைத் தொடங்க முன்வந்தால்,
ர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கும் அரசு தயாராக இருக்
து. காரணம் ஒரு தொழில் வெற்றி பெற வேண்டுமென்றால், அல்லது ஒரு
ழிலின் உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டுமென்றால், அதற்கு நிர்வாகத்
ன்தான் முக்கியம். படித்தவர்களுக்குக் கொஞ்சம் அதிகமான அளவுக்கு
வாகத் திறன் இருக்கும் என்று இந்த அரசு எதிர்பார்க்கிறது. படித்த
டதாரி இளைஞர்கள் தனியாகத் தொழில் நடத்த முன்வருவார்களானால்,
ர்களுக்கு "சீட் மணி" எனப்படும் முன் வைப்புத் தொகையைக் கூட
து அரசு ஏற்பாடு செய்யும். எனவே அவர்களும் இதைப் பயன்படுத்திக்
ள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1980 பிப்ரவரி 5

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் அவர்கள் அவை முன் வைத்திருக்கிற விவர அறிக்கையில் 4-வது இனமாக மல்லிகை நறுமணத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவங்க சுமார் 1.6 லட்சம் ரூபாய் மூலதனம் இருந்தால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கும் அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டு, நானும் அதைக் குறித்து விவரம் சேகரித்திருக்கிறேன். அதன்படி சுமார் ரூபாய் 50 லட்சம் மூலதனம் இருந்தால்தான், அந்தத் தொழிற்சாலையை ஓரளவுக்கு லாபம் இல்லாமல் நடத்தலாம் என்று தெரிகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நஷ்டமில்லாமல் என்று சொல்லுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மன்னிக்க வேண்டும்; நஷ்டமில்லாமல் நடக்கும் என்று தெரிகிறது. சுமார் 80 லட்சம் ரூபாயாக மூலதனத்தை விரிவுபடுத்தினால், அந்தத் தொழிலில் லாபம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கும்போது, சுமார் ரூபாய் 1.6 லட்சம் முதலீட்டில் மல்லிகைப் பூவிலிருந்து தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை வைக்கலாம் என்ற விவரம் கொடுக்கப்பட்டிருப்பது சரிதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டிருக்கும் ஐயப்பாடு எனக்கும் இருக்கிறது. குங்கிலியத் தைலம் அல்லது ஜெரேனியம் தைலம் போன்று, குளூட் மெத்தாடில் இந்தத் தைலத்தை எடுக்க முடியாது. ஆனாலும் சிறு தொழில் மூலமாக இந்தத் தொழிலை நடத்துவது சாத்தியம் என்று அவர்கள் ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னது போல், ரூபாய் 40 லட்சம் முதலீட்டில் இந்தத் தொழிலைத் துவங்குவது என்பது ஒரு வகையான திட்டம். ஆனால் டாட்டா ஆயில் கம்பெனியைப் போன்றவர்கள் பெரிய முதலீட்டில்—அதாவது சுமார் ஐந்து கோடி ரூபாய் முதலீட்டில்—இதுபோன்ற தைலத்தைத் தயாரிக்கிறார்கள். சிறு தொழில் என்றால், குறைந்தபட்சம் ரூபாய் 15 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இந்தத் தொழிலில் அனுபவப்பட்டவர்கள் இதைத்தான் சொல்லுகிறார்கள். அதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் தயாரித்திருக்கும் திட்டத்திற்கு எவ்வளவு முதலீடு தேவை என்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒன்றிரண்டு புள்ளி விவரங்களைப் பொறுத்தவரையில் சரியில்லாமல் இருக்கலாம். நடைமுறையில் நாமே சிலவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். ஆக ரூபாய் 1.6 லட்சம் முதலீடு என்பது நிலம் மற்றும் கட்டிடம் ஆகியவை இல்லாமல் இயந்திரத்திற்கான மூலதனமாகக்கூட இருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில், இயந்திரம் மற்றும் நிலம் ஆகிய



1980 பிப்ரவரி 5]

வற்றிற்கான வகையில் இந்த மூலதனம் மிகக் குறைவாகத்தான் இருக்கும் என்றே கருதுகிறேன். அதுபற்றிய விவரம் இங்கே இல்லை. மல்லிகைத் தைலம் தயாரிப்பதை சிறு தொழில் அல்லது நடுத்தரத் தொழிலாகச் செய்ய வேண்டுமென்றால், எவ்வளவு செலவாகும் என்று தெளிவான விவரம் தேவை என்றாலும், நான் அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பிய ஐயத்தில் ஒரு கருத்திருக்கிறது. அரசும் அதை கவனத்தில் கொண்டு இதைப் பரிசீலிக்கும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு, மூன்று மாணவர்கள் குறைந்த முதலீட்டில் நறுமணத் தைலம் தயாரிக்கலாம் என்று கண்டுபிடித்து சிறிய அளவில் டிசைன் செய்து, அதற்கான இயந்திரத்தைத் தயார் செய்து, அந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற தொல்லையெல்லாம் அவர்கள் உற்பத்தி செய்யும் தைலத்தை மார்க்கெட்டில் செய்வதுதான். பெரிய கம்பெனிகள் இந்தத் தைலத்தை வாங்குவதில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே அரசு தாங்கள் செய்ய இருக்கிற பரிசீலனையோடு இதையும் இணைத்துப் பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மல்லிகை நறுமணத் தைலம் தயாரிப்பது காரியப்பட்டி, கொடை ரோடு, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பனைமரத்துப்பட்டி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படுகிறது. அண்மையில் காலமாகிவிட்ட பனைமரத்துப்பட்டி சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் கூட இதற்காக கல்கத்தா வரை சென்று இந்தத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்க ரூபாய் 40 லட்சம் மூலதனத்தோடு கூடிய திட்டத்தைத் தயாரித்துக்கொண்டு வந்தார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையான திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். சிலர் 15 லட்சம் ரூபாய் போதும் என்கிறார்கள், சிலர் 40 லட்சம் ரூபாய் தேவை என்கிறார்கள், இன்னும் சிலர் ஒரு கோடி அல்லது இரண்டு கோடி ரூபாய் தேவை என்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல், கோவைப் பல்கலைக் கழக மாணவர்கள்கூட இந்தத் தைலத்தைத் தயாரிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் அதை ஒரு 'மாதிரியாகத்தான்' செய்கிறார்களே தவிர, வேறொன்றுமில்லை. அதைப்போலவே பெருமளவில் தயாரிக்கத் தேவையான இயந்திரங்களை இங்கே உற்பத்தி செய்ய முடியுமா என்பதுபற்றி இப்போது தீவிரமான ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் சொன்னேன், இது குறித்துத் தனியாகக் கேள்வி போட்டால், நான் விவரமாக இதைப்பற்றி பதில் சொல்ல முடியும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மதுரை மல்லிகை என்பது இந்தியா முழுவதும் உபயோகிக்கப்படும் மல்லிகையாகும். அதிலும் அருப்புக்கோட்டைக்கு அருகில் உள்ள காரியாப்பட்டி கிராமத்தில்தான் அது மிக அதிகமாக விளைவிக்கப்படுகிறது. அந்தப் பகுதி வேறு தொழில் வளம் இல்லாத பகுதியாக இருக்கிறது. அருப்புக்கோட்டைப் பகுதியில் அடங்கிய பகுதியாக இருப்பதால், அது தொழில் வளம் இல்லாத பகுதி என்பது அனைவருக்கும் தெரியும். அங்கேதான் இந்தத் தொழில் பல ஆண்டுக் காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே அந்தப் பகுதி மல்லிகை நறுமணம் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருளைத் தருகிற பகுதியாக இருக்கிற காரணத்தால், அரசு இதற்கு முன்னுரிமை கொடுத்து அந்தத் தொழிலை அங்கே துவக்குவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-00)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்களுக்கு காரியாப்பட்டியின்மீது உள்ள அக்கறையை விட அதிகமான அக்கறையை இந்த அரசு கொண்டிருக்கிறது. ஆகவே அங்கு நறுமணத் தைலத் தொழிற்சாலையை உருவாக்குவதோடு, சிறிய அளவிலான மாவு மில் ஒன்றை 30 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவ வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. சாத்தியமான அளவில் தொழில் வளர்ச்சி பெருக வேண்டுமென்று அக்கறை எடுத்து வருகிறோம். நறுமணத் தைலம் தயாரிப்பதைப் பொறுத்த வரையில், முதலில் ஆரம்பித்துவிட்டு, பிறகு தைலம் வரவில்லை, பூதான் கிடைக்கிறது என்று சொல்லக்கூடாது என்பதற்காகத்தான் ஆய்வு நடத்தப்படுகிறது. ஆகவே இந்தப் பகுதியிலே இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு எடுக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மல்லிகை நறுமணத் தைலத்திற்கு வெளிநாடுகளில் ஏராளமான கிராக்கி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சொன்னதைப் போல இந்தியாவில் நம்முடைய தென் மாவட்டங்களில்தான் மல்லிகைப் பூ வளரும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரோடு கலந்து கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மல்லிகை பயிரிட்டால், ஆண்டுதோறும் குறைந்தது நான்கு மாதங்களுக்கு எந்தவிதத் தடையுமின்றி இந்தத் தொழில் நடைபெற ஏதுவாக இருக்கும். குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு ஐந்து டன் மல்லிகைப் பூவைக் கொள்முதல் செய்ய முடியும் என்று கணக்கு



எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் குறைந்தது ஆயிரம் பேர்களுக்காவது வேலை வாய்ப்புக் கிடைக்கும். இதையெல்லாம் மனதிலே கொண்டு மல்லிகை நறுமணத் தைலம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை பெரிய அளவிலே ஏற்படுத்த இந்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** ஏற்கனவே சொன்னதைத்தான் சொல்ல வேண்டும். இதிலே அடிப்படையாக உள்ள பிரச்சினைக்கு முடிவு கண்டுவிட்டால், பிறகு எந்த அளவுக்குச் செய்யலாம் என்று அரசு முடிவு செய்யும். அந்தப் பகுதியிலே அப்படிப்பட்ட தொழிற்சாலையை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற கருத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமியைப் போன்றவர்கள் மல்லிகைத் தைலம் தயாரிக்கும் காரியத்தில் ஈடுபடுவதால், மல்லிகைப் பூவின் விலை அதிகமாகிவிட்டது. ஆகவே இந்தத் தொழிலைத் தடை செய்ய வேண்டுமென்று பெண்களிடமிருந்து கோரிக்கை ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு யார் அந்தக் கோரிக்கையைக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. இந்த மாதிரியான தொழிலை வளர்ப்பதன் மூலம், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தெரிவித்ததைப் போல, விவசாயம் செய்ய முடியாத பகுதிகளில் வீணாகக் கிடக்கும் பல்லாயிரக் கணக்கான நிலங்களைப் பயன்படுத்தவும், வேலை வாய்ப்பை உருவாக்கவும் வாய்ப்பு இருக்கிறது. பெண்கள் மத்தியிலே இதற்கு வரவேற்பு இருக்குமே தவிர, எதிர்ப்பு இருக்காது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### மேலவைக் கூட்ட நேரம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 6—2—1980 அன்று காலை 11 மணி முதல் 1 மணி வரையிலும், மீண்டும் மாலை 4 மணி முதல் 7 மணி வரையிலும் மேலவை நடைபெறும்.

## 3. உரிமைப் பிரச்சினை.

### உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமியைக் காவல் துறை அதிகாரிகள் பின் தொடர்வது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 1—2—1980 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார். அதுபற்றி அரசின் விளக்கத்தைக் கோரியிருந்தார். அவையின் முன்னவர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இங்கே ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியபோது, அவரை காவல் துறையைச் சேர்ந்த சில அதிகாரிகள் கண்காணித்து வருவதாகவும், அவருடைய அன்றாட நடவடிக்கைகளில் அவர்கள் குறுக்கிடுவதாகவும், வழியிலே மட்டுமல்லாமல் வீட்டில் இருக்கிறபோதும் சில சம்பவங்கள் நடந்ததாகவும் மேலவையிலே ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள். அதற்குப் பிறகு இரகசியத் துறையின் மூலமாக தகவலைப் பெற்றிருக்கிறோம். அதை உங்களுடைய அனுமதியோடு வாசிக்க விரும்புகிறேன்.

அரசுக்கு வந்த தகவலின்படி, கடந்த 10 நாட்களாக திரு. ஆற்காடு நா. வீராசாமி, எம். எல்.சி. அவர்கள் செயல்பட முடியாத நிலையில் போலீசாரால், ஒரு குற்றவாளியைப் போல கண்காணிக்கப்படவில்லை என்று தெரிகிறது. அவருடைய வீடு சி.ஐ.டி. அதிகாரிகளால் முற்றுகையிடப்படவில்லை. அதை டி.ஐ.ஜி., சி.ஐ.டி. நேரிலும் கண்காணிக்கவும் இல்லை. ஆகவே அவரைப் பார்க்க வருபவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள் என்ற கூற்று உண்மைக்குப் புறம்பானது. அவரது உறவினர்கள் கூட வீட்டிற்கு வர முடியாத நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையல்ல. அவரது கார் போலீசாரால் பின் தொடரப்படுகிறது என்பது மெய்யன்று. அவரது தொலைபேசி 'டேப்' செய்யப்படுகிறது என்பதும் உண்மையல்ல. பல நேரங்களில் முறையாக அதை இயக்க முடியாதபடி தடை செய்யப்படுகிறது என்பதும் உண்மையல்ல. அப்படி தடை ஏதும் ஏற்பட்டிருப்பின், அதற்குப் போலீசார் பொறுப்பல்ல. எனவே இந்த அரசுக்கோ, கண்காணிப்புத் துறைக்கோ அவருக்கு இடையூறு விளைவிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எனது தீர்ப்பை பின்னால் சொல்கிறேன்.

**உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எழுந்தார்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்குத் தகவல் கொடுத்தார். நான் கொஞ்சம் தாராளமாக இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தவறான முறையில் எடுத்துக்கொள்ளக் கூடாது. எழுத்து மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கத்தைப் பெற்று நான் தீர்ப்பை அளித்திருக்க முடியும். ஆனால் இது ஓர் உறுப்பினர் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், மக்களுடைய கவனத்திற்குத் தெரிய வேண்டும் என்று கருதியதால் நான் அரசினுடைய கருத்தை வெளியிடுவதற்கு அனுமதித்திருக்கிறேன். இனி நான் அளிக்க வேண்டியது தீர்ப்புத் தானேயொழிய, இடையிலே விவாதத்தை அனுமதிக்கத் தயாராக இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நான் விவாதத்தை எழுப்பவில்லை. இந்த விஷயத்தில் நானே சம்பந்தப்பட்டிருக்கிறேன். நான் பாதிக்கப்பட்டிருக்கிறேன். நான் சொன்னவைகளை அமைச்சர் அவர்கள் மறுத்ததோடு அல்லாமல், உண்மைக்குப் புறம்பான தகவல்களை இந்த அரசாங்கம் கொடுக்கும்போது, தலைவர் அவர்கள்தான் எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இதுபற்றி தலைவர் அவர்கள் விசாரித்து, உண்மையிலேயே அரசாங்கம் சொல்லுவதில் உண்மையிருந்தால், எந்த தண்டனையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இன்று சி.ஐ.டி.கள் என்னுடைய காரைத் தொடர்ந்து வந்திருக்கிறார்கள். அந்த கார் நம்பரைக் கூட குறித்து வைத்திருக்கிறேன். வருத்தத்தோடு சொல்லுகிறேன், தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் வேண்டுமென்றே தவறான தகவல்களைக் கொடுக்கிறது. டி.ஐ.ஜி., சி.ஐ.டி. திட்டமிட்டுத் தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். தலைவர் அவர்களே உடனடியாக விசாரித்து, அப்படித் தவறான தகவல்களைக் கொடுத்த அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருப்பது உரிமைப் பிரச்சினை. இதை உறுப்பினர் அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதிலே இப்போது நான் விசாரிக்க ஒன்றும் இல்லை. அரசாங்கம் தகவலைக் கொடுத்திருக்கிறது. அவையின் உறுப்பினர்கள் சம்பந்

தப்பட்ட விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாகவும், அக்கறையாகவும் நான் நடந்துகொள்ளுவதைப் புரிந்துகொண்டு, இதற்கு மேல் வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது மேலவை லவுஞ்சிலும், பார்வையாளர்கள் கேலரியிலும் நிரந்தரமாக சி.ஐ.டி.க்கள் இருக்கிறார்கள். இப்பொழுதுதான் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். எனக்கு அறிமுகமானவர்களே கூட இங்கே இருக்கிறார்கள். நானே இதை நிரூபிக்க பொறுப்பேற்கிறேன். I take the responsibility of proving it. எந்தவிதமான ஐடென்டிபிகேஷனும் இல்லாமல் இங்கே இருக்கிறார்கள். இப்பொழுது வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது நிரந்தரமாக நடக்கிறது. இப்படிச் செய்வது மேலவையின் விதிகளுக்குட்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன்னவர் அவர்கள் இதைக் குறித்துக்கொண்டு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, லவுஞ்சிலும் இருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்தக் கட்டிடத்திற்குள் இருப்பார்களேயானால், அதைக் கவனிக்க வேண்டிய அதிகாரம் நமக்கு உண்டு.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, சட்ட விதிகள் அனுமதிக்காதபோது, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகிற கருத்திலே நானும் பங்கு பெறுகிறேன். எப்படிப்பட்ட அசாதாரணமான நிலை இருந்தாலும், இந்த இடங்களில் அவர்கள் இருப்பார்களானால், அது உண்மை என்று கருதப்பட்டால், நிச்சயமாக நானும் ஒத்துப் போக முடியாது என்ற உறுதிமொழியை அரசின் சார்பிலே தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னவற்றை குறிப்பிலே வைத்துக்கொண்டு தக்க விளக்கங்களைப் பெற நிச்சயமாக இந்த அரசு துணைபுரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



## 4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (1) தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகளில் வயிற்றுப்போக்குக் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகளில் வயிற்றுப் போக்கு காரணமாக நூற்றுக் கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும், சுமார் 9 பேர்கள் இறந்தது குறித்தும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கடந்த 10 நாட்களாக திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், முத்துப்பேட்டை, தலைஞாயிறு ஆகிய பகுதிகளில் ஒரு நோய் பரவலாகக் காணப்படுகிறது. வயிற்றுப் போக்கு என்று சொல்கிறார்கள். அந்த நோய் கண்டவர்கள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் அந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். சேர்க்கப்பட்டவர்களுக்கு வேண்டிய சிகிச்சை அளித்தும்கூட, ஏறத்தாழ 9 பேர்கள் இந்த நோயின் காரணமாக இறந்துவிட்டதாக அரசினுடைய அறிக்கை தெரிவிக்கிறது. இந்த நோய் அந்தப் பகுதிகளில், அதுவும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் பரவிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் பிறகு தடுக்க முடியாமல் போய் விடுமோ என்ற நிலை இருப்பதால், அதைத் தடுக்க மிகத் துரிதமாக நடவடிக்கை எப்படி எடுக்கலாம் என்பதைப்பற்றி இந்த அவையில் இருக்கின்றவர்கள் ஆலோசனைகளைச் சொல்லுகிற அளவிற்கு இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைப்பற்றி விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம், மன்னார்குடி, பாபநாசம், திருத்துறைப் பூண்டி வட்டங்களிலுள்ள 28 கிராமங்களில் 6—1—1980 முதல் 2—2—1980 வரை 172 பேருக்கு கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டு அதில் 12 கிராமங்களில் 17 பேர் இறந்துவிட்டனர். பாபநாசம் வட்டம் கபிஸ்தலம்

கிராமத்தில் முதன் முதல் இந்நோய் 6—1—1980-ல் ஒருவருக்கு காணப்பட்டது. கடைசியாக 2—2—1980-ல் திருத்துறைப்பூண்டியில் ஒருவருக்கு இந்நோய் காணப்பட்டது.

கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டது தெரிந்ததும் காலதாமதம் இன்றி உடனே தேவையான நோய் கட்டுப்பாடு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களை அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலோ, மருத்துவமனையிலோ சேர்த்து தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டது. அதிகமான வயிற்றுப்போக்கினால் உடலில் உள்ள தண்ணீர் வெளியேறியதை ஈடு செய்யும் பொருட்டு, குளுகோஸ் சலைன் நரம்பு மூலம் செலுத்தப்பட்டது. மேலும் பேதியை நிறுத்த ஆன்டிபயாடிக் மருந்துகளும் கொடுக்கப்பட்டது. உடனடி சிகிச்சை அளித்ததால், பாதிக்கப்பட்டவர்களில் 17 பேர் தவிர மீதி பேர் நலமடைந்தனர்.

புதிதாக அறுவடை செய்த அரிசி சரியாக பக்குவம் செய்வதில் உள்ள சிரமத்தினால் சாதாரணமாக, வயிற்றுப்போக்கை ஏற்படுத்தும். நோயுற்றவர்களின் நோய் எதிர்ப்பு சக்திக்குத் தகுந்தவாறு நோயில் கடுமை வேறுபடும்.

பொது சுகாதார அலுவலர், நோயுற்றவர்களுக்கு உடனடி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ததுடன், நோயுற்றவரின் வீட்டிலுள்ள மற்றவரை காலரா தடுப்பு ஊசி போட்டு அவர்களுக்கு நோய் வராமல் காத்தனர். நோயுற்றவர்களின் வீடு கிருமி நாசினிகளை உபயோகித்து துப்புரவு செய்யப்பட்டது. நோயுற்ற வீட்டை சுற்றியுள்ள வீடுகளில் உள்ளவர்களுக்கும், காலரா தடுப்பு ஊசி போடப்பட்டது. வயிற்றுப்போக்கு நோய் தண்ணீர் மூலம் பரவுவதை தடுக்கும் பொருட்டு, பாதிக்கப்பட்ட மற்றும் சுற்றுப்புற பகுதிகளிலுள்ள கிணறுகள் மேல்நிலைத் தொட்டி முதலிய நீர் நிலைகளுக்கு குளோரின் மருந்திடப்பட்டது. இப்பணி தொடர்ந்து நடந்து வருகிறது. மேலும் இந்நோய் ஈக்களின் மூலம் பரவுமாதலால், சுற்றுப்புற சுகாதாரத்தில் தனி கவனம் செலுத்தி ஈக்கள் உற்பத்தியாகாதவாறு ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதின் அவசியத்தையும், காய்ச்சிய குடிநீர் அருந்துவது பற்றியும் வற்புறுத்தி பாதிக்கப்பட்ட பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

நோய் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. பொது சுகாதாரத் துறை உதவி இயக்குநர், மாமக ஏற்பாடுகளைச் செய்ய கும்பகோணத்தில் தங்கியிருந்தவர் உடனடியாக தஞ்சை மாவட்ட சுகாதார





அதிகாரியுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு தகுந்த மேல் நடவடிக்கைகளை மேற்கொண்டார். மேலும், 10 சுகாதார ஆய்வாளர்கள் நோயுற்ற பகுதிகளில் நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்க அனுப்பப்பட்டுள்ளனர். நீர் நிலைகளுக்கு மருந்திடவும், பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு கிருமி நாசினிகளைத் தெளிக்கவும், ஊராட்சி ஒன்றிய ஆணையர் மஸ்தூர்களை நியமித்துள்ளார். தஞ்சை மாவட்ட சுகாதார அதிகாரியின் அரசிதழ் பதிவு பெற்ற உதவியாளர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தங்கி நடைபெறும் நோய் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து வருகிறார். 3—2—1980 அன்று மற்றும் ஒரு பொது சுகாதார உதவி இயக்குநர், தேவையான மருந்துகளுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செய்துள்ள பணிகளை கண்காணிக்கச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், அதனைச் சார்ந்துள்ள பகுதிகளிலும் இது வரை 16,385 பேருக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதத்தில் வெள்ள நிவாரணப் பணியின்போது தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 7,17,495 பேருக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டது. இதனால் அவர்கள் ஆறு மாதத்திற்கு பாதிக்கப்பட வாய்ப்பில்லை.

நோயுற்றவருக்கு சிகிச்சை அளிக்கவும், நோய் கட்டுப்பாடு மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைக்காக தேவையான மருந்துகளும், ஊசி மருந்தும், மற்ற கிருமி நாசினிகளும் இப்பணியை தொடர்ந்து செய்ய தேவையான அளவு கையிருப்பில் உள்ளது.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளதாகவும், உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுவதாகவும், இதனால் எந்தவித பதட்டமும் அடையத் தேவையில்லை என்றும் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் அறிவித்துள்ளார். எனவே, இந்த நிலைமையை விவாதிக்க அவையின் அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன்.

-மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி அனுமதி மறுக்கிறேன்.

(பிற்பகல் 5-10)

## (2) பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவினரின் காலவரையறையற்ற உண்ணாவிரதம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சி. ரா. லெட்சுமிகாந்தன், பி. ஆர். தாமஸ், க. மீனாட்சிசுந்தரம், செ. முத்துசாமி, வே. தங்கப்பாண்டியன் ஆகியோர் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்தி 4—2—1980 முதல் சென்னையில் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்பது குறித்தும், தீவிர நேரடி நடவடிக்கையில் ஈடுபடப் போவது குறித்தும், இதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்தும் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறதென்று சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஐந்து பேர்கள் கொடுத்திருக்கிறார்கள். முதலில் பெயர் கொடுத்துள்ள ஒருவர் விளக்கினால் போதும் என்று சொல்லிக்கொள்கிறேன். திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் விளக்கவும்.

***திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, பல்கலைக் கழக ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாக ஒரு ஆண்டுக்கு முன்பாக இதே மேலவையிலேயே ஒரு மூன்று மணி நேர விவாதம் நடைபெற்றது. அது மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கும் நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். அப்போது அரசின் சார்பாக சில வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. அமைச்சர் அவர்களிடம் பேச்சு வார்த்தைகள் நடத்தும்போதும், சில கோரிக்கைகள் பற்றிப் பரிசீலனை செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. அப்படி வாக்குறுதி அளிக்கப்பட்ட, பரிசீலனை செய்வதாக பரிவுடன் சொல்லப்பட்ட சில கோரிக்கைகளை முன் வைத்து இந்த பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. அதுவும் காலவரையறையின்றி உண்ணாவிரத நடவடிக்கையிலே அதனுடைய சங்கப் பொறுப்பாளர்கள் இறங்கியிருக்கிறார்கள். இதையொட்டி மதுரைப் பல்கலைக் கழகப் பகுதியிலே 4 மாவட்டங்களிலே தொடர் உண்ணாவிரதம் நேற்று முதல் நடைபெற்று வருகிறது. எனக்குக் கிடைத்த செய்திப்படி, 300 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் இந்த உண்ணாவிரத நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதுவே மேலும் விரிவு அடையலாம். தேர்வுகள் நடக்கப்போகின்றன. பரிவுடன் பரிசீலனை செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட, இந்த ஆசிரியர்கள் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றவில்லை என்ற அடிப்படையிலே தான்



இப்போது அவர்கள் இந்த நேரடி நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால் இந்தப் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து மன்றத்திலேயே அவைகளுக்கு உடனடியாக ஒரு தீர்வு கண்டு, நடக்கவிருக்கும் தேர்வுகள், கல்வி அமைதி பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இன்றைய மேலவையினுடைய பிற அலுவல்களை ஒத்தி வைத்துப் பேச வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எழுந்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் இப்போதுதான் சொன்னேன். ஒரு உறுப்பினர் விளக்கினால் போதுமென்று. ஒவ்வொரு சமயத்திலும் 10, 12 பேர்கள் கையெழுத்துப் போட்டு கொடுத்துவிடுகிறார்கள். அந்தத் தீர்மானத்திலே உறுப்பினருக்கு இருக்கின்ற ஆர்வத்தைக் காட்டுவதற்கு அதுவே போதுமானது. ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்த ஒவ்வொருவரும் பேசுவதாக ஆரம்பித்தால், அவையை எப்படி நடத்த முடியும்? எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் மட்டும் பேசியாக வேண்டும் என்று சொல்கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, ஒருவர் பட்டதாரி ஆசிரியர்கள் முன்னணியில் பேசினார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தயவு செய்து இதில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன்னணிபற்றி எனக்கும் நினைவில் இருக்கிறது. அதை உறுப்பினரோடு வைத்துக்கொள்ளவேண்டும். இங்கே முன்னணி என்பதுபற்றி எல்லாம் பிரச்சினையில்லை. உறுப்பினர் என்ற முறையிலே உறுப்பினர் உரிமைகளுக்கு ஒரு உத்தரவாதம் தான் நான் கொடுக்க முடியும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துத் தெரிவிப்பதிலே எனக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை. தகவலுக்காக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிலேயே நாம் எல்லாம் பேசி முடிவு செய்தபடி, ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை 3, 4 பேர்கள் கொடுத்திருந்தாலும், அதில் யார் முதலிலே பெயரைக் கொடுத்திருக்கிறார்களோ, அவரைப் பேச விட்டுவிட்டு மற்றவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டுவிட்டால் போதும். எனவே, அடுத்த சந்தர்ப்பங்களிலேயாவது அந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[1980 பிப்ரவரி 5

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போதும் பின்பற்றலாம். தவறு ஒன்றுமில்லை. உறுப்பினர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு பேசலாம். உறுப்பினர்களுக்குள்ளே போட்டியிருக்கலாம். அடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் உறுப்பினர் பெயரை முன்னால் கொடுங்கள். அப்போது அதில் உள்ளபடி முன்னால் உள்ளவர் பெயர் கூப்பிடப்படும். அப்போது மற்றவர்கள் பெயரைக் கூப்பிடமாட்டார்கள். அப்போது உறுப்பினர் பெயர் முன்னாலேயே வரும். மற்றவர்கள் போட்டி போடமாட்டார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, போட்டி என்பது இல்லை. 4 பேர்கள் கொடுத்தால், ஒருவர் அனுமதிக்கப்படுகின்ற முறையில் ஒருவர் பேச மற்றவர்கள் உட்கார்ந்துவிடலாம். சொல்ல இருக்கின்ற செய்திகளை எல்லாம் பேசுகின்றவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது இன்னும் அவர்களுக்குப் பயன் தருகின்ற வகையிலே இருக்கும் என்பதற்காகத்தான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நான் அதிகமாக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றைக்கு கடைசியாக இருக்கட்டும். இனிமேல் ஆய்வுக் குழு எடுத்த முடிவுக்குத்தான் கட்டுப்பட்டு நடக்க முடியும்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நாம் விதிமுறைகளைத்தான் பின்பற்றுகிறோம். அந்த முறைகள்படி இங்கே அனுமதிக்கப்படுகிறார்கள். அதை ஏற்றுக்கொண்டுதான் இங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். அதை என்றைக்கும் நானும் பின்பற்றுவேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் இப்போது ஒரே ஒரு செய்தியை மட்டும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒவ்வொரு சட்டமன்ற தொடர் கூட்டத்தின்போதும், பெரும் போராட்டங்கள் நடைபெறுகின்றன. அப்படி பெரும் போராட்டங்கள் நடைபெறும்போது, அரசினர் அறிவிப்புகள் தருகிறார்கள். அறிவிப்புகளுக்குப் பின்னர் ஆணைகள், ஆணையாக வருவதில்லை. வந்த ஆணைகளோ அமுல்படுத்தப்படுவதில்லை. அதுதான் இப்போதுள்ள சிக்கல்களே, 1—7—1979-க்குள் இந்தப் பிரச்சினையெல்லாம் தீர்க்கப்படும் என்று அறிவிப்பு வந்தது. அதில் பல நிறைவேற்றப்படவில்லை. 1—12—1979-ல் ஒரு ஜி.ஓ. போடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த ஜி.ஓ. அமுல்படுத்தப்படவில்லை. ஆக அறிவிப்புகள் ஆணைகளாக வராததும், ஆணைகளாக வந்தது அமுல்படுத்தப்படாததும், மீண்டும் மீண்டும் போராட்டம் உருவாவதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, இதிலே கவனம் செலுத்தி விரைவிலே செயல்படுத்துவதற்கான



1980 பிப்ரவரி 5] [திரு. கா. மீனாட்சிசுந்தரம்]

நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகத்தான் சில பல யோசனைகளை இன்னும் விரிவாகச் சொல்வதற்கு இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றிப் பேச வேண்டும். பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்களின் சங்கங்களைச் சேர்ந்த கூட்டுச் செயற்குழுவின் உறுப்பினர்கள் 4—2—1980 அன்று கல்வி அமைச்சரின் உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை என்று தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பல்கலைக் கழகம் முன் காலவரையறையற்ற உண்ணாவிரதம் இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. சென்ற ஆண்டு தொடக்கப் பிப்ரவரி-மார்ச் திங்களில் பல் வேறு கோரிக்கைகளை முன்வைத்து கல்லூரி ஆசிரியர்களின் சங்கங்கள் போராட்டத்தில் இறங்கின. அவர்களின் முக்கிய கோரிக்கைகள் பலவற்றின் மீது அரசு ஏற்கெனவே ஆணைகளை வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :—

(1) பணிப்பாதுகாப்பு. அரசு ஆணை 871, நாள் 12-5-1978, மற்றும் குறிப்பாணை 2331/ஜி1/70-2, நாள் 12-7-1979-ல் எல்லா ஆசிரியர்களுக்கும் பணிப்பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(2) அரசு மானியம் பெறுவதற்காக ஒவ்வொரு வகுப்பிலும் 20 மாணவர்களாவது இருக்க வேண்டும் என்ற விதி தளர்த்தப்பட வேண்டும்.

குறிப்பாணை எண் 8075/ஜி1/79, நாள் 12-3-1979-ல் இது குறித்து விதியைத் தளர்த்த அரசு உத்தரவிட்டுள்ளது.

(3) தனியார் கல்லூரிகளில் ஒரு வகுப்பை மூடுவது குறித்து தனியார் கல்லூரி சட்டத்தில் உள்ள விதியைத் திருத்த வேண்டும்.

அரசாணை எண் 549, கல்வி, நாள் 23-3-1979-ல் இது ஏற்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(4) முறைகேடாக வேலை நீக்கப்பட்ட ஆசிரியர்களைத் தேவையான கல்லூரிகளில் எடுத்துக்கொள்வது.

குறிப்பாணை 23330/ஜி1/79-1, நாள் 14-3-1979-ல் இது ஏற்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 பிப்ரவரி 5

(5) அரசுக் கல்லூரிகளில் தற்காலிகமாக பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சிறப்புத் தேர்வு நடத்த வேண்டும்.

அரசாணை எண் 118, நாள் 23-1-1980-ல் தேர்வாணைக் கழகத்திற்குச் சிறப்புத் தேர்வு நடத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(6) அரசுக் கல்லூரிகளில் பணிநீக்கம் செய்யப்பட்ட தற்காலிக ஆசிரியர்களை ஒரு வருட இடைவெளிக்குள் மீண்டும் பணியிலமர்த்த வேண்டும்.

இக்கோரிக்கை ஏற்கப்பட்டு அரசு ஆணை 488, நாள் 23-3-1979-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

(7) கல்லூரிகளில் புகுமுக வகுப்பு நீக்கப்படுவதால், உபரி ஆசிரியர்களை உபயோகித்துக்கொள்வது.

இது ஏற்கப்பட்டு அரசு ஆணை 675, நாள் 26-4-1979-ல் தேவையான உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

(8) தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்குதல்.

பள்ளிகளில் உள்ள முறையை கல்லூரிகளுக்கும் விரிவு படுத்தி அரசு ஆணை எண் 116, நாள் 22-1-1980-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

(9) விளக்குநர் மற்றும் பயிற்றுநர்களை உதவிப் பேராசிரியர்களாக பதவி உயர்வு அளிப்பதில் ஒரு வருடம் இடைவெளி கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

இது ஏற்கப்பட்டு குறிப்பாணை 23675/எச். 1/79, நாள் 20-9-1979-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 5-20)

(10) பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின்படி ஊதியம் நிர்ணயிக்கும்போது ஏற்பட்ட சில குறைபாடுகளை நீக்குதல். கல்லூரிக் கல்வி இயக்குநர் இது குறித்து தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

(11) தமிழ் மற்றும் இதர கல்லூரிகளுக்கு பல்கலைக் கழக மானிய ஊதிய விகிதங்களை விரிவு படுத்த வேண்டும்.

இது ஏற்கப்பட்டு அரசு ஆணை 1579. நாள் 28-8-1979-ல் தேவையான உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.



1980 பிப்ரவரி 5] [திரு. செ. அரங்கநாயகம்]

(12) மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைகளின்படி, நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி வழங்க வேண்டும்.

இது ஏற்கப்பட்டு அரசு ஆணை 1658, நாள் 4—9—1979-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

(13) பி.எச்டி. பட்டம் பெற்றோர்க்கு சிறப்பு ஊதியம் வழங்க வேண்டும்.

இது ஏற்கப்பட்டு அரசு ஆணை 1658, நாள் 4—9—1979-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

(14) உதவிப் பேராசிரியர்கள் பதவி உயர்வுக்கு முன் அக்கவுன்ட் டெஸ்ட் ( Account Test ) தேர்வு பெற வேண்டுமென்ற விதியைத் தளர்த்த வேண்டும்.

இதுவும் ஏற்கப்பட்டு அரசு ஆணை 1725, நாள் 12—9—1979-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

(15) தனியார் கல்லூரி ஆசிரியர் பணி விதிமுறைகளைப் பரிசீலித்து திருத்தம் செய்ய குழு அமைக்க வேண்டும்.

அரசு ஆணை 376, நாள் 9-3-1979-ல் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக் குழு இரண்டு முறை கூடி முக்கியமான விஷயங்களைப்பற்றி ஆலோசித்து அரசுக்குப் பரிந்துரை செய்தது. அரசும் அதன்மேல் ஆணையைப் பிறப்பித்து விட்டது.

(16) கல்லூரி முதல்வர்களுக்கு விடுப்பு, சேம நலநிதி கடன் வழங்குதல் போன்றவற்றிற்கு அதிகாரம் வழங்குதல்.

இது ஏற்கப்பட்டு அரசு ஆணை 915, நாள் 8-6-1979-ல் தேவையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(17) குழு காப்பீட்டுத் திட்டத்தை தனியார் கல்லூரி ஊழியர்களுக்கு விரிவுபடுத்த வேண்டும்.

அரசு ஆணை 852, நிதித் துறை, நாள் 21-6-1979-ல் இத் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 பிப்ரவரி 5

எஞ்சியுள்ள கீழ்க்கண்ட முக்கியமான கோரிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையிலுள்ளன :—

(1) உதவிப் பேராசிரியர்களுக்கு பேராசிரியர்களாகப் பதவி உயர்வு அளித்தல்.

(2) நூலகர் மற்றும் உடற்பயிற்சி இயக்குநர்களில் உள்ள பிரிவுகளை ஒருங்கிணைத்து, உதவிப் பேராசிரியர்களுக்குச் சமமாக ஊதிய விகிதம் வழங்குதல்.

(3) தனியார் கல்லூரி ஊழியர்களுக்கு இலவச மருந்து உதவி வழங்குதல்.

(4) 'பி' லிங் ஆசிரியர்களின் பணி முறையை வரன்படுத்துதல்.

குறிப்பிட்ட சில வருடம் பணி புரிந்துள்ள கல்லூரி உதவிப் பேராசிரியர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு செய்வது குறித்து பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து சில விவரங்கள் பெறப்பட்டுள்ளன. இப் பொருள் குறித்து பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள், கல்லூரிக் கல்வி இயக்குநருடன் பலமுறை விவாதிக்கப்பட்டது. இது குறித்தும் மற்ற எஞ்சியுள்ள கோரிக்கைகள் குறித்தும் அரசு விரைவிலேயே ஒரு முடிவெடுக்கும்.

ஆக கல்லூரி ஆசிரியர்களின் முக்கியமான 21 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, அரசு உத்தரவிட்டுள்ளது நன்கு புலப்படும். எனவே நிலைமைகளை நன்கு அறிந்த பின்பும் ஆசிரியர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபடுவது வருந்தத் தக்கது. எனினும் பேச்சுவார்த்தை நடத்த அரசு எப்போதும் தயாராக உள்ளது. இதில் அவர்கள் ஒத்துழைப்பு தருவார்களென்று அரசு நம்புகிறது. எனவே படித்த அறிக்கையிலிருந்து அவர்கள் முன் விவாதிக்கப்பட்டு, ஒத்துக்கொள்ளப்பட்ட 21 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகளுக்கான உத்தரவுகள் வந்திருப்பதும், அந்தக் கோரிக்கைகளை நாம் பார்க்கின்றபோது பல்லாண்டுக் காலமாக இருந்த பிரச்சினைகளும், அண்மைக் காலத்தில் எழுந்த சில பிரச்சினைகளும் இருக்கின்றன என்பதும் தெரியும். எனவே இந்த ஓராண்டுக் காலத்தில் அரசுத் துறை செயல்பட்டதைப் போல, இதற்கு முன்னாலே செயல்பட்டிருக்குமா என்ற கேள்வியை வைக்க விரும்புகிறேன். அந்த அளவிற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். மேற்கொண்டு சில கோரிக்கைகளைத் தீர்க்க முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதையும் தெரிவிக்கின்ற நேரத்தில், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் அனை



980 பிப்ரவரி 5] [திரு. செ. அரங்கநாயகம்]

ரும் இந்த விவரங்களை ஏற்றுக்கொண்டு, அவர்கள் தங்களுடைய உண்ணா ரதத்தைக் கைவிட்டு, கல்லூரி வளாகங்களில் ஒரு சுமுகமான நிலைமை ற்பட அரசுக்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலும் இந்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையை ஒத்திவைத்து, விவா திக்க அவசியமில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் ளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்சினை குறித்து அவையின் இதர அலு பல்களை ஒத்திவைத்து, விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி, அனுமதி மறுக்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, நான் பாலிடெக்னிக்பற்றி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதுபற்றிய தகவல் வர வில்லை. அது ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது பரிசீலனையில் இருக்கிறது.

## 5. கவன ஈர்ப்பு.

### டீசல் விநியோகம் தடைப்பட்டிருப்பதால், பயணப் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எஸ். லெட்சுமிகாந்தன் அவர்கள் டீசல் பற்றாக்குறைபற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அது இப்போது எடுத்துக்கொள்ளப்படும். திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இதே பொருள் பற்றியும், பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியவைபற்றியும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அவையில் வைக்கப்பட்டிருக்கும் அறிக்கை டீசல்பற்றி இருப்பதால், திரு. தாமோதரன் அவர்கள் விரும்பினால், விளக்கம் கேட்கலாம். பெட்ரோல், மண்ணெண்ணெய் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"22—1—1980 முதல் திடீரென டீசல் விநியோகம் தடைப்பட்டிருப்பதால், பயணப் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும், இதனால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவதிகள் குறித்தும்".

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, அவையின் முன் விவரமான அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நான் கேட்டிருந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பொருள் வேறு. இங்கே தரப்பட்டிருக்கிற அறிக்கை வேறு 22—1—1980 முதல் திடீரென தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு சென்னை மாவட்டங்களிலும், தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் டீசல் லாரி ஓட்டுநர்கள் செய்த வேலை நிறுத்தத்தின் காரணமாக இந்த ஐந்து மாவட்டங்களிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது குறித்தும், பஸ்கள் நிறுத்தப்பட்டது குறித்தும் கேட்டிருந்தேன். ஆனால் அறிக்கை வேறுவிதமாக வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அந்த அறிக்கையிலேகூட 1979 அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட டீசலைவிட விநியோகத்திற்கு வழங்கப்பட்ட டீசல் குறைவாக இருக்கிறது என்பது அமைச்சரவர்கள் புள்ளி விவரத்திலேயே இருக்கிறது. அதற்கான காரணத்தை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** 22—1—1980 முதல் திடீரென டீசல் விநியோகம் தடைப்பட்டதற்குக் காரணம் அந்த டீசல் லாரிகளைப் பொறுத்த வரைக்கும் அதிகமான கட்டணம் வேண்டுமென்ற கோரிக்கை அடிப்படையில் அவர்கள் ஸ்டிரைக்கில் ஈடுபட்டதால் சிக்கல் ஏற்பட்டது. நவம்பர், டிசம்பர், அக்டோபர் மாதங்கள் மழைக் காலமாக இருந்த காரணத்தால், ஒதுக்கப்பட்ட அளவைவிட, கம்பெனிகள் எடுத்த டீசலின் அளவு சற்று குறைவாக இருந்திருக்கிறது.

(பிற்பகல் 5-30)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்த அறிக்கை பொதுவாக டீசல் தட்டுப்பாட்டுக்கான குறிப்புகளைத் தருகிறது. ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தைப் பெற விரும்பு

@ 392–393 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.



கிறேன். நம்முடைய நாட்டிலுள்ள மூன்று மிக முக்கியமான பெட்ரோல் கம்பெனிகளில் "பாரத்" மிகவும் முக்கியமான கம்பெனி. 3—1—1980 முதல் அங்கு பணியாற்றுகின்றவர்கள் go-slow என்று சொல்லும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்போது டீசல் விநியோகம் மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் இந்த வேலை நிறுத்தத்தினால் பொதுவாக டீசல் தட்டுப்பாடு இருந்துகொண்டிருக்கிறது. மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு விரைவில் அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இதுவரை அப்படி நடவடிக்கை எடுக்கப்படாமலிருந்தால், இனி மேலாவது எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனில் பணியாற்றக்கூடிய பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மத்திய பெட்ரோலிய அமைச்சர் திரு. சேத்தி நாளையதினம் இங்கு வர இருக்கிறார். அவருடன் இதுகுறித்துப் பேசி, விரைவில் வேலை நிறுத்தத்தை அவர்கள் கைவிடுவதற்குரிய வழிவகை செய்யப்படும்.

THIRU A. R. DAMODARAN : Sir, I will speak on te Adjournment Motion itself because I have not got the particulars with me now.

6. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இரண்டு உறுப்பினர்கள் திருத்தங்களுக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் திருத்தங்களை முன்மொழியலாம். திரு. நல்லசிவன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, நான் முன்னறிவிப்புக் கொடுத்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகின்றேன் :

(1) தமிழக போலீசாரின் இயக்கத்தை ஒட்டி வேலை நீக்கம் செய்யப்பட்ட அனைத்துப் போலீசாரையும் பணிப் பாதுகாப்புடன் மீண்டும் வேலைக் கமர்த்துவதுபற்றியும் அவர்கள் மீதுள்ள அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெற்றுவிடுவதுபற்றியும்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1980 பிப்ரவரி 5

(2) தமிழ்நாட்டில் வேலையின்றி உள்ள படித்தவர்களுக்கு வேலை, அல்லது வேலை கிடைக்கும் வரை மாதம் ரூபாய் 50 நிவாரணம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம்பற்றியும்.

(3) விலைவாசிகள் உயர்ந்து வருவதைத் தடுக்க அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் பற்றியும்.

(4) தமிழ் நாட்டில் விவசாயக் கூலி சட்டத்தை எல்லா பகுதிகளிலும் அமுல்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும்.

(5) குத்தகை வார விவசாயிகளின் பதிவு காலத்தை 1981 மார்ச் முடிய நீடிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும்.

(6) மக்கள் குழுக்களின் கண்காணிப்போடு, நில உச்ச வரம்புச் சட்டத்தின் அடிப்படையில் பினாமி நிலங்களை கைப்பற்றி தகுதியுடையவர்களுக்கு விநியோகிக்க வேண்டிய அவசியம் பற்றியும்.

(7) 75—25 வார நிர்ணய சட்டம் கொண்டு வரப்படுவது பற்றியும்.

(8) டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டை தடுக்க அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கை பற்றியும்.

(9) உணவுக்கு வேலைத் திட்டத்தை மக்கள் குழுக்களின் கண்காணிப்போடு முறைப்படுத்தி விரிவாக்குவது பற்றியும்"
ஆளுநர் உரையில் குறிப்பிடப்படாதது வருந்தத்தக்கது.

**திரு. பி. மாணிக்கம் :** தலைவரவர்களே, நான் வழிமொழிகின்றேன்.

தலைவரவர்களே, நான் முன்னறிவிப்புக் கொடுத்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகின்றேன் :

"(1) விவசாயிகள் பிரச்சினைக்குத் தீர்வு காணாதது குறித்தும்.

(2) காவல் துறையில் பழிவாங்கப்பட்டவர்களை வேலைக்கமர்த்தாதது குறித்தும்.

(3) தொழிலாளர்கள்மீது போடப்பட்ட சில வழக்குகள் கைவிடப்படாதது குறித்தும்".

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, நான் வழி மொழிகின்றேன்.



1980 பிப்ரவரி 5]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது ஏராளமான பேர் பேசுவதற்காக பெயர் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏற்கெனவே மூன்று நாட்கள் போய்விட்டன. இதுவரை ஏழு, எட்டு பேர் தான் பேசியிருக்கிறார்கள். அது என்னுடைய தவறினால்தானோ என்று எண்ணுகின்றேன். நாளை காலையில்கூட அவையை வைத்திருக்கிறோம். தயவுசெய்து சொல்ல வேண்டிய விஷயங்களை சுருக்கமாக, அழுத்தந்திருத்தமாக, காரசாரமாக, அதிக நேரம் எடுக்காமல் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனக்கு அப்புறம் துணைத் தலைவரவர்கள் உட்கார இருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் இவ்வளவு நேரம் பேசலாமென்று நிர்ணயித்தால், அடுத்து வந்து உட்காருகிற எனக்கு அது வாய்ப்பாக இருக்கும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் 15 நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும். 10 நிமிடங்களுக்குள் முடிப்பவர்களைப் பாராட்டுவேன்.

THIRU P. YELLAMANDA : Hon. Chairman, Sir, I feel that this Governor's Address is nothing but a repetition of the previous years Address with some omissions and additions. In moving the Motion of Thanks the hon. Member Dr. Janarthanam has taken much pains to read out the Address as it is like the Governor.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

I wish the hon. Member should become a Governor in due course because he is also adopting the procedure of a Governor. Anyhow usually during the discussion on the Governor's Address, Members on both sides of the House will speak for and against. But this time, most of the hon. Members have spent their time in vehemently criticising the Government. If the criticism comes from the side of the D.M.K., it is all right. This time criticism has come from Members like the hon. learned Member Thiru Santosham. He listed out the achievements of the A.I.A.D.M.K. Government in a ridiculous manner and he pin-pointed the series of failures of the Government. The hon. Member Thiru Meenakshisundaram said 'இதிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை' This is the comment made by Thiru Meenakshisundaram. Another hon. Member Thiru K. S. Mani said that the Governor's Address contained nothing but confusion and contradictions. Most of the Members have vehemently criticised the Governor's Address. There is no cheerfulness in the faces of the Members on the Treasury Benches and they look very pale because they have been utterly defeated in the recent Parliamentary elections. The inhuman, brutal and barbarious atrocities on Harijans,

the tears which rolled down from the eyes of the N.G.G.O.'s the income-ceiling of Rs. 9,000 fixed for Backward Classes, the injustice down to the working classes, the humiliation and degradation meted out to the teaching staff, the way in which the Government have behaved with the lawyers, the way in which the Government treated the Engineers, the way in which the Government treated the farmers—they were brutally murdered and their children and wives beaten up all these go to show, in a nutshell, that the Government worked against the people. The A.I.A.D.M.K. Government headed by the Hon. the Chief Minister has been functioning in an Utopian way during the last two years. The Hon. the Chief Minister used to tell the public that he commanded the masses on his fingertips. All that has gone now. Now, the people have realised what this Government are doing and what the Chief Miniser is doing. The stunt played by the Hon. the Chief Minister has yielded a very bad result. So, this type of stunt is not at all useful. People are nowadays realising the truth. They may think that they can deceive the people and that they can give out so many tall promises. But, ultimately, they can never deceive the people. In a democarcy, the people, though many of them are illiterate, observe the rise in the prices of essential commodities. They feel that they are not in a position to purchase the essential commodities and that they are not in a position to eke out their livelihood and so they exercise their right to overthrow the Government. No doubt, in 1977, the A.I.A.D.M.K. Party using the name of the present Chief Minister, Puratchi Thalaivar, won with a thumping majority. But they must realise that within two years their Party has been defeated and that it has been crushed like anything. Why did it happen and what is the reason? It is high time on the part of the A.I.A.D.M.K. Government to think, brood and analyse the facts and figures. Whenever we offered constructive criticism in the past, the A.I.A.D.M.K. people ridiculed us, jeered and laughed at us. Now, those in the Opposition benches are laughing at those in the ruling Party.

திரு. சோ. ஆறுமுகம்: அவையில் 'கோரம்' இல்லை. 'கோரம்' இல்லாமல் அவையை நடத்தலாமா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தற்போது தேவையான 'கோரம்' இருக்கிறது. உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.





(பிற்பகல் 5-40)

THIRU P. YELLAMANDA: Sir, any party should do their duty to the people. If they fail to do their duty, definitely people will give them a fitting lesson. Likewise the A.I.A.D.M.K. party, under the leadership of Puratchi Thalaivar M.G.R., within two years, has received such a wonderful set-back and this shows clearly the ways in which it had behaved with all sorts of people. Today the D.M.K., Congress (I) and Muslim League Front has come out in the elections with massive support because of the failures of the A.I.A.D.M.K. Government. They must realise ' Gone are the olden days ". I think they have no opportunity to continue because things are going on very badly nowadays. Anyhow, Sir, in this Address it is stated that the elections were conducted in a peaceful and orderly way. I think this is totally incorrect. It is not correct on the part of the Government to say that elections have been conducted in a peaceful manner. Sir, we all know the ghastly incident at Madurai and people were terribly afraid at that time. Somehow or other poll was conducted. We know about the Mambalam incident; the D.M.K. was conducting a meeting in a peaceful manner. The ruling party people went there and wantonly and deliberately threw soda bottles and disturbed the meeting. This is a fact. I want to say one more thing. The Kalaignar Karunanidhi Narpani Mandram was destroyed by the ruling party people. When such is the case, how can the Government mention in the Governor's Address that the elections were conducted peacefully? The fact is that the people have exercised their franchise in a proper way. How far is it correct to say that the elections were conducted in a peaceful manner? Six lakhs of voters had been eliminated from the electoral rolls. It was because they feared that the City people would always support the D.M.K. party. That is why they eliminated such a large number of electors from the rolls. In spite of that, all the three candidates of the D.M.K. Front in the City of Madras won the election with a difference of more than one lakh votes. This sort of tactics will not help them. They must realise what democracy is, what the people will do. It is high time for them to realise, otherwise, it is better for them to quit. They must discharge their duties in the proper manner or they must quit if they are not in a position to deliver the goods to the people. When the D.M.K. party was defeated in Dindigul election, the present Chief Minister said that Kalaignar should step down. They are the words used by the present Chief Minister. We are asking him to do the same thing

[Thiru P. Yellamanda.] [1980 பிப்ரவரி 5

since the ruling party has been defeated and the D.M.K. which contested in 16 constituencies has come out successful in all the places. Since the ruling party has suffered defeat it should step down from office. It must step down since it has lost the 'confidence of the people.' 'Right to recall' is the slogan given by our Hon. Chief Minister. When such is the case, it is our duty, it is our obligation, it is our intention to say that the entire A.I.A.D.M.K. party has lost the confidence in the people. It is the moral duty of the ruling party to step down; otherwise 'Kalam Bathil Sollum' time will teach the lesson.

MR. DEPUTY CHAIRMAN: I think the hon. Member means that the people have lost confidence in the A.I.A.D.M.K. and not that the A.I.A.D.M.K. has lost confidence in the people.

THIRU P. YELLAMANDA: I say that the A.I.A.D.M.K. has lost the confidence of the people.

இன்னொரு சமாச்சாரம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பா. ரா. அவர்கள் போட்டியிட்டபோது, பா.ரா. வின் வெற்றி என்னுடைய மானப் பிரச்சினை என்று சொன்னார்கள். போஸ்டர்கள்கூட அடித்து ஒட்டப்பட்டது. ஆனால் பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு, பா.ரா. அவர்கள் தோற்ற பிறகு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மானம் கப்பலேறி பல்கேரியா போய்விட்டதா? அல்லது எம்.பி.பி.எஸ். சீட்டு ஊழலில் போய் விட்டதா? அல்லது அவருடைய வீட்டு வாடகை சமாச்சாரத்திலே போய் விட்டதா? நீங்கள் சொல்லுங்கள்
Whether we win the Election or get defeated in the Election is not the criterion. In the past, they ridiculed us at the height of their voice. That is why we are also repeating the same thing.

During the last session, a burning, crucial and vital problem arose and that is the problem of the ceiling of Rs. 9,000 for the Backward Classes. Opposition to that order was raised by the D.M.K. Party and other Parties and we pleaded for the cancellation of that order. It was quite an injustice done by the Government. They came to power in the name of Anna and Periyar. Periyar and Anna waged a war for the communal G.O. Unfortunately, in the name of Anna and Periyar, they removed that G.O. The Hon. the Chief Minister said "In my Government, there is no question of 'backward and forward' and all that. All are equal. So, I am fixing the



1980 பிப்ரவரி 5] [Thiru P. Yellamanda.]

ceiling of Rs. 9,000". We argued against the fixation of ceiling and we quoted a number of instances to show how the Backward Classes would be affected. But they did not bother about that. Ultimately, what logic of events now compelled the Government and the Hon. the Chief Minister to do away with the ceiling of Rs. 9,000. It is because they have been defeated in the recent Elections, because they want the votes for the Panchayat Elections and because they want to earn favours from the Backward Classes. That is the reason. When various political parties opposed the move to fix the income ceiling, this Government did not care and the Hon. the Chief Minister never bothered about that. Now, all of a sudden, the Hon. the Chief Minister has given a boon to the Backward Classes. This is another kind of cheating for the sake of votes.

The hon. Member Thiru Ku. Ma. Balasubramaniam, while speaking yesterday, ridiculed the Prohibition policy and said that there was neither Prohibition nor policy in that. When they passed an Ordinance, we objected vehemently and argued that it would not help the poor people and that the poor people would suffer, if severe punishments like one year's imprisonment were stipulated. But, they never agreed and they never listened to our views. Now, I am asking: Why have the Government and the Hon. the Chief Minister scrapped some of the provisions of the Prohibition Act; Now, a person can drink in a private hotel but not in public premises. An age-limit has also been fixed and a person above the age of 30 can drink. So, the Tahsildar will demand an age-certificate because even a boy aged 15 can claim his age to be 30 because liquor is important for him. This is also a ridiculous thing.

Another important thing is the labour policy. An Ordinance relating to labour was passed and then withdrawn. Like this, this Government, during the two years of their office, have been passing one Act, withdrawing it, then passing another Act and again withdrawing that also. The Government spend most of their time passing Ordinances and then withdrawing them. From this, it is very clear that the Hon. the Chief Minister is quite incapable of dealing with the problems of the people. It is high time on the part of the Government to step down. Otherwise, people will teach them a lesson in due course.

Now, I come to the very important, crucial and burning issue which has figured recently and that is the atrocities committed on Harijans.

Mr. DEPUTY CHAIRMAN: The hon. Member has spoken for fifteen minutes.

(பிற்பகல் 5-50)

Thiru P. YELLAMANDA : Sir, incident after incident, humiliation after humiliation, degradation after degradation has happened and in Tamil Nadu, particularly under the leadership of M.G.R., the Harijans have been insulted like anything. We, Harijans, are no more human beings ; such is the treatment meted out to us by this Government, while they are boasting themselves to be the true disciples of Anna and Periyar. In the year 1976 during the Emergency, the atrocities on Harijans numbered 50 and now the number has gone up. The number has increased by leaps and bounds. The ghastly Villupuram incident, Ramanathapuram incident, one after another the-Harijans are burnt; no case has been registered. The murder of Murugaiyan will find a place in golden letters in the history of A.I.A.D.M.K. rule. Such incidents are taking place everyday. I come to know that the Harijans are not even allowed to take water from the public well. In the mofussil, separate glasses are maintained in Hotels for the use of Harijans. This is the situation after 30 years of Independence. When we boast ourselves to be a big democracy, when the Government is said to be by the people, of the people and for the people, the fate of Harijans is like this under the regime of Puratchi Thalaivar. Yet he is boasting himself as the true disciple of Periyar and Anna. I want to know from the Treasury Benches what the philosophy of Periyar is, for what purpose Periayar waged a war ; the ruling party men have ridiculed the name of Periyar and they have no right to mention the name of Periyar. The Harijans are ill-treated at all places under the present regime.

I would like to say that recently our ex-Harijan Welfare Minister has given a statement and he has mentioned about many atrocities on Harijans. Our Chief Minister has denied those allegations. He can easily deny the statement of our ex-Harijan Welfare Minister. He cannot deny the statement given by the Home Minister of the Central Government when the Charan Singh Ministry was in power and the A.I.A.D.M.K. was a coalition partner in that Ministry. The Home Department survey very clearly showed that the atrocities on Harijans were on the increase, and the number had gone to 150. That report has been submitted to the Charan Singh Government in which the A.I.A.D.M.K., as Coalition partner, had its nominees Thirumathi Sathyavanimuthu and Thiru Bala Pajanor. When our



Hon. the Chief Minister is denying the statement of our ex-Harijan Welfare Minister, what about the previous report given by the Home Ministry ? It has been proved that this Government are anti-Harijan, anti-labour and anti-democratic. In a nutshell, it is not at all a people's Government. Though it has been elected by the people, it is not run for the people but it is run by the officials. In fact, the officials also do not care about the welfare of the people. They never bother about the people. These Ministers, their officers and others are sleeping in the carridors of the Secretariat. The Hon. the Chief Minister is functioning in a Utopian way thinking that he is living in a dream-world. The A.I.A.D.M.K. Ministers also never bother about the people.

Mr. DEPUTY CHAIRMAN : The hon. Member may please conclude quickly.

Thiru P. YELLAMANDA: I will finish in two minutes, Sir. whether we are in power or not, we must think and come forward to do something for the poor people. In this connection, I want to mention about the achievements of the D.M.K. Government. Despite so many hurdles and handicaps, teh D.M.K. survived because of its service to the people. It was not because of Kalaignar's oration, not because of Kalaignar's greatness but because of the service rendered by Kalaignar. The Party has survived because he has done yeoman service to the people. On the other hand, what revolutionary changes have been brought about by Puratchi Thalaivar during these 2½ years ? Let them state any one thing. There has not been even a single thing except the order permitting two persons to go on a bicycle. That is one achievement and that is the only thing done by our Puratchi Thalaivar. But the poor people have got nothing. Let us take, for example, the Slum Clearance Board Scheme in Madras City.

இதனை ஒரு விதிவிலக்காகக் கொள்ளலாம். ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஏழை எளிய மக்களுக்காக இருக்கும் புத்தன் தான்தான், ஏக நான்தான் என்று எல்லாம் சொல்லிக்கொள்கிறார். இப்போது புத்தன், ஏக அதிகாரம் எல்லாம் என்ன ஆகும் என்று எனக்குப் புரியவில்லை. The pitiable thing is that the Hon. the Chief Minister who has been elected by the people never cared about the Legislature, about the M.L.A.'s and the M.L.C.'s and also about the public, as if he were somewhere in Heaven. He would not be available to the public. Nobody knows his whereabouts. When the legislators want to meet the Hon. the Chief Minister, he is not availa-

[Thiru P. Yellamanda.] [1980 பிப்ரவரி 5

ble. All these two years, he is functioning like this, I think that he is following the Divine rule theory. Charles II of England said, "I am not responsible to the people for omissions and commissions. The people are responsible to me. But I am responsible only to God". Like that, the Hon. the Chief Minister is not bothered about the people and the legislators. He is bothered only about something and that everybody knows. So, it is the moral duty on the part of this Government to quit immediately and seek fresh mandate from the people.

With these words, I am concluding my speech. Thank you.

திரு. ஆ. திராவிடமணி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி அடுத்து சமர்ப்பிக்க இருக்கும் வரவு-செலவுத் திட்டத்தினுடைய முன்னுரையாக இருக்கும் என்று கருதக்கூடிய இந்த ஆளுநர் உரையில், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் என்னென்ன முக்கியமான காரியங்களைச் செய்ய இருக்கிறோம் என்பதையெல்லாம் குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய அந்த உரையில் நாங்கள் எல்லாமே மிக அதிகமான அளவுக்கு எதிர் பார்த்தோம். ஆனால் அந்த உரையில் பல குறைபாடுகள்தான் இருக்கின்றன.

கடந்த ஓராண்டுக் காலமாகத் தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு சூழ்நிலைகள் தொடர்ந்து இருந்து கொண்டிருப்பதைப்பற்றி ஆளுநர் உரையில் எந்தவிதமான குறிப்பும் இல்லை. அடுத்து, இந்த அவைக்கு நான் மிக முக்கியமாகச் சொல்ல விரும்புவது இந்த அரசு தயாரிக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் 300 கோடி ரூபாய் அளவுக்கு வரி தருவதற்கு உறுதுணை

(பிற்பகல் 6-00)

யாக இருப்பவர்கள் நமது வர்த்தகப் பெருமக்கள். அந்த வர்த்தகர்கள் தங்களுக்கென்று சில நியாயமான கோரிக்கைகளை அரசு முன்பு வைத்திருக்கிறார்கள். வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நேரிலும் கண்டு பேசியிருக்கிறார்கள். 300 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் தருகின்ற அந்த வர்த்தகர்கள், நம்முடைய நாட்டின்மீது யாராவது படையெடுத்தால், போர்க்கால நடவடிக்கை என்ற முறையில் அள்ளிக் கொடுக்கிற வர்த்தகர்கள். நாட்டிலே வெள்ளம் போன்ற இயற்கை பாதிப்பு ஏற்பட்டால் தாங்களாகவே முன்வந்து ஆயிரக் கணக்கான ரூபாய்களைத் தந்து அரசினுடைய சிரமத்தைக் குறைக்கிற வர்த்தகர்கள். சில நியாயமான பிரச்சினைகளை முன் வைத்து



1980 பிப்ரவரி 5] (திரு. ஆ. திராவிடமணி)

வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலேயே சொல்லியிருக்கிறார்கள். (1) ஒரு முனை விற்பனை வரி வேண்டும்; (2) கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டும்; (3) ஒரே லைசென்ஸ் முறை வேண்டும்; (4) வர்த்தகர்கள் நல வாரியம் அமைக்க வேண்டும்; (5) மார்க்கெட் கமிட்டி தொல்லைகள் ஒழிக்கப்பட வேண்டும்; (6) சிறு வியாபாரிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் கலப்படத் தடைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்; (7) வியாபாரிகளுக்கு தமிழக மேலவையில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்று ஏழு கோரிக்கைகளை அவர்கள் வருவாய்த் துறை அமைச்சரிடத்திலே நேரிலேயே சொல்லியிருக்கிறார்கள்.

1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் நாள் அன்று இந்திய அளவிலே பந்த் நடத்த வேண்டுமென்று பாரத வர்த்தகர்கள் சங்கம் அறிவித்தது. அதை நம்முடைய மாநிலத்தில் உள்ள வர்த்தக சங்கங்களும் நடத்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்கள் ஆனால் "மல்லிகை" மாளிகையில் 22—10—1979 அன்று கமிஷனர் அவர்களும், செகரட்டரி அவர்களும், வர்த்தகப் பிரமுகர்களை அழைத்துப் பேசி "அகில இந்திய அளவிலே பந்த் நடக்கட்டும் ஆனால் நம்முடைய மாநிலத்தில் மட்டும் பந்த் வேண்டாம். உங்களுடைய கோரிக்கை என்ன என்று சொல்லுங்கள். நாங்கள் அமைச்சரைக் கலந்து ஆவனசெய்கிறோம்" என்று கமிஷனர் அவர்களும், செக்ரட்டரி அவர்களும் வர்த்தகர்களிடத்தில் உறுதி கூறியதற்கிணங்க நடத்தவிருந்த பந்த் கைவிடப்பட்டது.

1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் நாள் அன்று அமைச்சர் அவர்கள் மைலையில் வியாபாரிகளிடத்தில் பேசுகிற நேரத்தில்," எல்லாப் பொருள்களுக்கும் ஒரே லைசென்ஸ் தரப்படும்" என்ற உத்தரவாதத்தைத் தந்தார்கள். 29—11—1979 அன்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தேனாம்பேட்டையில் வர்த்தக சங்க விழாவில் பேசினார்கள். வர்த்தகச் சங்கத் தலைவராக திரு. நவமணி அவர்கள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையிலேயே "எங்களுடைய கோரிக்கைகள் கவனிக்கப்படும் என்று சொல்லி பந்தை நிறுத்துங்கள் என்று சொன்னீர்கள். எங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறுமா நிறைவேறாதா?" என்று கேட்டார்கள். அப்பொழுது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், "வரவு செலவுத் திட்ட கூட்டத்திற்குள் முடித்துவிடுகிறேன்" என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கேயிருப்பதால் நேருக்கு நேரே பேசுகிறேன். அதற்குப் பிறகு

27—12—1979 அன்று கும்பகோணத்தில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில், "தயவு செய்து கடைகளையெல்லாம் அடைக்க வேண்டாம். உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருகிறோம்" என்று வர்த்தகர்களைக் கேட்டுக்கொண்டார்.

**மாண்புமிகு திரு. என். டி. சோமசுந்தரம் :** அவைத் தலைவர் அவர்களே, "நிறைவேற்றித் தருகிறேன்" என்பதற்கும் "கோரிக்கைகளை அரசு பரிசீலிக்கிறது" என்பதற்கும் வேறுபாடு அதிகமாக இருக்கிறது என்று கருதுகிறேன்.

**திரு. ஆ. திராவிடமணி :** அமைச்சர் அவர்களுடைய இந்தக் கனிவான பேச்சை நம்பி வர்த்தகர்கள் விடைபெற்றார்கள். பிறகு அதிகாரிகளை அணுகிக் கேட்ட நேரத்தில், அப்படியொரு திட்டம் இல்லையென்று சொல்லி விட்டார்கள். வரவு-செலவுத் திட்டத்தை தாக்கல் செய்யும் நாள் நெருங்குகிறது. ஆனால் வர்த்தகர்கள் எந்த அளவிற்கு வரியைச் செலுத்த வேண்டும் என்பதற்கான அணுகு முறையைப்பற்றி ஒரு சிறு குறிப்புகூட கிடைக்காத காரணத்தால், அவர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கம் புரிந்துகொள்ளும் வகையிலும், அமைச்சருடைய கவனத்தை ஈர்க்கும் வகையிலும் வர்த்தகர்கள் மாநிலம் பூராவும் உண்ணாவிரதம் இருந்து போராட்டத்தை நடத்தினார்கள்.

அன்றையதினம் பேசும்போது, அமைச்சர் அவர்கள், 'இது விஷயமாக அவர்கள் என்னைச் சந்திக்கவே இல்லை. என்னிடத்திலே பேசவே இல்லை' என்று சொன்னார்கள். நம்முடைய வரவு-செலவுத் திட்டத்திற்குக் கை கொடுக்கக் கூடிய அளவிற்கு ஜீவநாடியாக உள்ள அவர்களுக்காக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கலைஞர் அவர்கள், பருப்பு வகைகள், எண்ணெய் போன்றவைகளுக்கு வரியைக் குறைத்தார்கள். 40 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக வியாபாரம் செய்கிற விவசாயிகளுக்கு விலக்கு அளித்தார்கள். 59 பொருள்களுக்கு இருந்த பல முனை வரியை ஒரு முனை வரியாகக் குறைத்துக் கொடுத்தார்கள் கலைஞர் அவர்கள். அந்த முறையிலே அந்த வர்த்தகர்களை அழைத்து மனம் விட்டுப் பேசி அவர்களுடைய கோரிக்கைகள் என்னவென்பதைக் கேட்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் 300 கோடி ரூபாய் அளவிற்கு வருமானத்தை தரக்கூடிய வியாபாரிகளுடைய பிரச்சினையைப்பற்றி, அதுவும் கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து பேச்சுவார்த்தை நடந்து வரும் இந்தப் பிரச்சினையைப்பற்றி எந்தவிதக் குறிப்பும் இல்லாதது வருத்தத்தை அளிக்கிறது.





**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சுக்கு ஒரு திருத்தம். 300 கோடி ரூபாயை அவர்கள் தரவில்லை. மக்களிடத்திலேயிருந்து வசூல் பண்ணி கொடுக்கிறார்கள்.

**திரு. ஆ. திராவிடமணி :** வியாபாரம் நடக்கவில்லையென்றால், எப்படி அந்தப் பணம் வரும்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மக்கள் சாமான்களை வாங்கா விட்டால், வியாபாரம் எப்படி நடக்கும்? (சிரிப்பு).

**திரு. ஆ. திராவிடமணி** மக்கள் இங்கும் அங்கும் அலையக்கூடாது என்பதற்காக மக்களுக்குச் சௌகரியம் செய்து கொடுக்கும் வள்ளல் வியாபாரிகள். (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம்.

**திரு. ஆ. திராவிடமணி :** கூடவே சில சலுகைகளையும் அவர்களுக்குச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். (சிரிப்பு).

நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள், "பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் பண்ணிய காரணத்தால்தான், நூல் விலை உயர்ந்தது" என்று சொன்னார்கள். பஞ்சாலைத் தொழிலாளர்கள் 54 நாட்கள் ஸ்ட்ரைக் பண்ணினார்கள். ஊதிய உயர்வுக்காக மட்டுமல்ல, பஞ்சப் படிக்காகவும்தான். 1936 ஆம் ஆண்டில் பஞ்சப்படி நிர்ணயிக்கப்பட்டது. ஆலைத் தொழிலாளிகளுக்கு பஞ்சத்தின் அடிப்படையிலே, விலைவாசிப் புள்ளிகள் உயர்வுக்கேற்ப பஞ்சப்படி கொடுக்க வேண்டுமென்பது கோவிந்தராமன் தீர்ப்பிலும் முக்கூட்டு ஒப்பந்தத்திலும் அனுமதிக்கப்பட்ட ஒன்று. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை இதை நிர்ணயிக்க வேண்டுமென்பது ஏற்பட்ட ஒப்பந்தம். அதை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து 54 நாட்கள் ஸ்ட்ரைக் பண்ணினார்கள். இலாபம் அதிகமாக இருந்ததால்தான், பேலன்ஸ் ஷீட்டைக் காட்டி அதிக போனஸ் கேட்டார்கள். "மில்லில் வேலை செய்கிற தொழிலாளியின் வேலையைப் பொறுத்துத்தானே இலாபம் சம்பாதிக்கிறார்கள். முன்பு 'ஏ' மில்லை வைத்திருந்தவர்கள் இப்போது 'பி' மில்லையும் கட்டியிருக்கிறார்களே

என்று கேட்கிறார்கள். முன்பு 12 ஆயிரம் கதிர்கள் இருந்த இடத்தில் இப்போது 25 ஆயிரம் கதிர்கள் வைத்திருப்பதால், தொழிலாளிகளுக்கு நல்ல முறையில் ஊதியம் கொடுக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையை வைத்து 54 நாட்கள் ஸ்ட்ரைக் பண்ணினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள், "அண்ணா தி.மு.க. ஆட்சியில் மட்டுமா ஸ்ட்ரைக் நடக்கிறது? எல்லா ஆட்சியிலும்தான் ஸ்ட்ரைக் நடந்திருக்கிறது" என்று சொன்னார்கள். ஆர் வி. மில்—மதுரை கோட்ஸ்சில் ஸ்ட்ரைக் நடந்தது. அப்போது திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அப்போது அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் மூன்றாவது நாளே நேரிடையாக வந்து, உண்ணாவிரதம் இருந்த திரு. இராமமூர்த்தி அவர்களையும், திண்டுக்கல் பாலசுப்பிரமணியம் அவர்களையும் நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி, சமரசம் செய்து ஸ்ட்ரைக்கை முடித்து வைத்தார்கள்.

கலைஞர் ஆட்சியிலும் ஆலைத் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் நடந்தது. அப்பொழுது ஆலைத் தொழிலதிபர்களையும் சர்வ கட்சிகளையும் அழைத்துப் பேசி உடனடியாக சிவராமன் கமிட்டியைப் போட்டார்கள். அந்தத் தனி நபர் கமிட்டியை ஏற்க மாட்டோம் என்று அவர்கள் சொன்ன உடனே திரு. இராசாராம் அவர்களை கோயம்புத்தூருக்கு அனுப்பி வைத்தார். அப்படியும் சமரச முடிவு ஏற்படவில்லை என்பதை அறிந்த பிறகு, ஆலை உரிமையாளர்களையும், சங்கத் தலைவர்களையும் கோட்டைக்கு அழைத்துப் பேசி பிரச்சினையை மிகவும் சுமுகமாக முடித்து வைத்தார்கள். அதைப்போலவே இந்த அரசும் பிரச்சினைகளை முடிக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். எங்களுடைய ஆட்சியில் ஸ்ட்ரைக் இல்லையென்று சொல்ல வரவில்லை. ஆனால் பிரச்சினைகளைத் தீர்க்கும் அணுகு முறையில் ரொம்பவும் நிதானமாக தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். 54 நாட்களுக்கு தொழிலாளிகளை முதலமைச்சரும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சங்கடப்படுத்தியிருக்க வேண்டாம் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து. தொழிலாளர் பிரச்சினை என்றால் உடனடியாக கலைஞர் அவர்கள் அணுகியதைப் போல அணுக வேண்டும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய அணுகுமுறையைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டுமென்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.



(பிற்பகல் 6-10)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராடியபோது, அன்று இருந்த ஆட்சி எந்த முறையைக் கையாண்டது என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னால், அது பலனளிப்பதாக இருக்கும்.

**திரு. ஆ. திராவிடமணி :** இந்த கவர்னர் அவர்கள் உரையிலே கைத்தறி நெசவாளர்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அதைப்பற்றியெல்லாம் நான் இப்போது சொல்லிக்கொண்டிருந்தால், எனக்கு நேரம் ஆகிவிடும். துணைத் தலைவர் அவர்கள் மணியடித்துவிடுவார்கள்.

இந்த கவர்னர் அவர்கள் உரையிலே கைத்தறியைப்பற்றி, அதையே நம்பி வாழ்கின்ற 30 லட்சம் நெசவாளர்களைப்பற்றி ஒரு வார்த்தைகூட ஏன் இல்லை? நூல் விலையுயர்வின் காரணமாக கைத்தறித் துணியின் விலையும் உயர்கிறது. இதனால் மாஸ்டர் வீவர்ஸ் இல்லங்களிலும், சொசைட்டிகளிலும் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்கிறேன். 20 ஆம் நம்பர் நூல் 1975-லே 59 ரூபாயாக இருந்தது. 1977-லே ரூபாய் 68 ஆக இருந்தது. 1978 ஆம் ஆண்டிலே ரூபாய் 75 ஆக இருந்தது. 1979 ஆம் ஆண்டிலே ரூபாய் 85 ஆக இருந்தது. இப்போதும்கூட விலை கூடிவிட்டிருக்கிறது.

40 ஆம் நம்பர் நூல், 1975 ஆம் ஆண்டிலே ரூபாய் 80, 1977 ஆம் ஆண்டிலே ரூபாய் 112, 1978 ஆம் ஆண்டிலே ரூபாய் 133, 1979 ஆம் ஆண்டிலே ரூபாய் 138.

60 ஆம் நம்பர் நூல் 1975 ஆம் ஆண்டிலே ரூபாய் 98, 1977 ஆம் ஆண்டிலே ரூபாய் 158. 1978 ஆம் ஆண்டிலே ரூபாய் 200, 1979 ஆம் ஆண்டிலே ரூபாய் 209.

80 ஆம் நம்பர் நூல், 1975 ஆம் ஆண்டிலே ரூபாய் 151, 1977 ஆம் ஆண்டில் ரூபாய் 178, 1978 ஆம் ஆண்டிலே ரூபாய் 200, 1979 ஆம் ஆண்டிலே ரூபாய் 301.

100 ஆம் நம்பர் நூல், 1975 ஆம் ஆண்டிலே, ரூபாய் 240, 1977 ஆம் ஆண்டிலே ரூபாய் 255, 1978 ஆம் ஆண்டிலே ரூபாய் 270, 1979 ஆம் ஆண்டிலே மே மாதத்தில் ரூபாய் 299, ஆகஸ்ட் மாதத்திலே ரூபாய் 380, செப்டம்பர் மாதத்தில் ரூபாய் 390.

இதற்கு ஒரு வரைமுறை வேண்டும். ஆறு மாதத்திற்கு ஒரு முறை அந்த விலை மாறுகிறது. ஒரே சீரான விலையை உறுதிப்படுத்தாவிட்டால், நெசவுத் தொழிலையே நம்பி வாழ்கின்ற நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்ற துணி ஸ்டாக்கிலே தேங்கிவிடுகிறது. அப்படி தேங்காமல் இருந்தால்தான், அவர்களுக்கு சீரான விலை கிடைக்கும். அதுபற்றி இந்த உரையிலே இல்லாதது பெரிய குறையாக உள்ளது. அதைப்பற்றி வரவு-செலவுத் திட்டத்திலாவது அதைத் தாக்கல் செய்யும்போது இதற்கு என்ன முடிவு செய்யப் போகிறார்கள் என்பதைப்பற்றி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவலர்கள் பிரச்சினை விஷயமாகச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் 700 பேர்கள் இன்று வேலை இழந்து தவிக்கிறார்கள் என்று வேதனைப்பட்டு எல்லாக் கட்சிக்காரர்களும் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் காவலர்கள் பொறுப்பு உணர்ச்சியும், கடமையுணர்ச்சியும் உள்ளவர்கள். அவர்கள் நம்மைப் பாதுகாக்கிறார்கள். எல்லோரும் கடைகளை அடைத்துவிட்டு வீட்டுக்குப் போய்விடுகிறார்கள். அந்தக் கடைகளிலே இருக்கின்ற சொத்துக்களைக் காக்கின்றவர்கள் காவலர்கள். எந்த ஆட்சி வந்தாலும், அவர்கள் கடமைகளைச் செய்யக்கூடியவர்கள், விசுவாசமாக இருப்பவர்கள். இரவு 2 மணி, 3 மணி வரைகூட உறங்காமல் கண் விழித்துப் பாதுகாப்பவர்கள். அவர்கள் பொறுப்புணர்ச்சி உடையவர்கள். அண்ணா அவர்களே 'காவலர்கள் ஒரு நிலைக் கண்ணாடிக்கு சமமானவர்கள்' என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைக் கண்ணாடிக்கு சமமானவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறையினர் சங்கம் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லி, அதற்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் கொடுத்தார்கள். அவ்வாறு அவர்கள் ஒரு சங்கம் அமைத்து, அவர்கள் அவர்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய ஒரு சாதாரண பிரச்சினையை ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்கிவிட்டார்கள். அவர்களை எதிரிகளைப் போலக் கருதி, "40 ஆயிரம் பேர்கள் என்ன செய்துவிடுவார்கள்? நான்கு கோடி மக்கள் மத்தியிலே என்ன செய்ய முடியும்?" என்று கேட்டு அவர்களுடைய கடமைகளைக் குன்ற வைத்துவிட்டார்கள். ஒரு பெரிய ஸ்ட்ரைக்கையே ஏற்படச் செய்துவிட்டார்கள். அதன் காரணமாக 700 பேர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதுபற்றி பேச்சு வார்த்தை நடத்துகொண்டிருப்பதாக முதல்வர் அவர்கள் சொல்கின்றார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே நேற்று 30 காவலர்களை திடீரென்று டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் சண்டை. இரண்டு பேரும் பேச்சு





வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று குண்டு விழுந்தால் எப்படி இருக்கும்? சமரசம் ஏற்பட வேண்டுமென்று எகிப்தும், இஸ்ரேலும் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கின்றன. அப்போது திடீரென்று குண்டு விழுந்தால் என்ன தோன்றும்? அது போல காவலர்களுக்கும் அமைச்சருக்கும் இடையே சமரசமாக, பரஸ்பர உணர்வோடு முதல்வர் அவர்களின் பிரதிநிதியாக திரு. இராசா முகமது அவர்கள் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி நேற்று வந்தது. இன்று 30 பேர்கள் திடீரென்று டிஸ்மிஸ் என்று சொன்னால், அது எப்படி இருக்கும்? அது குண்டு விழுந்த மாதிரிதானே இருக்கிறது? இப்படி இதை இழுத்துக் கொண்டே போகக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் நடுத் தெருவிலே நிற்கிறார்கள். காவலர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கையை எடுத்துச் சொன்னதற்காக அவர்கள் செய்த தியாகத்தையெல்லாம் ஏன் மறுக்க வேண்டும், மறைக்க வேண்டும்? வீதிவீதியாக மந்திரிகள் வரும்போது, அவர்கள் காத்திருந்து பாதுகாக்கவில்லையா? நாம் அதை சாதாரணமாகச் சொல்ல முடியுமா? ஆகவே அந்தக் காவலர்களை எதிரிகளாகக் கருதக் கூடாது. அவர்களுடைய பிரச்சினைக்கு ஒரு தீர்வு இருக்கும் என்று எதிர் பார்த்தேன். ஆளுநர் உரையிலே அதுபற்றி ஒரு வரிகூட இல்லை. இதுதான் பூகோளம் என்று நினைத்துக்கொண்டு இந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள். நடைமுறையிலே இந்த ஆறு மாத காலமாக நாட்டிலே உள்ள பிரச்சினைகளைப்பற்றிச் சொல்லவில்லை. ஒரு வரி இருக்கிறது. கரும்புச் சக்கையிலே காகிதம், கரும்புச் சக்கையிலே காகிதம் என்று. போன வருடம் 'கம்போஸ்' பண்ணியது. அப்படியே தூக்கிப் போட்டுவிட்டார்கள். வருடா வருடம் இதேதானா? புதிதாக நடப்பது என்ன? அதுபற்றி உரையிலே சொல்ல வேண்டாமா? அதைப்பற்றி அவையிலே விவாதிக்க வேண்டாமா? நேற்றையதினம் மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமலிங்கம் அவர்கள், "திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்து போகும்போது, அரிசியே வைத்துவிட்டுப் போகவில்லை" என்று சொன்னார்கள். அநியாயமாகச் சொல்கிறார்கள். போகும்போது தாய்லாந்திலிருந்து அரிசி வாங்கி வைத்து விட்டுப் போனோம். 6,25,000 டன் அரிசி வாங்கி வைத்துவிட்டுப் போனோம். அதை திருவாளர்கள் தவே, சுப்பிரமணியம் அவர்கள்கூட 'சபாஷ் கலைஞர்' என்று சொன்னார்களே. அதை அவர் மறக்கலாமா? அதை வைத்துக் கொண்டுதானே ஒரு வருட காலத்திற்கு ரிசர்விலே இருந்தவர்களுக்கு சோறு போட்டார்கள். பர்மாவிலே தகராறு இருந்ததால், அங்கேயிருந்து வாங்க முடியாமல், தாய்லாந்திலே இருந்து வாங்கினார்கள். திரு. ஷிண்டே அவர்கள் இங்கு வந்திருந்தபோது, அவரிடம் அரிசி உடனடியாக வேண்டுமென்று கேட்டு, தாய்லாந்திலிருந்து 20 கப்பல்கள் மூலம் 6,25,000 டன் அரிசியை வாங்கி ஸ்டாக்

வைத்துவிட்டுப் போனோம். அதை வைத்துத்தான் பிறகு மக்களைக் காப்பாற்றினோம். இடைக்காலத்திலே அரிசி வைக்காமல் போய்விட்டார்கள் என்று வெளியிலே வேண்டுமென்றால் பேசலாம். ஆனால் இந்த அவையிலேயே அப்படிப் பேசலாமா? பொறுப்போடு பேச வேண்டும். திரு. பக்தவத்சலத்தைப்பற்றிக்கூட சொன்னார்கள். அந்த பட்டியலைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காகச் சொல்லலாம். கலைஞர் அவர்களைப்பற்றி அப்படிச் சொல்லலாமா? ஆகவே அது அபாண்டம் என்று சொல்லிக்கொள்கிறேன். தயவுசெய்து இனி அரிசியைப்பற்றிச் சொல்ல வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, கம்யூனல் ஜி.ஓ. பற்றிச் சொல்கிறேன். 1921 செப்டம்பர் 16 ஆம் தேதி மேலவையிலே நிறைவேற்றப்பட்ட விதி கம்யூனல் ஜி.ஓ. அந்தப் பெருமை இந்த அவைக்குத்தான் உண்டு. அந்த விதியை 1924-ல் திருவண்ணாமலை 6-வது காங்கிரஸ் மகாநாட்டின் தலைமை உரையிலும் ஐயா அவர்கள் பாராட்டிப் பேசி 50 சதவிகிதம் வேண்டும் என்று கேட்டார்கள். 1925-லே காஞ்சிபுரத்தில் திரு. வி.க. அவர்கள் தலைமையில் நடந்த மகாநாட்டிலும் 50 சதவிகிதம் வேண்டும் என்ற தீர்மானத்தை பெரியார் கொண்டு சென்றார்கள். 1927-ல் சேலத்தில் வ.உ.சி. அவர்கள் தலைமையில் நடந்த மகாநாட்டிலும் பெரியார் அதை வலியுறுத்தியிருக்கிறார். அந்த ஒரே லட்சியத்திற்காகவே காங்கிரஸிலிருந்து வெளியேறினார் தந்தை பெரியார். 1928-ல் சுயேச்சை அமைச்சரவை அமைத்த டாக்டர் சுப்பராயன் அவர்கள் அமைச்சரவையில் முத்தையா முதலியார் மட்டுமல்ல, சேதுரத்தினம் என்ற ஓர் அய்யர் அவர்களேகூட பங்கு கொண்டு, மூவர் இணைந்த அமைச்சரவை மேற்படி ஜி.ஓ.வை முறைப்படுத்தினார்கள். அதே 1928 நவம்பர் 27-ல் இதே மேலவையில் மேற்படி ஜி.ஓ. கொண்டுவந்தது நியாயம்தானா என்று கேட்டு சாமி வெங்கடாசலம் செட்டி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அமைச்சர் முத்தையா முதலியார் அது நியாயம்தான் என்று விளக்கம் கொடுத்து தெளிவு படுத்திய காரணத்தால், ஒத்திவைப்புத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது. 1937-ல் ராஜாஜி அவர்கள்கூட கம்யூனல் ஜி.ஓ. வில் எந்தக் குழப்பமும் செய்யவில்லை. 1947-ல் ஓமந்தூரார் ரெட்டியார் அவர்கள் முதல்வராக இருந்தபோதுகூட, இது விஷயத்தில் டெல்லியே அவரைக் கவனித்தது. என்றாலும் அவர் நியாயத்திற்காக உறுதியாக இருந்தார். 1948-லே குமாரசாமி ராஜா அவர்கள் ஆட்சிக் காலத்தில் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அன்றைய தமிழக அரசு கம்யூனல் ஜி.ஓ.விற்காக சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து சுப்ரீம் கோர்ட்டும் மேற்படி ஜி.ஓ. விற்கு விரோதமாகத் தீர்ப்பளித்த பின்பு தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் டெல்லிக்குக் குரல் கொடுத்து சங்கநாதம் முழங்கியதற்குப் பின்னர், அகில இந்திய உலக



அரசியலிலே வாத விற்பன்னர் திரு. நேரு அவர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்தி அந்த விதியைக் கொண்டுவந்தார்கள். அப்படிக் கொண்டு வந்த விதியிலே விளையாடலாமா? அதையே திருத்தலாமா? அதற்குப் பிறகு எத்தனை பேர்கள் ஆட்சிக்கு வந்தார்கள்? 1952-லிருந்து 1954 வரை திரு. ராஜாஜி அவர்கள் இருந்தார்கள். அவர் கம்யூனல் ஜி.ஓ. விலே கை வைக்கவில்லை. 1954 லிருந்து 1963 வரை திரு. காமராசர் அவர்கள் இருந்தார்கள். அந்த கம்யூனல் ஜி.ஓ.விலே அவரும் கை வைக்கவில்லை. 1964-ல் மீண்டும் திரு. பக்தவத்சலம் அவர்கள் வந்தார்கள். அவரும் கை வைக்கவில்லை. 1967-ல் அறிஞர் அண்ணா அவர்கள் வந்தார்கள். 1969-ல் கலைஞர் அவர்கள் வந்தார்கள். அதற்குப் பிறகு 1975-லே அவர் ஆட்சி முடிந்து, 1976-லே திருவாளர்கள் தவே, சுப்பிரமணியம் அவர்கள் இரண்டு பேர்களும் ஆட்சிக்கு வந்தார்கள். அவர்கள்கூட அதிலே கை வைக்கவில்லை. திருவாளர்கள் தவே, சுப்பிரமணியம்கூட கை வைக்காத அந்த ஒரு விதியிலே, எம்.ஜி.ஆர். அவர்கள் போய் கை வைத்து, அதிலே கடைசியிலே ஒரு புரட்சியை ஏற்படுத்தி, ஒரு பிரச்சினையை ஏற்படுத்தி, அந்த விதியை எரித்துச் சாம்பலாக்கிய பிறகு, அந்த விதி இல்லை என்று சொன்னார்கள். ஆறாதா என்றார்கள். ஆகவே எந்த விதியைக் கொண்டுவந்தாலும், யோசித்தே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 6-20)

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே, ஆளுநர் அவர்கள் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன். இந்த முறை ஆளுநர் அவர்கள் உரைமீதான விவாதம் உரையிலே இருக்கின்ற அரசினுடைய கொள்கைகளுக்காகவோ அல்லது தெளிவான விளக்கங்களுக்காகவோ நடைபெறுகிற விவாதமாக இல்லாமல், இந்த ஆட்சியினுடைய ஜாதகத்தைக் கணிக்கின்ற விவாதமாக மாறத் தொடங்கியிருக்கிறது. என்னால் ஒன்றைப் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த நேரத்தில் இந்த ஆட்சி நீடிக்குமா, வேண்டுமா, ஏன் இன்னமும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்ற கேள்விக் கணை எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து புறப்படுவதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் ஆளுங் கட்சியிலிருந்துகொண்டு, 'ஏன் எங்களைப் போகச் சொல்லுகிறீர்கள்?' என்று திரும்பத் திரும்பக் கேட்டு தங்களைக் காத்துக்கொள்ளும் அளவிலே ஆட்சியாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்களே தவிர, இந்த வாதத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இடையாது என்று சொல்லி, பொறுப்பிலே இருக்கிறவர்கள் தங்கள் காரியத்தைக் கவனிப்பதாக இல்லை. ஆட்சி அகல வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தவுடன், முதலமைச்சரவர்கள்கூட

'என் உயிர் மூச்சு உள்ளவரை பதவியிலிருந்து விலக மாட்டேன்' என்று சொல்லுகிறார். அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள், 'நான் சினிமா உலகத்தில் ராஜாவாக இருந்தவன்' என்று. அரசியல் உலகத்தில் ராஜாக் களுக்கு இடம் கிடையாது. ஆகவே காலத்தை வரையறுத்து, இத்தனை ஆண்டுக்காலம்தான் ஆட்சியில் இருக்க வேண்டுமென்று மக்கள் அறிவிக் கிறார்கள். பல பேர்கள் தங்கள் இயலாமையாலே, ஆற்றல் இல்லாத காரணத் தாலே இடையிலே ஆட்சியை இழந்து போகிறார்கள் அல்லது அகன்று போகி றார்கள். ஆனால் முதலமைச்சரவர்கள், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிச் சொன்னார்களோ அல்லது அவர்களைப் பற்றிச் சொன்னார்களோ தெரியவில்லை. உயிர் மூச்சு உள்ளவரை ஆட்சியில் இருப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நோக்கில் ஒன்றைத் தெளி வாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சி இருக்கின்றதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. இந்த ஆட்சி என்றைக்குப் போகப் போகிறது, ஆட்சி பீடத்திலிருந்து என்றைக்கு அகலப் போகிறது, அல்லது விட்டுப்போகப் போகிறது என்ற கோரிக்கை, கருத்து அல்லது பேச்சு இந்த நாட்டு மக்கள் மத்தியிலே எல்லாத் தரப்பிலும் இருக்கிறது. அண்ணா தி.மு.க. என்பதல்ல, தி.மு.க. என்பதல்ல, காங்கிரஸ் என்பதல்ல, இவற்றுக்கெல்லாம் உட்படாத, ஆட்படாது உள்ள மக்கள் அதையெல்லாம் பேசுகிறார்கள். நிர்வாக இயந்திரம் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது என்பதுகூட அல்ல, நொறுங்கிப் போயிருக்கிறது. நிர்வாக இயந்திரம் செயல்படாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஓடிக்கொண் டிருந்த தேர் நிலையாக நிற்பதைப்போல, ஒரு ஆட்சியின் நிர்வாக இயந்திரம் பாழ் பட்டுப்போய் செயல்படாமல் தவித்துக்கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

முதலமைச்சரவர்கள் ஜனநாயகத்தைப்பற்றிப் பல்வேறு கருத்துக்களைச் சொன்னவர்கள், அதுவும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஜனநாயக உரிமைகளைப்பற்றி, ஜனநாயக நடப்புக்களைப்பற்றி, ஜனநாயகம் எப்படி அமைய வேண்டும் என்பதுபற்றியெல்லாம் மிகப் பெரிய கருத்துக் களைச் சொன்னார்கள். ஜனநாயக ஆட்சி இந்தியாவில் எப்படி அமைய வேண்டும், அது கூட்டாட்சியா அல்லது வேறா என்ற தத்துவ விளக்கங்களை யெல்லாம் தந்தார்கள். என்னவாயிற்று? இத்தனைக்கும் பிறகு இன்றைக்கு அவர் எடுத்துள்ள முடிவு என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நான் இங்கே வருவதற்கு முன்னால் கடந்த ஆண்டு ஆளுநர் உரையைப் பார்த்து விட்டு வந்தேன். அதிலே 24-வது பாராவிலே மிகத் தெளிவாகச் சொல் கிறார்கள்.





"மதுவிலக்குக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள இந்த
ரசு, அக்கொள்கையை தீவிரமாகச் செயலாக்குவதற்காக அண்மையில்
வசரச் சட்டமொன்றைப் பிறப்பித்துள்ளது. வார்னிஷ் போன்ற பொருட்
ளை அரசைச் சார்ந்த நிறுவனங்கள் மட்டுமே தயாரிக்க வேண்டும் என்ப
ாடு, கள்ளச் சாராயத்தின் விளைவாக உயிரிழப்பு நேரிடின், அதற்குக்
ரணமானவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கவும், இந்த அவசரச் சட்டம்
கை செய்கின்றது. பல்வேறு மதுவிலக்குக் குற்றங்களுக்கு குறைந்த பட்ச
ண்டனைகள் கொடுக்க வேண்டிய நிலையையும் இச் சட்டம் ஏற்படுத்தி
ள்ளது. மேலும் தொடர்ந்து கடுமையான குற்றங்களில் ஈடுபடுவோர்களை
வர்கள் வழக்கமாக வசிக்கும் பகுதியிலிருந்து மாற்றி வெளியிடத்தில் வாழ்ந்
ாக வேண்டிய நிலைக்கும் இது வழி செய்கின்றது."

நாடு கடத்தல் உட்பட இருக்கின்ற கடுமையான தண்டனைகளுக்குரிய
ட்டத்தை அவசரச் சட்டமாக இந்த அரசு கொண்டு வந்தது. வேடிக்கையல்ல
து. ஏற்கெனவே மதுவிலக்குச் சட்டம் நாட்டிலே இருந்துகொண்டிருக்
றது. அதற்குத் துணையாக ஒரு அவசரச் சட்டம் கொண்டு வருகிறார்கள்.
பாறுப்புள்ள ஆட்சியாக இருந்தால், ஜனநாயகத்திலே நம்பிக்கை கொண்
ள ஆட்சியாக இருந்தால், மக்கள் மன்றத்திற்கு வராமல், அவசரம் அவசர
ாகச் சட்டம் கொண்டு வருகிறோம் என்று பொறுப்புணர்வோடு செயல்
ட்டிருந்தால். அந்தச் சட்டத்தினுடைய விளைவுகளைப்பற்றி, அதுக்கு
ளைப்பற்றி சட்டபூர்வமாக, பொறுப்போடு ஆராய்ந்து கொண்டு வந்திருப்
ார்கள். ஆனால் அவசரம் அவசரமாக, தான்தோன்றித்தனமாகக் கொண்டு
ந்த சட்டம் என்ற காரணத்தால், அதே சட்ட முன்வடிவை இந்த அவைக்குக்
கொண்டு வந்தபோது, மாற்றம் இல்லாமல் நிறைவேற்றினார்கள். இடையில்
ல்வேறு அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துக்களைத் திட்டவட்டமாகத்
தெரிவித்தார்கள். மதுவிலக்கு வேண்டுமென்பதிலே இந்த நாட்டிலே மாறு
டுகிற அரசியல் கட்சிகள் மிக மிகக் குறைவு. அதை இந்த அவை அறியும்.
இந்த நாடு அறியும். ஆனால் மதுவிலக்குச் சட்டத்தை நிறைவேற்றுவதிலே
நமக்குள்ளே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தன. முதலமைச்சரவர்கள்
தாய்க்குலத்தின் பிரதிநிதியாக, மாதர்களின் பிரதிநிதியாக, தமிழ் இனத்
தின் பிரதிநிதியாக, தமிழகத்தில் புதிய காந்தியாகத் தோன்றியிருப்பதாக
நினைத்து, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். முதலில் எவ்வாறு
பேசினார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கள்ளச் சாராயம் காய்ச்
சுபவர் பட்டியல் என்னுடைய கரங்களில் இருக்கின்றது என்று பேசிய
முதலமைச்சரவர்கள், 'நான் ஒழித்து விடுவேன்' என்று சொன்னாரே, அவர்
இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார். நாடு கடத்துவேன் என்று சொன்
னாரே முதலமைச்சர், அவர் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அவர்

இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் காங்கிரஸ் தலைவர் திரு. மூப்பனார் அவர்கள் இடித்துரைத்துச் சொன்னார்கள். அவர்களுக்குள்ள அரசியல் அனுபவத்தோடு தெளிவாகச் சொன்னார்கள். 'மதுவிலக்கை நான் பூரணமாக ஆதரிக்கிறேன். சட்டங்கள் கடுமையாக ஆக்கப்படுவதை வரவேற்கிறேன். ஆனால் முதலமைச்சரவர்களுக்கு நான் எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் மிக மிகக் கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஒருவேளை இந்தச் சட்டம் தோற்றுப் போகுமானால், அதற்குப் பிறகு தமிழகத்தில் மதுவிலக்கு என்பதற்கே இடமில்லை. ஆகவே மிகுந்த எச்சரிக்கையோடு சட்டத்தைக் கொண்டு வாருங்கள்' என்று சொன்னார்கள். எச்சரிக்கை உள்ளவர்களாக இருந்திருந்தால், அந்த அறிவுரையை ஏற்றிருப்பார்கள். அறிவுரை தேவையில்லை என்ற ஆணவத்தில் செயல்பட்டவர்களுக்கு அறிவுரைகள் ஏறாது. அது அவர்களுக்குப் பாடத்தைக் கற்பித்துள்ளது. இங்கே அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்பை ஏற்கிறார்கள். அமைச்சரவை கூடி, தீர்மானித்து அனுப்பிய ஒன்று என்று நான் கருதுகிறேன். இங்கேயுள்ள அமைச்சர்களை, உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். 'மதுவிலக்கைத் தளர்த்தி உத்தரவு போட்டிருக்கிறீர்கள். ஜனநாயக உணர்வு இருந்திருந்தால் இந்த அவைக்கு வந்திருக்க வேண்டுமல்லவா? இந்த அவையை மதிக்கின்ற தன்மை இருந்திருந்தால் ஆளுநர் அவர்கள் உரையிலே அதைப்பற்றிச் சொல்லியிருக்க வேண்டுமல்லவா? இந்தச் சட்டத்தை எங்களால் நிறைவேற்ற முடியவில்லை, நாங்கள் கையாலாகாதவர்கள். இயலாதவர்கள், முடியாதவர்கள், சட்டத்தை நிறைவேற்ற அரசு இயந்திரம் இல்லை, காவல் துறை போதாது, காவல் துறையை நிர்வகிக்க நாதி கிடையாது, ஆகவே சட்டத்தைக் கிழித்து எறிகிறேன் என்று சொல்லி இருக்க வேண்டாமா?' மதுவிலக்குக் கொள்கையை சட்டத்தின் மூலமாக அகற்றவில்லை. ஒரு ஜி.ஓ. வின் மூலமாக அகற்றியிருக்கிறார்கள். கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தைப் பரிபூரணமாக செயலற்றதாக ஆக்கியிருக்கிறார்கள் ஒரு ஜி.ஓ. மூலமாக. ஜனநாயக உணர்வா அது? ஜனநாயகக் கடமைகளுக்காகச் செயல்படும் **முறையா** அது? இந்த அவைக்கு வாய்ப்புத் தரும் உணர்வு வேண்டாமா? **ஒரு பொறுப்புணர்வு** வேண்டாமா? அமைச்சரவை கூடி சட்டத்தைக் **கடுமையாக்குகிறார்கள்**, அதை ஆளுநரை வைத்துப் படிக்க வைக்கிறார்கள், நாங்கள்**தான்** காந்தியின் வாரிசு என்று தம்பட்டம் அடித்தார்கள். எங்கே **போயிற்று** அந்தக் குரல்? 'நாங்கள் காந்திய துரோகிகள், எங்களால் மதுவிலக்கை அமலாக்க முடியவில்லை, சாராய வியாபாரிகள் எங்களிலே இருக்கிறார்கள், பட்டியல் என்னிடம் இருந்தாலும், போலீசிடம் கொடுக்கத் தயாராக இல்லை, காரணம் அது எங்கள் மீதே பாயலாம்' என்று சொல்லும் தன்னுணர்வு அவர்களுக்கு இல்லையே!



(பிற்பகல் 6-30)

து மட்டுமல்ல, மதுவிலக்குக் கொள்கையைப்பற்றிச் சொன்னது நம்
டைய முதலமைச்சர். அது அமைச்சரவைக்குத் தெரிந்துதான் நடைபெற்
ருக்க வேண்டும். ஆனால் அமைச்சரவை கூட்டப்படவில்லையே. மது
க்கு அமைச்சருக்குத் தெரியாமல், அமைச்சரவை கூடாமல் இப்படி ஒரு
டிவை எடுத்திருக்கிறார்கள். இப்படி எத்தனை நாட்களுக்குத்தான் அவர்
ர்குட்டி சர்வாதிகாரிகளாக விளங்கப் போகிறார்கள்? எனக்கு முன்னால்
சிய மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் அதைக் குறிப்
ட்டார்கள். வருப்புவாரி பிரதிநிதித்துவம்பற்றிப் பேசினார்கள். மீண்டும்
ன் கேட்கிறேன். கூட்டுப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற அமைச்சர்களைப்
ர்த்துக் கேட்கிறேன். ஜி.ஓ. வை வெளியிட்டபோது, வருப்புவாரி பிரதி
தித்துவத்தை அமுலுக்குக் கொண்டு வந்தபோது, எதிர்த்தவர்களை எல்லாம்
வர்கள் எவ்வளவு ஆணவத்தோடு திட்டினார்கள்? இதிலே கிளர்ச்சி எழுந்
ல் அல்லது யாராவது எதிர்ப்பார்களேயானால் அல்லது போராக் கிளர்ச்சி
ல் ஈடுபடுவார்களேயானால், சிறை தயாராக இருக்கிறது என்று நம்முடைய
தலமைச்சர் பேசியதை நானே நேரில் கேட்டேன். இப்போது என்ன
ற்று? அரசுப் பணத்தில் மேடைகள் அமைக்கப்பட்டு, மேடை. மேடை
ய, மேடையில் உட்கார்ந்து கொண்டு, போலையிலும், மேலவையிலும் இடம்
ற கூட்டிக்காரர்களை வைத்துப் பேச வைத்தார்கள். இப்பொழுது
ங்களே ஒழித்திருக்கின்ற இரண்டு உத்தரவுகளுக்கு வக்காலத்து வாங்கி அவர்
ளைக் கொண்டு, எதிர்த்தவர்களையெல்லாம் திட்ட வைத்தார்கள். வசைமாரி
பொழிய வைத்தார்கள். எதிர்ப்பவர்கள் பணம் படைத்தவர்களுக்காக வக்கா
த்து வாங்குகிறார்கள் என்று பேச வைத்தார்கள். இன்றைக்கு அந்த ஜி.ஓ.
ாய்விட்டது. உங்களால் கிழித்து எறியப்பட்டு விட்டது. ஒன்பது ஆயிரம்
பாய் என்று நிர்ணயித்த வருமான உச்ச வரம்பை வரவேற்றுப் பேசாத
மைச்சர்கள் இங்கே யாராவது இருக்கிறார்களா? மாண்புமிகு நிதி
மைச்சர் அவர்களைத் தவிர எல்லோரும் அதை வரவேற்றுப் பேசியிருக்
றார்கள். முதலமைச்சர் அன்றைக்கு என்ன சொன்னார்? அமைச்சரவை
ச்ச வரம்பு மூன்று ஆயிரம் என்று முடிவு எடுத்தது. நான்தான்
ாயிரம் கொஞ்சமாக உயர்த்தினேன் என்று சொன்னார்கள். எனவே வரு
ன உச்சவரம்பு நிர்ணயித்ததைப் பொறுத்தவரை, அமைச்சர்கள் எல்லோ
க்கும் அதில் பங்கிருக்கிறது. இதை முதலமைச்சரே தெரிவித்தார்.
ன்றைய நிலை என்ன? முதலமைச்சர் அமைச்சரவையைக் கூட்டாமலேயே
தை வாபஸ் பெறுகிறார். அந்த ஆணை ரத்து செய்யப்படுகிறது என்று
றிவிக்கிறார். முதலமைச்சருடைய அறிவிப்பு வருகின்றதற்கு முதல்
மிடம் வரை, அமைச்சர்கள் எல்லோரும் அது நியாயமான உத்தரவுதான்

என்று சொன்னார்கள். அதன்மூலம் பயனடைபவர்கள் பின்தங்கியவர்களில் மிக மிக ஏழைகள்தான் என்று சொன்னார்கள். ஏழைகளுக்கு நன்மை கிடைக்கும் என்று பேசினார்கள். இன்றைக்கு அமைச்சரவையைக் கூட்டாமல் முதலமைச்சர் அறிவித்த அறிவிப்பை அப்படியே அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்று பொருளா? முதலமைச்சருக்கு ஞானோதயம் ஏற்படுகின்றபோதுதான் இவர்களுக்கும் ஞானோதயம் ஏற்படும் என்று பொருளா? இல்லை—இவர்களுக்கு ஞானோதயம் ஏற்படுகின்றபோதுதான் முதலமைச்சருக்கு ஞானோதயம் ஏற்படும் என்று பொருளா? அமைச்சரவை கூடி எடுத்த ஒரு முடிவை வாபஸ் பெறும்போது அதில் ஒரு கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டாமா? யாரோ ஒருவர் அள்ளி அள்ளித் தெளித்த கோலத்தில் எதையாவது பேசுவது நல்லதல்ல. கட்சியைக் கூட்டிப் பேச வேண்டும். அமைச்சரவையைக் கூட்டிப் பேச வேண்டும். இந்த இரண்டு உத்தரவுகளையும் அரசு வாபஸ் பெற்றதன் மூலம் மிகத் தெளிவாக அரசைப்பற்றி மக்களுக்கு உணர வைத்து விட்டார்கள். ஜனநாயகத் தன்மையுடன் அவர்கள் செயல்படவில்லை. அமைச்சரவையில் இருக்கின்றவர்களுக்கு சட்டப்படிதான் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. ஆனால் உண்மையில் இவர்கள் கூட்டுப் பொறுப்பில் செயல்படவில்லை. ஆகவேதான் இன்றைக்கு இவர்களுக்கு ஒரு பலவீனம் ஏற்பட்டு விட்டது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மக்கள் மத்தியில் நம்பிக்கையை இழந்திருக்கின்ற நிலையில் இவர்களை நிமிர்ந்து பார்க்கக் கூட யாரும் மறுக்கிறார்கள். யாரும் அவர்களுடைய வார்த்தைகளை மதிக்கத் தயாராக இல்லை. அவர்களுடைய உத்தரவை மதிக்க யாரும் தயாராக இல்லை. எந்த அதிகாரிகளைப் பார்த்தாலும், என்னைப் பார்த்தால், எப்போது அவர்களை அனுப்பப் போகிறீர்கள் என்றுதான் கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்தால், எப்போது அவர்களை அனுப்பப் போகிறீர்கள் என்றுதான் கேட்கிறார்கள். மேலும் 'நீங்களே அமைச்சரவை அமைக்கப் போகிறீர்களா?' என்றும் கேட்கிறார்கள். இன்னும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எத்தனை நாளைக்குத்தான் ஓடும் என்று கேட்கிறார்கள். இப்போது புதிதாக தமிழ்நாட்டுக்கு வருகின்றவர்களுடைய பெயர்களையெல்லாம்கூட பத்திரிகைகளில் பார்க்கிறேன். சென்னைக்கு வராத திரு. யஷ்பால் கபூர் கூட வந்தார் என்று பத்திரிகையில் செய்தியாக்கப்படுகிறது.

மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரை, மதுவிலக்குச் சட்டத்தை கடுமையாக அரசு கொண்டுவந்தபோது, பக்தி பக்தியாக இவர்களைப்போல் நல்லவர்கள் உண்டா என்று பத்திரிகைகளில் எழுதினார்கள். அதேபோல வருமான உச்சவரம்பு ஒன்பது ஆயிரம் ரூபாய் என்று கொண்டுவந்தபோது கூட, இவர்களைப்போல் நல்ல மனிதர்கள் உண்டா என்று பக்தி பக்தியாக எழுதினார்கள். இப்போது அவர்களையெல்லாம் அடையாளம் கண்டுகொண்டார்கள். தாராளமாகக் குடிக்கலாம் என்று மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்தி [illegible] அப்போது, அதைப்பற்றி விமர்சனம் செய்த அந்தப் பத்திரிகைகளைக் கண்டோம். அவர் செய்யக் கூடாததைச் செய்தபோது அதுதான் நியாயம் என்று எழுதினார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரிந்த நியாயம் புறக்கணிக்கப்பட்டபோது, அதற்கு எதிராகக் குரல் எழுப்பவில்லை. இது ஏன்? அதுபோல்தான் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரையிலும், நடந்துகொண்டார்கள். இவர்களைப் பொறுத்தவரை ஒரு எச்சரிக்கை என்று சொல்லவில்லை, காரணம் காலம் முடிந்துவிட்டது. இவர்கள் ஆட்சிக் காலம் முடிந்தாலும் முடிந்துவிட்டது. இனி வருகின்றவர்களுக்காகச் சொல்லுகின்றேன். எப்படிப்பட்டவர்கள் இவர்களைச் சூழ்ந்திருந்தார்கள் என்பதை இனிமேலாவது புரிந்துகொள்ளட்டும். இனிமேலாவது புரிந்துகொண்டால், எதிர்க்கட்சியாக இவர்கள் இருக்கும்போது இவர்களுக்கு உதவியாக இருக்கும். புகழ்பாடிக் கொண்டிருந்தவர்கள்தான் இவர்களைச் சூழ்ந்திருந்தார்கள். நியாயமாக இவர்களைச் சூழ்ந்திருக்க வேண்டியவர்களை இவர்கள் வரவிடவில்லை. இவர்களைச் சூழ்ந்திருந்தவர்களைக்கொண்டுதான் இவர்கள் இந்நிலைக்கு ஆளாகி அதன் பலனை இன்றைக்கு அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரையில், நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றேன். ஒரு சாதாரண சம்பவம் என்னுடைய பகுதியிலே. ராயப்பேட்டையில் ஷாயிஸ் ரோடில் நடைபெற்றது. 50 பேர், 60 பேர் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு திபு திபு என்று ஓடினார்கள். பாராங்கற்களை, தடிகளை எடுத்துக்கொண்டு இன்னொரு சாராரை நோக்கி ஓடினார்கள். சோடா பாட்டில்களை வீசினார்கள். எதிர்த்தரப்பிலிருந்து இன்னொரு 50, 60 பேர் வேகமாக வந்து மோதினார்கள். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை, அரை மணி நேரத்திற்கு ஒரு முறை நான் பார்த்தேன். இம்மாதிரி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுவும் எங்கே? மாநிலத் தலைநகரில். கேட்பாரே கிடையாதா? போலீஸ் கிடையாதா? சென்னை நகரில் நடைபெறுகிறது. ஷாயிஸ் ரோட்டில், என் வீட்டிலிருந்து கலவரங்களை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஷாயிஸ் காலனிக்கு எதிரில் இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. அரசாங்க அதிகாரிகளுக்கு என்று பகிர்ந்து கொடுக்கப்பட்ட வீடுகள் இருக்கிற பகுதியில் நடைபெறுகிறது. மிகப் பெரிய கலவரம் நான் பார்க்க நடைபெறுகிறது. இரவு 12 மணிக்கு இரண்டு போலீஸ்காரர்கள் வருகிறார்கள். அதற்குப் பின்னால்கூட கலவரம் செய்துகொண்டிருக்கிறார்கள். உடைந்த சோடா பாட்டில்கள் ஆங்காங்கே கிடக்கின்றன. பீட்டர்ஸ் காலனியில்கூட அதற்கு முதல் நாள் கலவரம் நடை-

பெற்றது. ஒரு வாரமாக போலீஸ் காவல் இருந்துகொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கின்றேன். ஆனால் ஒரு அறிக்கை கொடுக்க இலாகாவிற்கு நாதியில்லை. காரணம் காவல் துறை அவர்களை மதிக்கவில்லை. இது முடிந்து விட்ட அரசு என்பதால், தகவல் தரக்கூட மறுக்கிறார்களோ என்னவோ என்று நான் எண்ணுகிறேன். அல்லது மெல்ல அனுப்பலாமென்ற அலட்சியம் இப்போதே அவர்களுக்கு வந்து விட்டதோ என்று நான் எண்ணுகிறேன்.

காவல் துறையிலே மூன்று ஐ.ஜி.க்களைப் போட்டவர்கள். "அறுக்க மாட்டாதவனுக்கு எத்தனை அரிவாள்" என்று சொல்லுவார்கள். அது, மாண்புமிகுத் துணைத் தலைவரவர்களே, தங்களுக்குக் கூடத் தெரியும். நிர்வாக இயந்திரத்திற்கு ஒரு ஐ.ஜி., காவல் துறைக்கு ஒரு ஐ.ஜி., சாராயத்திற்கு ஒரு ஐ.ஜி. விளைவு என்ன நடைபெற்றது? சாராயத்திற்கு முதலில் ஒரு ஐ.ஜி.யை போட்டார்கள். இப்போது சாராயத்தை வீதி வீதியாக ஓட விட்டிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்திக் காப்பதற்காக காவல் துறை ஐ.ஜி.யைக் கொண்டு வந்தார்கள். சென்னை நகரில் ஜனவரி 17 ஆம் தேதி வெப்பேரியில் ஜுவல்ஸ் கொள்ளையடிக்கப்படுகிறது. 18 ஆம் தேதி ராஜா அண்ணாமலைபுரத்தில் ஜுவல்ஸ் கொள்ளையடிக்கப்படுகிறது. இவையெல்லாம் ஆங்கிலப் பத்திரிகைகளில் வந்த செய்திகள். தமிழ்ப் பத்திரிகைச் செய்தி என்றால், அந்தக் கட்சிப் பத்திரிகை, இந்தக் கட்சிப் பத்திரிகை என்று இவர்களால் சொல்ல முடியும்.

17th: Jewels, cash burgled from Vepery.

18th: Burglary in Raja Annamalaipuram, jewels stolen.

19th: Burglary in Hotel; Police hunt for culprit.

17th: Servant found murdered in City.

12th: House-wife found murdered in Foreshore Estate.

12th Fourth Murder in City.

19th: Burglary in Besant Nagar.

21st: Robber gang in stabbing spree.



(பிற்பகல் 6-10

இதற்குப் பிந்திய காலத்திற்கான பத்திரிகையை எடுக்கவில்லை. எடுத்திருந்தால் ஒவ்வொரு நாளும் இது போன்று ஒவ்வொரு செய்தி இருந்திருக்கும். அவர்களை நம்பி, அவர்களுடைய அரசை நம்பி, அவர்களுடைய அரசு அதிகாரிகள் இல்லத்திலே உள்ள தாய்மார்களை விட்டு விட்டு வெளியே வர முடியவில்லை. சொந்தப் பாதுகாவலர்கள் வெளியே வர முடியவில்லை. கொள்ளைக்கூட்டத்தினர் அதிகரித்திருக்கிறார்கள் என்பதோடு மட்டுமல்ல, எதைச் செய்தாலும், இந்த அரசினாலே இந்த அரசின் போலீஸ் அதிகாரிகளாலே கண்டுபிடிக்க முடியாது என்ற நிலைமை இன்றையதினம் இருக்கிறது. இதிலே யார் யார் ஈடுபட்டிருக்கிறார்களோ என்று மக்களுக்கு அச்சம். பட்டப் பகலிலே கொலை நடைபெறுகிறது. கொலை இங்கே மட்டுமா நடைபெறுகிறது, எங்கே நடைபெறவில்லை? இந்த மாநிலத்தில் நடப்பதைப் போல் வேறு மாநிலங்களில் நடைபெறவில்லையா? டெல்லியில் நடைபெறவில்லையா? பம்பாயில் நடைபெறவில்லையா? கல்கத்தாவில் நடைபெறவில்லையா? அந்த கொலையைவிட இந்த கொலை குறைவு என்று சொல்வது வாதத்திற்கு உதவுமே தவிர, விவேகத்திற்கு உதவாது. இந்தச் சூழ்நிலை இருப்பது சரிதானா? ஏன் இந்த நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது? நிர்வாக இயந்திரம் இப்படி அழிந்து, ஒழிந்து போகின்ற சூழ்நிலை ஏன் ஏற்பட்டிருக்கிறது? அவர்களுடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் அரசினோடு ஒத்துழைப்பதில்லை என்று வாய் திறந்து சொல்கிறார்கள். அவர்கள் எப்படி ஒத்துழைப்பார்கள்? ஆரம்பத்திலே இவர்கள் அவர்களைப்பற்றி என்ன சொன்னார்கள், பைல்களை எடுத்துக்கொண்டு போய் எதிர்க் கட்சிகளிடத்திலே கொடுக்கிறார்கள், வேறு எங்கெங்கேயோ கொடுக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இந்த வேடிக்கைகள் எல்லாம் அப்போது இவர்களுடைய அறிக்கைகளாக இருந்தன. கடைசியாக அதிகாரிகள் என்னென்ன பேசுகிறார்கள் என்று அவர்களது பேச்சை 'டேப்' செய்து அவைகளை நாங்கள் வைத்திருக்கிறோம் என்று அறிக்கைவிட்டுச் சொன்னால், இவர்களை நம்பி எந்த அதிகாரி செயல்படுவார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நிர்வாக இயந்திரத்தைச் செயல்படுத்தும் முறையா இது? இவர்கள் ஜனநாயகத்திலே இப்படியெல்லாம் பேசினார்கள். மக்கள் இவர்களுக்குப் பாடம் கற்பித்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைவாகப் பேசி முடிக்கவேண்டும். அடுத்து, இரண்டு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : கொஞ்சம் நேரம்கூட எனக்குக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : இவர்களோடு நான் பழகியவன். எங்களுடைய கட்சியும் பழகியிருக்கிறது. நெருக்கடி நிலை வந்தபோது அவசர அவசரமாகச் சொன்னார்கள். "இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டு வந்திருக்கும் அவசர நிலைமையை வரவேற்கிறேன், அவர்களுடைய தீர்மானங்களை, திட்டங்களை வரவேற்கிறேன், செயல்படுத்துகிறோம்" என்று சொன்னார்கள். ஆளுநர் உரையில் கொத்தடிமைகளைப்பற்றி மூன்றாவது பாராவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது : "குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிட்டபடி, 20 அம்சத் திட்டத்தை மைய அரசு அமுல் நடத்த முன்வந்திருப்பது பாராட்டுதற்குரியது. இத்திட்டம் முன்பு வெளியிட்டபோதே, இப்போது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள கட்சி அதனை வரவேற்று, மக்கள் மத்தியில் அத்திட்டத்தின் கருத்துக்களை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்ததை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். குறிப்பாக தமிழகத்தில் கொத்தடிமை முறை ஒழிக்கப்பட இத்திட்டம் உதவி செய்தது. இத்திட்டத்தைச் சீரிய முறையில் நிறைவேற்றுவதில் இம் மாநில அரசு, மைய அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும்" என்று. நான் கேட்கிறேன், "உண்மையிலேயே 20 அம்சத் திட்டத்திலே அக்கறையும், இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டிருந்த திட்டத்திலே ஈடுபாடும் இருந்தால், இந்தக் கொத்தடிமை முறை ஒழிப்பு நடவடிக்கைகள் இந்திரா காந்தி அம்மையாருடைய ஆட்சிக் காலத்தோடு போயிற்றே, நீங்கள் வந்த பிறகு எத்தனை கொத்தடிமைகளை மீட்டீர்கள்? அதற்காக நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன?". ஆக, "திட்டவட்டமாக தமிழகத்திலே கொத்தடிமைகள் இடையிலே கிடையாது. இந்திரா காந்தி அம்மையாருடைய ஆட்சியோடு முடிந்துவிட்டது, புதிதாக யாரையும் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை, யாரும் கிடையாது என்று உங்களாலே அறிவிக்க முடிந்ததா?" இந்த அவையிலே நான் பலமுறை கேட்டேனே! பதில் சொல்லவில்லையே! கொத்தடிமை முறை ஒழிப்புத் திட்டம் இந்திரா காந்தி அம்மையார் கொண்டுவந்தால் நாங்கள் பாராட்டுகிறோம் என்று சொல்கிறீர்களே, அதற்கு உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? இப்படிச் சொல்வது சந்தர்ப்பவாதம். "நான் உங்களுக்கு எதிராக இருப்பதற்கு லாயக்கற்றவன். உங்களுடைய நண்பனாக இருப்பதற்கு



எனக்குத் தகுதி கிடையாது. இருந்தாலும் நான் அதிகாரத்திலே இருக்க வேண்டும். அதற்கு அன்னையே அருள்புரிய வேண்டும்" என்ற நினைப்பே தவிர வேறு என்ன? அந்த நிலை தானே இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பதவிக்கு வந்த பிறகு, பதவியினுடைய போதையை உணர்ந்த பிறகு, பதவியை விட்டுப் போகாமல் இருக்க வேண்டுமென்ற நிலைமையே இவர்களை இப்படிச் செய்ய வைத்திருக்கிறது என்பதைத் தவிர, இவர்களுடைய மனச்சாட்சிக்கோ, இவர்களுடைய கொள்கைக்கோ அல்லது இவர்களுடைய கொள்கைக்கு ஏற்புடைத்த கொள்கையுடையது என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கும் மற்ற அரசியல் கட்சிகளுடைய கொள்கைகளுக்கோ இவர்கள் உண்மையானவர்களாக இருக்கிறார்களா என்றால், இல்லை. இந்த அமைச்சரவையிலே இவர்களோடு பதவியிலே இருந்த ஒருவர் விலகியிருக்கிறார். முழு விவரமும் எங்களுக்கு வரவில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "அவர் விலகிவிட்டார், உயிரோடு இருக்கிறார், பாதுகாப்போடு இருக்கிறார்" என்றெல்லாம் சொல்கிறார். அந்த அமைச்சர் ஒரு அறிக்கை வெளியிட்டதாக பத்திரிகையிலே பார்த்தேன். அந்த இலாக்கா செயல்படும் முறை எவ்வளவு கேவலமாக இருக்கிறது, அந்த இலாக்காவிலே ஃபைல்கள் நகரவில்லை என்பதை மிகுந்த வேதனையோடு அந்த அறிக்கையிலே சொல்லியிருந்தார்கள். இவர்களில் எத்தனை பேர்கள் இன்னும் எவ்வளவு நாட்களிலே இப்படிச் சொல்லப்போகிறார்களோ, எனக்குத் தெரியாது. ஒருவேளை அமைச்சரவை விலகிய பிறகாவது இவர்களில் பலர் இப்படிச் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் அந்த இலாக்காவில் பொறுப்பு வகித்தபோது, நான் மேலவை உறுப்பினராகப் பொறுப்பேற்றவுடனே அவரிடம் சென்று ஒரு விவரத்தைச் சொன்னேன். ஒரு கல்லூரி மாணவனுக்குக் கிடைக்க வேண்டிய ஸ்காலர்ஷிப், உதவித்தொகை, முறையாகக் கிடைக்காமல் தடைப்பட்டிருக்கிறது, உதவித்தொகை கிடைக்கவேண்டிய எல்லாத் தகுதியும் அவனுக்கு இருக்கிறது. இந்த இலாக்கா செய்த தவறின் காரணமாகத்தான் அந்த உதவித் தொகை கிடைக்கவில்லை. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் சொன்னேன். நான் மனு கொடுத்தவுடனே அவர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கையெழுத்திட்டு அனுப்பி விட்டார். நான் கொடுத்தது 25—4—1978-லே. அன்றைக்கே அந்தக் கடிதத்திலே அமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு அனுப்பினார். 14—12—1979-லே எனக்கு ஒரு தகவல் கிடைக்கிறது.

"I am directed to invite reference to your letter cited and state that the student Thiru Arul of Arignar Anna Arts College, Cheyyar was sanctioned non-residential scholarship instead of residential scholarship during 1977-78 and the District Backward Classes Welfare Officer, North Arcot has since been instructed to sanction the balance amount of boarding and lodging charges due to the student immediately." இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், ஹரிசன் நலத்துறை அமைச்சர் விலகாமல் என்ன செய்வார்? அவர் இத்தனை காலமாக இந்த இலாக்காவில் இருந்தது ஆச்சரியமே தவிர, இந்த இலாக்கா செயல்படுவதாகச் சொல்ல முடியுமா? இனி அந்த மாணவனை எங்கே போய் நான் கண்டுபிடிப்பேன்? அவனுக்குத் தேவையான காலத்திலே இந்த உதவித் தொகை கிடைக்கவில்லையே, அதற்கு இந்த அரசு என்ன பதில் சொல்கிறது? இது பானையிலே இருக்கின்ற ஒரு சோறு. இந்த ஒரு சோறே இப்படியென்றால், பானை நிறைய இருக்கும் சோறை எப்படி வடித்திருப்பீர்கள்? மனம்புழுங்கி அந்த அமைச்சர் "செயல்பட முடியவில்லை" என்று சொல்லும்போது, இவர்களுக்குப் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்று நான் கேட்கிறேன். அதோடு மட்டுமல்ல. எவ்வளவு உயர்ந்த அறிவிப்புகளை இவர்கள் செய்கிறார்கள். இன்றைக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீசஸ் ஆக ரிட்டையர் ஆன டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் என்பவரை டைரக்டர் ஆஃப் பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் என்று நியமித்திருக்கிறார்கள். அவர் யார்? ஏற்கெனவே பதவியிலே இருந்து ஓய்வு பெற்றவர் அவர். 1976 ஆம் ஆண்டிலே அவர் ஓய்வு பெற்றார். அந்தக் காலத்திலேயே அவர் ஓய்வு பெற்று மீண்டும் அவருக்கு பலகால நீட்டிப்புகள் தந்து, கடைசியாக அவர் 1976 ஆம் ஆண்டிலே ரிட்டையர் ஆனவர். வெட்கமாக இல்லை இவர்களுக்கு? ஒரு துறையிலே இருந்துகொண்டு, அந்தத் துறையை சீராக்கப் போகிறேன், டைரக்டர் ஆஃப் ஹெல்த் சர்வீசஸ் என்று ஒருவரைப் போடப்போகிறேன் என்று சொல்லி, அந்தத் துறையிலே ஏற்கெனவே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அத்தனை பேரையும்பற்றிக் கவலைப்படாமல், இப்படி வேறொருவரைக் கொண்டு வந்து புதிதாக நியமித்ததற்கு வெட்கப்பட வேண்டாம்? வேடிக்கை என்னவென்றால் அவருக்கு வேலை ஊர் ஊராகச் சுற்றுவதாம். அவர் நடப்பதற்கே, ஆள் பிடித்துக் கொண்டு நடக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலையில் அவருக்குப் புதிய பதவி என்றால், என்ன அர்த்தம்? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? பணம் கிடைத்தால், அரசு கிடைத்தால், அதிகாரம் கிடைத்தால், வாரி இறைப்பதற்கு ஒரு முறை வேண்டாமா? இதில் மட்டும்தான் இப்படி என்றில்லை.



(பிற்பகல் 6-50)

"இந்த அரசு கலைஞர்களுக்கெல்லாம் பணம் தருகிறதே, இதைப் போய் கோபித்துக் கொள்ளலாமா? இது நியாயமா" என்றெல்லாம் எனது அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் இங்கே அவையில் பேசும்போது கோபித்துக் கொண்டார். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஒரு 10, 15 நாளைக்கு முன்னால்தானே ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது. இந்த ஆட்சியின் ராஜ நர்த்தகியான சுவர்ணமுகி ஒரு அறிவிப்பைச் செய்தார். 'எனக்கு அரசு உதவிப் பணம் தரப்படும் என்று அறிவிப்புதான் வந்தது. ஒரு மாதம்கூட எனக்குப் பணம் வரவில்லை' என்று அந்த அம்மையார் சொல்லியிருக்கிறார். கேவலமாக இல்லையா உங்களுக்கு? இது உங்களை மட்டுமா பாதிக்கிறது? இந்த ஆட்சியைப் பாதிக்கிறது, உங்களையும் எங்களையும் சேர்த்து இந்தச் செய்தி பாதிக்கிறது. ஒரு அறிவிப்பை வெளியிட்டதுதான் வெளியிட்டீர்கள், அதைக் காப்பாற்ற வேண்டாமா? அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று அந்த அம்மையார் வெதும்பிச் சொல்லுகிறார்களே, கேட்பதற்கு வேதனையாக இல்லையா? நீங்கள் செய்யும் அறிவிப்பை ஒரு உத்தரவாகப் போட உங்களுக்கு வழியில்லையா? வகை தெரியவில்லையா? அல்லது அதற்குத் தகுதியற்றுப் போய்விட்டீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

சில மாதங்களுக்கு முன்னாலே ஒரு உத்தரவை இந்த அரசாங்கம் போட்டது. தமிழகத்தில் உயர் பதவியில் இருக்கிற பல மருத்துவ அதிகாரிகளை ஒரே நாளில் இந்த ஊரை விட்டே போகச் சொல்லி உத்தரவு போடப்பட்டது. அந்த உத்தரவு ஒரு வாரம்கூட தாக்குப் பிடிக்க முடியவில்லை. அந்த உத்தரவை இன்றைக்குத் திரும்பப் பெற்றுவிட்டார்கள். நான்கு நாட்களுக்கு முன்னாலே முன்னாள் அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் ராஜிநாமா செய்தபோது, உடனே அந்த ஐ.எ.எஸ். அதிகாரிகளுடைய மாற்றல் உத்தரவை ரத்து செய்துவிட்டார்கள். ராஜினாமா செய்யப் போகிறார் என்று தெரிந்தவுடனே, அந்த உத்தரவை மாற்றிவிட்டார்கள். என்ன ஆயிற்று? இவர்களுக்கே வெட்கமாக இல்லையா? அந்த அதிகாரிகள் அனைவரும் ஏற்கெனவே எந்தெந்தப் பதவிகளில் இருந்தார்களோ அந்தந்தப் பதவிகளிலேயே நீடிப்பார்கள் என்று உத்தரவு போடுகிறார்கள். அந்தப் பதவிகளைச் சொல்லுவதற்கேகூட இவர்கள் வெட்கப்படுகிறார்கள். இவர்களைப் பார்த்து மக்கள் இன்றையதினம் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உணர்வு இவர்களுக்கே வந்துவிட்டது. அதை வெளியே காட்டிக்கொள்ள வெட்கப்படுகிறார்கள். அது மட்டுமல்ல. (மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மணி அடித்தார்கள்.) நான் சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் இன்டஸ்ட்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிறுவனத்தில் நடைபெறுகிற கூத்து கொஞ்ச நஞ்சமல்ல. அதில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தினுடைய நன்மைக்காக பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கிற இவர்களைப் பார்த்துக்கேட்கிறேன். இவர்களுடைய கடந்த 2½ ஆண்டு ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை என்று சொல்லட்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் அலுவல் நேரத்தை இன்று மாலை 7-00 மணிக்கு மேலும் நீடிப்பதாக இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குள்ளாக முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இன்றையதினம் நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சிகளுக்குப் பிறகு இவர்கள் ஆட்சியை விட்டு விலகி மறு தேர்தலைச் சந்திக்க விரும்புவார்களானால், இவர்களைப் பார்த்து மக்கள் கேட்பார்களே ? அப்போது என்ன சொல்வார்கள் ? ‘ எங்களுடைய ஆட்சிக் காலத்தில் இன்னின்ன புதிய தொழிற்சாலைகளை நாங்கள் துவக்கியிருக்கிறோம் ’ என்று சொல்லுகிற தகுதி இவர்களுக்கு இருக்கிறதா ? தயவு செய்து எண்ணிப் பாருங்கள். ஒன்றை நான் இங்கே மிகப் பெரிய பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ள முடியும். இந்தியாவிலேயே தொழில் துறையில் 3-வது இடத்தைப் பெறும் அளவுக்கு தமிழகத்தைக் கொண்டு வந்த பெருமை எங்கள் காங்கிரஸ் ஆட்சிக்கு உரியது. அந்தப் பெருமை அப்போது தொழிற் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த அன்றைய அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சாரும். அவர்தான் இன்றைக்கு மத்திய அமைச்சரவையிலே நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார். இன்றையதினம் இந்தியாவிற்கே ஒரு பெருமை தமிழகத்தின் மூலம் அவரால் கிடைக்கிறது. அந்த அளவுக்குத் தமிழகத்தில் அவர் தொழில் வளர்ச்சியைக் கொண்டு வந்தார். அதைப்போலவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, தொழில் வளர்ச்சி தமிழகத்தைப் பொறுத்தவரையில், சோடை போகவில்லை என்று புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, குறுக்கிடுவதில்லை என்று நாங்கள் இங்கே அவையில் அமர்ந்து கொண்டிருக்





கிறோம். ஆனால் இப்போது குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அதாவது “ கருடா, கருடா, சௌக்கியமா என்று கேட்கிற போக்கு இன்றையதினம் நீடிக்கிறது. இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் எல்லோரும் சௌக்கியமே என்று சொல்ல வேண்டிய காலம் வரும் ”. நாம் இங்கே பேசுவதை மக்களும் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். வார்த்தைகளை எப்படி உபயோகப்படுத்துகிறோம் என்பதையும் அவைகளைக் கொட்டிவிட்டால் மீண்டும் அவைகளை அள்ள முடியாது என்பதையும் அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே நாமும் இங்கே கவனித்துக்கொண்டிருக்கிறோம். என்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, கொஞ்சம் மனச்சாட்சிப்படி பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது “ உங்களுக்கு மனச்சாட்சி இல்லையா? ” என்று வேதனையோடு கேட்டார்கள். அவரை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் ‘ இன்றைக்கு நீங்களும் தயவு செய்து மனச்சாட்சியோடு பேசுங்கள் ’ என்பது தான். இன்றையதினம் பிரதம மந்திரியாக இருக்கும் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, தமிழகத்தில் தொழில் வளர்ச்சி கெட்டது ; எப்படி அவர்கள் ஆளத் தெரியாமல் இருந்தார்கள் என்று சொன்ன வாசகங்கள் நம் நினைவில் இருக்கின்றன. அவைகளெல்லாம் நாங்கள் பதில் சொல்லுகிற போது வெளிவரும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே 3-வது இடத்தைப் பெற்றிருந்தது என்று சொல்லுங்கள், ஒத்துக்கொள்கிறோம். அதற்காகப் பெருமைப்படுகிறோம். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, அது எந்த இடத்திற்குப் போனது, இப்போது அது எந்த இடத்திற்கு வந்து கொண்டிருக்கிறது என்று நாங்கள் பதில் சொல்லுகிறபோது, உரிய புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படும். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தயவுசெய்து கொஞ்சம் மனச்சாட்சியோடு பேசினால், மக்களுக்கும் அது நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : ஆக ‘ கருடா, கருடா, சௌக்கியமா? ’ என்று கேட்கிற நிலை இன்றைக்கு வந்திருக்கிறது என்பதும், ‘ இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லாம் சௌக்கியமே ’ என்று நாங்கள் பேசியிருப்போம் என்று சொல்லுகிற கட்டாயத்திற்கு இவர்கள் ஆளாகியிருக்கிறார்கள் என்பதும் ஏன் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா ? இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல் போனதன் விளைவு இவர்களை இந்த இடத்திற்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறது என்பது மட்டுமல்ல, ‘ ஏன் இல்லாமல் போனீர்கள்,

எப்படி இல்லாமல் போனீர்கள்' என்பதையெல்லாம் மனச்சாட்சியின் அடிப் படையில் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. நான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வக்காலத்து வாங்க வரவில்லை என்றாலும், தொழில் துறையில் அவர்கள் காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியைச் சொல்லாமலிருப்பது முறையில்லை என்பதால், சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலேதான் தூத்துக்குடி யில் ஸ்பிக் தொழிற்சாலை உருவாயிற்று. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தான் காரைக்குடியில் கெமிக்கல் பேக்டரி உருவாயிற்று. அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் 'டாக்னைட் பேக்டரி' இராணிப்பேட்டையில் உருவாயிற்று. அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் சென்னையிலே சதர்ன் போரக்ஸ் பேக்டரி உருவாயிற்று. அதைப்போலவே அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் மதுரை யில் பொட்டாஷியம் குளோரைடு பேக்டரி உருவாயிற்று. இவைகளைத் தவிர வேறு பல தொழிற்சாலைகளும் தமிழகத்தில் உருவாயின. இவைகளுக்குப் போடப்பட்ட முதலீடு சுமார் 5 கோடி ரூபாயிலிருந்து 150 கோடி வரை இருந்தது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் தொழில் வளர்ந்ததா, இல்லையா என்றால் . . .

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

**புலவர் புலமைப்பித்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம் பேச்சில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இன்னின்ன இடத்தில் இன்னின்ன திட்டங்களை வகுத்தார் கள் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதில் பொருளில்லை. காங்கி ரஸ் ஆட்சிபோது, தமிழகம் தொழில் வளர்ச்சியில் 3-வது இடத்தைப் பிடித் திருந்தது உண்மை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிந்து போகிறபோது, தமிழகத்தின் தொழில் வளர்ச்சி எத்தனையாவது இடத்தில் இருந்தது? இப்போது அ. தி. மு. க. ஆட்சியில் எத்தனையாவது இடத்தில் இருக்கிறோம் என்பதனையும் அருமை நண்பர் அவர்கள் விளக்கமாகச் சொன் னால் பரவாயில்லை.





**திரு. க. இராமமூர்த்தி :** காங்கிரஸ் ஆட்சியின்போது தமிழகம் தொழில் துறையில் 3-வது இடத்தைப் பிடித்திருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, அது எந்த இடத்தில் இருந்தது என்பதையும் இப்போது உங்கள் ஆட்சியின்போது எந்த இடத்தில் இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டியது இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர் களைச் சார்ந்ததாகும். ஆனால் இவர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்பது மட்டுமல்ல, இன்றையதினம் தமிழகம் இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் 13-வது இடத்தில் இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆளும் கட்சி உறுப்பினர்கள் இதுவரை பொறுமையாக இருந்து அவை முடிகிற நேரத்தில் குறுக்கிடுவ தால் நேரம் அதிகமாகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அவையைக் குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டுமென்றால், எல்லோரும் ஒத்துழைப்புத் தர வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, தமிழகம் தொழில் துறையில் இந்தியாவிலேயே 13-வது இடத்தைப் பெற்றிருக்கிறது என்ற பெருமையைப் பெற்றிருக்கிறோம். 3-வது இடத்திலிருந்து தமிழகம் இன்றைக்கு 13 வது இடத்திற்குச் சென்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அது குறைந்ததா அல்லது அதிகரித்ததா என்பதையெல்லாம் அமைச்சர்கள் ஆராய்ச்சி செய்து பதிலின் போது சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் இன்னும் எவ்வளவு நேரம் பேசுவதாக உத்தேசம்? இன்னும் 5 நிமிஷத்தில் முடித்துக் கொள்வதானால், தொடர்ந்து பேசலாம். இல்லை, இன்னும் அதிக மான நேரமாகும் என்றால், நாளை வைத்துக்கொள்ளலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** விரைவில் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள் பேசி முடிக்கும் வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** அ. தி. மு. க. ஆட்சியின்போது பல கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகள் உருவாக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, நடைபெற்றுக் கொண்டிருந்த ரூ. 10 கோடி முதலீடு செய்யப்பட்ட 'அலுமினியம் புளோரைடு பேக்டரி' என்ற நிறுவனம் இந்த ஆட்சியிலேதான் மூடப்பட்டுவிட்டது. அந்தத் தொழிற்சாலையைத் திரும்பத் திறப்பதற்காக இந்த ஆட்சி மேற்கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன என்பது இது வரையிலும் எனக்குத் தெரியவில்லை. தெரிந்தால் தயவுசெய்து பதில் சொல்லும்போது, அதைச் சொல்வது எங்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். டி. ஐ. ஐ. சி. என்கிற நிறுவனம் ஏதோ வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்குகிற நிறுவனமாக இன்றையதினம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறதே தவிர தொழில் துறைக்கு உதவி செய்வதற்காக இருக்கிற அமைப்பாக அது இன்றைக்கு இயங்கவில்லை. அதில் மார்வாடித்தனம்தான் காணப்படுகிறதே தவிர, வட்டிக்கு வட்டி வாங்குகிற தன்மைதான் காணப்படுகிறதே தவிர, வேறொன்றும் அதில் இல்லை. கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால், அதிலும் 'அலை ஓசையா' இழுத்து மூடு என்று சொல்லுகிற வேகம்தான் காணப்படுகிறதே தவிர, இதிலே வேகம் காட்டுவதன் மூலம் தமிழகத்தையே பழி வாங்குகிற உணர்வுதான் காணப்படுகிறதே தவிர, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு இவைகள் ஒன்றும் செய்யவில்லை என்ற உணர்வுதான் ஏற்படுகிறது. இது நியாயமல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 7-00)

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. அவர்கள் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். தமிழ் நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்காத மாதங்களே காலண்டர்களில் இல்லை. சனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என்று 12 மாதங்களிலும் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த விஷயத்திற்குள்ளே நான் போகவில்லை. ஆனால் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை இந்த அரசு நிச்சயமாக நடத்த முடியாது. நடத்துகிற காலம் வரையில் இவர்கள் ஆட்சியில் இருக்கப் போவதில்லை. பஞ்சாயத்துக்களை பைபர்கேஷன் பண்ணுவதற்காக இவர்களிடம் கோப்பு வந்தபோது, இரண்டாண்டுகளுக்கு முன்னாலேயே ஒரு உத்தரவை அதிகாரிகளுக்கு இட்டார்கள். "பைபர்கேஷன்





பற்றி இப்போழுது முடிவு எடுக்க வேண்டாம். விரைவிலே தேர்தலை நடத்தப் போகிறோம்" என்று உத்தரவிட்டார்கள். அப்படி உத்தரவிட்டு இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்று வரையில் தேர்தலை நடத்தியபாடில்லை. இந்த அளவுக்கு நாட்டு மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள், உணர்வுகள், செயல் திட்டங்கள் நடைமுறையில் இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்தில் நொறுங்கிப் பாழாகியிருக்கின்றன. தேர்தலைப் பொறுத்த வரையில், அதை அரசு தடுத்துக் கொண்டிருக்கிறது. இதனுடைய விளைவாக தமிழகம் எவ்வளவு பெரிய அபாராதத்தை இவர்களுக்குத் தந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் உட்பட அனைவரும் குறிப்பிட்டார்கள்.

தமிழகத்திலுள்ள தொழிற்சாலைகள் எல்லாம் இன்றைக்கு ஆந்திராவுக்கும், கர்நாடகாவுக்கும் சென்று கொண்டிருக்கின்றன. இவர்கள் பல காரணங்களுக்காக பெங்களூர் செல்லுகிறார்கள். அங்கே தொழில் வளம் எப்படி வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்த்திருக்க வேண்டாமா? கனரகத் தொழில்கள் எப்படி குவிந்திருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டாமா? அங்கேயிருந்த முதலமைச்சர் அவர்கள் மக்கள் மத்தியிலே செல்வாக்கைப் பெற்றிருந்தார்கள். இருந்தாலும் தேர்தலிலே தோல்வியைக் கண்டதும் மேலும் நிர்வாகத்தை நடத்த முடியாது என்று உதறிவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் மீண்டும் மக்கள் மத்தியிலே செல்லப் போகிறார்கள். அரசியல் ரீதியாக தென்னகத்து முதல்வர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, திரு. தேவராஜ் அர்சுதான் முதலில் வருகிறார்கள். அவருடைய கொள்கைகளிலே நான் கடுமையாக வேறுபாடு கொண்டிருந்தாலும், அரசியல் ரீதியாக அவர் மக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெற்றிருந்தவர் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதனால்தான் நான் பதவியை உதறிவிட்டுப் போகிறேன் என்று செல்லும் அளவிற்கு அவருக்குத் தைரியம் இருந்தது. அந்த தைரியம் இவர்களுக்கு இல்லையே. "எங்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது" என்று சொல்லக் கூடிய துணிச்சல் முந்தைய முதலமைச்சர்களுக்கு இருந்தது. தொழிற்சாலைகளை மேலும் பெருக்கினோம் என்று சொல்லக்கூடிய துணிச்சல் அடுத்து வந்த முதலமைச்சருக்கு இருந்தது. ஆனால் இந்த முதலமைச்சர் வெளியே போனாலும் கூட இதைச் செய்தார்கள் என்று சொல்லக் கூடிய துணிச்சல் உங்கள் கட்சிக்கும் வரவேண்டும். எந்த அளவிற்கு நிர்வாகம் சீரழிந்து போயிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மின்சாரத் துறையிலே யார் வேண்டுமானாலும் பணம் கட்டாமல் இருக்கலாம் என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. இவையெல்லாம் எப்படி

**வசூல் செய்யப் போகிறார்கள்? விவசாயிகளைப் பொறுத்தவரையில், ஏழை** விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் தரப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் உண்மையிலேயே பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு பேசுகிறார்களா, இல்லையா என்பது தெரியவில்லை. விவசாயிகளுக்கு உள்ள பிரச்சினைகளை உணர்கிறார்களா? அவர்களுக்கு நேரிடையாகப் பதில் அளிக்கப் போகிறார்களா இல்லையா? அதை விட்டுவிட்டு மற்ற குறுக்கு வழிகளில் சென்று கொண்டிருப்பது நியாயமல்ல, முறையல்ல. விவசாயிகளுடைய கடும் கோபத்திலிருந்து இந்த அரசு நிரந்தரமாகத் தப்பிக்க முடியாது. ஆட்சியிலேயிருந்து வெளியேறுவது என்பது வேறு. அதை யார் வேண்டுமானாலும் செய்ய முடியும். ஆனால் நீங்கள் அவலப்பட்டு வெளியேறுகிறபோது, பரிதாபப்படுவதற்குக்கூட ஆள் இல்லாமல் போகும். இப்படி விவசாயிகளுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு போகிற நிலை நல்லதல்ல.

இன்னுமொரு பிரச்சினை. அரசாங்கமே வாணிபம் செய்கிற சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்ட் இதுவரை நஷ்டத்திலே நடைபெற்றதே கிடையாது. ஆனால் கடந்த ஆறாண்டுக் காலத்திலே ஏற்பட்ட நஷ்டம் மட்டும் 1? கோடி ரூபாய் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கு முன்னே பல கோடி ரூபாய் இலாபத்தில் நடந்து வந்தது. இப்பொழுதுதான் முதன் முறையாக ஓராண்டிலே 12 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் "இன்டெசிஷன்" (Ind cision) முடிவு எடுக்க வேண்டிய நேரத்தில் முடிவெடுத்து அறிவிக்காததும், அதிகாரிகள் வேகமாகச் செயல்படாமல் கோப்புகளைக் கட்டி வைத்ததும்தான் இந்தத் துறையில் இந்த அளவிற்கு இழப்பு ஏற்பட்டதற்கான காரணங்கள். இதற்குத் தமிழகம் பெற்றிருக்கிற தண்டனை 12 கோடி ரூபாய் இழப்பு. இது முறையா நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

கடைசியில், ஒன்றை மட்டும் படித்துக்காட்ட விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்திருக்கிற ஒரு கடிதம். "கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் கூட்டுறவு ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் மொத்தம் 2,625 வீடுகள் கட்டப்பட வேண்டுமென அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இக்கூட்டுறவு ஆண்டில் 31—12—1979 வரை மொத்தம் 562 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சர்டிபிகேட் கொடுத்தால் கோபம் வரும். மற்ற புள்ளிவிவரங்களைச் சொன்னால், புதிய கூட்டு, பழைய





ட்டு, புதிய பிரச்சினைகள், பழைய பிரச்சினைகள் என்று சொல்லுகிறார்கள். ரசாங்க அதிகாரிகள் தந்திருக்கிற புள்ளிவிவரங்கள் இந்த அரசை எங்கே காண்டு போய் நிறுத்தியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒற்றர்களை வைத்துக் கண்காணிக்கிறார்கள் என்று சொன்னால், காவல் றையினர் இல்லையென்று சொல்லுவதாகத் தெளிவாகச் சொன்னார்கள். னால் நம்முடைய முதலமைச்சர்தான் **நான் தொலைபேசியில் பேசிய பல** பச்சுக்களை, டாக்டர் கலைஞரோடு, மற்ற நண்பர்களோடு பேசிய பேச்சுக்களை, குறித்து வைத்துக்கொண்டு "இந்த நபரோடு இப்படிப் பேசினார்" ன்ற தகவல்களைச் சொன்னதாக பல்வேறு தகவல்கள் நேரிடையாக வந்திருக்கின்றன. ஒற்றர்கள் மூலம் இப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் தவறான ாய்திகளை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள் **என்பதைத்** தரிவித்துக்கொள்ளுகிறேன். இவர்களைவிட கெட்டிக்காரர்கள் சினிமாத் றையில் இருக்கிறார்களோ இல்லையோ, அரசியலில் இருக்கிறார்கள் என்பதை வர்கள் மறந்துவிடக் கூடாது. ஆளுகிறவர்கள் **பகைமை உணர்வை** மறந்து பாறுப்புணர்வோடு இல்லாமல் ஆணவத்தோடு நடந்தால், மக்கள் மத்தியிலே சல்வாக்கை இழந்து இடையிலேயே கவிழ்ந்து போவார்கள், என்பதைத்தான் க்கள் நல்ல முறையில் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு ந்த அமைச்சரவை பரிதாபத்திற்குரியதாகவும், யாராலும் பாதுகாக்க முடியாது என்ற அளவிலும் இருக்கிறது என்பதைத் தெரிவித்து, முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை **11** மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-07)

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

59. Notification issued with G.O. Ms. No. 265, Home (P & E IV), dated the 2nd February 1980 in regard to amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. (E &T). [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

## *B. Reports, Notifications and Other Papers.*

10. The Constitution (Forty-fifth Amendment) Bill. 1980, as introduced in the Lok Sabha.

* 11. The Constitution (Forty-fifth Amendment) Bill, 1980, as passed by the Houses of Parliament.

* 12. Extract of paragraphs 1 to 4 of his letter No. RS. 1/1/80-B, dated 28th January 1980 from the Secretary-General, Rajya Sabha Secretariat, New Delhi.

* Laid on the Table of the House on 4th February 1980.



இணைப்பு I.

*[323 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 40-க்கான விடையைக் காண்க.]*

விவர அறிக்கை.

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், தொழில் நுட்ப பொருளாதார ஆய்வின் அடிப்படையில் 37 வகையான தொழில்களில் சுமார் 100 சிறு தொழிற்சாலைகளை 1979–80-ல் ஊக்குவிப்பதற்கான வாய்ப்பினை விளக்கும் செயல் திட்டம் ஒன்றினை, சென்னையிலுள்ள மைய அரசின் சிறு தொழில் பணி நிலையம் தயாரித்து அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்தொழில்கள் துவக்கக்கூடிய சிறு தொழில் முனைவர்களை ஊக்குவித்து, கூடிய விரைவில் அவை தொழில்களாக உருவாக மாவட்டத் தொழில் மையம் எல்லா உதவிகளையும் அளிக்கும்.

(இ) & (உ) செயல் திட்டத்தின் வாய்ப்புள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ள தொழில்கள், அவை அமைப்பதற்காகப் பரிந்துரை செய்யப்பட்ட இடங்கள் பற்றிய விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

(எ) இல்லை.

| வரிசை எண். | தொழில். | நிறுவப்படக்கூடிய தொழில்களின் எண்ணிக்கை. | இடம். | ஒவ்வொரு தொழில் நிலையத்திற்கும் தேவைப்படும் முதலீடு: நிலையான முதலீடு (நிலம் மற்றும் கட்டிடம் தவிர) (ரூபாய் இலட்சத்தில்) | ஒவ்வொரு தொழில் நிலையத்திற்கும் தேவைப்படும் முதலீடு: மூன்று மாதங்களுக்கு நடைமுறை மூலதனம். (ரூபாய் இலட்சத்தில்) | ஒவ்வொரு தொழில் நிலையத்திலும் வேலை வாய்ப்பு பெறுபவர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | **வேளாண்மை சார்ந்த தொழில்கள்.** | | | | | |
| 1 | முந்திரிக்கொட்டை பக்குவப் படுத்துதல் மற்றும் முந்திரி எண்ணெய். .. | 5 | காரைக்குடிக்கு அருகில் | 1.60 | 8.00 | 340 |
| 2 | முந்திரி பழச்சாறு | 1 | காரைக்குடிக்கு அருகில் | 0.45 | 1.20 | 8 |
| 3 | தென்னை நார் எடுத்தல் மற்றும் கயிறு தயாரித்தல் .. | 5 | சிங்கம்புணரி<br>சாயல்குடி<br>திருப்புவனம்<br>இராமேஸ்வரம்<br>தொண்டி | 2.50 | 1.00 | 50 |
| 4 | மல்லிகை நறுமணத் தைலம் .. | 1 | காரியாபட்டி. | 1.60 | 2.50 | 15 |
| 5 | பனை நார் எடுத்தல் .. | 6 | மண்டபம்<br>இராமேஸ்வரம்<br>கமுதி<br>பரமக்குடி<br>இராமநாதபுரம்<br>வத்திராயிருப்பு | 0.20 | 0.25 | 20 |
| 6 | பனை நார் தூரிகை, துடைப்பம் | 6 | மண்டபம்<br>இராமேஸ்வரம்<br>கமுதி<br>பரமக்குடி<br>இராமநாதபுரம்<br>வத்திராயிருப்பு | 0,30 | 0.50 | 20 |
| | **கால்நடை சார்ந்த தொழில்கள்.** | | | | | |
| 7 | தோல் பதனிடுதல் .. | 6 | பரமக்குடி-5<br>ஏழாயிரம் பண்ணை-1 | 3.00 | 17.70 | 37 |
| 8 | பக்குவப்படுத்தப்பட்ட தோல்.. | 3 | பரமக்குடி | 10.00 | 3.70 | 59 |
| 9 | தோல் காலணிகள் .. | 15 | இளையான்குடி-4<br>பரமக்குடி-2<br>திருப்பத்தூர்-2<br>காரைக்குடி-2<br>இராஜபாளையம்-2<br>விருதுநகர்-2<br>அருப்புக்கோட்டை-1 | 0.07 | 0.08 | 11 |
| 10 | தோல் பொருள்கள் .. | 5 | இளையான்குடி | 0.20 | 0.62 | 13 |

| வரிசை எண். | தொழில். | நிறுவப்படக் கூடிய தொழிற்களின் எண்ணிக்கை. | இடம். | ஒவ்வொரு தொழில் நிலையத்திற்கும் தேவைப்படும் முதலீடு: நிலையான மூலதனம் (நிலம் மற்றும் கட்டிடம் தவிர) | ஒவ்வொரு தொழில் நிலையத்திற்கும் தேவைப்படும் முதலீடு: மூன்று மாதங்களுக்கு நடைமுறை மூலதனம். | ஒவ்வொரு தொழில் நிலையத்திலும் வேலை வாய்ப்பு பெறுபவர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| | | | | (ருபாய் இலட்சத்தில்) | (ருபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | கடல் சார்ந்த துணைத் தொழில்கள் | | | | | |
| 11 | கடற்கோரை .. | 1 | மண்டபம் | 4.00 | 2.00 | 15 |
| 12 | கட்டிப்போகாத பொடித்த உப்பு | 1 | வாலினோக்கம் | 1.58 | 0.27 | 10 |
| 13 | கால்நடைகளுக்குப் பயன்படுத்தும் உப்பு .. | 1 | வாலினோக்கம் | 0.11 | 0.04 | 5 |
| 14 | பொடித்த உப்பு .. | 1 | வாலினோக்கம் | 0.58 | 0.03 | 6 |
| 15 | சங்குப் பொருள்கள் (கூட்டுறவு அடிப்படையில்) .. | 2 | இராமேஸ்வரம் கீழக்கரை | 0.50 | 0.75 | 75 |
| 16 | 'நைலான்' மீன் வலைகள் .. | 1 | இராமேஸ்வரம் | 8.00 | 2.00 | 20 |
| 17 | நாட்டுப்படகு .. | 1 | தொண்டி. | 0.30 | 0.62 | 10 |
| | கனிவளம் சார்ந்த தொழில்கள்: | | | | | |
| 18 | செங்கல் .. | 7 | இராமநாதபுரம் முதுகுளத்தூர் சிவகங்கை மானாமதுரை திருவாடானை காரைக்குடி திருப்பத்தூர் | 0.85 | 0.95 | 60 |
| 19 | கூரை ஓடுகள் .. | 4 | சிவகங்கை-2 மானாமதுரை-2 | 3.00 | 1.00 | 75 |
| 20 | நீர் கலந்த சுண்ணாம்பு அடிப்படையில் தேவை தொழில்கள் .. | 1 | அருப்புக்கோட்டை | 0.80 | 1.26 | 20 |
| 21 | தீப்பெட்டித் தொழில்கள் (கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு சங்கத்திற்கும் 100 உறுப்பினர்களாக 400 தொழில் நிலையங்கள்). .. | 4 | இராமநாதபுரம் முதுகுளத்தூர் திருப்பத்தூர் சிவகங்கை | 0.60 | 0.08 | 5 |
| 22 | டயர் புதுப்பித்தல் .. | 2 | இராஜபாளையம் அருப்புக்கோட்டை | 0.30 | 0.10 | 10 |
| 23 | வண்ணச் சாயங்கள் .. | 1 | அருப்புக்கோட்டை | 1.00 | 0.50 | 20 |

| வரிசை எண். | தொழில். | நிறுவப்படக்கூடிய தொழில்களின் எண்ணிக்கை. | இடம். | ஒவ்வொரு தொழில் நிலையத்திற்கும் தேவைப்படும் முதலீடு: நிலையான முதலீடு (நிலம் மற்றும் கட்டடம் தவிர) | ஒவ்வொரு தொழில் நிலையத்திற்கும் தேவைப்படும் முதலீடு: மூன்று மாதங்களுக்கு நடைமுறை மூலதனம். | ஒவ்வொரு தொழில் நிலையத்திலும் வேலைவாய்ப்பு பெறுபவர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 24 | மருந்துகள் .. | 1 | மானாமதுரை | 1.20 | 0.50 | 15 |
| 25 | ஊற்று பேனாக்கள் .. | 2 | சாத்தூர் | 0.30 | 0.60 | 12 |
| 26 | கற்பூர வில்லைகள் .. | 1 | இராமேஸ்வரம் | 0.30 | 0.15 | 12 |
| 27 | உலர் சலவை (Dry Cleaning) .. | 1 | இராமேஸ்வரம் | 0.96 | 0.08 | 16 |
| 28 | தெளிப்பான்கள் மற்றும் துடைப்பான்கள் பழுதுபார்க்கும் பணி .. | 1 | அருப்புக்கோட்டை | 0.84 | 0.21 | 11 |
| 29 | துவிச்சக்கர வண்டிப் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள்.. | 2 | இராஜபாளையம் காரைக்குடி | 0.50 | 0.60 | 12 |
| 30 | நவீன வேளாண்மைக் கருவிகள் | 1 | திருப்பத்தூர் | 0,60 | 1.08 | 16 |
| 31 | 'அரிக்கேன்' விளக்குகள் .. | 1 | இராஜபாளையம் | 1.66 | 1.00 | 106 |
| 32 | தானியங்கி வண்டிகள் பழுது பார்த்தல் .. | 3 | விருதுநகர் இராஜபாளையம் காரைக்குடி | 2.00 | 0.18 | 18 |
| 33 | வீட்டு உபயோக மின்சாரக் கருவிகள் .. | 1 | காரைக்குடி | 0.60 | 2.21 | 19 |
| 34 | மின்சார மோட்டார் பழுது பார்த்தல் மற்றும் கம்பிச் சுருள்களைத் திருத்தியமைத்தல் .. | 2 | அருப்புக்கோட்டை காரைக்குடி | 0.16 | 0.17 | 6 |
| 35 | ஆயத்த உடைகள் .. | 2 | சிவகங்கை விருதுநகர் | 2.00 | 7.00 | 80 |
| | தீப்பெட்டி, மற்றும் அச்சுத் தொழில்களுக்கு உரிய துணைத் தொழில்கள். | | | | | |
| 36 | தீக்குச்சி மெழுகு/பாரபின் மெழுகு .. | 1 | சிவகாசி | 2.40 | 1.00 | 18 |
| 37 | காகிதக் கழிவுப் பொருள்களிலிருந்து அட்டைத்தாள் .. | 1 | வத்திராயிருப்பு | 1.10 | 0.39 | 12 |

[1980 பிப்ரவரி 5

## இணைப்பு II

[344ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க].

இம்மாநிலத்தில் கடந்த வருட அளிப்பு நிலையைக் காட்டிலும் இவ்வருடத்தில் (1979—80) டீசல் எண்ணெய் தேவை 15% அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மத்திய அரசின் பெட்ரோலியத்துறை இம்மாநில அரசுக்கு பல தொடர்புகளின் மூலம் டீசல் எண்ணெய் அளிப்பு நிலை கடந்த வருட அளிப்பு நிலையைக் காட்டிலும் 5%-க்கு மேல் இருக்கலாகாது என வரையறுத்துள்ளது. இவ்வரையறிவிப்பின்படி கீழ்க்காணும் மாதங்களில், மத்திய அரசு இம்மாநில அரசுக்கு டீசல் எண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. இது குறித்தும் எண்ணெய் கம்பெனிகளால் விநியோகத்திற்காக வழங்கப்பட்ட டீசல் எண்ணெயின் அளவு குறித்தும் விவரப்பட்டியல் அடியில் தரப்பட்டுள்ளது:—

| | ஒதுக்கீடு. | | விநியோகத்திற்கு வழங்கப்பட்டது. | |
|---|---|---|---|---|
| | மெட்ரிக் டன்கள். | கிலோ லிட்டர்கள். | மெட்ரிக் டன்கள். | கிலோ லிட்டர்கள். |
| அக்டோபர் 79 | *63874 | 77288 | 63474 | 76803 |
| நவம்பர் 79 | *63636 | 77000 | 59196 | 71627 |
| டிசம்பர் 79 | *68283 | 82622 | 66841 | 79877 |
| ஜனவரி 80 | 66360 | 80295 | விவரங்கள் மாநில ஒருங்கிணைப்பாளரால் சேகரிக்கப்படுகிறது. | |

* ஒதுக்கீடு தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் தமிழகத்திற்கு மத்திய அரசால் ஏற்கனவேயே ஒதுக்கீடு முறையில் வாக்குறுதி அளிக்கப்பட்டதைக் காட்டிலும் கூடுதலாக 3,000, 5,000, 8,000 மெட்ரிக் டன்கள் முறையே அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கு வழங்கியதையும் சார்ந்தவையாகும்.

இம்மாநிலத்திற்கு மத்திய அரசு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு டீசல் எண்ணெயைக் கீழ்க்காணும் ஒதுக்கீடு முறையில் வழங்குவதற்கு வாக்குறுதி அளித்துள்ளது.

| | மெட்ரிக் டன்கள் | கிலோ லிட்டர்கள் |
|---|---|---|
| பிப்ரவரி 1980 | 64,754 | 78,352 |
| மார்ச் 1980 | 73,421 | 88,839 |



1980 பிப்ரவரி 5]

இம்மாநிலத்தில் மாநில போக்குவரத்து ஆணையாளர் டீசல் விநியோகத்தில் கீழ்க்காணும் துறைகளில் முதன்மையைக் கடைபிடித்து வருகின்றார் :—

1) வேளாண்மைத்துறை
2) மீன்பிடி மரக்கலங்கள்
3) போக்குவரத்து
4) தொழில்துறை.

மாவட்டங்களில் டீசல் எண்ணெயை பங்கீடு செய்யும் பொழுது மேற்காணப்படும் துறைகளுக்கு முதன்மையளிக்கும்படி மாவட்ட ஆட்சியாளர்களை கேட்டுக் கொண்டுள்ளது. இது மாதிரியான முறையைக் கடைப்பிடிப்பதால் தற்சமயம் டீசல் எண்ணெயை வழங்குதல் பற்றி எவ்விதமான சிக்கலோ, பற்றாக் குறையோ இல்லை என போக்குவரத்து ஆணையாளர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

டீசல் எண்ணெய் விநியோகத்திற்காக துறை வாரியான விவரங்கள் மாநில ஒருங்கிணைப்பாளரால் பிற எண்ணெய் கம்பெனிகளுடன் கலந்து சேகரிக்கப்பட வேண்டியுள்ளதால் தற்சமயம் அவ்விவரங்களை அளிக்க இயலாத நிலை ஏற்பட் டுள்ளது என போக்குவரத்து ஆணையர் தெரிவித்துள்ளார்.

பயணப் போக்குவரத்தைத் தடைப்படுத்தும் வகையில் டீசல் எண்ணெய் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது பற் குறிப்பாக எவ்விடத்தில் அவ்வாறு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தால் அது குறித்து போக்குவரத்து ஆணையாள மாநில ஒருங்கிணைப்பாளருடன் கலந்து ஆலோசித்து தக் நடவடிக்கை எடுப்பார்.

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

புதன்கிழமை, 1980 பிப்ரவரி 6

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 41-ம், 42-ம் ஒத்தி வைக்கப் படுகின்றன. வினா எண் 43 எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### *Renaming of Chingalpattu District.*

* 43 *Q.*—THIRU NEELANARAYANAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether the Government have any proposal to change the name of 'Chingalpattu district' as 'Kancheepuram District'; and

(*b*) if so, when it will be changed?

### செங்கற்பட்டு மாவட்டத்தின் பெயரை மாற்றுதல்.

திரு. நீலநாராயணன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தின் பெயரை, காஞ்சிபுரம் மாவட்டம் என்று மாற்றும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) இல்லை.

(இ) இடமில்லை.

**திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திலே போலீஸ் இலாகாவைப் பொறுத்த வரையில் கிழக்கு, மேற்கு என்று நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல செங்கற்பட்டு மாவட்டத்தையே இரண்டாகப் பிரிப்பதற்கு ஏதாவது உத்தேசம் அரசிடத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** செங்கற்பட்டு மாவட்டம் மட்டுமல்ல, போலீஸ் நிர்வாக வசதிக்காக கிழக்கு-மேற்கு, வடக்கு-தெற்கு என்று மற்ற பல மாவட்டங்களில் பிரிக்கப்பட்டிருந்தாலும், அங்கெல்லாம் மாவட்டம் மட்டும் ஒரே மாவட்டமாகத்தான் இருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அப்படி செங்கற்பட்டு மாவட்டத்திற்குப் பெயர் மாற்றம் செய்யும்போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரை வைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பெயர் மாற்றுவதிலே மாறுபட்ட கருத்துக்கள் இங்கே வந்துகொண்டிருக்கின்றன. பெயர் மாற்றுவதிலே மாறுபட்ட கருத்துக்கள் எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. சந்தர்ப்பம் வரும்போது, அதைச் செய்யும். அந்த அரசு நழுவவிடாது.

**திரு.வே. தங்கப்பாண்டியன் :** பெயர் மாற்றத்தைப்பற்றி ஒரு நல்ல ஆலோசனையை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுபோலவே இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து அதில் ஒரு பகுதிக்குத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயரை வைப்பதாக அறிவிக்கப்பட்டது. இப்போது அதனால் சில பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் பெயர் மாற்றத்தைச் செய்வதிலே அரசு வேகம் காட்ட முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அரசு எடுத்த முடிவிலே மாற்றம் இல்லை. இதுபற்றி மாறுபட்ட கருத்துக்கள் வந்தாலும், அதைப் பிரித்து, இரண்டு மாவட்டங்களாக வருகிறபோது, ஒரு பகுதிக்கு முத்துராமலிங்கத் தேவர் பெயர் வைக்கப்படும் என்பதை அரசின் சார்பில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நிர்வாக வசதிக்காக வட ஆற்காடு மாவட்டத்தைக்கூட பிரிப்பதாகவும், அதுபற்றிப் பரிசீலனையில் இருப்பதாகவும் இந்த அவையிலே அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஏதாவது குறிப்பு ஆய்வில் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இந்த அரசு வந்த பிறகு வந்த அமைச்சர் அறிவித்தார்களா அல்லது இந்த அரசில் இப்போது இருக்கின்ற வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்களா, யார் அறிவித்தது என்பதுபற்றி எனக்குத் தெரியாது. மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பது என்பதல்ல. அதற்கும் கீழே இருக்கின்ற வட்டங்களை, கிராமங்களை, பகுதிகளாக அமைக்க வேண்டுமென்று பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அது மாதிரிதான் மாவட்டங்களையும் இரண்டு இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தால், தலைவர் காயிதே மில்லத் அவர்களின் பெயரை ஒரு பகுதிக்கு வைப்பதற்கு அரசு யோசிக்குமா ,

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் யோசனை இல்லை. அப்படிப் பிரிக்கப்படும்போது, சமுதாயத்திற்காகப் பாடுபட்ட எல்லோரையும் இந்த அரசு பார்த்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Raid on Jewel Shops.*

* 44 *Q.*—PULAVAR PULAMAIPITHAN (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether it is a fact that the Commercial Tax Officers raided the Jewel Shops in Madras district February, 1979 ;

(*b*) if so, the number of Jewel Shops raided; and

(*c*) the value of Tax amount and fines collected by the Government thereby?

## நகைக்கடைகளில் திடீர் சோதனை.

**புலவர் புலமைப்பித்தன் (திரு. க. அறிவழகன் சார்பில்) :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், சென்னையில் நகைக் கடைகளை வணிகவரி அதிகாரிகள் திடீர் சோதனை செய்தார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எத்தனை நகைக் கடைகள் சோதனை செய்யப்பட்டன.

(உ) அதனால் அரசிற்குக் கிடைத்த வரித் தொகையும் அபராதமும் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மேலவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்னை நகரில் வணிக வரித் துறை நகைக் கடைகளிலே பரிசோதனை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இது போன்று வேறு நகரங்களிலும் சோதனை நடத்தப்பட்டதா ? அப்படி நடத்தப்பட்டு அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய்த் துறை, தமிழ் நாட்டிலே பல பகுதிகளில் பல நகரங்களில் இப்படியெல்லாம் திடீர் சோதனை செய்திருக்கிறது. அதனால் எவ்வளவு வருவாய் என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை. சென்னைபற்றித்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையைப்பற்றி மட்டும் நான் இன்றைக்குச் சொல்லவேண்டுமானால், 1979 ஆம் ஆண்டு செய்யப்பட்ட பரிசோதனையில் கணக்குக்கு வராத தொகை ரூபாய் 199.43 லட்சம். அதனால் வரித் தொகையில் அரசுக்கு வருவது ரூபாய் 7.43 லட்சம் தண்டத் தொகையாக அரசுக்கு வருவது ரூபாய் 5.13 லட்சம். இணக்கத் தொகை ரூபாய் 0.65 லட்சம். இதனால் அரசுக்கு இந்தத் தொகை வந்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நகைக் கடைகளிலே அடகு வைத்த நகைகள் இருந்தால், அவைகளை ஏலம் போடக்கூடாது என்று சில மாதகாலமாக இருந்து வந்தது. சில மாதங்களாக கடைக்காரர்கள் நகைகளை ஏலம் விடுகிறார்கள். இதன் காரணமாக ஏழை எளியவர்களுடைய நகைகள் பறி போகின்றன. அதனைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நகைக் கடைக்கும் வட்டிக் கடைக்கும் எவ்வளவோ வித்தியாசம். ஆனால் அவர்கள் வட்டிக் கடையைப் பற்றிப் பேசுகிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. மக்களுடைய பிரச்சினை என்பதற்காக, சம்பந்தம் இல்லாவிட்டாலும், நான் சொல்கிறேன்.

நகைகளை வட்டிக் கடையில் யாரும் ஏலம் போட முடியாது. அப்படி ஏலம் போடுவதாக இருந்தாலும், அங்கே இருக்கின்ற வருவாய் வட்ட அதிகாரி, கோட்டாட்சித் தலைவருக்கு அதைச் சிபாரிசு செய்ய வேண்டும். அவர்களிடமிருந்து அனுமதி பெற்றுத்தான் யாராக இருந்தாலும் ஏலம் போட வேண்டும். இன்று பான் புரோக்கர்ஸ் ரிஜிஸ்டர், பதிவு செய்கின்றபோது, அது குறித்து இந்தச் சட்டத்தில் எல்லாம் விளக்கமாக இருக்கிறது. அப்படி எங்காவது கோட்டாட்சித் தலைவரின் அனுமதியில்லாமல் ஏலம் விட்டிருந்தால், பதிவு செய்த பான் புரோக்கர் தவறு செய்திருந்தால், அது சம்பந்தப்பட்ட வட்டாட்சித் தலைவரிடம் மனுச் செய்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Staff of Mobile Science Laboratory Vans.*

* 45 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the services rendered by the persons in the Mobile Science Laboratory Vans are now brought under Vacational Department; and

(*b*) if so, the reasons therefor ?

*அறிவியல் ஆய்வுக்கூட இயல் ஊர்தி பணியாளர்கள்.*

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அறிவியல் ஆய்வுக்கூட இயல் ஊர்திகளில் பணியாற்றி வருவோரின் பணிகள், விடுமுறைக் காலப் பணித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இப்போது கொண்டு வரப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இயங்கும் அறிவியல் ஆய்வக ஊர்திகள் கோடை விடுமுறையிலும் பிற விடுமுறையிலும் பள்ளிகள் மூடப்படும்பொழுது பள்ளிகளுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. அவ்வூர்திப் பணியாளர்கள் அவ்விடுமுறைக் காலங்களை அனுபவிக்கலாம். எனவே அவ்வூர்திகளின் பணியாளர்களும் விடுமுறை பணியைச் சார்ந்தவர்கள் என 1—2—1977 முதல் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : இந்த ஆய்வுக் கூடங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், ஆய்வாளர்களாக இருந்துகொண்டு அவ்வப்போது வழங்கப்பட்ட பணிகளையும் செய்து வருகிறார்கள். அந்தப் பணிக்காலத்தையும் கணக்கிட வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட காலங்களிலே சென்று அந்தந்தப் பள்ளிகளிலே ஆய்வு செய்து காட்டிவிட்டு, மீண்டும் வந்து மற்றப் பணிக்குத் தங்களை ஆயத்தம் செய்துகொண்டு அவர்கள் பணியைச் செய்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு விடுமுறை அனுமதிக்கலாம். ஆனால் அவர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர்களால் விடுமுறை சலுகைகள் மறுக்கப்படுகின்றன. அவர்கள் விடுமுறைப் பணியைச் சார்ந்தவர்கள் என்று சொல்வது நியாயம் அல்ல. ஆய்வாளர் பணியையும், ஆசிரியர் பணியையும் கலந்து மாற்றி மாற்றிச் செய்கிறார்கள். அவர்களுக்கும் ஆசிரியர்கள் பெறும் ஊதியம்தான் வருகிறது. இந்தப் பிரச்சினையைப்பற்றி மீண்டும் பரிசீலித்து இவர்கள் விடுமுறைப் பணியைச் சார்ந்தவர்கள் அல்லர் என்ற ஆணையை அரசு பிறப்பிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பள்ளி விடுமுறைக் காலத்தை அந்தப் பணியில் இருப்பவர்கள் அனுபவிக்கின்ற காரணத்தால்தான், இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் பொருத்தமானது என்று அரசு கருதுகிறது.

(முற்பகல் 11-10)

திரு. பா. ரா. தாமஸ் : இந்தப் போதனை செய்து வருகிற ஆசிரிய ஆய்வாளர்கள் தொடர்ந்து மாதந்தோறும் விடுமுறையில்லாமல் பணியாற்றுவதாக, பலரைச் சந்தித்தபோது அறிகிறேன். அவர்கள் தொடர்ந்து அலுவலகங்களில் பணியாற்றுகிறார்கள். பள்ளி நடக்கும்போது, பள்ளிக்குச் சென்று பாட போதனை செய்கிறார்கள். விடுமுறை நாட்களில் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு வந்து, கையெழுத்து இட்டு, பணியாற்றுகிறார்கள். எனவே இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் விடுமுறை நாட்களை அனுபவிக்க முடியவில்லை என்ற குறைபாடு இருந்தால், அதைப்பற்றிச் சொன்னால் ஆராயலாம்.

## Teachers Home

*46. *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether plans and estimates for the construction of Teachers Home in Madras have been prepared; and

(*b*) if so, the details thereof?

## ஆசிரியர் இல்லம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் ஆசிரியர் இல்லம் கட்டுவதற்கான திட்ட விவரங்கள் ஏதேனும் தயாரிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் பதவி ஏற்று சிறிது காலத்திற்குள்ளே இவ்வாறு ஆசிரியர் இல்லங்கள் கட்டப்படுமென்று அறிவித்தார்கள். 1978-79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேகூட, கல்விக் கொள்கை என்ற அரசினுடைய அறிக்கையிலே அதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும், அதற்கான விவரங்கள் இன்னும் தயாரிக்கப்படுகின்றன என்றால், அதற்கான கால தாமதத்திற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அந்த இல்லங்களைக் கட்டுவதற்கு கல்வித் துறை அதிகாரிகள் ஆலோசனையாக இல்லையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த ஆசிரியர் இல்லத்தை இப்போது இருக்கின்ற கல்வி இயக்குநர் அலுவலக வளாகத்திற்குள் கட்டுவதாக முதலிலே நினைத்திருந்தோம். ஆனால் அதற்காக நியமிக்கப்பட்ட ஸ்டேட் லெவல் கமிட்டி 6—11—1978-ல் கூடி, இந்த இல்லம் அந்த வளாகத்திற்குள்

இருக்கக்கூடாது, வெளியில்தான் இருக்க வேண்டுமென்ற முடிவையும், ஆசிரியர் இல்லத்திற்கு ஒரு கட்டிடத்தையோ அல்லது நிலத்தையோ வாங்கி அந்த ஆசிரியர் இல்லத்தை ஏற்படுத்தலாமென்றும் யோசனை சொல்லி யிருக்கிறது. எனவே அதற்கான நிலத்தை வாங்குவதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக பள்ளிக் கல்வி இயக்குநர், நிதித் துறை துணைச் செயலாளர், திரு. எஸ். ஜெயராமன், எம்.எல்.ஏ., மற்றும் திரு. எம்.பி., ஷண்முகசுந்தரம் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இது தொடர்பாக எம்.எம்.டி.ஏ.-வுடன் தொடர்பு கொண்டு யோசனை செய்து வருகிறார்கள். அவர்கள் முடிவு தெரிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆசிரியர்களே முயற்சி செய்து, சில மாவட்டத் தலைநகர்களில் இப்படிப்பட்ட கட்டிடங்களை விரைவாகக் கட்டி முடித்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, அரசு இந்தப் பிரச்சினையில் அக்கறை காட்டும்போது, இவ்வளவு காலமாகியிருப்பது ஏற்புடையதாக இல்லை என்பது என்னுடைய பணிவான கருத்து. எனவே குறிப்பிட்டு இத்தனை மாதங்களில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் எனவும் அமைச்சரவர்கள் உறுதிமொழி அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த இல்லத்தை பத்து லட்சம் ரூபாய் அளவில் கட்டப்போவதாக அறிவித்துள்ளோம். வெளியூரிலிருந்து ஆசிரியர்கள் சென்னை வரும்போது, தங்குவதற்கான வசதிகளோடு கூட்டம் நடத்துவதற்கான கூடமும், உணவு விடுதியும், நூலகமும் ஏற்படுத்த வேண்டு மென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதிலே ஆசிரியர்கள் தாங்களாகவே காரியத்தைச் செய்கிறபோது, விரைவிலே செய்ய முடிகிறது, அப்படி ஏன் அரசால் செய்ய முடியவில்லை என்று உறுப்பினரவர்கள் கேட்டார்கள். அரசு செய்யும்போது, பல்வேறு பாதுகாப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டி யிருக்கிறது. இன்றையதினம் வேகமாகச் செய்ய வேண்டுமென்று சொல்லும் போது, ஏதாவது குறைபாடு ஏற்பட்டால், அதை நீங்களேதான் சொல்ல இருக்கிறீர்கள். எனவே அப்படிக் குறைகளைச் சொல்லாமல் இருக்கும் முறையில், இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும்.

திரு. ஆ. திராவிடமணி : விட்டு நெருக்கடி மிகுந்த மதுரை, கோவை, நெல்லை, குமரி போன்ற இடங்களிலும் ஆசிரியர் இல்லங்கள் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்படுமா ?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர் இல்லம் என்று சொல்லும்போது, ஆசிரியர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டமல்ல. வெளி யூரிலிருந்து வரும் ஆசிரியர்களுக்கு தங்க லாட்ஜு போல அந்த இல்லங்கள் உதவும். ஓட்டல்களில் தங்கும் நிலைமைகள் ஏற்பட்டால், பணம் செலவா கிறது என்பதோடு, அவர்கள் மற்ற ஆசிரியர்களோடு கலந்து பேசக்கூடிய சூழ்நிலை இல்லை. அந்தச் சூழ்நிலையையும் ஏற்படுத்த வேண்டுமென்றுதான் அவர்களுக்கு ஆசிரியர் இல்லங்களைக் கட்டுகிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களிலே ஆசிரியர் இல்லங்களுக்குப் பணம் வசூலிக்கப்பட்டு நீண்டகாலமாக அவை கட்டப்படாமல் இருக்கின்றன. எனவே எந்தெந்த மாவட்டங்களிலே ஆசிரியர் இல்லங்கள் இருக்கின்றன என்பதையும், எந்தெந்த மாவட்டங்களில் விரைவிலே முடிக்க அரசு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்னை நகரத்திலே ஆரம்பிக்க வேண்டிய ஆசிரியர் இல்லம்பற்றிய கேள்வி கேட்கப்பட்டுள்ளதால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்விக்கு விவரங்கள் என்னிடம் இல்லை. எனவே தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் சேகரித்து அளிக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தேர்வு மற்ற பணிகளுக்காக ஆசிரியர்கள் சென்னைக்கு வரும்போது, இப்படிப்பட்ட இல்லம் இல்லாததால், மிகவும் சிரமப்படுகிறார்கள். அது விரைவில் கட்டப்படுமா என்று அறிய விரும்பு கிறேன். ஆசிரியர் இல்லம் போன்று மாணவர்களுக்கும் இல்லம் கட்ட வேண்டும். விளையாட்டுப் போட்டி போன்றவற்றுக்காக சென்னை வரும் மாணவர்கள் தங்குவதற்கு அவதிப்படுகிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது ஆசிரியர் இல்லம் பற்றிய கேள்வி. ஆசிரியர் இல்லம் கட்டுவதில் ஆர்வத்தோடு இருக்கிறோம். அதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை வேகமாக, விரைவாகச் செய்ய விரும்புகிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : சென்னையில் ஆசிரியர் இல்லம் கட்டுவதற்காக 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மத்திய தேசிய ஆசிரியர்கள் நல நிதியிலிருந்து எவ்வளவு நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டிருக்கிறது? மாநில அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது? ஆசிரியர்களே கலெக்ஷன் மூலம் எவ்வளவு சேர்த்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தேசிய ஆசிரியர்கள் நல நிதி என்பது கொடிகள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு மாவட்டங்களிலும் ஆசிரியர்கள் மூலமாக வசூலிக்கப்பட்ட தொகைதான். அதிலிருந்துதான் 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம்.

## *Service Period taken into account for awarding Selection Grade in Panchayat Unions*

* 47 *Q.*—THIRU C. R LAKSHMIKANDHAN (on behalf of THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government are considering the objection of the auditors, that only the panchayat union service should be taken into account, but not other services, though there is Government Order to the effect that, for awarding Selection Grade on the basis of ten years. service under all managements may be taken into account; and

(*b*) if so, the action taken thereon?

ஊராட்சி ஒன்றியங்களில் தேர்வு நிலை வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் பணிக்காலம்.

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பத்து ஆண்டு தேர்வு நிலை வழங்க, அனைத்து நிர்வாக பணிக் காலத்தையும் கணக்கிட்டு வழங்கலாம் என அரசு ஆணையிருந்தும், ஊராட்சி ஒன்றியங்களில், ஊராட்சி ஒன்றிய பணியை மட்டும் கணக்கிட வேண்டு மென்றும், மற்ற நிர்வாகங்களில் பணிசெய்ததை கணக்கெடுக்கக்கூடாது என்றும், தணிக்கையாளர்கள் செய்த ஆட்சேபனை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (இ) 22—6—1979 நாளிட்ட கல்வித்துறை ஆணை எண் 992-ல் ஆசிரியர்கள் மற்ற நிர்வாகங்களில் பணி புரிந்து, பதவி விலக்கம் பெற்று, வேறு நிர்வாகப் பள்ளியில் நியமனம் பெற்றிருந்தாலும் அவர்கள் மற்ற நிர்வாகங்களில் பணிபுரிந்த காலத்தையும் கணக்கில் கொண்டு தேர்வுநிலை வழங்க வேண்டும் என்று அரசு உத்திர விட்டுள்ளது. இந்த ஆணை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கும் பொருந்தும். இதற்கான பணி விதிகளை மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அனைத்துப் பணிகளையும் கணக்கிட்டு தேர்வுநிலை வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருந்தும், அந்த ஆணை நகராட்சிகளிலே அமல்படுத்தப்படாதது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: புகார் வந்தால், அது பற்றி விசாரித்து, நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Pay of Teachers of Municipal Schools*

* 48 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that, in most of the Municipal Schools, the pay for the teachers is not disbursed on the 1st day of every month; and

(*b*) if so, whether the Government would take steps to arrange for the disbursement of the pay to teachers of all the Municipal Schools on the 1st day of every month?

நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களின் ஊதியம்

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெரும்பாலான நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கு, ஒவ்வொரு மாதமும் முதல் தேதி ஊதியம் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அனைத்து நகராட்சிகளிலும் பணியாற்றும் ஆசிரியர் கட்கு, ஒவ்வொரு மாதமும் முதல் தேதியே ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (இ) பொதுவாக தாமதம் ஏற்படுவதில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நிதிப் பற்றாக்குறையுள்ள நகராட்சிகள் நிறைய இருக்கின்றன. அவைகளிலே இருக்கின்ற ஊழியர்கள் அனைவருக்கும் நிதி இருக்கும்போது முதலில் பட்டுவாடா செய்துவிட்டு, கடைசியாக ஆசிரியர்களைக் கவனிக்கிறார்கள். இந்த நிலையில் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாயவரத்தில் இந்த மாதம் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்து, அது குறித்து அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாமென்ற பழமொழி உண்டு. அது நகராட்சிகளுக்கும் தெரியுமென்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததுபோல, திருவில்லிப்புத்தூர், இராமநாதபுரம், தேவக்கோட்டை, பெரியகுளம், மாயவரம் நகராட்சிகளிலே அப்படி காலதாமதம் ஏற்பட்டிருக்கக்கூடும். நிச்சயம் அதைத் தவிர்க்கக்கூடும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாயவரம் நகராட்சியிலே சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று மூந்தாநாள் செய்தி வந்து, மூந்தாநாள் இன்ஸ்பெக்டர் ஆஃப் முனிசிபாலிட்டிஸ் அவர்களுடன் தொடர்பு கொண்டபோது, அவர் அலுவலகத்தில் இல்லை, ஜாயிண்ட் இன்ஸ்பெக்டரும் இல்லை, சூப்பிரண்டன்டும் இல்லை. செக்ஷன் ஆபீசரும் இல்லை. யாருமே இல்லை என்று தகவல் கிடைத்த பிறகு, அலுவலகமாவது இருக்கிறதா என்று கேட்டுவிட்டுத் தொலைபேசியை வைத்தேன். அந்த அலுவலகத்தில் சரியாகப் பணி நடக்கவில்லை என்பதைத் தெரிவித்து, சரியாக இயங்க தக்க நடவடிக்கையை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நகராட்சி ஆய்வாளர் அவர்கள் நேற்றையதினம் நான் சுற்றுப்பயணம் செய்தபோது என்னோடு வந்தார்கள். பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன காலதாமதத்தைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நிதிநிலைக் குறைவினால் சில நகராட்சிகளில் உள்ள பள்ளிக்கூடங்களில் ஒழுங்காகச் சம்பளம் கொடுப்பதில்லை என்பது நடைமுறை உண்மை. எனவே நிதி குறைவாக உள்ள நகராட்சிப் பள்ளிகளை கல்வித் துறையிடம் கொடுக்க உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?



(முற்பகல் 11-20)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நடைமுறையில் இருக்கிற சிக்கல்களை நடைமுறையில் தீர்க்க முயற்சி எடுப்போம்.

*Flood in Kannoottru Stream.*

* 49 Q—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(a) whether it is a fact that the agricultural lands situated at the crossing of the river on the road from Vaiyampatty to Ilakkakkurichi were damaged due to flood in Kannoottru stream, Vaiyampatty Panchayat Union area, Tiruchirappalli district, as it has changed its course;

(b) if so, whether any scheme has been received by the Government for consideration to construct a barrage to repair the damages; and

(c) if not, whether the Government will consider it?

கண்ணூற்று ஓடையில் வெள்ளம்.

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில், கண்ணூற்று ஓடையில் வெள்ளம் ஏற்பட்டு திசைமாறி ஓடியதில், வையம்பட்டியிலிருந்து இளக்காக்குறிச்சி செல்லும் சாலையை ஆறு கடந்து செல்லும் இடத்தில், விவசாய நிலங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், சேதத்தைச் செப்பனிட தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனைக்கு வந்துள்ளதா ?

(உ) இல்லையெனில், இது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம். கண்ணூற்று ஓடை, வையம்பட்டி இளக்காகுறிச்சி சாலையை கடக்குமிடத்தில் ஓடையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

(இ) தடுப்பு சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(உ) இத்திட்டத்தை விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, தலைமைப் பொறியாளர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு இட்டுள்ளார்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆண்டுதோறும் இவ்வாறு கன்னூற்று ஓடையில் வெள்ளம் ஏற்பட்டு திசைமாறி ஓடுவதும் உடனே அதைத் தடுப்பதுமான நடவடிக்கையை எடுப்பதுமாக இருக்கிறார்கள். நிரந்தரமாக அவ்வாறு ஏற்படாமல் தடுக்க அரசு புதிய திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கன்னூற்று ஓடை என்பது ஒரு காட்டாறு. இது வெகு நீளமாகச் சென்று கொண்டிருக்கிறது. இதன் கரைகளை பலப்படுத்தும் திட்டம் ஆய்வில் இருக்கிறது. இதைப்போல நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஓடுகின்ற ஆறுகளுக்கெல்லாம் கரைகளைக் கட்டி பலப்படுத்தி உடைப்பைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** வையம்பட்டியிலிருந்து செல்லும்போது, ஆ*றைக் கடந்து பஸ்ஸில் செல்ல வேண்டியிருக்கிறது. தண்ணீர் வந்து விட்டால், ஆற்றைத் தாண்டிச் செல்ல முடியாது. நீண்ட காலமாக அந்தப் பகுதியில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அது துரிதப்படுத்தப்படுமா ? விரைவில் அங்கு பாலம் கட்டப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பாலம் கட்டும் ஆய்வு பற்றிய தகவல் என்னுடைய குறிப்புகளில் இல்லை. கரைகளை பலப்படுத்தும் குறிப்பு மட்டுமே உள்ளது.

## *Agricultural Depots*

* 50 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(a) the Agricultural Depots in Kanyakumari district which were closed during the period from 1st January 1979 to 30th April 1979;

(b) the reasons therefor;

(c) whether the Government have received any representation for the reopening of these Depots; and

(d) if so, the action taken thereon?



## விவசாய பணி மனைகள்

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—1—1979 முதல் 30—4—1979 முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தெந்த விவசாய பணிமனைகள் மூடப்பட்டன ?

(இ) அதற்குக் காரணம் என்ன ?

(உ) அவற்றை மீண்டும் திறக்கக் கோரி முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) வேளாண்மைத் துறையின் வாயிலாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயப் பணிமனைகள் ஏதும் திறவப்படவில்லை. எனவே விவசாயப் பணிமனைகள் மூடப்பட்டன என்ற பிரச்சினை ஏதும் எழவில்லை.

(இ), (உ) மற்றும் (எ) : வினா (அ)-விற்குக் கொடுத்த விடையின்படி இப்பிரச்சினைகளும் எழவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அங்கு விவசாயப் பணிமனை என்று பெரிய அளவில் பணிமனை இயங்காவிட்டாலும் கூட, அரசு சார்பில் பஞ்சாயத்து யூனியன்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய டிராக்டர் போன்றவைகளைப் பழுது பார்க்க மெக்கானிக் போன்றவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கூட அங்கே இல்லாததால், பணிமனை மூடப்பட்டது. இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் வேளாண்மைத் துறையின் வாயிலாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயப் பணிமனைகள் ஏதும் திறவப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அங்கே ஒரு நல்ல பணிமனை இனிமேலாவது உருவாக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கன்னியாகுமரி மாவட்டத்தில் அது போன்ற பணிமனை இல்லை. ஆனால் பக்கத்திலுள்ள திருநெல்வேலியில் டிராக்டர்களைப் பழுது பார்க்க பணிமனை ஒன்று இருக்கிறது. அதுபோல ஒரு பணிமனையை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவுபடுத்துவதுபற்றி இந்த அரசு ஆலோசனை செய்யும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனில் தொழிலாளர்கள் 'கோ ஸ்லோ' பண்ணுவதால் டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின்கீழ் வருகிறது என்பதை உறுப்பினர் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

* THIRU A. R. DAMODARAN: Sir, under rule 43 of the Tamil Nadu Legislative Council Rules, I have given notice of an adjournment motion to discuss a matter of urgent public importance, namely, the serious situation arising out of the suspension of normal supplies of High Speed Diesel Oil, petrol and kerosene due to the 'go-slow' campaign of employees of Bharat Petroleum Corporation, Madras which has resulted in many pumps running out of stock in Madras City, the districts of Chingleput, North Arcot and South Arcot and also portions of Thanjavur and Tiruchirappalli districts.

The result of this 'go-slow' campaign on the part of the employees is that, in the month of January, Bharat Petroleum Corporation has been able to move less than 55 per cent of the normal product that moves from the installation. The reason why a serious situation has arisen in the northern districts of Tamil Nadu is that High Speed Diesel and kerosene supplies have been badly affected. In Madras City itself, more than 40 per cent of the pumps are dry because of this 'go-slow' campaign. The Hon. the Minister for Petroleum in the Government of India has mentioned that the distribution of petroleum products is the responsibility of the State Government. I want to focus the attention of the Government of Tamil Nadu on the very serious situation that has arisen because of the shortage of these three products. It is not because the product is not available at the oil installation but because of a restrictive campaign by some employees of a particular oil company wherein there is a dispute between the employees and the management on some questions of leave salary, dearness allowance, etc., into which I will not go at present. Some areas in Tamil Nadu have been very badly affected and I want to bring to the attention of the Government that unless urgent steps are taken to resolve this matter, we will have to



face a very serious situation because the agriculturists, the powerloom sector, the industrial sector and the transport sector have all been affected by this crisis. In the month of January, as my hon. Friend Thiru Lakshmikandhan pointed out in his Call Attention Notice, nearly for four days buses were not able to ply. I wonder whether the Government's attention has not been drawn to this problem because, in distributing petroleum products, first priority is always given to the Transport Department of the Government of Tamil Nadu. All the tanker-lorries which are filled are sent to the Transport Department. So, the Government buses are running on time and according to schedule but other consumers are being put to great difficulty. In view of the impending visit of the Hon. the Minister for Petroleum, Thiru P. C. Sethi, who is expected to arrive in Madras today, may I know from the Government what action they are taking to bring this to his attention so that the consumers' problems may be solved ?

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தமிழ் நாட்டில் டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியமான பொருள்கள் மக்களுக்குக் கிடைக்காமல் அவர்கள் பட்டுவருகின்ற அவதிகளைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் அரசாங்கம் இதுவரை என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்டிருக்கிறார்கள். பெட்ரோலியம் பொருள்கள் போதிய அளவிற்கு இருந்தும்கூட, அவைகளை உரிய இடத்திலேயிருந்து உரியவர்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கக் கூடிய பணியை பொறுப்பேற்றிருக்கின்ற மாநில அரசு முறையாகச் செய்ய வேண்டுமென்றும், இதிலே அவர்களுடைய கடமையை உணர்ந்து அவர்கள் செயல்பட வேண்டுமென்று மத்திய அமைச்சர் குறிப்பிட்டதாகவும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். பெட்ரோலியப் பொருள்களை ஏன் உரிய இடங்களில் கொண்டு போய்ச் சேர்க்க முடியவில்லை என்பதை நாங்கள் அறிவோம். அங்கே பணியாற்றக் கூடியவர்கள் 'கோ ஸ்லோ கேம்பைன்' நடத்திக்கொண்டிருக்கிறார்கள். டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகிய பெட்ரோலியப் பொருள்களை உரிய காலத்தில், உரிய அளவிற்கு, உரியவர்களுக்கு எடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலையை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவது யார் என்கிற விவகாரத்திற்கெல்லாம் நாம் செல்ல விரும்பவில்லையென்றாலும் கூட, இந்த மாநில அரசைப் பொறுத்தவரை, நல்ல சூழ்நிலை உருவாவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறோம். நேற்றையதினம் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் உயர் அதிகாரிகளையெல்லாம் கலந்து யோசித்து, இப்போதுள்ள நிலைமைகளைப் பரிசீலனை செய்தார்கள். எடுக்கப்பட

வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி நாளையதினம் இந்த அவையிலே அரசின் சார்பில் அறிக்கை வைக்க இருக்கிறார்கள். அறிக்கை கொடுப்பது என்பது கூட பெரிய காரியமல்ல. பிரச்சினை இருக்கிறதா, தீர்ந்திருக்கிறதா என்பதை அறிவதைத்தான் அரசும் எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் பிரச்சினைகளை துரிதமாகத் தீர்க்க முயன்றுகொண்டிருக்கிறோம். மத்திய பெட்ரோலிய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் இங்கே வரும்போது, இங்கேயிருக்கிற அமைச்சர்களும் பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பதற்குரிய ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பல்வேறு வழிகளில் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும் என்று அரசு நம்புகிறது. இது தொடர்பாக அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் நாளையதினம் அரசின் சார்பில் அறிக்கையாக வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதைப்பற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கிறேன்.

### 3. அறிவிப்பு.

#### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுப்படி 9 ஆம் தேதி எடுத்துக்கொள்வதாக இருந்த தனி உறுப்பினர் தீர்மானத்திற்குப் பதிலாக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதமும் முதலமைச்சர் பதிலும் இடம் பெறும். மற்ற நிகழ்ச்சிகளில் மாற்றம் ஒன்றுமில்லை.

### 4. கவன ஈர்ப்பு.

**தமிழ்க் கலைக் களஞ்சியப் பணி நிறுத்தப்பட்டதால் தமிழ் வளர்ச்சிப் பணி தடைப்பட்டிருப்பது குறித்தும், ஊழியர்கள் வேலை இழந்துள்ளது குறித்தும்.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—



" தமிழ் கலைக் களஞ்சியப் பணி திடீரென நிறுத்தப்பட்டதால் முக்கியமான தமிழ் வளர்ச்சிப் பணி தடைப்பட்டிருப்பது குறித்தும், இத்துறைப் பணியாற்றிய ஊழியர்கள் வேலை இழந்துள்ளது குறித்தும் ".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவை முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்த கலைக் களஞ்சிய மேலாண்மைக் குழுவைத் திருத்தியமைப்பது குறித்து அரசு ஏதேனும் பரிசீலனை செய்து வருகிறதா ? கலைக் களஞ்சிய மேலாண்மைக் குழுவில் அரசு அலுவலரைச் சேர்க்க வேண்டுமென்று யோசனை இருக்கிறது என்றும், குழுவாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இதைத் திருத்தியமைக்கும்போது, வேறு உறுப்பினர்களையும் அதாவது சட்டமன்ற உறுப்பினர்களையும் நியமித்தால், செம்மையாக அது செயலாற்ற வாய்ப்பாக இருக்கும். அப்படி மாற்றியமைப்பதுபற்றி அரசு ஏதாவது பரிசீலனை செய்யுமா ?

(முற்பகல் 11.30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தமிழ் கலைக் களஞ்சியம் வெளியிடும் பொறுப்பை ஏற்று நடத்தும் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒரு அரசு நிறுவனம் அல்ல. ஆனால், அவர்கள் தமிழுக்கென்று ஒரு நல்ல பணியைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதால், தமிழக அரசு அவர்களுக்கு உதவி செய்து வருகிறது. இரண்டாவது பதிப்பை வெளியிட 75 லட்சம் ரூபாய்க்கான ஒரு திட்டத்தை அவர்கள் வகுத்து, உதவிப் பணத்தை நம்மிடம் கேட்டபோது, முதலிலே நாம் 2 லட்சம் ரூபாயும் அதற்குப் பிறகு 3 லட்சம் ரூபாயும் தருவதற்கு ஒப்புக்கொண்டு இப்போது அதற்கான ஏற்பாடு தந்திருக்கிறோம். ஆனால் அவர்கள் முழுத் தொகையையும் தர வேண்டும் என்று கேட்டார்கள். தனிப்பட்டவர்களாலே நடத்தப்படும் நிறுவனத்திற்கு அவர்கள் கேட்கின்ற முழுத் தொகையையும் அரசு தருகின்ற நிலைமையில், நாமும் கொஞ்சம் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே தான் நம்முடைய அரசு அலுவலர் ஒருவரையும் அந்த மேலாண்மைக் குழுவிலே இடம்பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். 'பதிப்பிக்கின்ற வேலையையும் நீங்கள் செய்ய வேண்டாம், தமிழ் பாட நூல் நிறுவனமே செய்ய வேண்டும்' என்று சொன்னபோது அதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் இப்போது

---

@ 505 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன. தமிழ் பாட நூல் நிறுவனத்தின் இயக்குநரிடம் ஒரு திட்டத்தைத் தர வேண்டுமென்று கேட்டிருந்தோம். அவரும் திட்டத்தைத் தந்திருக்கிறார். அந்தத் திட்டத்தை ஆய்வுசெய்து ஆணை வெளியிடும் நிலைமையில் இருக்கிறோம். வெளியிட்ட பிறகு, ஊழியர் பிரச்சினைகள் தீருவதுடன், திட்டம் மேற்கொண்டு முன்னேறும் நிலைமையும் ஏற்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கிட்டத்தட்ட 25 லட்சம் ரூபாய் இதற்கென்று மானியமாகத் தருகின்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுபற்றி ஒரு இறுதியான முடிவு ஏற்பட்ட பிறகு, வேலையில் ஊழியர்களுக்கு மீண்டும் பணித் துண்டிப்பு ஏற்படாதவாறு பணி நிலைமைகளை உருவாக்க அரசு அறிவுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: ஊழியர்களுடைய நிலைமை பற்றி நிச்சயமாக அரசுக்கு அனுதாபம் இருக்கிறது. அவர்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஊழியர்களாக இருப்பதால், நாம் உத்தரவிட்டு அமுல் படுத்தச் செய்ய முடியாது. அறிவுறுத்தவதையோ, ஆலோசனை சொல் வதையோ நிச்சயமாக இந்த அரசு செய்யும்.

## 5. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நானும், என்னுடைய கட்சியின் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை வலியுறுத்தும் வகையில் சில கருத்துக்களை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரை பெரிய ஏமாற்றம் தருகிற வகையில், இந்த நாட்டு மக்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக அமைந்திருக்கிறது என்பதை முதலிலே நான் தெரிவித்துக்கொள்ள விருமபுகிறேன். ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கைகளை உள்ளடக்கி, வரக்கூடிய நிதியாண்டிற்கு நிதிநிலை அறிக்கையை வைக்கிறபோது, அது இந்தக் கொள் கைகளின் அடிப்படையிலே தயார் செய்யப்பட்டு, அதன் மூலம் இந்த நாட்டு மக்கள் நல்வாழ்விற்கு வழிவகை வகுக்கும் முறையில் அமையும் என்று தான் நாட்டு மக்கள் மட்டுமல்ல, நாமும் எதிர்பார்த்தோம். ஆனால் ஆளுநர் அவர்களது உரையில் அப்படிப்பட்ட கொள்கை எதுவும் இல்லை. நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னால் ஆட்சியாளர்கள் தங்களுடைய நிலைமையை, போக்கை மாற்றிக்கொண்டு, நல்ல சமுதாய நலத் திட்டங்களை உருவாக்கி நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு தரக்கூடிய வகையிலே இந்த உரை



அமையும் என்று எதிர்பார்த்தோம். பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கக்கூடிய நாங்கள் இதிலே பெரிய ஏமாற்றத்தைக் கண்டிருக் கிறோம். நாங்கள் எதிர்பார்த்த பல்வேறு விஷயங்களை ஆளுநர் அவர் களுடைய உரையிலே சொல்லாவிட்டாலும், தமிழகத்திலே இந்த ஆட்சி ஏற்பட்ட 2½ ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் கட்சியைத் துவக்கிய காலத்திலே மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளும், தேர்தல் நேரங்களிலே மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளும் ஒன்றுமே நிறைவேற்றப்படாமல் இன்று மக்களை திசை திருப்பி அழைத்துச் செல்லும் காரணத்தினாலேதான், விழித்துக்கொண்ட மக்கள் இந்தத் தேர்தலிலே ஆளும் கட்சிக்கு ஒரு சரியான பாடம் புகட்டியிருக்கிறார்கள் என்று நான் சொன்னால், அது மிகையாகாது. விவசாயிகளுடைய பிரச்சினையை நாம் எடுத்துக்கொண்டால், தமிழகத்திலே இருக்கும் விவசாயிகள் சில ஆண்டுக் காலமாக தங்களுடைய உழைப்பிற்குத் தகுந்த அளவு வருமானத்தைப் பெற முடியவில்லை என்றும், தங்களுக்கு ஏற்பட்டுள்ள கடன் சுமையிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டுமென்றும் அரசாங்கத்திடத்திலே பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்துப் போராடி வருகிறார்கள். அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதிலாக, விவசாயிகள் மீது பொய் வழக்குகளைப் போட்டும், அவர்களைச் சிறையிலே வைத்து அடக்குவது மூலமும் தங்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம், அல்லது புதிய கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடியவர்களை அடக்கிவிடலாம் என்று ஆட்சியிலே இருப்பவர்கள் எண்ணுகின்ற காரணத் தினாலே தான், இந்த 2½ ஆண்டுக் காலமாக விவசாயிகளுடைய பிரச்சினையில் இந்த அரசு அக்கறை கொள்ளவில்லை. குறிப்பாக நாராயணசாமி நாயுடு அவர்கள் வைத்திருக்கின்ற சங்கத்தை இரண்டாக உடைக்க ஆட்சியாளர்கள் முயற்சி செய்தார்கள். அதிலே தோல்வி கண்டார்கள். அதற்குப் பின்னாலே நடந்த விவசாயிகளுடைய கிளர்ச்சியையொட்டி, திருநெல்வேலி மாவட்டத் திலே நடைபெற்ற ஒரு வன்முறை சம்பவத்திற்கு கோயம்புத்தூரிலே இருந்த நாராயணசாமி நாயுடு தான் காரணம் என்று சொல்லி, அவர் மீது கொலை வழக்கு ஒன்றையும் ஆட்சியாளர்கள் பதிவு செய்து அவரைச் சிறையிலே வைத்தார்கள். அந்த வழக்கு இப்போது நீதிமன்றத்திலே இருக்கிறது. ஆனால், அதற்குப் பிறகும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க அந்தச் சங்கத்திலே இருக்கக்கூடிய தலைவர்களை அழைத்து, 'உங்களுடைய கோரிக்கை 9 அம்சம் கொண்டது என்று சொல்கிறார்கள். அவற்றிலே எதனையும் நிறைவேற்ற முடியாது, அல்லது அவைகளை நிறைவேற்ற அரசாங்கத்தின் நிதிநிலை சரியாக இல்லை, கொஞ்ச காலம் பொறுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லி இந்தப் பிரச்சினைக்கு அரசு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம். ஆனால், நேர்மாறாக பிரச்சினைகளை வளர்க்கக்கூடிய வகையிலேதான் ஆட்சி யாளர்கள் செயல்படுகிறார்களே தவிர, அந்தப் பிரச்சினை இன்றுவரை தீர்க்கப் படவில்லை. 5 ஏக்கருக்குக் குறைவாக உள்ள சிறு விவசாயிகள் அத்தனை

பேருடைய கடன்கள் அனைத்தையும், அது தக்காவிக் கடனானாலும் சரி, கூட்டுறவுக் கடனாக இருந்தாலும் சரி, மின்சார பாக்கியாக இருந்தாலும் சரி, தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நாங்கள் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். தக்காவிக் கடனையும், கூட்டுறவுக் கடனையும், மின்சாரப் பாக்கியையும் தள்ளுபடி செய்யுங்கள் என்று சொல்லும்போது, 'கூட்டுறவுக் கடனை மத்திய அரசின் ஒப்புதலோடு ரிசர்வ் வங்கி நமக்குத் தருகிறது. அதை நாம் தள்ளுபடி செய்ய இயலாது' என்று சொல்கிறார்கள். ஆளுநர் அவர்களுடைய உரையிலே கூட 'இந்த மாவட்டத்திலே 15, 16 கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன, நிலவள வங்கிகள் இருக்கின்றன' என்று இருக்கிறது. ஆனால் அந்த வங்கிகளில் பெரும்பாலான வங்கிகள் கடந்த 2½ ஆண்டுக் காலத்தில், கடன் கொடுக்கும் சக்தியை இழந்து இன்றையதினம் செயலிழந்து இருக்கின்றன என்று 9-க்கு மேற்பட்ட வங்கிகள் சுட்டிக்காட்டப்

(பிற்பகல் 11.40)

பட்டிருக்கின்றன. இது மத்திய வங்கிகளைப் பொறுத்த நிலை. அதைப் போலவே நிலவள வங்கிகளிலும் 80 சதவிகிதம் அளவில் இன்றைக்குச் செயல்படாத நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் இந்த ஆட்சியாளர்களின் திறமையின்மை. இப்படி விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு வங்கிகள் மூலமாக இதுவரை பெற்றுவந்த சலுகைகளைக்கூட இன்றையதினம் பெறமுடியாத நிலையில் பெரும் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட செயலிழந்த கூட்டுறவு வங்கிகளும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கடன் வழங்க வேண்டும் என்றுதான் இந்த ஆண்டு இந்த அரசு 27 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்றும், அதன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் கடன் பெற்று தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்வார்கள் என்றும் ஆட்சியாளர்கள் தரப்பில் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

5 ஏக்கருக்கு மேல் சொந்தமாக நிலம் வைத்திருக்காத விவசாயப் பெருங்குடி மக்களின் கடனை—அது தக்காவிக் கடனாக இருந்தாலும் சரி, கூட்டுறவுக் கடனானாலும் சரி, மின்சார பாக்கியானாலும் சரி—இந்த அரசாங்கம் தள்ளுபடி செய்வதனால், அதனால் அரசுக்கு சுமார் ரூ. 50 கோடிக்கு மேல் செலவாகாது. இது அரசுக்கு ஒரு பெரிய பொருளாதாரச் சுமையை ஏற்படுத்திவிடாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



கூட்டுறவுக் கடன்களை நாம் தள்ளுபடி செய்தால், ரிசர்வ் வங்கி நமக்குப் பணம் தருமா என்று ஆட்சியாளர்கள் தரப்பில் கேட்கக்கூடும். அதற்கு அரசாங்கமே தன்னுடைய நிதியிலிருந்து கூட்டுறவு வங்கிகளுக்கு, பாக்கி நிற்கும் தொகையைக் கொடுத்து, பிறகு கூட்டுறவுச் சங்கங்கள் புதிய கடன்களைக் கொடுத்து, அதன் மூலம் ரிசர்வ் வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடனைத் திருப்பிச் செலுத்தி, மீண்டும் ரிசர்வ் வங்கியிலிருந்து புதிதாக விவசாயிகளுக்குக் கடனைப் பெற்று வழங்கலாம். அத்தகைய முயற்சியில் ஆட்சியாளர்கள் இன்றையதினம் ஈடுபடலாம்.

அதைப் போலவே மின்சார பாக்கியைப் பொறுத்தவரையில், விவசாயிகள் கொடுக்க வேண்டிய மின்சார பாக்கியை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னாலும், அதன் காரணமாக இந்த அரசாங்கத்திற்கு சுமார் 22 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுவிடாது. அந்த அளவுக்குத்தான் விவசாயிகளிடமிருந்து மின் வாரியத்திற்கு வர வேண்டிய பாக்கித் தொகை இருக்கிறது. அவ்வளவையும் தள்ளுபடி செய்யலாமா என்று கேட்டால், அதைத் தவிர வேறு வழியில்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் மாதந்தோறும் ரூ. 50 அல்லது ரூ. 100 என்ற அளவுக்கு மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டிய விவசாயி, இந்த ஆட்சி தமிழகத்தில் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, முறையாக விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்காத காரணத்தால், ஒவ்வொரு சாதாரண விவசாயியும் இன்றையதினம் ரூ. 1,000, ரூ. 2,000 ரூ. 5,000 என்ற அளவுக்கு மின்சாரக் கட்டணப் பாக்கி செலுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறார். ஒரு நூறு ரூபாய் கட்டுவதற்கே முடியாது என்று சொன்ன விவசாயி இன்றையதினம் 5,000 ரூபாய் மின் பாக்கி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு, அவனைப் பார்த்து 'உன்னுடைய மின் கட்டண பாக்கியைச் செலுத்து' என்று சொன்னால், அந்த விவசாயியால் அதைச் செலுத்த முடியுமா என்பதை எண்ணிப் பாருங்கள். நிச்சயமாக அவர்களால் அதைச் செலுத்த முடியாது. இது குறித்து ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயிகளிடமிருந்து மின் பாக்கியை வசூல் செய்ய முன்னறிப்புகூட இல்லாமல் நேரடியாகவே மின் வாரியத்தில் இருப்பவர்கள் ஜப்தி போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற முறையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கை விவசாயிகள் மத்தியில் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டு கொதிப்படையச் செய்யுமே தவிர, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழிவகை செய்யாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவேதான், விவசாயிகளிடமிருந்து மின் வாரியத்திற்கு பாக்கியாக நிற்கும் 22 கோடி ரூபாயை இந்த ஆட்சி தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லுகிறேன். அது மட்டுமல்ல, இந்த மாநிலத்திற்கு என்று ஒரு மின்சாரத் துறை அமைச்சர் இருக்கிறார்கள். சென்ற சட்டத் தொடரின்போது

நமது அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதில் அவர் தமிழ் நாட்டில் இன்றையதினம் மின்சார சப்ளை பாதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்களும், தொழில் செய்பவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், குறிப்பாக நாமக்கல் வட்டத்தில் உள்ள விவசாயிகள் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லி, இந்த நிலைமை குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்தை ஈர்த்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "நமது மாநிலத்தில் உச்சகட்ட மின் தேவை 1800 மெகாவாட் ஆகும். ஆனால் நமது மாநிலத்தின் உற்பத்தின் திறன் 1150 மெகாவாட்தான். ஏறத்தாழ மேட்டூர், நெய்வேலி, எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஆகியவைகள் எல்லாம் பழுதடைந்திருக்கிற காரணத்தால் அவைகளின் உற்பத்தி குறைந்து விட்டது. இன்றையதினம் நாம் எதிர்பார்த்த அளவு உற்பத்தியான 1800 மெகாவாட் கிடைக்கவில்லை" என்று பதில் சொன்னார். இதை நான் சொல்லுவதற்குக் காரணம் இந்த ஆட்சியாளர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டத்தான்.

இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான பதில் 9—11—1979 அன்று மேலவையில் சொல்லப்பட்டது. அப்போது அவர், "நெய்வேலியில் பெய்த பெருமழை காரணமாக அங்கே வெட்டியெடுக்கப்படும் லிக்னைட் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுவிட்டது. 200 முதல் 250 மெகாவாட் மின்சார உற்பத்தி குறைந்துவிட்டது. அதைப் போலவே எண்ணூர் மின் நிலையத்திலிருந்து 200 முதல் 250 மெகாவாட் மின்சாரம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அங்கே இரண்டாவது இயந்திரம் எதிர்பாராத விதமாகப் பழுதாகிவிட்டது. அதன் காரணமாக அங்கே உற்பத்தி 100 முதல் 150 மெகாவாட் அளவுக்குக் குறைந்துவிட்டது. அதைப் போலவே தூத்துக்குடி மின் நிலையத்தில் எதிர்பார்த்ததைவிட துவக்க கட்டத்திலேயே 100 முதல் 150 மெகாவாட் குறைந்துவிட்டது. ஆதனால் இந்த மின் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது" என்று 9—11—1979 அன்று பதில் சொன்னார். ஆனால 10—11—1979 அன்று, அதாவது அடுத்த நாளே, அதே மின் துறை அமைச்சர் அவர்கள் இந்த மின்சாரத் தட்டுப்பாடு நிலைமை சீராகிவிடும் என்று சொன்னார். இது வேடிக்கையாக இருக்கிறது. அப்படித்தான் பதில் சொன்னாரே, அதன்படி நிலைமை சீரானதா என்றால், இல்லை, நெய்வேலியில் மின் உற்பத்தி மேலும் குறைந்திருக்கிறது. மேட்டூரில் மின் உற்பத்தி மேலும் குறைந்திருக்கிறது. தூத்துக்குடியிலும் மின் உற்பத்தி குறைந்திருக்கிறது. எண்ணூர் அனல் மின் நிலையத்திலும் மின் உற்பத்தி குறைந்திருக்கிறது. குறைந்தது மட்டுமல்ல, அங்கே மின் உற்பத்தி செய்யும் இயந்திரமே பழுதடைந்திருக்கிறது என்ற தகவல் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதனைச்



சீர் செய்யும் சாத்தியக் கூறுகளும் இல்லை என்றுகூட சொல்லப்படுகிறது. இன்றையதினம் தமிழ் நாட்டில் 25 சதவிகிதம்தான் மின்வெட்டு என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இந்த அமைச்சரவைக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டில் இன்றையதினம் ஏறத்தாழ 65 சதவிகிதத்திற்கு மேல் மின்வெட்டு அமுலில் இருக்கிறது. எங்கே பார்த்தாலும் மின்வெட்டு. பம்பு செட்டுகளைப் பொறுத்தவரையில், எந்த நேரத்திலே மின் சப்ளை கிடைக்கும் என்று அறிய முடியாத நிலை இருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகள் தங்கள் மின்சார மோட்டார்களைப் போடும்போது, பல இடங்களிலே மின்சார மோட்டார்களில் பியூஸ் போய்விட்டது.

இதைப் போலவே தொழில் செய்பவர்களும் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்கு நேற்று சேலத்திலிருந்து ஒரு தகவல் வந்தது, அங்கேயுள்ள 'சேகோ' பாக்டரியை வைத்திருப்பவர்கள் தங்கள் தொழிற்சாலைகளுக்கு கடந்த 3, 4 நாட்களாக மின் சப்ளை கிடைக்காத காரணத்தால், அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருமே மின் வாரிய அலுவலகத்திற்குச் சென்று, அங்கே முற்றுகையிட்டு, அங்கேயிருக்கிற அதிகாரிகளை வெளியே விடாமல் தடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் போலீஸ் துறையைச் சார்ந்தவர்களும் அங்கே சென்று அவர்களைச் சமாதானப்படுத்திய பிறகுதான் அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. அந்த அளவுக்கு மின்சார உற்பத்தி பெரிய அளவில், இன்னும் சொல்லப் போனால் கடந்த காலத்தில் எப்போதும் இல்லாத அளவுக்கு, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு மிகப் பெரிய பயங்கரமான அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது இந்த நிலையில் தமிழகத்திற்கு என்று தனியான மின்சாரத் துறை அமைச்சர் ஒருவர் இருக்கிறார். இதையெல்லாம் கவனிக்காமல் அவர் வேறு என்னதான் செய்து கொண்டிருக்கிறார்? இதைக் கவனிக்காமல் என்னதான் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இந்த நிலையில் இந்தத் துறைக்கு என்று ஒரு அமைச்சர் எதற்கு? இதற்கு ஒரு ஆட்சி தேவைதானா என்பதைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்த ஆட்சி விவசாயிகளைப் பார்த்து, 'நீங்கள் மின்சாரக் கட்டண பாக்கியைக் கட்ட வேண்டும், கூட்டுறவுக் கடன் பாக்கிகளைக் கட்ட வேண்டும், தக்காவிக் கடன்களைக் கட்ட வேண்டும்' என்று சொல்லுகிறது. விவசாயிகளுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் அவர்களிடையே கிளர்ச்சியை ஏற்படுத்தத்தான் இது வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்து ஏக்கர் நிலம் மட்டும் வைத்திருப்பவர்களுக்கு அனைத்துக் கடன்களையும் மின்சாரக் கட்டண பாக்கியையும் முழுமையாக ரத்து செய்ய வேண்டும். அதே நேரத்தில் 10 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கிற விவசாயிகள் கூட்டுறவுக் கடன் பாக்கி, தக்காவிக் கடன் பாக்கி, மின்சாரக் கட்டண பாக்கி ஆகியவைகளை வைத்திருந்தால் அவர்களுக்கும் இந்த அரசு நிவாரணம் அளிக்க முன்வர வேண்டும். மின் பாக்கியைப் பொறுத்த அளவில், அவர்களிடம் 'பீனல் இன்ட்டரஸ்ட்' என்று வட்டி வாங்குகிறார்கள். அப்படி 'பீனல் இன்ட்டரஸ்ட்' வசூலிப்பதைத் தவிர்க்க வேண்டும். அதைப் போலவே தக்காவி, கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே 'டிகிரி' ஆகியிருந்தால், அவைகளையெல்லாம் நீண்ட காலக் கடன்களாக மாற்றி விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யும் முறையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்

(முற்பகல் 11-50)

கூட்டுறவுத் துறையில் அட்வைசரி கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். அவசர அவசரமாகத் தேர்தல் நேரத்தில் அந்த அட்வைசரி கமிட்டியைப் போட்டார்கள். அந்தக் கமிட்டிக்கு என்ன வேலை? என்ன அதிகாரத்தை வழங்கியிருக்கிறார்கள்? ஒன்றும் இல்லை. தேர்தல் நேரத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும், தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்கு கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற கார்களைப் பயன்படுத்துவதற்காகவும்தான் அந்தக் கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியில் உள்ள அதிகாரிகள், தலைவர்கள், அதில் அங்கம் வகிக்கிற அங்கத்தினர்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையில் உள்ள கார்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் ஏற்கெனவே இருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முறைகேடுகளைச் செய்தார்கள் என்று சொல்லி, பல்வேறு வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறபோது, அதிகாரமே இல்லாத அந்தக் கமிட்டியில் இருப்பவர்கள் எல்லாம் அந்த நிர்வாகத்தில் உள்ள கார்களைப் பயன்படுத்துவது, படியைப் படியை வாங்குவது என்ற முறை இருக்குமானால், அதற்கென்று ஒரு கமிஷன் வாராதா? அந்தக் கமிஷனிடமிருந்து தப்பித்துக்கொள்ளவாவது இந்தத் தவறுகளைத் தவிர்த்திருக்க வேண்டாமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போலத்தான் காவல் துறையினருடைய பிரச்சினையும். இந்த ஆட்சிதான் அவர்களுக்குச் சங்கம் வைத்துக்கொள்ள உரிமைகளை வழங்கியது. அதை நாங்கள் எதிர்க்கவில்லை. அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறோம். உரிமையை வழங்கிவிட்டு அதில் எந்தச் சங்கத்தில் பெரும்பாலானவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்களோ அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரத்தைக் கொடுத்து, அவர்கள் மூலம் வரக்கூடிய கோரிக்கைகளை





கவனிப்பதுதான் சேமநல அரசாங்கத்திற்குப் பொருத்தமானதாக இருக்கும். ஆனால் அதற்கு மாறாக மெஜாரிட்டியினர் உள்ள சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்காமல், மைனாரிட்டியாக உள்ள சங்கத்திற்கு அங்கீகாரத்தை அளித்திருப்பதால்தான், காவல் துறையினர் அறவழியில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இந்த நாட்டில் எந்தப் போராட்டமானாலும், தொழிலாளர் போராட்டமாக இருந்தாலும், மாணவர்கள் போராட்டமாக இருந்தாலும், என். ஜி. ஓ. க்கள் போராட்டமாக இருந்தாலும், அனைத்துப் போராட்டங்களிலும் காவல் துறையைக் கொண்டுதான் சட்டம், ஒழுங்கைப் பராமரிக்க ஆட்சியாளர்கள் முனைந்தார்கள். காவல் துறையினரை வைத்துத்தான் வழக்குப் போட முன்வந்தார்கள். இந்தக் காவல்துறை அதிகாரிகளே நியாயமான அடிப்படையில் போராடினார்கள். அவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்திருக்க வேண்டும். அதற்கு நேர்மாறாக பல்லாயிரக்கணக்கானவர்களைப் பிடித்து சிறையிலே வைத்தார்கள். இராணுவம் சந்திக்கும் என்று வீரம் பேசின நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இராணுவத்தை வரவழைத்தார்கள். காவலர்களைக் கைது செய்து சிறையில் வைத்துவிட்டு, அவர்கள் குடியிருக்கக் கூடிய இடங்களில் இராணுவத்தினரை அனுப்பி காவலர்களுடைய மனைவி, பிள்ளைகள் ஆகியவர்களையெல்லாம் நடுத் தெருவிற்கு இழுத்து வந்தார்கள். அதையும் பொறுத்துக்கொண்டு காவல் துறையினர் போராடியதற்காக அரசு அவர்களைப் பாராட்ட வேண்டும். யாராவது குற்றவாளிகளைக் காவலர்கள் பிடித்தால், அவர்கள் காவலர்கள் காலில் விழுந்து கேட்பதைப் போல, காவலர்கள் குடியிருப்புகளுக்கு இராணுவத்தினர் சென்றபோது, வன்முறை நிகழ்ந்துவிடக் கூடாதே என்பதற்காக காவல் துறையினர் இராணுவத்தினர் கால்களில் விழுந்து கையெடுத்துக் கும்பிட்டதாக வந்த செய்திகளைப் பார்த்தோம். அந்த அளவிற்கு அமைதியாகப் போராட்டத்தை நடத்தினார்கள் என்பதற்காக இந்த அரசாங்கம் அவர்களைப் பாராட்டி நன்றி தெரிவித்திருக்க வேண்டும். அதற்கு நேர்மாறாக அவர்களைக் கைது செய்து சிறையில் வைத்து, பின்னர் பொய் வழக்குகளையும் போட்டிருக்கிறார்கள். பிறகு போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு அனைவரும் வேலைக்குத் திரும்பினார்கள். அரசாங்கமும் அவர்களை ஏற்றுக்கொண்டது. ஆனால் வேலைக்குச் சேர்ந்த பிறகு, அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, அவர்களை டிஸ்மிஸ் செய்து அனுப்பியிருக்கிறார்கள். களையெடுப்பதைப் போல மாவட்டந்தோறும் யார் யார் போராட்டத்தின் முன்னிலையில் இருந்தார்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், தி. மு. க.வைச் சேர்ந்தவர்கள் யார், இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்களா அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களா என்று பார்த்துப் பார்த்து, நூற்றுக்கும் மேற்பட்டவர்களை டிஸ்மிஸ் செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி உத்தரவிட்டது எந்த வகையில் நியாயம்? வேலைக்குத் திரும்பிவிட்ட பிறகு, அவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, 'சார்ஜ்

ஸ்பிரேம்' செய்து நோட்டீஸ் கொடுத்து, டிஸ்மிஸ் செய்வதற்குப் பதிலாக வார்னிங் கொடுத்து அவர்களை வேலையில் சேர்த்திருக்க வேண்டும். ஒரு **மாவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆயிரம் போலீஸ்காரர்கள்** இருக்கிறார்கள் என்றால், அவர்களில் 100 பேர்களை 'டிஸ்மிஸ்' செய்கிறார் கள் என்றால், அதன் உள்நோக்கம் என்ன? ஆட்சியாளர்களுக்குச் சாதக மாக **இல்லையென்ற எண்ணத்திலே அவர்களை அச்சுறுத்துகிறார்கள்.** காவலர்களுடைய சங்கத்தின் தலைவர் நைனார்தாசை எப்படியோ மடக்கி விட்டார்கள். இருந்தாலும், "பாதிக்கப்பட்ட காவல் துறையினருக்காக நான் இருக்கிறேன்" என்று சொன்னதற்காக காவல் துறைச் சங்கச் செயலாளராக இருந்த பிரிட்டோ அவர்கள் மீது முப்பதுக்கும் மேற்பட்ட வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். அதுவும் எப்படி? அவர் மீது சென்னையிலே காலை 11 மணிக்கு ஒரு வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள், அதே நாளில் 12 மணிக்கு கோயம்புத்தூரிலே தூண்டியதாக வழக்குப் பதிவு செய்திருக் கிறார்கள். பிறகு 1 மணிக்கு சேலத்திலே தூண்டியதாக வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். ஹெலிகாப்டரிலே சென்றாலும் கூட, அவ்வளவு விரை விலே செல்ல முடியாது. அந்த அளவிற்கு ஒரே நாளில் ஒரு சில மணி வித்தி யாசத்தில் பல்வேறு இடங்களில் போராட்டத்தைத் தூண்டியதாகச் சொல்லி, முப்பதுக்கும் மேற்பட்ட வழக்குகளை ஜோடித்துப் போட்டிருக்கிறார்கள். பிறகு அவர் கோர்ட்டிலே சரணடைந்திருக்கிறார். இப்படிச் செய்வது எங்கே போய் முடியுமென்றால், மேலும் அவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டும். ஆட்சி யாளர்கள் கடைப்பிடிக்கும் முறை பிரச்சினைகளுக்கு முடிவு காணுவதாக இல்லை. காவல் துறையினர் குடித்துவிட்டால், 4 (1) (ஜெ) பிரிவின்படி **வழக்கைப் போடுவார்கள்.** அவர்கள் நீதிமன்றத்தில் வாதாடும் **போது குற்ற** மற்றவர்கள் என்று தீர்ப்பு அளித்தால், மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள் வார்கள். இதுதான் நடைமுறையில் இருந்தது. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காவல் துறையினரைப் பழி வாங்க வேண்டும் என்பதற்காக, நீதிமன்றத்திலிருந்து தப்பித்துக் கொண்டு மீண்டும் வேலையில் சேர்ந்துவிடுகிறார்கள் என்பதற்காக, கோர்ட்டில் வழக்கைத் தாக்கல் செய்து விட்ட பிறகு, "வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளுகிறோம். டிப்பார்ட் மெண்டல் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம்" என்று சொல்லி, வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். பிறகு அவர்களை வேலையிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்ய உத்தரவு போடுகிறார்கள். தமிழ் நாட்டில் சேலம் மாவட் டத்தில் மட்டுமல்லாமல், எல்லா மாவட்டங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான காவலர்களை. பத்தாண்டுகள், பதினைந்து ஆண்டுகள் பணிபுரிந்தவர்களை, மனைவி மக்களோடு வாழ்ந்தவர்களை, டிப்பார்ட்மெண்டல் ஆக்ஷன் என்ற முறையில் இப்படி பழி வாங்கியிருக்கிறார்கள். நீதிமன்றத்தில் தீர்ப்பு **சொன்னதற்குப் பிறகும் ஏன் இப்படிப் பழி வாங்குகிறார்கள்?** இப்பொழுது மட்டும் என்ன வாழ்கிறது?





**கடுமையான சட்டத்தை அமுல்படுத்துவதாக முதலில் காட்டிக்கொண்டு** இப்பொழுது மதுவிலக்குக் கொள்கையில் தோல்வி அடைந்த பிறகு, வாபஸ் வாங்கி விட்டார்களே. **இப்படியெல்லாம் ஆட்சியில் இருப்பவர்கள் எதைச்** செய்தாலும் முரணான முறையில் செய்து கொண்டிருப்பதால், இவர்கள் **ஒட்டுமொத்தமான அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.**

என். ஜி. ஜி. ஓ. பிரச்சினையிலும் அதைப் போலத்தான். சுதந்திரப் **போராட்டத்தில் நடந்ததைப்போல, என்.ஜி.ஜி.ஓ.க்கள் பெரிய கிளர்ச் சியை, அலுவல்கள் ஸ்தம்பித்துப் போகக்கூடிய முறையில் நடத்தினார்கள்.** மூன்றாவது ஊதியக் குழுவில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டி, அவற்றையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்டு, போராட்டத்தை நடத் தினார்கள். அவர்களுடைய சங்கத்திலே இருக்கக்கூடிய தலைவர்களை அழைத்து வைத்துப் பேசி, கோரிக்கைகள் என்னவென்று கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகு, முடிவு எடுத்தார்களா என்றால், இல்லை. அதற்கு மாறாக என்.ஜி.ஜி.ஓ.க்கள் போட்டிச் சங்கம் ஒன்றை உருவாக்கினார்கள். ஏற் **கெனவே ஒரு என்.ஜி.ஜி.ஓ. சங்கம் இருக்கிறது. அதன் தலைவர்** திரு. சிவ. இளங்கோ. அவருக்கு எதிராக, இந்த ஆட்சியாளர்களுக்குத் துணையாக தாதி, பல்லவி பாட வேண்டும் என்பதற்காக, லாலி பாட **வேண்டும் என்பதற்காக, ஒரு போட்டிச் சங்கத்தை ஏற்படுத்தி, அந்தச் சங்கத்திலே இருப்பவர்களை அழைத்துப் பேசி ஓரிரண்டு கோரிக்கைகளைப் பற்றி அறிவித்தார்கள். அதிருப்தி அடைந்த என்.ஜி.ஜி.ஓ.க்கள் மீண்டும் பிரச்சினையை வலியுறுத்திப் போராடினார்கள்.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** லாலி பாடுவதென்றால் என்ன?

திரு. சோ. ஆறுமுகம் : தாலாட்டு என்று பொருள். போராடக் கூடிய அளவிற்கு இந்த ஆட்சியாளர்கள் என். ஜி. ஜி. ஓ. க்களைத் தூண்டிவிடு கிறார்கள். பிரச்சினைகளைத் தீர்க்காமல் ஆட்சியாளர் பிரச்சினையை வளர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

அதைப்போலத்தான் பிற்படுத்தப்பட்ட சமூக மக்களுக்காகச் செய்த நன்மைகள். தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் **தமிழ்நாட்டிலே** இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனில் **அக்கறை காட்டிப் போராடிப் பெற்றுத் தந்த** வகுப்பு வாரி பிரதிநிதித்துவம். **இதில்** அ.தி.மு.க. ஆட்சியிலே தமிழ்நாட்டிலே மாற்றம் செய்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒதுக்கிய 31 சதவிகிதத்தில் கை வைத்து, வருமான அடிப்படையிலேதான் அந்தச் சலுகைகளைப் பெற வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்ன உடனே தம்முடைய கழகத் **தலைவர்,**

கலைஞர் அவர்களும், திராவிட கழகத் தலைவர் வீரமணியும் கூக்குரலிட்ட போது, இதைப்பற்றி இன்றைய அரசினர் கேலியும் கிண்டலும் செய்தார்கள். அவர்கள் "வக்கீல் வீட்டுப் பிள்ளைதான் வக்கீல் ஆகவேண்டுமா? டாக்டர் வீட்டுப் பிள்ளைதான் டாக்டர் ஆகவேண்டுமா? என்சினியர் வீட்டுப் பிள்ளைதான், என்சினியர் ஆகவேண்டுமா? மற்றவர்கள் எல்லாம் வரக் கூடாதா?" என்பது போலப் பேசினார்கள். ஏதோ கலைஞர் வீட்டுக்காகவும் வீரமணி வீட்டுப் பிள்ளைக்காகவும் பேசியதுபோல பேசினார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்னும் 5 உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் 25 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு நேரம் பேசுவதாக இருக்கிறார்கள் ?

திரு. சோ. ஆறுமுகம் : இன்னும் ஒரு பத்து நிமிடங்கள் பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விரைவாக முடிக்க வேண்டும்

திரு. சோ. ஆறுமுகம் : நீங்கள் அன்றையதினம் பேசினீர்கள். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை ? அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் பிற்பட்ட மக்கள் நலனில் அக்கறைகொண்டு 31 சதவிகிதம் ஒதுக்கினார்கள். அவர்கள் சொன்ன நேரத்தில் நீங்கள் உதாசீனம் செய்தீர்கள். ஏழைகளாக இருப்பவர்களுக்குக் கொண்டுவந்ததாகச் சொன்னார்கள். இன்றைய தினம் அந்தக் கொள்கையை மாற்றிக் கொண்டு விட்டீர்களே! அது அரசாங்கத்திற்கு ஒரு வெட்கக்கேடு அல்லவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த ரூ. 9,000 குறித்த உத்தரவு சம்பந்தமாக சில கருத்துக்களை உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை ஏழைகளுக்காகத்தான் கொண்டு வந்தோம் என்று நாங்கள் சொல்வதை அவர்கள் மறுக்கிறார்களே என்று பேசியிருக்கிறோமே தவிர, ஏழைகளுக்குச் செய்யவேண்டியதில்லை என்ற அளவில் எந்தவிதமான கருத்தையும் நிச்சயமாகச் சொல்லவில்லை. அடிப்படைக் கல்வியை ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் செய்திருக்கிறோம். இப்போதுகூட அந்த 31 சதவிகிதம் என்பதை 50 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். அவர்கள் அதிகமாகப் பெறப்போகிறார்கள். நாங்கள் வெட்கப்பட்டு அந்தக் கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.



திரு. சோ. ஆறுமுகம் : பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், கிராமத்திலே, நகரத்திலே உள்ள சாதாரண ஏழை வீட்டுப் பிள்ளை ஒருவர் டாக்டராக வேண்டும். அப்படிப் படித்து டாக்டராக வந்தவர் வீட்டுப் பிள்ளை படிக்கக்கூடாது என்று சொன்னால், அது சமுதாயத்திற்குப் பெரிய தீங்காகும். இந்தச் சமுதாயத்தில் ஒருவர் டாக்டராக வந்தால், அவருடைய பிள்ளையும் டாக்டராக வரவேண்டும். அவருடைய பிள்ளையும் வளர வேண்டும். இப்படிப் படிப்படியாக வளர்ந்தால்தான், இந்த சமுதாயத்திலே முன்னேற்றம் காண முடியும். ஒரு கட்டத்திலே நிறுத்திவிடக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். அதை அவசரப்பட்டுச் செய்துவிட்டார்கள். இன்றைக்கு என்ன நிலை ? மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு அடிப்படையிலே மருத்துவக் கல்லூரியிலே, எஞ்சினியரிங் கல்லூரியிலே, சட்டக் கல்லூரியிலே அட்மிஷன் கொடுத்தார்கள். வேலை வாய்ப்பிலே, சர்வீஸ் கமிஷனிலே இந்த விதியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு என்ற அடிப்படையிலே, வேலை கொடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த 9 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையில்லை. ஒதுக்கீட்டை 50 சதவிகிதமாக உயர்த்துகின்றபோது, சென்ற ஆண்டு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு யார் பொறுப்பு? எத்தனை ஆயிரக் கணக்கான மாணவர்கள், ஆயிரக்கணக்கான குடும்பங்களிலே இருக்கக்கூடிய பிள்ளைகள் எதனாலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? ஆகவே இப்படி ஒரு பெரிய திட்டத்தை, கொள்கையாகக் கொண்டு வரும்போது, முதலிலேயே நன்றாக ஆலோசனை செய்து இறுதியான முடிவு கொண்டுவர வேண்டும். ஆட்சியிலே இருப்பவர்கள் யோசித்துச் செய்ய வேண்டும். அவசரக் கோலம் அள்ளித் தெளிப்பது என்று இதைக் கொண்டு வந்ததால் தான், இன்று ஒரு பெரிய எதிர்ப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஏன் இந்த அவசரம்? ஏன் இப்படி அனைத்துக் கட்சிகளும் கூடிப் பேசவேண்டும்? தேர்தலுக்கு முன்பேகூட பேசிக்கொண்டிருந்தார்களே. அரசாங்க ஊழியர்களுடைய, என்.ஜி.ஓ.க்களுடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு ரூ. 9 ஆயிரம் வருமான வரம்பு வைத்த காரணத்தினாலே, அந்த என்.ஜி.ஓ.க்களுடைய பிள்ளைகளுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த என்.ஜி.ஓ.க்கள்கூட ஒட்டுமொத்தமாக எதிர்ப்புத் தெரிவித்தார்கள். தேர்தலுக்குப் பின்னாலே உணர்ந்த காரணத்தினாலே, அவசர அவசரமாக 31 சதவிகிதம் என்று இருந்ததை 50 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 16 சதவிகிதமாக இருந்தது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு. அதையும் 20 சதவிகிதமாக உயர்த்தக்கூடாதா ? அதைக் கேட்டால் மக்கள் தொகையின் அடிப்படையிலே என்று சொல்கிறார்கள், எந்த ஆண்டு சென்சஸ் கணக்கு எடுத்தார்கள்? இந்த ஆண்டிலிருந்து இந்தக் கணக்கைச் சொல்கிறார்கள், ஆகவே இந்த

ஆட்சியிலே இருப்பவர்களுக்கு ஒரு திட்டவட்டமான கொள்கை இல்லை. அதுபோலவேதான் ஆளுநர் உரையிலே மதுவிலக்குப் பிரச்சினை குறித்து ஒன்றும் இல்லாமல் இருப்பது, அது ஒரு கொள்கைப் பிரச்சினை. அந்தக் கொள்கைப் பிரச்சினையை அறிவிக்கின்றபோது, ஆளுநர் அவர்கள் உரையிலே அதைப்பற்றிச் சொல்ல வேண்டாமா * * அரசு அதை ஜி. ஓ. மூலமாகக் கொண்டு வந்துவிடலாம் என்று இருக்கிறது. இது ஒரு கொள்கைப் பிரச்சினை அல்லவா ? இந்த முதலமைச்சர் அவர்கள் கடுமையான சட்டம் கொண்டு வந்த நேரத்தில் நாங்கள் அதை எதிர்த்தோம். "ஏற்கெனவே இருக்கின்ற சட்டமே போதும். அப்படி தவறான பழக்கத்திலே ஈடுபட்டிருப்பவர்களைத் திருத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்படி ஒரு கடுமையான சட்டம் கொண்டுவர வேண்டாம்" என்று நாங்கள் சொன்ன நேரத்திலே என்ன சொன்னார்கள்? "இல்லை, இல்லை, தாய்மார்களுடைய கண்ணீரைத் துடைக்க, தாய்மார்களைக் காப்பாற்ற நாங்கள் இதைக் கொண்டு வருகிறோம்' என்று சொன்னார்கள். தேர்தலுக்குப் பின்னாலே, அந்த மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, இன்றைக்கு இந்தக் கொள்கையை அறிவித்தது, நடைமுறைப்படுத்துகிறார்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் ? தாய்மார்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நாங்கள் இதைத் தளர்த்தியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இங்கேகூட தாய்மார்கள் இருக்கிறார்கள். அந்தத் தாய்மார்கள் மனுப் போட்டார்களா முதலமைச்சருக்கு ? தாய்மார்கள் இதை ஒத்துக்கொள்கிறார்களா ? அவர்கள் சொல்கிறார்கள் இன்னொரு தத்துவத்தை . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அரசு கொடுக்கின்ற அபிப்பிராயத்தைத்தான் ஆளுநர் அவர்கள் படிக்கிறார்கள்.

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHY: On a point of information, Sir so far as the ladies who ane here are concerned, the question does not arise because nobody drinks in their family.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆளுபவர்கள் கொடுக்கின்ற கருத்தைத்தான் ஆளுநர் அவர்கள் உரையிலே எழுதி வைத்துப் படிக்க வேண்டும். * *

It is casting as pension on the Governor.

அந்த வாக்கியத்தை மாத்திரம் இந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** ஆகவே தாய்மார்கள் கண்ணீரைத் துடைப்பதற்கு, அவர்கள் கேட்டுக்கொண்டதனால்தான் தளர்த்தியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இது வரை ஏமாற்றுவதற்காகத்தான் இருக்கும்

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





இந்த அறிவிப்பு வந்த நேரத்தில், நாங்கள் எல்லாம் மக்களைச் சந்தித்துக் கேட்டோம். "நீங்கள் மனுப் போட்டீர்களா ? முதலமைச்சர் அவர்களை அணுகிக் கேட்டீர்களா ? இதையெல்லாம் விரும்புகிறீர்களா" என்று கேட்டோம். தாய்மார்கள் கேலியும், கிண்டலுமாகத்தான் சொல்கிறார்கள். சிரிக்கிறார்களே தவிர வேறல்ல. அதை வரவேற்பார்கள் என்று யாரும் நினைக்க வேண்டாம். அப்படி ஆட்சியாளர்கள் ஒரு நம்பிக்கையில் இருக்கிறார்கள். பாண்டிச்சேரியில் தோற்றுப்போனதற்கு மது விலக்குக் கொள்கையிலே, முன்னாலே மத்திய அரசிலே இருந்த திரு. மொரார்ஜி தேசாய் தலைமையிலே எடுத்த நடவடிக்கைதான் காரணமாக இருந்தது. அதனால் இன்றைக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் (ஐ) கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டது. ஆகவே இங்கேயும் மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்துவிட்டால், நமக்கு வெற்றி கிடைக்கும் என்று அரசினர் நினைக்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன் : "அடுத்த தேர்தலில் இப்போது வந்த இடத்தைக்கூட பெற முடியாது." இதை அனுபவரீதியாகப் பார்க்கிறோம். இப்போது மது விலக்கை இவ்வளவு தாராளமாகத் தளர்த்தி நாட்டிலே ஒரு தவறான பழக்கத்திற்கு இந்த நாட்டு மக்களை உட்படுத்துகின்ற அளவுக்கு இந்த ஆட்சியாளர்கள் முனைவது நல்லதல்ல.

தேர்தல் நேரத்தில், என்ன சொன்னார்கள் ? 'இந்திரா காந்தி ஒரு சர்வாதிகாரி' என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்கள் கோரிய 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

**திரு. சோ. ஆறுமுகம் :** இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன்.

"இந்திரா காந்தி பிரதமராக வந்தால், 10 ஆண்டுகளுக்குத் தேர்தலே நடக்காது. பிரதமர் பதவி என்ன பரம்பரைச் சொத்தா [illegible] என்றெல்லாம் கேட்டார்கள். "அவர் எங்கும் ஊழல் ராணி, ஊழல் மன்னன் [illegible] கலைஞர் பவனி வருகிறார்கள்" என்றெல்லாம் சொன்னார்கள். [illegible] நாட்டிற்குப் பிரதமராக 11 ஆண்டுகள் இருந்தவர் இந்திரா [illegible] இன்னும் இந்த நாட்டிற்குப் பிரதமராக வந்திருப்பவர்கள். அவருடைய குடும்பத்தினுடைய பாரம்பரியத்தை எந்தக் கட்சியிலே இருந்தாலும் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது . . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் கூட்டங்களிலே நாங்கள், அதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக்

கழக மேடையிலே பேசிய கருத்துக்களை "இப்படியெல்லாம் இந்திரா
காந்தியைப்பற்றி பேசினார்கள், இப்படிப் பேசியவர்களோடு நீங்கள் எப்படிச்
சேர்ந்தீர்கள் ?" என்றுதான் பெரும்பாலும் பேசியிருக்கிறோம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, தேர்தல் கூட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக பேசிய
பேச்சைக் குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். இன்றைக்கு ஒவ்வொரு தொகுதி
யிலேயும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக அடிக்கப்பட்ட
போஸ்டர்கள் இருக்கின்றன. "ஊழல் மன்னன், ஊழல் மகாராணி" என்றும்
மே அ.தி.மு.க. என்றும் போடப்பட்ட போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்
கின்றன. கார்ட்டூன்கள் வரையப்பட்டிருக்கின்றன. அதை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன்.

(பிற்பகல் 12.10)

அதுமட்டுமல்ல. இன்னொன்று. கலைஞரையும் இந்திரா காந்தியையும்
சித்திரமாக வரைந்தார்கள். குறவன், குறத்தி வேடம் போட்டு. 'நாங்க
புதிதா கட்டிக்கிட்ட ஜோடிதானுங்க' என்ற பாட்டை எழுதியிருந்தார்கள்.
இந்திரா காந்தி அவர்கள், 11 ஆண்டுக் காலம் இந்த நாட்டின் பிரதமராக
இருந்தவர்கள். அவர்களை ஒரு கர்ப்பிணியைப்போல சித்தரித்து, அவ
திர்வாணமாக வரைந்து, இந்த நாட்டு மக்களிடம் ஓட்டுக் கேட்டார்கள் . . . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்
பிடுகிற வாசகங்கள் தேர்தல் நேரத்தில் கேலிச் சித்திரங்களாக யாரோ
எழுதியது. அதை இந்த அவையிலே விளம்பரப்படுத்திச் சொல்வது உள்ள
படியே அவர் மதிப்பு வைத்திருக்கிற நிலைக்கு ஆதாரமாகச் செய்யப்படுகிற
காரியமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்
தனம் அவர்கள் வெட்கப்படுவதை நான் பாராட்டுகிறேன். அப்படி அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரைப் போட்டு விளம்பரம் செய்தார்
கள். அதற்காகச் சொல்கிறேன். ஆனால் இன்றையதினம் ஆளுநர் அவர்கள்
அறிக்கையிலே தேர்தல் அமைதியாக நடந்ததென்று சொல்லியிருக்கிறார்
கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள்
12-15-க்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. சோ. ஆறுமுகம் : முதலமைச்சரவர்கள் சுற்றுப் பயணம் செய்தார்
கள். அந்த இடங்களிலே அதிகாரிகள் எப்படி மிரட்டப்பட்டனர் என்பதும்,
மாவட்டத்திற்கு இரண்டு அமைச்சர்களாக இருந்துகொண்டு, பஸ் முதலாளி





களையும், மிருங்கு மில் வைத்து நடத்துபவர்களையும் மிரட்டினார்கள்
என்பதையும் சொல்லுகிறார்கள். நான் சேலத்தில் நடந்ததைப்பற்றிச்
சொல்ல விரும்புகிறேன். வெள்ளிப் பட்டறை வைத்து நடத்துகிறவர்களையும்
மெடிகல் ஷாப் வைத்து நடத்துகிறவர்களையும் மிரட்டி நிதி வசூல் செய்தார்
கள். தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பது மட்டுமல்ல, எதிர்க்
கட்சிகளுக்கு வாகன வசதிகள் கிடைக்காத அளவிற்கு ஒவ்வொரு மாவட்டந்
தோறும் அமைச்சர்கள் முகாமிட்டு, செய்தார்கள். சேலத்தில் அமைச்சர்
கள் திரு. சவுந்தரராசனும், திரு. பொன்னையனும் இருந்து காரியங்களைச்
செய்தார்கள். இப்படிப்பட்ட காரியங்களை ஆட்சியாளர்கள் செய்து,
தேர்தலைச் சந்தித்தார்கள். இதிலே மக்கள் அதிருப்தி கொண்ட இடங்களிலே
முதலமைச்சரவர்கள் பேசுகிறார். ஒரு சட்டமன்ற உறுப்பினரைப்பற்றி
மக்கள் பேசுகிறார்கள். அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அப்படிச்
சொல்வது மரபல்ல. அந்தச் சட்டமன்ற உறுப்பினர் ஊழல் பேர்வழி, அவர்
சாதாரணமாக இருந்தவர், இப்போது பல லட்சம் ரூபாய் சொத்து சேர்த்துக்
கொண்டிருக்கிறார், ஃபேர்லாண்ட் திட்டத்தில் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்,
பல பலசரக்குக் கடைகளை அமைத்திருக்கிறார் என்று மக்கள் பேசியிருக்கிறார்
கள். அந்த இடத்திற்குப் போய் முதலமைச்சரவர்கள் ஒரு மணி நேரம் பேசு
கிறார்கள். அரை மணி நேரம் அந்த எம்.எல்.ஏ.விற்கு வக்காலத்து வாங்கிக்
கொண்டு பேசுகிறார். என்ன பேசுகிறார் தெரியுமா ? அவர் கட்டடம் கட்டியது
உண்மைதான், அவர் பெரிய வீடுகளைக் கட்டிக் கொண்டது உண்மைதான்,
கடைகள் போட்டிருப்பது உண்மைதான். பணம் எப்படி வந்தது தெரியுமா ?
வங்கியில் பணத்தைக் கடன் வாங்கினார். அது மாத்திரமல்ல. என்னுடைய
மனைவி திருமதி வி. என். ஜானகியிடம் 25,000 ரூபாய் கடன் வாங்கியிருக்
கிறார் என்று முதலமைச்சரவர்கள் ஒரு தவறான எம். எல். ஏ.வுக்கு வக்கா
லத்து வாங்கிப் பேசலாமா ? இங்கே இருக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களைக்
கேட்கிறேன். "உங்கள் யாருக்காவது முதலமைச்சரவர்கள் மனைவியிடம்
கடன் பெறும் வாய்ப்பு இருக்கிறதா ?" அண்ணா தி. மு. க. உறுப்பினர்களுக்கு
கடன் வேண்டுமென்றால் மனுப் போடச் சொல்லுங்கள், பணம் தாராளமாகக்
கிடைக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன் . . . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : தவறான எம். எல். ஏ. என்று சொல்லு
கிறார். எந்த அடிப்படையிலே அந்த முடிவிற்கு உறுப்பினரவர்கள் வந்தார்
என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்கெனவே 45 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவராக எழுந்து கேள்வி கேட்டு, அதற்கு அவர் பதில் சொல்வதென்றால், அவர் பேசி முடிக்கும்போது சபையைக் கலைப்பதற்கான நேரம் வந்துவிடும்.

**திரு. சோ. ஆறுமுகம் :** துணைத் தலைவரவர்களே, விரைவில் என்னுடைய பேச்சை முடித்துவிடுகிறேன். நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னால் ஆட்சியில் இருக்கத் தகுதியில்லாதவர்கள் இன்னமும் அட்டையைப்போல ஒட்டிக்கொண்டிருப்பது நியாயமல்ல. சட்டி சுட்டதடா, கை விட்டதடா என்று ராஜினாமா செய்துவிட்டுப் போயிருக்க வேண்டும். இன்னும் ஆட்சியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டரை ஆண்டுக் காலம் மக்களுக்குக் கொடுத்த தொல்லை போதும். மேலும் மக்களை தொல்லைக்கும், சிரமங்களுக்கும் ஆளாக்க வேண்டாம். அந்த நிலையை உருவாக்கினால், வருங்காலத்தில் நீங்கள் செல்லுமிடங்களில் மக்கள் 'கேரோ' செய்வார்கள், மக்கள் உங்களை அனுமதிக்க மாட்டார்கள் என்று சொல்லி, ஆளுநர் அவர்கள் உரையிலே வரவேற்கக்கூடிய வகையிலே ஒன்றுமில்லை என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரைமீது கடந்த இரண்டு, மூன்று நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்தில்—அதை ஒரு விவாதம் என்று சொல்வதைக் காட்டிலும், இந்தச் சட்டமன்றம் கலைக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றிய பட்டி மண்டபமாக மாற்றியிருக்கிறார்கள்—அப்படிப்பட்ட பட்டி மண்டபத்தில்—நானும் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நேற்று மாலையிலே கடைசியாகப் பேசிய அருமை நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மிக்க நல்லவர், நல்ல நண்பர், நல்ல பண்பாளர், அமைதியானவர். இத்தனை இலக்கணங்களையும் திடீரென்று சில நாட்களுக்குள்ளாக அவரால் எப்படி மாற்றிக்கொள்ள முடிந்தது என்பது எனக்குப் புரியவில்லை. வெகு சீக்கிரமாக மாற்றிக்கொண்டு, புதிய எசமானர் கொத்தடிமைகளைப் பார்த்துப் பேசும் பாணியில் பேச ஆரம்பித்தார். தான்தோன்றிகள் என்றார், கையாலாகாதவர்கள் என்றார், சர்வாதிகாரிகள் என்றார். இன்னும் எப்படி எப்படி வசை மொழிகள் உண்டோ, அவற்றை எல்லாம் . . . .

***திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவரவர்களே, நான் வசைமொழிகளாகச் சொல்லவில்லை. கொத்தடிமைகளிடம் பேசும் எசமானர் மொழியாகவும் வரவில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் கடந்த காலத்தில், சென்ற





கூட்டத் தொடரில் இந்த அவைக்கு முறையாக வந்திருந்தால், அறிந்திருக்க முடியும். கடந்த முறை நான் எப்படிப் பேசினேன் என்பதையும் திரு அமைச்சரவர்கள் அதற்கு எப்படி பதில் சொன்னார் என்பதையும் அவர் அறிந்திருப்பார். என்னுடைய நிலையில் நான் கொஞ்சம்கூட மாறவில்லை. மாறாக ஆளும் கட்சியினரின் வார்த்தைகள்தான் மாறியிருக்கின்றன. அவர்களின் நிலைமைகள், அணுகுகின்ற விதம், மாறுபட்டிருக்கிறது. எங்களைப் பார்த்துப் பேசும் விதமும் மாறுபட்டிருக்கிறது.

**புலவர் புலமைப்பித்தன் :** அப்படி வசை பாடினால்கூட அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள், நாங்கள். வசையாளர்கள் வாழ்க என்று சொல்ல எங்களுக்கு அண்ணா அவர்கள் கற்றுத் தந்திருக்கிறார் . . . .

**திரு. க. இராமமூர்த்தி :** அது பலவீனத்தான்.

**புலவர் புலமைப்பித்தன் :** மனிதனுடைய பலமே அதுதான். வசையாளர்கள் வாழ்க என்று இன்றைக்கும் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, நம்முடைய அருமைச் சகோதரர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும், அருமைத் தோழர்களும் ஒன்றாகச் சேர்ந்து, ஒரே குரலில் நல்ல 'கோரஸ்' பாடி முடித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஏக்கங்களையும், அபிலாஷைகளையும் எடுத்துச் சொன்னார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம் :** அவையிலே பேசும்போது என்னுடைய கருத்துக்களை நான் சொல்லுகிறேன். அப்படிச் சொல்லும்போது, ஓர் உறுப்பினர் 'கோரஸ்' என்று சொல்வது முறைதானா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 'கோரஸ்' என்பது கூட்டு இசையைக் குறிப்பிடுவதாகும். It is not an unparliamentary word. உறுப்பினருடைய பேச்சை இசையாகக் கருதுகிறார்கள்.

**புலவர் புலமைப்பித்தன் :** பல்லவி பாடுவது என்பது எப்படி மரபுக்குரிய சொல்லோ, அப்படித்தான் 'கோரஸ்' என்பதும் மரபுக்குரிய சொல்லாகும். ஒட்டுமொத்தமாக எப்போது இடத்தை காலி செய்யப் போகிறார்கள், எப்

போது கம்பளி மிச்சமாகும் என்ற அடிப்படையிலேயே பேசினார்கள். நம்முடைய அருமை நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, இவர்கள் கையாலாகதவர்கள், தொழில் துறையில் தமிழ்நாடு மிகவும் பின் தங்கிய நிலைமைக்கு ஆளாகிவிட்டது, எங்களுடைய ஆட்சியில் தொழில் துறை மகோன்னதமான நிலைமையில் இருந்தது என்று சொன்னார்கள். மூன்றாம் இடத்தில் இருந்தவர்கள் பதின்மூன்றாம் இடத்திற்கு வந்ததாகச் சொன்னார்கள். மெத்த மகிழ்ச்சி. (சிரிப்பு). நீங்கள் 30 ஆண்டுக் காலம் ஆண்ட பின்னாலேதான் தொழில் துறை இப்படி இருக்கிறது. இந்த நாடு பற்றி மற்ற நாடுகளிலே சொல்லுகிறபோது என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். The begging bowl is the symbol of India. பிச்சைப் பாத்திரம்தான் இந்த நாட்டின் அடையாளச் சின்னம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் ஏராளமான தொழில்களை உருவாக்க திட்டங்களைத் தீட்டி, செய்து முடித்த பின்னாலும், இந்த நாட்டுக்கு மிச்சமாக இருப்பது பிச்சைப் பாத்திரம்தான் என்று சொல்லியிருக்கிறார்கள்.

*திரு. க. இராமமூர்த்தி: உடையாத திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, அதனுடைய தலைமைப் பொறுப்பை ஏற்ற அண்ணா அவர்கள், இந்தியாவைக் காப்பாற்றும் அரசு காங்கிரஸ் அரசுதான், நல்ல அரசு கொடுத்திருப்பது காங்கிரஸ்தான் என்று அமெரிக்காவில் சொல்லியிருக்கிறார். திரும்பவும் இங்கே வந்து அதைச் சொல்லியிருக்கிறார் என்

(பிற்பகல் 12-20)

புலவர் புலமைப்பித்தன்: நல்ல அரசு என்பது வேறு. வல்ல அரசு என்பது வேறு. பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளிநாடுகளுக்கு, குறிப்பாக அமெரிக்காவுக்குப் போய்ப் பேசுகிறபோது, யாருடைய ஆட்சி இந்தியாவில் வர வேண்டுமென்று கருதுகிறீர்கள் என்று நிருபர்கள் கேட்டார்கள். யாருக்கு அதிகப்படியாக வாக்கு போடுகிறார்களோ அவர்கள் ஆட்சிக்கு வர வேண்டுமென்று அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பதில் சொன்னார்கள். யார் அதிகப்படியாக வாக்கு பெற வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள் என்று திரும்பக் கேட்டார்கள். உடனே அண்ணா அவர்கள் வெளிநாட்டுக் கொள்கைக்கு குந்தகம் வரக்கூடாது என்பதற்காக வெகு நாகரிகமாக, அழகாக பதில் சொன்னார்கள்.

*திரு. க. இராமமூர்த்தி: அண்ணா சொன்னாரோ இல்லையோ, ஆனால் உறுப்பினர் அவர்களுடைய கட்சி நேரத்திற்கு நேரம் விளக்கங்களையும் தத்துவங்களையும் சொல்லிக்கொண்டிருக்கிறது.



*புலவர் புலமைப்பித்தன்: நான் தமிழ் படித்தவன். ஆகவே உண்மைக்குப் புறம்பாகப் பேசுகிற பழக்கம் என்னிடம் இல்லை. இந்தியத் துணைக் கண்டத்துக்கு யார் உதவுகிறார்களோ அவர்கள் தான் ஆட்சி பீடத்திற்கு வர வேண்டுமென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அது அவருடைய நாகரீகம். அண்ணா அவர்கள் அப்படிச் சொன்னதால், இப்பொழுது உங்களுடைய ஆட்சி தான் தேவை என்று நான் சொல்ல வரவில்லை. 1976 ஆம் ஆண்டில் உங்கள் ஆட்சி முடிந்து நீங்கள் போகும்போது, மூன்றாவது இடத்திற்கு தொழிலைக் கொண்டு போய் விட்டு விட்டீர்கள். வீதி வீதியாக பாத்திரத்தை கையில் ஏந்தி பட்டினிப் பட்டாளம் அலைந்து கொண்டிருந்த காட்சியை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். இரண்டரை வருடத்திற்குள்ளே தொழிலை பின்தங்கிய நிலைக்குக் கொண்டு வந்து விட்டீர்களே என்று சொன்னீர்கள். நினைத்த தொழில்களை எல்லாம் உடனே கொண்டு வர வேண்டிய அளவிற்கு நாம் ஆற்றலை இன்றைய தினம் பெற்றுவிடவில்லை. இங்கேயுள்ள துரும்பை அசைக்க வேண்டுமென்றாலும் கூட, அங்கேயுள்ள அனுமதியைப் பெற்றுத் தான் நாம் செயல்பட முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் சற்று எண்ணிப் பார்க்க வேணடும்.

"நீங்கள் தோற்றுப் போய் விட்டீர்கள்", என்று சொன்னீர்கள். அது தெரிந்த கதை தான். அதனாலேயே நாங்கள் ஆட்சியை விட்டு விலகிப் போக வேண்டுமென்று சொல்லுவீர்களேயானால், நான் உங்களுக்கு ஒரே ஒரு பதிலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 5 நாட்களுக்குள் போகிறீர்களோ அல்லது 4 நாட்களுக்குள் போகிறீர்களோ என்று உங்கள் தலைவர்கள் சொல்வதுபோல், நீங்களும் சொல்லுகிறீர்கள். அப்படி நீங்கள் சொல்லுவீர்களேயானால், நான் வேறு பல்வேறு விவரங்களை உங்களுக்குச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியிலே நடைபெற்ற ஒரு தேர்தல் மூலம் ஒரு உண்மையை நாம் புரிந்துகொள்ள முடியும். நாகர்கோவில் பாராளுமன்றத் தொகுதியிலுள்ள விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலின்போது இந்திரா காங்கிரஸ் பெற்ற வாக்கு 33 ஆயிரத்துக்கு மேல். அதே நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியிலுள்ள விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் பெற்ற ஓட்டு 13 ஆயிரத்துக்கு மேல். தடுமாற்றமின்றி, தெளிவான சிந்தனையோடு சிந்தித்துப் பார்த்தால், இதிலுள்ள உண்மையை நாம் புரிந்துகொள்ள

முடியும்; கிட்டத்தட்ட 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் இந்திரா காங்கிரஸ் சட்டமன்றத் தேர்தலின்போது தோற்றிருப்பதற்கு என்ன அடிப் படைக் காரணம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

உங்களை ஆதரித்த பத்திரிகையில் ஒரு கேள்வி பதிலைப் போட்டிருக்கி றார்கள். பத்திரிகையின் பெயர் "இதயம் பேசுகிறது".

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இந்திரா காங்கிரசில் இரண்டு காங்கிரஸ் இருக்கிறதா?

***திரு. க. இராமமூர்த்தி :** உங்களுக்காக ஒரு இந்திரா காங்கிரஸ் கட்சியை உருவாக்க முயற்சி செய்தீர்கள். ஆனால் தோற்றுப் போய்விட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் ஒரு பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டு சில விவரங்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைப் பார்த்து, உங்களை ஆதரித்த பத்திரிகை என்று குறிப்பிட் டார்கள். அதனால்தான் கேட்டேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** அதில் ஒரு கேள்வியும் பதிலும் போட்டிருந் தார்கள். நாடெங்கிலும் வெற்றி பெற்ற இந்திரா காங்கிரஸ் கேரளாவில் நடை பெற்ற சட்டமன்றத் தேர்தலில் ஏன் தோற்று விட்டது என்று ஒரு கேள்வி கேட்டிருந்தார்கள். அப்படி நாடாளுமன்றத்திற்கு நடைபெறுகின்ற தேர்த லோடு சட்டமன்றங்களுக்காக நடைபெறுகின்ற தேர்தலை ஒப்பிடுவது தவறு என்று பதில் போட்டிருந்தார்கள். "நாடாளுமன்றத் தேர்தல் ஒரு தகுதி யுள்ள பிரதமரைத் தேர்ந்தெடுக்க நடத்தப்பட்ட தேர்தல், சட்டமன்றத் தேர்தல் வேறு" என்று குறிப்பிட்டார்கள்.

***திரு. க. இராமமூர்த்தி :** அடிக்கடி குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு, தேர்தல் முடிவையொட்டி ஆட்சியை விட்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போக வேண்டு மென்று மற்றவர்கள் அல்லது எதிர்க் கட்சிகள் சொல்லுவது என்பது வேறு. இன்றைக்கு என்ன நிலை என்பதைப் பார்க்க வேண்டும். இவர்களே எப் போதும் நிலையாக இருக்க வேண்டுமென்று இவர்கள் டெல்லிக்குச் சென்று அரசைக் கவிழ்க்கக் கூடாது என்று சொல்லி உங்களை நீங்களே பலவீனப் படுத்த வேண்டிய அவசியம் என்ன? நடந்து முடிந்த தேர்தல் ஆட்சியில் யார் இருக்க வேண்டுமென்று தெளிவாக்கி விட்டது.





**புலவர் புலமைப்பித்தன் :** அந்தப் பிரச்சினைக்கே இடமில்லை என்று அந்தப் பத்திரிகையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நாடாளு மன்றத் தேர்தல் ஒரு நல்ல பிரதமரை இந்தியாவுக்கு உருவாக்க நடந்த தேர்தல். இந்தச் சட்டமன்ற தேர்தலை நாடாளுமன்றத் தேர்தலோடு இணைக்கக் கூடாது என்று தெளிவாக அந்தப் பத்திரிகையில் எழுதியிருக்கி றார்கள். ஆகவே நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வதெல் லாம் தயவுசெய்து, "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிற முயற்சியில் ஈடுபட வேண்டாம்". அப்படி நீங்கள் சொல்லப் போனால் 1967 ஆம் ஆண்டு தேர்தலின்போது, 9 மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத அமைச்சரவைகள் உருவாயின. அப்படிப் பார்த்தால், 9 மாநிலங் களிலுள்ளவர்களும் ஒன்று சேர்ந்து மத்தியிலுள்ள அரசு ஆட்சியிலிருந்து விலக வேண்டுமென்று சொன்னார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தல் வேறு, சட்டமன்றத் தேர்தல் வேறு. அதனால் தான் அவர்கள் அப்போது அப்படிச் சொல்லாமல் விட்டுவிட்டார்கள்.

அடுத்து, சட்டம் ஒழுங்கு கெட்டுப்போய்விட்டது என்று சொன்னார்கள். 1966 ஆம் ஆண்டில் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டிருந்ததை விடவா இப்போது சீர்கெட்டு விட்டது? நான் இன்னொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட் டார்கள். அதாவது நாஞ்சிலார் அவர்கள் திரு. தங்கப்பாண்டியன் அவர் களைப் பார்த்து "தம்பி" என்று சொன்னதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நாஞ்சிலார் திரு. தங்கப்பாண்டியனை 'தம்பி' என்று சொன்னது உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குப் பொறுக்கவில்லை. 'உறவா? பகையா?' என்று கேட்டார்கள். அதற்கு நான் ஒன்றை மிகப் பணி வன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். "ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு லாபம்" என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்ட எண்ணத்தில், எல்லாம் எப்போதும் உங்களுக்கே சாதகமாக நடக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கலாம். இதிகாச கால இராமமூர்த்தியிலிருந்து இந்திரா காங்கிரஸ் இராமமூர்த்தி வரை இது நடைபெற்று வருவது தான். இப்படி நடப்பது சர்வ சாதாரணம். இது மாறாது. மாறாது என்பதிலே நீங்கள் நம்பிக்கை வைக்கலாம்.

மானப் பிரச்சினை என்றெல்லாம் பேசினீர்கள். தன்மானத்திற்கு தனிப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நடத்தினார் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப் பாண்டியன். திரு. கோ. சி. மணி "ஊர் ஊராக, வீதி வீதியாக, சந்தி

சிரிக்கிறது", என்றெல்லாம் சொன்னார்கள். "சிரித்து வாழ வேண்டும், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே" என்று சொன்னவர்களே நாங்கள் தான். எல்லோரும் சிரித்து வாழ வேண்டுமென்று தான் நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மானத்தைப்பற்றிச் சொன்னார்கள். இந்திரா அம்மையார் அவர்கள் தமிழகத்திற்கு வருகிறபோது, "யத்த காட்டேரி வருகிறார், காஷ்மீர் கரடி வருகிறார், மானமுள்ள தமிழனாக இருந்தால் கையில் கறுப்புக் கொடியோடு புறப்பட்டு வா, உன்னுடைய வெறுப்பைக் காட்ட வேண்டாமா?" என்று டாக்டர் கலைஞர் அறிவித்தார். மானமுள்ள தமிழனுக்கு என்ன இலக்கணம் வைத்திருக்கிறார் என்றால், இந்திரா காந்தி அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டும். அப்படித் தான் டாக்டர் கலைஞர் அறிவித்தார்.

(திரு. வீராசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, ஆளும் கட்சியிலிருந்து யாரும் குறுக்கீடு செய்யாமல் ஒத்துழைத்தார்கள். இப்போது ஆளும் கட்சி உறுப்பினர் பேசும்போதும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் யாரும் அடிக்கடி குறுக்கிடாமல் இருந்தால், அவர்களுக்குப் பேச வாய்ப்பாக இருக்கும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நான் குறுக்கிடவில்லை. தவறான தகவலை உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். நீங்கள் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறீர்கள். தவறான தகவலை உறுப்பினர் சொன்னால், அதைத் திருத்த வேண்டும். அவர் ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டுச் சொன்னார். "இப்படி கலைஞர் ஒரு அறிக்கை விட்டார்" என்று சொன்னார். அப்படி எந்த இடத்திலும் கலைஞர் அறிக்கை விடவில்லை. எந்தப் பத்திரிகையிலும் கலைஞர் அறிக்கை விடவில்லை. எந்தப் பத்திரிகையிலும் கலைஞர் அவர்களின் பெயரால் இந்த மாதிரி அறிக்கை வரவில்லை. தவறான தகவலை தயவு செய்து உறுப்பினர் அவைக்குத் தர வேண்டாம்.

(பிற்பகல் 12-30)

புலவர் புலமைப்பித்தன்: பெயராலே இல்லாமல் இருக்கலாம். 'முரசொலி' பத்திரிகையிலே வந்த செய்திதான் இது. நான் பத்திரிகையைக் காட்டத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: பத்திரிகையில் வந்தது வேறு . . .

புலவர் புலமைப்பித்தன்: அது உறுப்பினர் அவர்களுடைய கட்சிப் பத்திரிகை.





திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்த நாட்டிலே முதலமைச்சராக இருந்து இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய கலைஞர் அவர்கள் மீது இந்த மாதிரி ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடாது. கலைஞர் அவர்கள் எந்த இடத்திலேயும் அப்படி அறிக்கை விடவில்லை என்று நான் திட்டவட்டமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புலவர் புலமைப்பித்தன்: ஒரு கட்சியினுடைய 'அஃபிஷியல் ஆர்கன்' என்று சொல்லப்படுகின்ற, அதிகார பூர்வமான இதழிலே வருகிற செய்தி அந்தக் கட்சியின் தலைமையைச் சார்ந்தவரையும் சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இல்லையென்றால், மறுநாளே அதற்கு மறுப்பு அவர் சொல்லியிருக்க வேண்டும்.

திரு. பி. எலமந்தா எழுந்தரர்.

MR. DEPUTY CHAIRMAN: Is the hon. Member yielding to the other hon. Member?

*திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: நாங்கள் இந்திரா காந்தி அம்மையாரை எதிர்த்ததும் உண்மை. இப்போது ஆதரிப்பதும் உண்மை. அவற்றுக்கான காரணங்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். நெருக்கடி நிலைமையைக் கொண்டுவந்தபோது எதிர்த்தோம். இப்போது நெருக்கடி நிலை கொண்டு வந்தது தவறு என்று திருந்தியபோது ஆதரிக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்கலாமே தவிர, விளக்கம் சொல்லக்கூடாது.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: நெருக்கடி நிலை கொண்டு வந்தபோது அவர்கள் ஆதரித்தார்கள், ஆனால் இப்போது ஏன் எதிர்க்கிறார்கள்?

புலவர் புலமைப்பித்தன்: இனி மற்றவர்கள் குறுக்கிடுவதை நான் விரும்பவில்லை. நான் நடந்த செய்திகளைத்தான் சொல்கிறேன். ஒரு இலக்கணம் சொன்னார்கள். பவணந்தி முனிவர் அவர்கள் சொன்னதைப்போல சொன்னார்கள். "தமிழன் மானம் உள்ளவனாக இருந்தால், இந்திரா காந்தி அம்மையாருக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டும். கறுப்புக்கொடி காட்டினால் தான் மானம் உள்ளவன்". என்பது அவர்கள் போட்ட இலக்கணம். அப்படியென்றால், கறுப்புக்கொடி காட்டாமல் சும்மா இருந்தால், மானம் கெட்டவர்கள் என்று ஆகும். அப்படி இருக்கும்போது இன்றைக்கு ஆதரிக்கும் நிலை

மைக்குச் சென்றிருக்கிறார்களே அது எவ்வளவு மானம் கெட்ட செயல் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கறுப்புக்கொடி காட்டினால்தான் மானம் உள்ளவன் என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. அப்படியெல்லாம் சொன்னவர்கள் நீங்கள், இன்றைக்கு எங்களைப் பார்த்து மானம் கெட்டு விட்டது என்று சொல்கிறீர்கள். புறநானூற்றிலே கணைக்கால் இரும்பொறை போரிடும்போது, அவனுடைய மார்பிலே பட்ட வேல் புறமுதுகில் ஊடுருவிச் செல்ல, முதுகிலே ஏற்பட்ட காயத்தைப் பார்த்து, எங்கே புறப்புண் ஏற்பட்டு விட்டதோ என்று மற்றவர்கள் கருதிவிடுவார்களோ என்று கருதி, கவலைப்பட்டு, வடக்கு நோக்கி இருந்து உயிர் நீத்த அந்தக் கணைக்கால் இரும்பொறையைப் போல உங்களைக் கருதிக்கொண்டு பேசும் மரபை நீங்கள் கொஞ்சம் மாற்றிக்கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இவைகளைச் சுட்டிக்காட்டி இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள். அதுபற்றி நாங்கள் கவலைப்படவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தப் பதவி என்பது தோளிலே போட்டிருக்கிற துண்டைப் போன்றது என்று சொன்னார்கள். நாங்கள் இந்தப் பதவியைத் தொண்டாக ஏற்றுக்கொண்டிருக்கிறோமே தவிர, உங்களைப்போல தொழிலாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போய் விடவேண்டும் என்று வற்புறுத்தும் முறை இருக்கிறதே அதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். கையிலே இருக்கிற கொம்பை எடுத்து குழந்தையை அடிப்பதற்குப் போகிறான் அப்பன். பக்கத்திலே இருந்தவன், "என்ன குழந்தையை அடிக்கவா போகிறாய்?" என்று கேட்டார். அதற்கு "கொம்பை முறிக்க வேண்டும் என்று நினைக்கிறேன், அதனாலே குழந்தையை அடிக்கிறேன்", என்று பதில் சொல்கிறான். கொம்பை முறிப்பதற்கு குழந்தையை ஏன் அடிக்க வேண்டும்? நான் திராவிட முன்னேற்றக் கழக சகோதரர்களைப் பார்த்துக் கேட்கிறேன். கொம்பை முறிப்பதற்காக—கையிலே பிடித்துக் கொண்டிருக்கிற செங்கோலாகிய இந்தக் கொம்பை முறிப்பதற்காக—மாநில சுயாட்சி என்ற குழந்தையை சாகடிக்கிறீர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். கொம்பை முறிப்பதற்கு குழந்தையை அடிக்க வேண்டாம். இந்தக் கொம்பு தந்தை பெரியார் அவர்களுடைய கைக் கொம்பு என்பதை தயவுசெய்து மறந்துவிட வேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் மிகவும் அழகாகப் பேசினார்கள். அவர் ஒரு நகைச்சுவைப் பேச்சாளர். "கரும்புச் சாற்றை ஊற்றி எறும்பை மொய்க்க வைப்பதுபோல" என்று பேசினார்கள். கரும்புச் சாற்றைத் தெளித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கரும்புச் சாற்றைத்



தெளித்து எறும்பை மொய்க்க வைப்பது என்பது அவருக்குக் கைவந்த கலை. அந்தக் கலை அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன், எங்களுடைய ஊரிலே ஒன்று சொல்வார்கள், ஆடு பலியாவதற்கு முன்னே மஞ்சள் தண்ணி தெளிப்பார்கள். அதுபோல இப்போது உங்கள் மீது மஞ்சள் தண்ணி தெளிக்கப்பட்டிருக்கிறது. இனி மங்கள விழா எடுக்கப் போகிறார்கள் என்று நீங்கள் நினைத்தால், நிச்சயமாக ஏமாந்து போவீர்கள். ஏதோ நடக்கக்கூடாதது எல்லாம் நடந்துவிட்டது. நீங்கள் ஒன்றுமே செய்யவில்லை, அதனாலே மக்கள் உங்களை மறந்துவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். உண்மைதான். நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை. வீராணம் ஊழல் நடந்ததைப்போல, பூச்சி மருந்து ஊழல் நடந்ததைப்போல நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை. அப்படிச் செய்யாதபோது, மக்கள் எங்களை மறந்திருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோரைப்பற்றிச் சொன்னார்கள். தந்தை பெரியார் அவர்களுடைய தத்துவங்களைத் தாங்கி நிற்பதிலே நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. அவருடைய தத்துவங்களை 365 நாட்களும் சொன்ன பெருமைக்குரியவர்கள் நாங்கள் என்பதை மறக்க மாட்டீர்கள். ஆனால் சமுதாயத் துறையிலே ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை எண்ணிப்பார்த்து, ஒரு வேளை, அது தேவைதானோ என்று எண்ணியிருக்கக்கூடும். மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் மற்ற எல்லாக் கட்சிகளையும் அழைக்கிறார், வந்து உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று அழைப்பு விடுகிறார். அந்தப் பிரச்சினையிலே அக்கறையுள்ளவர்கள் வரலாம் என்று அழைக்கிறார். அக்கறையுள்ளவர்கள் வந்தார்கள். நம்முடைய திராவிடர் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் வீரமணி அவர்கள் ஒரு மெமோரண்டம் கூட தயாரித்துக்கொண்டு வந்தார்கள். அங்கு வந்து அவருடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்ன கருத்துக்களை பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால், பிரச்சினை எப்படியோ கிடக்கட்டும், போராட்டத்திற்கு இடம் வேண்டாமா என்று கருதியவர்கள் வர மறுத்தார்கள். கூட்டு சேர்ந்துகொண்டு வர மறுத்தார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இந்த மதுவிலக்குப் பிரச்சினையைப் பற்றி நாம் கொஞ்சம் நிதானமாக எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட தொல்லைகளுக்கு யார் காரணகர்த்தா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு காலத்திலே மதுவை மறந்திருந்தவர்கள், மது என்றால் என்ன

வென்றே தெரியாதவர்கள், இன்றைக்கு மது அருந்துகிறார்கள். சதாசிவம் கமிஷன் அறிக்கை என்று கருதுகிறேன், அந்த அறிக்கையிலே புள்ளிவிவரங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். தொடர்ந்து மதுவிலக்கு அமுலிலே இருந்ததன் விளைவாக மதுவென்றால் என்னவென்றே தெரியாமல் இருந்தவர்கள் எல்லாம், மதுவை மறந்திருந்தவர்கள் அத்தனை பேரும் குடித்தார்கள். அப்பன் எங்கே குடித்துவிட்டு வந்து விடுவானோ என்று அஞ்சிக்கொண்டிருந்த நிலைமை மாறி, தன்னுடைய பிள்ளை பள்ளிக்குச் சென்று வரும்போது குடித்துவிட்டு வந்துவிடுவானோ என்று அஞ்சும் நிலைமைக்கு நாம் இன்றைய தினம் மாறியிருக்கிறோம்.

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து

என்ற குறள்மொழிக்கொப்ப இந்த முள் மரத்தை நீங்கள் இந்த நாட்டிலே வளர்த்திருக்கிறீர்கள். நாங்கள் இப்போது அதை அழிக்கப் போகும்போது, அந்த முள் கையில் குத்திவிட்டது. தாய்மார்களுடைய நன்மைக்காக நாங்கள் இதைச் செய்தோம் என்று சொன்னது உண்மைதான். தாய்மார்களுடைய நன்மைக்காக இப்போது ஒத்திவைக்கிறோம் என்பதும் உண்மைதான். எந்த ஒரு சட்டம் ஏழைகளைப் பாதுகாப்பதற்கு என்று போடப்பட்டதோ, அந்தச் சட்டம் மக்களைத் துன்புறுத்துவதாக அமைகிறது என்பதைப் பார்க்கும்போது, அதைப் போக்கவேண்டியிருக்கிறது. பிள்ளை தொல்லை செய்கிறபோது, அடிக்கிறோம். பிறகு நாமே வருந்துகிறோம். அதைப்போல அக்கறையுடைய ஒரு அரசு, அன்னை மனம் கொண்ட அரசு, எல்லா நிலைமைகளையும் மனதில் கொண்டு இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைவாக முடிக்க வேண்டும்.

**புலவர் புலமைப்பித்தன் :** நாம் கடுமையான சட்டத்தைக் கொண்டுவந்து அதன் மூலமாக இந்த சமுதாயம் திருந்தாதா என்று நினைக்கிறபோது, அந்தச் சட்டமே துக்கமாக வந்துவிட்டது என்று நினைக்கிறபோது, அதை விட்டுவிடுவது ஒரு அன்னையின் கடமை. அதைப்போல இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்கு அரசு மட்டும் பொறுப்பாக இருந்தால், போதாது. சட்டத்தை உடைத்தெறிகிற முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்திட வேண்டும் என்று நான் கேட்டுக்



கொள்கிறேன். எல்லோருமே இதன் மீது அக்கறை கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றும் முயற்சியிலே ஈடுபட்டால்தான் வெற்றிபெறுமே தவிர, அப்படி இல்லாவிட்டால் வெற்றி பெறாது என்பதற்கு இவைகள் எல்லாம் சாட்சிகள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

நம்முடைய அரசு மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினர்களுக்கும் உதவித் தொகை வழங்குகிறது என்பதையாவது பாராட்டக் கூடாதா? நம்முடைய முன்னாள் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதைப் போல "தேக்கு மர உடலைத் தீயிக்கு ஆளாக்கி" செத்துப் போனவர்களின் குடும்பத்திற்கு உதவித் தொகை தரும் மரபு இருக்கிறதே அதை நினைத்தாவது எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் பாராட்டியிருக்க வேண்டாமா? பாராட்டாமல் விட்டது தவறு என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கருதுகிறார்கள். அவராவது அதைப் பாராட்டுவாரா என்று நான் கருதுகிறேன்.

***திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** நான் எதிர்க் கட்சியின் செயலாளன் என்ற முறையில் அதைப் பாராட்டியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள் என்று கருதுகிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** அதைப் போலவே எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இந்த அரசு உதவித் தொகை வழங்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு மிகுந்த கொடுமை இழைக்கப்படுவதாகக் கூறிய சில மாண்புமிகு உறுப்பினர்கள் மிகவும் அதிகமாகக் குறைபட்டுக் கொண்டார்கள். ஹரிஜனங்களின் நலனில் வேறு எந்த இயக்கத்தையும் விட இந்த இயக்கத்திற்கு மிகுந்த அக்கறை உண்டு என்பதைச் சொல்லிக் கொள்வதோடு, வேறு எந்த இயக்கத்திற்கும் அந்த அளவுக்கு அக்கறை இருக்க முடியாது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். "இருட்டறையில் உள்ளதடா உலகம், ஜாதி இருக்கிறது என்போரும் இருக்கிறார்களே" என்று பாரதிதாசன் பாடிய வகையில் பெரியாரின் தொண்டர்கள் இந்தச் சமுதாயத்திற்கு இன்னும் தேவைப்படுகிறார்கள் என்று நான் நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, வேறு அல்ல.

இன்றைய தினம் ஜாதித் தொல்லையை நாம் எந்த அளவுக்கு சாடி, அதனை ஒழிக்க வேண்டுமென்ற முயற்சிகளில் ஈடுபட்டாலும்கூட, அது எங்கெங்கோ தலை தூக்கிக்கொண்டுதான் இருக்கிறது. புற்றுகளைத் தேடிச் சென்று பாம்புகளை அடிக்கப் போகிறபோது, அடிக்கின்றவர்களின் காலையே கடிக்கும் முயற்சிகளில் பாம்புகள் ஈடுபடுவதைப் போல ஜாதிகளை ஒழிக்கிற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிற இந்த அரசுக்கு எதிராகப் பல இடங்களில் எதிர்பாராத, விரும்பத் தகாத ‘விழுப்புரம்’ சம்பவங்கள் நடைபெற்றுவிடுகின்றன. அதை வைத்துக்கொண்டு இந்த அரசுதான் ஹரிஜனங்களைக் கொடுமைப்படுத்துகிற அரசு என்று சொல்வது இருக்கிறதே, அதைப் போன்ற உண்மைக்குப் புறம்பான புகார் வேறு எதுவும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. எல்லமந்தா :** நமது முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களுக்குக் கொடுத்த தொல்லைகளும் இன்னல்களும் எவ்வளவு என்பது எல்லோருக்கும் தெரிந்ததே என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** ஒரு பக்கத்து வாதத்தை மட்டும் வைத்துக்கொண்டு தீர்ப்புக்கு வர வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். அது அவருடைய தரப்பிலிருந்து விடப்பட்ட அறிக்கை. உண்மை நிலை என்ன என்பதை. . .

(உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி தமது இருக்கையிலிருந்து கொண்டே ஏதோ பேசினார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் தம் இருக்கையில் உட்கார்ந்துகொண்டே பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** முதல்வர் அவர்கள் கொடுமை செய்துவிட்டார் என்று தம்முடைய தரப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். உண்மை என்ன என்பதை முதல்வர் தரப்பிலிருந்து இன்னும் சொல்லவில்லை . . .





**திரு. க. இராமமூர்த்தி :** திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர். அதாவது உறுப்பினருடைய கட்சியைச் சார்ந்தவர். எனவே அதை உறுப்பினர் மறுக்க முடியாது.

**புலவர் புலமைப்பித்தன் :** அவர் எங்கள் கட்சியைச் சார்ந்தவரா இல்லையா என்பது கொஞ்சநாள் போனால்தான் தெரியும்.

(உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம் தம் இருக்கையிலிருந்து கொண்டே “அவர் காங்கிரசுக்குப் போகிறார்” என்று குறிப்பிட்டார்.)

**புலவர் புலமைப்பித்தன் :** அதற்கான முயற்சிதானே இது. . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் தம் இருக்கையில் உட்கார்ந்துகொண்டே பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்கள் முன்னாள் அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களின் அறிக்கையைப்பற்றிப் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் குறுக்கிட்டு, “திரு. சௌந்தரபாண்டியன் உங்கள் கட்சியில் இருந்து கொண்டுதானே இந்த அறிக்கையை விட்டிருக்கிறார்கள்” என்று குறிப்பிட்டார்கள். அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறாரா அல்லது வெளியேறியிருக்கிறாரா என்பது இன்னும் தெளிவுபடுத்தப்படாத நிலை இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவர் எந்த அளவுக்கு உள்ளே இருந்துகொண்டு குழப்பத்தைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாடு கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது. அவருடைய அந்த அறிக்கையும் அப்படிப்பட்ட குழப்பத்தில்தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**புலவர் புலமைப்பித்தன்:** அதனால் ஒரு பக்கத்திலிருந்து விடப்பட்ட அறிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு இந்த அரசு ஹரிஜனங்களுக்கு அநீதி இழைத்துவிட்டது என்று பேசுவது சரியான வாதமாக இல்லை. அது பிடிவாதமாகத்தான் இருக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(உறுப்பினர் திரு. பி. எல்லமந்தா தம் இருக்கையிலிருந்து எழுந்து நின்று பேச முனைந்தார்.)

MR. DEPUTY CHAIRMAN : Is the hon. Member yielding ?

புலவர் புலமைப்பித்தன் : இல்லை. அடுத்தபடியாக, என்னுடைய சார்பில் ஒரு சில வேண்டுகோள்களையும் நான் இங்கே விடுக்க ஆசைப்படுகிறேன். நான் ஒரு தமிழாசிரியன் என்ற காரணத்தாலும், தமிழில் புலவர் பட்டம் பெற்றவன் என்ற காரணத்தாலும், இங்கே ஒரு வேண்டுகோளை விடுக்க ஆசைப்படுகிறேன். புலவர் பட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்து எனக்கு உடன்பாடான கருத்து என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புலவர் பட்டம் பெற்ற பிறகு, அவர்கள் பட்டப் படிப்பை மேற்கொண்டால், அவர்களுக்கு 'பி.லிட்.' பட்டம் தரப்படுகிறது. பி.லிட். என்பதற்கு இளம் புலவர் என்பது பொருள். இதை முன்னாலே இருந்தவர்கள் செய்துவிட்டுப் போய்விட்டார்கள். இந்த முறை எப்படி இருக்கிறது என்றால், ஐந்து குழந்தைகளுக்குத் தாயானவளுக்கு பூப்பு நீராட்டு விழா நடத்துவதைப் போல் இருக்கிறது. அவள் 5 குழந்தைகளுக்கு ஏற்கெனவே தாயாகி விட்டவள். அவளைப் போய் பூப்பு நீராட்டு விழாவுக்கு அழைப்பது என்பது எந்த அளவுக்கு முறைகேடானதோ அந்த அளவுக்குத்தான் இதுவும் இருக்கிறது. ஏற்கெனவே தமிழ் படித்துப் புலவர் பட்டம் பெற்றவர்களை அழைத்து, இனி நீங்கள் இளம் புலவர் என்று சொல்வதைப்போல் இருக்கிறது.

ஒன்றை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழில் எம்.ஏ. படித்தவர்களைக் காட்டிலும் அதிகப்படியான பாடத்தை—தனித் தமிழ் பாடத்தைப்—பயின்றவர்கள், பயிலுவதற்குரிய வாய்ப்பைப் பெற்றவர்கள் புலவர்கள். அந்த அளவுக்கு படித்துப் புலமை பெற்ற புலவர்களை இந்தப் பல்கலைக் கழகம் அங்கிகரிக்க மறுக்கிறது என்றால் அது வேதனை அளிப்பதாக இருக்கிறது. புலவர் என்ற சொல்லை, புலவர் என்ற தமிழ் சொல்லை, பல்கலைக் கழகம் அங்கிகரிக்கக் கூடாது என்றிருக்குமானால், நான் அந்தப் பல்கலைக் கழகத்தைப் பாவிகளுடைய பாசறை என்பதைத் தவிர, வேறு மொழியில் சொல்லி அழைக்க விரும்பவில்லை. ஆகவே அதைக் கொஞ்சம் மறு பரிசிலனை செய்து, தமிழ்ப் புலவர் பட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்ப் புலவர் என்ற படிப்பு இருக்கிறதே, அது முறைப்பட்ட படிப்பு. அது மட்டும் நின்று போய்விடுமானால், தமிழுடைய வளர்ச்சியே தடைப்பட்டு போய்விடும் என்பது என்னுடைய கருத்து என்பதைப் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். ஏற்கெனவே யார் காலத்திலே இது ஏற்பட்டிருந்தாலும், இத்தகைய முயற்சியில் இனியும் பல்கலைக் கழகம் ஈடுபட வேண்டாம். இந்தப் பட்டத்தை பல்கலைக் கழகம்





ஒப்புக்கொள்ள வேண்டும், அங்கிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாவேந்தர் பாரதிதாசன் சொன்னதைப் போல், "தமிழகத்தின் தெருக்களிலே தமிழ்தான் இல்லை" என்று சொல்லி வருத்தப்பட்டதைப் போல் அல்லாமல், இனியாவது நிலைமைகள் இருக்க வேண்டும். தமிழகத்தின் பல்கலைக் கழகம் தமிழைத் தீண்டாமைக்குரிய மொழியாக நடத்துவதைப் போன்ற வேறு ஒரு கொடுமை உலகத்தில் இருக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர்களும் மற்ற பொறுப்பில் இருப்பவர்களும் இந்தப் புலவர் பட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டும், அதைப் பெற்றவர்களை மீண்டும் இளம் புலவர்களாக ஆக்குகிற முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்த வரையில், எல்லாத் துறைகளிலும் நூற்றுக் கணக்கான போராட்டங்கள் வந்தாலும், மிக நிதானமாக நெறி பிறழாமல், எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற முறையில் ஈடுபடாமல் காரியமாற்றிக் கொண்டிருக்கிறது.

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்"

என்று வள்ளுவர் சொன்னதைப்போல், கடு மொழியும் காட்டாமல் கையிகந்த தண்டத்தையும் மேற்கொள்ளாமல் நெறி பிறழாமல் நின்று, போராட்டத்தில் ஈடுபடுகிறவர்களை அழைத்துப் பேசி, ஒரு அமைதியான சூழ்நிலையில் இந்த ஆட்சி ஓடிக்கொண்டிருக்கிறது. தந்தை பெரியார் அவர்களின் தத்துவங்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் கோட்பாடுகளையும் வெற்றி பெறச் செய்வதிலே மிகுந்த அக்கறையோடு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி தொடர்ந்து செல்லும் என்று தெரிவித்து

"Men may come and men may go ; but I will go on for ever."

என்று சொன்னதைப்போல் இந்த ஜீவ நதி ஓடிக் கொண்டிருக்கிறது, அது தொடர்ந்து பணியாற்றும் என்று தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் ஆசிரியர்கள் பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்

[புலவர் புலமைப்பித்தன்] [1980 பிப்ரவரி 6

கிறேன். இந்த அமைப்பைச் சார்ந்த நாங்கள் இந்த நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்திற்கு ஒரு திருத்தத்தை முன்மொழிந்ததற்கு என்ன காரணம்
என்றால், தமி—கத்தில் பயிற்சி பெற்ற பல பிரிவு ஆசிரியப் பெருமக்களும்,
பல துறையில் பட்டம் பெற்ற பட்டதாரிகளும், சரியான வேலை வாய்ப்பு
இல்லாமல் பெரிதும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை
அரசுக்குச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஏறத்தாழ 45,000 பயிற்சி பெற்ற
ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் அவதிப்படுகிற நிலையில் இருந்து
தொடர்ந்து இருந்துகொண்டேயிருக்கிறது. நாட்டின் மக்கள் தொகையைப்
பொறுத்த அளவில், ஒவ்வொரு ஆண்டும் இந்தியத் துணைக் கண்டமானது
வளர்ந்து கொண்டே போகும். அதனால் சமுதாயத்திலே அமைதியற்ற
ஏறத்தாழ 12 மிலியன் மக்களை உற்பத்தி செய்து, ஒரு புதிய ஆஸ்திரேலியா
வையே உருவாக்கும் நிலை இருந்து வருகிறது. இந்த நிலையில் நாட்டில்
வேலை வாய்ப்பை எடுத்துக்கொண்டாலும், தொழில் வளர்ச்சியை எடுத்துக்
கொண்டாலும், அது ஊக்கமளிப்பதாக இல்லை. அதைப்போலவே படித்த
வர்களுக்கும் பயிற்சி பெற்றவர்களுக்கும் எந்த அளவுக்கு வேலை வாய்ப்பை
உறுதி செய்கிறோம் என்று பார்த்தால், அதுவும் அப்படித்தான் இருக்கிறது.
சென்ற ஆண்டில் ஆளுநர் உரையில்கூட ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார்கள்.
வேலைக்கு உணவு என்ற திட்டத்தையும் அயல் நாடுகளில் வேலை தேடித்
தரும் அமைப்புபற்றிய திட்டத்தையும் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால்
இந்தத் திட்டங்களெல்லாம் எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றன என்று
கேட்கும்போது, நம்முடைய எண்ணங்களும், சிந்தனைகளும் உயர்ந்தவை
களாக இருந்தாலும், இவற்றையெல்லாம் நிறைவேற்றும்போது நாம் அந்த
அளவுக்கு வெற்றி பெறவில்லை என்பதைத்தான் காண்கிறோம்.

(பிற்பகல் 12-50.)

வேலைக்கு உணவு அளிக்கப்பட்டாலும்கூட, எத்தனை ஆண்டுக்கு
அவ்வாறு அளிக்கப் போகிறோம்? இந்தப் பணியை எத்தனை ஆண்டுகளில்
முடித்துக்கொள்ளப் போகிறார்கள்? எப்போது அவர்களுக்கு நிரந்தரப்
பணி வாய்ப்பை ஏற்படுத்தப் போகிறோம்? அவ்வாறு நிரந்தரப் பணி
வாய்ப்பை ஏற்படுத்தாவிட்டால், தமிழகத்தில் ஒரு சில ஆண்டுகளில் படித்த
வர்கள், ஆசிரியர்கள், பயிற்சி பெற்றவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை
கொண்டிருக்கிறார்கள். எத்தனையெத்தனையோ திட்டங்களைத் தீட்டி
னாலும்கூட, இந்தப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க முடியாத நிலைமை



1980 பிப்ரவரி 6] [திரு. பா. ரா. தாமஸ்]

நிலை உருவாகும். ஆகவே அதை அரசு மிகவும் எச்சரிக்கையாகக் கவனித்து
நல்ல முறையிலே திட்டங்களைத் தீட்டி வேலை வாய்ப்பைக் கொடுக்க
வேண்டும்.

அன்டை மாநிலமான பாண்டிச்சேரியில் வேலையில்லாத பட்டதாரி
களுக்கு 100 ரூபாயை வழங்குகிறார்கள். மூன்று ஆண்டுகள் தொடர்ந்து
பணி வாய்ப்பு இல்லாமல் உள்ள பட்டதாரிகளுக்கு 'டோல்' என்ற முறையில்
மாதம் 50 ரூபாய் வழங்கப்படும் என்று மத்திய பிரதேச முதலமைச்சர்
அவர்கள் அறிவித்ததாக நேற்றுகூட பத்திரிகையிலே படித்தேன். அதைப்
போலவே மேல்நிலைப் பள்ளிகள் அளவிலே படித்தவர்களுக்கு 30 ரூபாய்
வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இந்த முறையில் படித்தவர்கள்
மத்தியில் விரக்தி ஏற்பட்டால், நாட்டில் பெரிய புரட்சிகள் வளர வாய்ப்பு
ஏற்படும். அந்த அடிப்படையில் கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரையில்
சைக்கிளில் வந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதைக் கண்டிக்கிறோம். இதற்கு
மாற்றாக நல்லதொரு திட்டத்தை, மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில்
தீட்ட அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று வேண்டுகோளை விடுக்கிறேன்.

இரண்டாண்டுகளுக்கு முன்னதாக பெருத்த வெள்ளம் ஏற்பட்டு குடக
னாறு அணை உடைந்ததை நாம் அனைவரும் அறிவோம். அப்போது
அநேக நெடுஞ் சாலைப் பாலங்கள் உடைபட்டன. திண்டுக்கல்லுக்கு வடக்கே
திருச்சி வரும் பாதையில் ஓர் அணை செப்பனிடப்படாத நிலையில் இருக்
கிறது. கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பேருந்துகள் செல்ல முடியாமல்
வேறு வழியிலே திருப்பி விடப்பட்ட நிலையைப் பார்த்தோம். குடகனாறு
அணையின் எதிர்காலம் என்ன என்ற கேள்வி இருக்கிறது. பல கோடிக்
கணக்கான பணம் செலவிடப்பட்டு கட்டப்பட்ட அந்த அணை உடைந்து
வீணாகக் கிடக்கிறதே. அதை சீர் செய்ய பரிசீலனை செய்ததா? அரசு
அதில் என்ன முடிவை எடுத்திருக்கிறது? அந்த அணையை மீண்டும் சரி
செய்தால், அதனால் பலருக்கு நன்மை பயக்கும். அந்த அணை கட்டப்பட்ட
காலத்திலே நீர்பிடிப்புப் பகுதிகளில் இருந்த விவசாயிகளை வெளியேற்றி,
அதற்கு ஈடாக ஏராளமான பணத்தை அரசின் சார்பிலே கொடுத்திருக்
கிறார்கள். இந்த நிலங்களில் மீண்டும் விவசாயிகள் பயிரிடும் நிலை ஏற்பட்டி
ருக்கிறது. அந்த அணையை மீண்டும் கட்டக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்
கின்றனவா என்று வல்லுநர்களைக் கொண்டு ஆராயப்பட்டதா? மீண்டும்
கட்டினால், அதனால் பலருக்கு நன்மை பயக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதைப்போலவே சிறுமலையில் பெரிய காட்டாறு ஓடிக் கொண்டிருக்கிறது. அதன் குறுக்கே அணை கட்டினால், விவசாயிகளுக்குப் பயன் அளிக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயப் பிரச்சினையைப்பற்றி சென்ற முறை பேசும்போதே குறிப்பிட்டேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில், குறிப்பிட்ட சக்திகள் மூன்றாக வளர்ந்திருக்கின்றன. இரண்டு சக்திகள் ஒன்றாகச் சேர்கிறதென்றால், மூன்றாவது சக்திக்கு வலியூட்டக்கூடிய நிலை இருக்கிறது. நான்காவது சக்தி (விவசாயிகள்) வெகு வலுவாக இருக்கிறது. அவர்களை அரசியல் கட்சிகள் தங்கள் பக்கம் இழுக்கக்கூடிய நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளுடைய பிரச்சினைகளைப்பற்றி அரசினர் நல்ல அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். இல்லையென்று நான் சொல்லவில்லை. வட மாநிலங்கள் கோதுமைக்குச் சரியான விலை கொடுக்கும்போது, தமிழகத்திலே மட்டும் நெல் உற்பத்தியாளர்களுக்கு ஏன் சரியான விலையைக் கொடுக்கக் கூடாது என்று கேட்டால், மத்திய அரசு கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது, அவர்கள் தங்களுடைய கொள்கையை மாற்றிக்கொள்ளவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த ஆட்சியில் உள்ளவர்கள் விவசாயிகளுடைய பிரச்சினையை கனிவோடு நல்ல முறையில் தீர்க்காவிட்டால், நிச்சயமாக பாதகம் ஏற்படும். விவசாயிகள் சங்கம் அண்மையில் குறைந்தது குவிண்டால் ஒன்றுக்கு 135 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளது. இவற்றையெல்லாம் ஆழமாகச் சிந்தித்துப் பரிசீலனை செய்து அவர்களது உண்மையான பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1969–70 ஆம் ஆண்டு வரையில் மாநிலத்தில் மத்திய அரசு ஒதுக்கீடு செய்து அதன் மூலமாக நமக்கு உதவி செய்த தொகை ரூ. 312 கோடி. 1976–77-ல் செய்த உதவித் தொகை 426 கோடி ரூபாய். முன்பு 8 விழுக்காடாக இருந்தது இப்பொழுது 4 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது என்று ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய முதலீடு குறைந்திருக்கிறது. இதனால் நம்முடைய மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் மாநிலத்தினுடைய வேலை வாய்ப்பு குறைந்திருக்கிறது. ஆறாண்டுக் காலத்தில் ஏற்பட்ட பணவீக்கத்தின் அடிப்படையிலே பார்த்தால், 4 விழுக்காடு குறைந்திருப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது, 8 விழுக்காடு குறைந்திருப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டும். 1970 ஆம் ஆண்டு ஒரு கோடியின் மதிப்பென்ன, 1976 ஆம் ஆண்டில் ஒரு கோடியின் மதிப்பென்ன என்று பார்க்கும்போது, அதன் மதிப்பு வெகுவாக விழுந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே மத்திய அரசின்



முதலீட்டைக் குறிப்பிட வேண்டும். அப்பொழுதுதான் ஏராளமான வேலை வாய்ப்பு வசதிகளை உண்டாக்கும் என்ற கருத்தைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திருச்சியிலிருந்து தூத்துக்குடி வரையில் அகல இருப்புப் பாதை வேண்டுமென்று பல (ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதில் ஏன் இன்னும் முடிவுக்கு வரவில்லை? நம்முடைய மாநில அரசின் வேண்டுகோளை மத்திய அரசில் இருக்கின்றவர்கள் தள்ளிவிடுகிறார்கள். இவ்வாறு அநேக ஆண்டுகளாக அகல இருப்புப் பாதை போடப்படாத காரணத்தால், தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது.

கொச்சியில் கப்பல் கட்டும் தளத்தை ஏற்படுத்தியதால், இன்றைக்கு அவர்கள் எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொதுவாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், தென் மாவட்டங்களில் அதிகமாகவுள்ள கடலோரப் பகுதியில் கப்பல் தளத்தை உருவாக்கும் திட்டத்தை ஏற்படுத்தலாம். பாதுகாப்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் வாய்ப்பையும் உருவாக்க வேண்டும். நம்முடைய மாநில அரசு ஆயிரம் ஏக்கர் நிலத்தை மத்திய அரசுக்கு ஒதுக்கினால், நிச்சயமாக மத்திய அரசினர் அதற்கான பணத்தை ஒதுக்கீடு செய்வதோடு, வேலை வாய்ப்பையும் அதிகமாக்குவார்கள். நம்முடைய மாநிலத்திற்கு நன்மை பயக்கக்கூடிய இத்தகைய திட்டங்களில் மாநில அரசு அதிக முயற்சியை எடுக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சிறு நகரங்களில் கூட இதய சிகிச்சைக்கு வாய்ப்பு அளிப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது. சென்ற துணை மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது கூறியதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழகத்தில் வேலூரில் உள்ள கிருத்துவ மருத்துவ மனை ஒன்றில்தான் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு வாய்ப்பிருக்கிறது. அரசு மருத்துவ மனைகளில் அவ்வாறான வாய்ப்பு இல்லையென்று கூறியபோது, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் "அடுத்த ஆண்டில் நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும்" என்று கூறிய பிறகு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் "பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டப்படும்பொழுது, இத்தகைய சிகிச்சைக்கு வாய்ப்பு அளிக்கப்படுமென்று" கூறியிருக்கிறார்கள். அதை நினைவுபடுத்தி, அரசு மருத்துவ மனைகளில் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே திருச்சியிலும், கோவையிலும் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்படும் என்ற கருத்து கூறப்பட்டிருக்கிறது. இதுவரையும் அது செயல்படுத்தப்படவில்லை. இந்த ஆளுநர் உரையில் காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படும் என்ற கருத்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் துரிதமாகச் செயல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

தமிழகத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டுக்குரியது. தொழிற் பிரிவு ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் ரூ. 25 வழங்க அரசு முன்வந்ததற்காக அரசைப் பாராட்டுகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் பிரிவை ஆரம்பிக்கும்போது, எந்தெந்தப் பகுதிகளில் ஏற்கெனவே இருகூறாக்கப்பட்ட பாடத் திட்டம் இருக்கிறதோ அங்கே அதை ஆரம்பிக்க வேண்டும். அதனால் மேல் நிலைப் பள்ளிகளில் உள்ள தொழிற் பிரிவுகளின் பாடச் சுமை குறைக்கப்பட்டு சிறப்பாகச் செய்யக் கூடிய வாய்ப்பை உண்டாக்கும்.

ஆசிரியர் பிரச்சினையைப் பொறுத்த வரையில், மாநிலம் எங்கும் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும் வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** நன்றி, மாநிலம் எங்கும் ஆசிரியர்கள் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. பிரச்சினைகளை ஆசிரியர்கள் உருவாக்குகிறார்களா, பிரச்சினைகள் உருவாக்கக் கூடிய நிலைக்கு உந்தப்படுகிறார்களா என்பதை ஆளும் கட்சி சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே இருப்பதால்தான், இத்தகைய நிலை ஏற்படுகிறது. இராஜபாளையத்தில் உள்ள பி. ஏ. சி. பாலிடெக்னிக் மூடப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால், சென்ற செமிஸ்டர் முறை தேர்வில் பாலிடெக்னிக் ஆசிரியர்கள், மாணவர்கள் தேர்வைப் புறக்கணித்தார்கள் என்பதுதான். மாநிலத்தில் 18 தனியார் பாலிடெக்னிக்குகளும், 13 அரசு பாலிடெக்னிக்குகளும் இருக்கின்றன. இரண்டு தனியார் பாலிடெக்னிக்குகளில் ஆசிரியர்களைப் பழி வாங்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆசிரியர்களுக்கு முழுவதுமாக ஊதியம் தர வேண்டுமென்று அரசு ஆணையிட்டும் கூட, விருதுநகர் பாலிடெக்னிக் நிர்வாகம் பழி வாங்க ஆரம்பித்துவிட்டது. ஆகவே 20, 25 நாட்கள் போராட்டம் நடந்த பிறகு, பொதுமக்கள் கூடி சமரச நிலையை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். பாலிடெக்னிக் இப்பொழுது செயல்படுகிறது. ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இராஜபாளையம் பாலிடெக்னிக்கில் ஆசிரியர்கள் சங்கத்தி-





னுடைய செயலாளர், சிவில் பிரிவிற்குத் தலைவராக இருக்கக்கூடிய தகுதி பெற்றவரை, போராட்டத்தின் காரணமாக வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அவர் இன்னும் 'ரெகுலரைஸ்' செய்யப்படாதவர், நிரந்தரம் ஆக்கப்

(பிற்பகல் 1-00)

படாதவர், தற்காலிகமானவர் என்று சொல்கிறார்கள். காரணம் அவர் அந்த போராட்டத்திற்குத் தலைமை வகித்ததுதான். மாணவர்களைப் பொறுத்த வரையிலே, மாணவர்கள் புறக்கணித்தார்கள் என்பதன் காரணமாக, 7 மாணவர்களை கல்லூரியை விட்டுத் தள்ளியிருக்கிறார்கள். அந்த ஏழு மாணவர்களையும் மீண்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியும்கூட, அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஆசிரியர்கள்தான் தூண்டுதல் செய்தார்கள் என்ற கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, 6 மாணவர்களை எடுத்துக்கொண்டு, ஒரு மாணவரை, அந்த யூனியன் தலைவரைத் தள்ளிவிட்டார்கள். இன்றைக்கு 2, 3 தினங்களாக அந்த 101 மாணவர்கள் முடிவில்லாத உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நேற்று முன்தினம் 37 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நேற்று 87 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 134 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு மிகவும் சிக்கலான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆசிரியர்களும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு மேலும் காலந்தாழ்த்தாது ஆணையிட வேண்டும். பள்ளியிலுள்ள ஆசிரியர்களது சங்கத்தை அங்கீகரிக்க முடியாது என்று நிர்வாகம் சாதிக்கிறது. அங்கீகாரம் கொடுப்பதோ கொடுக்காததோ பிரச்சினை அல்ல. இங்கே ஏன் அரசு அளித்த சலுகைகளை அமுல் படுத்தாது இருக்கின்ற பள்ளிகளுக்கு அஞ்ச வேண்டும்? ஏன் அதிகாரிகள் அஞ்ச வேண்டும்? ஏன் அந்த அதிகாரிகள் அந்த நிர்வாகத்திடம் வலியுறுத்தக்கூடாது? ஏன் அந்த நிர்வாகத்தை அஞ்சச் செய்து, கல்லூரியைத் திறக்கச் செய்து, அந்த மாணவர்களையும், ஆசிரியர்களையும் பணியிலே தொடர்ந்து இருக்கச் செய்யக் கூடாது? இதில் அரசு செயலாற்ற வேண்டும். மேலும் பிரச்சினை அதிகமாக உருவாகிக் கொண்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். ஆட்சிப் பொறுப்பிலே உள்ள துணை ஆட்சியாளர் அவர்கள் எல்லாக் கல்லூரிகளையும், பள்ளிகளையும், தொடக்கப்பள்ளி முதற்கொண்டு அனைத்து நிறுவனங்களையும் அங்கே மூடிவிட்டார்கள். அங்கே இப்போது ஒன்றும் நடக்கவில்லை. இந்த நிலை ஏன் ஏற்பட்டது? இன்று பாலிடெக்னிக் ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் வளர்ந்து இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையில் அரசு உடனடியாகத் தலையிட வேண்டும். இதைத் தவிர்க்க வேண்டும். அரசு உறுத்த ஆணையிட வேண்டும். நீக்கப்பட்ட ஆசிரியர்களை பணியில் அமர்த்த வேண்டும். நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் பணியில்

சேர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த அரசின் முன் வைக்கிறேன். பொதுவாகவே பள்ளிகளாக இருந்தாலும் சரி, கல்லூரிகளாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது.

1973 ஆம் ஆண்டிலே 29 வது சட்டம், தனியார் பள்ளி கட்டுப்பாடு சட்டம் வந்தது. அந்தச் சட்டத்தினாலே இன்று எவ்விதப் பயனும் இல்லை. சட்டத்திற்குள்ளே உள்ள பிரிவுகளை எடுத்துப் பார்த்தால், தெரியும். மாவட்டக் கல்வி அதிகாரிகளும், முதன்மைக் கல்வி அதிகாரியும் ஒரு தீர்ப்பு கொடுக்கிறார்கள். கமுதியிலே ஒரு தலைமை ஆசிரியை இருக்கிறார். அவர் செல்வி கோமதி அம்மையார் அவர்கள். அவர்கள் அநியாயமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவர் செய்த குற்றம் என்ன? மாநில விருது பெறுவதற்கு சென்னைக்கு வந்தார்கள். அனுமதி பெற்றுக்கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தக் குற்றச்சாட்டிலே இதுவும் ஒரு குற்றச்சாட்டு. இந்த நிர்வாகம் அவர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறது. வேலை நீக்கம் செய்த பிறகு, அவர்கள் மேல் முறையீடு செய்திருக்கிறார்கள். அதன் பேரில் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள் அவர் தவறு செய்யவில்லை என்று சொல்லி, அவரை மீண்டும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆணையிட்டார்கள். நிர்வாகத்தினுடைய மேல் முறையீட்டிலே அந்தத் தலைமையாசிரியரை நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்திருக்கிறார்கள். கல்வித் துறையில் கீழ் மட்டத்திலே ஒரு ஆணை, மேல் மட்டத்திலே ஒரு ஆணை வருகிறது. சிறுபான்மை பள்ளிகளில் வேறுவிதமான நிலை இருக்கிறது. கல்வித்துறையினுடைய தலையீடும் இருக்க முடியாது. நடுவர் மன்றம் என்ற வாய்ப்பும் இல்லை. கல்லூரிகளை எடுத்துக்கொண்டால், அங்குள்ள முதல்வர் அவர்கள் அங்குள்ள ஆசிரியர்களை மிகவும் தரக் குறைவாகப் பேசியிருக்கிறார்கள். ஆசிரியைகள் பட்டுச் சேலை அணிந்து கிளாசுக்கு வந்தால், "நீங்கள் என்ன கல்லூரிக்கா வேலைக்கு வந்திருக்கிறீர்கள்? லாட்ஜுக்குச் செல்வது போல வந்திருக்கிறீர்கள்" என்ற முதல்வருடைய வாசகமானது மாணவர்கள் காதுக்கு எட்டி, அவர்கள் கேள்விப்பட்டு கொதிப்படைந்து, ஒரு போராட்ட நிலை உருவாகியிருக்கிறது. இது படிப்படியாக வளர்ந்து இன்று அனைத்துக் கட்சிகளுமே போராடக் கூடிய நிலையில் இருக்கின்றது. கல்லூரியையே மூடி வைத்திருக்கிறார்கள் என்றால், இது வேதனைப்படக்கூடியதாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? தனியார் பள்ளிகளிலேயுள்ள, கல்லூரிகளிலேயுள்ள நிர்வாகங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதில்லை. ஆசிரியர்கள்பால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதிக அனுதாபம் காட்டுகிறார்கள். அதையெல்லாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் செய்யவேண்டிய காரியங்களை குறித்த காலத்திலே செய்யாத காரணத்தினாலே ஆசிரியர்களிடையே பல போராட்[illegible] எல்லாம்



அடைந்திருக்கிறார்கள். இன்றுகூட கல்லூரி ஆசிரியர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏன் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் கோரிக்கைகளை சரியாக நிறைவேற்றவில்லை. கொடுத்த ஆணைகளை நிறைவேற்றவில்லை என்பதற்காகப் போராட்டம் நடத்துகிறார்கள். நேற்று கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திலே அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே பதில் அளித்திருக்கிறார்கள். இந்த முறையிலே விரைவாக அவர்களை அழைத்து இந்த அரசு நல்ல முறையிலே அந்தப் பிரச்சினைகளுக்கு நல்ல முடிவு காணுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக ஒரே ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே முழுக்க முழுக்க ஆசிரியர்கள் ஊதியத்தை 1964 ஆம் ஆண்டிலிருந்து வரியிலேயிருந்து கொடுக்கிறார்கள். அவர்கள் மக்கள் வரியிலேயிருந்து ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த அளவில், 1—6—1977 லேயிருந்து முழுமையாக மக்கள் வரிப் பணத்திலிருந்து ஊதியம் பெறுகிறார்கள். பாலிடெக்னிக்குக்கு 90 விழுக்காடு அரசு கொடுக்கிறது. இதிலே தனியார் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே என்ன நடக்கிறது என்றால், ஊதியம் வழங்கவேண்டிய நாளில் ஆசிரியர்கள் வெளியே வந்து காத்திருக்கவேண்டியிருக்கிறது. சம்பளம் கொடுப்பவர் ஒரு அறையில் வந்து உட்கார்ந்துகொள்ளவும், இந்த ஆசிரியர் வெளியே காத்து நிற்கவும், திடீரென்று அங்கே உள்ளவர் ஆசிரியரை அழைத்துச் செல்வார். ஆசிரியர் மெதுவாக உள்ளே நுழைந்து வணக்கத்தைத் தெரிவிப்பார். அவரைக் கடவுளைப் போல பார்ப்பார். அவர் உள்ளே வந்தவுடனே கையிலிருந்து பணத்தைக் கொடுப்பார். பிறகு சென்று வா என்பார். அவர் பணத்தை வாங்கியவுடனே கையெடுத்து கும்பிட்டுவிட்டுப் போவார். இந்த மாதிரியான அவல நிலைக்கு ஆசிரியர்கள் உள்ளாகியிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இங்கு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் அவையின் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் மாலை நான்கு மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-05)

மீண்டும் அவை பிற்பகல் 4-00 மணிக்குக் கூடியது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

5. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, நேற்று நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு தந்திருந்தேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைக் கேட்கிற நேரம் இதுவல்ல. கேள்வி நேரத்திற்குப் பிறகுதான் அதைக் கேட்க வேண்டும்.

*** திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சாதாரணமாக ஆளுநர் உரையின்மீதான விவாதம் என்பது, பின்வருமாறுதானிருக்கிறது. அரசாங்கத்தினுடைய எதிர்காலக் கொள்கைகளை எப்படி அமல் நடத்துவது, அது சம்பந்தமாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் என்ன ஆலோசனை சொல்கிறார்கள் என்பதுதான் விவாதத்தின் சாராம்சமாக இருக்கும். ஆனால் இப்போது நடைபெறுகிற விவாதம் இந்த மாநிலத்தைத் தற்போது ஆண்டுவரும் அ.தி.மு.க. அரசு இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினையைச் சுற்றியே இருப்ப தால், தாய்க்கே ஆபத்து ஏற்படும்போது, பிள்ளையைப்பற்றிப் பேசுவதில் பிரயோசனமில்லை என்பதால், இந்த அரசு வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் நடந்த பார்லிமெண்ட் தேர்தல்களின் முடிவுகளின் அடிப்படையிலே மாநிலங்களில் வெற்றி பெறாத கட்சிகளின் அரசுகள் எல்லாம் ராஜினாமா செய்ய வேண்டு மென்ற கோரிக்கை எழுந்துள்ளது. ராஜினாமா செய்ய வைக்க வேண்டு மென்பதற்காக பலவிதமான முறைகள் கையாளப்படுகின்றன. ஒன்று “டிபெக்ஷன்”.. ‘ஆயாராம், கயாராம்’ அரசியல் நடக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படி என்றால் என்ன ?

**திரு. ஆ. நல்லசிவன் :** ‘ஆயாராம், கயாராம்’ என்றால் வருகிற ராம்கள், போகிற ராம்கள்—அதாவது கட்சி மாறி வருகிற ராம்கள் மீண்டும் போகிற ராம்கள் என்று அர்த்தம். இது ஒரு முறை. ராஜினாமா செய்ய வேண்டு மென்று கிளர்ச்சி செய்வது இன்னொரு முறை. அதுவும் முடியவில்லை என் றால், சட்டசபையைக் கலைப்பது, அரசைக் கவிழ்ப்பது. இந்த மூன்று முறை களும் இன்று கையாளப்படுகின்றன. ‘டிபெக்ஷன்’ சம்பந்தப்பட்டவரையில், அதை தாங்கள் செய்வதாகவோ, செய்விப்பதாகவோ யாரும் ஒப்புக்கொள்ள



மாட்டார்கள். அவர்களாக வருகிறார்கள் என்றுதான் சொல்லுவார்கள். ஆனால் 7-வது பார்லிமெண்ட் தேர்தலுக்குப் பிறகு, இந்திய அரசியலில் ஒரு புதிய சாதனை ஏற்பட்டிருக்கிறது. இதுவரை தனி மனிதர்கள்தான் கட்சி மாறுவார்கள். ஆனால் “கூண்டோடு கைலாசம்” என்று சொல்லுவார்களே, அதுபோல் அரியானா ஜனதா மந்திரி சபையே இப்போது காங்கிரஸ் (ஐ)யின் மந்திரி சபையாக மாறியிருக்கிறது. அப்படிப்பட்ட சம்பவம் நடந்து, அது ஒரு பெரும் “சாதனையாக” ஆகியிருக்கிறது. அந்த டிபெக்ஷனை ‘ஆர்கனைஸ்’ பண்ணுகிறவர்களும் அதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள், அப்படிப் போகிறவர்களும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். எனவே, அதை விட்டுவிடுவோம். ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லுவதோ, கலைக்கப் படுவதோ தார்மீக அரசியல் அடிப்படையில் சரிதானா என்ற பிரச்சினையைக் கிளப்பி, பதிலும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த விஷயத்தில் காங்கிரஸ் கட்சி எடுக்கும் நிலைபற்றி முதலில் என் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி தனியாகப் பேச விரும்புகிறேன். அவர்களையும், இவர்களையும் ஒன்றாக வைக்க நான் விரும்பவில்லை. எனவே முதலில் காங்கிரசைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். “நாங்கள் இந்தியா பூராவிலும் ஜெயித்துவிட்டோம், ஆகவே தோல்வி அடைந்த மாநில அரசுகள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று காங்கிரசார் சொல்லுகிறார்கள். எப்படிப் பட்ட வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். வெற்றியின் தன்மையை நிதானமாக ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 65 கோடி மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டிலே 36 கோடி ஓட்டர்கள் இருக்கிறார்கள். அதில் 19 கோடி மக்கள் ஓட்டு போட்டிருக் கிறார்கள். அதில் 8 கோடி வாக்குகள் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்திருக் கின்றன. நம் நாட்டில் இருக்கிற குறைபாடுள்ள பிரதிநிதித்துவமுறை காரணமாக 42 சதவிகிதம் ஓட்டு மட்டும் வாங்கிக்கொண்டு, 67 சதவிகிதம் இடங்களைப் பெற்றிருக்கிறது காங்கிரஸ் கட்சி. அப்படி இருக்கிற நிலையில், தாங்கள்தான் நாட்டு மக்கள் அனைவருக்கும் பிரதிநிதி என்று காங்கிரசார் சொல்லுகிறார்கள். எனவே வேறு எந்த மாநிலத்திலும் வேறு யாரும் ஆளக் கூடாது என்று சொன்னால், அதில் என்ன நியாயம் இருக்கிறது ? இந்த 8 கோடி ஓட்டும் கூட சொந்த ஓட்டு அல்ல. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஓட்டும் இருக்கிறது. கேரளாவில் ஜனதா ஓட்டும் அடங்கியிருக்கிறது. மதச்சார்பற்ற கட்சி என்று சொல்லிக்கொண்டு, கேரளத்தில் ஜாதி கட்சிகளின் ஓட்டெல்லாம் வாங்கியிருக்கிறார்கள். டெல்லியில் இமாமின் ஆதரவாளர்கள் ஓட்டு அடங்கியிருக்கிறது. காஷ்மீரில் ஷேக் அப்துல்லா கட்சியின் ஓட்டு அடங்கியிருக்கிறது. 8 கோடி ஓட்டில் இதெல்லாம் அடங்கியிருக்கிறது. எனவே, 65 கோடி மக்களில் 8 கோடி ஓட்டு வாங்கி,

நாங்கள்தான் ஆளப் பிறந்தவர்கள் என்று சொன்னால், அதில் என்ன தார்மீக
நியாயம் இருக்கிறது? ஜனதா அரசின் தவறுகள் காரணமாகவும் ஜனதா
அரசுக்கு மாற்றாக மேற்கு வங்கம், திரிபுரா, கேரளம் போன்ற மாநிலங்களில்
உள்ள இடதுசாரி அணிபோல் தேசிய அளவில் இல்லாததாலும் வேறு வழி
இல்லையே என்று காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டார்கள். ஏற்கெனவே
காங்கிரசை 30 வருடங்களாகப் பார்த்துவிட்டார்கள். 2½ ஆண்டுகள் ஜனதா
கட்சி பண்ணிய தவறுகள் காரணமாக, எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்
படாததாலும் மேற்கு வங்கம், திரிபுரா, கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களில்
உள்ளதுபோல தேசிய அளவில் மாற்று அணி ஒன்று இல்லாததாலும்
வேறு வழியில்லாமல் ஓட்டுப் போட்டார்கள். தங்கம் விலை ஏறியதற்கு
எம்.ஜி.ஆர். தான் பொறுப்பு என்று சொல்வதை நம்பும் ஜனங்கள்
இருக்கிறார்கள். அதையெல்லாம் பயன்படுத்தி ஓட்டு வாங்கினார்கள்.
எனவே காங்கிரஸ் கட்சி வாங்கிய ஓட்டுக்கள் (நெகட்டிவ்) எதிர்மறை
ஓட்டுக்கள்தான். (பாசிடிவ்) சாதனையில் நம்பிக்கை வைத்துப் போட்ட
ஓட்டுக்கள் அல்ல. முதன் முதலிலே ஆட்சிக்கு வருகிறவர்களுக்கு ஓட்டுப்
போட்டாலும், அது நம்பிக்கையுடன் போட்டதாக இருக்கும். ஆனால்
காங்கிரசுக்குக் கிடைத்தது நெகட்டிவ் ஓட்டுதான். வேறு வழியில்லாமல்
போட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு ராஜினாமா செய்ய வேண்டு
மென்று சொல்லுவது நியாயமல்ல. உதாரணத்திற்கு கேரளாவில் ஏற்பட்ட
நிலைமையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பாராளுமன்றத் தேர்தல்
முடிவின் அடிப்படையிலே மாநில ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று
சொல்வது எத்தகைய கேலிக்கூத்தான நிலைக்குக் கொண்டு போகும்
என்பதற்கு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு காங்கிரஸ் கட்சி
மத்தியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. கேரளாவிலும் ஆளுவதற்
அதிகாரம் கொடுங்கள் என்று கேரள மக்கள் கேட்டார்கள். ஆனால் கேர
மக்கள், கேரளாவை ஆள "நீங்கள் லாயக்கில்லை" என்று தீர்ப்புக் கொடுத்
விட்டார்கள். அப்படி தீர்ப்பு கொடுத்ததால், மத்திய அரசைக் கா
பண்ணுங்கள் என்று கேட்க முடியுமா? அப்படிக் கேட்டால் பைத்திய
காரத்தனம் அல்லவா? பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற
எல்லாவிதமான கவுரவத்தோடும் கேரளாவுக்கு வந்து, பிரதம மந்திரி தேர்த
பிரச்சாரம் செய்தார். அவர் 26 அசெம்பிளி தொகுதிகளில் பிரச்சா
செய்தார். 21 இடங்களில் காங்கிரஸ் அணி தோற்றது. "மக்கள் வாக்களி
வில்லையே, ராஜினாமா செய்யுங்கள்" என்று சொன்னால், சரிய
இருக்குமா? ஆகவே, அங்கே தோற்றது, இங்கே தோற்றது என்றெல்ல
சாக்கு சொல்வது தப்பு. ஒரு உதாரணம் சொல்கிறேன். காங்கிரஸ் தரப்
கேட்பதற்கு ஆள் இல்லாததால், நானே கேள்வி போட்டு, பதிலும் சொல்கிறே



மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேட்கட்டுமா?

திரு. ஆ. நல்லசிவன்: தலைவரவர்கள் கேட்க முடியாது. 1977-ல் மத்திய
ஜனதா அரசு 9 மாநில அரசுகளைக் கலைத்தார்கள். அப்போது அசாதாரண
மான நிலைமை இருந்தது. அரசியல் சாசனத்திற்கு மாறாக, சில தனிப்பட்ட
காரணங்களுக்காக பாராளுமன்றத்தின் ஆயுளை 6 வருடங்களாக்கினார்கள்.
அதை மாநிலங்களுக்கும் நீட்டித்துக் கொடுத்தார்கள். மக்கள் ஓட்டுப்
போட்டது 5 வருடங்களுக்குத்தான். ஆனால் 6 வருடங்களாக எல்லோருக்கும்
நீட்டித்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு அதுவும்
இல்லாமல் பண்ணிவிட்டார்கள். 1971 முதல் 1976 வரைதான் பதவியில்
இருந்தார்கள். அவர்களுக்கும் 6 வருடங்கள் ஆட்சியில் இருக்க உரிமை
இருந்தது. இந்தியாவிலேயே அவசர கால நிலைமையை எதிர்த்த மாநிலக்
கட்சி ஒன்றின் ஆட்சி என்பதால்தான் இதைக் கலைத்துவிட்டார்கள்.

(பிற்பகல் 4.10)

இது இந்திய நாட்டில் நடந்துள்ள ஒரு அசாதாரண விஷயம் அல்லவா?
முன்பு இருந்த ஆட்சிகளில் இப்படி எதாவது நடந்ததா? 7 வருடத்துக்கும்
நீடித்திருப்பார்கள். ஆனால் எந்த ஒரு ஜோசியனோ சொன்னதை வைத்து,
தேர்தலை வைத்துவிட்டார்கள். இல்லாவிடில் 7-வது ஆண்டுக்கும் நீட்டிக்கப்
பட்டிருக்கும். இதைத்தான் அசாதாரண நிலைமை என்று கூறுகிறேன்.
அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது, அதை
திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்த்தது. ஆக, கலைப்பை
முதலில் ஆரம்பித்தது யார்? காங்கிரஸ்தான். எதற்காகக் கலைத்தார்கள்
என்பதைப் பார்க்க வேண்டும். 1976 ஜனவரி 31 ஆம் தேதி அபத்தமான
அரசியல் காரணத்திற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்
தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த
நேரத்தில் காமராஜர் அவர்கள் தி.மு.க. அரசை மிகக் கடுமையாக எதிர்த்
தார்கள். தமிழ்நாடு பூராவும் சுற்றுப்பிரயாணம் செய்து அதற்கு எதிராக
மாற்றுக் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட
ஆளும் கட்சி 5 வருடம் ஆட்சியில் கட்டாயம் நீடிக்க வேண்டுமென்றும்
சொன்னார்கள். இன்றையதினம் காமராஜர் அவர்களுடைய படத்தைப்
பயன்படுத்துகிறவர்கள் 5 வருடத்திற்கு என்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட
அரசை 2½ வருடத்திற்குள்ளேயே கலைத்துவிட வேண்டுமென்று சொல்லு
கிறீர்களே, காமராஜர் அவர்களுடைய படத்தையும் போட்டுக்கொண்டு
அப்படிச் சொல்வது சரியா? ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமென்று
விரும்பிய காமராஜர் அவர்களுடைய படத்தை நீங்கள் போடலா

கலைப்பது அல்லது கவிழ்ப்பது—இப்படிப்பட்ட முயற்சிகளையெல்லாம் எங்கள் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. 9 மாநில முதலமைச்சர்களும் கூடிப் பேசி எடுத்த முடிவை நாங்கள் வரவேற்கின்றோம். அதை எங்கள் கட்சி வரவேற்கின்றது. திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நேசக் கட்சியாகக் கருதி கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இன்று கலைப்பைக் கேட்கவில்லை; ராஜிநாமா செய்யும்படிதான் கேட்கிறீர்கள். பரவாயில்லை. அன்றையதினம் கலைப்பினால் பாதிக்கப் பட்டவர்களும் நீங்கள் தானே. அது உங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆனால் ராஜிநாமா செய்ய நீங்கள் கேட்பதைக் கூட நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் எந்த நேரம் பார்த்துக் கேட்கிறீர்கள்? இப்போது வந்துள்ள மத்திய அரசு தன்னுடன் ஒத்துழைக்காத மாநில அரசுகளையெல்லாம் கலைக்க வேண்டுமென்று சொல்கிறபோது, குறிப்பாக மாற்றுக் கட்சிகள் ஆட்சி செய்கின்ற மாநில அரசுகளையெல்லாம் கலைக்க வேண்டுமென்று சொல்லும் போது, நீங்கள் அதற்கு ஒத்துழைக்க வேண்டாம். அவர்கள் காங்கிரஸ் அல்லாத மாநிலங்களைப் பார்த்து 'கலையுங்கள்' என்று சொல்லுகிறார்கள். அப்படித் தாமாகக் கலைக்காவிட்டால், மத்திய அரசின் தலையீட்டால் கலைக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். இந்த நேரம் பார்த்து நீங்களும் ராஜிநாமாவைக் கோருகிறீர்கள். உங்கள் ராஜிநாமா கோரிக்கையும் காங்கிரசின் கலைப்புக் கோரலும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களேயாகும். அதனால்தான் இந்திரா காங்கிரசுடன் சேர்ந்துகொண்டு இப்படி கேட்கா தீர்கள்—என்று சொல்லுகிறேன். நீங்கள் கேட்பதுமாதிரி, அப்படியே அவர்கள் கவிழ்த்துவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது தமிழ் நாட்டில் ஆட்சி செய்யப் போவது யார்? இந்திரா காங்கிரஸ் கட்சியினர் உங்களை ஆள விடுவார்களா? தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டார். "எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் தான் முதல் மந்திரியாக ஆக வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். "பூனையைக் கையில் கொடுத்து விட்டு யானையைப் பிடித்துக்கொண்டு போகப் போகிறார்கள்". பாண்டிச்சேரி 5 இலட்சம் வாக்காளர்கள் இருக்கக் கூடிய ஒரு சின்ன மாநிலம். "பாண்டிச்சேரியில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு விட்டுக்கொடுத்து விட்டோம். ஆகவே 5 கோடி மக்களைக் கொண்ட தமிழ் நாடு எங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்" என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கேட்கிறார். இதை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டு அரசியலைப் பொறுத்தவரை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரு கட்சிகளின் தலைவர்களும் தங்களிடையே இருக்கக் கூடிய கருத்து வேறுபாடுகளை மாற்றிக்கொண்டு தமிழ் நாட்டு அரசியலில் இந்திரா காங்கிரஸ் ஆதிக்கம் பெறச் செய்யும் முயற்சியைத் தடுக்க முன்வர வேண்டும். இவர்கள் இரண்டு பேருடைய



தகராறுகளைப் பார்க்கும்போது, "இரண்டு பூனைகளிடையே சண்டை வந்து அப்பத்தைக் கொண்டுபோய் குரங்கிடம் கொடுத்தன" என்கிற கதை தான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. பலவீனமாகவிருந்த இந்திரா காங்கிரஸுக்கு தமிழ்நாட்டில் 10 பார்லிமெண்ட் சீட்டுகளை 1971-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பத்தில் விட்டுக் கொடுத்தது. 1977 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ்க்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 15 சீட்டுகளை விட்டுக் கொடுத்தது. இன்றைக்கு 1980-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரஸ்க்கு 22 சீட்டுகளை விட்டுக்கொடுத்திருக்கிறது. இவைகள் எல்லாம் முடிந்த பிறகு, இன்றைக்கு மத்தியிலுள்ளவர்கள் "தேசிய நீரோட்டம்" என்று பேச ஆரம்பித்திருக் கிறார்கள். தேசிய நீரோட்டம் என்று அவர்கள் சொல்லுவது எதைப்பற்றி என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது தமிழ் நாடும் தேசிய நீரோட்டத்திற்குத் திரும்பி வந்துவிட்டது என்று அவர்கள் சொல்வதன் அர்த்தமென்ன? தமிழ் நாட்டின் அரசியலைப் பொறுத்தவரை, இந்தி திணிப்புக் கூடாது, "மாநில சுயாட்சி வேண்டும்", "தமிழ் மொழி வளர வேண்டும்" என்பது போன்ற பிரத்தியேகமான சில போதுக் கோஷங்கள், கோரிக்கைகள் எப்போதுமே இருந்து வந்துள்ளன. இவைகள் எல்லாம் தேசிய நலனுக்கு உகந்தவையல்ல, தேசிய நலனுக்கு விரோதமானவை என்று காங்கிரஸ் கருதுகிறது. இன்றையதினம் கூட மத்திய உள்நாட்டு இலாகா ராஜாங்க மந்திரி திரு. வெங்கடசுப்பையா, தேசிய நீரோட்டம் பற்றி மீண்டும் பேசியிருக்கிறார். அவர்கள் கண்ணோட்டத்தில், தமிழ் நாடும் தேசிய நீரோட்டத்தோடு வர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதாவது புரியும்படியாகச் சொல்லப்போனால், 1967 தேர்தலுக்கு முன்பு இருந்த பழைய நிலைக்கு தமிழ் நாடு வர வேண்டுமென்று விரும்புகிறார்கள். 1967 தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோற்றதற்கு பழிவாங்க வேண்டுமென்று தமிழ் நாட்டிலுள்ள இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் துடிக்கிறார்களாம். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரே இவ்விதம் அறிக்கை கொடுத்திருக்கிறார். மேலும் இன்றைய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் கூட இதுபற்றிய செய்தி வந்திருக்கிறது. யாரைப் பழிவாங்கப் போகிறார்கள்? திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சேர்த்துத்தானே?

தமிழ் நாட்டிலே திராவிட இயக்கத்திற்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அந்தப் பாரம்பரியம் என்ன? இந்தித் திணிப்பு எதிர்ப்பைப் பொறுத்தவரை, அதனுடைய ஜனநாயக உள்ளடக்கம் என்ன? இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதுதான் அதனுடைய அர்த்தம். அது நியாயமான கோரிக்கை அல்லவா? திராவிட நாடு கோரிக்கையை அண்ணா அவர்கள் அன்றையதினம் கைவிட்டபோது கூட,

"மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி" என்று சொன்னார்கள். அந் இன்றையதினம் நிறைவேறி விட்டதா? அதுபற்றி இன்னும் சண்டை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு தானே இருக்கிறது? எங்கள் கட்சித் தலைவர் திரு. ஜோதிபாசு அவர்கள், இதற்காக தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார். போராட்டம் இன்னும் முடியவில்லை. தமிழ் மொழி வளர்ச்சி பெற வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும், இந்தித் திணிப்பு கூடாது—இதுபோன்ற கோரிக்கைகள் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, எல்லா ஜனநாயகக் கட்சிகளின் பொதுவான கோரிக்கைகளாகும். எல்லாக் கட்சிகளும் இந்தக் கோரிக்கைகளை முன் வைத்துள்ளன. இந்தக் கொள்கைகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், எங்களுக்கும் பொது வானவை. அதுமட்டுமல்ல. இன்றையதினம் மத்தியில் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிறவர்கள் யதேச்சாதிகாரத்தைக் கைவிட்டு விட்டார்களா என்பதை யோசனை செய்து பார்க்க வேண்டும். முன்பு இருந்த ஆபத்து போய் விட்டதா? இன்றையதினம் அம்மையார் அவர்கள் வருத்தம் தெரிவித்திருக் கிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை தேர்தல் காலத்தில் கூறிற்று. ஆனால், வருங்காலம் இனிமேல் போகப் போக எப்படி இருக்கப் போகிறது என்பதை நம்மால் எண்ணிப் பார்க்க முடிகிறது. ஆட்சி இயந்தி ரத்தை எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதை நாம் எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். காமைம் "கிசா குர்சிகா" கேஸ் பற்றிய வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் முடியப் போகிறது. ப்ராசிக்யூட்டருக்கு யோசனை சொல்ல வேண்டிய திரு. என். கே. சிங் அவர்களின் நிலை என்ன? அவர் கோர்ட்டுக்குப் போக வேண்டியவர். அவர் மத்திய உளவுத் துறையைச் சேர்ந்த டி.ஐ.ஜி. ரெங்கிலுள்ள ஒரு போலீஸ் அதிகாரி. அவரை சாதாரண போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், டில்லியிலிருந்து பிடித்துக்கொண்டு போய் அரியானாவிலுள்ள ஒரு போலீஸ் நிலையத்தில் வைத்து அவரிடமிருந்து ரு பாண்டில் கையெழுத்து வாங்கிவிட்டு வெளியே அனுப்பியிருக்கிறார். இ யதேச்சாதிகாரம் வருவதற்கான அறிகுறியில்லையா? இப்படி நடைபெற் செயல் யதேச்சாதிகாரம் இல்லையா? இதையெல்லாம் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதைத் தான் விட்டு விடுங்கள். மாநி சுயாட்சிபற்றி எங்கள் கட்சியைச் சேர்ந்த சுசீலா கோபாலன் அவர்கள் மக் சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். மாநிலங்களுக்கு அதி அதிகாரம் வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அவருடைய நியாயமா கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது. அந்த நேரத்தில் திரு. சஞ்சய் காந் மாநிலங்களுக்கு இப்போது வழங்கப்பட்டிருக்கக் கூடிய அதிகாரங் குறைக்கப்பட வேண்டுமென்று சொன்னார். அப்போது உங்கள் கட்சியா





ஒன்றும் பேச முடியவில்லை. அதுபோல் தடுப்புக் காவல் சட்டம் மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது. மிசாவால் பாதிக்கப்பட்ட உங்களால் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதை எதிர்க்க முடியவில்லை.

(திரு. க. இராமமூர்த்தி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொரு முறையும் உறுப்பினர்கள் குறுக்கிடாமல் இருந்தால் நலமாக இருக்கும். மனம் புண்படக்கூடிய வகையில் ஏதேனும் சொன்னால் மட்டும் உறுப்பினர் பேசலாம். நான் அனுமதிக்கிறேன்.

(பிற்பகல் 4.20)

**திரு. க. இராமமூர்த்தி :** அவர்கள் சேர்ந்திருந்த ஜனதா ஆட்சி கொண்டு வந்த சட்டம்தான் இப்போது இருக்கிறது. அப்போது அவர்களோடு இருந்தார்கள். அவர்கள் கொண்டுவந்தபோது, இந்த உணர்வுகள் எல்லாம் எங்கே போய்விட்டது?

**திரு. ஆ. நல்லசிவன்:** நாங்கள் அன்றைக்கே எதிர்த்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதெல்லாம் யாருக்குத் தெரியாதது? என்ன?

**திரு. ஆ. நல்லசிவன் :** இதுபோன்ற சட்டத்தால் வருங்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் பாதிக்கப்படமாட்டாதா? சரண்சிங் அரசு இதைக் கொண்டுவந்தபோது எதிர்த்தீர்களே இப்போது ஏன் எதிர்க்க முடியவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு இந்திரா காங்கிரசின் உதவி தேவையாக இருப்பதால்தானே, அதைச் செய்ய முடிய வில்லை. ஆக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே இந்தமாதிரி நிகழ்ச்சிகள் நடக்காமலிருப்பதற்காக, எதேச்சாதிகார சக்திகள் ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதற்காக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதற்காக, தமிழ் மொழி வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக, அ.இ.மு.க.—தி.மு.க.—சி.பி.ஐ.—சி.பி.எம். போன்ற கட்சிகள் ஒன்று சேர்ந்து போராடுவதுதான் ஒரே இயற்கையான வழியாகும், இயற்கையான மரபு மாகும். அதை விட்டுவிட்டு செயற்கையாகப் போய் காங்கிரசுடன் சேர வேண்டாம். நான் சொல்லும் முடிவுக்கு நீங்கள் உடனே வராவிட்டாலும்கூட அதிலே காலதாமதமானாலும்கூட, இப்போது இருக்கும் தமிழக அரசின் குறைகளை நிவர்த்திக்க வேண்டும் என்றால் கூட, இப்படித்தான் சேர வேண்டும். அ.தி.மு.க. அரசிலே குறைகள் இருக்கின்றன. அதை விமர்சிப் பதற்கும் திருத்துவதற்குமான வழியை நாம் மேற்கொள்ள வேண்டும். அந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, இந்த மாநிலத்தை காங்கிரஸ் கட்சியிடம் ஒப்படைக்க வேண்டாம். அண்ணாதுரை அவர்களின் ஆவி பேச முடிந்தால்,

உங்களைப்பற்றி என்ன சொல்லும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். அண்ணாதுரை அவர்களுக்கு இந்திய வரலாற்றிலே ஒரு முக்கிய இடம் உண்டு. 20 ஆண்டுக் காலமாக இந்தியாவிலே காங்கிரஸ் கட்சியின் மிகுந்த ஏகபோக அரசியல் ஆதிக்கத்தை உடைத்த பெருமையில் அண்ணாதுரை அவர்களுக்கும் பங்கு உண்டு. அப்படிப்பட்ட ஒரு சாதனைக்குக் களங்கம் ஏற்படுத்தாதீர்கள் என்றுதானே உங்களிடம் அபிமானமுள்ளவர்கள் யாரும் கூற முடியும்? இதை யோசித்துப் பாருங்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் ஐந்து நிமிடங்கள்தான் இருக்கின்றன.

**திரு. ஆ. நல்லசிவன் :** எனக்கு இதுதான் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. அடுத்தபடியாக, நான் அ.தி.மு.க. விடம் சொல்ல விரும்புவதெல்லாம், 'நீங்கள் உறுதியாக நில்லுங்கள்' என்பதுதான். ஆட்சிக் கலைப்பு பற்றி ஒன்பது முதன் மந்திரிகளின் அறைகூவலைப் பார்த்தீர்கள். அவர்கள் எல்லாம் கலைப்புக்கு எதிராக உறுதியாக இருக்கிறார்கள். நீங்களும் அந்த அறிக்கையை வரவேற்றீர்கள். ஆகவே, கலைத்து விடுவார்களோ என்று நினைத்து, நீங்கள் இந்திரா காங்கிரசைத் தாஜா செய்ய வேண்டாம். 1977 லே மக்கள் சபைத் தேர்தலில் அவர்களோடு நீங்கள் இருந்தீர்கள். கடந்த காலத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவம் என்ன? அவர்களுக்கு வேண்டியபோது உங்களை உபயோகப்படுத்திக் கொண்டார்கள், வேண்டாத போது காலை வாரி விட்டார்கள். அந்த நிலைமைதான் இப்போது தி.மு.க. தலைமைக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, உறுதியாக நில்லுங்கள். பெரிய கட்சியைச் சார்ந்தவர்கள், சின்ன கட்சியைச் சேர்ந்த நான் உங்களுக்குச் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம். தாங்கள் இந்த மாதிரியான அதிரடிகளையெல்லாம் சமாளித்துப் பழக்கப்பட்டவர்கள் தான். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இதுவரைக்கும் என்ன பண்ணினார்கள்? கலைக்கப் போகிறோம், கலைக்கப்போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், திடீரென்று இன்றைக்கு 'அக்டோபர் மாதம் வரை கலைப்பு இல்லை' என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? 9 முதன் மந்திரிகள் இதற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருப்பதும், 4 ஆம் தேதி இந்தியா முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பதும் இதற்குக் காரணம். ராஜ்ய சபாவிலே 80 ஓட்டுகள் பெற்று கலைப்பு செய்யக்கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்ட பிறகு, எதிர்ப்பு வளருவதைக் கண்ட பிறகு, இப்போது இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் இன்னும் சலனப்பட்டால், உங்கள் தோள்மீது ஏறலாமா என்றுதான் பார்ப்பார்கள். ஆகவே, உங்களுக்கு சபலம் வேண்டாம். உறுதியாக நில்லுங்கள். இன்றைக்கு தி.மு.க.வும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு இந்த அரசைக் கலைக்க முன்வந்தாலும், நான் சொல்கிறேன், நீங்கள் மக்களை நம்புங்கள். மேற்கு வங்காளம், திரிபுரா, கேரளம் போன்ற





மாநிலங்களைப் பாருங்கள். அந்த மாநிலங்களிலே உள்ள நிலைமை என்ன? இந்த அம்மையாரின் அலை இப்போது நாடு பூராவும் பரவியிருக்கிறது என்று பத்திரிகைகள் வாயிலாகவும், பிரச்சாரத்தின் மூலமாகவும் ஒரு கட்டுக் கதையைப் பரப்புகிறார்கள். அது என்ன அலை? அப்படி என்ன பெரிய அலை? அந்த அலை ஏன் இந்த மூன்று மாநிலங்களிலேயும் இல்லை? ஆகவேதான் நான் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் மக்கள் மீது நம்பிக்கை வையுங்கள். மக்களை நம்பி நின்றால் மேற்கு வங்காளம், கேரளம், திரிபுரா போன்ற மாநிலங்களில் ஏற்பட்ட நிலைமை தமிழகத்திலும் உருவாகும். அதை விட்டு விட்டு இந்திரா காங்கிரசுக்கு அடிபணியாதீர்கள். தமிழ் நாட்டு மண்ணிலே எதேச்சாதிகாரத்திற்கு அடிபணிந்த ஒரு துர்பாக்கியமான நிலைமையை உருவாக்க வேண்டாம். மக்கள்பால் உங்கள் கொள்கைகளையும் நடைமுறையையும் மாற்றுங்கள். போலீஸ்காரர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் நாடு பூராவும் போராடினார்கள். அவர்களுக்கு அப்படிப் போராடியதால் சங்கம் வைத்துக்கொள்ளும் உரிமை இந்த நாட்டிலே அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதை அவர்கள் பயன்படுத்தினார்கள். தமிழக அரசின் அணுகு முறைதான் தவறு. அந்தச் சங்கத்திற்கு நிர்வாகிகளாக யார் இருந்தாலும் அரசுக்கு என்ன? அதுபற்றி அரசு ஏன் அக்கறைகொள்ள வேண்டும்? போலீஸ்காரர்கள் பிரச்சினைகளைத் பேசித் தீர்க்க அவர்கள் யார் தலைமையில் வந்தாலும், அரசுக்கு என்ன இடைஞ்சல்? இவ்வாறு நினைத்திருந்தால், இந்தப் பிரச்சினைகள் வந்திருக்காதே. அந்தப் போலீசார் பிரச்சினை இப்போதும் தீராமல் இருந்துகொண்டே இருக்கிறது. அது சீக்கிரமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு, அனைவரும் வேலையில் அமர்த்தப்பட வேண்டும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், உழைப்பாளிகள், அலுவலர்களின் அமைப்புகளை இப்படி நசுக்கக் கூடாது. பல்வேறு இடங்களிலே பல்வேறு காரணங்களுக்காகப் போராடுகிறார்கள். அவர்களது குறைகளை பேச்சுவார்த்தைகளின் மூலமாகத் தீர்க்க தக்க நடவடிக்கைகள் அவ்வப்போது எடுத்திருந்தால், இந்த நிலைமைகள் வந்திருக்காதே. ஒரு மலரை அப்படியே முகர்ந்து பார்ப்பதற்கும், அதைக் கசக்கி முகர்ந்து பார்ப்பதற்கும் வித்தியாசம் உண்டு. கசக்கி முகர்ந்து பார்த்தால், அதிலே மணம் இருக்காது. ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்டுள்ள தொழிலாளர்கள் ஒன்றுபட்டு போராட்டம் நடத்தும்போது, அந்தப் போராட்டத்திலே ஒரு நியாயம் இருக்கும். போராடினால்தான் நியாயம் கிடைக்கும் என்று அவர்கள் போராடுகிறார்கள். அந்த மாதிரி நேரங்களில் சர்க்காரின் அணுகுமுறை சரியாக இருக்க வேண்டும். கடந்த $2\frac{1}{2}$ ஆண்டுக்கால ஆட்சியிலே, 5 மாதம், 4 மாதம், 3 மாதம் என்று நீண்ட வேலை நிறுத்தங்கள் எத்தனை நடந்திருக்கின்றன? மேற்கு வங்கத்திலே பாருங்கள். அங்குள்ள முதன் மந்திரி போலீஸ்காரர்களுடைய மாநாட்டிலே சென்று, மூன்று நாட்கள் உட்கார்ந்து பிரச்சினைகளைக் கேட்கிறார்,

அதற்குப் பிறகு "மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லாவற்றையும் செய்கிறேன்" என்று உறுதியளிக்கிறார். அவர் ஒரு ஸ்தாபனத்தை மதிக்கிறார். ஆனால், உங்களைப் பொறுத்தவரையில், போலீசார் உங்களிடம் வந்தபோது அவர்களிடம் பேசவே மாட்டோம் என்று சொன்னீர்கள். என்.ஜி.ஓ.க்கள் கோரிக்கை வைத்தால், அவர்களைப் புறக்கணிக்கிறீர்கள்; போட்டிச் சங்கத்தை ஊக்குவிக்கிறீர்கள். விவசாயிகள் கோரிக்கை வைத்தால், அவர்களுடைய கோரிக்கை புறக்கணிக்கப்படுகிறது. இந்தப் போக்குத்தான் உங்களுக்குக் கெட்ட பெயரை உண்டாக்குகிறது. அவர்களுடைய கோபத்தைத் தூண்டிவிடும் முறையில் பிரச்சினைகளை அணுகுவது சரியல்ல. அதுபோலவே இந்தப் புதிய தொழில் உறவு மசோதா. ஏன் இந்தப் போக்கு? இப்போது என்ன பண்ணியிருக்கிறீர்கள்? தொழிற்சாலைகளில் ஒப்பந்தங்கள் போட்டால், அதற்கு மெஜாரிட்டி தொழிலாளர்களின் ஆதரவு வேண்டும் என்று போட்டிருக்கிறீர்கள். அது சரி. ஆனால், அத்துடன் வேலை நிறுத்தம் செய்வதற்கும் மெஜாரிட்டி வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது போலவே நான் கேட்கிறேன், 'லாக்-அவுட்' செய்வதற்கும் மெஜாரிட்டி தொழிலாளர்களின் ஆதரவு வேண்டும் என்று போடுவீர்களா? 'லாக்-அவுட்டைத் தடுத்து நிறுத்த அரசுக்கு அதிகாரமில்லையே? இந்த நாட்டிலே உள்ள பொருளாதாரப் பிடிப்பு முதலாளிகள் கையிலே இருக்கிறது. அவர்கள் நினைத்ததைச் செய்வார்கள். அவர்கள் நினைத்ததைச் செய்கிறபோது, அதை எதிர்த்துப் போராட தொழிலாளிகளுக்கு என்ன உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது? வேலை நிறுத்த உரிமை ஒன்று தானே? அந்த உரிமையைப் பிடுங்குகிறார்களே. ஏன் இந்த நிலைமைகள்?

இப்போது மலிவு விலைக் கடைகள் வைத்திருக்கிறார்கள். இந்த மலிவு விலைக் கடைகள் குறித்து மக்களுக்குத் திருப்தியில்லை. பத்து அத்தியாவசியப் பொருள்களையாவது அரசு ஏகபோகமாகக் கொள்முதல் செய்து, சில்லரை வியாபாரிகள் மூலமாகவும் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகள் மூலமாகவும், அல்லது டிப்பார்ட்மென்ட் ஸ்டோர்கள் மூலமாகவும் விநியோகத்தைச் செய்தால், நிச்சயமாக ஓரளவு விலைவாசியைக் குறைக்க முடியும்; கட்டுப்படுத்த முடியும். விலைவாசி ஏறுவதற்கு மத்திய அரசுதான் பொறுப்பு ஏற்க வேண்டும். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், மாநில அரசு இப்பிரச்சினையில் சில நடவடிக்கைகளை எடுக்க முடியும். விலைவாசியைக் கட்டுப்படுத்தும் சில அதிகாரங்கள் மாநில அரசுக்கும் இருக்கின்றன. அந்த அதிகாரங்களைக் கொண்டு விலைவாசியைக் கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டாமா?

வேலைக்கு உணவு என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தை அமுல் படுத்தும்போது, அந்தத் திட்டத்தின் பலன் முழுவதும் மக்கள் கையில் கிடைக்கும் வகையில் உத்தரவாதம் அளிக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள்



அடங்கிய ஒரு கமிட்டி அமைத்து, அதன்மூலம் உத்தரவாதம் அளிக்க வேண்டும். தக்க நடவடிக்கை எடுத்து, ஒரு விவசாயத் தொழிலாளியின் கையில் 2 ரூபாயும் ஒரு படி அரிசியும் ஒழுங்காகக் கிடைக்கும் நிலையை உருவாக்க வேண்டும். விவசாயக் கூலி, 7 ரூபாய் 20 காசு என்று நாம் இப்போது வைத்திருக்கிறோம். வேலைக்கு உணவு மூலம் குறைந்தபட்ச தேவைக்கு உத்தரவாதம் கிடைத்தால், அந்தக் கூலி விகிதங்களை நிமிர்ந்து நின்று இந்த விவசாயத் தொழிலாளி கேட்பான். அந்த மாதிரி அமைப்புகள் இல்லாததால் தான் இன்றையதினம் 2 ரூபாய்க்கும், 3 ரூபாய்க்கும் உழைப்பதற்கு விவசாயத் தொழிலாளி போகிறான். ஆகவே, சட்டம் போடுவதும், அறிவிப்புகள் செய்வதும் மட்டும் போதாது. அதைச் சரியான முறையிலே அமுல் செய்ய உத்தரவாதம் வேண்டும். இந்த நிலைமையை உத்தரவாதம் செய்ய உங்கள் கட்சித் தொண்டர்களும், எங்கள் கட்சித் தொண்டர்களும் மற்ற அனைத்து ஜனநாயகக் கட்சிகளின் தொண்டர்களும் இன்றைக்கு தெருவிலே இறங்கி போராட்டம் நடத்தியாகவேண்டிய ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அதிகார வர்க்கத்தை நம்பி பிரயோசனம் இல்லை. சிறு, மத்தியதர

(பிற்பகல் 4-30)

விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் கடன் நிவாரணம் அளிப்பதற்கு முன்வர வேண்டும். கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால், அதற்கு மத்திய அரசு ஒப்புக்கொள்ள வேண்டும், ரிசர்வ் வங்கி அனுமதிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. திரு. நிருபன் சக்ரவர்த்தியும், திரு. ஜோதி பாசுவும், திரு. நாயனாரும் என்ன செய்கிறார்கள் என்று பாருங்களேன். உண்மை நிலையை மக்களிடம் சொல்வதற்கு இந்த அரசும் தெருவில் இறங்க முன்வர வேண்டியதுதானே?

இதைச் சொல்லும்போது, இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மக்களின் உடனடியான அன்றாட பிரச்சினைகளைப்பற்றிக் கவலைப் படாமல், அவைகளில் கவனம் செலுத்தாமல், முக்கியத்துவமற்ற பிரச்சினைகளைப்பற்றி கவனம் செலுத்துகிறீர்கள். உதாரணமாக மதுவிலக்குப் பிரச்சினை. 200, 250 கோடி ரூபாய் வருட வருமானம் அரசாங்கத்திற்கு வரக்கூடிய நிலை இருக்கும்போது, அந்தப் பணத்தையும் விட்டுவிட்டு, தேவையில்லாமல் இந்த அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் கெட்ட பெயரை வாங்கிக் கொண்டிருக்கிறது. தாய்க் குலம், தாய்க் குலம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தாய்க் குலத்தைச் சார்ந்தவர்கள்தானே தங்கள் கணவன்மார்கள் குடித்துவிட்டு ஜெயிலுக்குப் போனால் கண்ணீர் விடுகிறார்கள். அதை ஏன் அரசினர் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள். இன்னும் எதற்காக இந்த மதுவிலக்குச் சட்டத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்?

அதைப்போலவே நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நாட்டில் எத்தனையோ நிலப் பிரபுக்கள் பினாமியாக நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த பினாமி நிலங்களைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக, 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் குத்தகை நிலங்களை வைத்திருப்பவர்களிடமிருந்து 3 ஏக்கருக்கு மேற் பட்டதை எடுப்பதிலே அக்கறை காட்டுவானேன்? ஒரு லட்சம் விவசாயிகள் பதிவு செய்து கொண்டிருப்பவர்களிடமிருந்து 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கு மேல் இருப்பதை எடுப்பதற்குப் பதிலாக, பினாமி நிலங்களை வைத்திருப்பவர்களிடமிருந்து அதை எடுப்பதில் அல்லவா இந்த அரசாங்கம் முனைப்புக் காட்ட வேண்டும்? அரசினுடைய செய்கையால் குத்தகை விவசாயிகளைத்தானே கஷ்டப்படுத்தப் போகிறார்கள். எதற்கு முக்கியத் துவம் கொடுக்க வேண்டும் என்று இல்லாமல், காரியம் செய்வது உங்களுக்கு வேண்டாத பகையைத் தான் உருவாக்குகிறது. எனவே, மக்கள் பக்கம் நில்லுங்கள். எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நில்லுங்கள். ஏற்பட்டுவிட்ட தோல்வியைக் கண்டு துவண்டுவிடக்கூடாது. எதற்கும் அரசு உறுதியாக இருக்க வேண்டும். அ.தி.மு.க., தி.மு.க. சி.பி.எம்., சி.பி.ஐ. போன்ற கட்சி களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, இந்திய நாட்டில் ஏகபோக முதலாளிகளின் பிரதிநிதியாகச் செயல்படும் காங்கிரஸ் ஆட்சிக்கு தமிழ் நாட்டில் இடம் இல்லை என்று சொல்லுகிற அளவுக்குச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : இந்திய ஏகபோக முதலாளித்துவத்தின் **பிரதிநிதி காங்கிரஸ் ஆட்சி** என்பது முறையற்றது என்பது மட்டுமல்ல, ஆதாரமற்றது. இந்திரா காங்கிரஸ் ஆட்சி நாட்டு மக்களால் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறுக்கிட்டதால், இதைச் சொல்ல விரும்புகிறேன். ஏகபோக முதலாளித்துவத்தின் பிரதிநிதித்துவ ஆட்சி என்றால், முதலாளிகளே நேரடி யாக இருந்து ஆட்சி செய்ய வேண்டும் என்ற அர்த்தமில்லை. பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் ஆட்சிக் காலத்திலும், திருமதி இந்திரா காந்தி அவர்களின் ஆட்சிக் காலத்திலும்தான் இந்த நாட்டில் 75 ஏகபோக முதலாளித் துவக் குடும்பங்கள் வளர்ந்திருக்கின்றன. அவர்களின் அரசியல்-பொருளாதாரக் கொள்கைகளின் விளைவே இது. அதை யாரும் மறுக்க முடியாது.

* **திரு. க. இராமமூர்த்தி :** உறுப்பினர் எந்த அளவுக்கு ஜனநாயகத்தை மதிக்கிறார் என்பது அவருடைய பேச்சிலேயே தெளிவாகிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் ஆளுநர் அவர்களுடைய உரை சில பிரச்சினைகளை நேரடியாக எடுத்துக்கொள்வதற்கு முன்வந்திருக்கிறது என்ற மாற்றத்தை நான் காண முடிகிறது. இந்த மாற்றத்தின் அடிப்படையில் இரண்டு முக்கியமான பிரச்சினைகள் ஆளுநர் அவர்களின் உரையின் துவக்கத்திலும் இறுதியிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இருக்க வேண்டிய உறவுபற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும் அந்தப் பிரச்சினைமீது என்னுடைய கருத்துக்களை மிகச் சுருக்கமாக என் உரையின் கடைசியில் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

இந்த உரையின் இறுதியில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், "இந்த அரசின் நோக்கமான வறுமையின்மையை உருவாக்கவும் வேலை [illegible]யை உருவாக்கவும் நாம் அனைவரும் ஒரு சேர உழைப்போமாக" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையில் நமது நல்லெண்ணங்களை மட்டும் குறிப்பிட்டுவிடுவதாலே பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. வறுமையை நீக்குவது என்று சொல்லும்போது, இந்த நாடு 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் விடுதலை பெற்ற காலத்திலிருந்து தொடர்ச்சி யாகப் பார்த்தால், நாட்டில் வறுமை அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறதே தவிர, குறையவில்லை. இதுதான் உண்மை. இதில் அரசியல் தாவாவுக்கு இடமில்லை. இது ஒரு கடினமான உண்மை. அப்படிப்பட்ட வறுமையை ஒரு மாநில அரசு போக்கிவிட முடியுமா என்றால், அது முடியாது. அப்படி யிருக்கும்போது, அதை நாம் போக்குவோம் என்றால், அதிலும் விரைவாகப் போக்குவோம் என்றால், அது என்ன ஓராண்டிலா அல்லது 4 ஆண்டுக் காலத்திலா அல்லது 5 ஆண்டுக் காலத்திலா என்பது எனக்குப் புரியவில்லை. ஆளுநர் உரையில், வறுமையைப் போக்குவோம், வேலையின்மையைப் போக்குவோம் என்று ஆண்டுதோறும் குறிப்பிடுவதால் மட்டுமே நம்மாலே வறுமையையும் போக்க முடியவில்லை, வேலையின்மையையும் போக்க முடிய வில்லை. வேலையின்மையும், வறுமையும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

ஆக, இந்த ஆண்டு இந்த அரசு செய்ய வேண்டிய முக்கியமான கடமைகள் அல்லது ஏற்க வேண்டிய திட்டங்கள் என்பவற்றைப் பார்க்கிறபோது, இந்த ஆளுநர் உரையில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் சொல்லா மலிருக்க முடியாது. ஆனாலும் இந்த அரசின் கொள்கையில், செயற்பாட்டில் சில மாறுதல்களைப் பார்க்க முடிகிறது. அதில் ஒன்று மதுவிலக்குக் கொள்கையில் அறிவிக்கப்பட்ட தளர்ச்சி. நானே கடந்த இரண்டாண்டுகளாக **இந்த மதுவிலக்குக் கொள்கையை விமர்சித்த போது, இந்தக் கொள்கைகளில்**

மாற்றம் செய்ய வேண்டும் என்று சொன்னபோது, இங்கே உள்ள ஆளும் தரப்பிலிருந்து என்ன சொல்லப்பட்டது என்றால், இது ஒரு சமுதாயக் கொள்கை என்பதாகும். இந்த மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்த கடுமையான தண்டனையுள்ள சட்டம் கொண்டுவரப்பட்டது. ஒன்றை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். கடுமையான சட்டங்கள் இந்தியாவின் பிரச்சினை களைத் தீர்த்ததில்லை. இது நாடு விடுதலை பெற்ற பிறகு மட்டுமல்ல, இதற்கு முன்னாலே ஆங்கிலேயன் ஆட்சிக் காலத்தில்கூட கொண்டுவரப்பட்ட "ரௌலட் சட்டம்" போன்ற கொடுமையான சட்டத்தை இந்திய மக்கள் எதிர்த்துத்தான் முறியடித்தார்கள். இந்த ஆட்சியில் மதுவிலக்கு சம்பந்தமாக மிகக் கடுமையான சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு, நிலைமை என்ன வானது? சீர்திருந்தவில்லை. இப்போதுதான் ஒரு காரியார்த்தமான புதிய நிலைமையை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. இதை நான் வரவேற் கிறேன். இதைப் போலவே பின்தங்கியோர் பிரச்சினையில்கூட ஆழ்ந்து சிந்திக்காமல், பார்ப்பதற்கும் சொல்வதற்கும் உதவியாக குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு உதவி செய்கிறோம் என்ற தோற்றம் அளிக்கும் வகையில் ஒரு அறிவிப்பு செய்யப்பட்டது. அதன் விளைவு என்னவாயிற்று? எந்தப் பின்தங்கியோருக்கும் குறைந்த வருமானக்காரர்களுக்கும் உண்மையிலேயே உதவி செய்ய முடியாத நிலைதான் ஏற்பட்டது. இந்த இரண்டு அம்சங் களிலும் இப்போது ஏற்பட்டிருக்கிற மாற்றம் வரவேற்கத் தக்கதாகும்.

அடுத்து, இந்தச் சட்டமன்றம் கலைக்கப்படுமா அல்லது நீடிக்கப்படுமா என்ற இந்த ஆண்டின் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினையாக இருந்த போதும், சில விஷயங்களை நாம் இப்போது தட்டிக் கழிக்க முடியாது. வரக்கூடிய ஆண்டில் அரசியல் நிலைமையில் மாற்றங்கள் ஏற்படலாம். இந்த அவையின் நிலைமையிலேயே மாற்றம் ஏற்படக்கூடும். இருந்தாலும் சில விஷயங்களை நாம் தட்டிக் கழிக்க முடியாது என்று சொல்லுமளவுக்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பிரச்சினைகளில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும். அரசியல் சூழ்நிலை அல்லது மற்ற வேறு பல நிர்பந்தம் காரணமாக இந்தச் சட்டமன்றமே கூட கலைக்கப்படலாம்; இந்த அரசே டிஸ்மிஸ் செய்யப்படலாம். ஆனால் இவைகளெல்லாம் அவ்வளவு எளிமையான காரியங்கள் அல்ல. ஏனென்றால் தேர்தல் வேகத்தில் சொல்லக் கூடிய விஷயங்களுக்கும் அதற்குப் பிறகு நாட்டில் அரசியல் சக்திகளுக் கிடையில் ஏற்படும் வலிவுகளுக்கும் உறவுகளுக்கும் வித்தியாசம் உண்டு. ஆங்கிலத்தில் சொல்வதானால்

"alignment and strength of forces are different"

அதாவது இந்தச் சக்திகளின் சேர்க்கையும் வலுவும் வித்தியாசமாக இருக்கிறது. எனவே, யாரும் நினைத்ததை நினைத்தாற்போல் செய்து விட முடியாது.



நமது நாட்டு நிலைமை மட்டுமல்ல. அன்றைய நாட்டின் நிலைமை காரணமாகவும் இந்திய அரசியலில் எந்த அரசியல் கட்சியும் இஷ்டம்போல் எந்தக் காரியத்தையும் செய்துவிட முடியாது. மத்திய அரசேகூட செய்துவிட முடியாது. நிலைமை இப்படி இருந்தபோதிலும், இங்கேயுள்ள மாநில அரசு சில முக்கியமான அம்சங்களில் தவறுகளைச் செய்திருக்கிறது. அவைகளை யெல்லாம் திருத்திக்கொள்ள வேண்டும்.

எப்படி மக்களின் விருப்பத்திற்கு மரியாதை கொடுத்து எப்படி மதுவிலக்குப் பிரச்சினையிலும் பின்தங்கியோர் பிரச்சினையிலும் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தார்களோ, அதைப்போலவே தொழிலாளர் கொள்கையிலும் அரசு ஒரு மாற்றத்தைக் கொண்டுவர முன்வரவேண்டும். சென்றமுறை இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும் போது 12 (3) தொழில் தாவா சட்டம்பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். அப்போது அமைச்சர் அவர்களை நேரடியாகத் தாக்கும் வகையில் பேசி னார்கள். இப்படி அமைச்சரைப் பார்த்து நேரடியாகத் தாக்கும் வகையில் பேசுகிறாரே, நியாயம்தானா என்று கேட்டபோது, அது உணர்ச்சி வசப்பட்ட வாதம் என்று சொன்னோம். அது உணர்ச்சி வசப்பட்ட வாதமாக இருந்த போதிலும், அதில் உண்மை இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏதோ ஒரு 5 பேர்களை வைத்துக்கொண்டு 12 (3) சட்டத்தைப் போட்டார்கள். இந்த நாட்டில் இதுவரையில் நடைபெறாத கேலிக் கூத்தாக அது அமைந்தது. இப்போது அதை மாற்றுவதற்கு ஒரு நல்ல நேரம் வந்திருக்கிறது. எல்லாத் தொழிற் சங்கங்களும், குறிப்பாக, பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற தொழிற்சங்கமும் ஒப்புக்கொண்டு அங்கீகரித்தால்தான், 12 (3) ஒப்பந்தம் ஏற்படலாம். இல்லையென்றால், அப்படிப்பட்ட ஒப்பந்தம் ஏற்படக்கூடாது என்று சொல்லுகிற நிலை வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

(பிற்பகல் 4.40)

இருப்பினும் தொழில் விஷயத்தில், தொழிலாளர்கள் விஷயத்தில் இந்த அரசின் கொள்கைமுறை ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக பட்டுப் பூச்சி வளர்ப்புக்காகச் செய்திருக்கக் கூடிய ஏற்பாடுகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் வேலை வாய்ப்பு ஏற்படுவதோடு, கூடுதலான வருமானமும் கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். புதிதாக வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதைவிட, ஏற்கெனவே உள்ளவர் களுக்குக் கூடுதலான வருமானத்தை ஏற்படுத்தும் என்பதுதான் உண்மை. கூடுதலான வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் என்பது தவறானது. இதுபற்றிய முழு விவரமும் இல்லை.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பட்டுப்பூச்சி வளர்ப்பிலே அரசு தீவிர கவனம் செலுத்துகிறபோது, ஏற்கெனவே விவசாயத்தைச் செய்யாத பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, "வோல்ட்டின் வெரைட்டி" என்ற உயர் ரகத்தை கர்நாடகாவிலிருந்து கொண்டுவந்து ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களில் அதை வளர்க்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அப்படிச் செய்கிறபோது, நிலச் சொந்தக்காரர்கள் கூடுதலாக வருமானம் பெறுவதோடு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. முசுக்கட்டைச் செடியை வளர்க்கும்போது, ஒரு ஏக்கருக்கு நான்கைந்து பேர்களையாவது நியமித்துத்தான் செய்ய வேண்டும். 40 நாட்களுக்குப் பிறகு வாரம் ஒரு முறை பணம் வருகிறது. தொழிற்சாலைகளில் கிடைப்பதைப் போல நல்ல இலாபம் கிடைக்கிறது. இதன் மூலம் கூடுதலாக வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. நிலம் வைத்திருப்பவர்களுக்கு வருமானம் வருவதோடல்லாமல் வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கும் வேலை வாய்ப்பை உண்டாக்கித் தருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதால் ஒரு கருத்தை நினைவுபடுத்துகிறேன். கூடுதல் வருமானத்தோடு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது என்று சொன்னார்கள். கூடுதல் வேலை வாய்ப்பில்லை. கூடுதல் வருமானம்தான் வருகிறது. சிலருக்கு வேலையில்லாமல் அதுவும் கூடுதல் வேலை வாய்ப்பில்லை என்பதுதான் என்னுடைய வாதம். அமைச்சர் அவர்கள் வேறு விதத்தில் அதை ஒத்துக்கொள்கிறார்கள்.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, அவராக ஒரு முடிவைச் சொல்லிவிட்டு, அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்று சொன்னால், அது சரியாக வராது. அவர் நேரிடையாக வந்து பார்க்க வேண்டுமென்றால், நான் காட்டத் தயாராக இருக்கிறேன். 150 அல்லது 200 படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்திருக்கிறோம். திட்டமிட்டு ஒரு ஏக்கருக்கு 5 பேர் என்ற விதத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. உயர்ரகப் புழுக்களை வளர்ப்பதன் மூலம் இரண்டு, மூன்று ஏக்கர்களை வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகள் வீட்டில் 4 பேர்கள் இருந்தால், அதற்கு மேலும் 10 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது அப்படிப்பட்ட ஒரு கணக்கை எடுத்து, வேலை வாய்ப்புக் கிடைக்கிறது என்ற ஆதாரத்தை வைத்துத்தான் இங்கே குறிப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இந்த விவாதத்திற்கு இங்கே முடிவு கட்ட முடியாது. நான் நாடு சுற்றியவன் என்பது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். இல்லையென்றால், இப்பொழுது தெரிந்துகொள்ளட்டும். கும்பகோணத்திற்குப் பக்கத்திலே ஓரிடத்தில் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் இதைச் செய்துகொண்டிருக்கிறார். அதை நேரிடையாகப் பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன். குற்றாலம் போன்ற வட்டாரங்களிலும் பார்த்திருக்கிறேன். அங்கே இருபது ஆண்டுகள் செயல்பட்டவன். இருந்தாலும், இது ஒரு பெரிய பிரச்சினை என்பதால், அதனுள்ளே மேலும் நுழைய விரும்பவில்லை. நான் சொல்ல விரும்புவதெல்லாம், பட்டுப் பூச்சி வளர்ப்பின் மூலம் வேலை வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பது உண்மை. சில பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது. கிராமப்புறங்களில் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்க இப்படிப்பட்ட திட்டம் மட்டும் போதுமானதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலையின்மை என்ற பிரச்சினையிலே இன்னொன்று படித்துவிட்டு வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்கள் தமிழகத்திலே ஏராளம். வேலை இல்லாமல் இருக்கக்கூடிய இளைஞர்கள் வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துவிட்டு பல ஆண்டுகளாகக் காத்திருக்கிறார்கள். பதிவு செய்திருப்பவர்களுக்கு எந்தவித அழைப்பும் வருவதில்லை. அதற்கு மாறாக, திறமையாக உள்ளவர்கள் வேறு முறையில் அந்த நிர்வாகத்தின் செல்வாக்கைப் பயன்படுத்தி, தங்களுடைய பெயர்களை அனுப்பச் சொல்லி, வேலை வாங்கக் கூடியவர்கள் மட்டுமே வேலையை வாங்க முடிகிறது. படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கிற பிரச்சினை நாளுக்கு நாள் சிக்கலாகி வருகிறது. அதை அரசு கவனிக்க வேண்டும். கிராமப்புறங்களில் சிலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது என்பதில் மட்டும் திருப்திகொள்ளக் கூடாது. அப்படித் திருப்திப்படுவது என்பது இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் சரியான அணுகுமுறையல்ல.

தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்ற அனுபவமுள்ள படித்த இளைஞர்கள் (டெக்னிஷியன்கள்) இருக்கிறார்கள். அவர்களுள் மிகத் திறமையானவர்கள் தமிழகத்திலேதான் இருக்கிறார்கள். அகில இந்திய அளவிலே வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்ற கருத்தில் சில மாநிலங்களில் அவர்களுடைய மாணவர்களுக்கு அதிகமான மார்க்குகளைப் போட்டு அனுப்புகிறார்கள். இந்த விவரத்தை நேரிடையாக அறிந்தவன் நான். அந்தப் பள்ளிகளை நடத்தக்கூடிய பொறுப்பாளர்களே அதைச் சொல்கிறார்கள். "எங்கள் மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மற்ற மாநிலங்களிலும்

வேலை கிடைக்க வேண்டுமென்று கூடுதலாக மார்க்குகளைப் போட்டு அனுப்பு கிறோம்" என்று சொல்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்களிடத்திலே நேரிடை யாகவே தெரிந்து கொண்டதால்தான் இதைச் சொல்கிறேன். இங்கேயும் அதைப் போல அதிகமாக மார்க்குகளைப் போட வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. நம்முடைய மாநிலத்தில் தொழிற் கல்வி பயின்ற இளைஞர்கள் வேலை வாய்ப்பில்லாமல் இருப்பதால், இந்தக் கொள்கையில் மாறுதல் வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, தொழில் சம்பந்தமாகக் கூற விரும்புகிறேன். ஆளுநர் உரையில், "தொழில் முதலீட்டுக்காக 1970 வரை 8 சதவீதமாக இருந்தது 1976-77 ஆம் ஆண்டில் 4 சதவீதமாகக் குறைந்திருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. நம்முடைய மாநிலத்தில் தொழில் வளம் கீழ்நோக்கிச் செல்லும் திசையில் சென்றுகொண்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசின் போக்கு ஒரு காரணம். இப்படிப்பட்ட பிரச்சினைகளை உள்ளடக்கித்தான் மத்திய-மாநிலப் பிரச்சினைகள் சிக்கலாகி வருகின்றன. இதனுடைய விளைவாக, மாநிலங் களை சுயமான நிலையில் இயங்க விடாமல் கலைக்கிற போக்கு ஏற்படுகின்றது. திரு. நல்லசிவன் அவர்கள், "ஏகபோகம்" என்று சொன்னபோது, குறுக்கிடுகள் வந்தன. சிலருக்கு தொழில் வாய்ப்பு அதிகப்படுவதும், பரவலாக மாநிலங் களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்த முடியாத நிலையை உருவாக்குவதும் விரும்பத்தக்கதல்ல. இதனால்தான் தொழில் தேக்கம் ஏற்படுகிறது. இந்தக் கொள்கையை உருவாக்குவது மத்திய அரசு. ஆகவே மாநில அரசுகள் தங்களுடைய உரிமையை நிலைநாட்டப் போராட வேண்டும். போராடுவது என்பது சரியான நிலை இல்லை என்றாலும்கூட, நம்முடைய உரிமையைப் பெற நாம் போராடத்தான் வேண்டும். இந்த அரசு இப்படிப்பட்ட பிரச்சினை களை முன்வைத்துப் போராடாமல் இருக்கிறது. போராட்டம் என்று சொன்னால், கட்சிப் போராட்டத்தை நான் சொல்லவில்லை. அரசு என்கிற வகையிலே, மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய சலுகைகளுக்காக, உரிமை களுக்காக தமிழ் நாட்டு சட்டமன்ற அவைகளில் உள்ள கட்சிகளின் ஆதரவைப் பெற்று போராடுவதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அது தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு, பொருளாதார வளத்திற்கு உதவும். அப்படிப்பட்ட அணுகுமுறையை இந்த அரசு கொள்ளவில்லை.

சென்ற ஆண்டு பேசும்போது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள், "தொழில் துறை என்பது பொது மக்கள் தொடர்பு கொள்ள வேண்டிய துறை. அந்தத் துறையை சந்தர்ப்பவசமாக முதலமைச்சர் அவர்களே கவனித்து வருகிறார்கள். ஆனால் அவர்களைச் சந்திப்பதே கடினமாக இருக்கிறது." என்று சொன்னார்கள். தொழில்



துறையில் உள்ள அவரே அப்படிக் குறிப்பிட்டார். தொழில் கொள்கை என்றால், தூத்துக்குடியில் ஆல்கலிக் தொழிற்சாலை, கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவற்றை ஏற்படுத்துவது மட்டும் மகத்தான சாதனை என்று திருப்திப்பட்டுவிடக்கூடாது. நம்முடைய மாநிலத்தில் மேலும் பல வாய்ப்புகள் இருக்கின்றன. அதையும் பயன்படுத்த வேண்டும். நம்முடைய மாநிலத்தில் உப்பு வளம் அதிகம். சென்ற ஆண்டு பேசும்போது, "உப்பு நிறைந்துள்ள கூடலூர் பகுதியிலிருந்து வருவதால் சொல்லவில்லை" என்று சிறிது நயமாகச் சொல்லி நம் மாநிலத்தில் உள்ள நீண்ட உப்பளம் பகுதியைப் பயன்படுத்த "சால்ட் பேஸ்ட் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ்" ஏற்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தினேன். ஆகவே இந்த மாதிரியான விஷயத்தில் அரசு கவனம் செலுத்த முன்வர வேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 4.50)

நம்முடைய மாநிலத்திலே நாம் உபயோகிக்கின்ற பல பொருள்கள், வேஸ்ட்ஸ், சேதாரம் ஆகின்ற பொருள்கள், வீணாக ஆகின்ற பொருள்கள் என்று சொல்கின்றோமே, அந்தப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கு ஆராய்ச்சி முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். மாநில அரசு தொழில் நுணுக்க ஆராய்ச்சியில் ஈடுபட முடியுமா என்று கேட்க வேண்டிய அவசியமே இல்லை. நாமும் செய்யலாம். மாநில அரசினர் நம்முடைய விஞ்ஞானிகள், நம்முடைய தொழில் நுணுக்க நிபுணர்களைக் கொண்டு, அந்தத் துறையிலே ஒரு பல்கலைக்கழகமே வைத்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் என்று வைத்திருக்கிறார்கள். அதன் மூலமாக ஆராய்ச்சி செய்து, அதற்கும் தொழில்களுக்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்தலாம். எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஆராய்ச்சித் துறையில் கவனம் செலுத்த வேண்டும். பாடம் சொல்லித் தருவது மட்டும் போதுமானது அல்ல. அவர்கள் ஆராய்ச்சிகள் செய்தால்தான், பல்கலைக் கழகம் என்பதற்குப் பொருள் உண்டு, உண்மையுண்டு. வெறும் பாட போதனைகள் வழங்குவதால் மட்டும் பல்கலைக் கழகங்கள் பயன்தர மாட்டாது. எல்லா நாடுகளிலேயும் இதைத் தான் செய்கிறார்கள். பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சிக்கும், தொழில் களுக்கும் உள்ள இணைப்பு இருக்கிறதே அதை நாம் நிச்சயமாகப் பலப்படுத்த வேண்டும். அதிலே மாநில அரசு கவனம் செலுத்த வேண்டும். மெக்சிகோ விலே இருப்பதைப் பார்க்கிறோம். கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்வதற்கான தொழிற்சாலைபற்றிக் கேட்டு வந்தார்கள். மெக்சிகோவில் கீழே தூக்கி எறியப்படுகின்ற பேப்பர், குப்பை கூளங்களில் போடுகின்ற காகிதத்தை வைத்துக்கொண்டு 10 வருடங்கள் தாங்கக்கூடிய ஒருவிதமான கூரைத் தகடைத் தயாரிக்கிறார்கள். இதுபோன்று நம்முடைய மாநிலத்தில்

பல பொருள்கள் வீணாகப் போய்க்கொண்டிருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தலாம். அந்த முறையிலே நாமும் ஆராய்ச்சி செய்து, அவைகளைப் பயன்படுத்தி, புதிய தொழில்களை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படுத்துவதற்கும் வழிவகை செய்ய வேண்டும். விஞ்ஞான நுணுக்கத்தையும் தொழில் நுணுக்கத்தையும் சேர்த்து தொழில் வளர்ச்சியை மேம்படுத்தக்கூடிய முறையிலே மாநில தொழில் கொள்கை மாறுதல் அடைய வேண்டும்.

இதுபோன்று தொழிலாளர்கள் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டேன். தொழிலாளர்கள்பற்றிச் சொல்லும்போது, தொழிற் சங்கங்கள் ஸ்ட்ரைக் நடத்துவதிலே குறிப்பிடுகின்ற பிரச்சினைகளை நிர்வாகம் காலத்திலே தீர்க்க வேண்டும். அதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு பிரச்சினை என்று எழுந்தால், காலத்தில் அரசு தலையிட்டுத் தீர்க்க வேண்டும். அப்படிச் செய்தால் பல சேதாரங்களைத் தடுக்கலாம். "a stitch in time saves nine." என்று ஒரு பழமொழி. அதைச் சொல்லும்போது, நன்றாகத்தான் இருக்கிறது. அதுவே அரசுக் கொள்கையாக நிர்வாகத்திற்கு வரும்போது கஷ்டமாக இருக்கிறது. காரணம் அரசினுடைய கொள்கைக்கும் நிர்வாகத்திற்குமிடையே இணக்கமே மிகக் குறைவாக இருக்கிறது. அவைகளுக்குள் இணக்கமே இல்லை. இது ஒரு முக்கியமான, ஆபத்தான விஷயம். தொழிலாளர்கள் இலாகா கடந்த 2½ ஆண்டுகாலமாகக் கடைப்பிடிக்கும் முறைகள் சரியாக இல்லை. தொழிலாளர் இலாகா எப்படி நடந்து வந்திருக்கிறது? சட்டபூர்வமாக நடக்கவே இல்லை. இதற்கு முன்னால் இரண்டு ஆண்டுகளாகவே நான் பல முறைகள் குற்றம் சாட்டியிருக்கிறேன். அதை வைத்துப் பரிசீலனை செய்தால், இப்படிப்பட்ட தவறுகளை ஓரளவுக்காவது தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது விவசாயம். இந்த உரையில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது? விவசாயக் கொள்கையிலே, எப்படி அரிசிக்கும், கோதுமைக்கும் கையிருப்பு வைத்திருக்கிறார்களோ, அதுபோன்று விவசாயத்திற்குத் தேவைப்படுகின்ற உரம், பூச்சி மருந்துகள் போன்றவைகளுக்கும் ஸ்டாக் வைத்திருக்க வேண்டும். அது விவசாய அவுட்புட்ஸ். விவசாய விளைபொருள்களை ஸ்டாக் வைத்திருக்கிறார்கள், ஆனால் விவசாயத்திற்கு தேவைப்படுகின்ற இன்புட்ஸ் இருக்கிறதே, உள்ளிடும் பொருள்கள், அவைகளுக்கு மத்திய அரசு ஸ்டாக் வைக்கவில்லை. அப்படி வைக்கவில்லை என்று சொன்னால், இந்த அரசின் கொள்கையிலே ஒரு மாறுதல் வேண்டும். ஏதோ நம் மாநிலத்தில் உள்ள விவசாயிகள் மற்ற மாநிலங்களில் உள்ள விவசாயிகளை விட, சுமார் 8 லட்சம் பம்புசெட்டுகள் அதிகமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இன்னொன்று, அத்துடன் நிலத்தடி நீரையும் பயன்



படுத்துகிறோம் என்றும் சொல்கிறார்கள். அப்படித் திறமையாக உழைக்கக்கூடிய நவீன விவசாயிகள் நிறைந்த இந்த மாநிலத்திலே அவர்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களுடைய உழைப்பைக் கொண்டு கரும்பு, பஞ்சு, கடலை போன்ற பொருள்களைக்கூட உற்பத்தி செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பரிசு கிடைக்கும்? அவர்கள் கடனாளி ஆகியிருக்கிறார்கள். அவர்கள் கடனைத் தீர்ப்பதற்கு நம் மாநில அரசு மத்திய அரசுடன் போராடும் முயற்சிகளை சரியாக எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறது. அதற்குப் பதில் விவசாயிகள் மீதுதான் தாக்குதல் செய்தது. அதன் விளைவு என்ன? அதனால் அந்த விவசாயிகள் அரசுக்கு எதிராகவே இருக்கிறார்கள். பரந்த பகுதியிலே விவசாய உற்பத்தி அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தக் கொள்கையிலே மாறுதல் வேண்டும். இந்தக் கடன்களை ரத்து செய்வதாகக் குறிப்பிட்டாலுங்கூட, வேறு பல கடன்கள் இருக்கின்றன. அவைகளையும் ரத்து செய்வதற்கு ரிசர்வ் வங்கியை அணுகி அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றொன்று இதற்கு என்று ட்ரிப்யூனல் ஒன்றாவது ஏற்படுத்த வேண்டும். எல்லோருக்கும் கஷ்டம். வெட்டிய கிணற்றில் நீர் இல்லை, கிணற்றில் நீர் இருந்தது. வற்றிப்போய் விட்டது. இப்படிப்பட்ட பல்வேறு விதமான பிரச்சினைகள் இருக்கலாம். சில பேர்களால் கட்ட முடியாமல் இருக்கும். அவர்களுக்கு என்ன தவணை கொடுக்கலாம் என்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதற்கு என்று ஒரு ட்ரிப்யூனல் போட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விவசாயிகள் தங்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லலாம். எந்த எந்தப் பகுதிகளில் என்னென்ன செய்ய வேண்டும், எத்தனை தவணைகள் தர வேண்டும் என்ற நிலைமைகளை அறியலாம். அந்த ட்ரிப்யூனல் மூலமாக, ஒரு பெரிய தொகை செலுத்த வேண்டியிருந்தால், அவருக்கு தவணைகள் தருவதுபற்றி விசாரிக்கலாம். அப்படி அவர்களுடைய வேண்டுகோளை, கோரிக்கைகளை வைத்துப் பரிசீலனை செய்வதற்கு வேண்டிய வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அது இருந்தால்தான் விவசாயிகளுடைய பகை உணர்ச்சியை, குரோத உணர்ச்சியை இன்று மாற்ற முடியும்.

தமிழ் நாட்டில் கச்சா பொருள்கள், கரும்பு, கடலை, பருத்தி இவைகளை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஆர்வத்தோடு விவசாயம் செய்தால்தான், தமிழ் நாட்டின் பொருளாதாரம் முன்னேற முடியும். அவர்களைத் திருப்தி பண்ணாமல் இருக்கக் கூடாது. எனவே அந்தக் கொள்கையில் மாறுதல் தேவை. மற்ற கொள்கைகளிலே காட்டக்கூடிய மாறுதலை இதிலேயும் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான், இந்த அரசுக்கு விஸ்தாரமான அடிப்படை நாட்டிலே உருவாக முடியும்.

அடுத்து, காவல் துறைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். காவல் துறை மிகப் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. நான் உண்மையைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், அது சீர் குலைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இதைச் சொல்லும்போது, அரசுக்குக் கோபம் வரக்கூடாது. தலைமை அதிகாரிகள் என்ற இடத்தில் 4, 5 பேர்கள் இருக்கிறார்கள். இன்றைக்குக் காவல் துறையைச் சேர்ந்த காவலாளிகள், அவர்களுக்குள்ள உரிமையைக் கேட்கும்போது, அவர்கள் உரிமைகள் மறுக்கப் படுகின்றன. இதற்கு வெளிப்படையான அடிப்படை இருக்கிறது. ஒரு சாதாரண காவல் நிலையத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதன் மீது ஏற்படக் கூடிய நிர்ப்பந்தங்கள் எவ்வளவு இருக்கின்றன ? அங்கே நடக்கக்கூடிய தவறுகளை, குறைபாடுகளை, ஒரு நாளில் நடப்பதை யாரையாவது கொண்டு பரிசீலிக்கலாம். ஒரு சி.ஐ.டி.யைக் கொண்டு அல்ல. கிரைம் பிராஞ்சைக் கொண்டு அல்ல. அரசியல் அனுபவமுள்ள, பொது வாழ்க்கையில் அக்கறையுள்ள யாராவது ஒருவரை மறைவாக விசாரிக்கச் சொல்லுங்கள். கள்ளச் சாராயம், விபச்சாரம், சூதாட்டம், திருட்டு இதிலே எல்லாம் சம்பந்தப்பட்ட சக்திகள் இன்றும் தமிழ் நாட்டிலுள்ள சகல காவல் நிலையங்களிலும் இருக்கின்றன. அந்த அளவுக்கு ஒரு காவல் நிலையம் சீர்குலைக்கப் பட்டிருக்கிறது. இது கீழே மட்டுமல்ல. மேலேயும் இருக்கிறது. அதிகாரிகள் நாட்டிலுள்ள அரசியல் நிலைகளைப் பார்த்து சில விளையாட்டுக்களையும் விளையாடக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. சென்னையிலே நடந்த பல கொலைகள் என்ன ஆயிற்று ? தமிழகத்திலே பல இடங்களிலே நடந்த திருட்டுக்கள் என்ன ஆயிற்று ? ஒரு சாதாரண குடிமகன் ஒரு காவல் நிலையத்திற்குப் போய் புகார் கொடுத்து திருட்டுப்போன பொருளைத் திரும்பப் பெறுவதற்கு நம்பிக்கையில்லை. அது இந்த இரண்டரை ஆண்டுகளில்தான் ஏற்பட்டதாக நான், சொல்லவில்லை. அது தொடர்ந்து வளர்ந்திருக்கிறது. அது தீவிரமாக ஆகியிருக்கிறது. ஆகவே இதிலே உள்ள அதிருப்தியான நிலைமைகளைப் பார்த்து, குறைகளையெல்லாம் நிவர்த்திக்க வேண்டும். முதல்படியாக இதைச் செய்ய வேண்டும். காவல் துறையில் ஈடுபட்டது சரியா, தவறா என்பதல்ல பிரச்சினை. அதனால் ஒழுங்கு கெட்டுப்போய் விட்டது என்று சொல்லலாம். அதனால் பல காவலாளிகள் பல கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் விஷயத்திலே அரசு நிதானமாக நடந்து, அவர்கள் அனைவருக்கும் திரும்ப வேலை கொடுக்க வேண்டும். இல்லா விட்டால் ஒரு மாவட்டத்தில் நடந்ததைச் சொல்கிறேன். நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. ஒரு மாவட்டத்தில் காவல் துறையிலே உள்ள ஒரு சாதாரண காவலாளி இரவு பகலாக வேலை செய்து வருகிறான். அந்தத் துறையிலே மது விலக்குத் துறை அதிகாரி பல லட்ச ரூபாய் செலவு செய்து பங்களா கட்டியிருக்கிறார், கார் வாங்கியிருக்கிறார். இதையெல்லாம் அந்தக்



காவலாளி பார்த்துக்கொண்டிருக்கிறான். வேலை செய்வது அவன். வீடு கட்டுவது இவன். இப்படித்தான் காவல் துறை இருக்க வேண்டுமா ? இதில் புலனாய்வு தேவை. காவலர்கள் விஷயத்தில் பழி வாங்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அதனால் அரசினுடைய மதிப்பு உயருமே தவிர வேறல்ல. காவலர்கள் நம்பிக்கை வளரும். அந்தக் காவல் துறை சீர்படும். காவல் துறை திறம்படச் செயல்படுவதற்கு நிச்சயமாக இந்த ஆண்டில் செய்ய வேண்டிய நல்ல நடவடிக்கைகளை எடுத்து ஒரு நல்ல எண்ணத்தை உருவாக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒரு முக்கியமான அம்சத்திற்கு நான் வருகிறேன். மத்திய மாநில அரசு உறவு இணக்கமாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற 1977 ஆம் ஆண்டில் குறிப்பிட்டதை நினைவுபடுத்தியிருக்கிறார்கள். 1977-ல் ஒரு மாற்றம் ஏற்பட்ட போது என்ன குறிப்பிட்டார்களோ அதை ஆளுநர் உரையில் இன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1977 நிலைமை வேறு. 1980 தொடக்கத்தில் நிலைமை வேறு. கட்சி மாறியிருக்கிறது. மத்திய மாநில அரசு உறவிலே அரசியல் பிரச்சினைகள் மட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு இந்த மாநில மக்களுடைய நம்பிக்கையும் இணைந்திருக்கிறது. வீட்டுக்குப் போங்கள், ராஜிநாமா செய்துவிட்டுப் போங்கள் என்று கேட்கலாம். கலைத்து விட்டுப் போங்கள் என்றும் கேட்கலாம். இதிலே இன்னொன்று சொல்கிறேன். கேளுங்கள். மத்திய அரசே தொடர்ந்து 5 ஆண்டுகள் இருக்குமா என்பது கூட பிரச்சினையாக இருக்கிறது. காரணம் நம்முடைய இந்திய சமுதாயம் தொடர்ந்து தொல்லைக்குட்பட்டதாக இருக்கின்றது. 2½ ஆண்டுக் காலம் கழித்து நாடாளுமன்றத்திலே நெருக்கடி ஏற்பட்டது. அதனால் பாராளு மன்றம் நீடிப்பதற்கு என்ன உத்தரவாதம் ? நாட்டின் பிரதமர் உத்தரவாதம் தர முடியுமா ? அல்லது அவர் கட்சிதான் உத்தரவாதம் தர முடியுமா ? இப்போதே அங்கே அமைச்சரவை முழுமையாக அமைக்கப்படவில்லை. அரைகுறையாகத்தான் இருக்கிறது. அந்த அளவுக்கு இருப்பதால், நம்மு டைய நண்பர் திரு. நல்லசிவன் அவர்கள் வேறு வழியில் போனால், நான் வேறு சில விவரங்களுக்குப் போகிறேன். மத்திய அமைச்சரவையில் தொழி லும் நிதியும் ஒரே அமைச்சரிடம் இருக்கக்கூடாது. அதாவது தொழில் துறை யையும் நிதித் துறையையும் ஒரே அமைச்சரே சமாளிக்க முடியாது. இவ் வளவு பெரிய மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். அப்படி இருந்தும், முழுமையாக அமைச்சரவையே அமைக்கப்படவில்லை. அங்கே தான் விஷயம் அடங்கியிருக்கிறது. அது மட்டுமல்ல. இன்னும் பல பிரச்சி னைகள் வந்திருக்கின்றன.

அடுத்து, தொழில் கொள்கைகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இனிமேல் பட்ஜெட் வரும்போது பார்க்கலாம். நாட்டினுடைய தலைவர், ஜனாதிபதி அவர்கள் அவருடைய உரையிலே எப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள்? விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு இந்த அரசு பாடுபடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஆளுநர் அவர்கள் உரையில் மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்கள். இந்த அவையிலே கூட முன்னால் பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பஞ்சாலைத் தொழிலாளர்கள்பற்றிக் குறிப்பிட்டார்கள். பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டத்தினால் விலை ஏறிவிட்டது என்று சொன்னார்கள். பொருளாதார விஷயங்களைப் பொறுத்து, கணக்குத் தெரிந்தால் மட்டும் போதாது. அதுவே உண்மையாக இருக்க முடியாது. அதிலுள்ள விவரங்களை, ஆதாரங்களைப் பரிசிலனை செய்து பார்க்க வேண்டும். நூலுக்கு விலை ஏறிவிட்டது. ஆனால் பஞ்சு உற்பத்திக்கு அதைச் செய்த விவசாயிக்கு விலை கிடைக்கவில்லை. வாங்குகின்றவர்களுக்கு துணி மலிவாகக் கிடைக்கவில்லை. உற்பத்தியாளருக்கும் உபயோகிப்பவர்களுக்கும் நல்ல விலையில்லை. அவர்கள் கொள்ளையடிக்கப்படுகிறார்கள். ஆனால் பஞ்சாலை முதலாளிகள்தான் நல்ல விலை, லாபம் அடைகிறார்கள். இது ரிசர்வ் வங்கியின் விவரங்களிலிருந்து தெரிகிறது. அவர்கள் சூப்பர் பிராபிட்ஸ் அடைகிறார்கள் என்று தெரிகிறது. அவர்களுக்கு சூப்பர் பிராப்பிட்ஸ், டெக்ஸ்டைல்ஸ், பார்மசூட்டிகல்ஸ், சுகர், ஆயில் போன்ற பொருள்களில் கிடைக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஏன் அப்படி நடக்கிறது என்று பார்க்காமல்,

(மாற்றுத் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனம் தலைமை)

(பிற்பகல் 5-00)

தொழிலாளி போராடுகிறான், அதனால் நூல் விலை ஏறிவிட்டது என்று முழங்காலுக்கும், மொட்டை தலைக்கும் முடிச்சுப் போடுவது நல்லதல்ல. மத்திய அரசு தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் இன்னும் கொள்கையை உருவாக்கவில்லை. அந்தக் கொள்கை வந்து, இன்னும் பல பிரச்சினைகள் வரும்போது, அந்தக் கட்சியில் முரண்பாடு எப்படி இருக்குமென்பதைப் பார்க்க வேண்டும். ஒரு கட்சி, ஒரு தலைவர் என்று போகலாமே தவிர, இந்திய நாட்டில், மத்திய அரசு ஸ்திரமாக இருக்குமென்று சொல்ல முடியாது. 1977-ல் ஏன் போனார்கள், இப்போது ஏன் வந்தார்கள்? ஜனதா ஏன் உடைந்தது? ஒரு தேர்தலில் கிடைக்கும் வாக்குகளை வைத்து, அரசியல் நிகழ்ச்சிகள் அத்தனையையும் நிராகரித்தால் அது சரியாகாது. மத்திய அரசு இன்னும் ஓராண்டுக்குள் சிக்கலாகிவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகையில் வராத செய்தியாக இருந்தாலும், ஒரு நம்பிக்கையான தகவலைத் தருகிறேன்.





"We have raised many hopes. I do not know how to solve all tl
problems."
இது பொறுப்பு வாய்ந்த ஒருவர் சொன்னது. "அதிக நம்பிக்கை
உண்டாக்கிவிட்டோம். எல்லாப் பிரச்சினைகளையும் எப்படித் தீர்க்
போகிறோம்?" என்கிறார். இருக்கின்ற பிரச்சினைகளில் ஒன்று வேலை
யின்மை, மற்றொன்று விலைவாசியைக் கட்டுப்படுத்துதல். இவை ப
யாரிட்டமல், வேலையின்மையைப் போக்குதல் என்பது முடியாது. குறைக்
வேண்டும். இரண்டாவது, விலைவாசியைக் கட்டுப்படுத்துதல். அது சுலபமா
இருபது அம்சத் திட்டம் மீண்டும் அமல் நடத்தப்படும். அடுத்து 'பவர்
விலையைக் குறைக்க வேண்டுமென்றால், தொழிற் சாலைகள் அதிகம் தேவை
அதற்கு மின்சாரம் அதிகம் தேவை. விலைவாசியைக் குறைக்க வேண்
மென்றால், விவசாயிகளுக்கு என்ன கொடுப்பாய்? தொழில் முதலாளிகளுக்
என்ன கொடுப்பாய்? பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மையமான மூ
வேரை மத்திய அரசும், நம்முடைய அரசும் பிடித்து ஆட்ட வேண்டியிரு
கிறது. அதை இந்த அரசுகள் எப்படி அடையுமென்பதைப் பார்க்
வேண்டும். அதையெல்லாம் செய்யாமல், அதிகாரத்தை மட்டும் வைத்து
கொண்டு மாநில அரசுகளைக் கலைக்க முனைந்தால், இந்த நாட்டின் ஜன
நாயகம் குலையும். குடியரசுச் சட்டம் மத்திய அரசுக்கும், மாநில அரசு
களுக்கும் என்ன உறவு இருக்க வேண்டுமென்று சொல்லுகிறதோ, அதை
மத்திய அரசு செய்யத் தயாராக இல்லை. எனவே குடியரசுச் சட்டம் வலி
யுறுத்தக்கூடிய, நமக்கு என்று ஒரு குடியரசு ஏற்படுத்தி, நாமே ஒரு குடி
யாகச் சட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறோம். பெருமையாகச் சொல்லி
றோம். அதுதான் நம்முடைய குடியரசுச் சட்டத்தினுடைய துவக்க வாச
கமே. ஆனால் இன்று அந்த ஜனநாயகத்திற்குக் குழி பறிக்கப்படுகிறது.
அதன் விளைவு என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இரண்டு
குரல்கள் இருக்கின்றன. ஒன்று, மாநில அரசுகளுக்கு அதிகாரம் அதிகம்
வேண்டுமென்பது. அதிக அதிகாரம் என்று சொல்லும்போது, அதிக நிதி
வசதி வேண்டும். இன்னொரு குரல் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வேண்
டாம், அதைக் குறைக்க வேண்டும் என்பதாகும். என்ன அதிகாரம் இருக்
கிறது, குறைக்க? அதைவிட, மாநில அரசுகளே வேண்டாம், கலைத்துவிடு,
கூட்டு அமைப்பு என்பது வேண்டாம், யூனிட்டரி கவர்மென்ட் போதுமென்று
தைரியமாகச் சொல்லுங்கள். அப்படி இல்லாமல் மாநில அரசுகளும்
இருக்கும், சட்டமன்றங்கள் இருக்கும்; ஆனால் அவர்களுக்கு அதிகாரங்களைக்
குறை என்றால் எப்படி? மத்திய அரசில் சகல அதிகாரங்களையும்
குவித்துக்கொண்டு, சகல நிதி வசதிகளையும் குவித்துக்கொண்டு, மாநில
அரசுகளைக் கலைப்பது சுலபம். ஆனால் ஆக்குவது சுலபமல்ல. இத்தனை
ஆண்டுகளாக மத்திய அரசிடம் இவ்வளவு அதிகாரங்கள் இருந்ததே.
இருந்தும் வறுமை ஏன் நாட்டில் அதிகரித்தது? வறுமையைக் குறைக்க

முடியாதா? அது மத்திய அரசின் முக்கியமான கடமையாயிற்றே. அதில்தான் மாநில அரசுகளின் ஒத்துழைப்பு மத்திய அரசுக்குத் தேவை. தொழில் கொள்கையில் என்ன கோளாறு? மத்திய அரசு தன் அதிகாரத்தை எதற்கோ பயன்படுத்துகிறதே தவிர, நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தவில்லை. அதில் கவனம் செலுத்தவில்லை. வந்த ஒரு மாதத்திற்குள்ளாக, ஜனதா அரசு மாநில சட்ட மன்றங்களைக் கலைக்க வில்லையா? சுப்ரீம் கோர்ட் செல்லவில்லையா? இன்று ஜனதாவைச் காட்டலாம், சுப்ரீம் கோர்ட்டைக் காட்டலாம். அவை இந்திய மக்களுடைய வரலாற்றில் கவனிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி பலம் பொருந்திய ராணுவம் வைத்திருக்கவில்லையா? காங்கிரஸ் இத்தனை ஆண்டுகள் ஆண்டதே. செல்வாக்கான, வலுவான ஆட்சி இருந்தது. என்னவாயிற்று? எனவே செல்வாக்கான, வலுவான ஆட்சி இருந்தது. என்னவாயிற்று? எனவே எல்லாம் இந்திய மக்களுடைய வரலாற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. மாநிலங்களுக்குத் தேர்தல் நடந்தால், பழைய போக்கே வருமென்று சொல்ல முடியாது. இப்போது காங்கிரஸ் கட்சிக்கு அவ்வளவு மெஜாரிட்டி கிடைக்கக் காரணம், அண்டை நாடுகளிலே ஏற்பட்டுள்ள குழப்பமான பிரச்சினைகள்தான். மேலும் நம்முடைய நாட்டிலே மத்தியிலே பலமான அரசு இல்லை. அதனால் ஒரு பலமான அரசு வேண்டுமென்று மக்கள் வாக்கு அளித்தார்கள். மேலும் நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய உள் நாட்டுப் பிரச்சினைகள் வேறு இருக்கின்றன. தங்கம் விலை ஏறியது, வெங்காயம் விலை ஏறியது. ஒரு வெங்காயம் பத்து பைசா என்று காட்டி, ஓட்டுக்களை வாங்கிக்கொள்ளலாம். ஆனால் தங்கத்தின் விலையை திருமதி இந்திரா காந்தி அவர்கள், பிரதமர் அவர்கள், மத்திய அரசு மட்டும் குறைத்துவிட முடியாது. அது உலக ரீதியாக தங்க மார்க்கெட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை. எளிமையான முறையில் வாக்குத் திரட்டுவது என்பது வேறு. எனவே மத்திய அரசு இன்றைக்கு ஒரு மாநில அரசைக் கலைத்தாலும், நாளைக்கு அது திண்டாடும். அதை யாரும் காப்பாற்ற முடியாது. குடியரசுச் சட்டத்தில் மாநில அரசுகள், மத்திய அரசுக்குள்ள உறவை இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, இன்றைக்கு மத்தியில் உள்ளவர்கள் மாநில அரசுகளைக் கலைக்க நினைத்தால், இந்த சக்திகள் ஒன்று சேர்ந்து மத்திய அரசைக் கலைக்கும். அதனால்தான் அங்கேகூட சிந்தனை என்னவென்றால், கலைத்தால் பலன் இல்லை, அது எல்லோரையும் ஒன்று சேர்த்துவிடுமா அல்லது கலைக்காமல் இணக்கத்தைக் காட்டலாமா என்ற உத்திகள்பற்றிப் பேசப்படுகின்றன. கலைப்பது என்பது அவ்வளவு சுலபமல்ல. மாநில அரசுகளின் ஒத்துழைப்பை மத்திய அரசு பெற வேண்டும். மாநில அரசும் தன்னுடைய மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி மத்திய அரசோடு வாதாட, நிர்பந்தப்படுத்த, தமிழ் மக்களை நம்பி, தமிழ் நாட்டு



மக்கள் நம்பிக்கை பெற்றுள்ள கட்சிகளை நம்பி முன்முயற்சி எடுத்தால், மாநில அரசு அதில் வெற்றி பெறும். அதை விட்டு மத்திய அரசுடன் இணக்கமான உறவு என்பது, அவர்களோடு நெருக்கமான உறவு காண்பதுதான் என்று சொன்னால், அது இணக்கமான உறவாகாது. காரணம், நம்முடைய மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்க வேண்டிய ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க மத்திய அரசு உதவியாக இருந்ததில்லை. அதில் நல்ல அணுகுமுறை வேண்டும். அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாநில வளர்ச்சிக்கு நம்முடைய மாநில அரசும், நம்முடைய மாநில சட்ட மன்றங்களும் நிச்சயமாக வாதாட வேண்டும். இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு வரக்கூடிய சகாப்தம் மக்களுடைய உரிமைகள் அதிகரித்து வருகிற காலம். 1977-ல் ஜனதா அரசைக் கொண்டு வந்த மக்கள், இன்று வேறு ஒரு கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு நடக்கக்கூடிய ஒவ்வொரு அரசியல் தவறுக்கும் தீர்ப்புக் கூற வேண்டியவர்கள் மக்கள். எனவே அவர்கள் நாளை இதையும் மாற்ற முடியும். இதுதான் இந்திய வரலாறு. தேர்தல் வரலாறு ஒரு புறம் இருக்கட்டும், இதுதான் இந்திய வரலாறு. மக்கள் நினைப்பதுதான் நடக்கும். அதிகாரம் உள்ளவர்கள் மட்டும் நிர்மாணிப்பது நடக்காது. எனவே மத்திய மாநில உறவுகளில் இணக்கம் வேண்டுமென்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதில் மத்திய அரசின் போக்கு மக்களுடைய வறுமையைப் போக்குவதாக இருந்தால், வேலையின்மையைப் போக்குவதாக இருந்தால், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால், மத்திய அரசோடு மாநில அரசுகள் இணக்கமாகச் செல்ல வேண்டும். அப்படி இல்லாமல் மத்திய அரசு, மாநில அரசுகளை மிரட்டுவது சரியாகாது. அந்த அணுகுமுறை மத்திய அரசுக்குக் கூடாது. எனவே இந்த ஆளுநர் உரையிலே இணக்கம் வேண்டுமென்று சொன்னால் மட்டும் போதாது, இணக்கம் கிடைக்காவிட்டால், அதைப் பெற முயற்சி எடுக்க வேண்டும். நிச்சயமாக இந்தியாவில் ஜனநாயகத்தை விரும்புகிறவர்கள், குடியரசுச் சட்டத்திலுள்ள உரிமைகளைப் பார்க்க வேண்டும்.

மாநில அரசுகளுக்கும் நிர்வாகம் இருக்கிறது. மாநில அரசின் நிர்வாகத்தின்கீழ் உள்ள ஒரு நகராட்சிக்குச் சென்றாலும் சரி, மாநிலத் தலைமைச் செயலகத்திற்கு வந்தாலும் சரி, குடிமக்களின் முறையீடுகளுக்கு மரியாதை இல்லை. எதற்கும் பதில் வராது. நியாயமான பிரச்சினைகளை முறையாக முறையிட்டாலும், பதில் வராது. அவை தீர்க்கப்படவும் இல்லை. சென்ற தேர்தலில் வாக்குச் சாவடியில் அரிசனச் சேரிகள் அறவே நீக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு யார் காரணம்? அரிசனச் சேரிகள் இன்றையதினம்

(பிற்பகல் 5-10)

அதவே புறக்கணிக்கப்படுகின்றன. வாக்காளர் பட்டியலிலிருந்து அவர்களுடைய பெயர்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய பெயர்கள் எல்லாம் 1977 ஆம் ஆண்டில் உள்ள வோட்டர்ஸ் லிஸ்டில் இருந்திருக்கின்றன. வெரிபிக்கேஷன் வந்தபோது நீக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்னமும் கூட சேரிகள் தாக்கப்படுகின்றன. இன்றைக்கும் கோவை மாவட்டத்திலுள்ள பொங்கலூர் என்ற பகுதியில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதுகுறித்து நான் முதலமைச்சருக்குத் தந்தி கொடுத்திருக்கிறேன். அரிஜனங்கள் அடித்து நொறுக்கப்படுகிறார்கள். நிர்வாகம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்காவிட்டால், எந்த அரசும் நல்ல முறையில் இயங்க முடியாது. நிர்வாகத்திற்கும் இந்த அரசுக்கும் என்ன பிணக்கம்? நிர்வாகம் அரசுடன் ஒத்துழைக்காவிட்டால், எந்த அரசும் நல்ல முறையில் செயல்பட முடியாது. ஆகவே நிர்வாகத்தை முதலில் சீர்படுத்த வேண்டும். ஏற்கெனவே நிர்வாகத்தை சீர்படுத்துங்கள் என்று பல தடவை இந்த அவையில் நான் பேசியிருக்கிறேன். எந்தத் துறைக்காவது சாதாரண குடிமகன் தனக்கு இருக்கும் குறைகளைத் தெரிவித்தால், அவனுக்கு எந்தப் பதிலும் வருவதில்லை. இந்திய அரசியல் சட்டம் சாதாரண குடிமகனுக்கு சில அடிப்படை உரிமைகளை வழங்கியிருக்கிறது. அந்தக் குடிமகன் ஏதாவது முறையீடுகளை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பினால், அவனுக்கு எந்தவித பதிலும் வருவதில்லை. இதுகுறித்து அரசு இனிமேலாவது கவனம் செலுத்த வேண்டும்.

வாக்காளர் பட்டியலிருந்து பெயர்கள் நீக்கப்பட்டது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மதுரையில் திரு. கே. டி. கே தங்கமணி அவர்களின் பெயர் நீக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் சென்னையில் திரு. சித்தன் அவர்களுடைய பெயர் அகற்றப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லாம் ஊர் பேர் தெரியாதவர்களா? இவைகள் எல்லாம் நிர்வாகத்திலுள்ள கோளாறுகள். இவை அதிகாரிகள் செய்கையால் மட்டும் ஏற்படுகிற கோளாறுகள் அல்ல. நிர்வாகக் கோளாறுகளை தயவுசெய்து சீர் செய்யுங்கள். எல்லாவற்றுக்கும் மக்கள் ஒத்துழைப்புத் தேவை. ஏதாவது குறைகளை மக்கள் முறையிட்டால், இந்த அரசு செவி சாய்ப்பதில்லை. அதற்குக் காரணம் அரசாங்கம் முறையிடுபவர்களைத் தவறாக நினைப்பது தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, கடைசியில் கட்டுப்படுத்த முடியாத நிலையில், ஏதாவது கிளர்ச்சி ஏற்பட்டால், அரசாங்கம் அவர்களை நசுக்குவது; ஒடுக்குவது எல்லாம் நல்லதல்ல. நிர்வாகம் அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தால், பல பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்க முடியும். நிர்வாகத்தைச் சீர்திருத்தங்கள் மக்களுடைய ஒத்துழைப்பை நாடுங்கள். நிர்வாக சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட விஷயத்திலும், மத்திய மாநில அரசுகள் இணக்கத்தைப் பொறுத்த





வரையிலும், இந்த அரசு தன்னுடைய போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். இந்திய அரசியல் அமைப்பிலுள்ள ஜனநாயகப் போக்கை யாராவது தகர்த்தால் அல்லது தகர்க்க முயற்சி செய்தால், அதை எதிர்த்து தமிழ் நாட்டு மக்கள் போராட ஒத்துழைப்பார்கள். தமிழ் நாட்டு மக்கள் மட்டுமல்ல, இன்றைக்கு இந்தியா பூராவிலும் உள்ள மக்கள் கூட சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள். வறுமையை நீக்க விரைவில் முயல வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஆளுநர் உரை வரும்போதும் இதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. தொல்காப்பியர் காலத்திலிருந்து கடைசியாக இராமலிங்க அடிகள் காலம் வரை இதையே திரும்பத் திரும்பச் சொல்லியாகிவிட்டது. ஆகவே இதைத் திரும்ப ஆளுநர் உரையில் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லி, நான் சொன்ன அனைத்து குறைபாடுகளையும் அரசு களைய வேண்டும், அரசினுடைய அணுகுமுறையை மாற்ற வேண்டும், அரசு நிர்வாக இயந்திரத்தை நல்ல முறையில் செயல்பட விட வேண்டுமென்று கூறி, அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாற்றுத் தலைவர்களே, இந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எனது கருத்துக்கள் சிலவற்றை இங்கே நான் சொல்ல முற்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலே மார்க்சிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு அருமையான வினாவை அவருடைய பேச்சினுடைய துவக்கத்தில் எழுப்பினார்கள். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 42 சதவிகிதம் வாக்குகளைப் பெற்ற ஒரு கட்சி இன்று இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இன்றுள்ள தேர்தல் முறையில் இதுதான் வழி, வேறு வழியில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். 42 சதவிகிதம் ஓட்டுகளைப் பெற்ற காங்கிரஸ் கட்சி இந்தியாவை நடத்துவதற்கு, ஆள்வதற்கு தகுதியில்லையென்று யாராவது கருதுவார்களேயானால், நான் இந்த ஆட்சியும் இங்கே நம்மை ஆள, தமிழ் நாட்டை நடத்திச் செல்ல, தகுதியற்ற ஆட்சி என்பதற்கான சில புள்ளி விவரங்களை எடுத்துச்சொல்ல முடியும். இந்திரா காங்கிரசானது 42 சதவிகிதம் ஓட்டுகளைப் பெற்றது. ஆனால் அன்றைக்கு நடந்த சட்டமன்றத் தேர்தலின் போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 52 லட்சம் வாக்குகளைப் பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் 42 லட்சம் வாக்குகளைப் பெற்றது. ஜனதா கட்சி 27 லட்சம் வாக்குகளைப் பெற்றது. இதர கட்சிகள் பத்து லட்சம் வாக்குகளைப் பெற்றன. அப்படிப் பார்த்தால் 35 சதவிகிதமே வாக்குகளைப் பெற்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தமிழ் நாட்டிலேயிருந்து கொண்டு ஆட்சி செய்ய எந்த விதத்திலும் தகுதியில்லை என்று என்னால் கூட வாதிட முடியும். இன்றுள்ள தேர்தல் முறையே இது

தான் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டார்கள். இதைத் தவிர வேறு வழி இல்லையென்றும் சுட்டிக்காட்டினார்கள். இதைத்தான் நாங்கள் அன்றைக்கே சொன்னோம். 42 லட்சம் வாக்குகளைப் பெற்று 48 இடங்களை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியது. ஆனால் அதேநேரத்தில் 52 லட்சம் வாக்குகளைப் பெற்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 120 இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது என்று அன்றைக்கே நாங்கள் சொன்னோம். நாங்கள் அன்றைக்கு அப்படிச் சொன்ன நேரத்தில் யாரும் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அதை அலட்சியப்படுத்தினார்கள். எங்களை அவமானப்படுத்துவதுபோல் பேசினார்கள். இன்றையதினம் அதே கணக்குகளை இன்றைய ஆளும் கட்சியின் தரப்பிலிருந்து சொல்லும்போது, நான் உள்ளபடியே உங்கள் மீது ஆத்திரப்படவில்லை. உங்களைப் புண்படுத்தவும் விரும்பவில்லை.

எங்கள் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் கூட ராஜிநாமா செய்யுங்கள். ஏன் இன்னும் இருக்கிறீர்கள், மானம், சூடு சொரணை இல்லையா என்றெல்லாம் கூட கேட்டார்கள். அப்படி அவர்கள் கேட்டதற்காக நீங்களெல்லாம் வருத்தப்பட்டீர்கள். நான் கூட உள்ளபடியே வருத்தப்படுகிறேன். ஆனால் அதே நேரத்தில் அப்படி அவர்கள் பேச வேண்டிய அவசியம் உள்ளபடியே யாரால் எதற்காக ஏற்பட்டது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். எங்களுக்கு அப்படிப் பேச வேண்டுமென்ற எண்ணம் உள்ளபடியே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்கு இருக்கிற வருத்தமெல்லாம் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசும்போது ஆத்திரப்பட்டீர்களே, திரு. கோ. சி. மணி அவர்கள் இப்படிப்பட்ட வாசகங்களைச் சொல்லும்போது அலறுகிறீர்களே, இப்படிப்பட்ட வாசகங்களை எங்களுக்குக் கற்றுக் கொடுத்தது யார் என்பதை ஒரு நிமிடமாவது எண்ணிப் பார்த்தீர்களா ? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, 1973 ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் ஒரே ஒரு இடத்திற்கான இடைத் தேர்தல் நடைபெற்றது. இங்கே 170 திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்துகொண்டிருந்தார்கள். நாங்கள் ஒரே ஒரு இடத்தில் தோற்றோம். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவர் உடனே அன்றைக்கு என்ன சொன்னார் ? தென்னகம் பத்திரிகையில் வந்த செய்தியைச் சொல்கிறேன். "கருணாநிதி சர்க்காருக்கு 4½ கோடி மக்கள் தீர்ப்பு அளித்துவிட்டார்கள். இந்த இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிட்ட காரணத்தால், இந்த அராஜக, லஞ்ச ஊழல் உள்ள அரசு மக்களின் திட்டவட்டமான தேர்தல் தீர்ப்புக்குப் பிறகு, ஒரு வினாடி கூட பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க எந்தவிதத் தேவையோ அருகதையோ இல்லை" என்று தென்னகம் பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டார்கள்.



இவ்வாறு அறிக்கையை வெளியிட்டவர், இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொன்னவர் இன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள். அன்றையதினம் நாங்கள் ஒரே ஒரு தொகுதியில் தோற்றதற்காக அப்படிச் சொன்னார்கள். இன்றைக்கு 38 தொகுதிகளிலும் தோற்றிருக்கிறீர்களே, உங்களுடைய தலைவரை விட வயதிலேயாகட்டும் அல்லது அனுபவத்திலேயாகட்டும் குறைந்தவர்களான திரு. தங்கப்பாண்டியன், திரு. கோ. சி. மணி போன்றவர்கள் அப்படிக் கேட்பதிலே என்ன தவறு இருக்க முடியும் ?

திரு. நல்லசிவன் ஆளும் கட்சிக்குச் சாதகமாக வாதாடினார்கள். அதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். காரணம் திரு. நல்லசிவன் தமிழ் நாட்டிலே தான் இருக்கிறார். திடீரென்று தமிழகத்திற்கு வேறிடத்திலிருந்து அவர் வந்துவிடவில்லை. அவருடைய மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திண்டுக்கல் தொகுதியில் நாங்கள் தோற்றபோது என்ன சொன்னார் என்பதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 23—5—1973 அன்று அவருடைய அறிக்கை தென்னகம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. இதை அவையினர் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகப் படிக்கிறேன். "அரசியல் சட்டத்தை மேற்கோள் காட்டி முதலமைச்சர் கருணாநிதி 5 ஆண்டுகாலம் அதிகாரத்திலே நீடிக்க, பதவியிலே இருக்க அவருக்கு உரிமையுண்டு என்று அவர் கூறுவதன் மூலம் தமிழக மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை நிராகரித்துள்ளதை மறுக்க முடியாது. முதலமைச்சர் கருணாநிதிக்கு வெட்கமும் அரசியலில் நாணயமும் சிறிதேனும் இருக்குமானால் முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்து விட்டு, சட்டசபையைக் கலைத்து விட்டு, மக்களின் தீர்ப்பைக் கோர முன்வர வேண்டும்" என்று அன்றையதினம் அறிக்கை விட்டார்கள். ஒரே ஒரு தொகுதியில் நாங்கள் தோற்ற உடனேயே அன்றைக்கு தமிழகத்திலிருந்து அரசியல் கட்சிகள் எல்லாம் இப்படி அறிக்கை வெளியிட்டன. ஒரே ஒரு திண்டுக்கல் தொகுதியில் தோற்ற உடனே அதை 4½ கோடி மக்களின் தீர்ப்பு என்று சொன்னீர்களே, இன்றைக்கு உண்மையிலேயே 4½ கோடி மக்களும் உங்களுக்குத் தீர்ப்பு அளித்திருக்கிறார்களே, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள் ? நாங்கள் சொல்லக் கூடாது என்று சொல்லுகிறீர்கள். நாங்கள் கேட்கவில்லை, கேட்க விரும்பவுமில்லை. தயவுசெய்து நீங்களே நினைத்துப் பாருங்கள். இங்கே கருத்துக்களை உறுப்பினர்கள் சொல்லும்போது, அவை முன்னவர் மாண்புமிகு திரு. இராசா முகமது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "பரமசிவன் கழுத்தில் இருந்துகொண்டு கருடா சௌக்கியமா என்று பாம்பு கேட்டதாம்" என்பதை இங்கே நினைவுபடுத்தினார். ஆனால் அந்தக் கருத்தை அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் தங்கள் மனதில் பதிய வைக்க வேண்டும்.

தால் தான், உங்களுக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. நீங்கள் பேசிய பேச்சுக்களையும், செய்த எக்காளங்களையும் எளிதில் மறந்துவிட முடியுமா? இந்த 2½ வருடத்தில் நீங்கள் என்னென்ன செய்துகொண்டிருக்கிறீர்கள். எப்படி எப்படி ஆட்சியை நடத்திச் செல்லுகிறீர்கள் என்பதையெல்லாம் நாங்கள் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம். இங்கே பல்வேறு கருத்துக்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். முதலமைச்சர் வாயால் ஒரு கருத்தைச் சொன்னார். விவசாயிகள் போராட்டம் நடத்தியபோது, பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று சொன்னார்

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 5-20)

கள். ஏதோ விவசாயிகள் என்பவர்கள் பொதுமக்களுக்கு அப்பாற்பட்டவர்கள் போல, தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினால், பொதுமக்கள் சும்மாவிடமாட்டார்கள் என்று சொன்னீர்கள். ஏதோ தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் விரோதம் இருப்பது போல அப்படிச் சொன்னீர்கள். அரசாங்க ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் அதிகார வர்க்கம் இருக்கிறது, பார்த்துக்கொள்ளும் என்று சொன்னீர்கள். நெசவாளர்கள் குரல் கொடுத்தால் அவர்கள் ஒடுக்கப்பட்டார்கள். ஆசிரியர்கள் குரல் கொடுத்தால் அவர்கள் சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்டார்கள், இப்படிப்பட்ட நிலைமைகளைத்தான் இந்த 2½ ஆண்டு கால ஆட்சியிலே நடத்தியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு ஒரு தேர்தல், அதிலே மக்கள் தந்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்லும் நேரத்தில் ஏன் நீங்கள் கோபம் கொள்கிறீர்கள்? இந்த தீர்ப்பு முக்கியமான தீர்ப்பு. இது மகேசன் தீர்ப்பு. மக்கள் குரலே மகேசன் குரல் என்று முன்னால் சொன்னார்கள். இப்போது அதே மக்கள் தானே தீர்ப்பளித்திருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னால், 'நீ கேட்கலாமா?' என்று கேட்பது நியாயம்தானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்போதும் "நீங்கள் எல்லாம் ராஜிநாமா செய்யுங்கள், அல்லது மத்திய அரசு இந்த அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும்" என்று நான் சொல்லவில்லை. ஏன் தோற்றீர்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு தேர்தலிலே வெற்றிபெற்று வந்தவுடன், எதிர்க் கட்சியிலே இருந்த காங்கிரஸ்காரர்களைப் பார்த்து, "இந்தப் பக்கத்திலே இருந்த நீங்கள் அந்தப் பக்கம் போயிருக்கிறீர்கள், அந்தப் பக்கத்திலே இருந்த நாங்கள் இந்தப் பக்கம் வந்திருக்கிறோம், இதற்கு என்ன காரணம்?" என்பதைச் சுட்டிக்காட்டி அன்றையதினம் காங்கிரஸ் என்னென்ன தவறுகளைச் செய்தது என்பதைச் சொல்லி, அதனால்தான் 'நீங்கள் அந்தப் பக்கம் வந்திருக்கிறீர்கள்' என்று





சொன்னார்கள். இந்த நேரத்தில் நான் மிகவும் அடக்கத்தோடு சொல்லிக் கொள்கிறேன். ஏனென்றால் தோற்ற இந்தச் சூழ்நிலையில் கொஞ்சம் மனம் நொந்துபோயிருக்கிற உங்களை மேலும் புண்படுத்த விரும்பவில்லை. உங்களுடைய தவறுகளைத் திருத்த வாய்ப்பாக இருக்கும். நான் இந்த உரையிலே சூடான சொற்களைப் பயன்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால் அரசியல் இன்று இருப்பதைப் போல நாளை இருக்குமா என்பது சந்தேகம். அந்தப் பக்கம் இருக்கின்றவர்களுக்கும், இந்தப் பக்கம் இருக்கின்றவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் நல்ல அறிவுரையைத் தந்திருக்கிறார்கள். இதையெல்லாம் மறந்துவிட்டு, நீங்கள் 2½ ஆண்டுக்காலம் எங்களை எதிரிகளைப்போல, சமுதாய விரோதிகளைப் போல கருதினீர்கள். இது நியாயம்தானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் மீது எனக்கு மிகுந்த அன்பு உண்டு. பாசமும் உண்டு. அவர் சுயமரியாதை உணர்வு கொண்டவர் என்பதால், அவரிடத்தில் தனி அக்கறை எனக்கு உண்டு. அவர் எப்போதும் அண்ணா அவர்களுடைய கொள்கைப்படி நடப்பவர். அழகான உவமைகளை எடுத்துச் சொல்லக்கூடிய அவர், பேசும்போது சொன்னார், "நாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்கிறார்கள்", "ஆம்" என்று சொல்லிவிட்டு, "வீராணம் செய்யவில்லை, பூச்சி மருந்து செய்யவில்லை" என்றெல்லாம் சொன்னார்கள். நீங்கள் இப்படிச் சொல்லிச்சொல்லித் தான் ஆட்சிக்கு வந்தீர்கள். இப்படிச் சொல்லிக்கொண்டே இருப்பதால், நாங்கள் சொல்லும்போது நீங்கள் வேதனைப்படக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் போன்றவர்கள் சுட்டிக் காட்டியதால்தான், நான் சிலவற்றை இங்கே தொட்டுக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்த அரசு 2½ ஆண்டுக் காலத்தில் எடுத்த முடிவுகளில் எதையாவது எடுத்தது எடுத்தது தான், மாற்றவேயில்லை என்று சொல்ல முடியுமா? இல்லை. ஆட்சிக்கு வந்தவுடனே மாண்புமிகு முதலமைச்சர், "20, 25 ஆண்டுக் காலமாக பெரிய டாக்டர்கள் எல்லாம் சென்னையிலேயே இருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும்" என்று சொன்னார்கள். அப்போது நான் 'அது முடியாத காரியம்' என்று சொன்னேன். 'ஏன் முடியாது? என்னிடத்திலே அதிகாரம் இருக்கிறது' என்று பதில் சொன்னார்கள். ஆறு மாதத்திற்கு முன்னாலே உத்தரவு போட்டார்கள். 10 ஆண்டுக் காலம் பணியாற்றிய சென்னையிலே இருக்கிற பெரிய டாக்டர்கள் எல்லாம் தஞ்சை, திருச்சி, மதுரை போன்ற இடங்களுக்குப் போகவேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். ஏன் போட்டார்கள் என்று நான் கேட்கவில்லை, அப்படிப் போடப்பட்ட உத்தரவை அவர்களாலே அமுல்படுத்த முடிந்ததா? 10 நாட்கள் கூட அவர்களை சென்னையிலிருந்து மதுரைக்கோ, திருச்சிக்கோ, அல்லது தஞ்சைக்கோ மாற்ற முடிந்ததா?

இல்லை. 10 நாட்களுக்கு உள்ளாக அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு விட்டது. இப்போது 30 ஆம் தேதிக்கு முன்னாலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாற்றப்படுகிறார்கள். திடீரென்று 4 ஆம் தேதி ஒரு உத்தரவு வருகிறது. அவர்கள் எல்லாம் திரும்பவும் மாற்றப்பட்டு பழைய இடங்களுக்குத் திரும்பி வரலாம் என்று உத்தரவு வருகிறது. இதற்கு என்ன காரணம்? திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் ஹரிசன நலத் துறைக்கு அமைச்சராக இருந்தார். அவருடைய இலாக்காவிலே இயக்குநராகப் பணியாற்றியவர் ஒரு ஹரிசன வகுப்பைச் சேர்ந்தவர். அவருக்கும் அமைச்சருக்கும் தொடர்பு, ஆகவேதான் அமைச்சர் அவர்கள் தவறாக நடக்கிறார் என்ற எண்ணம் வந்த காரணத்தால், உடனே அவரைத் தூக்கிவிட்டு, அரசுக்கு நம்பிக்கையான ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை நியமிக்கிறார்கள். மறுநாளே அந்த அதிகாரியினுடைய உத்தரவை ரத்து செய்துவிட்டு, 'நீங்கள் அங்கே போகவேண்டாம், மீண்டும் கோட்டைக்கே வாருங்கள்' என்று அழைக்கிறார்கள். இப்படிச் செய்தால் மக்கள் என்ன நினைப்பார்கள்? மீண்டும் மீண்டும் போட்டு மாற்றினால், இது ஒரு துக்ளக் தர்பார் என்பார்கள். இப்போது மக்களெல்லாம் துக்ளக்கை மறந்துவிட்டார்கள். இப்போது எதுவாக இருந்தாலும், எம். ஜி. ஆர். தர்பார் என்று சொல்கிறார்கள். துக்ளக்கை எதிர் காலத்திலே மக்கள் எல்லோரும் மறந்துவிடுவார்கள். அந்த அளவுக்கு நிலைமைகள் நடக்கின்றன. நீங்கள் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே எங்கேயாவது பயமில்லாமல் மக்கள் வாழக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா? அமைதியான சூழ்நிலை இருக்கிறதா? அண்ணா நகரிலே ஒரு தாய் போய்க்கொண்டிருக்கும்போது, கழுத்திலே கிடக்கும் செயின் காலிகளாலே பறிக்கப்பட்டு, அதுபற்றிப் புகார் கொடுத்தால், எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. ஒரு நாட்டிலே ஐ. ஏ. எஸ். அதிகாரியின் மனைவி பஸ் ஸ்டாண்டிலே நிற்க முடியவில்லை. காவலுக்கு இருக்கும் காவல் துறையினரே கைவரிசையைக் காட்டுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் வீட்டிலே திருட்டு, ஐ.ஜி. அவர்கள் வீட்டிலே திருட்டு, ஒருவேளை 'அமைச்சர் வீடு எது? ஐ.ஜி. வீடு எது?' என்று தெரியாமல் தான் திருடியிருப்பார்களோ? இப்போது அங்கேதான் திருடுவதற்குக் கிடைக்கிறது. அந்த அளவுக்கு திருடர்களுக்கு தைரியம் என்று சொன்னால், நீங்கள் நடத்துகின்ற ஆட்சியின் லட்சணத்தை அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன? அதைப் போல கொள்ளைகள், கொலைகள், பிரேமா கொலையிலே ஆரம்பித்து வசந்தி கொலை வரையிலே வந்திருக்கிறது. நாளைக்கு யாரோ? தெரியாது. தாய்க்குலத்திற்காக வருந்தி கண்ணீர் விடுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இவற்றைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்குமானால், தடுக்க முடியாதா? நம்முடைய நாட்டு போலீஸ்காரர்கள்



மிகவும் திறமைபடைத்தவர்கள். உலகத்திலேயே சிறந்த போலீஸ்காரர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்ற பெயருக்கு உரியவர்கள். ஏன் அவர்களால் இந்தக் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை? அவர்களுடைய கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. யாரால் கட்டப்பட்டிருக்கின்றன? எதற்காகக் கட்டப்பட்டிருக்கின்றன? தெரிய வேண்டாமா? நான் சொன்னால் வருத்தப்படுவீர்கள். யாரோ பிரேமா, யாரோ வசந்தா, கொலை, பரவாயில்லை. இன்றைய தினம் ஆளும் கட்சிக்காரர்கள் எந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். மு. பாலு, அனைத்திந்திய அண்ணா தி.மு.க., நகர அமைப்பாளர், தொட்டியம், திருச்சி மாவட்டம். இவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதுகிறார், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் கடிதம் எழுதுகிறார். என்ன எழுதுகிறார்? நான் பெயரைச் சொல்லவில்லை. அவர் எழுதுகிறார், "என் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், அதற்கு இந்தத் தொட்டியம் தொகுதி எம்.எல்.ஏ. தான் காரணம்" என்று எழுதுகிறார். அவன் உங்களுடைய தொண்டன், அவனுடைய உயிருக்கு உங்களுடைய எம்.எல்.ஏ.-வால் ஆபத்து. இப்படிப்பட்ட நிலைமைகள் இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டாமா? நேற்றையதினம் சென்னை மத்திய தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய மானப்பிரச்சினையாகக் கருதிய தொகுதியினுடைய உறுப்பினர்—வெற்றிபெற்றதற்கு நன்றி தெரிவிக்கச் செல்கிறார். அந்தத் தொகுதியிலே, தலைநகரிலே அவர் நன்றி தெரிவிக்கச் செல்கிறார். வழியிலே மாடி வீட்டிலிருந்து இரண்டு கிலோ எடையுள்ள பெரிய கல்லை கிட்டபிட்டு அவருடைய மண்டையைப் பார்த்துப் போடுகிறார்கள், அவருடைய வண்டி கொஞ்சம் நகர்ந்து விட்டதால், அந்தக் கல் அவர்மீது விழாமல் அவர் உயிர் தப்பினார். நான் கேட்கிறேன், இன்றைய தினம் இந்த நாட்டிலே யாருக்குப் பாதுகாப்பு இருக்கிறது? ஆணுக்குப் பாதுகாப்பு இல்லை, பெண்ணுக்குப் பாதுகாப்பு இல்லை, எம்.பி.-க்குப் பாதுகாப்பு இல்லை, ஆளும் கட்சியைச் சேர்ந்த தொண்டர்களுக்குப் பாதுகாப்பு இல்லை, இப்படி எதற்காக ஆட்சி நடத்துகிறார்கள்? இந்த ஆட்சியாலே இந்தக் கொலைகளை, கொள்ளைகளை, திருட்டுகளை அடக்க முடியாதா? அப்படிப்பட்ட நிர்வாகம்தான் தமிழகத்திலே இருக்கிறதா? இவற்றுக்கெல்லாம் காரணம் அரசு போதுமான அக்கறை காட்டவில்லை. இவற்றைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை, அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை. இருக்கின்ற போலீசாரை நீங்கள் எங்கே அனுப்பியிருக்கிறீர்கள் என்று சொன்னால், 'வீராசாமி என்ன செய்கிறான் என்று பார், அவனுடைய வீட்டிலே ஒரு பட்டாளத்தை நிறுத்திவைத்து, யார் யார் வருகிறார்கள், யார்

யார் போகிறார்கள் என்று பார், கருணாநிதி என்ன செய்கிறார் என்று பார், நடிகர்கள், நடிகைகள் என்ன செய்கிறார்கள் என்று பார், அவர்களுடைய நடவடிக்கைகள் என்ன என்பதைக் கண்காணி' என்று போலீசார் இன்றைய தினம் முடுக்கி விடப்பட்டிருக்கிறார்கள். நாட்டிலே சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைப் பாதுகாக்க போலீசார் பயன்படுத்தப்படவில்லை.

(பிற்பகல் 5-30)

இப்படிப்பட்ட சூழ்நிலைகள் தமிழகத்தில் இருக்கும்போது, இவைகளைச் சுட்டிக்காட்டினால், அந்த நேரத்தில் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் ஆத்திரப் படுவது நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே தீவிர மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்தார்கள். அப்போதே எவ்வளவோ சொன்னோம். மணிக்கணக்காக நாங்கள் எடுத்துச் சொன்னோம். அதிலும் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளரான பேராசிரியர் அவர்கள் எப்போதுமில்லாத வகையில் சட்டமன்றத்திலே இரண்டு மணி நேரம் உரையாற்றினார்கள். வள்ளுவருடைய மேற்கோள்களை யெல்லாம் காட்டிப் பேசினார்கள். அவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, இந்த ஆட்சிக்கு அறிவுரை சொன்னார்கள். ஆனாலும் நான் "நினைத்ததை முடிப்பவன்" என்ற காரணத்தால், நீங்கள் என்ன நினைத்தீர்களோ அதையே முடிக்க வேண்டும் என்று அவசர அவசரமாக இந்த நாட்டு மக்களுக்கு எந்த வகையிலும் ஒவ்வாத, அவர்களைப் பழி வாங்கக்கூடிய சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். ஆனால் அண்மையில் மக்கள் தந்த தீர்ப்புக்குப் பிறகு அந்தச் சட்டத்தைத் தலைகீழாக மாற்றியிருக்கிறீர்கள். நியாயம்தானா என்று நான் கேட்கவில்லை, காரணம் உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நான் கேட்கிறேன், மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப்படுத்துகிறேன் என்று சொல்லி, தமிழகத்தில் கடந்த ஒன்பது மாதக் காலத்தில் என்னென்ன அட்டகாசங்கள், அட்டூழியங்கள், அக்கிரமங்கள் நடைபெற்றன என்பதை மறந்திருக்க முடியாது. நமது மதிப் பிற்குரிய உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் சினிமாத் துறையில் பாடல்களை எழுதுகிறார்கள். அவருக்குத் தெரியும் என்பதற்காகச் சொல் லுகிறேன். பழிவாங்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அதில் பல காரியங்கள் செய்யப்படவில்லையா? சினிமாத் துறையில் யார் யார் குடிக் கிறார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியும் என்று ஒரு நாள் முதலமைச்சர் அவர்கள் சொன்னார். அப்படி அதில் யார் யார் குடிக்கிறார்கள் என்று தெரிந்திருந்தும், அந்தத் துறையிலுள்ள பலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. ஆனால் எதிர்க் கட்சிக்கு வேண்டியவர் என்ற ஒரே காரணத்திற்



காக குறிப்பிட்ட ஒருவர்மீது மட்டும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வில்லையா? இப்போது அந்தச் சட்டத்தை அரசு எவ்வளவோ தளர்த்தி யிருக்கலாம். அந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், ஒன்றுமே இல்லாத அளவுக்குச் செய்திருக்கலாம். அதற்காக அரசு இப்போது பெருமைப்பட்டுக் கொண்டிருந்தாலும், நண்பர் டி. என். பாலு அந்தச் சட்டத்தாலே பழிவாங்கப் பட்டு, மனமுடைந்து மானமிழந்து போய்விட்டோமே என்று நெஞ்சுருகி இறந்துவிட்டாரே, அந்த டி. என். பாலுவின் உயிரை அரசு திருப்பிக் கொடுக்க முடியுமா? இப்படிப்பட்ட சட்டம் வந்ததன் காரணமாக எதுமறியாத மக்கள், ஏழை எளிய மக்கள், ஒன்றுமறியாத தாய்மார்கள் தங்கள் கணவன் குடித்துவிட்டு சிறைக்குப் போய்விட்டான் என்ற செய்தி மாமியாருக்குத் தெரிந்துவிட்டதே என்று தற்கொலை செய்துகொள்ளவில்லையா? உற்றார் உறவினர்கள் இனி நம்மைக் காறித் துப்புவார்களே என்று சிறைச்சாலை யிலிருந்து திரும்பி வருகிறபோதே, தற்கொலை செய்துகொண்ட இளைஞர்கள் எத்தனை பேர்? அதையெல்லாம் மறுக்க முடியுமா இந்த அரசாங்கம்? இப்படிப்பட்ட சட்டம் வேண்டாம் என்று எதிர்க் கட்சியினர் சொன்னபோது, கேட்டார்களா? இன்றையதினம் மக்கள் தந்த தீர்ப்பின் காரணமாக அதை மாற்றியிருக்கிறார்கள், பாராட்டுகிறேன்.

எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னதையெல்லாம் அலட்சியப்படுத்தினார்கள். இது நியாயம்தானா என்றுதான் கேட்க விரும்புகிறேன். இதைப்போலத்தான் பிற்படுத்தப்பட்டோர் சலுகை வழங்குவதிலும் கை வைத்தார்கள். இந்த அரசாங்கத்திற்கு யார் அறிவுரை வழங்குகிறார்கள் என்று எனக்குத் தெரிய வில்லை. ஆனால் இங்கே அருமை நண்பர் புலவர் புலமைப்பித்தன் "இந்த அரசாங்கம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது" என்று சொல்லுகிறார். 9,000 ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு இனி பிற்பட்டோர் சலுகை கிடையாது என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஐந்தாவது நாளே திராவிட முன்னேற்றக் கழகம் கூடி, அதனைக் கண்டித்தது. அவசர அவசரமாகப் பொதுக் குழுவைக் கூட்டினோம். தமிழகம் எங்கும் இதுபற்றிய நிலையை, விளைவை எடுத்துச் சொல்ல வேண்டும், பொதுக் கூட்டம் நடத்த வேண்டும் என்று முடிவெடுத் தோம். அதைத் தொடர்ந்து ஒன்பது மாத காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தானைத் தலைவர் கலைஞர் முதற்கொண்டு கழகத்தின் கடைசிப் பேச்சாளன் வரை இதைப்பற்றிப் பேசாத ஊரில்லை, தெருவில்லை, நாடில்லை, நகரமில்லை என்று சொல்லுகிற அளவுக்கு, இந்த நாட்டில் இருக்கிற 4½ கோடி மக்களும் உணருகிற வகையில் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டோம். அப்போதும் இந்த அரசாங்கம் அதைப்பற்றி உணர்ந்ததாகத் தெரியவில்லை. வேறு வழியில்லாமல் கடைசியாக திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு நாளைத்

குறித்தது. 29 ஆம் தேதிக்குள் இந்த உத்தரவைத் திரும்பப் பெறாவிட்டால், யாக இந்த அரசாங்கம் இப்போது அந்த உத்தரவை ரத்து செய்திருக்கிறது. நான் கேட்கிறேன், இந்த ஓராண்டுக் காலத்தில் இதன் காரணமாக எத்தனை எத்தனை இழப்புகள்? யார் யார் பாதிக்கப்பட்டார்கள்? மாண்புமிகு அமைச்சர்களுக்குத் தெரியாது என்ற காரணத்தால், இங்கே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். மின்சார வாரியத்தில் உள்ள சீப் எஞ்சினியருடைய பி.ஏ. ஆகப் பணியாற்றுகிற திரு. குப்பன் என்பவர் ஒரு சாதாரண வன்னிய குடும்பத்தில் பிறந்து, எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேறி அந்த ஏழைக் குடும்பத்திலேயே வளர்ந்து, எப்படியோ 1954 ஆம் ஆண்டு எம்.பி.எஸ்.சி. பரிட்சையிலும் தேறி, மின்சார வாரியத்தில் சேர்ந்தார். படிப்படியாக உழைத்து முன்னேறினார். நேர்மையானவர் என்ற காரணத்திற்காக அவருக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டு சீப் எஞ்சினியருடைய பி.ஏ. ஆகப் பணியாற்றி வந்தார். அவர் நினைத்தார் 25 ஆண்டுக் காலம், 30 ஆண்டுக் காலம் இந்த மின்சார இலாக்காவில் பணியாற்றி உழைத்து வருகிறோம். நமக்கோ திருமணமாகி, குழந்தை பிறந்து அவனும் படித்துப் பட்டம் பெற்று, நாம் இப்போது பணியாற்றும் இலாக்காவிலேயே ஒரு நாள் எஞ்சினீயராக ஆக மாட்டானா என்று ஏங்கிக் கொண்டிருந்தார். அப்படியே அவருடைய மகனும் படித்துத் தேறினான். பி.யு.சி.-யில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றான். கணிதத்தில் 100-க்கு 100 மார்க்குகளும், விஞ்ஞானத்தில் 100-க்கு 88 மார்க்குகளும் வாங்கினான். இரண்டும் சேர்ந்தால் 188 மார்க்குகள். குப்பனுக்கோ மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. இனி தன் மகன் எப்படியும் எஞ்சினியராகிவிடுவான், மின்சார இலாக்காவிலேயே சேர்ந்துவிடுவான் என்று மகிழ்ந்தார். எஞ்சினியரிங்கில் சேருவதற்காக விண்ணப்பம் வரவழைக்கப்பட்டு அது பூர்த்தி செய்யப்பட்டது. தேர்வுக் குழுவுக்கும் விண்ணப்பம் அனுப்பப்பட்டுவிட்டது. அப்போதுதான் இந்த உச்ச வரம்பு உத்தரவு, 9,000 ரூபாய் உத்தரவு வந்தது. அந்த உத்தரவைப் பார்த்ததுமே குப்பன் துவண்டார், தவித்தார். உடனே அதிகாரிகளைச் சென்று பார்த்தார். இன்று இப்படி ஒரு உத்தரவு வந்திருக்கிறதே இந்த ஆண்டு என்னுடைய மகனுக்கு எஞ்சினியரிங் சீட் கிடைக்குமா என்று அதிகாரிகளைக் கேட்டார். அவர்கள் "கடந்த ஆண்டு இதே மார்க்குக்குக் கண்டிப்பாக அவனுக்கு இடம் கிடைத்திருக்கும். ஆனால் இந்த ஆண்டு இந்த உத்தரவு வந்திருப்பதன் காரணமாக, குப்பன், நீங்கள் சாதாரண ஏழைக் குடும்பத்தில் வன்னிய சமுதாயத்தில் பிறந்திருந்தாலும், நீங்கள் பி.ஏ. ஆக இருப்பதால், உங்கள் ஆண்டு வருமானம் ரூபாய் 9,600 ஆக இருப்பதால், நீங்கள் உயர்ந்த ஜாதிக்காரராகிவிட்டீர்கள்,





எனவே உங்களுடைய மகனுக்கு இந்த ஆண்டு இடம் கிடைக்காது" என்று சொன்னார்கள். அப்படி ஒரு தாரக மந்திரத்தை நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு உத்தரவாகப் போட்டு அனுப்பிவிட்டார்கள். உன்னுடைய மகனுக்கு இடம் கிடைக்காது என்று சொன்னார்கள். அந்தச் செய்தியைத் தாங்கிக்கொள்ளக்கூட குப்பனாலே முடியவில்லை. அந்த அதிகாரியின் வீட்டிலிருந்து அவர் தம் மகனோடு வெளியே புறப்பட்டார். நடப்பதற்குக்கூட சக்தியில்லாமல் அவர் தம் மகனைப் பிடித்துக்கொண்டே வெளியே வருகிறார். அப்போது அவருக்கு நெஞ்சிலே வலி ஏற்படுகிறது. மகனிடத்தில் சொல்லுகிறார். "மகனே எனக்கு நெஞ்சை வலிக்கிறது, நடக்கக்கூட முடியவில்லை" என்கிறார். மகனோ ஓடிப்போய் ஒரு டாக்சியைப் பிடித்துக் கொண்டு வருகிறார். அந்த டாக்சியில் ஏறி உட்காருவதற்கு முன்பே குப்பனுடைய மூச்சடங்கிவிட்டது. பிணமாகிவிட்டார். இப்படி எத்தனை எத்தனையோ பிணங்கள் கடந்த ஓராண்டுக் காலத்தில். அவர் இறந்துவிட்ட பிறகு அவர் குடும்பத்திற்கு இன்றையதினம் வருமானம் இல்லை. அவருடைய மகன் பேக்வர்டு கிளாசாகிவிட்டார். இது நியாயம்தானா? உயிரோடு இருந்தால், அவர்கள் உங்கள் ஆட்சியில் பார்வர்டு கிளாசாக இருந்தார்கள். இறந்துவிட்ட பிறகு, இன்றைக்கு அவர்களெல்லாம் பேக்வர்டு கிளாசாகி விடுகிறார்கள். இப்படி எத்தனை எத்தனையோ சோகக் கதைகள். அந்தச் சோகக் கதைகளின் பிரதிபலிப்பே இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் உங்களுக்கு அளித்த தீர்ப்பு. நல்ல வேளையாக இப்போதாவது உங்கள் கண்கள் திறந்து கொண்டனவே என்று உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து நீங்கள் 'ஊழல், ஊழல்' என்று சொன்னீர்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல்களை இந்த சட்டமன்றத்தில் எடுத்துச் சொன்னபோது, உங்களைத் திருத்திக் கொண்டீர்களா என்றால், இல்லை. எம்.பி.பி.எஸ். தேர்வில் நடைபெற்ற ஊழலை எத்தனை முறை எடுத்துச் சொன்னோம்? திருத்திக் கொண்டீர்களா? இல்லையே. சட்ட மன்றத்திலேயே எங்கள் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக்காட்டினாரே, மணியன் கோட்டாக்களை. அப்போது மறுத்தீர்களே, இப்போது என்ன ஆயிற்று? உயர்நீதி மன்றத்தின் நீதிபதியே தீர்ப்பு தந்துவிட்டாரே.

அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் என்ற பெயரில் மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்க உங்களுக்கு அதிகாரம் இருந்தாலும், அதில் முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்று தீர்ப்பு வழங்கினாரே, என்ன செய்தீர்கள்? அந்தத் தீர்ப்பு வெளிவந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரையில் இருந்தார். பத்திரிகை நிருபர்கள் ஓடோடிப்போய் முதலமைச்சரைப் பார்த்துக் கேட்டார்கள். அப்போது அவர் சொன்னார். நான் சென்னைக்குப் போனவுடனே சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுப்பேன். ஏன், மதுரையிலிருந்து நடவடிக்கை எடுத்தால், அந்த உத்தரவு சென்னைக்கு வந்து சேராதா? மதுரை என்ன அமெரிக்காவுக்கும் அப்பாலே இருக்கிறதா? அல்லது உலகத்திற்கும் அப்பாலே இருக்கிறதா? போகட்டும், நாமெல்லாம் மகிழ்ந்தோம். முதலமைச்சரும் மதுரையிலிருந்து சென்னைக்குத் திரும்பி வந்தார். வந்தவர் நடவடிக்கை எடுத்தாரா என்றால், இதுவரையிலும் இல்லை. அமைச்சர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம், டி.எம்.ஈ. மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம், செலக்ஷன் கமிட்டி மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம். யார் மீதாவது இதுபற்றி நடவடிக்கை எடுத்ததுண்டா? இது வரையில் இல்லை என்பதுதானே உண்மை? இதில் வேடிக்கை என்னவென்றால், உயர்நீதி மன்றம் இந்த வழக்கில் என்ன தீர்ப்பு அளித்ததோ, அந்தத் தீர்ப்பையே இந்த அரசு இன்னும் நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டையும் இந்த நேரத்தில் சுமத்த விரும்புகிறேன். வெயிட்டிங் லிஸ்ட்டில் இருக்கிற மாணவர்களுக்கு அந்த இடங்களை அரசு ஒதுக்க வேண்டும் என்று உயர்நீதி மன்றம் உத்தரவு போட்டது. ஆனால் அந்த உத்தரவை அரசு இன்னும் அமுல்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை மிகுந்த வேதனையோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீதிக்குத் தலை வணங்குவேன் என்கிறீர்கள் சினிமாவிலே. ஆனால் உண்மையிலேயே வாழ்க்கையில் நீதிக்குத் தலை வணங்குகிறீர்களா என்றால், இல்லை. இது நியாயம்தானா? மக்கள் கேட்கமாட்டார்களா? அப்படிக் கேட்ட கேள்விக்குக் கிடைத்த பதில்தானே நாடாளுமன்றத் தேர்தலின் முடிவு?

அது மட்டுமல்ல. கடந்த ஆண்டு இதே சட்ட மன்றத்திலே நான் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னேன். டாக்டர் ஜகதீசன் என்பவர் ஒரு புரொபசர் அவருடைய மருமகனுக்கு எம்.எஸ்.-ல் இடம் வேண்டும் என்பதற்காக அமைச்சருக்கு ரூ. 5,000 கொடுத்திருக்கிறேன் என்று அவர் தமது சம்பந்திக்கு எழுதிய கடிதத்தை நான் படித்துக் காட்டினேன். அப்போது அமைச்சர்



சொன்னார். என்ன சொன்னார் தெரியுமா? இந்தக் கடிதம் எழுதிய டாக்டர் மீது நான் நடவடிக்கை எடுப்பேன் என்றார். நான் உள்ளபடியே மகிழ்ந்தேன்.

(பிற்பகல் 5.40)

என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் தெரியுமா? "அடப் பைத்தியக்காரா! இப்படிக் கடிதம் எழுதினாயா? அமைச்சர் மூலமாக இடம் வாங்கிவிடுகிறேன் என்று எழுதினாயா? அதற்காக உன்னைப் பாராட்டுகிறேன்" என்று சொல்லி, எம்.எஸ். செலக்ஷனுக்காக அவரையே செலக்ஷன் கமிட்டியிலே உறுப்பினராக நியமித்திருக்கிறார்கள். இப்படி எவ்வளவு நியாயங்களை வழங்கியிருக்கிறார்கள் என்பதற்கு பல உதாரணங்களை என்னாலே காட்ட முடியும்.

அது மட்டுமல்ல நீதிமன்றத்தை எந்த அளவிற்குப் புறக்கணிக்கிறார்கள், எப்படி நடத்துகிறார்கள் என்பதற்கு இன்னுமொரு உதாரணத்தைக் காட்ட விரும்புகிறேன். பாதிக்கப்பட்ட நானே சொல்கிறேன். அமைச்சர் ஒருவருக்கு மானம் போய்விட்டதென்று என் மீது வழக்குப் போட்டார். அந்த வழக்கு கோர்ட்டில் நடந்தது. வழக்கில் தீர்ப்புச் சொல்கிற நேரத்தில், வாதாட வேண்டிய அவசியம் இல்லாத சூழ்நிலையில் திடீரென்று வக்கீல்களை மாற்றினார்கள், வக்கீல்கள் மாற்றியது அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கலாம். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. வழங்கிய தீர்ப்பு நியாயம்தானா என்பதைப்பற்றி அறிய மேற்கொண்டு அப்பீல் செய்ய ஒருவருக்கு உரிமையுண்டு. கடந்த மாதம் 11 ஆம் தேதி தீர்ப்பு அளித்தார்கள். அந்தத் தீர்ப்பின் நகலைக் கொடுங்கள் என்று கேட்டு இன்று வரை நடக்கிறேன், ஆனால் கிடைக்கவில்லை. அப்பீல் செய்ய வேண்டும், நகலைக் கொடுங்கள் என்று கேட்டால் "எவ்வளவோ வேலைகள் கோர்ட்டுக்கு இருக்கின்றன" என்று நீதிபதி சொல்கிறார். இன்றைய தினம் நீதிமன்றங்கள் உள்ளபடியே தன்னிச்சையாக இயங்குகின்றனவா என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை.

அதைப் போலவே கப்பல் பேர ஊழல். எதிர்க் கட்சித் தலைவர் இதைப் பற்றிச் சட்டமன்றத்திலே சொன்னவுடனே, "விசாரணைக்கு ஒத்துக்கொள்கிறேன். டில்லியில் இருக்கக் கூடிய சுப்ரீம் கோர்ட் நீதிபதி விசாரிப்பார். அதற்கு நானே கடிதம் எழுதுகிறேன்" என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடிதம் எழுதினார். அப்போதிருந்த காபந்து சர்க்கார் பரிசீலித்தது நீதிபதிகள் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அது காபந்து சர்க்கார் எழுதிய கடிதம். இன்றைய தினம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார் இருக்கிறது. இந்தக் காலச்

கட்டத்திலே, முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக் கூடிய வகையில், கப்பல் பேர ஊழலைப் பற்றி விசாரிக்க, ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டுமென்று கேட்கக் கூடிய தைரியம் இருக்கிறதா என்று மீண்டும் கேட்கிறோம். அப்படி இல்லையென்றால், "அப்போது சொன்னோம், சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி என்று. அவர்கள் ஒத்துக்கொள்ள வில்லை. ஆகவே எங்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட உயர்நீதி மன்ற நீதிபதியைப் போட்டு விசாரிக்கத் தயாராக இருக்கிறோம்" என்று சொல்லத் தயாராக இருக்கிறார்களா என்றால், இல்லை. அதைப்பற்றி மறந்தே விடுகிறார்கள். கப்பல் என்று சொன்னாலே முகம் சுளிக்கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, "நீதிமன்றத்தில் அப்பீல் செய்வதற்குப் போனால் தீர்ப்பின் நகல் கிடைக்கவில்லை. ஏதோ தலையீடு இருக்கிறது" என்று சொல்லுவது முறையா? அமைச்சர்களுடைய தலையீடு இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறாரா? நீதிமன்றத்தினுடைய நடவடிக்கையைப் பற்றி குற்றம் சாட்டுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** "நீதிமன்றத்திற்குப் போனால் காப்பி (நகல்) கிடைக்கவில்லை, தாமதம் ஏற்படுகிறது" என்று சொல்லலாம், தவறில்லை. "இன்னொருவர் தலையீடு இருக்கிறது. தன்னிச்சையாக நடந்திருக்கிறதா" என்று அளவிற்குச் சொல்லாமல் இருப்பது நலம்.
Attributing motive is not correct.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதைப் போலவே பல் ஊழல். அத்தனை பல்காரர்களும், நாடும் அறிந்த விஷயம். ஒரு கோடி என்றார்கள். பிறகு அடுத்த ஒரு கோடிக்கு திட்டம் தீட்டப்பட்டது. அதெல்லாம் விசாரணைக்கு வருமா என்றால், வராது இப்போது. இப்போது வராத காரணத்தால், எப்போதுமே வராதா? கொடுத்தவர்கள் எல்லாம் எம்.பி.க்களாக ஆகி விட்டார்கள். காங்கிரஸில் பலர் பல் முதலாளிகள். ஆரம்ப காலத்திலிருந்தே அந்தக் கட்சி அப்படி வளர்ந்துவிட்டது. யார் யார் கொடுத்தார்கள், எங்கே கொடுத்தார்கள், எவ்வளவு கொடுத்தார்கள், யாரிடத்திலே கொடுத்தார்கள் என்பதெல்லாம் வராமலா போய்விடும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்துச் சொன்னார்கள், "ஊழல், ஊழல்" என்று. இப்போது இவர் களைப் பார்த்து கேள்வியைக் கேட்கப் போகிறார்கள். காலம் பதில் சொல்லத்தான் போகிறது.



அத்தோடு நின்றார்களா என்றால், இல்லை. தேர்தலுக்கு முன்னால் சர்க்கரை ஆலை அதிபர்கள் இந்த ஆட்சியை அணுகினார்கள். விவசாயிகள் ஏற்கெனவே தாங்கள் உற்பத்தி செய்கிற கரும்புக்கு அதிக விலை வேண்டு மென்று கேட்டார்கள். திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் உள்ள சங்கம் அதற்காகப் போராடியது. அப்படிப்பட்ட போராட்டம் நடத்தி அதிக விலையைக் கொடுங்கள் என்று கேட்டபோது, ஆலையில் சர்க்கரையாக ஆக்குவதற்காகப் போகிற நேரத்தில் போடப்படுகிற வரி டன்னுக்கு 25 ரூபாய் என்பது அதிகம் என்று சொல்லி அதைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக் கையை எழுப்பினார்கள். அதற்காக இந்த அரசாங்கத்தால் பேசப்பட்ட பேரம் 5 கோடி ரூபாய் என்பதை யாராவது மறுக்க முடியுமா? இரண்டு கோடி ரூபாயை முன் பணமாகப் பெற்றுக்கொண்டு, "தேர்தல் நேரத்தில் உத்தரவைப் போட்டால் எதிர்க் கட்சிகள் அதைப்பற்றி முழங்குவார்கள். மேலும் தேர்தல் நேரத்தில் புதிய சலுகைகளைக் காட்டக் கூடாது என்று மத்திய அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. தேர்தல் முடிந்த பிறகு கவனிப்போம்" என்று சொல்லியதால், ஆலை அதிபர்கள் முதலமைச்சர் அறைக்கு படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த உத்தரவுக்கான கோப்புகள் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. "ஓரிரு நாளில் உத்தரவைப் பிறப்பிக்கிறோம்" என்ற உறுதிமொழி கொடுக்கப் பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் ஊழல்கள் இல்லையா? இவைகளை யெல்லாம் யாரும் சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறார்களா? இப்படிப் பட்ட பல ஊழல்கள் நடந்திருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி, அந்த ஆட்சியைப்பற்றி தெருவிலே, சட்ட மன்றத்திலே, மேலவையிலே பேசினார்கள். தெலுங்கிலே "ரோஜுலு மாறாயி" என்று சொல்லுவார்கள். இப்போது காலம் மாறி விட்டது. முதல் வெற்றி வீரன் திரு. மாயத் தேவர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்குப் போனதற்குப் பிறகு, அங்கே பேசிய பேச்சுக்களைச் சொல்கிறேன். "முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வாங்கிய இலஞ்சப் பணம், சினிமாவிலிருந்து வாங்கிய கறுப்புப் பணம் ஆகியவை சேர்ந்து 28 கோடி ரூபாயை எங்கே புதைத்து வைத்திருக் கிறார் என்று வருமான வரி இலாக்கா கண்டுபிடித்துத் தோண்டி எடுக்க வேண்டும்" என்று தெருவிலே பேசவில்லை, நாடாளுமன்றத்திலே பேசியிருக் கிறார். பேசி ஐந்தாறு நாட்கள் ஆகின்றன. பொறுப்பு இருந்தால், அவர் பேசியதில் உண்மையில்லை என்று உணர்ந்திருந்தால், மறுப்பு அறிக்கை கொடுத்திருக்க வேண்டாமா? அவர் பல குற்றச்சாட்டுக்களை, யார் யாரிடத்திலே வாங்கினார் என்ற புள்ளிவிவரங்களையெல்லாம் சொல்லி

யிருக்கிறார். இது யாரைப் பற்றிய செய்தி? சாதாரண தொண்டனைப் பற்றியதல்ல. மாண்புமிகு தமிழக முதலமைச்சரைப் பற்றியது. இப்படிப்பட்ட பயங்கரமான குற்றச்சாட்டுக்களை நாடாளுமன்றத்திலே சொல்லிய பிறகு, பத்திரிகைகளில் அவை செய்தியாக வருகிறதென்றால், அதை மறுத்திருக்க வேண்டாமா? மறுத்தார்களா என்றால், இல்லை. மறுக்க முடியாது. ஏனென்றால் அவர் இவர்களோடு இருந்தவர். இவர்களோடு அந்தக் காலத்திலேயிருந்து பழகியவர். எங்கேயிருந்து வந்தது, எப்படி வந்தது, எங்கே புதைக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர் தெரிந்து வைத்திருக்கலாம். இப்போது தெரிந்துவிட்டது என்ற காரணத்தால், இடம் மாற்றலாம். மாற்றினாலும், நாட்டு மக்களுக்கு ஒன்று தெரிந்துவிட்டது. இருப்பது உண்மை, வாங்கியது உண்மை, புதைக்கப்பட்டது உண்மை என்பதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியுமா?

முதலமைச்சர் அவர்கள், இன்னொன்று சொன்னார்கள். பொறுப்புள்ள முதலமைச்சரைப் பார்த்து, சட்டமன்றத்தில், "ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே 13 இலட்சம் ரூபாய் வரி பாக்கி இருந்ததே, ஆறு மாதங்களில் எப்படிக் கட்டிவிட்டீர்கள்?" என்று கேட்டார்கள். ஏனென்றால், "இலட்சக் கணக்கில் சம்பாதித்ததை இழந்துவிட்டு ஆயிரக் கணக்கான சம்பளத்தை வாங்க வந்திருக்கிறேன்" என்று பெரிய முதலமைச்சர் இலட்சக் கணக்கில் சம்பாதிக்கும்போது, கட்ட முடியாத பாக்கியை ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கும் போது எப்படிக் கட்டினார்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "என்னுடைய சத்தியா ஸ்டுடியோவை அண்ணா தி.மு.க.விற்கு அடகு வைத்துவிட்டுக் கட்டியிருக்கிறேன்" என்று சொன்னார்கள். இனிமேல் அண்ணா தி.மு. கழகத்தில் அடகு வைக்கலாம். வாரி வழங்கக் கூடிய கற்பக விருட்சம் அண்ணா தி.மு.க. சத்தியா ஸ்டுடியோவை 13 இலட்ச ரூபாய்க்கு அண்ணா தி.மு.க.வில் அடகு வைத்துக் கட்டினேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்ன செய்தி, முதலமைச்சரின் கட்சியின் பொருளாளராக இருந்து, அமைச்சரவையிலிருந்து இராஜினாமா செய்த திரு. சௌந்திரபாண்டியன், உண்மைக்குப் புறம்பானது என்று சொல்லியிருக்கிறார். "மூன்று இலட்சம் ரூபாய்க்குத்தான் அடகு வைத்தார். 10 இலட்சம் ரூபாய் வேறு விதமாக வந்த பணம்" என்று சொல்லக்கூடிய அளவிற்கு அறிக்கை விட்டிருக்கிறார். இதை மறுக்க முடியுமா? 13 இலட்சம் ரூபாய்க்கு அடகு வைத்த டாக்குமென்டை சட்டமன்றத்திலே காட்டத் தயாரா? இந்தத் தகவலை அவர் எங்களிடத்திலே சொல்லவில்லை. இந்தத் தகவல் குடியரசுத் தலைவர் வரையில் போயாகிவிட்டது. அதற்கு வழிகாட்டியவர்கள இவர்கள்தானே. தமிழ் நாட்டில் இது யாருக்குத் தெரியும்? புகார் பட்டியலை



டில்லியில் கொடுக்க வேண்டும் என்று வழி காட்டியவர்கள் இவர்கள்தானே. அதைத்தான் திரு. சௌந்தரபாண்டியன் செய்திருக்கிறார். அவர் இன்னும் இவர்களுடைய கட்சியில்தான் இருக்கிறார். இலஞ்சத்தை ஒழிக்கப் போகிறோம், ஊழலை ஒழிக்கப் போகிறோம் என்று புறப்பட்ட இவர்கள் ஆட்சியில் ஊழல் வளர்ந்திருக்கிறது. எங்கே இல்லை என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு ஊழல் இந்த நாட்டிலே பெருக்கெடுத்திருக்கிறது.

அடுத்து, குடிநீர் வடிகால் வாரியத்தைப்பற்றி எத்தனையோ முறை சொல்லிவிட்டேன். மாண்புமிகு அமைச்சர் திரு. இராசா முகமது அவர்கள் கூட வாக்குறுதியைத் தந்தார்கள். அவசர காலச் சட்டம் அமுலில் இருந்த போது, அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருந்தால், மறுபரிசீலனை செய்கிறோமென்று சொன்னார்கள். செய்தார்களா? எக்ஸிகியூட்டிவ் எஞ்சினியர் திரு. பி. தண்டபாணி என்பவர் 10—1—1980 அன்று சீப் செகரட்டரிக்கு 25 பக்கம் கொண்ட கடிதத்தை எழுதியிருக்கிறார். அது என்னிடத்திலே இருக்கிறது. வேண்டுமானால் அதை அவைக்குத் தருகிறேன். அந்தக்

(பிற்பகல் 5.50)

கடிதத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைய தினம் அந்த இலாகாவினுடைய மேனேஜிங் டைரக்டராக இருக்கக்கூடிய திரு. மாதவ சர்மா என்பவர் ஒன்றரை கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செய்திருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திலேயே குறிப்பிட்டேன். சம்பந்தப்பட்ட ஒரு சீப் இன்ஜினியரை மட்டும் 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறார்கள். பர்சென்டேஜ் அதிகமாக வாங்கிய திரு. மாதவ சர்மாவை விட்டுவிட்டார்கள். இதற்கு என்ன காரணம்? "குற்றம் செய்த இரண்டு பேர்களிலே ஒருவரை மட்டும், மேனேஜிங் டைரக்டரை விட்டு வைப்பது நியாயம்தானா?" என்பதற்கு "இல்லை யில்லை, அது யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்போம்" என்று சொன்னார்கள். இதுவரையில் நடவடிக்கை எடுத்தார்களா? ஒன்றா, இரண்டா அரசு நடவடிக்கை எடுப்பதற்கு இருக்கிறது? யாராக இருந்தாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. 20 ஆயிரம், 40 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் கோப்புகள் மலைபோல குவிந்திருக்கின்றன. அதுதான் உண்மை. இப்படி ஒன்றரை கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருக்கிறது என்று சொன்னது அரசியல்வாதியில்லை. அதிகாரிகள்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த இலாகாவிலே உயர் பதவியிலே இருக்கக் கூடிய அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதை சி.ஐ.டி. கூட கண்டு பிடித்துவிட்டது. இந்தக் [illegible]

25 பக்கக் கடிதத்தைப் படித்தால், விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம். இதிலிருந்து நிர்வாகம் செய்வதற்கு லாயக்கு இல்லை என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். அவர்கள் எழுதிய கடிதத்தை வெளியே போடுங்கள். சீப் செகரட்டரிக்கு அதைப்பற்றி எழுதியிருக்கிறார். இந்த நாட்டிலே எப்படி நியாயம் கிடைக்கும்? அண்ணா போக்குவரத்துக் கழகம் என்று சொல்வார்கள். அதில் ஒரு புதிய ஊழல் இப்போது வந்திருக்கிறது. சொல்வார்களே அண்ணா போக்குவரத்துக் கழகம் என்று. அந்த அண்ணா போக்குவரத்துக் கழகத்திலே பஸ்களிலிருந்து வருகின்ற வருமானம் அத்தனையும் கார்ப்பரேஷனுக்கே சென்று கொண்டிருக்கிறது. நமக்கு என்ன வருகிறது? மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்தில் நாம் எப்படி முன்னேறுவது என்று எண்ணியிருக்கிறார்கள். இதென்று ஒரு பத்திரிகையிலே வருகிறது. கர்நாடகாவில் அண்ணா போக்குவரத்துக் கழக பஸ் பெர்மிட் இல்லாமல் போன காரணத்தினால் பிடித்து வைத்து விட்டார்கள். நம்முடைய பஸ் ஏன் கர்நாடகாவிலே பெர்மிட் இல்லாமல் போயிற்று? விசாரணை ஆரம்பித்த பிறகு தெரிகிறது. அது அன்று மட்டும் போகவில்லை. தினம் தினம் 10 பஸ்கள் அம்மாதிரி போய் வந்து கொண்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் உள்ள அந்தக் கார்ப்பரேஷனுக்குத் தெரியாமலேயே பஸ் போகிறது. அதிலே வருகின்ற வருமானமும் கலெக்ஷனும் மேனேஜிங் டைரக்டரிடத்திலே ஒப்படைக்கப்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு, அதிலே ஒருவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். இதிலே இவ்வளவு ஊழல். அரசாங்கத்திற்கும் இல்லாமல் கார்ப்பரேஷனுக்கும் இல்லாமல் 6 மாத காலமாக பல பஸ்கள் அரசாங்க பஸ்கள், போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த அண்ணா பெ[illegible]ந்த பஸ்கள் இப்படி ரூ. 93 லட்சம் கலெக்ஷன் செய்து தனியாரிடம் ஆளுங்கட்சியின் தயவோடு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இது ஊழல் அல்லவா? இதை என்ன பெயர் வைத்துச் சொல்வது என்று எனக்கு தெரியவில்லை. இன்றையதினம் இதையெல்லாம் பார்க்கின்றபோது, எப்படி இதைச் சமாளிப்பது என்று உங்களுக்கும் புரியவில்லை. நீங்கள் எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் கூறுகிறார்களே என்று வருத்தப்படுகிறீர்களே தவிர, இவ்வளவு நிலைமையும் செய்து விட்டு, ஆசிரியர்கள் எதிராக இருக்கிறார்கள், ஆலை அதிபர்கள் எதிராக இருக்கிறார்கள், அரசு ஊழியர்கள் விரோதமாக இருக்கிறார்கள், இப்படிச் செயல்பட்டால் ஆட்சியை எப்படி நிலை நாட்டிக்கொள்வது என்று நினைக்கிறீர்கள்." இங்கே கூட சிலர் சொன்னார்கள். மதிப்பிற்குரிய திரு. மாணிக்கம் போன்றவர்கள் சொன்னார்கள். "அனுபவசாலிகள். அரசியலிலே நல்ல தியாகங்கள் செய்தவர்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இப்படி ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு பேசுவதனால் யாருக்கு லாபம்?"





என்று கேட்டார்கள். "அன்பு பாசம் என்ற நிலையிலே, தாங்கள் சொல்லக் கூடியவைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள். ஏன் அளவிலே விச விச நாங்கள் அதை தாங்கிக் கொள்ள வேண்டும்", என்று சொன்னார்கள். நேரத்தில் தாங்கள் ஒழிந்து போவதற்கு எங்களை ஆளாக்கிக் கொள்ளலாமா என்பதைப் பற்றி மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். "எதிர்க் கட்சித் தலைவர் கலைஞரை, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துவிட வேண்டும்; இந்த இரண்டையும் செய்துவிட்டால் இந்த நாட்டிலே நாம் சர்வாதிகாரியாக இருக்கலாம். நம்மை கேட்பார் இல்லை," என்ற எண்ணம், ஆர்வம் இருக்கிறது. இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்த இன்னல்கள், இடைஞ்சல்கள் எவ்வளவு? இந்தக் காலத்தில் படியேறிய நீதிமன்றங்கள் எத்தனை? பட்ட கஷ்ட நஷ்டங்கள் எத்தனை? அந்த அளவுக்கு, ஆளுங்கட்சியினர் பழி வாங்கும் நேரத்திலே எத்தனை காலத்திற்கு அதைத் தாங்கிக் கொள்வது? மக்கள் தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை எண்ணி, நாங்கள் மத்திய அரசிடம் மாநில அரசை டிஸ்மிஸ் செய்யுங்கள் என்று சொல்லவில்லை. இங்கே இந்த மன்றத்திலே, சட்டமன்றத்திலே பேசியிருக்கிறார்கள். குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். தாங்கள் உங்கள்மீது இருக்கின்ற அன்பு காரணமாகச் சொல்கிறோம். நீங்களாகச் செய்ய வேண்டும். "மத்திய அரசு தலையிட வேண்டும்", என்று நீங்கள் சொன்னதுபோல நாங்கள் சொல்லவில்லை. 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டும் என்று சொல்லி, டிஸ்மிஸ் செய்த உடனே கொண்டாடக்கூடிய இடத்திலே நாங்கள் இல்லை.

ஒரு நாள் எங்கள் தலைவர் சொன்னார். "மத்திய அரசிலேயே உங்களுடைய நிர்வாகத் திறமை குறைவு காரணமாக டிஸ்மிஸ் செய்யப்படலாம். ஆனால் அரசியல் காரணமாக இந்த ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்படுமானால், உங்களோடு குரல் கொடுப்போம்" என்று சொன்னார்கள் சென்ற ஆண்டு. இன்றையதினம் ஆளுவதற்கே லாயக்கில்லை. யார் என்ன செய்வார்களோ, எங்களுக்குத் தெரியாது. எப்படி ஆட்சி நடத்துகிறார்கள் என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே எம்.எல்.ஏ.-க்கள் இருக்கிறார்கள்; உரிமையுண்டா? நீங்கள் கொத்தடிமைகளைப் போல எம்.எல்.ஏ.க்களை நடத்துகிறீர்கள். டெல்லியிலே ஏன் 3 எம்.எல்.ஏ.க்கள் நேற்று வரை தங்கியிருக்கிறார்கள்? தெரியும், 126 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற ஆளுங் கட்சியில், 80 சட்டமன்ற உறுப்பினர்களே [illegible] ஒரு [illegible]நிலை ஏன் உருவாக்கப்பட்டிருக்கிறது? எத்தனை எம்.எல்.ஏக்களுக்கு சி.ஐ.டிக்கள்? எம்.எல்.ஏக்கள் என்ன உரிமை பெற்றவர்களாக இருக்கிறார்கள்? இந்த பயங்கரமான ஆட்சியில் எம்.எல்.ஏக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. எம்.எல்.ஏ.-க்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லை.

இப்படி பயத்திலே எத்தனை நாள் ஆட்சியில் இருக்க முடியும்? மாண்புமிகு அமைச்சர் என்ற வார்த்தையில் உள்ள 'மாண்புமிகு' என்ற வார்த்தையை மங்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் எவ்வளவு நேரம் பேசுவதாக உத்தேசம்? 45 நிமிட நேரம் பேசியிருக்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவரவர்களே, கடைசியாக இரண்டொரு வார்த்தைகள்தான். எம்.எல்.ஏக்கள் இடத்தில் நம் அமைச்சர்கள் போய் ஓய்வு எடுப்பதை தவறு என்று சொல்லமாட்டேன். எம்.எல்.ஏக்கள் இடத்தில் அமைச்சர்கள் சந்திக்கப் போகிறார்கள். தவறு இல்லை. இன்னும் கேட்டால், அதை நான் வரவேற்கக் கூடியவன். அமைச்சர்கள் என்றால், ஏதோ ஆகாயத்திலேயிருந்து வந்தவர்கள் அல்ல. அவர்கள் சட்ட திட்டங்களையே ஒட்டியிருக்க வேண்டுமென்று நினைக்கக்கூடியவன் அல்ல நான். மத்தியிலே இருக்கின்ற அமைச்சர்களைப் பார்த்தவன். எவ்வளவு அன்பாகப் பழகுகிறார்கள் என்பதை நான் பார்த்ததால் சொல்கிறேன். எம்.எல்.ஏ.-க்களை இரவு 3½ மணிக்கு அமைச்சர்கள் ஊர்க்காவல் பார்ப்பதுபோல, அங்கே உட்கார்ந்துகொண்டு காக்கக்கூடிய நிலை இந்த ஆட்சிக்கு வரலாமா? எம்.எல்.ஏக்களை நம்பவில்லை என்றால், இந்த ஆட்சி எத்தனை நாள் இருக்கும்? யாரையும் அடக்கி வைத்து ஆட்சி நடத்திவிட முடியாது. எம்.எல்.ஏக்களை அடிமைபோல நீங்கள் நடத்துகிறீர்கள். இப்படிப்பட்ட ஆட்சியை எத்தனை நாட்களுக்கு நடத்திவிட முடியும்? அவர்களுக்கு உரிமை வேண்டும். அவர்களை உரிமையோடு விட்டுவிட்டால் என்னவாகுமோ என்று நினைக்கிறீர்கள். உரிமையோடு விடுவதால் எந்த ஆபத்தும் வந்துவிடாது. அவர்களுக்கும் உணர்வு உண்டு. எத்தனை நாள் அவர்கள் மனைவி மக்களைப் பார்க்காமல் கோவாவிலே டெல்லியிலே இருப்பது? அவர்களுக்கு மனைவி மக்கள் நினைவு இருக்காதா? * குழந்தைகளைப் பார்க்க வேண்டுமென்பது இயற்கை. குடும்ப பாசமுள்ளவர்கள் அதுபோல் இருப்பார்கள். குழந்தைகளை கோவாவிலேயா பார்க்க முடியும்? இப்படியெல்லாம் செய்தார்களே, இது நியாயம் தானா? ஆகவே தான் சொல்கிறேன். இப்படிப்பட்ட அடிமை வாழ்வு தமிழகத்திலே இருந்து கொண்டு வருகிறது. எண்ணிப்பாருங்கள். ஆகவே தான் சொல்கிறேன். தமிழ் நாட்டிலே யாருக்குமே பாதுகாப்பில்லை, சட்டமில்லை, அமைதியில்லை, நெசவாளர்களுக்கு அமைதியில்லை. அரசு ஊழியர்களுக்கு நிம்மதியில்லை. ஆசிரியர்களுக்கு நிம்மதியில்லை. யாருக்கும் எந்தவிதமான பாதுகாப்பு

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





மில்லை. அதுபோலவே காவலர்களாயிருந்தாலும், இந்த நாட்டிலே வாழக்கூடிய 4½ கோடி மக்களாக இருந்தாலும், அவர்களுக்கு இந்த அரசாங்கத்திலே பாதுகாப்பு இல்லை.

(பிற்பகல் 6.00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * * * என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** எனவே எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை என்று சொல்லுகின்ற நேரத்தில், அதெல்லாம் இல்லை என்ற காரணத்தால், ஆட்சியிலே நீடிக்கலாமென்று நினைப்பார்களேயானால், துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக முன்னை இந்த அரசாங்கத்திற்குச் சொல்கிறேன். முன்பெல்லாம் சொன்னார்கள், எதற்கெடுத்தாலும் சொன்னார்கள், மக்கள் எங்கள் பக்கம் என்று. ஆனால் இப்போது அந்த மக்கள் உங்கள் பக்கமில்லை. இப்போது நீங்கள் அந்த மக்களுடைய விரோத சர்க்காராக மாறிவிட்டீர்கள். ஜனநாயகத்திற்கு விரோத சர்க்காராக மாறிவிட்டீர்கள். மக்களைப் புறக்கணித்த சர்க்காராக மாறிவிட்டீர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் தொடர்ந்து ஆட்சி நடத்த முடியுமென்று நம்பினால், 12 ஆம் தேதி வரை மக்கள் பொறுத்திருப்பார்கள். சட்டசபை நடக்கலாம், மேல்சபை நடக்கலாம். அதற்குப் பிறகு நீடிக்கலாமென்று நினைக்கிறீர்கள். அதற்குப் பிறகும் நீடிக்குமானால், மக்கள் எங்கள் பக்கம் என்று நீங்கள் சொன்ன அந்த மக்கள் இப்போது எங்கள் பக்கம் இருப்பதால், உங்களை நாட்டிலே நடமாட விட மாட்டார்கள் இப்படிச் சொல்கின்ற காரணத்தால், அச்சுறுத்துகிறேன் என்று நினைக்கிறீர்கள். தேர்தலுக்கு முன்னாடியே அப்படி நடந்தது. முதலமைச்சரவர்களைவிட வல்லமை படைத்தவர்கள் யாருமில்லை. அவரை எங்கள் ஊருக்கு வராதே என்று திருப்பி அனுப்பிய வரலாறு திருநெல்வேலி மாவட்டத்தில் உருவாகிவிட்டது. உசிலம்பட்டியில், போகாதே என்று சொல்லி, திருப்பி அனுப்பினார்கள். ஆயிரக்கணக்கான போலீஸ் படையோடு முதலமைச்சரவர்கள் செல்லும்போது, ஊருக்குள் போகாதே என்று சொல்லும்போது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், அமைச்சர் திரு. இராகவானந்தம் போன்றவர்கள் என்ன செய்ய முடியும்? 12 ஆம் தேதிக்குப் பிறகு இந்த நாட்டிலே மக்கள் அமைதியாக இருப்பார்கள், என்னதான் தேர்தலிலே தீர்ப்பு தந்தாலும், வாய் மூடிக் கிடப்பார்கள் என்று நம்பிக்கொண்டு ஊர்வலம் வந்தால், அந்த ஊர்வலத்தை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். இதையெல்லாம் சிந்தித்து நல்ல முடிவை எடுங்கள் என்று சொல்லி, இந்த உரை

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

தான் சொல்லுகின்ற கருத்துக்களில் எதனையும் பிரதிபலிக்காத காரணத்தால், இதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்லி, வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கற்பக விருட்சமா என்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலும் சில பேர்களுக்குத் தனிப்பட்ட முறையில் உதவி செய்து, அதைத் திருப்பி வாங்கும் நிலைமை இருந்தது. அந்த நிலைமையைப் பார்க்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் என்ன கற்பகவிருட்சமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6.05)

### 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### A. *Statutory Rules and Orders.*

60. Notification issued with Memorandum No. 13987|RDI|79-3, Education, dated the 12th March 1979 in regard to an amendment to the Education Department Notification No. II (2)|EDU|1345|79, dated the 16th February 1979 published at page 109 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated the 28th February 1979. [Laid on the table of the House under section 43 (2) of the Perarignar Anna University of Technology Act, 1978 (Tamil Nadu Act 30 of 1978)].

61. Notification issued with G.O. Ms. No. 1602, Commercial Taxes and Religious Endowments, dated the 4th October 1979 in regard to an amendment to the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Rules, 1965. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Tamil Nadu Act 30 of 1964)].

#### B. *Reports, Notifications and Other Papers.*

**Nil.**





### இணைப்பு.

(413 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அறிக்குறிப்பைக் காண்க.)

தமிழ் கலைக் களஞ்சியத்தின் முதல் பதிப்பு 10 பாகங்களாக 1969-70ம் வருடத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு 3,000 படிகள் வெளியிடப்பட்டன. அந்த 3,000 படிகளும் தீர்ந்து போயின. ஆகையால் 12 வருட காலத்தில் ரூ. 75 லட்சம் செலவில் தமிழ் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பைத் தயாரித்து 10,000 படிகள் அச்சிட்டு வெளியிட தமிழ் வளர்ச்சிக் கழகம் கருதியது. அரசாணை நிலை எண் 768, கல்வி, நாள் 4—4—1977-ல் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு மேற்படி பணி 4 வருடங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் முதற்கண் ரூ. 2 லட்சம் மானியம் வழங்கப்பட்டது.

2. ஏப்ரல் 1978-ல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முதல் தொகுதி வெளியீடு சம்பந்தமான விழாவை 11—4—1978 அன்று நடத்தி வைக்க முதலமைச்சர் கேட்டுக் கொள்ளப்பட்டார் எனவும், இந்த முதல் தொகுதி வெளியீடு காரணமாக 1978-79ல் ஏற்படக்கூடிய செலவிற்காக தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 5 லட்சம் நிதியுதவி அளிக்குமாறு கேட்டபோது மேலும் ரூ. 3 லட்சம் ஒப்பளிக்கப்பட்டது. அக்டோபர் 1978ல் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் வெளியீட்டு வேலை தொடர்ந்து நடைபெற வகைசெய்யும் பொருட்டு முழுத் தொகையாக ரூ. 75 லட்சத்திற்கும் ஒப்பளிக்க கேட்டுக் கொண்டார்.

3. மேற்கண்ட கோரிக்கையை ஆய்ந்தபோது கலைக் களஞ்சிய மேலாண்மைக் குழுவில் அரசு அலுவலரை சேர்த்துக் கொள்ளவேண்டும்; வெளியீட்டு காலத்தை 12 ஆண்டுகளிலிருந்து 6 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும்; மற்றும் வெளியீட்டுச் செலவைக் குறைக்கும் வகையில் அச்சிட்டு வெளியிடும் வேலையைத் தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனத்திடம் அளிக்க வேண்டும் என்று யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் மேற்கண்ட திருத்திய திட்டப்படி தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு ஏற்கனவே அளித்த ரூபாய் 5 லட்சத்தைத் தவிர மேலும் ரூபாய் 20 லட்சம் மானியம் அளிக்கவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளார்கள். இக்கருத்தானது அரசின் ஆய்வில் உள்ளது. விரைவில் முடிவெடுத்து ஆணை வெளியிடப்படும். அரசாணை வெளியீட்டுடன் கலைக் களஞ்சியப் பணியில் ஊழியர்கள் தொடர்ந்து ஈடுபட முடியும்.

# Index to Tamil Nadu Legislative Council Debates

Fifty-seventh Session of the Legislative Council under the Constitution of India.

1st, 2nd, 4th to 6th February 1980

Volume CLXV (Nos. 1 to 5)

## A

PAGES

ACCIDENTS

Question *re* road—, special scheme to reduce number of ... 223–230

ADJOURNMENT MOTION *Re*—

Diarrhoea, alleged death of nine persons due to— in Thanjavur district ... 333–335

Hartal by Tamil Nadu Merchants' Association ... 34–39

Indefinite fast by representatives of University Teachers' Association ... 153–157

Lathi-charge by Police on students as a sequel to teachers' agitation against removal from service of a teacher of St. Joseph's College, Tiruchirappalli ... 157–161

Petroleum products, suspension of normal supplies owing to 'go-slow' campaign by employees of Bharat Petroleum Corporation ... 410–412

A—*cont.*


PAGES

ADJOURNMENT MOTION *re—cont.*

S.P.K. College, Ramanathapuram district, fast by teachers protesting against beating up of a teacher by management of ... 161-164

University Teachers' Association, fast undertaken by members of Joint Action Committee of ... 336-343

AGRICULTURAL IMPLEMENTS SERVICE STATIONS—

Question *re* closure of— in Kanyakumari district from 1-1-1979 to 30-4-1979 and reopening of ... 408-409

AGRICULTURAL LANDS RECORD OF TENANCY RIGHTS ACT, 1969—

Revenue Department Notification II-I No. 3987 (*b*) of 1971— Amendment to Notification laid on the table ... 207

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—

Agriculture Department Notification No. II(2)/AG/774/79, dated 19th January 1979, amendment to,—Notification laid on the table ... 75

Agriculture Department Notification No. II(2)/AG/1467/78, dated 21st March 1978, amendment to—, notification laid on the table ... 98

Agriculture Department Notification No. II(2)/AG/2978/79, dated 7th May 1979, amendment to—Notification laidon the table ... 208

Change of address of certain regulated markets in Tirunelveli Market Committee, notification laid on the table ... 94

Control over purchase and sale of brinjal in South Arcot district under section 3 of—, notification laid on the table ... 98




A—*cont.*


PAGES

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—*cont.*

Control over purchase and sale of cotton in revenue taluks of Tirupathur, Chengam, Tiruvannamalai and Polur in North Arcot district under section 3 of—, notification laid on the table ... 97-98

Declaration of Kanyakumari district as notified area for purposes of—, in respect of raw rubber in all forms, notification laid on the table ... 97

Declaration of Madurai district as notified area in respect of sugarcane jaggery in all forms under—, notification laid on the table ... 94-95

Declaration of notified market area in respect of Melur Market, notification laid on the table ... 207

AGRICULTURAL PRODUCE MARKETS RULES, 1962—

Amendments to—, notification laid on the table ... 208

AGRICULTURAL UNIVERSITY ACT, 1971—

Amendment to—, notification laid on the table ... 96

AGRICULTURE DEPARTMENT—

Inclusion of post of Geological Assistants in Engineering wing of— within Commission's purview, notification laid on the table ... 91

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Adjournment motion *re*—

Indefinite fast by representatives of University Teachers' Association ... 155-157

Lathi-charge by Police on students as a sequel to teachers' agitation against removal from service of a teacher of St. Joseph's College, Tiruchirappalli ... 159-161

A—*cont.*


PAGE

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—cont.

Adjournment motion *re.—cont.*

S.P.K. College, Ramanathapuram district, fast by teachers protesting against beating up of a teacher by management of ... 162–16

University Teachers' Association, fast undertaken by members of Joint Action Committee of 339–34

Governor's Address, discussion on ... 74, 75, 76, 77, 78, 82, 83, 187, 272, 274, 282, 42, 427–42

Tamil Encyclopaedia, statement *re* unemployment of employees caused by sudden stoppage of work relating to preparation of ... 413–41

ARUMUGAM, THIRU S.—

Governor's Address, discussion on ... 174, 23, 348 414–430, 43

B

BALASUBRAMANIAM, THIRU A.—

Governor's Address, discussion on ... 83–91, 175, 239, 24, 251–263 437, 44

BALASUBRAMANIAM, THIRU KU. MA.—

BILL(S)—

Constitution (Forty-fifth Amendment) Bill, 1980, as introduced in Lok Sabha, laid on the table ... 38

Constitution (Forty-fifth Amendment) Bill, 1980, as passed by Houses of Parliament, laid on the table ... 39




B—*cont.*


PAGES

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committee(s)

BUSINESS OF THE HOUSE—

Meeting on 6th February 1980 ... 329

C

CENTRAL PRISON, MADRAS—

*See* Jails

CHAIRMAN, MR.—

Adjournment motion *re*—

Diarrhoea, alleged death of nine persons due to—, in Thanjavur District ... 333, 335

Hartal by Tamil Nadu Merchants' Association ... 34, 35, ... 39

Indefinite fast by representatives of University Teachers' Association ... 153, 154, ... 157

Lathi charge by Police on students as a sequel to teachers' agitation against removal from service of a teacher of St. Joseph's College, Tiruchirappalli ... 157, 158, ... 161

Petroleum products, suspension of normal supplies owing to 'go-slow' campaign by employees of Bharat Petroleum Corporation ... 410, 412

S.P.K. College, Ramanathapuram district, fast by teachers protesting against beating up of a teacher by management ... 161, 164

University Teachers' Association, fast undertaken by Members of Joint Action Committee of ... 336, 337, ... 338, 343

| | PAGES |
|---|---|
| CHAIRMAN, MR.—*cont.* | |
| Announcement *re*— | |
| Business Advisory Committee, decision of ... | 40, 412 |
| Business of the House on 6th February 1980 ... | 329 |
| Call attention notice given by Thiru C. R. Lakshmikandhan, postponement of ... | 233 |
| Panel of Vice-Chairmen ... | 41 |
| Governor's Address, discussion on ... | 165, 237, 345, 347, 454, 457, 461, 462 |
| Information *re*— | |
| Attemped theft of car of a Member of the Council ... | 164 |
| Call attention notice given by Thiru C. R. Lakshmikandhan, postponement of ... | 236 |
| Call attention notice given by Thiru V. Thangapandian, delay in taking up ... | 231, 235, 236 |
| Notice of adjournment motion ... | 39 |
| Resignation of a Minister ... | 42, 43, 44 |
| Obituary reference *re*— | |
| Death of Karanth, Thiru K. R., former Member of the Council and Minister of Composite Madras State ... | [illegible] |







| | PAGES |
|---|---|
| CHAIRMAN, MR.—*cont.* | |
| Obituary reference *re*—*cont.* | |
| Death of Ramaswamy Iyer, Thiru T. S., former Member of the Council and Subbiah, Thiru S., Member of the Assembly ... | 1 |
| Privilege issue *re* surveillance by Police on Veerasami, Thiru Arcot N., Member of the Council | 31, 32, 33, 34, 330, 331, 332 |
| Time-limit for receipt of amendments to Motion of Thanks for Governor's Address ... | 40 |
| CHENGALPATTU DISTRICT— | |
| Question *re* change of name of—, as Kancheepuram district ... | 395-397 |
| CHIT FUNDS RULES, 1964— | |
| Amendment to—, notification laid on the table ... | 93 |
| CIVIL SUPPLIES CORPORATION LIMITED, TAMIL NADU— | |
| Fourth Annual Report of—, for 1975-76, laid on the table ... | 207 |
| CIVIL SUPPLIES DEPARTMENT— | |
| Exclusion of posts of Deputy Commissioner of Civil Supplies, Assistant Commissioner of Civil Supplies and Assistant Secretary to Commissioner of Civil Supplies in—, from Commission's purview, notification laid on the table ... | 95 |

C—*cont.*


| | PAGES |
|---|---|
| **COLLEGES—** | |
| Question *re* Pharmacist Training—, starting of ... | 29–31 |
| **COMMITTEES—** | |
| Business Advisory Committee, decision of ... | 40, 412 |
| **CO-OPERATIVE BANK(S)—** | |
| Question *re* Panchayat Union Staff and Teachers —in every Panchayat Union, formation of | 297–299 |
| **CO-OPERATIVE SOCIETIES—** | |
| Question *re*— | |
| Tamil Nadu Co-operative Housing Society, token fast by staff on 24th September 1979 ... | 221–223 |
| Village Co-operative Credit Societies in South Arcot district which have not handed over their records in spite of their inclusion in larger viable units, number of ... | 295–296 |
| **CO-OPERATIVE SOCIETIES RULES, 1963—** | |
| Amendments to—, notifications laid on the table ... | 95, 97 |


## D


| | |
|---|---|
| **DAMODARAN, THIRU A. R.—** | |
| Adjournment motion *re* Petroleum products, suspension of normal supplies owing to 'go-slow' campaign by employees of Bharat Petroleum Corporation ... | 410–411 |
| Governor's Address, discussion on ... | 60, 241 |




D—*cont.*


| | PAGES |
|---|---|
| **DEPUTY CHAIRMAN, MR.—** | |
| Governor's Address, discussion on ... | 60, 62, 63, 64, 66, 68, 69, 76, 78, 89, 173, 175, 176, 187, 190, 204, 250, 273, 274, 276, 280, 283, 292, 348, 350, 352, 353, 371, 372, 376, 379, 423, 424, 426, 427, 428, 430, 431, 436, 437, 440, 442, 443, 450, 453, 496, 502, 503, 504 |
| **DEPUTY INSPECTOR OF SCHOOLS—** | |
| Question *re* representation to shift the office of—, functioning at Kumaratchi to Chidambaram ... | 313–314 |
| **DIARRHOEA—** | |
| Adjournment motion *re* alleged death of nine persons due to—, in Thanjavur district ... | 333–335 |
| **DIESEL—** | |
| Minister's attention called to hindrance to passenger transport due to stoppage of supply of ... | 343–345 |
| **DRAVIDAMANI, THIRU A.—** | |
| Governor's Address, discussion on ... | 273, 354–363 |


## E


| | |
|---|---|
| **EDUCATION DEPARTMENT—** | |
| Inclusion of post of Film Librarian in the Office of Director of School Education, Madras within Commission's purview, notification laid on the table ... | 9 |

E—*cont.*


PAGES

ELECTRICITY DUTY RULES, 1939—

Admendments to—, notification laid on the table ... 98

ENTERTAINMENTS TAX ACT, 1939—

Amendments to Schedules to—, notifications laid on the table ... 92, 93

ENTERTAINMENTS TAX RULES, 1939—

Amendment to—, notification laid on the table ... 94

EXAMINATIONS—

Question *re*—

High Schools in which nobody passed in 10th and 11th Standard—, during March—April 1978 ... 16–23

Representation to fix 35 per cent for passing Teachers' Training—, for diploma holders ... 14–15

EX-SERVICEMEN—

Question *re* number of—, in Tamil Nadu and recognition of—, Association ... 300–304


F


FAST—

Adjournment motion *re* fast undertaken by members of Joint Action Committee of University Teachers' Association ... 336–343

FLOOD RELIEF—

Question *re* details *re* Central financial aid sought between 1st July 1977 and 30th December 1978 for ... 2–9


F—*cont.*


PAGES

FLOODS—

Question *re* damages due to—, in Kannottru Odai to agricultural lands on Vaiyampatty–Ilakkakurichi road and construction of barrage to prevent recurrence ... 407–408

FOOD POISONING—

Question *re* number of—, cases admitted in Hospital at Madurai in July 1978 and conduct of enquiry 26–29


G


GENERAL SALES TAX RULES, 1959—

Amendment to—, notification laid on the table ... 207

GOVERNOR'S ADDRESS—

Discussion on ... 41–91, 165–206, 237–293, 315–383, 414–504

Laid on the table ... 99

Time-limit for receipt of amendments to Motion of Thanks for ... 40


H


HANDLOOM CLOTH—

Question *re* foreign exchange earned during 1978 and anticipated in 1979 from export of ... 149–153

H—*cont.*

PAGES

HANDLOOMS AND TEXTILES DEPARTMENT—

Inclusion of post of Technical Inspectors and Technical Instructors redesignated as Junior Technical Assistants in—within Commission's purview, notification laid on the table ... 93

HARTAL—

Adjournment motion *re*—, by Tamil Nadu Merchants' Association ... 34–39

HIGHWAYS DEPARTMENT—

Question *re* Annual expenditure on rent for office buildings and godowns of ... 230–233

HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS ACT, 1959—

Delegation of powers to Commissioner to nominate trustees, notification laid on the table ... 206

HOTELS—

Question *re* number, category-wise, of—in Madras City, proceeded against under Prohibition Act ... 145–149

I

INAM ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACT, 1963—

Revenue Department Notification II-1 No. 1261 of 1965, dated 12th March 1965, amendment to—, notification laid on the table ... 91

Revenue Department Notification II-1 No. 1431 of 1965, dated 30th March 1965, amendment to—, notification laid on the table ... 96



I—*cont.*

PAGES

INFORMATION AND PUBLIC RELATIONS DEPARTMENT—

Question *re* termination of services of Public Relations Officers during 1977–78 in—, and their reinstatement ... 131–134

INFORMATION *re*—

Adjournment motion, notice of ... 39

Attempted theft of car of a Member of the Council ... 164–165

Call Attention notice given by Thiru C. R. Lakshmikandhan, postponement of ... 236–237

Call Attention notice given by Thiru V. Thangapandian, delay in taking up ... 233–236

Resignation of a Minister ... 41–44

INQUIRY COMMISSION—

Interim Report of—of Justice Thiru W. S. Krishnaswami Naidu *re* excesses committed during the period from 1st January 1972 to 31st May 1975 prior to Emergency, laid on the table ... 99

INSPECTRESS OF GIRLS' HIGH SCHOOLS—MADRAS—

Question *re* abolition of post of ... 209–212

INSTITUTE OF CHEMICAL TECHNOLOGY—

Inclusion of post of Senior Instructor in Sugar Technology at—within Commission's purview, notification laid on the table ... 93

INSTRUCTORS IN WEAVING—

*See* Teachers.

PAGE

IRRIGATION—

Question *re*—

Damages and breaches in channels, ponds and tanks due to rains to Kanyakumari district in 1978–79, carrying over to next year of unspent balance of financial allotment for repair of ... 141-14[illegible]

New channel from Pichavaram Regulator to Lower Thirukkazhippalai, Chidambaram Taluk, provision of ... 143-14[illegible]

J

JAIL SUBORDINATE SERVICE—

Inclusion of post of Social Worker within Commission's purview, notification laid on the table ... 2[illegible]

JAILS—

Question *re* Central Prison, Madras, number of Resident Doctors working in Hospital in—and month-wise average number of prisoners treated during 1977 and 1978 ... 308-311

JANARTHANAM, Dr. T. R.—

Governor's Address, discussion on ... 44-58, 60, 66, 83, 182, 197, 428, 429, 496, 504

JEWEL SHOPS—

Question *re* raid by Commercial Tax Officers on—in Madras during February 1979 ... 397-39[illegible]

K

PAGES

KARANTH, Thiru K.R.—

Obituary reference *re* death of—, former Member of the Council and Minister of Composite Madras State ... 120

L

LAKSHMIKANDHAN, Thiru C. R.—

Adjournment motion *re*—

Hartal by Tamil Nadu Merchants' Association ... 35

Lathi charge by Police on students as a sequel to teachers' agitation against removal from service of a teacher of St. Joseph's College, Tiruchirappalli ... 159

S. P. K. College, Ramanathapuram District, fast by teachers protesting against the beating up of a teacher by management ... 162

University Teachers' Association fast undertaken by members of Joint Action Committee of ... 336-337

Announcement *re* postponement of call attention notice given by ... 238

Diesel, calling Minister's attention to hindrance to passenger transport due to stoppage of supply ... 344, 345

Information *re* call attention notice given by—, postponement of ... 236

Tamil Encyclopaedia, calling Minister's attention to unemployment of employees caused by sudden stoppage of work relating to preparation of ... 412-413, 414

LAND IMPROVEMENT SCHEMES ACT—

Date of coming into force of— in areas specified in Schedule, notification laid on the table ... 97

LEAVE—

Question *re* Mass Casual—by employees of offices of District Collector and Revenue Divisional Officer, Tirunelveli, during November 1978 ... 9-11

L—*cont.*


PAGES

LEVY OF RYOTWARI ASSESSMENT ON FREE-HOLD LANDS ACT, 1972—

Date of coming into force of—, notification laid on the table ... 91

LIQUOR (LICENCE AND PERMIT) RULES, 1960—

Amendments to—, notification laid on the table ... 384


M


MAGISTRATES—

Question *re* number of Sub-Magistrates and Judicial Second Class—recruited from the Bar and from among Ministerial servants from 1st January 1973 to 30th April 1979 and position of two categories after integration ... 311-319

MANDAKINI KRISHNAMURTHI, THIRUMATHI—

Governor's Address, discussion on ... 200-206, 426

MANI, THIRU KO. SI—

Governor's Address, discussion on — 190-200

MANICKAM, THIRU P.—

Governor's Address, discussion on ... 346, ... 467-482

MANOHARAN, THE HON. THIRU K.—

Governor's Address, discussion on ... 62

Information *re* resignation of a Minister ... 42-43

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Announcement *re* postponement of call-attention notice given by Thiru C. R. Lakshmikandhan ... 233




M—*cont.*


PAGES

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*

Diesel, calling attention to hindrance to passenger transport due to stoppage of supply ... 343-345

Tamil Encyclopaedia, calling attention to unemployment of employees' caused by sudden stoppage of work relating to preparation of ... 412-414

MEENAKSHISUNDARAM, THIRU K.—

Adjournment motion *re*—

Alleged death of nine persons due to diarrhoea in Thanjavur district ... 333

Hartal by Tamil Nadu Merchants' Association ... 34, 35

Indefinite fast by representatives of University Teachers' Association ... 154-155

Lathi charge by Police on students as a sequel to teachers' agitation against removal from service of a teacher of St. Joseph's College, Tiruchirappalli ... 158, 159

S.P.K. College, Ramanathapuram district, fast by teachers protesting against beating up of a teacher by management of ... 161-162

University Teachers' Association, fast undertaken by members of Joint Action Committee of ... 337, 338-339, 343

Governor's Address, discussion on ... 69-83 240, 454

Information *re* notice of adjournment motion ... 30

MEMBERS OF LEGISLATURE—

Information *re* attempted theft of car of a Member of the Council ... 164-165

PAGES

MIAKHAN, THIRU J. M.—
Governor's Address, discussion on ... 263–266

MINISTER(S)—
Information *re* resignation of a ... 41–44

MOBILE SCIENCE LABORATORY VANS—
Question *re* functioning of—, in educational districts ... 212–215

MOTOR VEHICLES RULES, 1940—
Amendments to—, notifications laid on the table ... 92, 95, ... 96, 207, 208

MOTOR VEHICLES TAX—
Exemption of Vehicles WBG 9683, TMX 9675 and TMP 9884 from—, notification laid on the table ... 207

MOTOR VEHICLES TAXATION ACT, 1974—
Appointing Accountant or Manager or Officer in-charge of Department attending to collection work in branches of Indian Overseas Bank to exercise and perform functions of Licensing Officers under—in respect of non-transport vehicles, notification laid on the table ... 97

MUNICIPAL GENERAL SERVICE RULES, 1970—
Amendment to—, notification laid on the table ... 95

MUTHUSWAMY, THIRU S.—
Governor's Address, discussion on ... 182, 239, 240–241, 266–284, 289



MUTHUSWAMY, THIRU S.—*cont.*

PAGES

Information *re* call attention notice given by Thiru V. Thangapandian, delay in taking up ... 235, 236

*N.*

NALLASIVAN, THIRU A.—
Adjournment motion *re* indefinite fast by representatives of University Teachers' Association ... 155
Governor's Address, discussion on ... 184, 345–346 454–466

NATIONAL FOUNDATION FOR TEACHERS' WELFARE—
Question *re* balance as on 1st October 1978 and mode of sanction of assistance from ... 216–220

O

OBITUARY REFERENCE *re*—
Death of Karanth, Thiru K. R., former Member of the Council and Minister of Composite Madras State ... 123
Death of Ramaswamy Iyer, Thiru T. S., former Member of the Council and Subbiah, Thiru S., Member of the Assembly ... 1

ORDINANCE(S) LAID ON THE TABLE—
Cultivating Tenants (Protection from Eviction) Amendment Ordinance, 1980 ... 99
Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Ordinance, 1980 ... 99
Debt Relief (Second Amendment) Ordinance, 1979 ... 99
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Ordinance, 1979 99

PAGES

ORDINANCE(S) LAID ON THE TABLE—*cont.*

Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Ordinance, 1979 ... 98

Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Ordinance, 1979 ... 98

P.

PANCHAYATS ACT, 1958—

Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A. 123 of 1962, dated 1st February 1962, amendment to—, notification laid on the table ... 92

Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A. 489 of 1961, dated 26th April 1961, amendment to—, notification laid on the table ... 96

PANEL OF VICE-CHAIRMEN—

Announcement *re.* ... 41

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969—

Revenue Department notification II-1 No. 3987 (b) of 1971, dated 7th September 1971, amendment to,—(G.O. Ms. No. 2040, Revenue, dated 14th September 1979) ... 207

Agricultural Produce Markets Act, 1959—

Agriculture Department Notification No. II(2)/AG/1467/78, dated 21st March 1978, amendment to—, (G.O. Ms. No. 1637, Agriculture, dated 20th August 1979) ... 98



PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Agricultural Produce Markets Act, 1959—*cont.*

Agriculture Department Notification No. II(2)/AG/774/79, dated 19th January 1979, amendments to— (G.O. Ms. No. 1855, Agriculture, dated 26th September 1979) ... 95

Agriculture Department Notification No. II(2)/AG/2978/79, dated 7th May 1979, amendment to—(Government letter No. 110747/AM II/79-2, Agriculture, dated 17th December 1979) ... 208

Change of address of certain regulated markets in Tirunelveli Market Committee (G.O. Ms. No. 1582, Agriculture, dated 9th August 1979) ... 94

Control over purchase and sale of brinjal in South Arcot district under section 3 (G.O. Ms. No. 2023, Agriculture, dated 2nd November 1979)... 98

Control over purchase and sale of cotton in revenue taluks of Tirupattur, Chengam, Tiruvannamalai and Polur in North Arcot districts under section 3 of (G.O. Ms. No. 1892, Agriculture, dated 4th October 1979) ... 97–98

Declaration of Kanyakumari district as notified area for purposes of—in respect of raw rubber in all forms (G.O. Ms. No. 1893, Agriculture, dated 4th October 1979) ... 97

Declaration of Madurai district as notified area in respect of sugarcane jaggery in all forms under—(G.O. Ms. No. 1715, Agriculture, dated 1st September 1979) ... 94–95

Declaration of notified market area in respect of Melur Market (G.O. Ms. No. 2025, Agriculture, dated 2nd November 1979) ... 207

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Agricultural Produce Markets Rules, 1962, amendments to—(G.O. Ms. No. 2199, Agriculture, dated 5th December 1979) ... 208

Agricultural University Act, 1971, amendment to—(G.O. Ms. No. 1838, Agriculture (AU. I), dated 25th September 1979) ... 96

Agriculture Department, inclusion of post of Geological Assistants in Engineering Wing within the Commission's purview [G.O. Ms. No. 1073, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 20th September 1979] ... 91

BILLS—

Constitution (Forty-fifth Amendment) Bill, 1980, as introduced in Lok Sabha ... 384

Constitution (Forty-fifth Amendment) Bill, 1980, as passed by both Houses of Parliament ... 384

Chit Fund Rules, 1964, amendment to—(G.O. Ms. No. 1667, Commercial Taxes and Religious Endowments, dated 24th October 1979) ... 93

Civil Supplies Corporation Limited, Tamil Nadu, Fourth Annual Report for 1975-76 ... 207

Civil Supplies Department, exclusion of posts of Deputy Commissioner of Civil Supplies, Assistant Commissioner of Civil Supplies and Assistant Secretary to Commissioner of Civil Supplies in—from the Commission's purview [G.O. Ms. No. 1180, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 17th October 1979] ... 95



PAGES

APERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Co-operative Societies Rules, 1963, amendments to—(G.O. Ms. Nos. 585 & 629, Co-operation, dated 21st September 1979 and 1[illegible]th October 1979) ... 95, 97

Education Department, inclusion of post of Film Librarian in the office of the Director of School Education, Madras within the Commission's purview [G.O. Ms. No. 1167, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 15th October 1979] ... 93

Electricity Duty Rules, 1939, amendments to—[G.O. Ms. No. 915, Public Works (Electricity), dated 22nd May 1979] ... 98

Entertainments Tax Act, 1939, amendments to—(G.O. Ms. Nos. 1581 and 1591, Commercial Taxes and Religious Endowments, dated 25th September 1979 and 3rd October 1979) ... 92, 93

Entertainments Tax Rules, 1939, amendment to—(G.O. Ms. No. 1592, Commercial Taxes and Religious Endowments, dated 3rd October 1979) ... 94

General Sales Tax Rules, 1959, amendment to—(G.O. Ms. No. 1767, Commercial Taxes and Religious Endowments, dated 29th November 1979) 207

Governor's Address to both Houses of Legislature on 30th January 1980 ... ... ... 99

Handlooms and Textiles Department, inclusion of post of Technical Inspectors and Technical Instructors redesignated as Junior Technical Assistants in—within the Commission's purview [G.O. Ms. No. 1164, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 13th October 1979] ... 93

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*

Hindu Religious and Charitable Endowments Act, 1959, delegation of powers to Commissioner to nominate trustees (G.O. Ms. No. 1468, Commercial Taxes and Religious Endowments, dated 12th September 1979) ... ... ... 206

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963—

Revenue Department Notification II-1 No. 1061 of 1965, dated 12th March 1965, amendment to —(G.O. Ms. No. 1679, Commercial Taxes and Religious Endowments, dated 27th October 1979) ... ... ... ... ... 94

Revenue Department Notification No. II-1, No. 1431 of 1965, dated 30th March 1965, amendment to—(G.O. Ms. No. 1761, Commercial Taxes and Religious Endowments, dated 20th November 1979) ... ... ... 96

Inquiry Commission, Interim Report of—of Justice Thiru W. S. Krishnaswami Naidu *re* the excesses committed during the period from 1st January 1972 to 31st May 1975, prior to Emergency ... 99

Institute of Chemical Technology, Madras, inclusion of post of Senior Instructor in Sugar Technology at—within the Commission's purview [G.O. Ms. No. 1072, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 20th September 1979] ... 93

Jail Subordinate Service, inclusion of post of Social Worker within the Commission's purview [G.O. Ms. No. 1304, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 30th November 1979] ... ... ... ... ... 206



PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*

Land Improvement Schemes Act, date of coming into force of—in areas specified in the Schedule (G.O. Ms. No. 2028, Agriculture, dated 2nd November 1979) ... 97

Levy of Ryotwari Assessment on Free-hold Land Act, 1972, date of coming into force of—(G.O. Ms. No. 1616, Commercial Taxes and Religious Endowments, dated 16th October 1979) ... 91

Liquor (Licence and Permit) Rules, 1960, amendments to—[G.O. Ms. No. 265, Home (P & E IV), dated 2nd February 1980] ... ... ... 384

Motor Vehicles Rules, 1940, amendments to—(G.O. Ms. Nos. 1811, Home, dated 19th July 1979, 1858, dated 25th July 1979, 2271, dated 10th September 1979, 2272, dated 10th September 1979, 2486 dated 29th September 1979, 2670, dated 25th October 1979) 2713, dated 30th October 1979 ... ... ... ... ... 92, 95, 96, 208, 207,

Motor Vehicles Tax, exemption of vehicles WBG 9683, TMX 9675 and TMP 9884 from—[G.O. Ms. No. 3146, Home (Transport-I), dated 22nd December 1979] ... ... ... ... 207

Motor Vehicles Taxation Act, 1974—

Appointing Accountant or Manager or Officer-in-Charge of Department attending to collection work in branches of Indian Overseas Bank to exercise and perform functions of Licensing Officers under—in respect of non-transport vehicles (Government Memorandum No. 43691/Tr. I/79-2, Home, dated 24th March 1979) ... 97

Municipal General Service Rules, 1970, amendment to—(G.O. Ms. No. 1107, Rural Development and Local Administration, dated 21st July 1979) 95

P—*cont.*

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*


Ordinances—

Cultivating Tenants (Protection from Eviction) Amendment Ordinance, 1980 ... ... 99

Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Ordinance, 1980 ... ... ... 99

Debt Relief (Second Amendment) Ordinance, 1979 99

Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Ordinance, 1979 ... 98

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Ordinance, 1979 ... 98

Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Ordinance, 1979 ... ... ... ... ... 98

Panchayats Act, 1958—

Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-123 of 1962, dated 1st February 1962, amendment to—(G.O. Ms. No. 1478, Rural Development and Local Administration, dated 21st September 1979) ... ... ... ... ... 92

Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A. 489/1961, dated 26th April 1961, amendment to—(G.O. Ms. No. 1758, Rural Development and Local Administration, dated 6th November 1979) ... ... ... ... ... 96

Perarignar Anna University of Technology Act, 1978, Education Department Notification No. II (2)/EDN/1345/79, dated 16th February 1979, amendment to—(Memorandum No. 13987/RDI/79-3, Education, dated 12th March 1979) 60




P—*cont.*

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*


Poompuhar Shipping Corporation Limited, Fifth Annual Report for 1979 ... ... ... 208

Public Service Commission, Annual Report of—for 1977–78 ... ... ... 97

Public Service Commission Regulations, 1954, amendment to—[G.O. Ms. No. 1169, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 15th October 1979] ... ... ... 94

Rajya Sabha Secretariat, New Delhi, extract of paragraphs 1 to 4 of letter No. RS. 1/1/80-B, dated 28th January 1980 from Secretary-General of ... ... ... 384

Sales Tax amendment to Revenue Department Notification III No. 162 of 1972, dattd 9th December 1971 (G.O. Ms. No. 1775, Commercial Taxes and Religious Endowments, dated 3rd December 1979) ... ... ... ... 208

State Industries Promotion Corporation of Tamil Nadu Limited, Eighth Annual Report of—for 1978–79 ... ... ... ... 92

Tamil Nadu Cements Corporation Limited, Annual Report and Accounts of—for year ending 31st March 1979 ... ... ... 94

Tamil Nadu Ceramics Limited, Fourth Annual Report of—for 1977–78 ... ... ... ... 92

Tamil Nadu Handicrafts Development Corporation Limited, Third Annual Report of—for 1975–76 93

Tamil Nadu Industrial Development Corporation Limited, Annual Report of—for year ending 31st March 1979 94

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Tamil Nadu Industrial Investment Corporation Limited, Tamil Nadu Government's review on working of—for financial year 1977-78 together with 29th Annual Report and Statement of Accounts 95

Tamil Nadu Salt Corporation Limited, Fifth Annual Report for 1978 ... ... ... ... 98

Tamil Nadu Tea Plantation Corporation Limited, Annual Report of—for 1977-78 ... ... 92

Tamil Nadu Vigilance Commission, Eleventh Annual Report of—for period from 1st April 1976 to 31st March 1977 ... ... ... ... ... 99

Technical Education Department, inclusion of post of Associate Lecturer in Salesmanship in—under Tamil Nadu Educational Subordinate Service within the Commission's purview [G.O. Ms. No. 358, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 21st March 1979]. ... 96

Thanthai Periyar Transport Corporation Limited, Third Annual Report of—for 1978 ... ... 93

(Transferred Territory) Ryotwari Settlement Rules, 1965, amendment to—(G.O. Ms. No. 1602, Commercial Taxes and Religious Endowments, dated 4th October 1979) ... ... ... ... 504

PERARIGNAR ANNA UNIVERSITY OF TECHNOLOGY ACT, 1978—

Education Department Notification No. II (2)/EDN/1345/79, dated 16th February 1979, amendment to—, notification laid on the table ... ... 504

PETROLEUM PRODUCTS—

Adjournment motion *re* suspension of normal supplies of—owing to 'go-slow' campaign by employees of Bharat Petroleum Corporation ... ... ... 410-412



PAGES

PHARMACIST TRAINING COLLEGE—

*See* Colleges

PONNAIYAN, THE HON. THIRU C.—

Diesel, statement *re* hindrance to passenger transport due to stoppage of supply of ... ... ... 341, 345

POOMPUHAR SHIPPING CORPORATION LIMITED—

Fifth Annual Report of—for 1979, laid on the table 208

PRIVILEGE ISSUE *re*—

Surveillance by Police on Veerasami, Thiru Arcot N., Member of the Council ... ... ... ... 31-34, 330-332

PUBLIC RELATIONS OFFICERS—

Question *re* termination of services of—during 1977-78 in Information and Public Relations Department and reinstatement of ... ... 131-134

PUBLIC SERVICE COMMISSION—

Annual Report of—for 1977-78, laid on the table .. 97

PUBLIC SERVICE COMMISSION REGULATIONS, 1954—

Amendment to—, notification laid on the table .. 94

PULAMAIPITHAN, PULAVAR—

Governor's Address, discussion on ... 175, 257, 273, 378, 430-445

Q

QUESTIONS AND ANSWERS—

Arivazhagan, Thiru K.—

Question *re*—

Jewel shops, raid by Commercial Tax Officers in Madras during February 1979 ... 397-399

Q—*cont.*

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Arivazhagan, Thiru K.—*cont.*

Question *re*—*cont.*

Tamil Nadu Co-operative Housing Society, token fast by staff on 24th September 1979 ... 221–223

Lakshmikandhan, Thiru C. R.—

Question *re*—

Deputy Inspector of Schools, representation to shift the office of—functioning at Kumaratchi to Chidambaram ... ... ... ... 313–314

Ex-Servicemen in Tamil Nadu, number of—and recognition of Ex-Servicemen Association 300–301

Highways Department, annual expenditure on rent for office buildings and godowns of ... 230–23

Inspectress of Girls' High Schools, abolition of post of ... ... ... ... ... 209–21

National Foundation for Teachers' Welfare, balance as on 1st October 1978 and mode of sanction of assistance ... ... ... 216–22

New channel from Pichavaram Regulator to Lower Thirukkazhippalai, Chidambaram taluk, provision of ... ... ... ... 143–1

Teachers's Home in Madras, construction of 401–4

Teachers, obtaining of Collegiate Teachers Certificate even after getting B.T. or B.Ed. Degree ... ... ... ... 134–1

Temples, financial assistance by Government for renovation of—and expenditure on renovation of temples in South Arcot and North Arcot districts during 1975–78 ... ... 127–1



Q—*cont.*

PAGES

ESTIONS AND ANSWERS—*cont.*

Meenakshisundaram, Thiru K.—

Question *re*—

Handloom cloth exported to foreign countries, foreign exchange earned during 1978 and anticipated in 1979 ... ... ... .. 149–153

Teachers of Municipal schools, disbursement of pay on 1st of every month to ... ... 405–407

Teachers Training Examinations, representation to fix 35 per cent marks for passing—for diploma holders ... ... ... 14–15

Muthusamy, Thiru S.—

Question *re*—

Floods in Kannoottru Odai on road from Vaiyampatty to Ilakkakurichi, damage to agricultural lands and construction of barrage to prevent recurrence ... ... ... 407–408

Panchayat Union staff and Teachers' Co-operative Banks in every Panchayat Union, formation of ... ... ... ... 297–299

Protected Drinking Water Scheme for Siluppanoor village, Chenthurai Panchayat Union, Tiruchirappalli district ... ... ... 220–221

Teachers, audit objection to the effect that only Panchayat Union service should count for grant of Selection Grade ... ... ... 404–405

Teachers Training Examinations, representation to fix 35 per cent marks for passing—for diploma holders ... ... ... ... 14–15

Neelanarayanan, Thiru—

Question *re* Chengalpattu district, change of name as Kancheepuram district ... ... ... 395–397

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Ramamoorthy, Thiru K.—

Question *re*—

Central Prison, Madras, number of Resident Doctors working in Hospital in—and month-wise average number of prisoners treated during 1977 and 1978 ... ... ... 308–311

Flood Relief, details *re* Central financial aid sought between 1st July 1977 and 30th December 1978 for ... ... ... ... 2–9

Hotels in Madras City proceeded against under Prohibition Act from 1st July 1977 to 6th August 1978, number, category-wise of ... 145–149

Pharmacist Training College, starting of 29–31

Sri Ranganathar Devasthanam, Singavaram, Gingee taluk, lands owned by—and encroachment thereon ... ... ... ... 124–127

Tamil Nadu Wakf Board, extent and value of movable and immovable properties and total acreage of arable dry and wet land under the control of ... ... .. ... 317–322

Village Co-operative Credit Societies in South Arcot district who have not handed over their records in spite of their inclusion in larger viable units, number of ... ... ... 295–296

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Agricultural Implements Service Stations, closure in Kanyakumari district from 1st January 1979 to 30th April 1979 and reopening of ... 408–4

Damages and breaches in channels, ponds and tanks due to rains in Kanyakumari district in 1978–79, carrying over to next year of unspent balance of financial allotment for repairs of 141–1



PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Sankaralingam, Thiru M.—*cont.*

Question *re*—*cont.*

Examinations, High Schools in which nobody passed in 10th and 11th Standards—during March–April 1978 ... ... ... 16–23

Food poisoning cases admitted in Hospital at Madurai in July 1978, number of—and enquiry *re* ... ... ... 26–29

Government Elementary and Middle Schools in Kanyakumari district, recommendation of District Development Council not to convert—as Panchayat Union Schools ... ... 25–26

Road accidents, special scheme to reduce number of ... ... ... ... 223–230

Senior Tamil Pandits hitherto teaching Tamil up to XI Standard, chance to teach Tamil in Higher Secondary classes ... ... 137–139

Taluk Office, Paramakkudi and other Government offices, closure in January 1979 due to strike by staff ... ... ... ... 11–14

Teachers of Gandhi Primary School, Keliyappillaiyur village, Kadaiyam Circle, Tirunelveli South Educational district, non-payment of salaries to ... ... ... ... ... 314–317

Santosham, Thiru D.—

Question *re*—

Sub-Magistrates and Judicial Second Class Magistrates recruited from the Bar and from among Ministerial servants from 1st January 1973 to 30th April 1979, number of—and position of two categories after integration 311–313

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Santosham, Thiru D.—*cont.*

Question *re—cont.*

Youth Service Corps, opportunity to discharged personnel of—, to write Tamil Nadu Public Service Commission examinations again ... 304–305

Thangapandian, Thiru V.—

Question *re*—

Mass Casual leave by employees of offices of District Collector and Revenue Divisional Officer, Tirunelveli during November 1978 ... 9–11

Public Relations Officers in Information and Public Relations Department, termination of services during 1977–78 and re-instatement of ... 131–134

Small Industrial Units, scheme for establishment of 180—, during 1979–80 in Ramanathapuram district submitted by Small Industries Service Institute ... 322–329

Thomas, Thiru P. R.—

Question *re*—

B. T. Assistants who have served as Tutors and Demonstrators in Colleges, representation for employment in Higher Secondary Schools ... 15–16

Fees in Secondary and Higher Secondary Schools—recommendation of Education Finance Review Committee *re* levy of ... 139–140

Instructors in Weaving, posting of full-time pre-vocational—, in Higher Elementary Schools under Panchayat Union as part-time Instructors in Ramanathapuram district ... 23–24



PAGES.

QUESTIONS AND ANSWERS—*cont.*

Thomas, Thiru P. R.—*cont.*

Question *re—cont.*

Mobile Science Laboratory Vans in educational districts, functioning of ... 212–215

Persons in Mobile Science Laboratory Vans, treating service in—, as service in vocational department ... 399–401

R

RAGHAVANANDAM, THE HON. THIRU S.—

Governor's Address, discussion on ... 72, 86, ... 186, ... 359

RAJA MOHAMED, THIRU K.—

Adjournment motion *re*—

Alleged death of nine persons due to diarrhoea in Thanjavur district ... 333–335

Petroleum products, suspension of normal supplies owing to 'go-slow' campaign by employees of Bharat Petroleum Corporation ... 411–412

University Teachers' Association, fast undertaken by members of Joint Action Committee of ... 337

Governor's Address, discussion on ... 66, 67, ... 68, 69, .. 262, ... 376–377, ... 431, 443, ... 470

Information *re* –

Attempted theft of car of a Member of the Council ... ... ... ... 165

PAGES

RAJA MOHAMED, Thiru K.—*cont.*

Information *re*—*cont.*

Call attention notice given by Thiru C. R. Lakshmikandhan, postponement of ... 237

Call attention notice given by Thiru V. Thangapandian, delay in taking up ... 234, 235, ... 236

Privilege issue *re* surveillance by Police on Veerasami, Thiru Arcot N., Member of the Council ... 330, 332

RAJYA SABHA SECRETARIAT, NEW DELHI—

Extract of paragraphs 1 to 4 of letter No. RSI/1/80-B, dated 28th January 1980 from Secretary-General of—, laid on the table ... 384

RAMACHANDRAN, THE HON. THIRU M. G.—

Information *re* resignation of a Minister ... 44

Privilege issue *re* surveillance by Police on Veerasami, Thiru Arcot N., Member of the Council ... 33

RAMAKRISHNA THEVAR, THIRU S.—

Governor's Address, discussion on ... 180–190, ... 238

RAMALINGAM, THIRU C.—

Governor's Address, discussion on ... 284–289

RAMAMOORTHY, Thiru K.—

Adjournment motion *re* hartal by Tamil Nadu Merchants' Association ... 87, 88



PAGES

RAMAMOORTHY, THIRU K.—*cont.*

Governor's Address, discussion on ... 63, 182, ... 237, 238, ... 287 ... 363-388, ... 430–431, ... 432, 434, 443, 461 466

Information *re*—

Call attention notice given by Thiru V. Thangapandian, delay in taking up ... 236

Resignation of a Minister ... 41–42, ... 43, 44

RAMASWAMY IYER, THIRU T. S.—

Obituary reference *re* death of—, former Member of the Council and Subbiah, Thiru S., Member of the Assembly ... i

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment motion *re*—

Alleged death of nine persons due to diarrhoea in Thanjavur district—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... 333, 335

Fast by members of Joint Action Committee of the University Teachers' Association—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education ... 336, 343

Fast by representatives of Teachers' Federation protesting against beating up of a teacher by Management of S.P.K. College, Ramanathapuram district—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education ... 161, 164

PAGES

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

Adjournment motion *re*—*cont.*

Hartal by Tamil Nadu Merchants' Association—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Revenue ... 34, 35, ... 39

Indefinite fast by representatives of University Teachers' Association—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education ... 153, 157

It is not the convention to disclose the subject matter of an adjournment motion before it is admitted by the Chairman ... 234

Lathi charge by the Police on students in the agitation of All College Teachers' Association *re* termination of services of a teacher by the management of St. Joseph's College, Trichi—Consent to raising of the Matter withheld after the statement of the Minister for Education ... 157–158, ... 161

Suspension of normal supplies of Petroleum products to 'go-slow' campaign of employees of Bharat Petroleum Corporation, Madras—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... 410, 412

C.I.Ds, presence in the Members' Lounge and Visitors' Gallery—

When it was pointed out that C.I.Ds. were present in the Members' Lounge and in the Visitors' Gallery, the Chairman observed that the Leader of the House should take note of it and take necessary action and that the House had the necessary authority to take action if they were present in the precincts of the House ... 382



PAGES

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

Debate—

Attributing motives to the judiciary is not correct 496

Members need not refer to the personal views of the Governor ... 60

Decorum—

Exhibite—

Members should first send the statement appearing in the Press to the Chair and only after getting permission show it to the House ... 66, 68

Members should avoid speaking sitting in their seats ... 443

Privilege issue *re*—

Surveillance of Thiru Arcot N. Veerasami, M.L.C., by the Police—Ruling deferred ... 31–34

Unparliamentary Expression—

'Chorus'—Held not unparliamentary 431

S

SALES TAX—

Amendment to Revenue Department Notification III No. 162 of 1972, dated 9th December 1971, notification laid on the table ... 208

SANKARALINGAM, THIRU M.—

Adjournment motion *re* indefinite fast by representatives of University Teachers' Association ... 153–154

Governor's Address, discussion on ... 237

Information *re*—

Call attention notice given by Thiru V. Thangapandian, delay in taking up ... 234

Resignation of a Minister ... 44

S—*cont.*

SANKARALINGAM, THIRU M.—*cont.*

PAGE

Privilege issue *re* surveillance by Police on Veerasami, Thiru Arcot N., Member of the Council ... 34, 3[illegible]

SANTOSHAM, THIRU D.—

Governor's Address, discussion on ... 165–1[illegible]

SCHOOLS—

Question *re*—

Fees in Secondary and Higher Secondary—, recommendation of Education Finance Review Committee *re* levy of ... 139–14

Government Elementary and Middle—In Kanyakumari district, recommendation of District Development Council not to convert as Panchayat Union Schools ... 25–2

SMALL INDUSTRIAL UNITS—

Question *re* Scheme for establishment of 180—during 1979–80 in Ramanathapuram district submitted by Small Industries Service Institute ... 322–32[illegible]

SOMASUNDARAM, THE HON. THIRU S.D.—

Adjournment motion *re* hartal by Tamil Nadu Merchants' Association ... 36–3[illegible]

Governor's Address, discussion on ... 356, 35[illegible]

SRI RANGANATHAR DEVASTHANAM, SINGAVARAM, GINGEE TALUK—

*See* Temples

STATE INDUSTRIES PROMOTION CORPORATION OF TAMIL NADU LIMITED—

Eighth Annual Report of—, for 1978–79, laid on the table ... 9[illegible]

S—*cont.*

PAGES

STRIKE—

Question *re* closure of Taluk Office, Paramakudi and other Government offices in January 1979 due to—by staff ... 11–14

STUDENTS—

Adjournment motion *re* lathi charge by Police on—as a sequel to teachers' agitation against removal from service of a teacher of St. Joseph's College, Tiruchirappalli ... 157–161

SUBBIAH, THIRU S.—

Obituary reference *re* death of Ramaswamy Iyer, Thiru T. S., former Member of the Council and—, Member of the Assembly ... 1

T

TAMIL ENCYCLOPAEDIA—

Minister's attention called to unemployment of employees caused by sudden stoppage of work relating to preparation of ... 412–414

TAMIL NADU CEMENTS CORPORATION LIMITED—

Annual Report and Accounts of—, for year ending 31st March 1979, laid on the table ... 94

TAMIL NADU CERAMICS LIMITED—

Fourth Annual Report of—, for 1977–78, laid on the table ... 92

TAMIL NADU HANDICRAFTS DEVELOPMENT CORPORATION LIMITED—

Third Annual Report of—, for 1975–76, laid on the table ... 93

PAGES

TAMIL NADU INDUSTRIAL DEVELOPMENT CORPORATION LIMITED—

Annual Report of—, for year ending 31-3-1979, laid on the table ... 94

TAMIL NADU INDUSTRIAL INVESTMENT CORPORATION LIMITED—

Tamil Nadu Government's review on working of—for financial year 1977-78 together with 29th Annual Report and Statement of Accounts; laid on the table ... 95

TAMIL NADU SALT CORPORATION LIMITED—

Fifth Annual Report for 1978, laid on the table ... 98

TAMIL NADU TEA PLANTATION CORPORATION LIMITED—

Annual Report of—for 1977-78, laid on the table ... 92

TAMIL NADU VIGILANCE COMMISSION—

Eleventh Annual Report of—, for period from 1st April 1976 to 31st March 1977, laid on the table ... 99

TAMIL NADU WAKF BOARD—

Question *re* extent and value of movable and immovable properties and total acreage of arable dry and wet land under the control of ... 317–322

TAMIL PANDITS—

*See* Teachers

TEACHERS—

Adjournment motion *re*—

Indefinite fast by representatives of University Teachers' Association ... 153–157



TEACHERS—*cont.* PAGES

Adjournment motion *re*—*cont.*

S.T.K. College, Ramanathapuram district, fast by teachers protesting against beating up of a teacher by management of ... 161–164

Audit objection to the effect that only Panchayat Union service of—, should count for grant of Selection Grade ... 404–405

B.T. Assistants who have served as Tutors and Demonstrators in Colleges, representation for employment in Higher Secondary Schools ... 15–16

Disbursement of pay on 1st of every month to—, of Municipal Schools ... 405–407

Instructors in Weaving, posting of full-time pre-vocational—in Higher Elementary Schools under Panchayat Union as part-time Instructors in Ramanathapuram district ... 23–24

National Foundation for Teachers' Welfare, balance—as on 1st October 1978 and made of sanction of assistance from ... 216–220

Obtaining of Collegiate Teachers Certificate by—even after getting B.T. or B.Ed. Degree ... 131–137

Senior Tamil Pandits hitherto teaching Tamil up to XI Standard, chance to teach Tamil in Higher Secondary Classes ... 137–139

Teachers of Gandhi Primary School, Kelaiyapillaiyur Village, Kadaiyam Circle, Tirunelveli South Educational district, non-payment of salaries to ... 311–317

Treating service of persons in Mobile Science Laboratory vans as service in vocational department ... 399–401

T—*cont.*

| | Pages |
|---|---|
| TEACHERS' HOME— | |
| Question *re* construction of—I in Madras ... | 401–404 |
| TECHNICAL EDUCATION DEPARTMENT— | |
| Inclusion of post of Associate Lecturer in Salesmanship in—I under Tamil Nadu Educational Subordinate Service within the Commission's purview, notification laid on the table ... | 96 |
| TEMPLES— | |
| Question *re*— | |
| Financial assistance by Government for renovation of—, and expenditure on renovation of temples in South Arcot and North Arcot districts during 1975-78 ... | 127–131 |
| Sri Ranganathar Devasthanam, Singavaram, Gingee taluk, lands owned by and encroachment thereon ... | 124–127 |
| THANGAPANDIAN, THIRU V.— | |
| Governor's Address, discussion on ... | 58–69, 238, 256, 428 |
| Information *re*— | |
| Call attention notice given by—, delay in taking up ... | 233–234 |
| Notice of Adjournment motion ... | 39 |
| Privilege issue *re* surveillance by Police on Veerasami, Thiru Arcot N., Member of the Council ... | 332 |
| THANTHAI PERIYAR TRANSPORT CORPORATION LIMITED— | |
| Third Annual Report of—for 1978, laid on the table ... | 93 |



T—*cont.*

| | Pages |
|---|---|
| THOMAS, THIRU P. R.— | |
| Governor's Address, discussion on ... | 239, 445–453 |
| (TRANSFERRED TERRITORY) RYOTWARI SETTLEMENT RULES, 1965— | |
| Amendment to—, notification laid on the table ... | 504 |
| **V** | |
| VASANTHA PAI, THIRU G.— | |
| Governor's Address, discussion on ... | 239, 241–251 |
| Information *re* attempted theft of car of ... | 164–165 |
| VEERAPPAN, THE HON. THIRU R. M.— | |
| Governor's Address, discussion on ... | 64 |
| VEERASAMI, THIRU ARCOT N.— | |
| Governor's Address, discussion on ... | 237, 239, 436, 437, 483–504 |
| Privilege issue *re* surveillance by Police on—Member of the Council ... | 331 |
| Surveillance by Police on—, Member of the Council ... | 31–34 |
| VENKATESAN, THIRU E. S.— | |
| Governor's Address, discussion on ... | 290–293 |
| VICE-CHAIRMAN (Dr. T. R. Janarthanam)— | |
| Governor's Address, discussion on ... | 256, 260 |

W


| | Pages |
|---|---|
| 'ATER-SUPPLY— | |
| Question *re* Protected drinking water scheme for Siluppanoor Village, Chenthurai Panchayat Union, Tiruchirappalli district ... | 220-221 |


Y


| | |
|---|---|
| YELLAMANDA, THIRU P.— | |
| Governor's Address, discussion on ... | 347–354, 442 |
| YOUTH SERVICE CORPS— | |
| Question *re* opportunity to discharged personnel of,—to write Tamil Nadu Public Service Commission examinations again ... | 304–308 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### *In Madras City.*

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Co., Madras-4.
3. Higginbothams (Private) Ltd., Madras-2.
4. P. Varadachary & Co., Madras-1.
5. C. Subbiah Chetty & Co., Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitaraman & Co., Madras-14.
8. Mohan Pathippagam & Book Depot., Madras-5.
9. C. Venkatesam Chetty & Co., No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. TheSouth India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli), Ltd., Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Ltd., Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### *In Moffussil of Tamil Nadu.*

1. A. Venkatasubban & Co., Vellore (North Arcot District).
2. Bharathamatha Book Depot., Thanjavur (Thanjavur District).
3. P. V. Nathan & Co., Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, Thanjavur.
5. Palaniappa Bros., Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Book Sellers, No. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. V. B. Ganesan, Villupuram (South Arcot District).
11. Mercury Book Co., No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
12. S. M. Jeganathan, Book House, P. S. No. 327, No. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
13. Ganesh Stores, South Car Street, Sivakasi.
14. Mary Martin Book Sellers, Kotagiri (The Nilgiris).
15. A. K. Chandriah Chettiar and Sons, Salem.
16. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
17. Meenakshi Pathippagam, Pudukkottai.
18. K. V. Narayana Iyer Sons, Dindigul (Madurai District).
19. Jayakumari Stores, Nagarcoil (Kanyakumari District).
20. Babu Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
21. Dinamani Stores, No. 8/1, Old Post Office Road, Coimbatore-18.
22. Bharathi Puthaganilayam, Publishers and Book Sellers, No. 1-B, Town Hall Road, Madurai-1.
23. Kumaran Book Depot., Book Sellers, Erode-1.
24. Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
25. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
26. Ajantha Book Centre, Salem.
27. Sri Vidya, No. 63, Tennore High Road, Tiruchirappalli-17.

### *In other States.*

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. Firma. K. L. Mukhopadhyay, Calcutta-12.
4. The Book Syndicate, Hyderabad-1.
5. Labour Law Publications, Hyderabad.
6. Puthaghalayam, Pondicherry.
7. Prabhu Book Service, Gurgaon. Haryana.
8. K. P. Bagchi & Company, No. 286, B. B. Ganguli Street, Calcutta-12.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.